புதியதோர் சமுதாயம்

திருநெல்வேலி கிறிஸ்தவக் குடும்ப வரலாற்றுத் திருவிழா
கருத்தரங்குக் கட்டுரைகள்

இராபர்ட் எரிக் ஃபிரிக்கென்பெர்க்

வரலாற்று அறிமுகத்துடன்

பதிப்பாசிரியர்கள்

டேவிட் & சரோஜினி பாக்கியமுத்து

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

புதியதோர் சமுதாயம்

I. Stella

புதியதோர் சமுதாயம்

திருநெல்வேலி கிறிஸ்தவக் குடும்ப வரலாற்றுத் திருவிழா
கருத்தரங்கக் கட்டுரைகள்

இராபர்ட் எரிக் ஃபிரிக்கென்பெர்க்
வரலாற்று அறிமுகத்துடன்

பதிப்பாசிரியர்கள்
டேவிட் & சரோஜினி பாக்கியமுத்து

வளர்ந்து பெருகுக வெளியீடு
திருநெல்வேலி - 600 002.

Published by :
Grow and Increase Publications
16, North Highground Road,
Tirunelveli - 627 002.
Tel : 578744.

© all rights reserved

PUTHIATHORE SAMUDAYAM (A NEW SOCIETY)

First Published April 2001

Price Rs. **100.00**

Language : Tamil

Typeset & Printed by :
Jacklin Offset, Palayamkottai - 627 002.

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	ஆசிரியர் பெயர்	பக்கம்
1	இராச கிளாரிந்தா	டேவிட் பாக்கியமுத்து	1
2	கற்பகம் சத்தியநாதன்	ஆர். ஜோசப்	20
3	தாவீது சுந்தரானந்தன்	ஜே. மனுவேல்	34
4	வேதநாயக சாஸ்திரியார்	கிரேஸ் பரிமளா அப்பாசாமி	44
5	வேதமாணிக்கத்தின் சந்ததி	பெட்போர்டு சாலமன்	65
6	ஒரு உபதேசியாரின் நாட்குறிப்பு	சரோஜினி பாக்கியமுத்து	80
7	ஹெச். ஏ. கிருஷ்ணபிள்ளை	சந்திரமதி முத்தையா	96
8	ஆபிரகாம் பண்டிதர் குடும்ப வரலாறு	ஏ. ஜே. சாம்ஸ் டேவிட்	110
9	வடதிருநெல்வேலி செம்பொன்	டி.ஜெபராஜ்	118
10	தா. பா. ஏசுதாசன் குடும்பம்	கோ. பால்தாசன்	129
11	சுவடுகள் வழிகாத்தான் வரலாறு	கரோலின் ஜெபத்துரை	142
12	அருள்திரு ஐசக் ஆபிரகாம் குடும்ப வரலாறு	பால்தேவதாசன்	157
13	மந்திரமூர்த்தி என்ற வேதமாணிக்கம்	ஜோசப் ஜி. முத்துராஜ்	177
14	என் மூதாதையர்கள்	சுசிகரன் தங்கசாமி	193
15	அன்னமரியாள்	ஆர்தர் ஜெயக்குமார்	206
16	கந்தசாமி ஆபிரகாம்- பெரியநாயகம் குடும்ப வரலாறு	ஜெ.சி.பி. ஆபிரகாம்	215
17	Dr. சேத் பாலையா ஆசீர்வாதம் மூதாதையர்கள்	இம்மானுவேல் ஆசீர்வாதம்	225
18	Dr. சந்திரன் தேவநேசன் குடும்பம் வரலாறு	சாமுவேல் வசந்த்	240

பதிப்பாசிரியர்களின் குறிப்புகள்

சுவிசேட கிறிஸ்தவ இயக்கம் நெல்லை சீமையில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பரவத் தொடங்கியது. தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிர்ப்பு அதிகமிருந்தது. கும்பினியர், பாளையக்கார ஜமீன்தார்கள், மேல்சாதியினர் முதலியோர் அவர்களுக்குப் பல இடையூறுகளையும், கொடுமைகளையும் விளைவித்தனர். அகதிகளான கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் தர இளைஞரும் உபதேசியாருமான சின்னமுத்து தாவீது சுந்தரானந்தன், அவர்களுக்கு முதலூர் என்ற கிறிஸ்தவ கிராமத்தை உருவாக்கிக் கொடுத்தார். ஆயினும் அன்றைய கலவரச் சூழலில் தலைவர் தாவீதும், மற்றும் பல கிறிஸ்தவர்களும் தங்கள் உயிரை இழந்தனர்*. இந்த வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவு கூருமுகமாக 1998 டிசம்பரில் இருநூற்றாண்டு விழா திட்டமிடப்பட்டது. அதையொட்டிய கருத்தரங்கில் பலர் தங்கள் மூதாதையர் கிறிஸ்தவம் தழுவிய விவரங்களைக் கட்டுரையாக எழுதிப் படித்தனர். அக்கட்டுரைகளும், இயக்கத்தை வழி நடத்திய பெரியோர் சிலர் பற்றிய கட்டுரைகளும் இத் தொகுதியில் இடம்பெறுகின்றன.

ஒரு திருச்சபையின் வரலாற்றைப் படிக்க மேலிருந்து கீழ் இல்லாமல், கீழிலிருந்து மேல் என்ற அணுகுமுறை இக் கட்டுரைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதாவது திருச்சபைப் பெருந்தலைவர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் சரித்திரங்களை விடவும், சமயத்தின் கொள்கை, கோட்பாடுகளை அலசுவதை

---

* காண்க. *பால் கடம்பவனம்* : திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின் ஆரம்பம், 2ம் பதிப்பு 1967. பக். 58. பேராசியரிர் மறைதிரு. டி.ஏ. கிறிஸ்துதாஸ் : முதல் இரத்த சாட்சி தாவீது சுந்தரானந்தன், பாளையங்கோட்டை 1976. கால்டுவெல் : ***Early History of Tinnevelly Mission***. பக். 100. முதல் பத்தி தாவீது உபதேசியார்.

கால்டுவெல் தமது ***Early History of Tinnevelly Mission*** பிரசுரம், ஹீக்கின்பாதம் அன்டு கோ சென்னை 1884, பக். 149 ல் "ரிங்கில்தோபே உவரியில் வைத்து 1806 மார்ச்சு 5ம் தேதி தமது டயரியில் குறித்தது என்னவென்றால் நான் மாலையில் பிரசங்கம் செய்தேன். மறுநாள் பல நாட்களாக வெறுப்பேற்றி வந்த ஒரு உபதேசியை வேலை நீக்கம் செய்து தொல்லை பிடித்த பல காரியங்களுக்குத் தீர்வு கண்டேன். இந்த் ஆள்தான் சாணார்கள் தலைவன் என்றும் சுவிசேடம் சொல்லி வருகிறவன் என்றும் ஐரோப்பாவில் பேசப்பட்டவன் என்று எழுதுகிறார்".

ரிங்கல்தோபே 1806 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் தேதி பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். மார்ச் மாதம் 5ம் தேதி அவர் சின்னமுத்து தாவீது சுந்தரானந்தனை வேலை நீக்கம் செய்தார். வந்து 21 நாட்களுக்குள் வேலை நீக்கம் செய்ததால் போதிய விசாரணை நடந்திருக்க வாய்ப்பு இல்லை. சுந்தரானந்தன் 1806ம் ஆண்டு இளம்வயதில் (31) மறைந்தார். அவர் மரணம் பற்றிய செவி வழிச் செய்திகள் மற்றும் கால்டுவெல் எழுதியது எல்லாம் ஒன்றுக் கொன்று முரணானவை.

விடவும், சமயம் மாறிய சாதாரணவர்களின் கதைகள், அவர்கள் ஊர்கள், குடும்பங்களில் அன்று நிலவிய சூழல் ஆகியவற்றை ஆய்ந்தறிந்து எழுதிப்படித்ததன் மூலம், சுவிசேடக் கிறிஸ்தவ சமயம் நெல்லையில் கால்கொண்ட வரலாற்றை அறிய முயன்றோம்.

இப்படியொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க ஆலோசனை தந்து, ஊக்கம் அளித்து கருத்தரங்கு நடத்த நிதியுதவியும் கொடுத்தவர் அமெரிக்கா, விஸ்கான்ஸின் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறைத் தலைவரும், பியு அறக்கட்டளையின் தென் இந்தியக் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வுத் திட்டத்தின் தலைவருமாகியவர் முனைவர் ஆர். ஃபிரிக்கென்பெர்க். இவர் தந்தை ஆந்திரப் பிரதேசத்தில் கிறிஸ்தவ சமயத் தொண்டராகப் பணியாற்றியதால் மிஷனெரி பாரம்பரியம் உடையவர் ஆவார்.

நெல்லை திருச்சபை பற்றி ஒரு சில நூல்கள் வெளி வந்திருந்தாலும், குடும்பக் கதைகள் மூலம் அந்த மகத்தான நிகழ்ச்சிகளை அதன் ஆன்மீக, சமுதாய, அரசியல், பொருளாதார முக்கியத்துவங்களை உணர்ந்தறிய இம்முறை உகந்ததாகவே தோன்றுகிறது. அன்று தொடங்கி இன்று வரை நெல்லை கிறிஸ்தவர்கள், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற ஆர்வத்தோடு பல்வேறு இடங்களுக்குச் சென்று பலதரப்பட்ட மக்களிடையே சுவிசேடம் சொல்லி வருகின்றனர். மைசூர்ப் பேராயர் என்.சி. சார்ஜென்டு தமது The Dispersion of the Tamil Church (பரவியிருக்கும் தமிழ்த் திருச்சபை) என்ற நூலில் அதுபற்றிச் சிறப்பாய்க் குறிப்பிடுகிறார். இடையன்குடிக்கு அருகிலுள்ள கொம்படிக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் டேவிட் (பி. 1859) எப்படி இலங்கை, ஆஸ்திரேலியா, இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, உகாந்தா என்று உலகின் பல பகுதிகளுக்கும் சென்று இயேசுவைப் பற்றிச் சொல்லி வந்தார் என்பதை பேராயர் எழுதியுள்ளார்.

தமிழ் கிறிஸ்தவர்கள் பல அரிய சாதனைகளை சமுதாயத்துக்குச் செய்துள்ளனர். ஏற்கனவே கல்விப் பாரம்பரியமுடைய மரபில் தோன்றிய வேதநாயகம் சாஸ்திரியார், வித்வான் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சிறந்த இலக்கியப் படைப்புகளை ஆக்கியுள்ளனர். சவரிராயபிள்ளை 2000 பக்கத்தில்

வரலாற்று ஆவணமாகப் பயன்படக்கூடிய ஒரு டயரியை விட்டுச் சென்றுள்ளார். அக்கால மிஷனெரிகளும் இவர்களைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். கல்வி மரபு இல்லாதோரும், புதிய சமயத்தோடு புதிதாக கல்வி கிடைக்கப்பெற்றோரும் கூட சமுதாயத்துக்கு நல்ல பங்களிப்பைச் செய்துள்ளனர். முத்தி வழி அம்மானை (1887) இயற்றிய முன்சீப் சுவிகரன் நாடார் சிறந்த கவிஞராவார். இசையிலும், சமுதாயத் துறைகளிலும் அளப்பரிய பணிகளைச் செய்தவர் ஆபிரகாம் பண்டிதர் (1859-1919). இவர்களைப் பற்றி எல்லாம் மேலும் விரிவாக ஆராயவும், அவர்களது படைப்புகளை நமது அன்றாட சமய நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்ளவும் இளைஞர்கள் முன்வர வேண்டும்.

திருச்சபையை வளப்படுத்திய பலர் இன்றும் அறியப்படாமலே உள்ளனர். மறக்கப்பட்டவர்களும் உண்டு. அருள்திரு. சற்குணம் வின்ஃபிரெட் (1810-1879) அருள்திரு. ராவ் சாகிப் சாமுவேல் பவுல், (1844-1900), அறிஞரும் கவிஞருமான வேதநாயகம் சாமுவேல் தாமஸ் (1855-1890) தேவசகாயம் சவரிராயன், இசையாளர்கள் விக்டர் பரஞ்சோதி, ஹான்டல் மனுவேல், தமிழ் கீர்த்தனைகள் இயற்றிய எண்ணற்ற பக்தர்கள், இறையியலாளர்கள் பேராயர் ஏ.ஜே. அப்பாசாமி, பேராசிரியர் டி.ஏ. தங்கசாமி ஆகியோரைப் பற்றியும் நமது இளைஞர்கள் அறிய வேண்டும்.

நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள. மொழிப்பெயர்ப்பைப் பொறுத்த வரையில், இரேனியஸின் டயரி, கால்டுவெல்லின் (திருநெல்வேலி மிஷன் வரலாறு) Records of the Early History of the Tinnevelly Mission, ஏ.எஸ். அப்பாசாமியின் (சி.எம்.எஸ்ஸின் நூற்றாண்டு வரலாறு) Centenary History of the CMS in Tinnevelly எப்ஃ. ஜே. வெஸ்டர்னின் (F.J. Western) திருநெல்வேலி ஊழியத்தின் ஆதி வரலாறு, தமிழ் வாசகர்களுக்குத் தமிழில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

தொடக்க காலத்தில் கிறிஸ்தவ சமயத் தொண்டர்கள் தமிழ்ச் சமுதாயத்துக்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய பணி மகத்தானது. ஹென்ரிக்ஸ், ராபர்ட் டி நொபிலி, சீகன்பால்கு, பெஸ்கி (வீரமாமுனிவர்) பப்ரிஷியஸ், இரேனியஸ் ஆகியோர் வரிசையாக

இங்கு வந்து தமிழில் எழுதியிராவிட்டால் - குறிப்பாக எளிய உரைநடையைத் தோற்றுவித்து வளர்த்திராவிட்டால் - தமிழின் இன்றைய வளர்ச்சி தாமதமாகியிருக்கலாம்.

உரைநடைமட்டுமல்ல, அச்சுத்துறை, நூல் வெளியீடு, பத்திரிகைத் துறை, மொழிப் பெயர்ப்பியல், பாட நூல்கள், குழந்தை இலக்கியம் என்று பல துறைகளில் மிஷனெரிகளும், தமிழ் கிறிஸ்தவர்களும் நல்ல வழிகாட்டிகளாய் விளங்கினார்கள். ஆனால் 20-ம் நூற்றாண்டில் தமிழ் கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய மகிமைகளை இழந்து போகத் தொடங்கினர். இந்நிலையை இன்று மாற்றுவது கிறிஸ்தவர்களது கடமையாகும்.

குடும்ப வரலாற்று கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, நிகழ்ச்சியின் போது உடனிருந்து ஊக்குவித்த பியூ அறக்கட்டளையைச் சார்ந்த டாக்டர் ராபர்ட் எரிக் ஃபிரிக்கென் பெர்க்குக்கு எங்கள் உளமார்ந்த நன்றி உரித்தாகும். கட்டுரைகள் தயாரித்து வாசித்தோருக்கு எங்கள் அன்பும் நன்றியும். கருத்தரங்கம் செவ்வனே நடக்கத் துணை செய்த முன்னாள் பேராயர் அருட்பெருந்திரு. ஜேசன் எஸ். தர்மராஜ் அவர்களுக்கும், ஒத்துழைத்த பாளை தூய யோவான் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜே. பாலசிங் அவர்களுக்கும், பேராயர் ஸ்டீபன் நீல் கல்வி ஆய்வு மன்றத்தினருக்கும், இந்நூல் வெளியிட முன்னின்று உதவிய இன்னாள் பேராயர் அருட்பெருந்திரு. எஸ். ஜெயபால் டேவிட் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். சமய மாற்றம் பற்றிப் பொறுப்புடனும் சிந்திக்கும் அனைவோரும், வரலாற்றார்வலர்களும் நூலை வரவேற்பார்கள் என நம்புகிறோம். ■

THE CHURCH OF SOUTH INDIA

The Rt. Rev. S. Jeyapaul David
Bishop in Tirunelveli
Telefax (91) 0462-574525
Telephone (91) 0462-578744 & 579499

16, North Highground Road,
Bishopstowe
Post Box 118,
Tirunelveli - 627 002.
INDIA.

முன்னுரை

முதலில் இந்நூலின் பதிப்பாசிரியர்களையும், நூலுக்கான குடும்ப வரலாற்றுக் கட்டுரைகள் வழங்கியவர்களையும் பாராட்டுகிறேன். திருநெல்வேலி கிறிஸ்தவக் குடும்ப வரலாற்றுக் கருத்தரங்கம் பியு அறக்கட்டளையின், தென் இந்திய கிறிஸ்தவ சபை வரலாற்று ஆய்வுத் திட்டத்தின் ஆதரவில், பேராயர் ஸ்தேவான் நீல் ஆய்வு மன்றத்தின் ஒத்துழைப்புடன் 1998 ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் பாளையங்கோட்டையில் நடைபெற்றது. அப்போது படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். இது ஆங்கிலத்திலும் நூல் வடிவமாக வெளியாகிறது. இக்கருத்தரங்கினை நடத்த உதவிய ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்ள பியு அறக்கட்டளையினருக்கும், விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த டாக்டர் இராபர்ட் எரிக் ஃபிரிக்கன்பெர்க் அவர்களும் அளித்த உதவிக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஃபிரிக்கன்பெர்க் கருத்தரங்கில் கலந்து கொண்டு உற்சாகம் அளித்ததற்காகவும் நன்றி சொல்லிக் கொள்ளுகிறேன். தென் இந்தியத் திருச்சபையின் வரலாற்று ஆவணங்களையும், நூல்களையும் சேகரித்து அவற்றைப் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்கு இந்தப் பகுதியில் கிறிஸ்தவம் தோன்றி வளர்ந்த செய்தியை அறிவிக்கும் வாயிலாக நீல் ஆய்வு மன்றம் விளங்குகிறது.

முக்கியமான செய்திகளை மட்டும் கூறுவதாக சில சமயம் வரலாறு அமைந்திருக்கலாம்; மேனாட்டு மிஷனெரிகள் எழுதிச் சென்ற செய்திகளாக மட்டும் இருக்கலாம். ஆனால் தனிப்பட்ட மனிதர்களின் செய்திகளையும், நுணுக்கமாக அணுகி துலக்கம் செய்தல் வேண்டும். இந்த நூல் இம்மாதிரி பதினெட்டு பேர்களின் வரலாற்றைக் கூறுகிறது. சில தலைமுறையினரையும், அவர்களது வம்சாவழியினரையும் குறிப்பிடுகிறது. இதுபோன்ற விசுவாச வீரர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். திருநெல்வேலித் திருச்சபையின் வாழ்வை மேம்படுத்தவும், தேச நலனுக்காக உழைத்த ஆண், பெண் இருபாலாரான மக்களைப் பற்றியும் திருநெல்வேலி திருச்சபை பெருமைப்படுகிறது.

இக்கட்டுரைகளை நூல் வடிவாக்க உழைத்த பேராசிரியர்கள் டேவிட் பாக்கியமுத்துவையும், சரோஜினி பாக்கியமுத்துவையும் நான் பாராட்டுகிறேன். ■

Jeyapaul David +

(எஸ். ஜெயபால் டேவிட்)
பேராயர், திருநெல்வேலி

முகவுரை

சமுதாய மறதி என்பது, ஒரு சமுதாயம் தாம் யார், எவர், எங்கிருந்து வந்தோம், தாம் கடந்த பாதைகள், எதிர்கொண்ட முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் மறந்து போவதாகும். அச்சமுதாயத்தின் மூதாதையர் அவற்றைத் தம் மனத்தில் இருத்தி வைத்துப் பின் சந்ததியினருக்குக் கூறிவரத் தவறியிருக்கின்றனர். இதுதான் சமுதாய மொத்த மறதி என்பதாகும். ஒரு சமுதாயம் வலுவாக இயங்க வேண்டுமானால் அதற்கு தன் வரலாறு தெரிந்திருக்க வேண்டும். வரலாற்றுச் செய்திகளைப் பாதுகாப்பது, அச் சமுதாயத்திற்குப் பலம் சேர்க்கும், பிரச்சினைகளைச் சமாளிக்கும் சக்தியை அளிக்கும், எதிர்கால அபாயங்களை முன்னறிந்து செயல்படும் ஆற்றலைத் தரும்.

இப்படிப்பட்ட சமுதாய மொத்த மறதியை வளரவிடாமல் தடுக்க உதவுவதுதான் இந்நூலின் நோக்கம். நூலில் காணும் தொடர் கட்டுரைகள் சமுதாய வரலாற்றுச் செய்திகளைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள உதவும். இந்நாட்டில் பல இடங்களிலும் பரவியிருக்கும் கிறிஸ்தவர்களின் வரலாறு ஓரளவு ஒன்றுபோலானதுதான். அந்த வரலாற்றின் பகுதிகளையேனும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்; மீட்டெடுத்து எழுத வேண்டும். இந்தத் தொடர்கட்டுரைகள் ஒரு கட்டுப்பாட்டுடன் எழுதப்பட்டவை. மிகப் பழங்காலத்தில் கிறிஸ்தவ சமுதாயங்களில் நிகழ்ந்தது என்ன? அண்மையில் நடந்தது என்ன? தங்கள் குடும்பங்களில் நடந்தது என்ன? என்பதையெல்லாம் நினைவுக்குக் கொணர்ந்து, மறந்து அழிந்து போய்க்கொண்டிருக்கும் அச் செய்திகளை மறுகட்டமைத்துக் கொள்ள இவை உதவ முடியும். மேனாட்டு கிறிஸ்தவர்களோடு நாம் கொண்ட தொடர்பு, அவர்ளோடு நடத்திய பண்பாட்டுப் பரிமாற்றங்கள், மற்றும் நம்மைச் சுற்றியுள்ள பிற சமயத்தாரோடு - இந்து, முஸ்லீம், சீக்கியர், பௌத்தர், இயற்கை வணக்கத்தார்- ஆகியோரோடு நாம் வைத்துள்ள இணக்கம் முதலியன பற்றி நூலில் செய்திகள் உண்டு. வரலாற்றை மீட்டெடுக்க உதவும் ஆவணங்கள் நமது ஊர்களிலேயே கிடைக்கின்றன. அவற்றைச் சேகரித்து ஆராய்வதின் மூலம் இந்திய கிறிஸ்தவ வரலாறு பற்றி ஓரளவு முழுமையான அறிவு கிடைக்கக் கூடும். அதுவும் இந்நூலின் மற்றொரு நோக்கமாகும்.

இத் தொகுப்பு மேனாட்டுப் போங்கில் அமைந்தது அல்ல. நமது நாட்டை மையப்படுத்தி, நமது நோக்கில், நமது அணுகுமுறையில் தயாரிக்கப்பட்டது. வரலாறும் நமது பார்வையிலிருந்தே சொல்லப்படுகிறது. உள்ளூர் மனிதர்கள், உள்ளூர் அமைப்புகளே அதிகக் கவனம் பெறுகின்றனர். கிறிஸ்தவ சமயம் இங்கு தோன்றி வளர்ந்த காரணங்கள், உந்துதல்கள், சூழல்கள் பேசப்படுகின்றன. வழக்கமான மேலிருந்து கீழ் என்ற அணுகுமுறை இல்லாமல் கீழிருந்து மேல் என்ற வரிசையில் கிறிஸ்தவ சமய வளர்ச்சி ஆராயப்படுகிறது. சமய மாற்றம் என்ற பெரு நிகழ்வு நடந்தேற உள்ளூர் மனிதர்கள் பலர் காரணமாக இருந்திருக்கின்றனர். அவர்களை மையப்படுத்தியே கட்டுரையாளர்கள் செய்திகளை எழுதியுள்ளனர். இந்தியாவில் கிறிஸ்தவனாக வாழ்வது என்பது என்ன என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு எழுதியுள்ளனர்.

சமய மாற்றத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராய சம்பந்தப்பட்ட சமயங்களின் கொள்கை கோட்பாடுகளை அலசுவதை விடவும் தனி நபர் வாழ்க்கைக் கதைகள், குடும்பங்களில் நடந்த சங்கதிகள், ஊரில் நிகழ்ந்த சம்பவங்கள் முதலியனவே இங்கு அதிகமாக ஆராயப்படுகின்றன. இவற்றுக்கான ஆதாரங்களும், ஆவணங்களும் நெல்லையின் ஊர்களிலே புதையுண்டு கிடக்கின்றன. இந்தியாவின் பிற சபைகளில் கிடைப்பதைவிட இங்கு அதிகமாகக் கிடைப்பதால் அவற்றைக் கண்டுபிடித்து சேகரித்து பாதுகாத்துப் படிக்கும் முயற்சிக்கு நெல்லை ஒரு சிறந்த முன் மாதிரியாகவும் விளங்க முடியும்.

நெல்லை கிறிஸ்தவ வரலாற்றைப் படிப்பதின் மூலம் இந்தியக் கிறிஸ்தவ வரலாற்றையே புரிந்து கொள்ளமுடியும். நெல்லை கிறிஸ்தவ வரலாற்றை ஆராய இப்படியான தொடர் கட்டுரைகள் தயாரிப்பது ஒரு சிறந்த வழியாகக் கருதப்பட்டதால், அது நடைமுறைப்படுத்தப்பட்டது. முன்னணிக் கிறிஸ்தவ குடும்பங்களைச் சேர்ந்த சிலரது வாழ்க்கைக் கதைகள் சேகரிக்கப்பட்டு எழுதப்பட்டன. பெரும்பாலும் ஊர்ப் பெரியோர், தலைவர்களின் சரித்திரங்கள், அவர்களது வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகள், அவர்களது நம்பிக்கை மாற்றங்கள், பெற்ற விசுவாசத்தைப் போற்றிப் பாதுகாத்து வைத்துக் கொண்ட மகிழ்வு ஆகியன நூலில் சொல்லப்படுகின்றன. கட்டுரை நாயக நாயகியர்

வேறு வேறு ஆட்கள், வேறு வேறு குடும்பத்துக்காரர்கள், குடும்பக் கதை அவர்களது குடும்ப பொக்கிஷம். வம்ச வழியாக சொல்லி வருகிற வரலாறு. இதுமாதிரி பல பகுதிகளிலிருந்தும் குடும்ப சரித்திரங்கள் கிடைத்தால் இந்திய கிறிஸ்தவ வரலாறு பற்றிய ஒரு மொத்த அறிவு கிடைக்கும்.[1]

கிறிஸ்தவ வரலாறு இந்நூலில் மிகவும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. 1799 ம் ஆண்டு - இந்தியா நவீனமயமாதல் தொடங்கிய காலம் அது- மக்கள் கிறிஸ்தவ இயக்கம் தொடங்கியது. இயக்கத்தின் தொடக்கத்தை நினைவு கூரும் வகையில் அதன் 200 ம் ஆண்டு விழா 1998 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாளையங்கோட்டையில் திட்டமிடப்பட்டது. அதை ஒட்டிய கருத்தரங்கில்தான் தொடர் கட்டுரைகள் ஆங்கிலத்தில் படிக்கப்பட்டன.

கிறிஸ்தவ இயக்கம் தொடங்கியபோது புதுக் கிறிஸ்தவர்களுக்கு இடையூறுகள் மிகுதியாக இருந்தன. அவர்கள் தங்கள் ஊர்களிலிருந்து காடுகளுக்குள் துரத்தப்பட்டனர். அப்போது உபதேசியராக இருந்த இளைஞர் சின்னமுத்து தாவீது சுந்தரானந்தன் அம்மக்களுக்கு அடைக்கலம் அளிக்க முதலூர் என்ற புதிதாக தனி ஊர் ஒன்றை அமைத்தார். முதல் அடைக்கல ஊராதலால் முதலூர் என்று அழைக்கப்பட்டது. சுந்தரானந்தத்தின் மரணம் பற்றி பல முரண்பாடுகள் இருப்பினும் அவர் ஒரு இரத்தச் சாட்சியாக மரித்தார் என்பது நெல்லை கிறிஸ்தவர்களிடையே வழிவழியாய் வழங்கி வரும் அசைபாத நம்பிக்கை. அடைக்கல ஊர் ஓர் அற்புதத் திருப்பம். இறையருள் நிகழ்வு. அதன் விளைவாக வேகமாக வேறு பல கிறிஸ்தவ ஊர்கள் தோன்றின. ஊர்களில் நடு நாயகமாக கோயிலும் பள்ளியும் எழுந்தன. கல்வியறிவற்ற அம்மக்கள் வேதக்காரர் என்றும் பேர் பெறலாயினர். நாகாலாந்தைத் தவிர்த்துவிட்டால் இந்தியாவில் கிறிஸ்தவத்தனித்துவம் துலங்கும் பகுதி இவ்வூர்களில்தான். இவ்வூர்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் பின் சந்ததியினர் சிலர் தங்கள் குடும்ப சரித்திரங்களை விழாவை ஒட்டிய

---

1 இங்கே ஒரு நூல் குறிப்பிடத்தக்கதாகும். சுந்து தேவ ஞானம் & மதுவேல் ராஜ்: Patti Heritage history of the Patti family during the 19th + 20th centuries (Madras Mrs. Uma D. Ponniya No. 6, Eighth cross Street, Shastri Nagar, Adyar, Chennai - 600 020, Publication dated 15th April 1997) 384, ill. lus (photographs) index.

கருத்தரங்கில் படித்தனர். அவற்றின் தமிழாக்கம்தான் இந்நூல். நூல் ஆங்கிலத்திலும் வெளிவருகிறது. [2]

பியூ நிதி உதவியுடன் பிரசுரமாகியுள்ள இரு ஆய்வு நூல்களை இங்கு குறிப்பிட வேண்டும். சூசன் பில்லிங்டன் ஹார்ப்பரும்[3] டி. டென்னிஸ் ஹட்ஸனும்[4] எழுதியவை. அடிக்குறிப்பில் மேலும் விவரங்கள் உள. இதுவரை தெரிந்திராத பல புதிய செய்திகள் இந்நூல்களில் உள்ளன. தரங்கம்பாடி, தஞ்சை சுவிசேட கிறிஸ்தவம் நெல்லைக்கு வந்தது. இச்சபை சுவிசேடம் பரப்புவதில் தனி ஆர்வம் கொண்டது. பக்தி மிகுந்தது. இந்தியாவின் வேறு பல பகுதிகளிலும் இது பரவியது. தஞ்சையிலிருந்து நெல்லைக்குக் கிறிஸ்தவம் வந்தது போல, நெல்லையிலிருந்து தெலுங்கு நாட்டுக்குச் சென்றது. இப்படி பற்பல பண்பாடுகளிடையே பரவியிருக்கும் கிறிஸ்து இயக்கங்களிடையே உள்ள தொடர்புகள், ஒற்றுமைகளை இவ்விரு நூல்களும் நன்கு வெளிக் கொணர்கின்றன. அண்மையில் ஓர் ஐம்பது ஆண்டுகளாக சிரியன் கிறிஸ்தவர்களும், கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், மிஷனெரி சங்கங்கள் மூலமாக இம்மாதிரியான கிறிஸ்து இயக்கங்களை பல்வேறு இடங்களில் தொடங்கி கல்வி மற்றும் பிற முன்னேற்ற நடவடிக்கைகளும் செய்து வருவது இங்கு குறிப்பிடத் தகுந்தது.

இராபர்ட் எரிக் ஃபிரிக்கன்பெர்க்
விஸ்கான்சின் பல்கலைக்கழகம், மாடிசன் (U.S.A)

தமிழாக்கம் : சரோஜினி பாக்கியமுத்து

---

2 பேராயர் ஜேசன் தர்மராஜ், மற்றும் பாளை தூய. யோவான் கல்லூரித் தலைவர் முனைவர் ஜே. பாலசிங் ஆகியோரின் உதவியுடன் டேவிட் பாக்கியமுத்துவும் - சரோஜினி பாக்கியமுத்துவும் கட்டுரையாளர்களை வரவழைத்து கருத்தரங்கம் நடத்தி, கட்டுரைத் தொகுப்பைத் தயாரித்துள்ளனர். (3) Susan Billington Harper, *In the shadow of the Mahatma - Bishop V. S. Azariah and the Travails of Christianity In British India* (Grand Rapids MI Eerdmans Publishers, 2000, Richmond. Surrey, Curzon Press 2000, 462 pp maps, Illustrations, Bibliography, Index (studies in the History of christian Mission series) (4) D. Dennis Hudson, *Protestant Origins In India, Tamil Evangelical Christians 1706 - 1835* (Grand Rapids MI. Eerdmans Publishers, 2000, Richmond, Surrey Curzon press 2000, 219 pp. Glossary, Bibliography, Index. (Studies in the Histroy of Christian Mission series)

✦ இதற்கு முன்பாகவே சுவிசேடம் இம்மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருந்தது. காண்க. *'While Sewing Sandals' Tales of a Telugn Pariah Tribe.* Emma Rauschenbusch - Clough. Newyork, Chicago, Toronto. Fleming H. Revell company. Publishers of Evangelical literature 1899. Reprint Asian Educational Services 31, HauzKhas Village, New Delhi - 110 016 and *From Darkness to Light. The story of a Telugu.* Rev. J.E. Clough D.D. Boston 1882. Third Edition.

வரலாற்று அறிமுகம்

இராபர்ட் எரிக் ஃபிரிக்கன்பெர்க்

இந்தியத் துணைக்கண்டம் பன்னெடுங்காலமாக பல்வேறு மக்களும் வந்து போகும் ஒரு நாற்சந்தியாக இருந்து வருகிறது. முக்கடல் கூடும் குமரி முனைக்கு மிக அருகாமையில் இருக்கும் திருநெல்வேலியும் அப்படித்தான். உலகப் பெருஞ் சமயங்கள் அனைத்துமே, அவை உருவான காலம்தொட்டே அங்கே கலந்துரையாடி வந்துள்ளன. சமயப் பன்மை இந்நாட்டின் விசேட அம்சம். நெல்லையிலும் பலப்பல சமய மரபுகள் ஒன்றுடன் ஒன்று கலந்து உறவாடி வந்ததை அதன் வரலாறு தெரிவிக்கிறது. அதன் சமுதாய வாழ்க்கையில் பல பண்பாடுகள் இணைந்துள்ளன. இங்கே அரசியல்வாதிகள் வெற்றி பெற வேண்டுமானால் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தியாக வேண்டும். ஆனால் 16, 17, 18 ம் நூற்றாண்டுகளிலே நிலைமை சிறிது மாறுகிறது. ஐரோப்பாவில் வேர்விட்டு வளர்ந்த கத்தோலிக்கம், புராட்டஸ்தாந்தியம் ஆகிய கிறிஸ்தவ சமயப் பிரிவுகள் இங்கு வந்து பெரும் பாதிப்புகளை நிகழ்த்தின.

அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே இயேசுவின் சீடரான பரி. தோமா அப்போஸ்தலர் தமிழகத்தில் கிறிஸ்து சமயத்தைப் பரப்பியதாக நம்பப்படுகிறது. கிறிஸ்தவம் இந்திய சமயங்களில் ஒன்று என்றே கணக்காகியிருந்தது. சிரியன் கிறிஸ்தவர் தாங்கள் பரி. தோமா காலத்தில் கிறிஸ்தவரானவர் எனக் கூறி தங்களை தாமஸ் கிறிஸ்தவர் என்றும் கூறிக்கொள்கின்றனர். கி.பி: 72 ஆம் ஆண்டு தோமா மயிலாப்பூரில் இரத்தச் சாட்சியாக மரித்தார் என்பதை நம்புவதற்குப் போதிய இடம் உண்டு. எப்படிப் போனாலும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் கிறிஸ்தவர்கள் தென்னகத்தில் இருந்தனர் என்பதை உறுதியாக நம்பலாம். 8 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து பயணிகள் புனித யாத்திரையாய் இந்தியா வந்தனர் என்ற குறிப்பு ஆங்கிலோ - சாக்ஸன் நடபடிகளில் உண்டு. பின்வந்த நூற்றாண்டுகளில் சாரதுஸ்திரா, இஸ்லாம் சமயத்தினர் தந்த துன்புறுத்துதலுக்கஞ்சி கிறிஸ்தவர்கள் இந்தியா ஓடிவந்து தஞ்சம் அடைந்துள்ளனர்.

கிறிஸ்தவ வணிகர்கள் பலர் இங்கு செல்வச் செழிப்புடன் வாழ்ந்துள்ளனர். அதற்கும் பின்னர் இந்தோ - இஸ்லாம் ஆட்சிக் காலங்களில் அர்மினியன் கிறிஸ்தவர்கள் வணிக நகரங்களில் குடியிருந்து இந்து மற்றும் முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் பணி செய்துள்ளனர்.

பரங்கியர் எனப்பட்ட ஐரோப்பியரின் வருகைக்குப் பின் சமய பண்பாட்டு உறவாடுதல்களில் பழைய போங்கும் அர்த்தமும் அடியோடு மாறின. போர்ச்சுகீசியரின் வருகையைத் தொடர்ந்து எஸ்டாடோ இந்தியா என்ற கத்தோலிக்க அமைப்பு போப்பாண்டவரின் தலைமையில் இங்கு இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து கோவாவில் பதராதோ அமைப்பு செயல்பட்டது. அதன் ஆதரவில் பல்வேறு குருமடங்கள் பல இடங்களில் தொடங்கப்பட்டன. இவைகளை உரோமாபுரியிலிருந்த போப்பாண்டவரோ, போர்ச்சுகீசியத் தலைநகரமான லிஸ்பனிலிருந்த அரசரோ அதிகமாய்க் கட்டுப்பாடு செய்யவில்லை. எனவே குரு மடத்தினர் இந்தியாவில் பல மடாலயங்களை உருவாக்கிக் கல்லூரிக் கட்டடங்களையும் எழுப்பினர். சுதந்திரமாய் சுறுசுறுப்பாய்ச் செயல்பட்டனர். சமயத் தொண்டர்களை கிராமங்களுக்கு அனுப்பினர். பலரை சமயம் மாற்றி தங்கள் குரு மேலாத்திக்கத்தை நிலைநாட்டினர். இந்தியாவில் இதற்கு முன்பே இருந்த பழைய கிறிஸ்தவ சமயங்களை நலிவுறச் செய்தனர். பழைய கிறிஸ்தவர்களுக்கு மேற்காசியா சிரியா தலைமை. ஆனால் தலைமை என்பது பெயரளவில்தான். சிரியன் கிறிஸ்தவர்கள் இங்கே சுதந்திரமாய்த் தங்கள் போங்கில் சமயானுட்டானங்களை கடைப்பிடித்து வந்தனர். ஆனால் 1599 ல் கத்தோலிக்கர் உதயம்பூரில் ஒரு குரு சங்கம் (சினாடு) நடத்தினர். சங்கம் ஒரு கட்டளை பிறப்பித்தது. ***உதயம்பூர் கட்டளை*** எனப்படும் இது இங்கிருந்த பழைய கிறிஸ்தவர்களையும் உரோமாபுரி ஆதிக்கத்துக்குள் கொணர முயன்றது. இந்திய மேற்றிராணியர்களும் (பேராயர் அல்லது மெட்ராபாலிட்டர்) கட்டனார்களும் (போதகர்களும்) இந்த மேலாதிக்க முயற்சியை எதிர்த்தனர். 55 வருடங்கள் இந்தப் போராட்டம் நீடித்தது. 1653 ல் நூணன் குருசு என்ற இடத்தில் ஒரு ஏற்பாடு செய்து கொண்டனர். ஆயினும் சிலர் சிரியா

தொடர்பைத் தொடர விரும்பி சிரிய மூப்பர்களுடன் தொடர்பைப் புதுப்பித்து தாங்களே தங்கள் தலைவர்களை (கத்தோலிக்கோ மற்றும் மாப்பிரியன் எனப்படுவோர்களை) தேர்ந்தெடுத்துக் கொண்டனர், முன்புபோல் சிரியாத் தலைமை இப்பொழுதும் பெயரளவில்தான் இருந்தது. அதன்பின்பும் அந்தச் சபைகளில் ஒற்றுமை ஒருபோதும் நிலவவில்லை. பிரிவினைகளும் பிளவுகளும்தான்; போராட்டங்கள் ஓயவில்லை. அதிகாரம், பதவி, சொத்து முதலியவைகளுக்காக கச்சேரிகளில் வழக்குகள் நடந்தவாறிருந்தன. குருமார் ஆதிக்கம் இங்கு எப்போதுமே வலுவாக இருந்து வந்திருந்தது. இந்தியா விடுதலை அடைந்த பின்பும் அதே நிலைதான். (மேற்காசியா) அந்தியோகியாவிலிருந்த மூப்பர்களைச் சார்ந்திருந்தவர்கள் *ஜேக்கோபைட் சிரியன்* எனப்பட்டனர். உள்ளூர் கத்தோலிக்கோவினரைச் (மாப்பிரியன் அல்லது மெட்ராபாலிடன் மேற்றிராணியரைச்) சார்ந்திருந்தோர்கள் ***ஆர்தோடாக்ஸ் சிரியன்*** எனப்பட்டனர். இவர்கள் தோமா அப்போஸ்தலரின் பெயரைக் கூறினர். வடக்கத்தியர், தெற்கத்தியர், மலங்கரா, நஸ்ரானியர் என்று ஏற்கனவே இருந்த பிரிவுகளும் இருந்து வந்தன. நூணன் குருசில் (1653) நடந்ததை நினைவில் கொண்டு, இந்தியர் அயல்நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்ததைப்போல், இப்போது ஒரு பிரிவினர் தாங்களே தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். மார்தோமா I என்றழைக்கப்பட்டவரைச் சார்ந்தவர்கள் மார்தோமா கிறிஸ்தவர்கள் எனப்பட்டனர். இவர்கள் சுதந்திரமாக இருந்தனர், சுவிசேட நம்பிக்கைகளும் கொண்டிருந்தனர். இவை போக ரோமோசிரியர், ஆங்கிலோசிரியர் எனப்பட்ட கிறிஸ்தவப் பிரிவுகளும் முளைத்தன. இந்தப் பிரிவுகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கலப்பதும் வர்ணசாலச் சித்திரங்கள் போல் திடீர் மாற்றங்கள் அடைவதும் நடந்தது, பின்னர் ஒருவழியாய் சிரியன் கிறிஸ்தவர் என்றும் தாமஸ் கிறிஸ்தவர் என்றும் அவை பெயர் கொண்டன. கடலோர மீனவர்கள் மொத்தமாய் கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பிரிவைச் சார்ந்து கொண்டனர். அரச சபைகளில் இருந்த பிராமணர் மற்றும் செல்வாக்கான வணிகர் சிலரும் சிறிய அளவில் கிறிஸ்தவராயிருந்தனர். இப்படியாக தென்னாட்டில் ஒரு சிறிய

அளவில் பலதரப்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்தே வந்தனர். தரங்கம்பாடி மற்றும் தஞ்சையில் இருந்து தமிழ் சுவிசேடக் கிறிஸ்தவம் 18 ம் நூற்றாண்டில் நெல்லை நாட்டிற்கு அதன் பின்பு வருகை புரிந்தது.

போர்ச்சுகீசிய கத்தோலிக்க (பரங்கி) குருமார்கள், சமயத் தொண்டர்களாக பலவிடங்களிலும் காணப்பட்டனர். போர்ச்சுகீசிய அதிகாரம் உட்புகாத இடங்களிலும் அவர்கள் தென்பட்டனர். விஜய நகர அரச சபையிலே; செஞ்சி, மதுரை, தஞ்சையில் அரசாண்ட நாயக்கர் அரண்மனைகளிலே; ஆக்ரா, டில்லியின் மகா மொகலாயர் தர்பார்களிலே; ஹூக்ளி, மச்சிலிப் பட்டணம், சூரத்திலே செல்வாக்கு செலுத்திய சுபேதார்கள், சுல்தான்களின் மகால்களிலே என்று அவர்கள் நுழையாத இடமில்லை. அவர்கள் பரப்பிய கத்தோலிக்க சமயமும் தனி வகையாகவே இருந்தது. மதுரையில் இராபர்ட் டி நொபிலி தம்மை இரு பிறப்பாளரான உரோம பிராமணர் என்று பிரகடனப்படுத்தினார். சோழ மண்டலத்துக்குள் அடங்கிய இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சை, வேலூர் முதலிய இடங்களில் பணி செய்த ஜான் டி பிரிட்டோவும், கான்ஸ்தந்தோ யோசேப்பு பெஸ்கியும் (வீரமாமுனிவர்) தமிழும் வடமொழியும் கற்றுத் தேர்ந்து, பல புலமைச் செல்வங்களை விட்டுச் சென்றனர். மொகலாய சக்கரவர்த்தியின் தர்பாரிலே இந்தத் தொண்டர்கள் மருத்துவர்களாய், விஞ்ஞானிகளாய், தொழில் நுட்ப வல்லுநர்களாய்ப் பணிகள் பல செய்து, கைமாறாகத் தங்களுக்குத் தேவைப்பட்ட சலுகைகள், வசதிகளைப் பெற்றனர். சீனாவில் செய்ததுபோல் இத் தொண்டர்கள் நூலகங்களும் அமைத்தனர். விஞ்ஞான அறிஞர் என்று தங்களுக்குப் புகழ் சேர்த்தனர். தகவல் தொடர்புக்காக அவர்கள் அன்றைய வழக்கப்படி கடிதம் எழுதுவோரைச் ***(ஜவாப்நாவி)*** சொந்தமாகப் பணியில் அமர்த்திக் கொண்டதால் நாட்டுப்புறங்களின் நானாமூலைகளிலிருந்தும் அவர்களுக்கு தகவல்களும் செய்தி அறிக்கைகளும் வந்து சேர்ந்தன. இன்று வணிகர், வங்கியாளர், அறிஞர், பிரயாணிகள், ஆள்வோர் முதலியோருக்குக் கிடைக்கக் கூடிய தகவல் தொடர்புகளை அன்று இந்த ஜவாப்நாவிகள் தாம் செய்து தந்தனர். செய்தி எழுதுவது, உளவறிவது, வேவுத் தகவல்

தருவது ஆகியவற்றையும் இவர்களே செய்தார்களா என்பதையும் ஆராய வேண்டியது.[5]

பல்வேறு குரு மடங்கள் இம்மாதிரியான மிஷன் பணிகளில் ஈடுபட்டிருந்தன. அப்போது ஐரோப்பிய ஆளுகைக்குட்பட்டிருந்த கடலோரப் பகுதிகளுக்கப்பாலும் கத்தோலிக்கர் செல்வாக்குப் பரவியிருந்தது. இந்த கத்தோலிக்க குரு மடங்களில் முக்கியமானது இயேசு சபை மடமாகும். முன்பு செண்கபனூர் மடத்து நூலகத்தில் இருந்த பல ஆவணங்கள் இவை குறித்த தகவல்கள் தருபவை. இவை முழுமையாக இன்னும் ஆராயப்படவில்லை. மேல்குலங்களைச் சேர்ந்த உயர்குடியினரும் கிறிஸ்தவம் தழுவியிருந்ததாகத் தெரிகிறது. மிகச் சிறிய இந்தச் சமுதாயங்கள் தங்கள் கலாச்சார சமுதாயக் கட்டமைப்புக்குள் வாழ்ந்திருந்தனர். மீனவ சமுதாயத்தில் நடந்த பேரியக்கம்தான் மிகப் பிரபலமானது. கடற்கரைகளில் வசித்த இவர்கள் பரதவர், முக்குவர் எனப்பட்டனர். பரதவரின் பேரியக்கத்தை ஆன்மீகமென்று சொல்வதைவிட அரசியலென்று சொல்வதே பொருத்தமானதாகும். வீர தீரமான இவர்களின் தொழிலிடம் சமுத்திரம் ஆகும். இவர்கள் மீன்பிடி, முத்துக்குளி, வாணிபம், கடற்கொள்ளை ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள். இவர்களது எதிரிகள் அராபியரும், நாயக்கரும் ஆவார். அராபியரிடம் வலுவான கடற்படையும், நாயக்கரிடம் பலமான நிலப்படையும் இருந்தன. நிலைமை ஆபத்தானபோது மீனவர் உதவி வேண்டி போர்ச்சுகீசியரை அணுகினர். அவர்கள் சமயத்தைத் தழுவி உறவை வலுப்படுத்திக் கொள்ளத் தயாராயினர். சாதித் தலைவர் விக்கிரம ஆதித்தன் தலைமையில் ஒரு குழு கோவா சென்றது. போர்ச்சுகீசியரும் இராச தந்திரமாக வியூகம் வகுத்தனர். முத்துக்குளித் துறையின் செழிப்பான வரி வசூல் மீது அவர்களுக்கு ஒரு கண். ஒப்பந்தங்கள் ஆயின. வேதாளையில் ஒரு பெரும் சண்டை நிகழ்ந்தது (1538). அதன் பின்பு பரதவர்களுக்கு எதிரிகள் தொல்லை குறைந்து, சில காலம் மிகச் செழிப்பாக இருந்தனர். இக்காலக்கட்டத்திலெல்லாம் பரதவர் பெயரளவில்தான்

---

5 C.A. Bayly : *Empire And Information Intelligence And Social Communication In India 1770 - 1820* (Cambridge : cambridge University Press 1996) என்ற நூல், 300 வருடங்களுக்கு முன்பு தகவல் தொடர்புகள் எப்படி நடந்தன என்ற விவரங்களைத் தெளிவாகத் தருகிறது.

கிறிஸ்தவர்களாக இருந்தனர். சமய சத்தியங்கள், நெறிகள் பற்றி அவர்கள் எதுவும் அறியாதவர்களாகவே இருந்தனர். பிரான்ஸிஸ் சேவியர் முத்துக்குளித் துறை வந்து, தமிழே தெரியாத நிலையில் மூன்று தமிழர்களை உதவிக்கு வைத்துக்கொண்டு ஊரூராய் நடந்து சென்று ஜெபபுரைகள் அமைத்து குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் செய்து, வளர்ந்த பிள்ளைகளை கர்த்தரின் ஜெபம், ஆவே மரியா, பத்துக் கட்டளைகளைப் பாராயாணம் பண்ண வைத்தார். தினமும் காலையும் மாலையும் அவற்றைச் சொல்லி வரும்படி செய்தார். பிறப்பு, இறப்பு, திருமணம் இவற்றை பிற வம்சா வழிக் குறிப்புகளுடன் எழுதி வைக்க ஒவ்வொரு ஊரிலும் ஒரு கணக்குப் பிள்ளை நியமிக்க ஏற்பாடு செய்தார். வம்சா வழிக் குறிப்புகள் குடும்ப உறுதிக்கு வழி வகுத்தன. கரையாளர், சாணார், கைக்கோளர், பள்ளர், பறையர் முதலிய சாதியினர் ஞானஸ்நானம் கேட்டு வந்தபோது அவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிற்காலத்தில் மேற்கு கடற்கரை முக்குவர் சபையில் சேர விருப்பம் தெரிவித்தனர். அப்போது (1844) பத்தாயிரம் மீனவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். சேவியர் முத்திரை குத்திய இந்தப் பரதவரும் முக்குவரும், அவருக்குப் பின் வந்த பதராதோ அதிகாரிகளால் பலப்படுத்தப்பட்டு, நாலரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக சபையில் உறுதியாய் இருந்து வருகின்றனர்.[6]

இந்தக் கடற்கரைக் கிறிஸ்தவ சமுதாயங்களுக்கு சுதந்திரம் தாராளம். மத நம்பிக்கை கிறிஸ்தவம்தான் என்றாலும், நாட்டுப் பழக்க வழக்கங்களையும் சாதிச் சடங்குகளையுமே அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தனர். சாதித் தலைவர் ஒரு குட்டி அரசர் போலவே செயல்படுவார். கன்னி மாதா, பனிமயமாதா முதலிய கோவில்களுக்குச் செல்லும் ஊர்வலங்களை அவர்தான் முன்னின்று நடத்துவார். கோவில்களில் மாதா சிலை அம்மன் போலவே காட்சியளிக்கும். சிலைக்கு சற்றுக் கீழே தலைவரின் பீடம் இருக்கும். அவர் எழுந்து சிலையின் மூடாங்கை அகற்றி அதற்கு மாலைகள் நகைகள் அணிவிப்பார். பின்னர் ஞானஸ்நானம் கலியாணம் போன்ற சடங்குகளை நடத்தி வைப்பார். தூத்துக்குடித்

6 Georg Schurhammer, Francis Xavier, His life, His times. *Fancis Xavier scin Leben and sewe Zeilt:* translated into English by M. Joseph Costelloe Rome 1973 - 1982) in 4 volumes.

தேர்த்திருவிழா ஆண்டுதோறும் பத்து நாள் நடக்கும். தேரை மலர்மாலைத் தோரணங்களினால் அலங்கரித்து, மாதா சிலையை உள்ளே வைத்து மேள தாள வாத்தியங்கள் முழங்க, பாடல்கள் ஒலிக்க, ஜெபங்கள் ஓதப்பட, ஆயிரக்கணக்கான மக்கள் வடம்பிடித்து, தேரின் பிரமாண்டச் சக்கரங்களை நகர்த்தி இழுத்து தூத்துக்குடி தெருக்கள்தோறும் கொண்டுசெல்வார்கள். பதராதோ இச் சடங்குகளுக்கு அனுமதி தந்தது. ஆனால் இயேசு சபையினரும் உரோமாபுரி அதிகாரிகளும் தரவில்லை.[7]

மதுரையில் இராபர்ட் டி நொபிலியின் செயல்பாட்டை பதராதோ உரோமபுரி இரண்டு மேலிடமும் இலேசில் அனுமதித்ததில்லை. பிரான்ஸிஸ் சேவியர் மதம் மாற்றிய இடம் தாழ்த்தப்பட்ட சாதியினர் வசிக்கும் மீனவ ஊர்கள். ஆனால் டி நொபிலி தேர்ந்து கொண்ட இடம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் கொண்டிருக்கும் நான்மாடக் கூடல்; திருமலை நாயக்கரின் மகாலுக்கு அருகாமையில். மேல் சாதி மக்களும், நானா திசைகளிலிருந்து மதுரைக்கு வரும் மாணாக்கர்களும் ஆயிரக்கணக்கில் தினமும் வந்து கூடும் இடம். மேல்குல இத்தாலியரான அவர் 1606 ல் சமயத் தொண்டு புரிய அவ்விடம் வந்து குடியமர்ந்தார். அவருடன் விசுவாசமும், மலையப்பனும், சிவதர்மர் என்று அவரது குருவும் இருந்தனர். டி நொபிலி சிறந்த புலமையுடையவர்; நல்ல நூலறிவர். அந்தணராக வாழ்வது அவரது நோக்கம். சொல்லாலும் செயலாலும் எவ்வுயிரையும் நோகடிக்காமல் இருப்பதும், வடமொழி கற்று வேதங்களை அறிந்து கொள்வதும், தமிழ் கற்று தமிழ் நூல்களைப் படிப்பதும் இயற்றுவதும் அவரது ஆவல்கள். ஆகமநூல்கள், ஆழ்வார் பாசுரங்கள், நாயன்மார் பாடல்களைக் கற்றுத் தேர்ந்தார். மாமிச உணவையும், தீட்டுக்களையும் தவிர்த்தார். ஒரு நாளில் ஒரு வேளைதான் உணவு உட்கொண்டார். சந்நியாசிக் காவி அணிந்து, இருபிறப்பாளர் அணியும் பூணுலும் தரித்தார். வேத விற்பன்னர்களுடன் சபைகளில் சம்வாதங்கள் புரிந்தார். பலர் - அவர்கள் குரு உட்பட - சமயம் மாறி அவரது சீடரானார்கள். பனை ஓலையில் எழுதி அவரது வீட்டு வாசலில் ஒட்டப்பட்டிருந்த

[7] Susan K. Bayly 'A Christian caste in Hindu society: Religious Leadership And Social Conflict among the Paravas of Southern Tamilnadu. Modern Asia studies 15.2.1981. 203-234.

கொள்கைவிளக்கப்) பிரகடனம் பின் வருமாறு: நான் பறங்கி அல்லன்; பறங்கியர் நாட்டில் பிறந்தவன் அல்லன்; அவர்கள் வம்சத்தோடு தொடர்புடையவன் அல்லன்; நான் உரோமாபுரிக்காரன். அங்குள்ள எனது குடும்பத்தினர் இந்நாட்டு இராசாக்கள் போல் கௌரவமான உயர் அந்தஸ்து உடையவர்கள்[8] மாட்டுக் கறியும் கள்ளும் உண்ணும் பிற ஐரோப்பிய மிலேச்சர்களுடன் அவர் தமது தொடர்பைத் துண்டித்துத் தாம் ஒரு உரோம பிராமணன் எனக் கூறினார். இந்தியர்களுள் ஒருவனாக வாழ விரும்பிய அவரை இந்தியர் தத்துவ போதக ஆச்சாரிய சுவாமிகள் என்று அழைத்தனர்.

கத்தோலிக்கரின் நூலறிவைக் காட்டக்கூடிய பல அரிய எழுத்துப்பிரதிகள் செண்பகனூர் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. நாயக்கர் கால மதுரையில் டி நொபிலியுடன் தொடங்கிய கத்தோலிக்கர் நூல் புலமை மற்றொரு ஏசுசபை இத்தாலிய துறவியான கான்ஸ்டான்தோ யோசேப்பு பெஸ்கியின் பங்களிப்பால் உச்சத்தை அடைந்தது.[9] வீரமாமுனிவர் என்றும் தைரியநாத சுவாமி என்றும் (1680 - 1747) அழைக்கப்பட்ட இவர் செவ்வியல் காப்பியம், தத்துவக் கட்டுரைகள், உரைகள், அகராதிகள், இலக்கணங்கள், துண்டுப் பிரசுரங்கள், கதைகள் எனப் பலவற்றை கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் விட்டுச் சென்றிருக்கிறார். தமிழ்க் கல்வியுலகின் முன்னணியில் அவர் நின்றார். 30 காண்டங்களில் 3525 செய்யுட்களில் இயற்றிய தேம்பாவணி காப்பியம், திருக்குறள் உரை, ஆச்சாரிய அறிஞர்கள், பண்டாரங்களுடன் சபைகளில் அவர் நிகழ்த்திய விவாதங்கள் அவருக்குப் புகழ் சேர்த்தன. அவரது பரிவட்டம் சங்கராச்சாரியாருடையது போல வெளிச்சமாய்த் தகதகத்தது. அழுத்தமான சிவப்புக் கரை கொண்ட நீண்ட உள்ளங்கி, கருஞ்சிவப்பில் மேலங்கி, அலங்காரக் காலணிகள், கருஞ்சிவப்புடன் வெள்ளை கலந்த தலைப்பாகை, முத்து இரத்தினங்கள் பதித்த கடுக்கன், மணிக்கட்டில், விரல்களில் கனத்த பொன் வளையல்கள், மோதிரங்கள், தந்த வேலைப்பாடுள்ள வளைந்த கைத்தடி ஆகிய

8 பறங்கி என்ற சொல் ஒழுங்கீனமாய் அலைந்த போர்த்துகீசியரைக் குறித்தது. அனைத்து ஐரோப்பியரையும் அல்ல.

[9] Vincent Cronin : A Pearl to India (the life of Noberto di Robili) London 1959. Joseph Thekkedeth : History of Christianity in India. Vol II Bangalore 1982 pp 212-280.

அலங்காரங்களுடன் விலையேறப்பெற்ற உயர் ரக பல்லக்கில் புலித்தோல் மீது பெஸ்கி அமர்ந்திருக்க, உச்சியில் தங்கக் குமிழுடன் செம்பட்டில் தைத்த சிறு குடை கொண்டு பணியாட்கள் அவர் மீது வெயில் படாமல் தடுத்து வியர்வை தவிர்க்க விசிறிக் கொண்டு சரஸ்வதி தேவியின் குறியீடான மயிலிறகுப் பதாகையைத் தூக்கிப் பிடித்தவாறு, மேலும் வேலையாட்கள் முன்னும் பின்னும் சூழ்ந்து வர இராசபடோபவமாக அவர் தெருக்களில் போய் வந்தார். கர்னாடக நவாப், சந்தா சாகேப், அவரைத் தமது தர்பாரில் கௌரவித்தார். இஸ்மாட்டி சந்நியாசி என்ற பட்டத்தை அளித்து பாட்டனாரின் தந்தப் பல்லக்கை வழங்கி, திவானாக நியமித்தார். அப்பதவியின் மூலம் பெஸ்கி ஆண்டுக்கு 12,000 ரூபாய் வரக்கூடிய (வரிவிலக்குடன்) நான்கு கிராமங்களை இனாமாகப் பெற்றார். அதன் பின்பு, பெஸ்கி பயணம் போனபோதெல்லாம், அலங்காரக் குதிரைகள், குதிரை வீரர்கள், உளவாளிகள், கேடயமணிந்த ஈட்டி வீரர்கள், சேவகர்கள், முழவு மேளம், குழல் கூடார சாமான்கள் சகிதம் ஒரு பேரரசரின் ஆரவாரங்களுடன் போய் வந்தார்.[10] கத்தோலிக்க சமயத் தொண்டரின் நூல் புலமையும், கல்வி மரபும் மிக உயர்தரமாக இருந்தது. இந்நாட்டில் கத்தோலிக்க கிறிஸ்தவம் இந்திய கலாச்சாரத்தோடு ஒன்றியிருந்தது என்பதிலும் ஐயமில்லை.

ஆயினும் மொத்தத்தில் பார்க்கப் போனால் பரி. தோமா கிறிஸ்தவ சபைதான் மிகவும் இந்திய மயமாக இருப்பதாகச் சொல்ல வேண்டும். வரலாற்றைப் பொறுத்தமட்டில் தோமா அப்போஸ்தல மரபு அவர்களுடையது. கொள்கை அடிப்படையில் குரு ஆதிக்கத்தைச் சிறப்பாய் ஏற்பவர்கள். மற்றும் அவர்கள் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் கடைப்பிடிப்பவ ராயிருக்கின்றனர். அவர்களது நிறுவனங்கள், அமைப்புகள் செயல்படுவதும் இந்திய மயமாக உள்ளது.

புராட்டஸ்தாந்திய சுவிசேட கிறிஸ்தவத் தலைவர்கள் மூலம் திருநெல்வேலியில் முதல் முதல் வெகுசன சமயமாற்ற இயக்கம் நடந்ததென்றாலும், அதன் வேர்களைத் தேடிப் போனால்,

---

(10) Rev. L. Besse : *Father Beschi of the society of Jesus, His times and His writings.* Trichinopoli St. Joseph's 1918. pp. 35-49. Muthusami Pillai : *A brief sketch of the Life & writings of Rev. C.J. Beschi* (வீரமாமுனிவர்) 1840.

நெல்லைக்கு முன்பு தஞ்சை, தஞ்சைக்கு முன்பு தரங்கை, தரங்கைக்கு முன்பு ஹலே (ஜெர்மனி) என்று அது நீள்கிறது. ஹலே மக்கள் அயல்நாடு சென்று சுவிசேடம் சொல்லும் உந்துதல் பெற்ற வரலாற்றைச் சுருக்கமாக சொல்லப் போனால், அங்கு பகுத்தறிவொளி இயக்கமும் (enlightenment) புராட்டஸ்தாந்திய சுவிசேட மிகுபக்தி இயக்கமும் (pietism) தத்துவ சமய அடிப்படையில் இணைந்து கொண்டதை முதலில் குறிப்பிட வேண்டும். முப்பதாண்டு யுத்தம் என்றழைக்கப்பட்ட போரிலும் மக்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து மிகுந்த துன்பம், துயரங்களை அனுபவித்திருந்தனர். மிகுபக்தி இயக்கம் அப்போதுதான் வளர்ந்தது. இவ்வியக்கம் இரண்டாம் சீர்திருத்த இயக்கம் என்றே வர்ணிக்கப்படுகிறது. இந்தச் சூழலில்தான் அயல்நாடுகளில் சுவிசேடம் அறிவிக்கும் உந்துதலை மக்கள் பெற்றனர். பின்னர் பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இவ்வியக்கம் பரவி மாபெரும் ஆன்மீக எழுச்சியை உண்டுபண்ணியது.[11] தொண்டு மனப்பான்மைகள் உருவாகி மிஷனெரி நடவடிக்கைகளுக்கு அவை காரணமாயின. அப்போது நடந்த சில நிகழ்ச்சிகளையும் எழுச்சிக்கு காரணமாகச் சொல்லலாம். சமய சகிப்பின்மை விளைவித்த கொடுமைகளால் மொரேவிய அகதிகள் புலம் பெயர்ந்து ஓடியது; அவர்களுக்கு சின்சின்டார்ப் பிரவு ஹெரன்ஹீட் எனுமிடத்தில் புகலிடங்கள் அமைத்துக் கொடுத்தது; பேராசிரியர் அகஸ்ட் ஹெர்மன் பிராங்கே ஹலே பல்கலைகழகத்துக் கல்வி முறைகளில் புதிய முறைகளைக் கொணர்ந்தது, இங்கிலாந்து அரசி ஆனியும் டென்மார்க் அரசர் ஃபிரெடிரிக்கும் (இவர் சீகன்பால்குவையும் புளுட்சோவையும் இந்தியா அனுப்பக் காரணமாக இருந்தவர்) நெருங்கிய உறவினராதலால் அவர்கள் ஒத்துப் பேசி மிஷனெரிகளை அனுப்பும் முடிவுகளை எடுத்தது. இவையெல்லாம் ஒரு சில காரணங்கள்.[12] வேறு வேறு சமயப் பிரிவுகள் ஒறறுமையாகி தொண்டார்வம்

---

11 F. Ernest Stoeffler. *The Rise of Evangelical Pietism* (Leiden : Brill. 1971), *German Pietism during the Eighteenth century* (Leiden Brill 1973).

(12) John Foster : The Significance of A.W. Boehme's *"The Propagation of the Gospel in the East* "*Occumenia* (1968) by the chaplain to prince George of Denmark, Queen Anne's husband. Zeigenbalg Bartholomaeus. *The propagation of the Gospel in East* (London : Downing 1709, 1719, 1718 edited with introductory notes by A.W. Bohme. *'Priliminary Discourses concerning the Character of Missions.*

கொண்டதால் புதிய முறைகளில் மிஷன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாயின. அரசு ஆதரவுடன் 1698 ல் நிறுவப்பட்ட கிறிஸ்தவ அறிவு விளக்க சங்கம் (Society for Promoting Christian Knowledge, SPCK) 1702 ல் நிறுவப்பட்ட சுவிசேட பிரபல்லிய சங்கம் (SOCIETY FOR THE PROPAGATION OF THE GOSPEL IN FOREIGN PARTS, SPG) இவை யாவும் மக்களுக்கு ஊக்கம் பிறப்பித்த சில அமைப்புக்களாகும். கல்வி, அறிவியல், தொழில் நுட்பத் துறைகளில் பல நூதன முற்போக்கான கருத்துக்களும் உதயமாயின. ஹலேயில் வகுக்கப்பட்ட ஒழுங்குத் திட்டங்களால் வட ஜெர்மனி முழுவதிலுமே வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டன. பிராங்கே எடுக்கச் சொன்ன உறுதிமொழி பற்றி இங்கே சொல்ல வேண்டும். அது என்னவெனில், நம்பிக்கைஉறுதிக்கு வேதாகமத்தைப் புரிந்துகொள்ள வேண்டும், வேதாகமத்தைப் புரிந்து கொள்ள எழுத்தறிவு வேண்டும், எனவே அனைத்துப் பேருக்கும் கல்வி கிடைக்க வேண்டும், அனைத்துப் பேரும் ஒரு தொழில் கற்கும் வாய்ப்பும் பெற வேண்டும். அப்படியானால் மாபெரும் இறைப் பணிக்கு மக்கள் ஆயத்தமாவார்கள், இதனால் இந்த பூமியில் வாழும் ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு வயதுவந்தவரும், (ஆண் பெண் இருபாலாரும்) தத்தம் தாய் மொழியில் கல்வி பெறும் உரிமை உடையவராவார் என்ற கருத்து வலுப்பெற்றது. இந்தச் சூழலில் தான் அயல் நாடு சென்ற சுவிசேடகர்கள் கல்விக் கூடம், தொழிற் கூடம் இரண்டையும் இரு எந்திரங்களாகக் கொண்டு செயல்பட்டனர். இந்த இரண்டையும் முன்னிறுத்தியே சுவிசேடம் சொல்வது என்பதும் அவர்கள் கொள்கையாயிற்று. எட்டுத்திக்குகளிலும் வாழும் அனைத்துப் பேருக்கும் எண்ணும் எழுத்தும் போதித்து, நவீன விஞ்ஞானத்துடன் கூடிய ஒரு தொழிலும் கற்றுக் கொடுப்பதானது, பல புரட்சிக் கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது என்பது தெளிவு. 1760 வாக்கில் இந்தப் புரட்சி இலட்சியங்கள்தாம் திருநெல்வேலியையும் வந்தெட்டின.[13]

---

13 ஜான் கம்பெனியைச் சேர்ந்த இரு டச்சுக்காரர்கள் ஆப்ரஹாம் ரோஜிரியஸ், பிலிப்பு பல்டேஸ் - இந்து பண்பாடு பற்றி எழுதினார். யாழ்ப்பாணத்தில் மிகச் சிறிய அளவில் இருந்த பிராம்மண கிறிஸ்தவர்களின் கவனத்தை இது கவர்ந்தது. இது குறித்து ரிச்சர்ட் ஃபாக்ஸ் யங் எழுதுகிறார். டென்னிஸ் ஹட்ஸன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. போர்ச்சுகீசியரின் ஆட்சியில் யாழ்ப்பாணம் முழுமையும் வேளாளரோடு அந்தணரும் பெயரளவில் கிறிஸ்தவர்களாயினர். டச்சுக்காரர் காலத்தில் கரவர் என்றழைக்கப்பட்ட மீனவர் மட்டுமே கிறிஸ்தவராகி அம் மதத்தில் நிலைத்துக் கொண்டனர்.

1706 ல் பர்த்தலொமேயு சீகன்பால்குவும் ஹென்றிக் புளூட்சோவும் தரங்கம்பாடி வந்திறங்கினர். செழிப்பான காவேரிக் கோணாமுகத்தில் இருக்கும் இத்துறைமுகம் தஞ்சை ரகுநாத நாயக்கரால் 1620 ல் டேனிய வணிகர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டதாகும். சமயத் தொண்டரின் வருகை தங்கள் வணிகத்தைப் பாதிக்கக் கூடும் எனப் பயந்த டேனியக் கவர்னர் அவர்களைத் துன்புறுத்தினான். ஒருவரைச் சிறையிலும் அடைத்தான். ஹலே பல்கலைக் கழகப் பயிற்சி பெற்றிருந்த இந்த இளைஞர்கள் தடங்கல்களை சமாளித்து, பயனுள்ள பணிகளைச் செய்யத் தொடங்கிவிட்டனர். டேனிய அதிகாரிகளின் குழந்தைகளுக்கு ஆசான்களாயினர். விரைவில் நாட்டு மொழிகளைப் படித்துக் கொண்டனர். பாடநூல்கள் பிரசுரிக்க அச்சகம் தொடங்கினர். சிறு கிறிஸ்தவ சபைகள் உருவானதும், தங்கள் சீடர்களுக்கு உபாத்தியாயர், போதகர் பயிற்சிகள் கொடுத்து அச்சபைகளை மேற்பார்க்க வைத்தனர். சமயம் மாறியவர்களுக்கு கல்வி வாய்ப்பும் ஏதாவது ஒரு தொழில் கற்கும் வாய்ப்பும் அளித்தனர். நாளடைவில் போதகர், உபாத்தியாயர் எண்ணிக்கை பெருகவும், தமிழகத்து நாட்டுப் புறங்களிலும் ஹலே கல்வி முறைகளைப் பரப்பத் திட்டமிட்டனர்.

இந்தத் துணிவான திட்டத்தை நல்ல புலமையுடன் சிறப்பாய்ச் செய்தனர். மதுரை ஏசுசபை மிஷனுக்கும், தரங்கை மிஷனுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் : முன்னதில் பணியாற்றிய டிநொபிலி, பெஸ்கி ஆகியோர் ஆசாரமான உயர்வகுப்பினரைக் கவர முயன்றனர். தரங்கைத் தொண்டர்களோவெனில் பஞ்சமர் உள்ளிட்ட அனைத்துப் பொதுமக்களுக்கும் எழுத்தறிவு புகட்டுவதை

இலங்கையின் ஆதி கிறிஸ்தவர் பற்றித் தொன்மக் கதைகள் உருவாயின. பல்தேயுஸ் அக்கதைகளில் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் அவர் தவிர வேறு யாரும் குறிப்பிட்டதாய்த் தெரியவில்லை. காண்க: ஹட்ஸன் : ***Protestant Beginings in India, Tamil Evangelical Christians.*** 1706-1835. (Richmond Surrey : Curzon, Grand, Rapids. Eerdmane, 2000) pp 6-9 Phillipus Baldaeus : ***Naauwkeurige Beschyvinge van malabare choromandelen het machtige Eyland ceylon*** (Amsterdam 1672) The Bible Trembled : ***The Hindu Christian controversies of Nineteenth century Ceylon*** (Vienna sammulung de Nobili 1995 என்ற நூலில் காணாமல் போன யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் என்ற தலைப்பின் கீழ் 42-47 பக்கங்களில் ரிச்சர்டு யங் ஃபாக்ஸ் யாழ்ப்பாணத்தில் போர்ச்சுகீசியருக்கு முன்புள்ள காலம் தொடங்கி போர்ச்சுகீசியர் காலம், டச்சுக்காரர் காலம், அதன்பின்பு வந்த அமெரிக்க மிஷனெரிகளின் காலம் வரை கிறிஸ்தவத்தின் நிலைமை குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

நோக்கமாகக் கொண்டனர். உதவியாளர்கள் மூலம் கிடைக்கக் கூடிய பழஞ்சுவடிகளைச் சேகரித்து அவற்றைப் படித்தனர். புதிய மொழிகள் கற்கும் வரத்தைப் பெற்றிருந்தவர் சீகன்பால்கு. இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ் இரண்டையும் கற்றுத் தேர்ந்தார். அவர் சேர்த்திருந்த ஓலைச் சுவடிகளைக் கசடறக் கற்றார். பல்வேறுபட்ட தமிழ் வழக்குகளை மயக்கமற உணர்ந்து கொண்டார். சாதாரண மக்களும் தமிழை வாசிக்கும் வாய்ப்புப் பெற்றுவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் புதிய ஏற்பாட்டை முதன்முதலாகத் தமிழில் மொழி பெயர்த்த வேத அறிஞரும் தமிழறிஞருமாவார் அவர். அக்காலத்தில் சாத்தியமாகக் கூடிய வசன நடையில் அமைந்த இந்த புதிய ஏற்பாடு 1715 ல் அச்சாகியது. தமிழின் ஆழமும் நயமும், தமிழரின் புலமையும் ஞானமும் அவரை வியப்புறச் செய்தன. 1713 ல் எழுதி முடித்த (தெய்வங்களின் வம்சாவழி) Geneology of the Malabar gods என்ற நூல் அவர் இந்து சமய நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ளும் முயற்சியாகும்.[14] அப்பிரதியைப் படித்த ஐரோப்பியருக்குப் பெருத்த தடுமாற்றம். அஞ்ஞானத்தை அழிக்கவல்லவோ நாம் நமது மிஷனெரிகளை அங்கு அனுப்புவது. இந்தியர்களது குப்பைகளை இங்கே பரப்புவதற்கல்லவே. என்று பிராங்கே தமது கருத்தைத் தெரிவித்துக் கொண்டார். [15]

சீகன்பால்குவின் மற்றுமொரு பெருஞ்சாதனை தர்மப் பள்ளிக்கூடங்கள் நிறுவியதாகும். அனைத்துப் பேருக்கும் கல்வி என்ற ஹலே இலட்சியம் இது. தாய் மொழியில் அடிப்படைக் கல்வி மனிதராகப் பிறந்த அனைவருக்கும் கிடைத்தாக வேண்டும் என்பது பிராங்கேயின் தொலை நோக்குப் பார்வையாகும்.[16] 1728 க்கும் 1731 க்குமிடையில் இம்மாதிரிப் பள்ளிகள் பல உருவாகிவிட்டன. தஞ்சாவூர் அரண்மனைக் காவல் சேவகத்தில் சேர்வைக்காரனாகப் பணியாற்றி வந்த நலிவுற்ற வகுப்பினர் இராஜநாயக்கன் தமது

---

14 மலபார் தெய்வங்களின் வம்சாவழியின் கைப்பிரதி நூல் ஜெர்மன் மொழியில் சீகன்பால்குவால் எழுதப்பட்டது. இது குறித்த ஒரு ஆய்வை முனைவர் டாக்டர் தானியேல் ஜெயராஜ் ஹலே பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

15 தானியேல் ஜெயராஜ் : ***Inkulturation In Tranquebar Der Bertrag det Fruhen danisch - halleschen Mission Zum Werden Emer Indischcinherimischen Kircher*** 1706-1730. Erlangen 1996. (Halle University Ph.D. Diss 1995).

16 டேனியல் ஜெபட்சன் : ***Protestant Origins In India : Tamil Evangelical Christians*** 1706-1835 (Grand Rapids MI Eerdmans. 2000 London Curzon press 2000 pp 20-21, 93-94, 101.

சகோதரர் மற்றும் உடன் சேவகர்களுடன் இணைந்து இம்மாதிரியான பள்ளி ஒன்றை தஞ்சை ராச்சியத்தில் அமைத்து அதற்கு அரசாங்கக் கொடையும் பெற்றார். தஞ்சை ராச்சியத்தில் அமைந்திருந்த திருச்சபைகளைக் கண்காணிக்க ஆரோன் என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்ற வேளாளர் நியமிக்கப்பட்டார். அவரே முதல் தமிழ் சுவிசேடப் போதகர் ஆவார். சீகன்பால்குவுக்குப் பின்வந்த ஐரோப்பியர்களில் சிறந்தவர்கள் பெஞ்சமின் சூல்ட்ஸ் (1719 சென்னை, 1727-1743) பிலிப்பு பப்ரிஷியஸ் (சென்னை 1740-1791) மற்றும் கிறிஸ்தியான் பிரெடெரிக் சுவார்ட்ஸ் (1749-1798) ஆவார்கள். சூல்ட்ஸ் தெலுங்கு மொழியில் நவீன ஆய்வுகளைத் தொடங்கி வைத்து, ஒரு அகராதி தொகுத்து, ஒரு இலக்கணமும் செய்து, சுவடிகள் சேகரித்து, சுவிசேடங்களை மொழி பெயர்த்து, பணிகள் பல செய்தார். பப்ரிஷியஸ், சீகன்பால்கு தொடங்கிய மலபார் தமிழ் ஆங்கில அகராதியைத் திருத்தி பூர்த்தி செய்து, ஆங்கிலத்தில் தமிழ் அகராதி தொகுத்து, புதிய, பழைய ஏற்பாடுகள் இரண்டும் கொண்ட முழுவேதாகமத்தையும் மொழி பெயர்த்து முடித்தார். அமரர் பப்ரிஷியஸின் பொன் திருத்தம் என பிற்பாடு இது வேதநாயக சாஸ்திரியாரால் கொண்டாடப்பட்டது.[17] தென்னகத்தில் ஏகாதிபத்தியம் உறுதிப்படுவதற்கு முன்பும் ஏகாதிபத்திய சார்பில்லாமலும் பணி செய்த மிஷனெரிகளில் மிகப் புகழ்பெற்றவர் கிறிஸ்தியான் பிரெடெரிக் சுவார்ட்ஸ் ஆகும். 48 ஆண்டுகள் இடையறாப் பணி செய்து அவர் 1798 ல் காலமானார்.[18] இக் காலக்கட்டத்தில் சுவிசேட கிறிஸ்தவம் நன்கு வேரூன்றி, நெல்லையில் வெகுசன இயக்கமும் தொடங்கியது. சுவார்ட்ஸ் தமிழ், தெலுங்கு, மராத்தி, பெர்ஸியன், சமஸ்கிருதம், போர்ச்சுகீசியம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தார். ஐரோப்பிய செவ்வியல் மொழிகளிலும், நவீன மொழிகளிலும் தேர்ச்சி இருந்தது. நல்ல

---

17 (1955) ஆர்னோ லேமனால் ஜெர்மனியில் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் சுருக்கமாக மொழிபெயர்க்கப்பட்ட *It Began in Tranquelar* 1957. Chennai. Johannes Ferdinand Fenger எழுதிய *History of the Tranquebar Mission* worked out from the original papers (Tranquebar 1863) என்ற நூல் ஜெர்மானிய மொழியில் எமில் ஃபிரங்கேயால் மொழிபெயர்க்கப்பட்டு அத்துடன் இந்தியாவில் பணி புரிந்த 98 சுவிசேடலூதரன் மிஷனெரிகளின் வாழ்க்கை குறிப்புகளும் இணைக்கப்பட்டது.

18 Hugh Nicholas Pearson (Dean of salisbury) ***Memoir of the Lofe and Correspondence of the Reverend Christian Frederick Swartz*** to which is prefixed a sketch of the History of Christianity in India (London 1834, 1835, 1839) 2 vols. Wilhelm Germann, ***Missionar Christian Schwartz*** - Sem Leben and Mission archives (Erlangen 1870).

பிரசங்கியாராக, உபாத்தியாராக, பள்ளி நிர்வாகியாகத் திகழ்ந்தார். வாழ்க்கையிறுதியில் அரசிளங்குமரனுக்குப் பாதுகாவல ராகவும், தஞ்சை மகாராஜாவுக்குத் தந்தையாகவும் இருந்து வந்தார். இராஜகுரு என்றே அழைக்கப்பட்டார். தமது சீடர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்து வந்திருந்தார். உதவியாளர்கள் எனப்பட்ட அவர்கள் தேர்ந்த தலைவர்களாக வளர்ந்தனர். அவர்கள் தரங்கையிலிருந்து தென்னிந்தியாவெங்கும் திருச்சி, தஞ்சை, நெல்லை, கன்னியாகுமரி, திருவாங்கூர் வரை போய் வந்து இருந்தனர். இந்த சுவிசேடகர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தரித்து வந்த காலம், இடையறாத போர்களினால் மக்கள் பஞ்சம் பட்டினியால் சொல்லொணாத பிற துயரங்கள் அனுபவித்த காலம் ஆகும். அதுவுமல்லாமல் கிழக்கிந்திய கம்பெனி சுவிசேடத் தொண்டை எதிர்த்து, கிறிஸ்தவர்களைப் பகைவர்களைப் போல் நடத்திய காலம் ஆகும். இந்தியத் துணைக் கண்டத்தில் தன் காலனியாதிக்கத்தை அழுத்தமாய் நிலை நிறுத்துவதிலேயே கம்பெனி குறியாக இருந்தது.

இதில் கவனிக்க வேண்டிய மற்றொன்று, நம் நாட்டு சமுதாயங்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியது, அயல்நாட்டு மிஷனெரிகளின் முயற்சிகளால் ஆனதல்ல. நற்செய்தியைக் கேட்டு அதில் நம்பிக்கை கொண்ட நம் நாட்டினர்தாம், தாம் கண்டு கொண்ட கிறிஸ்தவ உண்மைகளைத் தங்கள் சொந்த மக்களிடையே, போகிற ஊர்களிலே பழகிய மக்களிடையே தங்கள் மொழியில் சொல்லி வந்தனர். சிற்றூர்களில் வாழ்ந்த துணிவான இளைஞர்கள் வேற்று நகரங்களுக்குச் சென்று மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி தாங்கள் கேட்டு வந்த புதிய செய்தியை புதுமைச் சொற்களில் பொதிந்து அறிவித்த போது உள்ளூர் மக்களின் நெஞ்சை அது தொட்டது, ஆழமாய்ப் பதிந்தது. சுவார்ட்ஸின் சீடர்களாக இரண்டு மூன்று பேரைக் குறிப்பிடலாம். சத்திய நாதன் பிள்ளை, வேதநாயக சாஸ்திரியார் அவர்களில் இருவர் ஆவார்.

சத்தியநாதன் பிள்ளை தஞ்சையில் வேளாளர் குடியில் பிறந்தவர். சுவார்ட்ஸின் சீடரானபோது அவர் குடும்பத்தில் எதிர்ப்பு இருந்தது. அப்போது வல்லத்திலிருந்த கம்பெனிப் பட்டாளம்

ஒன்றிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் போதகராக இருந்தார். அப்போது ஏழு மைல் தள்ளி இருந்த ஒரு ஜெபபுரையைக் கம்பெனி சிப்பாய்கள் தகர்த்தனர். அதன்பின்பு அவர் தஞ்சை நகரத்து சபை ஒன்றிற்குப் போதகரானார். கிறிஸ்தவர்கள், குறிப்பாக கம்பெனிப் பட்டாளத்திலிருந்த கிறிஸ்தவப் போர் வீரர் ஓரிடத்திலிருந்து பிற ஊர்களுக்குக் குடிபெயர்ந்தபோதும், அது போல உள்ளூர் அதிகாரிகள் புலம்பெயர்ந்த போதும் சத்தியநாதனின் பணி முன்னேறியது.[19] பாளையங்கோட்டைப் பட்டாளத்தைச் சேர்ந்த சவரிமுத்துப்பிள்ளை என்ற வேளாள சிப்பாய் ஒருவர் முதலில் 1769 லும் பின் 1771 லும், திருநெல்வேலியில் குடியேறியிருக்கும் கிறிஸ்தவர்களிடேயே பணிபுரிய ஒரு போதகர் அனுப்புமாறு வேண்டி கடிதங்கள் எழுதினார். அதன்பின்பு வசதி படைத்த பிராமண விதவை கிளாரிந்தாவும் பாளையங்கோட்டை சபைக்கு விஜயம் செய்யுமாறு அவ்வாறே சுவர்ட்ஸை வேண்டினார். அதன் பின்பு 1778 ல் சுவார்ட்ஸ் பாளை வந்து அந்த பிராமண அம்மையாரை 'குளோரிந்தா' என்ற பெயரில் ஞானஸ்நானம் செய்து பாளை சபைக்குப் பொறுப்பாக நியமித்துவிட்டுச் சென்றார். பின்னர் இடையிடையே விஜயம் செய்துபோகும் ராயப்பன் என்ற வேளாள போதகரின் உதவியுடன் கிளாரிந்தா ஒரு தர்மப் பள்ளிக்கூடம் தொடங்கி ஜெபம் பள்ளி இரண்டும் நடக்குமாறு ஒரு கட்டடம் எழுப்பவும் நிதி அளித்தார். நிரந்தரமாய் திருநெல்வேலியில் இருந்து பணி செய்ய சத்தியநாதன் பிள்ளையும் அனுப்பப்பட்டார். அவர் இப்போது போதகப்பணி, உபாத்தியாயப் பணி செய்யும் தகுதியை முழுமையாகப் பெற்றிருந்தார். 1790 ல் சத்தியநாதன் தஞ்சையிலிருந்து திரும்பிய பின் அவர் முறையாக ஒழுங்குப்படி அபிஷேகம் பண்ணப்பட்டு நெல்லைக்கு சுவிசேட மிஷனெரியாக அனுப்பப்பட்டார். அதன் பின்னர்தான் நெல்லையில் பிரமிப்பான வெகுசன கிறிஸ்து இயக்கம் மிகவேகமாய்ப் பரவத் தொடங்கியது.

புலம் பெயர்ந்து பரவிவந்த சுவிசேட இயக்கம் இப்போது தன் நெல்லை சாணார்களையும் (இப்போது நாடார்கள்) வட்டத்துக்குள் இழுத்தது. இதன் தொடக்கம் 1797 ஆகும். இது

19 ஸ்டீபன் நீல் : *History of Christianity in India* (Cambridge : Cambridge University Press 1984) வால்யூம் 1, பக். 53.

சின்னமுத்து தாவீது சுந்தரானந்தன் என்ற சாணார் குல இளைஞர் கிறிஸ்தவனானபின் நடந்தது. இப்போது வயதால் தளர்ச்சியுள்றிருந்த சுவார்ட்ஸ், சுந்தரானந்தன் தன் இனத்தவருக்கு உதவ ஆர்வம் கொண்டிருந்ததைக் கவனித்து, சத்தியநாதனுக்கு உதவியாளராகப் பணியாற்றுமாறு அவரை நெல்லைக்கு அனுப்பினார். சுந்தரானந்தன் தாவீது என்ற பெயரில் திருமுழுக்கும், உதவியாளராகப் பயிற்சியும் பெற்றிருந்தார். அவர்தான் சாணார்களுக்கு புதிய சமயத்தின் மாறுபட்ட தன்மைகளையும், சத்தியத்தையும் விவரமாய் எடுத்துரைத்தார். சின்னமுத்து இறந்துவிட்டதாக நினைத்திருந்த அவரது உறவினர்கள் அவரைக் கண்டதும் சொல்லொணா வியப்படைந்தனர். அவரது முதல் பணியிடம் விஜயராமபுரமாய் இருந்தது. அது அவர் பிறந்த ஊராகிய காலங்குடிக்கு மிக அருகிலேயே இருந்தது. செய்தி அளித்து முடிந்த உடனேயே நான்கு குடும்பங்கள் மேலும் உபதேசம் வேண்டி வந்தனர். அருகாமையிலிருந்த சண்முகபுரம், அதைச் சுற்றியிருந்த அனைத்து சிற்றூர்களிலுமிருந்தும் மக்கள் வேகமாய் வந்து செய்தியாளர்களைச் சூழ்ந்தனர். சூழலே மின்சாரம் பரவினாற்போலாயிற்று. இது குறித்து சத்தியநாதன் தமது அறிக்கையில் எழுதியது .... நான் தொடர்ந்து மக்களிடம் பேசியவாறிருந்தேன். கால் மணி நேரம் கூட எனக்கு ஓய்வு கிடைக்கவில்லை. தாவீதும் நானும், அவர்களுக்கு வாசித்துக் காட்டுவதும், விளக்கங்கள் சொல்வதும், கேட்டவற்றை நடப்பு வாழ்கையில் கடைப்பிடிப்பது பற்றியும் சிறு இடைவெளி கூட இன்றிப் பேசியவாறிருந்தோம். இருவரும் அவரவர் வரங்களுக்கேற்ப, கேட்பவர் மனநிலைகளுக்கேற்ப பேசிக் கொண்டேயிருந்தோம். .... இப்படியாக பதினாறு நாட்கள் கழிந்தன. அந்தப் பதினாறு நாட்களில் தாவீதும் நானும் இரவும் பகலும் பணியாற்றினோம். .... சாணார்களை நாம் மரியாதையின்றி நடத்தக் கூடாது, அவர்களை நேசித்து அவர்களுக்கிருக்கும் முட்டுக் கட்டைகளை அகற்ற வேண்டும். தாவீதின் மாமா என்னிடம் சொன்னார், நீங்கள் சாதிபாராமல் எங்களிடம் அன்பாக நடந்து கொள்வது எனக்கு சந்தோசமாயிருக்கிறது.[20]

20 EH pp 55-61. Western op. cit pp 88-92. Appasamy pp 16-20 letter to Schwarty by sathianathan 10 april 1797.

வெகு விரைவில் ஊர்கள் மொத்தம் மொத்தமாய் கிறிஸ்தவமாயின. புரட்சி இயக்கம் சூடுபிடிக்கத் தொடங்கியது. தெலுங்கு பாளையக்காரர்கள் திகில் கொண்டு, அந்தப் புதுக்கிறிஸ்தவர் மீது சாடிப் பாய்ந்தனர். பாளையக்காரர் கிறிஸ்தவ ஊர்களைக் கொள்ளையடித்து, கிறிஸ்தவரானவர்களைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்து, ஓலைவேய்ந்த அவர்களது ஜெப பள்ளிப்புரைகளைப் பிய்த்துத் தள்ளி, புத்தகங்களை தீ வைத்துக் கொளுத்தினர். அவர்களை அவமானப்படுத்தி, பயமுறுத்தி, வன்முறைகள் செய்து தங்கள் தீவிரமான எதிர்ப்பைக் காட்டினர். ஏற்கனவே அரை நூற்றாண்டாக தென்னகத்தில் நடந்த போர்ச் சூழலின் கொடுமைகளோடு இப்போது சமய சகிப்பின்மைத் துன்புறுத்தல்களும் சேர்ந்து கொண்டன. உள்ளூர்ப் பெருந்தலைகள் தங்களுக்குள் சண்டையியிட்டதோடு, பெரும் பாளையக்காரரையும் எதிர்த்துக் கலகம் புரிந்தனர். பெரும்பாளையக்காரர் ஒருவரை ஒருவர் பாய்ந்து பிராண்டியதில் எங்கும் வன்முறை, கொள்ளை, சூரையாடல்கள் தலை விரித்தாடின. தென்னகத்தை தங்கள் தங்கள் வசப்படுத்த ஹைதர், திப்பு, மராட்டியர், கர்னாடக நவாப்போடு இணைந்த கும்பினியார் ஆக அனைத்துத் தரப்பினரும் போட்டியிட்டனர். ஊர்கள் எங்கும் அழிமாட்டமும், பஞ்சமும் கொள்ளை நோயுமாய்க் கிடந்தது. பாளையக்காரர் - ஆங்கிலேயர் யுத்தத்தின் கடைசிக் கட்டம் இது. பழைய விரோதத்துக்குப் பழி வாங்குதலும் புதிய பகைகளை சம்பாதித்துக் கொள்ளுதலும் அங்கங்கே அரங்கேறின. சாணார்க் கிறிஸ்தவர்களைத் தாக்குவதற்காக 1800, 1801 ல் உருட்டுக் கட்டைகளுடன் இராமநாதபுரத்திலிருந்து மறவர்கள் கொணரப்பட்டனர். 1799 க்கும் 1806 க்கும் இடைப்பட்ட காலத்தில் சாணார் கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்தனர். கிறிஸ்தவ ஊர்களில் ஜெபப்புரை இடிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களின் பொருட்களைச் சூரையாடி, ஊரை அழித்து, அவர்களை அடித்துத் துணிகளை உரிந்து சாகட்டும் எனக் காடுகளுக்கு அவர்கள் துரத்தப்பட்டனர்.[21]

(21) Robert Caldwell : *Records of the early History of the Tinnevelly Mission* (Madras 1881) Chapter III pp. 66-12. Caldwell : *A Political and General History of the District of Tinnevelli* (Madras 1881) pp 194-230 chapters VI-IX especially those on the last poligar war and conclusion of the poligar war - Hough : History of Christianity in India (London 1839-60 in five volumes Bk VIII p 676.

இதுகாறும் வீரதீரமாக கிறிஸ்தவர்களை வழி நடத்தி வந்த மக்கள் தலைவன் தாவீது சுந்தரானந்தனும் மறைந்தார். அவர் என்ன ஆனார் என்பதே தெரியவில்லை. அவர் உடல் கிடைக்கவில்லை. இத்தனை துன்புறுத்தல்களும், இத்தனை இரத்தச் சாட்சி மரணங்களும் நிகழ்ந்தாலும் இயக்கம் நின்றுவிடாமல் முன்னேறிக் கொண்டே இருந்தது. 19ம் நூற்றாண்டு முழுவதும் இயக்கம் நடந்தவாறிருந்தது. ஊர்கள் மொத்தமாய் கிறிஸ்தவம் தழுவுவதும் நடந்தது.

பயங்கரமான இந்தத் துன்புறுத்தலின் விளைவுதான் நெல்லையில் தோன்றிய அடைக்கல ஊர்கள். முதன் முதலாகத் தோன்றிய அடைக்கல ஊர் *முதலூர்* என்றே பெயர் பெற்றது. பண்டைய இஸ்ரவேலில் உருவான அடைக்கலப்பட்டணங்கள் பற்றி வேதாகமத்தின் மூலம் அறிந்து கொண்டது, இத்தகைய ஊர்கள் அமைக்க உந்துதலாக இந்திருக்கலாம். முதலூர் வெற்றியாகிவிட்டதால், அதைத் தொடர்ந்து வேறு பல அடைக்கலவூர்கள் தோன்றின. மெய்ஞ்ஞானபுரம், பெத்லகேம், நாசரேத், எருசலேம், சமாரியா, கலிலேயா, சாயர்புரம், சுவிசேஷபுரம், ஆனந்தபுரம், டோனாவூர்[22] இவையெல்லாம் நெல்லைப் பூமியில் பழக்கப்பட்ட பெயர்களாகிவிட்டன. வீட்டை இழந்து தவித்து வருபவர்களுக்கு ஒதுங்க இடமும் பாதுகாப்பும் பிற தேவைகளும் செய்து தர தொண்டு அமைப்புகள் தொடங்கின. இக் காலகட்டத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இருமடங்கு மும்மடங்காகக் பல்கிப் பெருகியது. மேனாட்டு மிஷனெரிகளும் வந்து சபைகளைப் பார்வையிட்டு தேவைப்பட்ட நிறுவனங்களைக் கட்டவும் வளர்த்தெடுக்கவும் உதவிகளைச் செய்தனர். அடிப்படைக் கல்வி தரும் பள்ளிகள், தலைவர்களை உருவாக்க உதவும் உயர்நிலைக் கல்வி நிலையங்கள், இறையியல் பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், சுயசார்பு திட்டங்கள், ஏழை எளியோருக்கும் நோயாளிகளுக்கும் உதவும் முன்னேற்ற அமைப்புகள், விதவைகள் அனாதைகளை ஆதரிக்க அன்பகங்கள் ஆகியவையே இந்

22 புது கிறிஸ்தவர்களின் பரிதாபநிலை குறித்துக் கேள்விப்பட்டு பிரஷியாவிலிருந்த பிரபு டோனா என்பவர், அவர்களுக்கு ஊர் அமைப்பதற்கான தமது சொந்தப் பணத்தை அனுப்பினார்.

நிறுவனங்கள். நெல்லையின் சுவிசேடக் கிறிஸ்தவர்கள் நெல்லை வட்டாரம் முழுமையையும் உருமாற்றி, புதியதொரு பண்பாட்டை வளர்த்து, அதை மறுருபம் கொள்ளச் செய்தனர் என்றால் மிகையாகாது.[23]

சுவார்ட்ஸின் உதவியாளர்களில் மிகப் புகழ் வாய்ந்தவர் வேதநாயக சாஸ்திரியாராகும். இவர் பாளையங்கோட்டையில் வேளாள குலத்தில் பிறந்தவர். இவர் தந்தை தேவசகாயம்பிள்ளை ஒரு கிறிஸ்தவக் கவிராயர். வேதநாயகம் 12 வயதிலேயே மிக புத்திக் கூர்மையுடன் ஒளிர்ந்தமையால் நெல்லையில் அவரைக் கண்ட சுவார்ட்ஸ் (1785) அவரைத் தத்து எடுத்துப் பயிற்சி தர விரும்பி, தேவசகாயத்தின் அனுமதியுடன் தஞ்சைக்குக் கூட்டிச் சென்றார். வேதநாயகமும் வெகு விரைவில் சிறந்த உபாத்தியாயராகவும், நவீன பள்ளிக்குத் தலைமையாசிரியராகவும் உயர்ந்ததோடு, கவிகள் இயற்றியும் புகழ் பெற்றார். நவீன பள்ளிகள் என்பது முந்தைய நூற்றாண்டில் ஹலேயில் பிராங்கேயின் கல்வி தொலைநோக்குப் பிரகாரம், சீகன்பால்கு நம் நாட்டில் தொடங்கியவை. இவைகளைத் தொடங்க தஞ்சை, சிவகங்கை, இராமநாதபுரம் அரசர்கள் மானியங்கள் அளித்தனர். பாடத் திட்டம் தமிழும் ஆங்கிலமும் கலந்தது. வேதாகமும், வேதபாடங்களும், அத்தோடு மிக நவீனமான பகுத்தறிவொளிக் கொள்கைகளில் பிறந்த அறிவியலும், தொழில் நுட்பமும் பாடத்திட்டத்தில் இருந்தன. இம்மாதிரியான கல்வி இந்தியாவில் அப்போது வேறெங்கும் கிடைத்ததில்லை. அதன் சிறப்பும் புகழும் லண்டன் வாழ் கும்பினி மேலதிகாரிகளையும் எட்டியது. வளர்ந்து வரும் சென்னை மாகாண நிர்வாகத்துக்கு உயர்தரப் பயிற்சி பெற்ற அலுவலர்கள் தேவைப்பட்டதால், இந்தக் கும்பினி அதிகாரிகள் பள்ளிகளுக்கு ஆண்டு மானியங்கள் வழங்க முன் வந்தனர். தஞ்சையில் வாழ்ந்த மராட்டியக் குடும்பங்கள் தங்கள் குமாரர்களைப் போட்டிபோட்டு பள்ளியில் சேர்த்தனர். படிப்பு முடிந்தபின் அந்த இளைஞர்களுக்கு உயர்ந்த ஒப்பந்தப் பதவிகள்-

23 Robert Caldwell : Records of the Early History of the Tinnavelly Mission (Madras 1881) R.E. Frykenberg : The Impact of Conversion and Social Reform upon society in South India during the late Company Period; Question's concerning Hind-Christian encounters with special reference to Tinnevelly; Indian Society and the Beginings of Modernisation (1830-1850) (London School of Oriental & African studies 1978) edited by C.H. Philips & Mary Doreen wainwright pp. 187-243.

இதுகாறும் ஐரோப்பியர் மட்டுமே வகித்தவை - கிடைத்தன. தஞ்சையில் இப்போது ஒளிர்ந்த புலமை, அறிவியல் ஆகியவற்றின் உச்சக் குறியீடாக அமைந்ததுதான் *சரஸ்வதி மகால் நூலகம்*. மகாராஜாவின் அரண்மனைக்குள் இது கட்டப்பட்டது. பாலிக்காலை வகுப்புத் தோழர்களான சரபோஜி இராஜாவும் வேதநாயகமும் கண்ட கனவுகள் நனவாயின. பல அரிய சுவடிகள், பிரதிகள், நூல்கள் இங்க பாதுகாக்கப்பட்டன. கலை அதிசய அரங்கில் விஞ்ஞானக் கருவிகள் வைக்கப்பட்டன.[24]

வேதநாயகத்தின் இலக்கிய சாதனை மிகச் சிறப்புடையது, வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. தமிழ் கிறிஸ்தவ சிந்தனையை இந்திய மரபோடு இணைப்பது என்று அவர் பல புதுமைகளைச் செய்தார். நவீன வசன நடையிலும் அவர் சத்தான படைப்புகளை பெருஞ் சொத்தாக தமிழ்ச் சமுதாயத்துக்கு விட்டுச் சென்றுள்ளார். அவர் எழுத்துக்கள் அனைத்தையும் ஆராய்ந்தால், அவை ஏராளமாக இருப்பதோடு ஆழம், அகலம், நுட்பம் விஸ்தாரமுமானவை, நவீன அறிவியலில் வான சாஸ்திரம், புவியியல், விலங்கியல், அனைத்தும் அவற்றில் இருப்பது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அவரது பெத்லகேம் *குறவஞ்சி* ஆழம் செறிந்தது. கருவுற்ற நாள் முதற்கொண்டு இறைவனையே நாடித் தேடும் ஆன்மாக்களால் ஆகிய மனித சமுதாயம் இறைவனைச் சார்ந்தே இருப்பதை குறவஞ்சியில் அருமையாய்க் கொணர்ந்துள்ளார், அது சுவிசேடத்தின் கதை. தமிழ் இலக்கிய மரபில், தமிழ்ச் சந்தங்களில் தமிழ்ப் பண்பாட்டோடு ஒத்துப் போவது. அன்றாட சொல் வழக்குகளில் நித்தியமான உண்மைகளை உணர்த்துவது. சீயோன் குமாரி என்ற மணாட்டி இறைவனை மணாளனாக வரித்து அவரோடு இணைதல் சொல்லப்படுகிறது. தேவ மோகினி என்ற பேருடைய சீயோன்குமாரி திருச்சபையுமாவாள், விசுவாசக் குறவஞ்சி என்ற குறத்தி விசுவாசம் பற்றி எடுத்துச் சொல்லுகிறபோது, மணாளன் மணாட்டி உறவு வலுப்பெறுகிறது. குறத்தியின் கணவனான ஞானச்சின்னக்கண் -

---

24 Indira Viswanathan Peterson : The cabinet of King Serfoji of Tanjore : A European collection in early nineteenth century India; *Journal of the History of collections* 11:1 (1999) pp 71-93. European science and German Missionary Education in the Lives of two Indian intellecuds of the Eighteenth century; the cabinet of curiosities *(Kunstkammer)* in 14th European conference on Modern south Asian studie's (Copenhagen; August 1996).

பறவை மற்றும் மீன் பிடிக்கும் தொழில் செய்கிற குறவன் - ஆத்மாக்கள் பிடிக்கும் உபதேசியாவார், குறவன் தான் பிடித் ஆத்மாக்களை இறைவனிடம் கொணர்கிறான். அவன் இறைவார்த்தை (வேதாகமம்) என்கிற ஞானவலையை விரித்து பறவைகளை, மீன்களைப் (மனுஷரை) பிடித்து நம் நாதரும் இரட்சகருமான ஏசுவென்ற மனுஷகுமாரனிடம் சேர்ப்பிக்கிறான். முதலில் அவன் தீமையை எதிர்த்துப் போராடியாக வேண்டும். கள்ளக் குறவனான சாத்தானை வெல்ல வேண்டும். இந்நூல் 1800 ல் இயற்றப்பட்டது. இதுவும் அவரது வேறுபல நூல்களும் 1820 ல் வெளிவந்து கிறிஸ்தவ மக்களிடம் நல்ல வரவேற்புப் பெற்றன.[25] அவரது உடன் மாணவர் தஞ்சை மகாராஜா சரபோஜி அவரை சமஸ்தான கவிஞராக்கி சம்பளமும் வீடு கட்ட நிலமும், சாஸ்திரி என்ற பட்டமும் அளித்தார்.[26]

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் ஏகாதிபத்தியம் உறுதியாய் நிலைத்து செயல்பட்டது. நெல்லையிலும் அதன் பட்டாளங்கள், நிர்வாக எந்திரங்கள், தொழில் நுட்பங்கள் அழுத்தமாய்த் தன் பாதிப்புக்களை ஏற்படுத்தின. பிரித்தானிய அரசின் தாக்கம் அதிகமாய் இருந்த போதிலும், இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிறுவனங்களை கவனமாய்த் தக்க வைத்துக் கொண்டதோடு சொந்த அமைப்புகளையும் வளர்த்துக் கொண்டனர். தங்கள் பண்பாட்டுக்கேற்ப சுவிசேடத்துக்கு அர்த்தம் தந்து அதைப் பிறருக்கும் எடுத்துச் சொல்லினர். தாழ்த்தப்பட்டவரிடையேயும், எட்டா தொலைவில் காடுகரைகளில் வாழ்வோரிடையேயும் பரப்பினர். பெண்களையும் குழந்தைகளையும் மறக்கவில்லை. வறுமைப்பிடியில் உழல்வோர், ஒதுக்கப்பட்டு அலைவோர், குறைகளுற்றோர், நோய்நொடிகளால் நொம்பலப்பட்டோர்,

25 *Bethlehem Kuravanchi* Vedanayaka Sastri of Tanjore : The Cultural Discourses of an Early nineteenth. Century Tamil Christian poet, *Cultural Interactions Christianity and South Asia's Religious Traditions* (Grand Rapids MI Eerdmans publishers, London Curzon Press in progress) edited by Judith M. Brown et al. (studies in the History of Christian Mission series) Revision of papers read at conference (oxford Balliol college. 22-24 sept. 1999, Palayamkottai 6-8 January 1995.

(26) வேதநாயக சாஸ்திரியார் தொடங்கி வைத்த பாதையில் வந்தவர்தான் ஹெ.ஆ.கிருஷ்ணபிள்ளை. இவர் சாயர்புரம் பள்ளியில் உபாத்தியாயராகப் பணியாற்றியவர். ஜான் பனியனின் 'Pilgrim's Progress ஐத் தழுவி *இரட்சணிய யாத்ரிகம்* என்ற காப்பியத்தை தமிழ் இலக்கிய மரபில் 1894 ல் தந்தார். காண்க : டி. டென்னிஸ் ஹட்சன் The Life and Times of H.A. Krishna Pillai (1827-1900); A study of the Encounter of Tamil Sri Vaishnava Hinduism and Evangelical Protestant Christianity in Nineteenth century Tirunelveli District (Claremont, Graduate school Ph.D., Dissertation 1979)

சமூகவிலக்கம் அடைந்தோர் அனைவரையும் கிறிஸ்தவ கருணை அரவணைத்துக் கொண்டது. ஆணோ, பெண்ணோ, குலம் கோத்திரம் எதுவோ, நிறம் எதுவோ, சொத்து சுகம் எப்படியோ, எந்த வேறுபாடும் பார்க்காமல் இறைவனின் பார்வையில் அனைவரும் ஒன்றுதான், இக வாழ்க்கை வசதிகளும் சகலருக்கும் சமமாகக் கிடைத்தல் வேண்டும் என்ற மன விசாலம் மெல்ல மெல்ல உருவாகத் தொடங்கியது. அதற்கேற்ற புதிய திட்டங்களும் புதிய விதிகளும் ஏற்படலாயின. உணவு, நோயற்ற வாழ்வு, கல்வி, மற்றுமுள்ள வாய்ப்புகளை அனைவரும் சமமாகப் பெறல் வேண்டும் என்ற இலட்சியம் பரவலானது. இந்தப் புரட்சிகரமான சமுதாய மாற்றங்களைக் கொணர்வது கிறிஸ்தவர்களின் கூடுதல் பொறுப்பாயிற்று.

பிரித்தானிய மிஷனெரிகள் இங்கு வருவதன் முன்பே பெரும் மாற்றங்கள் பல ஏற்படத் தொடங்கிவிட்டன. வேளாளர்களும், சாணாரும் பிற சாதியினரும் கிறிஸ்தவம் தழுவியது மேனாட்டு மிஷனெரிகளால் அல்ல என்பதை முன்பே கண்டோம். பிரித்தானிய புராட்டஸ்தாந்திய மிஷனெரிகள் வருவதற்கு ஒரு ஐம்பதாண்டுக்கு முன்னரே முதலில் வேளாளரும் பின்பு பேரளவில் சாணார்களும் கிறிஸ்தவராகிவிட்டனர். இந்த சமய மாற்றம் நெல்லையில் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தத் தொடர்ச்சி நீடித்தமைக்கு முக்கிய காரணமாக இருவரைச் சொல்ல வேண்டும். மிகத் திறமையாக உழைத்துப் பணி செய்த கும்பினி பாதிரியார் ஒருவர்; பேராற்றலை வரமாகப் பெற்ற ஜெர்மானிய/பிரஷிய சுவிசேடகர் அடுத்தவர்.

ஜேம்ஸ் ஹௌ 1816 ல் நெல்லை வந்தார். கேம்பிரிட்ஜில் இருந்த சார்லஸ் சிமியனுக்கு ஆர்வசீடர். கும்பினியின் குரு ஸ்தாபனத்தில் அவர் ஹௌவுக்கு இராணுவப் பாதிரி வேலை செய்து வைத்தார். ஹௌ இந்தியா வர முடிவெடுத்ததன் ஒரே நோக்கம் சுவிசேடகப்பணிதான். இங்கே அவரது குரு கடமைகள் மிகக்

---

27 F.J. Western : *Early History of the Tirunelvelli Church* (London : CMS Typescrip n.d.) p. 142 Volume V of James Hough's *Christianity in India* (London 1869) அவரது மகனால் பூர்த்தி செய்யப்பட்ட இந்நூல் ஹௌ ஐயரின் வாழ்க்கையையும் வரலாற்றையும் சொல்லுகிறது.

கொஞ்சம். மற்ற நேரத்தையும் தமது சொந்தப் பணத்தையும் கிறிஸ்தவ சபைகளைப் பலப்படுத்துவதில் செலவிட்டார்[27]. ஹௌவின் பணியால் கிறிஸ்தவர்கள் ஊக்கமும் வளர்ச்சியும் அடைந்தனர். சத்தியநாதன் ஓய்வு பெற்று பத்து வருடங்களுக்கு முன்பு தஞ்சை சென்றிருந்தார். ரிஷி என்ற பெயர் பெற்ற ஜெர்மானியர் வில்லியம் தோபியாஸ் ரிங்கல்டாபே 1809 ல் எங்கோ மறைந்து போய்விட்டார்[28]. 1806 ல் ஆவணங்களில் 6514 என்ற எண்ணிக்கையில் இருந்த கிறிஸ்தவர்கள் இப்போது மிகவும் குறைந்து போயிருந்தனர். ஹௌ கண்டது 53 சபைகள் மட்டுமே. சபையினர் மண் சுவரில் ஓலை வேய்ந்த ஜெபப்புரைகளில் சந்தித்து வந்தனர். ஆயினும் சிறுவர்கள் வேதவாக்கியங்களை மனப்பாடம் பண்ணவும் அவற்றை ஓலை இலக்குகளில் எழுத்தாணி கொண்டு எழுதவும் கற்பிக்கப்பட்டு வந்தனர்[29]. அவர் சென்ற இடமெல்லாம் கிறிஸ்தவர்கள் அவரை விருப்பமாய் வரவேற்றனர். அவர்களது சமய அறிவு அவர் நினைத்திருந்ததைவிட அதிகமாக இருந்தது. முதலூரில் ஒரு தென்னை மரத்து நிழலில் பெண்கள் அமர்ந்து பருத்தி நூற்றவாறே, சக்கரங்களின் ஓசைப் பின்னணியில் கீர்த்தனைகள் பாடிக் கொண்டிருந்ததையும், ஆராதனை முடிந்த பின்னும் மக்கள் கலைய மனமில்லாமல் ஜெபபுரை வாசலருகே உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்ததையும் அவர் கண்டார்[30]. கத்தோலிக்கரல்லாத சுவிசேட கிறிஸ்தவர்கள் மூவாயிரத்துக்கும் நாலாயிரத்துக்கு மிடையே இருக்கலாமென அவர் மதிப்பிட்டார். கத்தோலிக்கரின்- பெரும்பாலும் பரதவர்- தொகை இருபதாயிரம் இருக்குமென மதிப்பிட்டார் [31].

அவர் தொடங்கிய முதல் பணி கல்வியை மேம்படுத்தியதாகும். வந்திறங்கி இரண்டு மாதங்களுக்குள் பாளையில் ஒரு

---

28 R. Caldwell : *Records of the Early History (REH) of the Tirunelvelly Mission* (Madras 1881) 123-68 வரை ரிங்கல்தோபேயின் காலம் பற்றி எழுதுகிறார். இருண்டகாலம் என்று கால்டுவெல் இக்காலத்தைக் குறிப்பிடுகிறார். பக். 169-77 காண்க. W. ராபின்ஸன்னின் ரிஷி ரிங்கின்தபே அக்டோபர் 4 வரையிலுள்ள கடிதங்கள் ஜுலை 6 முதல் அக்டோபர் 4 வரை.

29 REH பக். 107-180. ஹௌவின் History vol. II 250 to Book IV pp. 250-52.

30 REH பக். 187.

31 கால்டுவெல்லின் ***Political and General History*** பக். 343,247 இது Tinnelvelly Manual லும் சொல்லப்படுகிறது. ஹௌ SPCK க்கு எழுதியனுப்பிய அறிக்கைகளிலுள்ளவற்றையே பலரும் எழுதுகின்றனர். அப்பாசாமியின் ***Centenery History of the CMS Tinnevelly*** (Palamkottah 1923) v. 23 Memories of Rhenius 197.

ஆங்கிலப் பள்ளியும் இரண்டு தமிழ்ப் பள்ளிகளும் திறந்தார். முன்னதில் இந்திய சர்க்கார் பணியாளரின் பிள்ளைகளும் கும்பினி இராணுவ அதிகாரிகளின் பிள்ளைகளும் படித்தனர். தமது சொந்தச் செலவில் இரண்டு கட்டடங்கள் எழுப்பினார். ஒரு ஆங்கிலேய உபாத்தியாயரை நியமித்தார். ஒரு தமிழரைப் பயிற்சிக்காகத் தரங்கை அனுப்பினார். தொடர்ந்து மற்றொருவரையும் அனுப்பினார். வருட இறுதியில் அவர் பள்ளியில் 169 மாணவர் இருந்தனர். அடுத்த ஆண்டில் மேலும் ஒரு ஆங்கிலப் பள்ளியும் இரண்டு தமிழ்ப் பள்ளிகளும் திறந்தார். 1819 ம் ஆண்டில் 59 மாணவருடன் இரண்டு ஆங்கிலப் பள்ளிகளும், 551 மாணவருடன் பதினைந்து தமிழ்ப் பள்ளிகளும் இருந்தன. இப்பள்ளிகளுக்கு நிதியுதவியும் புத்தகங்களும் எஸ்.பி.ஸி. கே யும் சி.எம். எஸ்ஸும் அளித்தன. போலையர்புரம் (போலே, இ 1818) ஹௌவையர்புரம் என்று இரு கிறிஸ்தவ அடைக்கல ஊர்களும் அமைக்கப்பட்டன [32].

பின்வந்த பத்தாண்டுகளில் அவர் அபிடுபாய்க்கு எதிராகத் துண்டுப் பிரசுரப் போர் தொடுத்து வந்தார். இதனால் அவர் பலரால் அறியப்பட்டவரானார். டூபாய் பிரெஞ்சுப் புரட்சியின் போது தொடர் சூட்டினின்று தப்பி வந்தவர் எனச் சொல்லப்படுகிறது. இந்துக்களிடையே அவர்களில் ஒருவராக வாழ்ந்தவர். ***இந்தியரின் குணவிசேடங்கள், பழக்க வழக்கங்கள், சமயம் சார்ந்த, சாராத ஸ்தாபனங்கள்*** என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி பிரதியை 1807 ல் சென்னை சர்க்காருக்கு சமர்ப்பித்தார்[33]. டூபாய் ஒரு பழமைவிரும்பி. வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியரைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களுடன் இவரது அபிப்பிராயங்கள் ஒத்திருந்தன. அதாவது, இந்துக்களுடைய பழக்க வழக்கங்களை அவர்களைப் படைத்த கடவுளே சகிக்கிறபோது நாம் என்ன செய்ய இருக்கிறது? என்பதுதான் அவர்களது நிலை சுருக்கமாகச் சொன்னால் உண்மையான சமய மாற்றம் சாத்தியமல்ல, கட்டாய சமயமாற்றம் சரியல்ல; மொத்தத்தில் இந்துக்களின் பழமையான நியமங்களுடன் மோதுவது தேவையல்ல

---

(32) Ibid
(33) REH. SPCK சென்னை கமிட்டிக்கு ஹௌ அனுப்பிய (அச்சிடப்பட்டது 1821) அறிக்கை பக். 181-189. இதைத் தொடர்ந்து இன்னொரு அறிக்கையும் வந்தது. பள்ளிகள், மாணவர்கள் செலவுகள் பற்றிய குறிப்புகளுடன். பள்ளிகளில் மூன்று பெண்கள் பள்ளிகளாகும். பெண்கள் பள்ளி வருவது இதுவே முதல் முறை (194) அப்பாசாமி Ibid பக். 22-26 அவர் பள்ளிகள் 12 என்றும் மாணவர் 479 என்றும் எழுதுகிறார். இவர்கள் எழுத்துக்களிலே காணப்படும் முரண்களை ஆராயவேண்டும்.

என்பதாகும். 1817 ல் பிரசுரமான டூபாயின் நூல் கவிசேடகர்களையும் சீர்திருத்தவாதிகளையும் நேரடியாய் எதிர்த்தது [34]. மனிதனின் இயல்பை மாற்றி செம்மைப்படுத்துவது சாத்திய மானதுதான்; இந்தியாவிலும் சமுதாய சீர்த்திருத்தங்கள் செய்து அந்நாட்டை முன்னேற்றப்படுத்தலாம் என்ற கருத்தை நூல் ஒப்புக் கொள்ளவில்லை [35].

சார்லஸ் தியோபிலஸ் ஈவார்ட் இரேனியஸ் கிறிஸ்தவ சபைகளில் மட்டுமல்ல, நெல்லை முழுவதுமே பிரம்மாண்டமான மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருந்தார். அவர் 1820 ல் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். பேரறிவும் தெளிந்த சிந்தனையும், அதி உற்சாகமும், நடைமுறை சாதனைகளில் தீவிர கவனம் செலுத்துகிறவராகவும் திகழ்ந்தார். இந்தியா கண்ட மிஷனெரிகள் அனைவரிலும் சிறந்தவர் என அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுபவர். ***நெல்லை அப்போஸ்தலர்*** என்று நெல்லை மக்கள் அவரை இன்றும் போற்றுகின்றனர். ஆன்மீகப் பலத்துடன் செயல்பட்ட அவர் சர்ச்சைக்குரியவராகவும் இருந்தார். அனைத்து மக்களிடமும் அன்பும் பரிவும் கொண்டவராய் எல்லோரையும் கவர்ந்து பேராற்றலுடன் செயல் புரிந்தார். ஹௌவின் கனவுகளை நனவுகளாக்கினார். முளைத்து மூன்றிலை மட்டுமே விட்டிருந்த கிறிஸ்தவம் இவரது அயரா உழைப்பினால், சமய மாற்றமாக மட்டுமல்லாமல், சமூகப் புரட்சியாகவும் வளர்ந்து வேரூன்றி, ஓங்கிக் கிளை பரப்பியது.

இவர் பிரஷியாவில் 1790 ல் பிறந்தவர். கருவிலே திருவுடையவர். மொரேவிய இலட்சியங்களில் ஊறியவர். பெர்லினில் பயிற்சி பெற்றவர். இளைய சங்கம் சி.எம்.எஸ். (சர்ச் மிஷனெரி சங்கம்) அவரைத் தங்கள் சமயத் தொண்டராக ஏற்று

---

34 ***Description of the Character, Manners & Customs of the People of India and of their Institution's Religious & Civil*** - Abbe J.A. Dubois, Missinary in the Mysore. (Madras 1879) p. VII Advertisement இந்நூல் ***Hindu Manners and Customs*** என்ற வேறு தலைப்பிலும் வெளிவந்திருக்கிறது. சிறப்பு நூல் இன்னும் பதிப்பில் உள்ளது. (Oxford University press) 1817 ல் முதலில் பதிப்பிக்கப்பட்டது. பின்பு பல பதிப்புகள்கள் ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளுடனும் விளக்கங்களுடனும் வந்துள்ளன.

35 இந்த வாதம் மேலும் நீடித்தது. இங்கிலாந்திலும் தர்க்கம் நடந்தது. காண்க ஜேம்ஸ் ஹௌ-The Protestant Missions Vindicated. Aganist Aspersios of the Rev. N. Wiseman D.D. Involving the Protestant Religion (London) 1937) pp. 146.

சென்னை அனுப்பியது. ஆங்கிலிக்கர் யாரும் அப்போது முன்வராத காரணத்தால்,[36] ஆங்கிலிக்கன் கொள்கைகளை ஒத்துக் கொள்ளாத, அவர்களது சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்காத இரேனியஸ், வெளிப்படையாகப் பேசுபவராகவும் புரட்சி மனப்பான்மை யாளராகவும் இருந்தார். சென்னையிலிருந்த ஆங்கிலிக்கன் (சி.எம்.எஸ்) அதிகாரிகளுக்கு இவரைக் கண்டு சிறிது தடுமாற்றம். ஆனால் அங்கிருந்த அந்தணர்களும் சமணர்களும் இவரது தமிழறிவையும், செயலாற்றலையும், கற்பனை வளத்தையும் கண்டு வியந்தனர். இதற்கிடையில் ஹௌ நெல்லைக்கு சமயத் தொண்டர் தேவை என எஸ்.பி.ஸி. கேக்கு (அறிவு விளக்க சங்கத்துக்கு) கோரிக்கைகள் விடுத்திருந்தார். வலுவிழந்திருந்த எஸ்.பி.ஸி.கே இது குறித்து எஸ்.பி. ஜிக்கும் சி.எம்.எஸ்ஸுக்கும் தெரிவித்தது[37]. சி.எம்.எஸ்ஸுக்கு மகிழ்ச்சி. கட்டுக்கடங்காத சுறுசுறுப்புடன் திகழ்ந்த இரேனியஸைக் கழட்டிவிட இது நல்ல வாய்ப்பாகத் தோன்றியதால், அவரைத் திருநெல்வேலி அனுப்ப சி.எம்.எஸ் நிர்வாகக் குழு தீர்மானித்தது[38]. தூரா தொலைவில் இந்தியாவின் தெற்குக் கோடியில் இந்தக் கலகக்காரன் மங்கி மறைந்து போவான் என அது நினைத்துக் கொண்டது. அடுத்த ஆண்டில் இரேனியஸின் நண்பரும், ஜெர்மன் லூத்தரருமான லட்விக் பெர்னார்டு எர்காட் ஸ்மிட்டும் அவருடன் சேர்ந்து கொண்டார்.

இரேனியஸ் இறந்தபின் கிடைத்த அவரது தாள்களில் நெல்லையைப் பற்றிப் பல குறிப்புகள் இருக்கின்றன. அப்போது 1820 ல் நெல்லை ஜில்லாவின் சுற்றளவு 4403 சதுரமைல் ஆகும்[39]. சனத்தொகை 7,87,296 ஆகும். (1856 கணக்கெடுப்புப்படி அதன் பரப்பு 5482 சதுரமைலும் மக்கள் தொகை 12,67,416 ம் ஆகும்)[40].

---

36 Robert Caldwell-*Lecturers on the Tinnevelly Missions* (London 1857) Descriptive of the Field, the work and the Results. With an introductory Lecture on the Progress of Christianity in India. p. 53.

37 *Memoir of the Rev. C.T.E. Rhenius.* comprsing Extracts from this Journal and correcpondence with details of Missionary Proceedings in South India (London 1814) by his son (J. Rhenius of Edinburgh) pp. 1-44, 45-167. பிற்பாடு அவருடன் சேர்ந்தவர்கள் J. Winckler (1827-34) P. Schaffter (1827-61) J. Devasahayam (1830-61) P. Fjellstedt (1832-5) J. Muller இது ரேனியஸின் டயரி என்று சொல்லப்படுவது. இனிமேல் MOR என்று குறிக்கப்படும்.

38 Ibid p. 194. Joseph Mullens. *Missions in South India* (London 1854) p. 108-9.

39 MOR pp 195 ff

40 Caldwell, *Lectures on the Tinnevelly Missions* (London 1857 p. 27).

அதில் இருபதில் ஒருவர் பிராமணர், பாதிப்பேர் அந்தணரல்லாத உயர் சாதியினர் - வேளாளரும் செட்டியாரும் - பத்தில் ஒருவர் சாணார், ஐந்தில் ஒருவர் தீண்டத்தகாதார் (பள்ளர், பறையர், சக்கிலியர்) ஆவார். சமயத்தைப் பொறுத்தவரை விக்கிரகாராதனை ஜில்லா முழுவதும் காணப்பட்டது. மொத்தம் கோவில்கள் 2,785. அதில் பெருங்கோவில்கள் 42. நாற்கோணமாய், நாலைந்தடி உயரத்தில் போகப்போக குறுகி மேலே சச்சதுரமாயிருந்த பீடங்கள் 10,000 க்கும் மேல்.[41] அவரை மிகவும் கலங்கச் செய்தது. விக்கிரகாராதனைப் பெருங்கோயில்களுக்கு கம்பெனி அரசு ஆண்டுக்கு 2,12,261-5-6 ரூபாய் வழங்கி வந்ததாகும். விஷ்ணு வழிபாட்டினரை விட சிவ வழிபாட்டினர் அதிகமாயிருந்தனர். மற்றப் பேர் பேய் வணக்கத்தினர். இஸ்லாமியர் சுமார் 50,000. அவர்கள் பெரும்பாலும் நகரங்களில் வியாபாரம் செய்தவர்கள்[42] எனவும் இரேனியஸ் எழுதியுள்ளார்.

நெல்லையின் பரப்பு பற்றியும் எழுதுகின்றார். மன்னார் குடாவிலிருந்து குமரிமுனை வரை கடலோர சமவெளி நீண்டு மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரங்கள் வரை சென்றது. (ஹாலந்து நாட்டின் பரப்பளவு சற்றேறக்குறைய இவ்வளவுதான்) பிற தென்னக நிலங்களுடன் ஒப்பிடுகையில் திருநெல்வேலி[43] செழிப்பாக இருந்தது. அங்குள்ள ஏழைகளின் வாழ்க்கைத் தரம் ஆந்திரருடையதை விட உயர்வாக இருந்தது. நெல்லையின் சுமார் 500 கிராமங்களை அடக்கி ஆண்ட மேல் குலத்தவர் அந்தணர், வேளாளர், செட்டியார் ஆகியோர் ஒருவருக்கொருவர் நல்ல தொடர்பு வைத்திருந்தனர். மிராசுதார், இனாம்தார், பிள்ளை, பண்டாரம், புரோகிதர், நிலவுடைமையாளன், விவசாயிகள், கோவில் அதிகாரி, நிலவுடமைக்காரர், சிறு அதிகாரிகள், கோவில் நிர்வாகி, நூலறிவாளர், கணக்கப்பிள்ளை, ஐயர், லேவாதேவிக்காரர், வர்த்தகர், நிலமில்லாக் கூலிகளின் உழு தொழிலைக் கண்காணிக்கும்

---

41 MOR p. 192
42 Ibid.
43 MOR. p. 236 Sacred paddyhedge

பெரும் விவசாயிகள் என்று பலதரப்பட்ட தொழில்களில் மக்கள் ஈடுபட்டனர்[44]. பாளையக்காரர் அல்லது ஜமீன்தார்களின் வாரிசுகள் சுமார் ஒரு டசன் பேர் இருந்தனர். இவர்கள் குட்டி அரசகுமாரர் போலிருந்தனர். 1801 இல் கம்பெனி இந்த ஆந்திர பாளையக்காரரை அடக்கிவிட்டிருந்தது.[45]

இம்மாதிரியான சூழலில் பாளையங்கோட்டையை மையமாகக் கொண்டு இரேனியஸ் சுவிசேடம் சொல்லத் தொடங்கினார். நற்செய்தியைப் பெறவும் அதை ஏற்கும் முடிவை எடுக்கவும் அனைத்துப் பேருக்கும் உரிமை உண்டு என நம்பினார். மாநிலத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் போய் வந்தார். மக்களோடு பேசித் துண்டுப் பிரசுரங்கள் கொடுத்தார். கிறிஸ்தவ கிராமங்களுடன் இடையறாத் தொடர்புகள் கொண்டார். கம்பெனிப் பட்டாளங்களுக்குள் மட்டும் அவர் நுழைய முடியவில்லை. பட்டாளத்தில் இருந்த தமிழ் சிப்பாய்களுக்கு சுவிசேடம் பரப்பக் கூடாதென கம்பெனி அவருக்குக் கடுமையான தடைவிதித்திருந்தது. துண்டுப் பிரசுரங்களைக் கூட அனுப்ப இயலவில்லை. ஆனால் இந்துக் கோவில்களின் வெளியே, அதன் பிராகாரங்களில், பஜார்களில், அவர் பிரசங்கங்கள் செய்து வந்தார். திருவிழாக் கூட்டத்தினரிடையே, பிராமணர்கள் மத்தியில் பேச்சுக்கள் நிகழ்த்தி சம்வாதங்கள் புரிந்து வந்தார். வீடு, கூடாரம், பல்லக்கு, எங்கு உட்கார்ந்திருந்தாலும் உரையாடுவதற்கு ஆட்கள் வந்தவண்ணமிருந்தனர். 23,000 மக்கள் தொகை கொண்டிருந்த திருநெல்வேலிப் பட்டணத்தின் பலதரப்பட்ட மக்களும் - படித்தவர், படிக்காதவர் - எல்லோரும் அவரிடம் தாராளமாய் வந்து பேசிச் சென்றனர்[46].

---

44 Ibid. Caldwell op cit more detailed description's of the social structure are to be found in Caldwell's Political & General History and in the Tinnevelly Manual. I have in hand manuscript district records, including annual jamabandis, and the multifarious concerns of the company's government (on microfilm) for the entire period. Some idea of what these contain may be gained from the Guide to the Tinnevelly District Records (Madras 1934) 468 pp which cover the period up to 1835.

(45) Ibid see, Caldwell's chapters pp. 194-231 on the Last Poligar war in His General History.

(46) MOR pp. 195-293. 230-36, 259 Appasamy opcit pp 30-38 சுவிசேட ஊழியம் பற்றிச் சொல்லுவது தேசாந்திரிகள் என்றழைக்கப்பட்ட சுவிசேடகர்கள் இரண்டிரண்டு பேராக ஊர்களெங்கும் அனுப்பப்பட்டனர். அவர்களைப் பதனீர் இறக்குவோருக்கும், சுரங்கம் தோண்டுவோர்க்கும் வாணம் தோண்டுவோர்க்கும், போருக்கு வெடிகள் ஆயத்தம் செய்வோருக்கும் ஒப்பிட்டார். அந்த முறைகளை ரேனியஸ் தமது டயரியில் கூறி இருக்கிறார். REH pp. 205.

இரேனியஸின் தாக்கம் தமிழ்நாட்டில் நீண்ட காலம் நிலைக்கத்தக்கதானது. அவர் பயிற்றுவித்த தலைவர்களுடையனவும் அப்படியே. அவரது காலத்திலும் (1820 - 35) பின்பு அந்த நூற்றாண்டு முடியும் வரையிலும் நெல்லை முழுவதிலும் சமூக மொத்த சமய மாற்றம் நடந்து கொண்டே இருந்தது. சாணார் கிராமங்களிலிருந்து தான் அதிகமும், நிலவுடைமை பெற்றிருந்த வேளாளரில் சிலரும் பிற சமுதாயத்தினரும் ஓரளவு சேர்ந்தனர். முந்தைய நூற்றாண்டுகளில் போலவே சில கிராமங்கள் முழுமையாகவும், சிலவற்றில் பகுதிப் பேரும் சேர்ந்தனர். அப்படிச் சேர்ந்ததும் ஊர்த் தெய்வத்தின் சிலையை உடைத்து விடுவார்கள். அக் கோவில் இருந்த இடத்தில் ஜெபஅறையும் பள்ளிக்கூடமுமாக இயங்கக் கூடிய கிறிஸ்தவ ஆலயம் நீண்ட அறையாகக் கட்டப்பட்டுவிடும். துன்புறுத்தல் காலத்தில் அமைந்தது போல இப்போதும் புதிய அடைக்கல ஊர்கள் தோன்றின. சிலவற்றுக்கு நிதியுதவியும் கிடைத்தது. ஜெர்மனியில் இருந்த தமது சபையினருக்கும் நண்பர்களுக்கும் இரேனியஸ் வேண்டுகோள் விடுத்திருந்ததின் விளைவாக பண உதவிகள் வந்தன. டோனா என்ற பிரஷியப் பிரபு (ஆதியில் ஸ்வீடனைச் சேர்ந்தவர்) அளித்த நன்கொடையில் உருவானது டோனாவூர் [47].

தர்மசங்கம் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு நிறுவனம். நெல்லைத் திருச்சபைகள் பல ஒன்று சேர்ந்து இச்சங்கத்தை உருவாக்கின. செழிப்பான நிலங்களை உடைமையாகக் கொண்டிருந்த பணக்காரர்கள் புதுக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய காலத்தில் இத்தகைய ஒரு சங்கத்துக்குத் தேவை எழுந்தது. நிம்மதியாய் கடவுளைக் கும்பிட்டு விட்டுப் போக ஒரு ஆலயம் கட்ட வேண்டுமானால் சொந்தமாக இடமும், அருகே குடியிருக்க அதைச் சுற்றி இடங்களும் வேண்டும். அப்படிப்பட்ட ஊர்கள் அமைக்க நிரந்தர நிதி ஏற்படுத்துவதே சங்கத்தின் நோக்கம். சங்கத்தின் ஆதரவில் புதுக் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு செய்யவும், சுவிசேடம் பகரவும் வாய்ப்புகள் உண்டாயின.[48] இரேனியஸ் வேலை நீக்கம் செய்யப்பட்டு, ஆற்காடு சென்று மீண்டும் நெல்லை திரும்பியதும் டேவிட்பிள்ளை ஆசீர்வாதம் என்ற

47 MOR. 329

48 MOR. pp. 252-54, 271-272, 275-79, 328ff- கிறிஸ்தவர்கள் துன்புறுத்தலுக்காளாகியதும், அதைச் சமாளிக்கும் விதங்கள் பற்றியும் விவரங்கள் இருக்கின்றன. (மைக்ரோபிலிமில் 1820-1860) என்னிடம் இருக்கும் சி.எம்.எஸ். கைப்பிரதி அறிக்கைகளில் குறிப்புகள் மிக அதிகமாக இருப்பதால் அவற்றை இங்கே எழுத இயலவில்லை.

வேளாளார் கொடுத்த பணத்தில் சுவிசேஷபுரம் உருவானது[49]. 1846 டிசம்பரில் கல்நாட்டு விழா சிறப்பாக நடந்து ஊருக்கு ***சுவிசேஷபுரம்*** என்ற பெயரும் சூட்டப்பட்டது. இச் சமயத்தில் புதிய சபைகளில் இருந்த புதுக் கிறிஸ்தவர்களின் தொகை 11,180 ஆக உயர்ந்திருந்தது [50]. இருபது ஆண்டுகளுக்குப் பின் எடுத்த கணக்கெடுப்புப்படி கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர் தொகை 46,047 [51] ஆகும். (நெல்லை ஜில்லாவில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் தொகையும் ஏறக்குறைய அவ்வளவுதான்.

18ம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி சிறிது காலம் நின்றிருந்த புரட்சி இப்போது இரேனியஸின் தலைமையில் மீண்டும் வேகமாய் இயங்கி வந்தது. அதன் வெற்றிக்கான காரணம் நெல்லைத் திருச்சபைகளுக்குள்ளேயே இருந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. சபை நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவுடன் இயங்கின. முன்பிருந்த முறைகளை விட இரேனியஸின் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறைகள் சிறந்தவை. சபை நிர்வாகம், வழிபாட்டு முறைகள் ஓரளவு ஆங்கிலிக்கன் திருச்சபை எதிர்ப்பாளர்களுடையவை. இரேனியஸின் தீர்க்கதரிசனத்தையும் உணர்வுபூர்வமான தலைமையையும் கால்டுவெல் பிற்பாடு வியந்து பாராட்டினார். அவர் எழுதியது:

நான் அறிந்தவரை சாதீயத்தை ஓரளவாவது நசுக்க முதல் முயற்சி எடுத்தது இரேனியஸ்தாம்[52]; பெண் கல்வியைத் திட்டமிட்டு

---

49 MOR. pp 361 ff இது ஜூன் 2ம் தேதி நிறுவப்பட்டது. cf Appasamy op cit pp 4, 7, 51-2, 75, 105-6, 128, 138 PSIMP p. 15.

50 MOR. pp 242-43, 280, 559-6. Appasamy ibid p. 67.

51 MOR. p. 554. The South Tinnevelly Mission. Church Missionary Society. By F. Sargent in the Proeceeding's of tghe South India Missionary Conference Held at Ootacamund April 19th May, 5th 1858. (Madras 1858) p. 14. ஒவ்வொரு பத்தாண்டுக்குமுரிய தொகைகளை இது தருகிறது. (இதன் சுருக்கம் PSIMC) Appasamy of cit பக். 38 ல் சொல்லுவது 1822 ல் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2 லிருந்து 15 ஆக உயர்ந்ததாகவும், 1825 ல் 416 லிருந்து 3000 ஆக உயர்ந்ததாகவும், 1825 ல் 205 கிராமங்களில் 6.243 பேரும் 1830 ல் 8,107 பேரும் (பக். 51) இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். பல ஊர்களில் மக்கள் தாங்களாகவே தங்கள் விக்கிரகங்களை எறிந்துவிட்டு, கோவில்களை அழித்து அவற்றை கிறிஸ்தவ ஆலயங்களாக மாற்றியதாகவும் எழுதுகிறார். (பக். 39) (கணக்கு வகை பக். 73-74).

52 முந்தைய மிஷனெரிகள் சாதீயம் ஒரு கலாசாரப் போங்குதான் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். ஆனால் இரேனியஸ் அவர்களுடன் மாறுபட்டு சாதீயத்தை ஒழிக்க முற்பட்டார். ஐரோப்பாவிலும், பிரிட்டனிலும் (பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு) சமுதாய சமத்துவக் கொள்கைகள் வளரத் தொடங்கியிருந்தன. இரேனியஸ் சமுதாய நீதியில் அக்கறை காட்டினார். காண்க டென்னிஸ் ஹட்ஸன் ***Protestant origins in India-Tamil Evangelical Christians*** 1706-1835 (Grand Rapids MI Eardmans Richmoud, Surrey. Curzon press 2000) pp 142-4.

முன்னேற்றியதும், சமய, தர்ம காரியங்களுக்காக கிறிஸ்தவ மக்களுக்கு சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததும் அவர்தாம்; கிறிஸ்தவ கிராமங்களில் நாள்தோறும் காலையிலும், மாலையிலும் மக்களைக் கோவிலில் கூடி வரச் செய்து ஜெபாராதனை செய்வதையும் அவர்தான் அறிமுகப்படுத்தினார். [53]

ஒவ்வொரு சபைக்கும் ஒரு பஞ்சாயத்து இருந்து வந்தது. முழுவதும் கிறிஸ்தவர்களான ஊரானால், ஊர்ப் பஞ்சாயத்தும் சபைப் பஞ்சாயத்தும் ஒன்றாகிவிடும். போதகர், உபதேசியார், வாத்தியார் ஆகியோர் ஊர்த் தலைவர்களுடனும் அதிகாரிகளுடனும் அமர்ந்து பேசுவர். சச்சரவுகளைத் தீர்த்தும் மற்றுமுள்ள ஊர் நடவடிக்கைகள் பற்றியும் பேசித் தீர்மானம் எடுப்பார்கள். வெளியாட்கள் நுழைந்து அதிகாரம் செய்வது தவிர்க்கப்பட்டுவிடும். சபையில் உள்ள அனைத்துப் பேருக்கும் கல்வி என்ற திட்டம் எல்லா சபைகளிலும் முதலிலிருந்தே அமுலாக்கப்பட்டது. இது ஹலே முறைமையைப் பின்பற்றியதாகும். அடிப்படை சமய நம்பிக்கைகள் குறித்து சபை உறுப்பினர் - சிறியோர், பெரியோர் - அனைவருக்கும் கண்டிப்பான பயிற்சித் தரப்பட்டது. குறிக்கப்பட்ட வேதாகமக் கொள்கைகள், கட்டளைகள் ஆகியவை பாராமல் படித்து ஒப்பிக்கப்பட வேண்டியவை[54]. கிறிஸ்தவ சமயத்தை ஏற்பதென்பது ஒரு புதிய தொழிலை ஏற்பது போலத்தான் என்று யாரும் இலேசாக நினைத்துவிடக் கூடாதென்பதில் இரேனியஸ் கவனமாக இருந்தார் [55]. சிறு சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் ஒருவருக்கு ஒருவர் வேத பாடங்கள் ஒப்பித்து சோதிக்க வேண்டியது என்ற ஏற்பாடு இருந்ததால் அடிப்படை நம்பிக்கைகள் பற்றி எல்லோருக்குமே நல்ல அறிவு இருந்தது. ஆர்வலர்களுக்கு உடனே ஞானஸ்நானம், நற்கருணை கிடைத்துவிடவில்லை. பல மாதங்கள், சமயங்களில் வருடங்கள் கழிந்து நன்கு சோதிக்கப்பட்ட பின்னரே கிடைக்கப்பெற்றனர் [56].

---

53 கால்டுவெல் Lectures (op cit) pp. 52-53 REH pp 226-7 சபைகளில் காலை மாலை ஜெபமுறை எப்போது தொடங்கியது என்பதை கால்டுவெல் சரியாக எழுதவில்லை. இது தரங்கம்பாடிப் பழக்கம் ஆகும். கோயிலில் மணி அடிக்கப்படும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே இப்பழக்கம் இருந்து வந்தது.

54 Ibid pp. 53, 62-69. PSIMP pp. 13.

55 PSIMP pp. 13 காண்க MOR pp. 12, 220-21, 263-93 குறிப்பாக 286 ff இதுபற்றி இரேனியஸின் குறிப்புகள் மூன்று இடங்களில் உள்ளன. உண்மையான சமய மாற்றம் பற்றி பின்வருவனவற்றையும் காண்க. பக். 317-19, 352-55, 550-55.

56 Ibid MOR pp. 219 ff.

சிதறிக் கிடக்கும் சபைகளை இணைக்கும் முயற்சிகளும் நடந்தன. கூட்டங்கள் நடத்தினர். சபைகள் எதிர்கொண்ட பொதுவான பிரச்சினைகளை - உதாரணமாக கிறிஸ்தவரல்லாதார் தந்த இடைஞ்சல்களை - சமாளிக்கவும், பல்வேறு சபையினர் ஒன்று கூடுவதால் அவை வலுப்பெறவும் முயற்சிகள் நடந்தன. வலியவந்து தொண்டாற்றுவோர் ஊக்குவிக்கப்பட்டனர். மிஷனெரிகளின் உதவியின்றி சபை மக்களே செயலாற்றும் வாய்ப்புகளும் பெருகின. தலைவர்களை உருவாக்க செமினெரி அல்லது பிரிப்பராண்டி என்ற இறையியல் கலாச்சாலை நிறுவப்பட்டது[57]. திறமையான இளைஞர்களை அடையாளம் கண்டு போதிய சமய அறிவு புகட்டி, தேர்வுகள் நடத்திப் பயிற்றுவித்த பின்னர் அவர்கள் போதகர், உபதேசி, உபாத்தியாயர்களாக பல்வேறு இடங்களுக்கும் அனுப்பப்பட்டனர். பிராமணர், வேளாளர், கத்தோலிக்கரும் இக் கலாசாலையில் கற்றுக்கொடுக்க நியமிக்கப்பட்டனர். பாடத்திட்டம் புராட்டஸ்தாந்திய சமயப்படி அமைந்ததுதான்[58] கிறிஸ்தவரல்லாத ஆசிரியர்களை நியமிப்பதும், அந்த மாணவ மாணவிகளைப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளுவதும் ஒரு வகையில் சுவிசேடம் பரப்புவதுதான் என்று கருதப்பட்டது. 1835 ல் 3,225 குடும்பங்களிலுள்ள 11,186 உறுப்பினர்களைக் கொண்ட 261 சபைகள் இருந்தன. 2,882 மாணவர்கள் அவர்களில் (159 பேர் மாணவிகள்). ஆரம்பப்பள்ளிகள் மட்டுமே நூற்றுக்கும்மேல் இருந்தன. அங்கு படிப்பு முடித்த கெட்டிக்கார மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் அதன் பின்னர் இறையியல் பள்ளிகளிலும் சேர்ந்தனர்[59]. 1830 ல் குருப்பட்டம் பெற்றவர்களாக டேவிட் பிள்ளை ஆசீர்வாதமும், ஜான் தேவசகாயம் பிள்ளையும் பணியாற்றினர். இவர்களில் தேவசகாயம் பிள்ளை முன்னாளில் நாட்டையர் சத்தியநாதன்பிள்ளை போல் செயலாற்றினார். ஒரு மிஷனெரி போல் இரேனியஸுக்கு உற்ற துணையாய் நின்றார்.

---

[57] இது ஹௌவின் காலத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டது. RSH பக். 202-3. இரேனியஸ் தமது கடைசிக் காலத்தில் இறைப் பள்ளியில் கவனம் செலுத்தினார். ஆவணங்களை ஆராய்ந்த வரையில் ஹௌ, இரேனியஸ் ஆகிய இருவருமே இப்பள்ளியைத் தொடங்கியதாகச் சொல்லலாம். ஆனால் இரேனியஸ் பொதுப்பள்ளி, இறைப்பள்ளி இரண்டிலும் தமது முத்திரையை அழுத்தமாகப் பதித்தார். MOR. பக். 208-12, 356-8, 561.

[58] கிறிஸ்தவரல்லாதவரை நியமிப்பதில் இரேனியஸ் ஹௌவைப் பின்பற்றினார். சி.எம்.எஸ். அதிகாரிகள் இவ்வழக்கம் குறித்துத் திகிலடைந்தனர். MOR அதி XIV பக். 390 ff PSIMP II.

[59] PSIMP பக். 12-14 கால்டுவெல் அப்பாசாமி இருவரும் ஒரே தொகைகளைச் சொல்லுகின்றனர்.

பல தொண்டு அமைப்புகள் நாட்டுப் பண்பாட்டை ஒட்டித் தாமாக எழுந்தன. அவைகளில் முக்கியமான தர்மசங்கத்தைப் பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டது. அது 1830 ல் ஜூன் 2 ம் நாள் தொடங்கப்பட்டது[60]. அதன் மூலம் துன்புறுத்தலுக்காளான சபைகளுக்குச் சேர்ந்திருந்த நிதியுதவி 1858 ல், 13,320 ரூபாய்க்கும் அதிகமாகும்[61]. 1821 ல் துண்டுப் பிரசுர சங்கமும், 1831 ல் நெல்லை வேதாகம சங்கமும் நிறுவப்பட்டன. 45,000 துண்டுப் பிரசுரங்கள் வெளியாகியிருந்தன. அச் சங்கத்தின் உபரி வருமானம் 1237 ரூபாய் ஆகும்[62] மேலும் சாந்தி சங்கம், சுவிசேஷ நிதி, ஏழைகள் நிதி, விதவைகள் நிதி, ஆகியவையும் இயங்கி வந்தன. நாட்டு மிஷனெரி சங்கம் என்றொரு அமைப்பும் இருந்தது. அதன் உறுப்பினர் தேசாந்தரிகள் (யாத்ரீகர்) என்று அழைக்கப்பட்டனர். இதுகாறும் சுவிசேடகர் யாரும் சென்றிராத ஊர்களுக்கு இந்த தேசாந்திரிகள் சென்று சுவிசேடம் சொல்லி வந்தனர்.[63] இத்தகைய தொண்டு நிறுவனங்கள் நெல்லை கிறிஸ்தவர்களுக்கு சுதந்திர மனப்பான்மையையும், சுய சார்பையும் ஊட்டி வந்தன. இந்த சுதந்திர மனப்பான்மை அவர்களது பல்வேறு நடவடிக்கைகளில் வெளியானது. சுதந்திர மனப்பான்மை இருந்ததினால்தானோ என்னவோ காலனியாதிக்க அறிகுறிகளான மேனாட்டுப் பழகக்கவழக்கங்கள் நெல்லைக் கிறிஸ்தவ கிராமங்களில் அதிகமாக வளரவில்லை. இரேனியஸ் காலத்திலேயும் இப்பழக்க வழக்கங்கள் கிடையா. சபைகள் சுவிசேட சபைகளாகவும், மிகு பக்திக் கூறுகள் கொண்டதாகவும் இயங்கினாலும் அவை முற்றிலும் தமிழ்ப் பண்பாட்டிலேயே ஊறியவை[64]. கட்டிடக்கலை, கவிதை, இசை ஆகிய கலைகள் யாவும் நாட்டுமயமானவை. வேதநாயக சாஸ்திரியாருடன் தொடங்கிய

60 MOR 376

61 PSIMP பக். 15. அப்பாசாமி 1839 க்குள்ளாக 13 தர்மசங்க கிராமங்களையும் 10 சி.எம்.எஸ். கிராமங்களும் இருந்ததாக அவற்றின் பெயர்களுடன் குறிப்பிடுகிறார். பக். 75

62 Ibid pp. 15-16 MOR pp. 231, 247, 472 Appasamy pp. 32-33, 47, 57, 105-6 - 1838 ல் நாகர்கோவிலிலும் 1847 ல் பாளையிலும் நிறுவப்பட்ட அச்சகங்களால் பள்ளிகள், சபைகளுக்கு தேவைப்படும் பிரசுரங்களின் தொகை பெருமளவில் பெருகியது.

63 Ibid pp. 15-16 MOR pp. 473, அப்பாசாமி பக். 54, 56, 76 கிறிஸ்தவரல்லாதவர் நண்பர் சங்கம் என்றொரு அமைப்பு மக்களால் அமைக்கப்பட்டது. சமுதாய விரோதம் கிறிஸ்தவ தர்மமன்று என்பதை கிறிஸ்தவரல்லாதார்க்கு உணர்த்துவதே அதன் நோக்கம் (பக். 107) Mullens op.cit pp. 116-118.

64 REH. pp. 13-14 பாளை ஆதிசபையில் இருந்த கவிராயர்களைப் பற்றிச் சொல்கிறது. தேவசகாயம் என்பவர் வேதநாயக சாஸ்திரியாரின் தந்தையாவார். வேதநாயக சாஸ்திரியார் தமது இளமைப் பருவத்தில் சுவார்ட்ஸூடன் தஞ்சை சென்றார். அவரது கீர்த்தனைகள் இப்பொழுதும் சபையில் பாடப்படுகின்றன.

இலக்கியக் கலை எச். ஏ. கிருஷ்ணபிள்ளையின் இரட்சண்ய யாத்திரிகத்தில் உச்சம் பெற்றதெனலாம். (1872-1900) அது அவரது வாழ்க்கைப் பணி, பெரும்சாதனை, 4000 கவிகள் கொண்ட காப்பியம். கதை பில்கிரிம்ஸ் புரா்கிரஸ்ஸின் (மோட்சப் பிரயாணத்தின்) தழுவல். கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படை சிந்தனைகளையும் உணர்வுகளையும், கம்பராமாயண இதிகாச பாணியில் பாடுவது. கிறிஸ்தவம் ஒரு மேனாட்டுச் சரக்கு, ஏகாதிபத்தியப் பண்பாட்டை இங்கு திணிக்கும் முயற்சி என்று கூறி வந்தவர்களின் வாயை அடைப்பதாய் இது அமைந்தது.[65]

இரேனியஸின் தலைமையில் சபைகள் தங்கு தடையின்றி சீராய்ச் செம்மையாய் வளர்ந்து கொண்டிருந்தபோது, மக்கள் சிறிதும் எதிர்பாராத, புரிந்து கொள்ள முடியாத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. சி.எம்.எஸ். அதிகாரிகள் இருவர் வந்து இரேனியஸை வேலை நீக்கம் செய்து, சபைகளைத் தங்கள் ஆதிக்கத்துள் கொண்டு வந்தனர். கிறிஸ்தவத் திருச்சபை வரலாற்றில் இம்மாதிரியான அதிரடி நடவடிக்கைகள் ஒன்றும் புதிதல்ல. இரேனியஸ் ஒரு லூத்தரர், மொரேவியர் அங்கீகரிக்கப்பட்ட திருச்சபை முறைமைகளுடன் ஒத்து வந்தவரல்லர். ஆங்கிலிக்க குருமார் அவரது கொள்கைகளையும் மரபுகளையும் என்றுமே ஒப்புக் கொண்டவர்கள் அல்லர். இந்தியாவுக்கு மிஷனெரியாக வருமுன்பே இரேனியஸ் சர்ச்சைக்குரிய நூல் ஒன்று எழுதி அதைப் பிரசுரிக்காமல் வைத்திருந்தார். **The Church, Her Daughters and Handmaidens, Her Pastors and People** (திருச்சபை; அவளது குமாரத்திகள்; தாதியர்; போதகர்; மக்கள்) என்பது அதன் தலைப்பு; நூலில் ஆங்கிலிக்கன்

---

65 இப்பொருள் பற்றி முழுமையான அறிவு பெறக் காண்க டென்னிஸ் ஹட்ஸனின் **The Life and Times of H.A. Krishna Pillai - A study in the Encounter of Tamil Srivaishnava Hinduism and Evangelical Protestant Christianity in Nineteenth Century Tirunelveli District (Claremont, California, Claremont Graduate school and University Center, Unpublished Ph.D. Dissertation 1970, Copyrighted & available for purchase through university Microfilms). A.J. Appasamy: *Tamil Christian Poet* (London 1966)** இதுவும் கிடைக்கிறது.

நாசரேத், மெய்ஞ்ஞானபுரம் முதலிய ஊர்களில் போட்டி போட்டுக்கொண்டு கோதிக்பாணியில் கோபுரங்களுடன் கட்டப்பெற்ற கோவில்கள் நாட்டுப் பண்பாட்டோடு ஒட்டியவைதானா என்ற கேள்வி எழுக் கூடியதே. சாணார்/நாடார் வகுப்பினர் தங்களை ஆண்டு வந்தவர்களின் பாணிகளைத் தழுவாமல் தாங்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட புதிய சமயத்தை வெளிப்படுத்தும் வகையில் வேறு பாணிகளைப் புகுத்தினார்கள். காண்க. Susan B. Harper. *In the Shadow of the Mahatma, Bishop V.S. Azariah and the Travails of Christianity in British India* (Grand Rapids and Richmond. Surrey, Curzon 2000) pp. 244, 261-2, 354.

திருச்சபையின் கருத்துக்களை விமர்சித்திருந்தார் [66]. 1832 ல் ஜான் வில்சன் பேராயராக நியமனம் பெற்று கல்கத்தா வந்திறங்கியதும், இரேனியஸ் மரியாதை முகமாக வரவேற்று எழுதி, நெல்லையில் நடந்துவரும் மாபெரும் இயக்கத்தை இறைவன் வழி நடத்தி வருவது பற்றி மகிழ்ச்சி ததும்ப விவரித்து பின்னர் தாம் பயிற்றுவிக்கும் தலைவர்களைப் போதகர்களாக்கி வருவது பற்றியும் யோசனையின்றிக் குறிப்பிட்டு விட்டார். பதிலுக்கு வில்சன் அதெப்படி அப்போஸ்தல மரபுச் சடங்கை மீறித் தாமாக குருமாரை எடுப்பது என்று மகா கடுமையாகச் சாடி எழுதினார். நொந்து போனார் இரேனியஸ். அவரது அயராத உழைப்பும் அதிசயமான சாதனைகளும் கண்டுகொள்ளப்படவில்லை. கிடப்பில் கிடந்த தமது நூலை அவசரமாய்த் தாமே பதிப்பித்தார். அதில் கண்ட ஆங்கிலிக்கர்களுக்கு ஒவ்வாத கருத்துக்கள் எல்லாம் லண்டன் சி.எம்.எஸ் அதிகாரிகள் அறிந்தவைதாம். இருபத்தியாறு ஆண்டுகளுக்கு முன்பு அவரைத் தேர்ந்து, இறைப்பணியை அவரிடம் ஒப்படைத்தபோதே நன்கு அறிந்தவைதாம். இப்போது இரேனியஸின் அவசர நடவடிக்கை, அவர்களை மேலும் கடுமையான அதிரடி முடிவுகளை எடுக்கும்படி செய்துவிட்டது [67].

இரேனியஸின் இதயம் முற்றிலும் உடைந்தது. பூலோகத்தில் தமக்கு இராச்சியம் தேவையில்லை என்றும் நெல்லையில் நடக்கும் இயக்கத்துக்குத் தான் தடையாக இருக்க விரும்பவில்லை என்றும்

---

66 இந்நூல் கிடைப்பது எளிதல்ல. பிரிட்டிஷ் மியூசியத்தில் ஒரு பிரதி உளது. (என்னிடம் ஒரு ஜெராக்ஸ் காப்பி உள்ளது) இது 1834 ல் திருநெல்வேலியிலும் பின்னர் 1835 ல் இலண்டனிலும் பிரசுரிக்கப்பட்டது. MOR பக். 62, 501.

67 இரேனியஸின் டயரியையும் சி.எம்.எஸ். கடிதப் போக்குவரத்துகளையும் படிக்கிறபோது தெரிகிறதென்னவென்றால், இருதரப்பினரிடமும் பற்பல முரண்களும் இருந்து வந்திருக்கின்றன. அதனால் அவர்களிடையே பிளவு அதிகரித்துக்கொண்டே இருந்தது என்பதாகும். ஆனால் இரேனியஸ் இறந்தபின்பு அவரது அர்ப்பணிப்பு, ஆற்றல், எசமான விசுவாசம், ஆகியவற்றை ஒப்புக் கொண்டதோடு அவர் ஒரு மாமேதை என்பதையும் ஒப்புக் கொண்டனர். அப்பாசாமி (opcit pp. 70) எழுதினார்: அவர் ஒரு சிறந்த தமிழறிஞர்: அன்று இந்தியாவில் பணிசெய்துகொண்டிருந்த மிஷனெரிகளைவிட அவரது தமிழறிவு மிக விசேடமானதாகும். தமிழில் துண்டுப் பிரசுரங்கள், பாடபுத்தகங்கள் ஏராளமாக எழுதி வந்தார். சிறு நூல்களும் ஆழமான கட்டுரைகளும் எழுதினார். காண்க. MOR பக். 49-96, 497-533. அப்பாசாமி மேலும் எழுதியது (பக். 58-62) இரேனியஸ் சுதந்திர விரும்பியாகவும், ஒரு காரியத்தை முன்னெடுத்துத் தொடங்கும் ஆற்றலும் உடையவராகவுமிருந்தார். அதனால்தான் அவர் சமயத் தொண்டில் வெற்றியடைந்தார். அதனால்தான் அவர் தமது கருத்துகளில் பிடிவாதமாகவும் இருந்தார். தமது ஏழு உபதேசியார்களுக்குக் குருப்பட்டம் அளிக்க அனுமதி அளிக்குமாறு அவர் M.C.C. க்கு எழுதிக் கேட்டார். கமிட்டி பதில் எழுதியது. இதற்கு

கூறி தமது வீட்டைத் துறந்து சென்னை ஆற்காடு சென்றார்[68]. ஆனால் அவர் நெல்லையை விட்டுவிட்டுப் போய்விட்டார் என்ற செய்தியால், நெல்லை சபைகளின் மக்கள் மிகவும் துயருறுகின்றனர் என்று கேள்வியுற்ற இரேனியஸ் மனம் வருந்தத் தொடங்கினார். தமது வாழ்க்கைப் பணியை சி.எம்.எஸ்ஸினரிடம் மிக இலேசாகக் கையளித்து விட்டு வந்துவிட்டதாக நினைத்தார். தமது வேலை நீக்கம் காரணமாக சபையில் பெரும் பிளவு தோன்றிவிட்டதையும் தாம் நெல்லையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பிளவுப்புண் பரவிப் புரையோடும் என்பதையும் உணர்ந்தார். வேலை நீக்கம் நெல்லையில் மட்டுமல்ல கவிசேட உலகெங்கும் பெருங் கூச்சலையும் குழப்பத்தையும் விளைவித்துக் கொண்டிருந்தது. எனவே இரேனியஸ் தம் மக்களிடையே திரும்பும் முடிவை எடுத்தார். தாம் நிறுவ உதவியிருந்த அடைக்கலவூர் கவிசேஷபுரத்தில் எளிமையான சூழலில் பணியை மீண்டும் தொடர்ந்தார். பலரும் ஆதரவு தந்தனர். இந்தியா எங்குமிருந்தும், ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்தும் பண உதவி வந்தது. ஆயினும் மனமுறிவால் உடலும் சோர்வுற்றது. தமிழ் இலக்கணத்தை முடித்துவிட்டார். வேதாகம மொழி பெயர்ப்பு வேலை நடந்து கொண்டிருந்தபோதே பலம் குன்றியது. 1838 ஜூன் 5 ம் தேதி அவர் உயிர் பிரிந்தது[69].

ஆங்கிலிக்கன் நிறுவனத்தை எல்லோரும் புயலாகச் சீறிச் சாடினர். அந் நிறுவனம் சேதத்தைப் பழுது செய்ய ஏதேதோ செய்தது. எஸ்.பி.ஸி. கேயின் பொறுப்புக்களை எஸ்.பி.ஜி. எடுத்திருந்தது. அதனுடன் இணைந்து சி.எம்.எஸ். ரோசன் என்ற மிஷனெரியை 1828 ல் திருநெல்வேலியின் பழைய (1785-1829) சபைகளுக்கு அனுப்பி வைத்திருந்தது. அந்த மிஷன் 1835 க்குப் பிறகுதான் செயல்பட முடிந்தது. இரேனியஸின் வேலை நீக்கத்தை

முன்பு பல இந்தியர்கள் ஹாத்தரன் முறைமைப்படி குருப்பட்டம் பெற்றிருந்தாலும், இப்போது கல்கத்தாவில் இங்கிலாந்து திருச்சபைப் பேராயர் இருப்பதால், சபைப் பணியாளர் குருப்பட்டம் பெறுவதினால் இங்கிலாந்து திருச்சபை முறைமையில்தான் பெறவேண்டும். ஹாத்தரன் முறைமையில் அல்ல. இரேனியஸும் ஷமிட்டும் இதற்கொரு பதில் எழுதினர். ஞானஸ்நானத்தின் போது சிலுவை அடையாளம் இடல், குரு பாவ நிவாரணம் வழங்குதல் இவற்றை ஒப்புக்கொள்ள குருப்பட்டம் பெறவிருக்கும் தமது உபதேசியார்களுக்கு அவர்களது மனசாட்சி இடம் தராது என்று.

68 MOR பக். 501-3 இரேனியஸ் வேலைநீக்கமான பிறகு சி.எம்.எஸ்ஸுக்கு எழுதிய பிரிவுபசாரக் கடிதம் (இலண்டன் 1836) இது சென்னையிலும் பாளையிலும் பிரசுரிக்கப்பட்டது.

(69) MOR பக். 495-6, 497-534, 590-619. Appasamy op cit. 63-69 இரேனியஸ் தமிழ் இலக்கணம் (Madras 1836 - 1845)

நியாயப்படுத்த அவர்கள் பிரசுரங்கள் வெளியிட்டனர். ஒரு சங்கம் பொறுப்பெடுப்பதை விடவும், ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் நெல்லை சபைக்கு உதவ முன் வருவது நல்லதுதானே என்றனர்[70]. இன்னுமொரு சங்கம் கூட இருந்தது என்பது பலர் அறியாதது. தமிழ்த் தலைமையில் சுதந்திரமாய் இயங்கிய தமிழ் சுவிசேட சங்கம் இது. மேல் பக்கத்தார் என்றழைக்கப்பட்ட இதில் இந்து கிறிஸ்தவர்கள் இருந்தனர். (இப்பகுதியில் தென் வடலாக ஓடும் தாமிரபரணிக்கு மேற்குப் பக்கத்தில் சிந்துபூந்துறையைத் தலைமை இடமாகக் கொண்டது) தீரர் இரேனியஸூக்கு நடந்தது கொடுமை; அவர் மரணம் இரத்தச் சாட்சி மரணம் என்ற கருத்துடன் அவர்கள் ஐரோப்பியத் தொடர்புகளை முறித்துக் கொண்டனர்.[71] ஆயினும் பழுது செய்யும் முயற்சிகள் நடந்தவாறிருந்தன. நெல்லையின் தமிழ் கிறிஸ்தவர்கள் புதிய ஊக்கமும் அடைந்தனர். சமுதாயங்கள் மாறியும் முன்னேறியும் வந்தன, தேசிய உணர்வின் தொடக்கங்கள், சமயத் தொண்டு மிஷன்களிலும் காலனி ஆதிக்கம் படரத் தொடங்கியமை இவையெல்லாம் தென்படலாயின. சமயத்திலும் ஏகாதிபத்தியம் புகுந்து இரேனியஸ் பலியாக்கப்பட்டார் என்று சொன்னவருண்டு. பண்பாட்டில் ஏகாதிபத்தியம் புகுவதைப் பற்றிப் பேசுபவரும் இருந்தனர். கால்டுவெல் பிற்பாடு சொன்னது: இந்தியர்களின் நன்மைகளை நோக்கமாகக் கொண்டு அதிகம் உழைத்தது ஜெர்மானியரும், அமெரிக்கருமே. ஆங்கிலத் திருச்சபைகளின் செயல்பாடு மேற் சொன்னோரை விடவும்

---

70 1833 ல் (A.N) குரோவ்ஸ் (Groves) நெல்லைக்கு விஜயம் செய்தார். இவர் பிளிமத் சகோததரர்களின் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார். அவர் எழுதிய சிறுநூல் ஒன்று எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. Mr. Groves' Brief account of the Tinnevelly Mission Examined. In a letter to a provincial member of the church Missionary society (London 1838) 66 pp என்று (J.S. Strachan) ஸ்ட்ராச்சன் அதுபற்றி எழுதினார். உடனே A.N. குரோவ்ஸ் தமது சிறுநூலை மேலும் விரிவுபடுத்தி 'The present state of the Tinnelvelly Mission (London 1836) என்ற தலைப்பில் ஒரு வரலாற்று முன்னுரையும் எழுதினார். ஸ்ட்ராச்சனுடைய கருத்துக்களை விமரிசனம் செய்திருந்தேதாடு இரேனியஸின் பிரிவுபசாரக் கடித்தையும் அதில் சேர்த்திருந்தார். இதற்கிடையில் M.C.C. யின் செயலாளர் ஜான் டக்கர் A Review of the Tinnevelly Queston. Prepared under the authority of the Madras coresponding committee of the church Mission society (Madras 1836) என்றொரு பிரசாரம் வெளியிட்டார். இப்படியாக இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் கடுமையான பேச்சுக்களும் கருத்துக்களும் எழுந்தன. இதுகாறும் அமைதியாக இருந்த இரேனியஸ் இப்போது பதில் எழுதினார். அதன் தலைப்பு Reply to the statement of the Madras Correspondng Committee of the church Missionary Society Respecting the Tinnevelly Mission (Madras n.d. (1836). மேலும் அவர் மீண்டும் நெல்லை திரும்பி 1835 ல் மிஷன் அமைத்த சூழ்நிலை பற்றியும் எழுதியிருந்தார். இரேனியஸ் இறந்த பின்பு அவரது மகன் இரேனியஸின் டயரியை (Memoir of Rhenius) இலண்டனில் 1841ல் பிரசுரித்தார். இதனால் விவகாரம் நீடித்துக் கொண்டிருந்தது. இதற்கிடையில் பெட்டிட் (Pettitt) Narrative of Affairs in the Tinnevelly Mission connected with the Return of the Rev. C. Rhenius (Madras 1836) என்ற பிரசுரம் வெளியிட்டார். ஜான் டக்கர் சி.எம்.சங்கத்தாரை ஆதரிக்க விரும்புவாராய் எழுதிய Report on the Tinnevely Mission,

குறைவானதுதான்[72]. 1852 கணக்குப்படி ஆங்கிலேயரின் கணக்குப்படி 99 ஜெர்மானியர்களும் 67 அமெரிக்கர்களும் அப்போது இங்கிருந்தனர். (ஆங்கிலேய திருச்சபை எதிர்ப்பாளர் / English Dissenters கணக்கில் சேரவில்லை) ஆனால் இங்கிலாந்திலும் இலங்கையிலுமாக 138 ஆங்கிலிக்கர் மட்டுமே இருந்தனர். இது இங்கிலாந்து நாட்டுக்குக் கேவலமாகும் என்பதாகும். அங்கலாய்ப்புடன் கால்டுவெல் மேலும் சொன்னார்: இந்தியாவில் சுவிசேடம் சொல்ல ஜெர்மானியர் தீவிர ஆர்வம் கொண்டுள்ளனர். அது நம்மை வெட்கமடையச் செய்கிறது. இந்தியாவின் பண்டைய நிலைமைகள் பற்றியும் அவர்களுக்குத் தேர்ந்த அறிவு உள்ளது. மேற்சொன்ன கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவியமையால் மிஷனெரிகளிடையே ஒரு போட்டி மனப்பான்மை உருவாயிற்று.

ஹலேயிலிருந்து வந்த மிகு பக்திக் கூறுகள் தமிழ் கிறிஸ்தவர்களின் ஆதி மரபுகளில் உருவாகி, அவை இன்றும் அவர்களிடேயே நிலவி வருகின்றன. பின் வந்த மரபுகள் வலுக்குறைந்தவை என்றே சொல்ல வேண்டும். நெல்லைக் கிறிஸ்தவர்கள் இதனால் மனக் குழப்பங்கள் அடையக் கூடும். ■

தமிழாக்கம் : சரோஜினி பாக்கியமுத்து

Advertising to Differences of opinion (In 1844) பெட்டிட் எழுதிய An account of the Palamcottah Mission Church உம் முறையே 20, 22 பக்கங்கள் கொண்டவை. டக்கருடையது தனிச் சுற்றுக்கு மட்டும். எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுகிற வகை. இதெல்லாம் போதாது என்று டக்கருடைய சகோதரி சாராள் South Indian Sketches என்று இரண்டு வால்யூம்கள் எழுதினார். சகோதரர் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதங்களை அடிப்படையாகக் கொண்டது அந்த வால்யூம்கள் என்று குறிப்பிட்டார். நண்பர் என்றது அவரேதாம். தங்கள் கட்சியை நியாயப்படுத்த எழுதிய இந்நூல் 1842 ல் வெளி வந்து மூன்று பதிப்புகள் கண்டது (1848) சிலகாலம் தென்னிந்தியாவில் உழைத்திருந்த ஜியார்ஜ் பெட்டிட் The Tinnevelly Mission of the Church Missionary Society என்ற 45 பக்க நூலை வெளியிட்டார். (இலண்டன் 1851) அதே ஆண்டிலேயே டக்கரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதிப் பிரசுரித்தார். இருவருமாகச் சேர்ந்து இரேனியஸின் பணியை எடுத்துச் செய்தார்கள். உடைந்தனவற்றை ஒக்கிடும் வேலைகள் நடந்தன. அவர்கள் இரேனியஸின் மனைவிக்கு பென்ஷன் கொடுத்து அவர் மகளைத் தங்கள் பள்ளியில் பயிற்றுவித்தனர்.

71 MOR pp 56 ff. Appasamy (op cit pp 50-78) இரேனியஸின் மரணத்துக்குப் பின் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அப்பாசாமி சிறப்பாக எழுதியுள்ளார். மிஷனெரிகளிடையே சண்டைகள் உக்கிரமாக நடந்தபோதிலும் அவற்றுக்கெல்லாம் காரணம் கொள்கைகள் அல்லவா என்று மக்கள் ஆறுதல் பெற்றனர். கிறிஸ்தவ சபை மேலும் பெருக்கமடைவதற்கு இது ஒரு காரணமாயிற்று என்றுகூட அவர் கருதுகிறார். பலர் கிறிஸ்தவ சமயம் பற்றி விசாரிக்க முனைந்தனர் எனவும் எழுதுகிறார். மேலும் இதுகாறும் வேளாளரே போதக, உபதேசி, ஆசிரியப்பணிகளில் அமர்த்தப்பட்டனர். இரேனியஸின் மீண்டும் நெல்லை திரும்பிய பின்னர் அவர் சாணார்களையும் இப் பணியில் நியமித்தார் (பக். 51) ஜெர்மானிய மிஷனெரிகளான இரேனியஸ், ஷாப்டர், முல்லர், லெக்லர் ஆகியோரும் அவர்கள் பக்கமிருந்த தமிழரும் மேல்பக்கத்தார் என்றும், சி.எம்.எஸ்ஸூம் அவர்கள் கட்சியினரும் கீழ்ப்பக்கத்தார் என்றும் அழைக்கப்பட்டனர். ஆனால் உபதேசியார்களும், உபாத்தியாளர்களும் கட்சி மாறிக் கொண்டிருந்தனர். வன்முறைகளும் நடந்தன.

தேவநேசன் வம்சாவழி குறிப்பு



(தி : திருமணம்)

1

இராசகிளாரிந்தா

டேவிட் பாக்கியமுத்து

கிறிஸ்தியன் ஃபிரெடிரிக் சுவார்சு தரங்கன்பாடியை விட்டு விட்டு திருச்சிராப்பள்ளிக்கு வந்து ஆங்கிலப் படைவீரர்களிடையே தமது கிறிஸ்தவப் பணியைத் தொடங்கினார். பிரித்தானியாவின் எஸ். பி. சி. கே. சங்கத்தினர் (S.P.C.K.) - (கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கம்) தங்கள் பணிக்கு சுவார்ட்ஸை நன்கு பயன்படுத்திக் கொண்டது. 1766ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒரு மிஷன் தளத்தையும் 1770ம் ஆண்டில் தஞ்சாவூரில் ஒரு மிஷன் தளத்தையும் அவர் உதவியால் ஏற்படுத்திக் கொண்டது. ஆங்கிலக் கம்பெனியின் படை வீரர்களுக்கு குருத்துவப் பணியையும் செய்தார் சுவார்ட்சு[1].

தென் இந்தியாவின் அரசியல் சூழ்நிலை

அப்போது தென் இந்தியாவில் அரசியல் சூழ்நிலை குழப்பமாக இருந்தது. தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் ஒருவருக்கொருவர் முண்டிக் கொண்டிருந்தனர். ஹைதர் அலியும் அவர் மகன் திப்பு சுல்தானும் பிரெஞ்சுக்காரருக்கு ஆதரவு அளித்து பிரிட்டிஷ்காரர்களின் சென்னை (தூய ஜியார்ஜ் கோட்டை) மீது தொடர்ந்து படையெடுத்து வந்தார்கள். தங்கள் படை வீரர்களோடு தெற்குப் பிராந்தியங்களுக்கு முன்னேறிச் சென்றனர். ஆங்கிலேயர் அவர்களுடன் மும்முரமாகப் போரிட்டனர். அதன் விளைவாக நாட்டில் பயமும், பஞ்சமும் மக்களிடையே குழப்பமும் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வணிகப் பிரதிநிதியொருவர் பாளையங்கோட்டையில் இருந்தார். அவர் ஆர்க்காடு நவாப் முகம்மது அலிக்கு திருநெல்வேலி நாட்டினை ஆட்சிசெய்வதிலும் இஸ்லாமியர் அல்லாத 32 பாளையக்காரர்களை அடக்கவும் உதவி புரிந்து வந்தார். 1765ம் ஆண்டு முதல் ஆங்கிலப் படையினர் திருநெல்வேலியில் (பாளையங்கோட்டையில்)

முன்னாள் துணைப் பொதுச் செயலாளர், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் சென்னை,
முன்னாள் இயக்குனர் கிறிஸ்தவ இலக்கிய மையம், குவாஹற்றி, அசாம்.

இருந்ததாகத் தெரிகிறது. ஆங்கிலக் கம்பெனியாரைத் தீவிரமாக எதிர்த்த பாளையக்காரன், பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியன் கட்டபொம்மன் ஆவான். அவனைப் போரில் தோற்கடித்து ஆங்கிலேயர் 1801ம் ஆண்டு கழுவேற்றிக் கொன்றனர். [2]

லிட்டில்டன் பாளையங்கோட்டைக்கு வருதல்:

1765-1773 க்கு இடைப்பட்ட ஒரு ஆண்டில் ஹென்றி லிட்டில்டன் (Henry Lyttleton) என்ற ஆங்கிலேயப் படை அதிகாரி ஒருவர் தஞ்சாவூர் பட்டாளத்தில் இருந்து பாளையங்கோட்டைப் பட்டாளத்துக்கு மாற்றப்பட்டு வந்தார். அவரோடு ஒரு இளம் பிராமண விதவையும் வந்தார். அவள் தஞ்சாவூரை ஆண்டு வந்த மகாராஷ்டிர அரசு பரம்பரையைச் சேர்ந்தவள். அவளது பெயர் கோகிலா. பின்னர் கிளாரிந்தாவாக மாறியது. நாம் இனி அவரை கிளாரிந்தா என்று அழைப்போம். எந்தச் சூழ்நிலையில், எந்த உறவுடன் கிளாரிந்தா லிட்டில்டனுடன் சேர்ந்து வந்தார் என்பது விளக்கமாகத் தெரியவில்லை. அவர்கள் இருவரும் கணவனும், மனைவியுமாக வாழ்ந்தார்கள். கிளாரிந்தா கிறிஸ்தவ சித்தாந்தங்களையும்; ஆங்கில மொழியையும் லிட்டில்டனிடமிருந்து தெரிந்துகொண்டார். அத்துடன் தஞ்சாவூரில் இருக்கும்போதே சுவார்ட்சு பாதிரியாரிடமும் திருமுழுக்குப் பெறுவதை அவர் விரும்பினதாகவும் தெரிகிறது.

மேலும் லிட்டில்டன் சூலைநோயினால் அவதிப்பட்டார் என்றும் கிளாரிந்தா அவருக்கு நன்கு பணிவிடை செய்தார் என்றும் லிட்டில்டன் தமது சொத்தை சுதந்தரித்துக் கொள்ளும் வாரிசாக அவரை ஆக்கினார் என்று சுவாட்சு பாதிரியார் சொல்லத் தெரிந்து கொள்ளுகிறோம். லிட்டில்டன் இறந்த தேதி தெரியவில்லை. அநேகமாக 1775ம் ஆண்டிற்கு முன்னர் அது நிகழ்ந்திருக்க வேண்டும். பாளையங்கோட்டையில் உள்ள புராதன கிறிஸ்தவக் கல்லறைத் தோட்டம் 1775ம் ஆண்டில் இருந்து தொடங்குகிறது என்று கால்டுவெல் கூறுகிறார். சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக் களஞ்சியத்தில் உள்ள திருநெல்வேலியில் உள்ள ஐரோப்பியர் கல்லறைகள் என்ற பட்டியலில் லிட்டில்டன் பெயர் காணப்படவில்லை.

முதல்முறையாக சுவார்ட்சு திருநெல்வேலிக்கு வருதல்

1778ம் ஆண்டு பெப்ரவரி மாதக் கடைசியில் சுவார்ட்சு முதன்முறையாக பாளையங்கோட்டைக்கு வந்திருந்தார். சில குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளிக்க வேண்டுமென்றும், தனது திருமணத்தையும் நடத்தித் தரவேண்டுமென்றும் பாளையங்கோட்டையில் உள்ள ஒரு ஐரோப்பிய சார்ஜென்ட் அழைத்ததின் பேரில் சுவார்ட்சு வந்திருந்தார். தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் மூலமாகவும் அடிக்கடி மாற்றுதல் பெற்று குடிபெயர்ந்த கிறிஸ்தவப் படை வீரர்களாலும் புராட்டஸ்தாந்து கிறிஸ்தவம் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பரவியது எனலாம். சுவார்ட்சு தனது நாட்குறிப்பேட்டில் இப்படி இடம் மாறிச் சென்ற கிறிஸ்தவன் ஒருவனைப் பற்றி, பாளையங்கோட்டை என்ற நகரத்தில் குடியிருக்கும் ஒரு கிறிஸ்தவன் அங்குள்ள ரோமான் சபையைச் சேர்ந்தவர்களுக்கும் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும் இறை வார்த்தையைப் படித்துக் காட்டுகிறான் என்று எழுதுகிறார்.[3] திருநெல்வேலியின் கிழக்கு கடற்கரையில் உள்ள பரதவர்கள் பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் ரோமானிய கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்தார்கள். 1544ம் ஆண்டில் ஒரே மாதத்தில் மட்டும் 10,000 முக்குவர்களுக்கு (மீன் பிடிக்கும் வகுப்பினரில் ஒரு சாதி) பிரான்சிஸ் சேவியர் திருமுழுக்கு அளித்ததாகச் செய்தி. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கத்தோலிக்கர்கள் திருநெல்வேலியின் உட் பிரதேசங்களிலும் குடியேறினர்.

மேற்சொன்ன சார்ஜென்டின் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஒரு கேப்டனின் துணையோடு சுவார்ட்சு தெற்கே புறப்பட்டார். காடுகள் நிறைந்த வழியாய்ப் பிரயாணம் செய்து, தச்சநல்லூரை அடைந்தார்கள். அங்கே ஆங்கிலக் கம்னெியின் பட்டாளத்தின் ஒரு பகுதியினர் இருந்தனர். ஒரு கூடாரத்தில் 50 முதல் 60 கிறிஸ்தவர்களுக்கு - மிகுதியான பேர் கத்தோலிக்கர் - சமயப் பணி ஆற்றினார். அன்று மாலை பாளையங்கோட்டை சேர்ந்தார்.

கிளாரிந்தாவின் திருமுழுக்கு

கிளாரிந்தா 3.3.1778ல் பாளையங்கோட்டையில் திருமுழுக்குப் பெற்றார். திருமுழுக்கு அளித்தவர் சுவார்ட்சு. அவர்

பின்வருமாறு எழுதுகிறார். ....ஒரு இளம் பிராமணப் பெண் முன்வந்து திருமுழுக்கு வேண்டினாள். இந்தப் பிராமணப் பெண் இதற்குமுன் ஒரு ஆங்கில அதிகாரியுடன் குடியிருந்து வந்தாள். அவரோடு குடியிருக்கத் தொடங்கியதும் தான் கிறிஸதவத்தை ஏற்க விரும்புவதாக (தஞ்சாவூரில்) எனக்குச் சொல்லி அனுப்பினாள். நான் பதிலுக்கு, அவள் அந்தப் பாவ வாழ்க்கையில் இருக்கும் மட்டும் என்னால் அவளுக்கு திருமுழுக்கு அளிக்க முடியாது என்று பதில் சொல்லி அனுப்பினேன். அந்த ஆங்கில அதிகாரி அவளைத் திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்திருக்கலாம் என்று தோன்றியது. அவளை அந்த அசுத்தமான வாழ்விலிருந்து விலகும்படி அறிவுரை சொன்னேன். அவர் (அந்த அதிகாரி) தொடர்ந்து சூலை நோயால் உழன்றார். அவள் தகுந்தபடி அவரைப் பேணி சிறந்த பணி ஆற்றிவருவதால் அவளுக்குத் தமது சொத்தை எல்லாம் விட்டுப் போவதாக அவரே என்னிடம் நேரில் சொன்னார். அந்த அதிகாரி அவளுக்கு ஆங்கில மொழியும், விவிலிய செய்தியும் முக்கியமான திருச்சபைக் கொள்கைகளையும் கற்றுத் தந்திருக்கிறார். அவள் திருமுழுக்கு கேட்டு என் முன் வந்தபோது "சில ஆண்டுகளுக்கு முன் தங்களிடம் கிறிஸ்தவ சமயத்தைக் கற்றுக்கொடுக்கவும், திருமுழுக்கு அளிக்கவும் வேண்டி வந்தேன். அப்பொழுது நான் வாழ்ந்துவந்த விதம் தங்களுக்குப் பிடிக்காததால் மறுத்துவிட்டீர்கள். நீங்கள் மறுப்பதற்குக் காரணமாக இருந்த வாழ்க்கை இப்பொழுது இல்லை; ஆயினும் எனக்குச் சோதனைகள் இல்லாமல் இல்லை" என்று சொன்னாள். அருகில் இருந்த அனைவரும் அளவது தூய்மையான வாழ்க்கை பற்றி சான்று பகர்ந்ததால் என்னால் அவள் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. நான் பாளையங்கோட்டையில் தங்கி இருந்த வரை அவளுக்குப் போதனை அளித்தேன். தன்னைக் காணவந்த அநேக பிராமணர்களை அவர்கள் வழிபடும் அஞ்ஞான மார்க்கத்தை விட்டுவிடும்படி நேரடியாகக் கேட்டாள். மிகுந்த உணர்ச்சியுடன் அவள் திருமுழுக்குப் பெற்றாள். அவள் தனக்கு கிளாரிந்தா என்று பெயரிட வேண்டினாள். நான் அவள் விரும்பியபடியே செய்தேன். கடவுளின் வார்த்தையைக் கேட்க அவள் எப்பொழுதும் விருப்பமாக இருந்தாள். ஆராதனைகளிலும் ஆர்வத்தோடு பங்குகொண்டாள்.[4]

மார்ச்சு மாதம் நாலாம் தேதி (1778) கிளாரிந்தாவின் திருமுழுக்குக்கு அடுத்த நாள் சுவார்ட்சு, திருச்சிராப்பள்ளியில் உள்ள தமது சகபாடி போலேக்கு (Phole) பின்வருமாறு எழுதினார். "இங்கே ஒரு பரந்த நிலம் இருக்கிறது. விசுவாசம் மிக்க ஊழியர்களைப் பெற நாம் இறைவனை இறைஞ்சுவோமாக. கிறிஸ்துவுக்காக அப்படிப்பட்ட ஊழியரை இறைவன் தருவாராக. ஆம்! அவர் அத்தகைய ஊழியரைத் திரளாக அனுப்புவாராக."[5]

திருச்சபை விதிகளை அனுசரிப்பதில் சுவார்ட்சு காட்டிய தீவிரம்:

ஏதோ கேட்டவுடன் திருமுழுக்கு அளிப்பதற்கு சுவார்சு இணங்குவதில்லை. திருமுழுக்கு கேட்டவரின் கிறிஸ்தவ அறிவைச் சோதித்து அறிந்த பின்னரே, ஏற்புடைத்தாயின் திருமுழுக்கு அளிப்பார். ஒரு ஆங்கிலேய சார்ஜென்ட் ஒரு இந்து இளைஞனுக்கு அவனது கிறிஸ்தவ அறிவை முழுமையாகச் சோதித்தறியாமல் திருமுழுக்கு அளித்துவிட்டார். அதைப் பற்றி தமது குறிப்பேட்டில் சுவார்ட்சு கவலைப்பட்டிருக்கிறார்.

தஞ்சாவூரில் கிளாரிந்தாவுக்கு திருமுழுக்கு அளிக்க மறுத்தார். ஏனெனில் அவர் லிட்டில்டனுடன் திருமணமின்றி வாழந்து வந்தார். சுவார்ட்சு அந்த வாழ்க்கையைக் குற்றமுள்ளதாகக் கருதினார். சுத்தமில்லாத வாழ்வு எனக் கருதினார். ஐரோப்பியர் முக்கியமாகப் படைவீரர்கள் இந்தியாவில் எத்தகைய விபச்சார வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்பது சுவார்ட்சுக்குத் தெரியும். கிறிஸ்தவம் இந்தியாவில் பரவுவதற்கு அவர்கள் வாழ்க்கை முறை பெரிய தடைக்கல்லாக இருப்பதாகக் கருதினார். தென் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு ஐரோப்பியர் சகவாசம் இல்லாததால் கிறிஸ்தவம் சிறக்க வளரும் என்று சுவார்ட்சு நம்பினார்.[6] அந்தக் காலத்தில் ஐரோப்பிய அதிகாரிகள் இந்தியப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளாமல் அவர்களை வைப்பாக வைத்து வாழ்க்கை நடத்துவது சர்வ சாதாரணமாக இருந்தது. சற்றும் சிந்தனை செய்யாது லிட்டில்டனையும் கிளாரிந்தாவையும் அந்த வரிசையில் சேர்த்து விட்டார் சுவார்ட்சு.

மேலும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தங்கள் அதிகாரிகள் இந்தியப் பெண்களை மணந்து வாழக்கை நடத்துவதை

விரும்பவில்லை. இதை சுவார்ட்சின் கணக்கில் எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

இறந்த கணவனுடைய சிதையில் ஏற்றி கிளாரிந்தாவை எரித்து சதியாக்க முயன்ற செய்தியை பல எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள். இதை நிரூபிக்க ஆவணங்கள் இல்லையெனினும்; தஞ்சாவூர், புதுக்கோட்டை இராமநாதபுரம் மக்களிடையே இக்கொடிய பழக்கம் இருந்து வந்தது உண்மை. [7]

சிறந்த தமிழ், ஆங்கில நாவலாசியர் அ. மாதவையா முதல் முதலாக தமது ஆங்கில நாவல் *கிளாரிந்தாவில்* இதைப் பற்றிக் எழுதுகிறார். தஞ்சாவூர் அரண்மனையில் அலுவல் பார்த்த ஒரு முதிய பிராமண அதிகாரியின் இளம் மனைவிதான் கிளாரிந்தா என்று கூறுகிறார். அந்த முதிய அதிகாரி இறந்து போனதும் அரச குடும்ப வழக்கப்படி இளம் மனைவி கிளாரிந்தாவை சதியாக்க கணவரின் சிதையில் ஏற்றுகிறார்கள். லிட்டில்டன் இச்செய்தியைக் கேள்வியுற்றதும் ஒரு உயிரைக் காப்பாற்றும் உதார குணத்தோடு ஓடி வந்து சிதையிலிருந்து கிளாரிந்தாவைக் காப்பாற்றிச் செல்கிறார். அடிப்படையாக மாதவையா ஒரு வரலாற்று நவீனத்தை எழுதுகிறார். அதில் மிகத் திறமையுடன் உண்மைகளைக் கற்பனையுடன் பின்னுகிறார். நாவலுக்கு எழுதிய முன்னுரையில் மாதைவையா "இது நடக்க முடியாததுமல்ல நம்பமுடியாததுமல்ல" என்று எழுதுகிறார் [8] இந்தியாவின் மேல்தட்டு சமுதாயத்தில் *சதி* என்ற கொடிய பழக்கம் பரவலாக இருந்து வந்தது. ஒரு வேளை இராச கிளாரிந்தா சதியாக சிதையில் ஏற்றப் பெற்றதைப் பற்றி கர்ண பரம்பரையாகவும், வாய்மொழியாகவும் செய்தி தொடர்ந்து பரவி இருக்கலாம். *திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின் ஆரம்பம்* என்ற நூலில் பால்கடம்பவனமும், *திருநெல்வேலி திருச்சபையின் தாய்* என்ற நூலில் டி. ஏ. கிறிஸ்துதாசும் எரியும் சிதையிலிருந்து கிளாரிந்தாவை லிட்டில்டன் காப்பாற்றினார் என்று எழுதுகிறார்கள்.

அவர் பெரும் துன்ப நெருப்பில் வீழ்ந்து கடும் துயரமடைந்து அதனால் பரிசுத்தமடைந்தார் என்பது உண்மை. அவர் சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்தவர். நாற்பது உறுப்பினர் அடங்கிய பாளையங்கோட்டை முதல் திருச்சபைப் பதிவேட்டில் ஒரு

புரதவண்ணான் பெயரைப் பார்க்கிறோம். புரதவண்ணான் வகுப்பினர் ஊரார் கண்களில் படவே கூடாது. இரவு நேரத்தில்தான் அவர்கள் பிச்சை கேட்டு வரலாம். அவ்வகுப்பினர் இராப் பிச்சைக்காரர்கள் என அழைக்கப் பெற்றனர். ஒரு ஆசாரம் மிக்க பிராமணக் குடியில் பிறந்து வளர்ந்து, அரண்மனை சுகம் கண்ட ஒரு பெண், சாதி ஆசாரங்களைத் தகர்த்து, சாதிப் பழக்க வழக்கங்களைக் காற்றில் பறக்க விட்டு, ஏழை எளியவர்களுடன் சமமாகப் பழகி, அவர்களுக்குப் பண உதவி அளித்து, அவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைத்தார், வாழ்ந்தார் என்னும் போது அவர் பிராமணக் குடியிலும், அரண்மனை வாழ்விலும் பயங்கர துன்பங்களை அனுபவித்திருக்க வேண்டும் என்று புலனாகிறது. அவரைச் சதியாக்க பலவந்தமாகக் கணவன் சிதையில் ஏற்றி இருக்கலாம்.

மாதவையா சொல்வது போல் அவர் சதி நெருப்பில் இருந்து தப்பித்து வந்தால் வைதீக பிராமண சமூகம் அவரை எங்ஙனம் ஏற்றுக் கொள்ளும்? ஆதரவற்ற ஒரு இளம் பிராமண விதவை, பிராமண சமூகத்தால் ஒதுக்கப்பட்டவள், அரசியலில் அதிகாரம் படைத்த ஒரு ஆங்கிலேயனிடம், அதிலும் தன்னை எரியும் நெருப்பில் இருந்து காப்பாற்றியவனிடம் புகல் அடைந்ததில் என்ன தவறு?

லிட்டில்டன் ஒரு நல்ல எண்ணத்தோடு அவருக்கு கிறிஸ்தவ போதனைகளைக் கற்றுக் கொடுத்து, திருமுழுக்குப் பெற்ற பிறகு, திருமணம் செய்து கொள்ளலாம் என்று திட்டமிட்டிருக்க வேண்டும். சுவார்ட்சு பாதிரியாரே அப்படித்தான் நினைத்திருக்கிறார். தமது சொத்து முழுவதையும் கிளாரிந்தாவுக்காக விட்டுச் செல்வதாக லிட்டில்டன் சுவார்ட்சு பாதிரியாரிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் சுவார்ட்சு ஒரு பாதிரியாராயிற்றே! திருச் சபையின் சட்டங்களை அட்சர சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்! ஆனால் குற்றப் பரம்பரைச் சட்டத்தின் கீழ் வந்த தஞ்சாவூர் கள்ளர் வகுப்பினர் பலருக்கு சுவார்ட்சு திருமுழுக்கு அளித்து கிறிஸ்தவத்தில்சேர்த்துக் கொண்டார். இது பற்றி 1793ம் ஆண்டில் லண்டன் பார்லிமென்று கிழக்கிந்திய கம்பெனியின உரிமைச் சாசனத்தை புதுப்பிக்கும் நிலையில் மாண்ட்கோமரி கேம்பெல், சுவார்ட்சு மீது இந்தக் குற்றச்சாட்டைப் பதிவு செய்கிறார்.[9]

கிளாரிந்தா பற்றி சுவார்ட்சு சொன்ன இரக்கமற்ற சொற்கள் நெடுங்காலம் அவரைத் (கிளாரிந்தா) தவறாக இடைபோடும்படி செய்து விட்டன. அவர் திருநெல்வேலித் திருச்சபையைத் தோற்றுவித்து ஆற்றிய பணியை மறந்து, கிறிஸ்தவர்கள் அவரைப் பற்றித் தவறாகப் பேசினார்கள். கிளாரிந்தாவின் பண்பும் சிறப்பும் மெல்ல மெல்ல இப்போது வெளியாகிக் கொண்டிருக்கிறது. ***சவரிராய பிள்ளையின் மூதாதையர்கள்*** என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்ட ஜாண் தேவசகாயம்: கிளாரிந்தா திருநெல்வேலித் திருச்சபையின் அடிக்கல் என்று சிறப்பித்தார். 1959ம் ஆண்டில் சி.எம்.எஸ் மிஷனெரி ஹோரஸ் டேமர்சும் (Horace Dammers), காலஞ்சென்ற டாக்டர் க. நோ. காந்தையாவும் கிளாரிந்தா கட்டிய கோவிலைப் புதுப்பித்தார்கள். இப்பொழுது தொடர்ந்து ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. கிளாரிந்தா காலத்தில் அவர் தோற்றுவித்த பள்ளிக்கூடத்தைப் போல இப்பொழுது கிறிஸ்து ஆலய வளாகத்தில் கிளாரிந்தா பெயரில் ஒரு பள்ளிக் கூடம் நடைபெற்று வருகிறது. 1975ல் மாதவையா எழுதிய ஆங்கில நாவல் *கிளாரிந்தா* தமிழாக்கம் பெற்று நூலாக வெளிவந்தது. அந்த நாவல் கிளாரிந்தாவின் ஒப்பற்ற பணியையும் மக்களுக்குச் சுட்டிக் காட்டியது [11]

கிளாரிந்தா என்ற பெயர்

கிளாரிந்தா என்ற பெயர் பலவிதமாக எழுதப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டையில் பட்டாளத்துச் *சேப்ளனாக* (1816-1820) பணியாற்றியவர் குளோரிந்தா என்று எழுதுகிறார். [12] இத்தனைக்கும் அவர் கிளாரிந்தா அம்மையார் இறந்து பத்து ஆண்டுகளுக்குப் பின் திருநெல்வேலி வந்தவர். அம்மையாரின் பெயர் பரவலாகத் தெரிந்திருக்க வேண்டும். பாளையங்கோட்டை திருச்சபைப் பதிவேடு (1780) ***கிளாரிந்தாள் பிராமணச் சாதி*** என்று அம்மையாரின் பெயரோடு தொடங்குகிறது. மறைதிரு. டி.ஏ. கிறிஸ்துதாஸ் ***குலமிழந்தாள்*** என்ற சொல் கிளாரிந்தா என்று திரிந்திருக்க வேண்டுமென்று கணிக்கிறார். தந்தை பால் கடம்பவனம் ***திருநெல்வேலி அத்தியட் சாதீனத்தின் ஆரம்பம்*** என்ற நூலில் அம்மையாருடைய இந்துப் பெயர் **கோகிலா**வாக இருந்தது என்று கூறுகிறார். ஒரு அடிக் குறிப்பில் ***தென் திருவாங்கூர் லண்டன்***

மிஷனெரி சொசைட்டி என்ற நூலின் ஆசிரியர் ஜெ. ஏ. ஜேக்கப் கிளாரிந்தாவின் இந்துப் பெயரை ***இலட்சுமி*** என்று கூறியிருக்கிறார். கடம்பவனம் அவ்வாசிரியரை நேரில் சந்தித்து தமது ஆதாரங்களைச் சமர்ப்பிக்க கூர்மையாக ஆராய்ந்த ஜே. ஏ. ஜேக்கப் கிளாரிந்தாவின் பூர்வப் பெயர் ***கோகிலா*** என்பதை ஒப்புக் கொண்டார் என்று எழுதுகிறார். திருமுழுக்கு அளித்த சுவார்ட்சு ஐயர் அழுத்தம்திருத்தமாக **கிளாரிந்தா** என்று எழுதியிருக்கிறார்.

கிளாரிந்தா அனைவராலும் ***இராச கிளாரிந்தா*** என்று அழைக்கப்பெற்றதாக போலே கூறுகிறார். 1779ம் ஆண்டு போலே, திருச்சிராப்பள்ளியிலிருந்து பாளையங்கோட்டைக்கு வந்திருந்தார். இந்தக் கிறிஸ்தவப் பெண் தஞ்சாவூர் இராச சபையில் பணியாற்றிய ஒரு மகராஷ்டிர பிராமணரின் மனைவியாக இருந்தாள். அவள் இராசபரம்பரையைச் சார்ந்தவளாதலால், இராச கிளாரிந்தா என்று அனைவராலும் அழைக்கப்படுகிறாள் [12] என்று தமது குறிப்பில் எழுதியிருக்கிறார். மேலும் அம்மையார் **பாப்பாத்தி அம்மாள்** என்றும் அழைக்கப்பட்டார். அவர் பொது நலத்துக்காக வெட்டிய கிணறு, இன்னும் ***பாப்பாத்தி அம்மாள் கிணறு*** என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கிணறு அவர் கட்டிய சின்னஞ்சிறு அழகிய ஆலயத்தின் வடபுறத்தில் இருக்கிறது.

ஆங்கிலப் பட்டாளத்து அதிகாரியின் பெயர் ஹென்றி லிட்டில்டன் என்று சுவார்ட்சு மூலம் [13] அறிகிறோம். பால் கடம்பவனமும், டி.ஏ. கிறிஸ்துதாசும் கர்ணல் லிட்டில்டன் என்று அழைக்கிறார்கள். ***தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்*** என்ற நூலின் ஆசிரியர் டாக்டர். டி. டபுள்யு. தேவநேசன் கர்ணல் லிட்டில்டன் என்று அழைக்கிறார். அவர் கேப்டனோ, கர்ணலோ ஏதோ ஒரு ஆங்கிலப் பட்டாளத்தின் அதிகாரி. கிளாரிந்தா மிகுந்த செல்வாக்கோடு விளங்கியதாகத் தெரிகிறது. ஒரு ஆலயத்தை எழுப்பினார், ஒரு பள்ளிக் கூடத்தைக் கட்டி நடத்தினார். இதையெல்லாம் பார்க்கும்போது லிட்டில்டன் ஒரு பொறுப்புள்ள முக்கியமான படை அதிகாரியாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

பாளையங்கோட்டையின் முதல் திருச்சபை

கிளாரிந்தாவின் திருமுழுக்குக்குப் பிறகு பாளையங்கோட்டை திருச்சபை உருவாகத் தொடங்கியது. 1779ம்

ஆண்டு ஜான் என்ற பெயரில் ஒரு முப்பது வயது இளைஞன் திருமுழுக்குப் பெற்றான். அவன் இராச கிளாரிந்தாவிடம் பணியாற்றினான். தவிரவும் ஜுன் 30ம் தேதி ஜானுக்கும், 18 வயது மரியம்மாளுக்கும் (கிளாரிந்தா தனது வளர்ப்பு மகளாக மரியம்மாளைப் பாவித்தார்) போலே திருமணம் நடத்தி வைத்ததாக போலே தமது நாட்குறிப்பில் கூறுகிறார்.[14] பாளையங்கோட்டையின் முதல் திருச்சபைப் பதிவேட்டில் (1780) காணப்பெறும் முதல் ஐந்து பேர்கள் கிளாரிந்தாவின் வீட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. கிளாரிந்தாவின் பெயர் முதலில் இருக்கிறது. மற்றவர் 35 பேர்களில் சிலருக்கு அவர்களின் சாதி விபரங்களும் தரப்பட்டிருக்கிறது. 13 வெவ்வேறு சாதியினர் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் பிச்சைக்காரி, இன்னொருவர் புரதவண்ணார் வகுப்பைச் சேர்ந்தவர். முன்னர்க் கூறிய படி புரத வண்ணார்கள், இராப் பிச்சைக்காரர்கள் பகல் வேளையில் அவர்கள் மற்றச் சாதியினர் கண்களில் படவே கூடாது.

“இந்த 1870ம் ஆண்டுப் பட்டியிலில் காணப்படும் பெயர்கள் முழுமையான எண்ணிக்கையைக் காட்டுகிறதென்று சொல்ல முடியாது. அதில் சில தவறுகளும் இருக்கின்றன. அத்துடன் தஞ்சாவூரில் இப்பொழுது இருக்கும் திருச்சபைப் பட்டியலில் காணப்படும் சில விவரங்களுக்கு மாறாக இருக்கின்றன. அநேகமாக இது 1780ம் ஆண்டின் பட்டியலில் ஏற்பட்ட திருத்தங்களின் சேர்க்கையோடு 1784ம் ஆண்டு பிரதி செய்யப்பற்ற நகலாக இருக்கலாம்” என்று பிஷப் வெஸ்டர்ண் கூறுகிறார்.[15]

இந்தப் பட்டியலைக் கூர்ந்து நோக்கும் போது கிளாரிந்தா சாதி வேற்றுமை பாராட்டாத உண்மையான கிறிஸ்தவர் என்று தெள்ளத் தெளிவாகிறது.

தாம் உருவாக்கிய புதிய திருச்சபையின் வளர்ச்சிக்கு கிளாரிந்தா உற்சாகமாக உழைத்தார். மிஷனெரிகள், குருமார்கள், உபதேசியார்கள் முதலியவர்களை திருச்சபையின் வளர்ச்சிக்காக அனுப்பும் பழக்கம் கிளாரிந்தா தொடங்கி வைத்ததுதான். பிரயாணம் செய்ய சாத்தியப்படாத, குழப்பமும், சண்டையும் நிறைந்த அந்தக்

காலத்தில் கிளாரிந்தா துணிந்து 1783ம் ஆண்டு தஞ்சாவூருக்குப் பிரயாணம் செய்தார். அவரது முக்கிய நோக்கம் திருநெல்வேலித் திருச் சபைக்கு உதவியாளரை அனும்பும்படி சுவார்ட்சு ஐயரைக் கேட்பதுதான். துணைக்கு தமது வளர்ப்பு மகன் ஹென்ரி லிட்டில்டனையும் அழைத்துச் சென்றார்."பாளையங்கோட்டை இராச கிளாரிந்தா, தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். அப்பொழுது சுவார்ட்சு வெளியூர் சென்றிருந்தார். கிளாரிந்தா குழுவைச் சேர்ந்த இரண்டு ரோமான் கிறிஸ்தவர்கள், கிளாரிந்தா தஞ்சாவூரைச் சேருவதற்கு முன்னரே வந்து சேர்ந்தனர். அவர்களுள் ஒருவர் பிச்சமுத்து வண்ணான். அவர் தரங்கம்பாடியில் அச்சாகிய புதிய ஏற்பாட்டின் பிரதி ஒன்றையும், ***திருச்சபை வரலாறு*** பிரதியையும் வாங்கிப்படித்தார். படித்து முடித்ததும் கத்தோலிக்கர்களைக் கலங்கடித்துவிட்டார். திருநெல்வேலிக்கு ஒரு மிஷனெரியையாவது, நாட்டையரையாவது தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்பதே அவர்கள் வந்த நோக்கமாகும். செய்தியைக் கேட்ட தரங்கம்பாடி மிஷனெரிகள் இராமநாதபுரத்தில் இருக்கும் உபதேசியார் விசுவாசியை அனுப்பிவைப்பதாகத் தீர்மானித்தனர். கிளாரிந்தா தமது வளர்ப்பு மகனை (ஹென்ரி லிட்டில்டன்) சுவார்ட்சிடம் கல்வி பயிலுவதற்காகக் கூட்டி வந்திருந்தார். அவர் ஒரு மாதம் தங்கியிருந்து அந்தச் சிறுவனை தஞ்சாவூரில் விட்டுவிட்டு 1784 ஜனவரி கடைசியில் பாளையங்கோட்டைக்குத் திரும்பிச் சென்றார்." [16] என்று தரங்கம் பாடி மிஷனெரிகள் 8.3.1784ல் எழுதிய ஒரு கடிதத்தில் இருந்து தெரிய வருகிறது.

கிளாரிந்தா கட்டிய ஆலயம் - திருநெல்வேலியின் முதல் புராட்டஸ்தாந்து ஆலயம்

பாளையங்கோட்டையில் உள்ள தமது சின்னஞ்சிறு சபைக்கு ஒரு ஆலயம் கட்ட வெகுவாக விழைந்தார் கிளாரிந்தா. போதுமான பணம் உடையவராக இருந்தபடியால் தமது செலவில் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினார். இரண்டு ஆங்கிலேயர்கள் அவருக்கு உதவினர் என்று சொல்லப்படுகிறது. கோட்டையின் மேலதிகாரி (commander) டிராட்டர் (Trotter) கட்டடப்பணிக்குத் தேவையான கற்கள், மரம், ஓடுகள் முதலியவற்றை கோட்டையின் ஊடாக எடுத்துச் செல்ல அனுமதி அளித்தார். பாளையங்கோட்டைக்கு அப்போது

வந்த போலே கட்டட வேலை தொடங்கியதைப் பார்த்ததாகக் கூறுகிறார். அநேகமாக கிளாரிந்தா தமது ஆலயக் கட்டட வேலை பற்றி சுவார்ட்சுக்கு தெரிவித்திருக்க வேண்டும். ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து தரும்படி சுவார்ட்சுக்கு அழைப்பு அனுப்பினார். இரண்டாம் முறையாக சுவார்ட்சு 1785ம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு வந்து அம்மையாரின் விருப்பப்படி ஆலயத்தை 24.08.1785ல் பிரதிஷ்டை செய்தார். அது *கிளாரிந்தா ஆலயம்* என்று அழைக்கப்படுகிறது. ஆண்டு தோறும் ஆகஸ்டு 23ம் தேதி கிளாரிந்தா நாளாகக் கொண்டாடப்படுகிறது. கிளாரிந்தா அம்மையாரின் காலத்தில் ஐரோப்பியரும், இந்தியரும் அவ்வாலயத்தில் வழிபட்டனர். ஆலயப் பிரதிஷ்டை நாளில் 80பேர்கள் திருவிருந்தில் கலந்து கொண்டதாக பால்கடம்பவனம் எழுதுகிறார். சுவார்ட்சு சிலகாலம் பாளையங்கோட்டையில் தங்கியிருந்து அம்மையாரின் திருப்பணியைப் பாராட்டினார்.

சுவார்ட்சு திருச்சிராப்பள்ளி திரும்பும்போது அவரது பிரயாணச் செலவுக்காக கிளாரிந்தா அவரிடம் 100 பகோடக்களை அளித்தார். சுவார்சு வாங்க மறுத்துவிட்டார். தமது கடிதமொன்றில் சுவார்ட்சு அந்த நிகழ்ச்சியைப் பற்றித் தெரிவித்திருப்பயைப் பார்ப்போம். "அந்தப் பிராமணப் பெண்மணியை அற்ப அவதூறுக்கும் இடம் கொடாதபடி கேட்டுக் கொண்டேன். நான் சொல்லியவற்றை அனைத்தையும் கேட்டாள். தனது ஆசிரியர்களோடு அவள் நடந்து கொள்ளும் முறையைப் பார்க்கும்போது அவளைப் பற்றி ஏதும் குறை சொல்லமுடியாது பிரயாணச் செலவுக்காக 100 பகோடாக்களைத் தரவந்தாள். நான் அதை ஏற்கவில்லை. அவள் தருவது நியாயமும் முறையுமான செயல் என்றாலும், பண வசதியுடையவர் என் போக்குவரத்துச் செலவை ஏற்பது சரியே என்றாலும், தீய எண்ணம் கொண்டோர் இவள் எல்லாவற்றையும் பணம் சொடுத்து சரி செய்து விடுவாள் என்று சொல்லும். அவதூறுக்கு இடம் உண்டாகும் என்று எண்ணினேன். அவள் கிறிஸ்தவத் தன்மையுடன் நடந்து கொள்வதாக எனக்கு வாக்களித்தாள். இதுவரை அவள் பள்ளிக் கூடத்தைத் தோற்றுவித்து அதன் ஆசிரியர் சம்பளத்தையும் கொடுத்து வருகிறாள். ஏழைகளுக்கு தாராளமாக உதவிசெய்து வருகிறாள்" என்று கூறுகிறார்.[18]

ஒரு திருச்சபையைத் தோற்றுவித்து, தாராளமாக ஏழைகளுக்கு உதவும் ஒரு பெண்மணியைப் பற்றி இத்தகைய பேச்சு முற்றிலும் தேவையற்றது. கிளாரிந்தா உருவாக்கிப் பேணிய பள்ளிக் கூடமும் அவருடைய தாராள மனப்பான்மையக் காட்டுகிறது.

கிளாரிந்தா, தேவசகாயம் பிள்ளையின் மகன் வேதநாயகத்தை சுவார்ட்சின் சிஷ்யராக்கினார். சுவார்ட்சு அவருக்கு கல்வியளித்து நல்ல பயிற்சியையும் அளித்தார். வேதநாயகம் சிறந்த கவிஞராகவும், கிறிஸ்தவப் பொருளில் கதா காலட்சேபங்கள் நடத்திப் புகழ் பெற்றார். கிறிஸ்தவப் பண்பாட்டிற்குத் திருச்சபை இந்திய மயமாவதற்கு அவர் அளித்த பங்களிப்பு மிகுதியானது. இன்றும் அவரது கீர்த்தனைகள் ஆலயங்களிலும், மணவிழாக்களிலும் முழங்குவதைக் காது குளிரக் கேட்கலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி இருபது ஆண்டுகளில் கத்தோலிக்கர்களுக்கும், புராட்டஸ்தாந்தியர்களுக்குமிடையே போராட்டமும் புகைச்சலும் இருந்து வந்தது. 1773ம் ஆண்டு போப்பாண்டவர் இயேசு சபையைக் கலைத்து விட்டார். இதனால் கத்தோலிக்கர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள் போலக் குழம்பினர். கடற்கரை ஓரம் இருந்த ஒரு சில குழுக்களையும் தொண்டர்களையும் தவிர உள் பிரதேசங்களில் இருந்த சபைகளைப் பேணிப் போற்ற எவருமே இல்லை. ஆதலால் சிலர் லூத்தரன் சபைக்கு மாறினர். அக்காலத்தில் இருந்த எஞ்சிய கத்தோலிக்க குருக்களுக்கு இது மனவேதனையை அளித்தது. அப்படி கத்தோலிக்கத்தை விட்டு புராட்டாஸ்தாந்து சமயத்துக்கு மாறியவர்களில் ராயப்பன், மரியசவரி, தேவசகாயம் பிள்ளை (பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய வேதநாயம் சாஸ்திரியாரின் தந்தை) ஆவார்கள். மேலும் கிளாரிந்தா தமது வீட்டுக்குக் கத்தோலிக்கர்களை வரவழைத்து அவர்களுடன் விவாதமும் நடத்தினார்.

இந்த கத்தோலிக்கர்கள் புராட்டஸ்தாந்தியராக மாறியது, புரட்டஸ்தாந்து மிஷனெரிகளின் மீது இல்லாத பொல்லாத குற்றச்சாட்டிற்கும், பழிக்கும் ஏதுவாயிற்று. ஆர்ச்சு பிஷப் லெளனன் (Laouenan) கீழ்க்கண்ட நகைப்புக்கிடமான ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியுள்ளார். “திருநெல்வேலியில் 30,000 - பெரும்பாலும் சாணார்

ஆன்மாக்கள் அடங்கிய வளமான திருச்சபை இருந்தது. அவர்களுடைய பங்குத் தந்தைகள் (சாமியார்கள்) திடீரென விலகியதும் சபை மக்கள் சாமியார்களின் இழப்பை உணர்ந்தார்கள். பெரிதாகப் பேசப்படுகின்ற சுவார்சு என்ற புராட்டஸ்தாந்திய பாதிரியார் ஜெசூட் சாமியர்களைப் போல அங்கி அணிந்து தூய பிரான்சிஸ் சேவியர், தந்தை டிநோபிலி ஆகியோரைத் தொடர்ந்து வருகிற சாமியார் என்று சொல்ல சபையார் அவர் குரலுக்குச் செவி கொடுத்தனர். எனவே செழிப்பாக வளர்ந்து வந்த மதுரைத் திருச்சபையில் இப்போது 15,000 உறுப்பினர்கள் தாம் உள்ளனர்." என்று அங்கலாய்க்கிறார்.

ஒரு சில முக்கிய ரோமன் கத்தோலிக்க வெள்ளாளர் குடுபத்தினரும், இரண்டு சிறிய கத்தோலிக்க சபைக் கிராமங்களும் 1780 தொடங்கி புதிய சமயமாகிய புராட்டஸ்தாந்து சபையில் சேர்ந்ததற்கு ஆராதம் இருக்கிறது. பின்வந்த ஆண்டுகளில் ஒரு சிறிய நீரோடை போல் சில வெள்ளாளர்களும், கீழ்ச் சாதியினரும் கத்தோலிக்கத்தில் இருந்து புராட்டஸ்தாந்தியத்தில் சேர்ந்தார்கள். ஆனால் கத்தோலிக்க சாணார் சபைகளில் இருந்து, 1979 முதல் 1803 வரை நடந்த முதல் வெகுசன சாணார் இயக்கத்தின் போதும் சரி, இரேனியஸ் காலத்தில் 1827ம் ஆண்டு தொடர்ந்து நடந்த இயக்கத்திலும் சரி, கத்தோலிக்க சாணார் எவரும் வந்து சேரவில்லை என்று பிஷப் வெஸ்டர்ன் அழுத்தமாகக் கூறுகிறார்.[20]

கால்டுவெல் பின்வரும் தகவலைத் தருகிறார். அதாவது வண்ணான் பிச்சமுத்து (கிளாரிந்தா குழுவைச் சேர்ந்தவர்) தரங்கம்பாடியில் வாங்கிய தமிழ்ப் புத்தகம் தியோடர் வால்தர் எழுதிய *திருச்சபை வரலாறு* என்ற தமிழ்ப் புத்தகமாகும். அது திறமையாக எழுதப்பெற்ற இந்திய திருச்சபை வரலாறு பற்றிய புத்தகம். ஆயினும் கவர்ச்சியில்லாத நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. ஆசிரியரின் முக்கிய நோக்கம் ரோமத் திருச் சபைக்கு எதிராகப் பெற்றுள்ள விவாதங்களை திருச்சபை வரலாற்றிலிருந்து இந்தியக் கிறிஸ்தவர்களுக்குத் தருவதேயாகும்.[21] கிளாரிந்தா தம்முடைய இல்லத்தில் கத்தோலிக்கரையும், புராட்டஸ்தாந்தியரையும் வரவழைத்து விவாதம் நடத்த உதவினார். இப்படி விவாதம் நடக்கும்

பொழுது தங்கள் கையில் விவிலியம் இருந்ததால் புராட்டஸ்தாந்தியர் வெற்றி அடைந்தனர் என்று ஆர்.டி. பால் தமது ***தெரிந்து கொள்ளப் பெற்ற பாத்திரங்கள்*** (Chosen Vessels) என்ற நூலில் கூறுகிறார்.

கிளாரிந்தாவின் வேண்டுகோளுக்கிணங்கி ஞானப்பிரகாசம் என்ற உபதேசியாரை சுவார்ட்சு பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தார். 7.3.1784ல் ஞானப்பிரகாசம் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். கிளாரிந்தாவின் விருப்பப்படி அவர் **தேரிவிளை** என்ற கிராமத்திற்குச் சென்றார். அக்கிராமம் கிளாரிந்தாவின் அனுபவத்தில் அடைமானமாக இருந்தது. அங்கு ஞானப்பிரகாசம் 9 பேர் அடங்கிய இரு சாணார் குடும்பத்தினருக்கும் 16 பறைக் குடியினருக்கும் திருமுழுக்கு அளித்தார். இந்த ஒன்பது சாணார்கள் தாம் முதல் முதல் கிறிஸ்தவசாணார்கள் என்று சொல்லப்படுகிறது. பாளையங்கோட்டையில் கோவில் கட்டி முடிப்பதற்குள், கிளாரிந்தா தேரிவிளையில் ஒரு சிறிய ஜெப வீட்டைக் கட்டி, உபதேசியார் குடியிருக்கும் ஒரு வீட்டையும் கட்டிக் கொடுத்தார். மரிய சவரி என்ற பெயருடைய உபதேசியாரை (இவர் ரோமன் மார்க்கத்திலிருந்து புராட்டதஸ்தாந்து சமயத்திற்கு மாறியவர்) தேரிவிளைச் சபைக்குப் பொறுப்பாக நியமித்தார்.

விஜயராமபுரம், ஷண்முகபுரத்தில் உள்ள கிறிஸ்தவர்களைத் தேடிச் சென்ற கால்டுவெல், அவர்கள் முதலூரிலும், கடாட்சபுரத்திலும் புலம் பெயர்ந்து வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தார். ஆனால் தேரிவிளையின் முதல் கிறிஸ்தவர்களைக் காணமுடியவில்லை. ஆகவே கிளாரிந்தா கிறிஸ்தவர்கள் காணாமல் போய்விட்டனர் என்று முடிவு கட்டி விடுகிறார்.[22] 1797ல் நடந்த சாணார் இயக்கத்திற்கும் கிளாரிந்தா கிறிஸ்தவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்கிறார். ஒரு வேளை அந்தக் குடும்பத்தினர் வேறொரு இடத்திற்கு சென்றிருக்கலாம்.

தேரிவிளை சுவிசேஷபுரத்திற்கு கிழக்கில் இடைச்சிவிளைக்கு அருகில் இருக்கிற சிறு கிராமம். பிற்காலத்தில் சுவிசேஷபுரம் மிஷனெரி ரேனியஸின் தலைமை இடமாக விளங்கியது. தேரிவிளையைப் பற்றி விசாரித்ததில் அங்கு இன்னும் மூன்று கிறிஸ்தவ குடும்பங்கள் இந்து குடும்பங்களிலிருந்து தனித்து வாழ்வதாகத் தெரிகிறது. ஆனால் இப்போது அங்கு ஜெப

வீடுமில்லை, உபதேசியார் வீடுமில்லை. இந்தக் கிறிஸ்தவ குடும்பங்களின் முன்னோர்கள் பல இன்னல்களை அனுபவித்ததை ஊரார் கேள்வியுற்றிருக்கிறார்கள். இப்போது இருக்கும் கிறிஸ்தவர்கள் இடைச்சிவிளையின் கிறிஸ்தவப் பகுதியான நல்லம்மாள் புரத்திற்கு ஆலய வழிபாட்டிற்குச் சென்று வருகிறார்கள்.

ஞானப்பிரகாசம் சமர்ப்பித்த அறிக்கையைப் பார்த்த சுவார்ட்சு தமது மிகச்சிறந்த உபதேசியார் கற்பகம் சத்தியநாதனை பாளையங்கோட்டையில் உபதேசியாராக பொறுப்பேற்கும்படி அனுப்பிவைக்கிறார். அப்போது பாளையங்கோட்டையில் நூற்றுக்கும் மேல் சபை உறுப்பினர்கள் இருந்ததாகத் தெரிகிறது. 1795ல் சுவார்ட்சு சத்தியநாதனை நாட்டையராக தஞ்சாவூரில் அபிஷேகம் செய்து பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தார்.

இந்த வரலாற்றுப் பின்னணியில் சின்னமுத்து தாவீது சுந்தரானந்தன் என்ற ஒரு சாணார் குலத்து இளைஞர், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது மிக முக்கிய நிகழ்ச்சியாகும். சின்ன முத்து தஞ்சாவூருக்குச் சென்ற போது கோலாஃபின்(Kholoff) கவனத்தை ஈர்த்து 1793ம் ஆண்டு கோலாஃபால் திருமுழுக்குப் பெற்றார். சத்தியநாதன் வேண்டுகோளுக்கிணங்கி சுவார்ட்சு ஐயர் தாவீதை பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தார். சுவார்சுக்கு தாவீது திருநெல்வேலி பக்கம் உள்ள ஒரு ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியும். தாவீதுக்கு அப்போது வயது 21. தாவீதின் முயற்சியால் விஜயராமபுரம், ஷண்முகபுரம் ஆகிய ஊர்களில் உள்ள அவரது இனத்தவர், பேய் வணக்கத்தை விட்டொழித்து கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து மற்ற ஊர்களில் உள்ள சாணார் குலத்தவரும் திரண்டு கிறிஸ்தவர்களானார்கள். இது உயர்ந்த சாதியினர் என்று தங்களைப் பற்றி எண்ணிக் கொண்டவர்களையும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியாரின் அடிமட்ட ஊழியர்களையும் உறுத்தியது. கம்பெனிச் சேவகர்களும் கிறிஸ்தவர்களுக்கு இடுக்கண்கள் விளைவித்தனர். விஜயராமபுரம், ஷண்முகபுரம் கிறிஸ்தவர்கள் தங்கள் குடியிருப்புகளை விட்டு ஓட வேண்டி வந்தது. தாவீது கிறிஸ்தவர்களுக்குப் புகலிடமாக முதலூர் என்ற முற்றிலும் கிறிஸ்தவக் கிராமத்தை 1799ம் ஆண்டு

உருவாக்கினார். முதலூர் ஆலயம் பகைவர்களால் தீக்கொளுத்தப் பெற்ற போது, வருந்திய கிளாரிந்தா முதலூருக்குச் சென்று மக்களுக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்து, உதவியாற்றினார் என்பது செய்தி.

கிளாரிந்தாவின் இறுதி நாட்கள்

1792ம் ஆண்டு கிளாரிந்தா அம்மையார் திருச்சிராப்பள்ளி வழியாக மீண்டும் தஞ்சாவூருக்குச் சென்றார். அவர் அங்கிருந்து தரங்கம்பாடிக்குச் சென்று அங்கு மூன்று நாட்கள் தங்கி இருந்ததாகத் தெரிகிறது. சில நாட்கள் கழித்து தமது வளர்ப்பு மகனுடன் திருச்சிராப்பள்ளி வழியாக பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார்.

மிஷனெரி ஜெனிக்கே. (Janicke) கெரிக். (Gerricke) நாட்டையர் சத்தியநாதன் ஆகியோர் திருநெல்வேலி மிஷன் பொறுப்பில் இருந்த போது கிளாரிந்தா அம்மையார் பற்றிய செய்திகள் அதிகமாகப் பேசப்பெறவில்லை.

அம்மையார் திருநெல்வேலிக்கு ஆற்றிய பணிகளில் பல முக்கியத்துவமும், முதலிடமும் பெறுகின்றன. சாதி வேறுபாடின்றி முதல் திருச்சபையை பாளையங்கோட்டையில் உருவாக்கினார். யாவரும் சமம் என்பதை திருச்சபைக்கு உணர்த்தினார். அந்தக் காலத்தில் மிகத் தேவையாக இருந்த கத்தோலிக்க-புராட்டஸ்தாந்து விவாதங்களை ஆதரித்தார். பாளையங்கோட்டையில் முதல் ஆலயத்தையும், தேரிவிளையில் முதல் ஜெபவீட்டையும் கட்டி, பாளையங்கோட்டையில் ஒரு பாடசாலையை நிறுவிப் பராமரித்தும், ஏழைகளுக்கு உதவியும் வந்தார். அம்மையார் 1806ம் ஆண்டில் காலமானார் என்று பால்கடம்பவனம் எழுதுகிறார்.[23]

1805ம் ஆண்டு நாட்டையர் சத்தியநாதன் தஞ்சாவூருக்குத் திரும்பிச் சென்றார். 1806 ம் ஆண்டில் தாவீது சுந்தரானந்தன் - முதலூர் சிங்கம் - ரிங்கிள் தௌபே (Ringle Taube)யினால் வேலை நீக்கம் செய்யப் பெற்றார். அதே ஆண்டில் அவர் நஞ்சூட்டப்பெற்று கொல்லப்பட்டார். பலர் கிறிஸ்தவர்களாவதற்கு சுந்தரானந்தன் காரணமாக இருந்ததால் எதிரிகளால் விஷமிட்டுக் கொலை செய்யப் பெற்றார் என்று கூறப்படுகிறது. ஆக திருநெல்வேலித் திருச்சபையைத்

தோற்றுவித்த கிளாரிந்தா, சுத்தரானந்தன் 1806ம் ஆண்டில் மரணம் அடைந்தார்கள். சத்தியநாதன் தஞ்சாவூர் திரும்பிவிட்டார். ஆகவே திருநெல்வேலிக்கு வழிகாட்ட தலைவர் இல்லாமல் ஒரு இருண்ட காலம் சூழ்ந்து கொண்டது.

ஐரோப்பாவில் ஆங்கிலோ-பிரெஞ்சு யுத்தத்தினால் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பெற்றது. ஐரோப்பிய மிஷனெரிகள் இந்தியாவுக்கு வர இயலவில்லை. தொடர்ந்து பஞ்சமும், பசியும், கொள்ளை நோயும் திருநெல்வேலி மிஷனைப் பாதித்தன. 1816ல் ஜேம்ஸ் ஹெள (James Hough) படையினருக்குப் பாதிரியாராக வந்த பிறகுதான் விடிவுகாலம் பிறந்தது. அவர் மிஷன் பணியைத் திரும்பவும் தொடங்கி வைத்தார். அவரது முயற்சியால் சி.எம்.எஸ் மிஷன் புகழ்வாய்ந்த இரேனியஸ் ஐயரைத் திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தது. அவர் கிளாரிந்தா தொடங்கி வைத்த கிறிஸ்துவ இயக்கத்தை மிகச் சிறந்த அளவில் வளரச் செய்தார். ■

உதவிய நூல்கள்

1. E. Arno Lehmann - It began at Tran guebar - P. 155, C.L.S. Madras . 1956.
2. Robert Caldwell - *A History of Tinnevelly* P. 225 - Reprint. Asian Educational ervice, New Delhi, Madras. - 1989
3. Robert Caldwell - *Records of the Early History of the Tinnevelly* Mission. Page 4. Higginbotham & Co., Madras 1881.
4. F. J. Western - *The History of the Early Tinnevelly Church* - Type - writtent & Ms. Quoting from Schwarz's Journal translated from the Neure Geschichte, tom iii
5. Ibid
6. Robert Caldwell - *Records of the Early History of the Tinnevelly Mission*. Page 24. Higginbothams & Co., Madras 1881.
7. Besse - *Father Beschi of the Society of Jesus, His work, Times and writings.* Page 24. Trichy 1918.
8. A. Madhaviah - *Clarinda. A Historical Novel* - First published by the author in 1915 - Reprinted by Nanbar Vattam- Tirunelveli 7. 1992, in his introduction.
9. Hugh Pearson - *Memoirs of the Life and Correspondence of the Reverend Christian Frederick Schwarz* - D. Appleton & Co., No. 2000 Broadway, New York, Page 336.
10. John. Devasahayam - *The Ancestors of Savariraya Pillai* (Tami)- Page 10 - Sri Vijayalakshmi Vilasam Press, Palamcottah 1899.

11. A. Madhaviah - *Clarinda*, A Historical Novel - Tamil rendering by Sarojini Packiamuthu. C.L.S. Madras 1975.
12. F.J. Western - *The Early History of Tinnevelly Church* - A typed Mss. Page 48.
13. Ibid Page 64
14. Ibid Page 49
15. Ibid Pages 36
16. Ibid Pages 49 & 50
17. Ibid Pages 49 & 50
18. Ibid Pages 49 & 50
19. Ibid Page 38
20. Ibid Page 35
21. Robert Caldwell - *Records of the Early History of the Tinnevelly Mission*. Page 13. footnote. Higginbotham & Co., Madras 1881.
22. Ibid Page 17
23. Paul Kadambavanam - *The Origins of Tinnevelly Diocese* (Tamil) Page 25. 1967 Published by the author.

2

கற்பகம் சத்தியநாதன்

ஆர். ஜோசப்

திருநெல்வேலி அருட்பணி வரலாற்று மடல்களில் காணப்படும் மாபெரும் நபர்களில் கற்பகம் சத்தியநாதன் சிறப்பிடம் வகிக்கிறார். அறிவர் கிளாடியஸ் புக்கண்ணன் (Clauduis Buchannan) அவரை 1815-ல் தஞ்சாவூரில் சந்தித்தபின் வருமாறு எழுதுகிறார். "கடந்த ஞாயிறு (30.8.1815) தஞ்சை கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறப்பான நாள். திருவாளர் சுவார்ட்சின் நண்பர் ஒருவர் வந்துள்ளார் என்ற செய்தி அறிந்து, எல்லா இடங்களிலிருந்தும் கிறிஸ்தவர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களுள் புகழ்பெற்ற இந்திய அருளுரைஞர் சத்தியநாதனும் இருந்தார். அவர் என் அருளுரையில் சில பகுதிகளைச் சுட்டிக் காட்டி தொலைவிடத்திலிருந்து வரும் நற்செய்தி வறண்ட தொண்டைக்கு கிடைக்கும் குளிர்ந்த நீராகும்." என்றார். அறிவர் கிளாடியஸ் புக்கண்ணன் அவர்களால் புகழப் பெற்றவரான இந்த இந்திய அருளுரைஞரின் அருட்பணியையும் வாழ்க்கையையும் படிக்கும்போது நமது நினைவுகள் புத்துணர்வு பெறும் என்பதில் ஐயமில்லை. திருநெல்வேலி அருட்பணியின் தொடக்க வரலாற்றை பேராயர் கால்டுவெல் எழுதும் போது மூன்றாவது பகுதியில் சத்தியநாதனின் திருப்பணியைப் பற்றி 56 பக்கங்களில் விவரித்துள்ளார். இந்தியத் திருச்சபையின் சிறப்புச் சிற்பிகளில் மெய்யாகவே அவரும் ஒருவரே. நற்செய்தியின் மீது அவர் கொண்ட தணியா ஆர்வம், ஆண்டவருக்கு அவர் ஆற்றிய அரிய புகழ் நிறை சேவை, அவருடைய ஆன்மீகச் சிறப்பு ஆகியவை நம் மனதில் நன்கு பதிந்து விடுகின்றன.

சத்திய நாதனை உருவாக்கிய சுவார்ட்ஸ்

தென்னிந்திய அருட்பணிக்கு அன்னையான தரங்கை, டேனிய மிஷன் சார்பு அருட்பணியினின்று நாம் தொடங்கலாம். தரங்கம்பாடி அருட்பணியில் ஒரு கிளையே ஆங்கிலேய

அருள் திரு. ஆர் ஜோசப், எல். டி. எம். மெய்ஞானபுரம் சேகர குரு. திருநெல்வேலி திருமண்டலத் துணைத் தலைவர்.

அருட்பணியாகும். அது எஸ்.பி.ஸி.கே. சங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டதும். கிறிஸ்தியான் பிரடரிக் சுவார்ட்சை அருட்பணியாளராகக் கொண்டு 1776ல் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டதுமாகும். கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்த அது ஆங்கிலேய போர்வீரர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. திருச்சபை ஒருமைப்பாடு இயக்கத்தின் ஒரு சிறப்பு முயற்சி என்றும் கூறலாம். ஏனெனில் சுவார்ட்ஸ் ஒரு ஜெர்மனியாராயிருந்த போதிலும் உயர்ஆங்கிலமரபுத் திருச்சபையின் எஸ்.பி.ஸி.கே. சங்கத்தாரால் நன்கு பயன்படுத்தப்பட்டார். அவர் பிரித்தானிய படைகளுக்கும், சமூகத்தினருக்கும் குருவாக இருந்தாலும் நற்செய்திப் பணிக்கே உயர் முன்னுரிமை அளித்தார்.

சி.எஃப் சுவார்ட்ஸ் தான் (1724-98) தென் இந்தியாவில் ஊழியம் செய்த அருட்பணியாளர் அனைவரிலும் மாபுகழ் வாய்ந்தவர். அவர் 48 ஆண்டுகள் இந்தியாவில் தொடர்ச்சியாக சேவை செய்தார். நேர்மைக்கும் நல்லொழுக்கத்திற்கும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாவார். பொதுவாக ஐரோப்பியர்கள் மேல் கூறப்படும் ஒழுக்கக் கேடுகளின் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் அளவுக்கு நல் நடத்தையுள்ளவராயிந்தார். சுவார்ட்ஸ் தன் எளிய வாழ்க்கையாலும், சுய தியாகத்தாலும் அனைத்து தரப்பினரும் அவரை அணுக வசதியான நற் பெயரை ஏற்படுத்திக் கொண்டார்.

சபை ஊழியர்களின் குழுவை முறைப்படியாக ஒழுங்கு செய்து, அவர்களின் உதவியுடன் சுவார்ட்ஸ் கிராமங்களிலும் நகரங்களிலும் தொடர்ந்து நற்செய்தி அறிவித்து வந்தார். சபை ஊழியர்கள் மிகத் தூரமான இடங்களுக்குச் சென்று நற்செயதி ஆர்வலர்களை சுவார்ட்சிடம் கொண்டுவந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களில் சத்தியநாதனும் ஒருவர். திருச்சி மலைக்கோட்டைக்கு அருகிலுள்ள ஓரியூர் என்னுமிடத்திலிருந்து அவர் வந்தார். சத்தியநாதனைப் பற்றி சுவார்ட்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்.

"அவரும் அவருடைய வயதான அன்னையும் மிக வணக்கமாக ஜெபித்தனர். நாங்கள் எல்லோரும் அந்த வாலிபனுடன் இறைவன் இருந்தார் என்று முழுமையாக நம்பினோம். அவர் சத்தியநாதன் அதாவது உண்மையுடையார் என்ற பெயரைப் பெற்றார். நமது சத்தியநாதன் தற்போது மேலும் மேலும் உண்மையை அறிந்தார். உதவியாளர்களுடன் போக்கும் வரத்துமாய் இருந்தார். எனது பயணங்களில் மிகவும் தாழ்மையுடன் எனது பையைச் சுமந்து வந்தார்."

இவ்வாறு சத்தியநாதன் சுவார்ட்சின் உதவியாளராகத் தனது பணியைத் தொடங்கினார். ஞானத்திலும் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் அவர் படிப்படியாக வளர்ந்தார். சுவார்ட்ஸ் மேலும் மேலும் அவரைச் சார்ந்திருந்தார். அருளுரை ஆற்றுவதிலும் பேசுவதிலும் அவருடைய முன்னேற்றம் சுவார்ட்ஸை முழு மன நிறைவடையச் செய்தது. திருநெல்வேலியில் சத்தியநாதனுக்குப் பின், மற்ற அருளுரைஞர்களைப் போல் வந்த சத்தியநாதன் அதிகமான கல்வித்தகுதியற்றவர் தான். எனினும் சத்தியநாதன் தன் கடமையை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பிலும் திறமையிலும் நன்நடத்தையிலும் ஒப்பற்றவர்.

அனைவராலும் அவர் உண்மையான நேர்மையான கிறிஸ்தவப் பண்பாளர் என்று வர்ணிக்கப்படுகிறார். தாராளமான மனம் படைத்தவர் எளிய மனதுடையவர். ஆர்வமும் அஞ்சாமையுமுள்ளவர்; அவருடைய அருளுரை மூலம் அனைவரின் உள்ளத்திலும் உறைபவர். எவ்வகையிலும் தன்னுடைய செயல்முறைப்பாங்கில் அதிகாரம் செலுத்தும் மனப்பான்மையினர். படிப்பறிவற்ற முரட்டுத்தனமான மக்கள் நடுவில் கிறிஸ்தவ சபையின் அடிக்கல்லை நாட்டும்படி கடவுளால் தனக்கு ஒப்புவிக்கப் பட்ட வேலையின் தன்மைக்கு தன்னை ஒப்புக்கொடுத்த வாழ்க்கை முறையே அவருடையது என்று கூறி நிறைவு செய்வது சாலச் சிறந்தது.

சுவார்ட்ஸ் முதலில் சத்தியநாதனை தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லத்தில் நியமித்தார். அங்கு ஒரு சிறிய சபை இருந்தது. ஆறு மாதங்களில் மேலும் வளரும் வாய்ப்புகளுடன் சபையாரின் எண்ணிக்கை எண்பதாக உயர்ந்தது.

1778 முதல் 1798 வரை தனது மரணமட்டும் சுவார்ட்சும் தஞ்சையில் வாழ்ந்தார். அவர் அடிக்கடி அவரது அருட்பணித் தளங்களைப் பார்வையிட பயணம் செய்தார். தஞ்சையில் சபை அதிவேகமாய் வளர்ந்து பெருகிற்று.

பல ஆண்டுகளாக நடைபெற்ற வேதனை நிறைந்த போர்களாலும், அரசியல் குழப்பங்களாலும், சுவார்ட்ஸ் அவரது உடன் ஊழியர்களும் ஆற்றிவந்த அருட்பணி பெருமளவில் இடையூறுக்குட்பட்டது. தன்னையும் தன் உடன் ஊழியர்களையும் பேரிழப்புகளின் நடுவில் பாதுகாத்த பரமனுக்கு சுவார்ட்ஸ் நன்றி செலுத்தினார்.

"பட்டயமும் பஞ்சமும் பரவும் நோய்களும் பல்லாயிரக்கணக்கானவர்களை அழித்துப் போட்ட போது நாங்கள் உடல் நலத்தோடும் எல்லா வசதிகளுடனும் குடியிருந்து மகிழ்ந்திருந்தோம். இறைவன் நம்மீது பொழிந்த பல்வேறு இரக்கங்களை நாம் ஒரு போதும் மறவோம். மெய்யாகவே நாம் முற்றிலும் அழியாதிருப்பது கடவுளின் இரக்கங்களாலேயே" என்று எழுதுகிறார்.

சுவார்ட்சும் திருநெல்வேலியும்

1780-ல் பாளையங்கோட்டையில் ஒரு சிறிய சபை சுவார்ட்சினால் நிறுவப்பட்டது. அவர் திருச்சிராப்பள்ளியில் இருந்த போது திருநெல்வேலி மீது அக்கரை கொண்டார். 1771-ம் ஆண்டுக்குரிய அவருடைய செய்தி மடல் திருநெல்வேலி திருச்சபையின் உட்கரு பற்றி குறிப்பிடுகிறது. சுவார்ட்சின் ஒப்புதலுக்குக் காத்திராமல், ஒரு கிறிஸ்தவப் படைத் தலைவரால் வேற்றுச் சமய கணக்கரான ஓர் இளைஞன் திருமுழுக் காட்டப்பட்டதைக் குறித்து அவரும் வருந்தினார். முதன் முறையாக சுவார்ட்ஸ் 1778-ல் பாளையங்கோட்டைக்கு வந்தார். கிளாரிந்தா என்னும் பிராமண கைம்பெண்ணை திருமுழுக்காட்டினார். அவள் கோட்டையில் ஒரு சிறிய கோவிலைக் கட்டினாள். திருநெல்வேலி திருச்சபையின் முதல் சபைத் பதிவேட்டில் 40 பெயர்கள் உள்ளன. அவற்றில் 22 பேர் வெவ்வேறான 13 சாதிகளைச் சார்ந்தவர்கள்.

நல்லாயனின் ஆட்டுத் தொழுவத்துள் ஒன்றுகூட்டப்பெற்ற பல்லினச் சமுதாயத்தின் முதற்பலன் அது.

பாளையங்கோட்டையில் சத்தியநாதன்

கிளாரிந்தாவின் வேண்டுகோளுக்கிணங்கி சுவார்ட்ஸ் தமது சபை ஊழியர்களில் ஒருவரை பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். 1785-ல் சுவார்ட்ஸ், அம்மையாரின் முயற்சியால் பாளையங்கோட்டையில் கட்டப்பட்ட சிற்றாலயத்தை இறைத் தொழுகைக்காக மங்கலப் படைப்புச் செய்தார். அது இன்று கிளாரிந்தாவின் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சபையாரின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. (1785) முதல் சத்தியநாதனும், ஒரு பள்ளி ஆசிரியரும் இப்புதிய பணித்தளத்தைக் கவனிக்க நியமிக்கப்படனர். மேலும் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டன. 1786-ஆம் ஆண்டுக்குரிய தமது ஆண்டறிக்கையில் சுவார்ட்ஸ் சத்தியநாதனின் உழைப்பையும், வெற்றியையும் குறிப்பிடுகிறார். 1787-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் எஸ்.பி.ஸி.கே. சங்கத்தாருக்கு அவர் எழுதிய கடிதத்தில் சபையாரின் எண்ணிக்கை 120 என்று தெரிவித்தார். ஆலயக் கட்டிடம் ஓடு போட்ட சுத்தமான சிறியதொரு கட்டிடமே எதிர்பார்ப்பு நிறைவேறும் வாய்ப்புள்ள அந்த பணித்தளத்தில் கடவுளின் அரசு விரைவாக விரிவடைய திருமறைகளும், பொது இறைவேண்டல் ஏதுக்களும் கூடுதலாக விநியோகிக்கக் கேட்டு எஸ்.பி.சி.கே. சங்கத்தாரிடம் விண்ணப்பித்தார்.

தஞ்சையிலிருந்து பாளையங்கோட்டைக்கு குருமாரில் ஒருவரை ஆண்டுக்கொருமுறை அனுப்ப ஒழுங்கு செய்வதில் இடையூறுகள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன. இதன் விளைவாக சத்தியநாதனுக்கு அருட்பொழிவு அளிப்பது என்ற எண்ணம் அதிக அழுத்தம் பெற்றது. பல ஆண்டுகளாக சத்தியநாதன் சபை ஊழியம் செய்திருந்ததாலும், அவருடைய திறமை, உண்மை ஆகியன குறித்து போதுமான நற்சான்றுகளைப் பெற்றிருந்ததாலும் சத்தியநாதனுக்கு அருட்பொழிவு அளிக்க அருட்பணியாளர்கள் தீர்மானித்தனர். அவர் தென்பகுதியிலிருந்து கொண்டு அனைத்து பணித்தளங்களையும் கண்காணிக்கும் திறமை கொண்டவர். எனவே இனி

தஞ்சையிலிருந்தோ, தரங்கையிலிருந்தோ ஒரு குரு எல்லா இடங்களுக்கும் செல்லத் தேவையில்லை.

சத்தியநாதன் 1790ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் நாள் சுவார்ட்சாலும், கோலாப்பாலும் லூத்தரன் சபை மரபுப்படி கிழக்குக் கடற்கரையோரத்தில் சங்கத்தின் சபை ஒன்றில் குருவாக அருட்பொழிவு பெற்றார். அருட்பொழிவு வழிபாட்டில் சத்தியநாதன் செய்த அருளுரை அரிய எழுச்சியூட்டுவதாக இருந்தது. அது கோலாப்பாலும், ஜெனிக்கேயாலும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு எஸ்.பி.சி.கே. சங்கத்தாருக்கு அனுப்பப்பட்டது. 1792ஆம் ஆண்டுக்கான தங்கள் ஆண்டறிக்கையில் எஸ்.பி.சி.கே. சங்கத்தார் அதை வெளியிட்டனர்.

சுவார்ட்சு சத்தியநாதனைப் பற்றி மிகத் தாராளமாகவே புகழ்மழை பொழிந்தார்.

"நான் அவருக்கு இணையான எவரையும் இந்நாட்டவரில் இதுகாறும் சந்தித்ததில்லை. கிறிஸ்துவின் மேலுள்ள அவரது அன்பும், தன்னாட்டு மக்களுக்கு பயனுள்ள தொண்டாற்றலும் அவரது அவாவும் வியப்புக்குரியது. அவர் தன்னுடைய குறைந்த உதவித் தொகையிலும் ஏழைகளுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டு எப்படித்தான் பிழைப்பு நடத்துகிறாரோ என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. பிள்ளைகளை அவர் பேணுவது சிறப்புடையது. தன் சொந்த வீட்டில் எப்படி ஒரு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டுமென்று நன்கு அறிந்திருந்தார்.

ஊதியங்கள் பற்றி 1790-ல் சுவார்ட்சு எழுதுவது அக்காலத்தின் கவனத்தைக் கவர்கிறது.

"நான் ஒவ்வொரு சபை ஊழியருக்கும் இரண்டு வெள்ளி பகோடாக்களை (ஏழு ரூபாய்க்கு சமம்) கொடுக்கிறேன். அது அதிகமானதன்று. நல்ல ஆடைகளை வாங்க அடிக்கடி கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்கிறேன். பாளையங்கோட்டையில் இருப்பவர்களுக்கு நான் மூன்று பகோடாக்களை மாதந்தோறும் கொடுக்கிறேன்." சத்தியநாதன் அருட்பொழிவு பெற்ற போது அவருடைய ஊதியத்தை ஐந்து பகோடாக்களாக சுவார்ட்ஸ் நிர்ணயித்தார். அது இரண்டு பவுன் ஸ்டெர்லிங்குச் சமம்.

முதல் மாபெரும் ஒட்டு மொத்த மனமாற்ற எழுச்சி

சத்தியநாதன் பல சபைகளை நிறுவினார். ஆகையால் ஒரு ஐரோப்பிய அருட்பணியாளரை நியமித்தல் நலம் என்று சுவார்ட்ஸ் கருதினார். இது 1791-ல் நிறைவேறிற்று. அருள்திரு. ஜோசப் டேனியல் ஜெனிக்கே பாளையங்கோட்டைக்கு வந்தார். அப்போது ஆன்ம அறுவடைக்கு வயல் நிலம் ஆயத்தமாக இருப்பதைக் கண்டு வியந்தார். திருநெல்வேலி நாட்டில் கிறிஸ்தவம் நீடித்து நிலைப்பதற்கான வாய்ப்பு எல்லா வகையிலும் உள்ளது என்று அவர் முன்னுரைத்தார். பயணங்களின் போது ஜெனிக்கே மலைக்காய்ச்சலால் தாக்கப்பட்டார். அவர் திருநெல்வேலியில் இனி தங்கமுடியாதபடி அக்காய்ச்சல் அவருக்கு அதிக அல்லல் தந்தது. அவர் பாளையங்கோட்டையில் இருந்த அதே காலத்தில் 1799-ல் முதலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாடார்கள் நடுவில் ஒட்டு மொத்த மனமாற்ற எழுச்சி ஏற்பட்டு மக்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். பின்னர் அது அந்த மாவட்டம் முழுவதிலும் பரவிற்று. அது ஒட்டுமொத்த மக்களின் சமய மாற்றமாகவும், மனமாற்றமாகவும் இருந்தது.

தாவீதும் முதலூரும்

பாளையங்கோட்டையிலும் சுற்றுப்புறங்களிலும் ஞான உபதேச வினாவிடைகளைக் கற்றுக் கொடுக்கவும், திருமுழுக்குக்கு ஆட்களை ஆயத்தம் செய்யவும், ஆண்டவரின் இராவிருந்தை வழங்கவும் உதவி செய்ய ஓர் உதவியாள் வேண்டுமென சத்தியநாதன் 1796ல் சுவார்ட்சை வேண்டினார். தாவீது என்ற சீர்திருத்த சபையைச் சேர்ந்த முதல் நாடார் கிறிஸ்தவரை திருநெல்வேலி பகுதியில் பயன் தரும் பணியாற்ற சுவார்ட்ஸ் அனுப்பி வைத்தார். அவரே முதல் நாடார் சபை ஊழியர். சாத்தான்குளத்துக்கு அருகிலுள்ள காலங்குடியைச் சேர்ந்தவர். ஜெனிக்கே இந்த ஏற்பாட்டைக் குறித்து மகிழ்ந்தார். 1796 செப்டம்பரில் தாவீது பாளையங்கோட்டைக்கு வந்து தமது சபை ஊழியர் பணியைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது இருபத்திஒன்று. பாளையங்கோட்டையில் அவருடைய பணி சத்தியநாதனுக்கு அவர் மேல் நல்லெண்ணத்தை உண்டாக்கியது. தாவீது காணாமற்போகக் காரணமாக இருந்த தமது உறவினர்களைச்

சந்தித்து அவர்களை ஆன்ம ஆதாயம் செய்தார். அவர் உயிரோடிருப்பதை அவர்கள் கண்டு வியப்புற்றனர், பெரும் மகிழ்வுற்றனர். தாவீது தனது சகோதரியின் மகனுடன் பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். ஜெனிக்கே அவரது மருமகனை தன் பொறுப்பில் திருமுழுக்கு ஆயத்தக்காரராக ஏற்றுக் கொண்டு போதிக்கத் தொடங்கினார். தாவீது தனது உறவினர்களையும் பழக்கமானவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ண மறுபடியும் விஜயராமபுரத்துக்கு அனுப்பப்பட்டார். சத்தியநாதனின் கண்காணிப்பில் இருந்த தஞ்சை சபை ஊழியர்களும் அடிக்கடி அங்கு அனுப்பப்பட்டனர். 1797 மார்ச் திங்களில் சத்தியநாதனே சாத்தான்குளத்துக்கு வந்தார்.

சத்தியநாதனின் உதவியாளர்கள் நற்செய்திப் பணியில் தாவீதுக்கு உதவி செய்தனர். ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் முழுமையான சீடர்களாய் இல்லை, விஜயராமபுரத்திலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பணி செய்த போது தங்கள் சாதிப்பற்றை விட்டுவிட இயலாதிருந்தனர். அவர்கள் அந்த இடங்களுக்கு வருகை தரும் போதெல்லாம் தங்கள் சொந்த உணவுப் பொருட்களைக் கொண்டுவந்தனர். சத்தியநாதனின் உதவியாளர்கள் நாடார்களை தாழ்வாக எண்ணினதால் அவர்களுடன் நட்புறவுடன் பழகவில்லை. இதை அறிந்த நாடார்கள் இடறலடைந்தனர். சத்தியநாதன் மறுபடியும் அவர்களை சந்திக்க வந்தபோது தாவீதின் மாமனார் தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார். அவர் சத்தியநாதனிடம் ஒளிவு மறைவின்றி தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார். சாதி வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டிருந்த அவர் மட்டும் தங்களிடம் வந்து நற்செய்தியை அறிவித்தால் போதும் என்று கூறினார். சத்தியநாதனைப் பொறுத்தமட்டில் சாதியின் பெயரால் கிறிஸ்தவர்களிடம் எந்த வேற்றுமை உயர்வும் சுடாது என்பதே அவர் கருத்து. அவருடைய பெருந்தன்மை சாதி பாராட்டாமை ஆகியவற்றால் நாடார்கள் மத்தியில் வெறுப்பு உணர்வுகள் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டார். அவர் இவ்வளவு பெருந்தன்மையோடும், கிறிஸ்தவ சிந்தையோடும் நடவாதிருந்தால் ஒட்டு மொத்த மனமாற்ற எழுச்சி முதலூர் பகுதியில் அந்த ஆளுநரின்

ஏற்பட்டிருக்காது. நாடார்கள் ஒட்டு மொத்த மனமாற்ற எழுச்சியின் தொடக்க கட்டத்தில் சத்தியநாதனின் பங்கு ஈடு இணையற்றது.

திருநெல்வேலி பகுதியில் அது வசனத்தை விதைப்பதற்கேற்ற காலம். சத்தியநாதன், தாவீது, ஜெனிக்கே இம்மூவரின் ஆற்றலாலும், செல்வாக்கினாலும், நம்பத்தகு தன்மையாலும் ஆயிரக்கணக்கான மக்கள் திருச்சபையில் சேர்ந்தனர். தாவீதின் உறவினர்கள் வாழ்ந்த விஜயராமபுரத்திலிருந்து கிறிஸ்தவம் திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் நாடார்கள் நடுவில் பரவியது.

புதிய கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாத தங்கள் அயலகத்தாரால் பல அவமானங்களுக்கும் அநியாயங்களுக்கும் ஆளாயினர். ஆகையால் புதிதாக கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவர்கள் தாங்கள் துன்புறுத்தப்பட்ட கிராமங்களைத் துறந்து சில மைல்களுக்கு அப்பால் அடையல் என்ற கிராமத்துக்கு அருகிலிருந்த ஒரு இடத்திற்கு திரளாகச் சென்று குடியேறினர். துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஒரு நிலத்தை விலைக்கு வாங்கி அதில் தன் உறவினர்களைத் தாவீது குடியேற்றினார். அங்கு பாளையங்கோட்டை அருட்பணியில் ஆர்வமுள்ள அன்பு நண்பரும் படைத் தலைவருமான எவரெட்டின் உதவியால் ஒரு ஜெபவீட்டைக் கட்டி, ஒரு கிணற்றையும் வெட்டினார். இதுவே திருநெல்வேலி பகுதியில் முதல் கிறிஸ்தவ குடியிருப்பு. அது முதலூர் (முதல் ஊர்) என்று அழைக்கப்பட்டது. 1799 ஆண்டில் ஜெனிக்கேயின் பெயரில் தாவீது அந்த நிலத்தை வாங்கியிருந்தார். 1800-ல் முதலூரில் 28 கிறிஸ்தவர்கள் இருந்தனர்.

சத்தியநாதனின் தளராத முயற்சிகள்

சத்தியநாதன் தொடர்ச்சியாக கிராமங்களுக்கு பயணம் செய்து புதிய பணித்தளங்களில் நற்செய்தியை அறிவித்தார். வெவ்வேறான இடங்களுக்குச் சென்று பார்வையிட்ட விபரங்கள் அவருடைய கடிதங்களில் காணப்படுகின்றன.

1789-ல் திருநெல்வேலி சபைகளைப் பார்வையிட தரங்கம்பாடி அருட்பணியாளர்களால் அருள் திரு. ராயப்பன் அனுப்பப்பட்டார். அவர் தூத்துக்குடியிலிருந்த டச்சு குடியிருப்பை

வேண்டுகோளின் பேரில் சந்தித்தார். சத்தியநாதனும் விரைந்து அவருடன் இணைந்து கொண்டார். 1789 ஜுலையில் உற்சாகமூட்டும புதியதோர் இயக்கம் தொடங்கியது. அப்போது ராயப்பரும், சத்தியநாதனும் ஒரு பெரிய திருமுழுக்கு வழிபாடு தூத்துக்குடியில் நடத்தினர். அதில் 226 பேர் திருமுழுக்காட்டப்பட்டனர். பிரஞ்சுப்புரட்சி நடைபெற்ற அதே ஆண்டில் முத்து நகரான தூத்துக்குடியில் இந்த சமயமாற்றம் நிகழ்ந்தது சிறப்புடையதாகும். சத்தியநாதன் காலத்திலிருந்து மாவட்டத் தலைநகராகத்திகழும் தூத்துக்குடி சீர்திருத்தத் திருச்சபையின் கோட்டையாக விளங்குகிறது. ரிங்கில்டோபேயின் சபைப் பதிவேட்டிலிருந்து ஒரு சிறப்பான தகவலைப் பெறுகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜேம்ஸ் நகருக்கு அருகிலிருக்கும் பிச்சைக் குடியிருப்பு சபை பற்றி அங்கு குறிப்பிடுகிறார். அந்த இடத்தில் ஏறத்தாழ 25 நபர்கள் சந்தியநாதனால் திருமுழுக்காட்டப் பட்டனர். அவர்கள் அனைவரும் நாடார்களே. இந்தத் தகவலின் கண்டுபிடிப்பால் ஒரு சர்ச்சை உருவாகியுள்ளது. முதலில் சமயமாற்றம் பெற்றவர்கள் யார்? நாடார்களா? அல்லது மகாராசன் வேதமாணிக்கத்தின் மக்களா? இவர்களை முதலில் திருமுழுக்காட்டியது யார்? சத்தியநாதனா அல்லது ரிங்கள் டோபேயா?

1800-ல் சத்தியநாதன் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து ஒரு வாரம் தங்கினார். சிதறிக்கிடந்த சபைகளைச் சந்தித்தார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்தவர்களல்லாதவருக்கு நற்செய்தியை அறிவித்தார்.

ஏறத்தாழ 1800 மற்றும் 1801 ஆண்டுகளில் தெற்கிலிருந்த சபைகள் கடுமையாக துன்புறுத்துதலுக்குள்ளாயின. அது பிரித்தானிய ஆளுகையை எதிர்த்து கொதித்தெழுந்தவர்களால் உண்டாயிற்று. உள்ளூர் ஏழைக் கிறிஸ்தவர்களை பிரித்தானியரின் ஆதரவாளர்களாகவும், கைக் கூலிகளாகவும் அவர்கள் கருதினர். அவர்கள் கிறிஸ்தவர்களுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்தனர், அவர்களைத் துன்புறுத்தினர், அவர்களிடம் கொள்ளையடித்தனர். அவர்களுடைய ஆலயங்களில் சிலவற்றை அழித்தனர். ஆலயங்களில் காணப்பட்ட நூல்களை தீயிலிட்டனர்.

துன்புறுத்துவோரின் கொடுமைகள் மிகக் கடுமையாக இருந்தமையால் பல கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு காடுகளுக்குத் தப்பி ஓடினர்.

1798-ல் சுவார்ட்சும் 1800-ல் ஜெனிக்கேயும் இறந்தபின் சத்தியநாதன் முதல் இந்தியக் கண்காணிப்பு அருட்தொண்டரானார். கெரிக்கே ஐரோப்பிய அருட்தொண்டருக்கெல்லாம் முதல்மையானவரானார். கெரிக்கே சென்னையில் வெப்பேரியில் வாழ்ந்தார். ஆனால் தஞ்சையில் சுவார்ட்சுக்கு பின் வந்த கோலாப்புக்கு உதவி செய்ய அடிக்கடி தஞ்சை சென்றார். அப்போது தெற்கில் கிறிஸ்தவர்கள் படும் துன்பத்தைக் கேள்விப்பட்டார். எனவே சென்னையிலிருந்து பாளையங்கோட்டைக்கு வந்தார். எல்லா இடங்களிலும் சத்தியநாதனும் அவருடைய சபை ஊழியர்களும் செய்த ஊழியம் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. பல கிராமங்களில் நல்ல விழிப்புணர்ச்சி காணப்பட்டது. திருமுழுக்கு ஆயத்தக்காரர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர். கெரிக்கே நீண்ட காலம் நெல்லை மாவட்டத்தில் தங்க முடியவில்லை. குறித்த காலத்துக்கு முன்னே அவர் வெப்பேரிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

கெரிக்கே தனது பயணங்களின் போது ஏற்கனவே திருமுழுக்காட்டியிருந்த 1300 மக்களை, சத்தியநாதன் மற்றும் அவருடைய சபை ஊழியர்கள் பொறுப்பில் விட்டுச் சென்றார். அவர் சென்ற பிறகு சத்தியநாதனும், தாவீதும் மற்ற சபை ஊழியர்களும் பதினெட்டு புதிய சபைகளை நிறுவினர். போதித்து 2700 பேரை திருமுழுக்காட்டினர். சபையாரின் எண்ணிக்கை 4000 ஆக உயர்ந்தது. திருமுழுக்குப் பெற்ற ஏராளமானவரின் நோக்கங்களைக் குறித்தும் திருமுழுக்கு ஆயத்தங்கள் குறித்தும் ஐயப்பாடுகள் எழுதப்பட்டுள்ளன.

கெரிக்கேயும், சத்தியநாதனும் சரியான அறிவுரையும், ஆயத்தமும் செய்யாமல் மக்களைத் திருமுழுக்காட்டினர் என்பது உண்மையன்று. திருமுழுக்குப் பெற்றவர்கள் பொதுவாக வாசிக்க இயலாதவர்களாயிருந்தனர். எனினும் அவர்கள் ஆண்டவர் கற்பித்த ஜெபத்தையும், பற்றுறுதி அறிக்கையையும், பத்துக் கட்டளைகளின் கருத்தையும், திருமுழுக்கின்போது பயன்படுத்தப்பட்ட

சொற்களையும் மனப்பாடமாகக் கற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். அவர்களும் பல ஜெபங்களை மனப்பாடமாகக் கற்றனர். அவர்கள் எவ்வளவு பெரிய பகுதிகளை மனப்பாடம் செய்திருந்தனர் என்பது வியப்பை அளித்தது.

திருமுழுக்குப் பெறுவோர் போதுமான அளவு ஆயத்தம் செய்யப்படவில்லை என்று சத்தியநாதன் கண்டால் திருமுழுக்காட்டுவதை ஒத்திப் போட்டுள்ளார். திட நலமுடன் வளரும் திருச்சபைக்கான அடித்தளங்கள் சத்தியநாதனின் நாட்களில் உண்மையாகவே நாட்டப்பட்டன.

பெருந்திரளாக மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறுவதைக் கண்டு கிராமங்களிலிருந்த இந்து சமுதாயத் தலைவர்களும், பொதுப் பணி ஊழியர்களும் பொறாமையால் சமயமாற்றம் அடைந்தவர்கள் மீது பல பல பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். கிறிஸ்தவர்கள் நெஞ்சிரக்கமற்ற வகையில் துன்புறுத்தப் படுவதற்கும், அநீதியான முறையில் கொடுமை செய்யப்படுவதற்கும் ஏற்புடையவர்கள் என்று இந்துக்களால் கருப்பட்டனர். அவர்கள் தங்கள் புதிய சமயத்தைக் கைவிடும்படி வற்புறுத்தப்பட்டனர். அத்துடன் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார்களை அனுப்பினர்.

சத்தியநாதன் 11.4.1805-ல் அருள்திரு ஜே.சி. கோலாப்புக்கு எழுதிய கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடன் நடந்த நேர்காணல் பற்றி எழுதுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஏராளமான குற்றச் சாட்டுகளைச் சொன்னார். குற்றச்சாட்டுகளை சத்தியநாதன் மறுத்தார். நடுநிலையான விசாரணையே தங்களைக் குற்றமற்றவர்களாக மெய்ப்பிக்கும் என்று உறுதியாகக் கூறினார். அவர்கள் மீது சாட்டப்பட்ட தலையாய குற்றச்சாட்டுகளில் ஒன்று அவர்கள் அரசுக்கு எதிராக சதி செய்தவர்கள் என்பதாகும். ஆனால் அவை அனைத்தும் பொய்யானவை என்றும், துவேஷ, பகை, வெறுப்பு உணர்வுகளால் உந்தப்பட்ட மக்களால் அவர்களுக்கு எதிராக பரப்பப்பட்டன என்றும் விசாரணைகள் வெளிப்படுத்தின. 1803 மே 23-ல் இந்துக்களில் சிலர் முதலூர் ஆலயத்துக்கு தீ வைத்தனர். மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. பிறரின் ஆன்ம செல்வத்தைப்

போற்றவும், மானிடரின் முன்னேற்றத்துக்காக பாடுபடவும் அனைத்து சமயத்தினரும் செய்ய வேண்டிய அவசர புனிதப்பணி.

இந்தத் துன்ப காலங்களில் சத்தியநாதன் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளித்து வழிநடத்தினார். ஓரளவு அமைதி ஏற்பட்டபின் சபைகள் துரிதமாக வளர்ந்தன. நெல்லை மாவட்டத்திலிருந்த கிறிஸ்தவ சபைகள் பற்றிய தெளிவான நிலையைத் தருகின்றன. "நான் பள்ளிப்பத்தில் (எருசலேம்) இருபது நாட்களை செலவிட்டேன் திருமுழுக்குக் கொடுத்தேன். அங்கிருந்து வாழையடிக்குச் சென்றேன். அங்கிருந்த சில குழப்பங்களைத் தீர்த்து வைத்தேன். இருபத்தைந்து பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்தேன் ...." 1805-ல் சத்தியநாதன் தமது அருட்பணியின் 34 சபைகளின் பெயர்களை பட்டியலிட்டுத் தருகிறார். அது திருநெல்வேலி மாவட்டத்தில் 20 ஆண்டுகள் (1785-1805) அவர் ஆற்றிய அருட்பணியின் கனி. அது நெல்லை மாவட்டத்தில் தொடக்ககால திருச்சபையின் ஒரு வியத்தகு காட்சி. கிறிஸ்தவர்கள் பல இடங்களில் தங்கள் சொந்த ஆலயங்களைக் கட்டினர். பின்னர் பெரும்பாலான இடங்களிடில் சமுதாயத்திற்கு நல்ல தரமான கல்வியை வழங்க சிறிய தொடக்கப்பள்ளிகள் நிறுவப்பட்டன. சத்தியநாதனின் ஊழியக்காலத்தில் கல்விப் பணியில் வளர்ச்சி காணப்படவில்லை. மக்களின் கல்வித் தேவைகளுக்கு ஏற்ப சில பள்ளிகள் மட்டுமே இருந்தன. முன்னேற்றத்திற்கான பெரிய மூலதனமாக கல்வி இன்று இருப்பது போல அன்றும் தேவையாயிருந்தது. ஆனால் அதன் முக்கியத்துவம் அந்த ஆரம்ப நாட்களில் அதிகமாக உணரப்படவில்லை. சபை ஊழியர்கள் வளரும் திருச்சபைக்கு முதுகெலும்பாகவும், ஒழுக்கத்தை நிலை நாட்டுவதில் கண்டிப்பானவர்களாகவும் இருந்தனர். அந்நாட்களில் சபைகள் நற்செய்தி அறிவிப்பதில் தன்னார்வமுடையனவாக இருந்தன. கடவுளின் அருளையும் வியத்தகு செயல்களையும் பற்றி அருட்பணியாளர்களுக்கு சத்தியநாதன் அறிக்கைகள் அனுப்பிக் கொண்டிருந்தார். மெய்யாகவே அது திருநெல்வேலி திருச்சபை வரலாற்றில் திருத்தூதுவர் செயல்களின் காலமாகவே இருந்தது. சத்தியநாதன் திருநெல்வேலியில் ஊழியம் செய்த இறுதி இரண்டு ஆண்டுகளில் (1804, 1805) சத்தியநாதனுக்கும் அவருடைய

உதவியாளர்களுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. உள்ளூர் மக்களால் அவர் அன்னியராய் கருதப்பட்டார். அவருடன் இணைந்து செயலாற்றுவது கடினமாக இருப்பதை சத்தியநாதன் கண்டார். இக்கால கட்டத்தில் சத்தியநாதனுக்கும் கோலாப்புக்கும் இடையே இருந்த உறவுகூட கெட்டுவிடத் தொடங்கியது. ஆகையால் சத்தியநாதன் தஞ்சையிலிருந்த தன் மேலாளர்களிடம் தன்னை திருநெல்வேலிப் பணியினிற்று விடுவிக்க வேண்டினார். அவருடைய வேண்டுதல் 1805-ல் ஏற்கப்பட்டது. அவர் தஞ்சைக்கு திரும்பினார். 1815-ல் அவர் மரணமடையுமட்டும் ஓய்வு பெற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.

சத்தியநாதன் திருநெல்வேலி திருச்சபை வரலாற்றின் முன்னோடி. அது எவ்வாறெனில் அவர் ஒரு தும்பியாகத் திகழ்ந்தார். அவர் மூலமாக தென் திருநெல்வேலி மக்கள் கிறிஸ்துவின் இனிய பெயரையும் அன்பைச் சுவைக்கும் பேற்றினையும் பெற்றனர். திருச்சபை மிகப் பெரியதாக அளவிலும் உருவிலும் வளர்ந்தது. மெய்யாகவே அவர் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆன்மீகத் தந்தையானார். அதனுடைய அனைத்து அல்லல்கள் ஊடாகவும் திருச்சபை வளர்ந்து பெருகச் செய்தார். கிறிஸ்துவின் மந்தைக்குள் மக்களைக் கூட்டிச்சேர்க்கப்படுவதைக் காணும் மகிழ்ச்சியே அல்லாமல் வேறெந்த எண்ணமும் அவர் நினைவில் இருந்ததில்லை. இதுவே அவருடைய மிகச் சிறந்த, மேன்மையான ஊழியம். திருநெல்வேலி தொடக்கத் திருச்சபையின் முழுவளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அவர் ஒரு கண்காணிப்பு அருட்தொண்டராக இருந்து தன் கடமைகளை மிக நன்றாகவே நிறைவேறினார். அத்துடன் இந்தியர்கள் தலைமையேற்று நடத்தத் தகுதியுடையவர்கள் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டது.

ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும்
பலரை கல்வாரிக்குக் கொணர்ந்தவர்
விண்மீன்களைப் போலவும்
என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும்
ஒளிவீசித் திகழ்வர்.

■

3

முதலூர் சின்னமுத்து தாவீது சுந்தரானந்தன்

ஜே. மனுவேல்[1]

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பாளையங்கோட்டைக்கு வெளியே சில புராட்டஸ்டாண்டு சபைகள் மட்டுமே இருந்தன. கீட்டாரம்பட்டி, பூவாணி, பற்பநாதபுரம், மணப்பாடு ஆகியவைகளே அச்சபைகள். அச்சபை மக்கள் பரவர்கள், நெசவாளர், பள்ளர், வெள்ளாளர் போன்ற ஜாதியினர் ஆவார். தஞ்சாவூரைச் சார்ந்த சத்தியநாதனும் வேறு சில உபதேசியார்களும் இவர்களிடையே பணிசெய்தனர்.

சாணார் (இப்பொழுது நாடார்) இனத்தைச் சேர்ந்த சில ரோமன் கத்தோலிக்கர்களும் இருந்தனர். 1784ம் ஆண்டு கிளாரிந்தாவுக்குச் சொந்தமாயிருந்த தேரிவிளை என்ற சிற்றூரில் இரண்டு குடும்பத்தினருக்கு தஞ்சை ஞானப்பிரகாசம் உபதேசியார் ஞானஸ்நானம் கொடுத்தார். 1789-ல் கொற்கைக் கிணறு ஊரில் ஆறு சாணார்களும், சண்முகபுரம் ஊரில் ஒரு நாடார் இன மகனும் கிறிஸ்தவர்களாக மாறினர்.[1] நெல்லை மாவட்டத்தின் முக்கியமான இனமாகிய நாடார்கள் மத்தியில் இவர்களைத் தவிர வேறு கிறிஸ்தவர்கள் இல்லை.

ஆனால் 1800க்குப் பின்னர் சாணார் குல மக்கள் பெருமளவில் கிறிஸ்தவர்களாக மாறினர். இப்பேரளவு மனமாற்ற இயக்கம் தாவீது சுந்தரானந்தனுடன் ஆரம்பித்தது.

சுந்தரானந்தன் சாத்தான்குளத்திற்கும், முதலூருக்கும் இடையில் உள்ள காலன்குடி என்னும் சிற்றூரைச் சார்ந்தவர். இளம் பிராயத்தில் அவரது தந்தையும், தாயும் மரணமடைந்தனர். எனவே அவரும் அவரது சகோதரியும் விஜயராமபுரம் என்ற சிற்றூரில் வசித்து வந்த அவரது மாமா அத்தையினால் வளர்க்கப்பட்டனர். புத்திக் கூர்மையிக்க சுந்தரானந்தன், மருத்துவம், தத்துவம், ஜோதிடம் ஆகியவற்றில் மிக்க ஆர்வம் காட்டினார். அவரின் போக்கை

டாக்டர் ஜே. மனுவேல், வரலாற்று பேராசிரியர், தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.

விரும்பாத அவரது அத்தை அவர் மீது அதிருப்தி கொண்டார். ஒரு நாள் கொடுத்த வேலையைச் செய்யத் தவறியமைக்காக அவரது அத்தை அவரை தயிர் கடையும் மத்தால் அடித்துவிட்டார். இதனால் வருத்தமுற்ற சுந்தரானந்தன் வீட்டை விட்டு ஓடிவிட்டார். மதுரை, திண்டுக்கல் போன்ற வடமாநகரங்களுக்கு வியாபாரப் பயணம் மேற்கொண்டிருந்த வியாபாரிகளுடன் சுந்தாரனந்தன் சேர்ந்து கொண்டார். [2] 1793ம் ஆண்டு நடைபெற்ற இச்சம்பவத்தின்போது அவரது வயது பதினேழு ஆகும். [3]

தஞ்சாவூருக்கு வந்த சுந்தரானந்தன் ஒரு கடையில் வேலையாளாக அமர்ந்தார். ஒரு நாளில் தெருக்களில் நின்று பிரசங்கம் செய்து கொண்டிருந்த சுவார்ட்சு ஐயரின் உபதேசிமார்களின் செய்தியால் கவரப்பட்டார். அவர்கள் இவரைக் கோலாப் ஐயரிடம் அழைத்துச் சென்றனர். நற்செய்தியை நன்கு போதித்தபின், கோலாப் சுந்தரானந்தனுக்கு தாவீது சுந்தரானந்தன் என்று பெயரிட்டு கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக் கொண்டார்.

நாடார் குலத்தவர்களில் முதன் முதலில் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட புராட்டஸ்டெண்டு கிறிஸ்தவர் தாவீதே. [4] 1885 சி.எம்.எஸ். ரெக்கார்டின் அடிப்படையில் பால் அப்பாசாமி கீழ்க்காணும் கருத்தைக் குறிப்பிடுகிறார். 1784ம் ஆண்டில் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த தேரிவிளையின் இரண்டு குடும்பத்தினரே முதல் புராட்டஸ்டெண்டு கிறிஸ்தவர்கள் ஆவர்.[5] ஆனால் பேராசிரியர் டி.ஏ. கிறிஸ்துதாஸ் கூற்றின்படி கிளாரிந்தா உருவாக்கிய தேரிவிளை சபை அன்னாரின் மறைவிற்குப் பின்னர் பின்வாங்கிப் போயினர். ஆதலால் தாவீது சுந்தரானந்தனே நாடார்குல மக்கள் மத்தியில் தோன்றிய முதல் புராட்டஸ்டெண்டு கிறிஸ்தவர் ஆவார். [6]

1796ம் ஆண்டு சத்தியநாதன் திருநெல்வேலியில் தன் ஊழியத்திற்கு உதவியாக ஒரு உபதேசியாரை அனுப்பி வைக்கும்படி சுவார்ட்சு ஐயரை வேண்டினார். தாவீது திருநெல்வேலியைச் சேர்ந்தவராகையால் சுவார்ட்சு அவரை நெல்லைக்கு அனுப்பி வைத்தார். 1796ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தாவீது நெல்லை வந்தடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தொன்று ஆகும். நெல்லை வந்த தாவீது பாளையங்கோட்டையில்

கிளாரிந்தாவின் மேற்பார்வையில் நடைபெற்று வந்த பள்ளிக்கூடத்தில் ஒருவாரம் ஆசிரியர் பணி செய்து விட்டு[7] தான் வளர்ந்த ஊராகிய விஜயராமபுரம் சென்றார்.

மரணமடைந்துவிட்டார் என்று கருதப்பட்ட சுந்தரானந்தன் மீண்டும் வீடு திரும்பியது அன்னாரின் உறவினருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. தாவீதும் தன் காலத்தை வீணாக்காது கிறிஸ்துவின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசத்தையும், கிறிஸ்துவில் தான் கண்ட இன்பத்தையும் தன் உறவினர்களுடன் பகிர்ந்து கொண்டார். சில நாட்களுக்குப் பின்னர் தாவீது பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். அப்போது அவர் தன்னுடன் தனது சகோதரியின் மகனையும் அழைத்து வந்தார். பின்னாட்களில் ஜெனிக்கே தஞ்சாவூர் செல்கையில் அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

தாவீது, சத்தியநாதனுடன் 22 மார்ச் 1797ல் மீண்டும் விஜயராமபுரத்திற்கு வந்தார். தாவீதின் இனத்தார் அவர்களை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர். இரவும், பகலும், அம்மக்கள் தாவீது மற்றும் சத்தியநாதனுடைய பிரசங்கத்தை கேட்க விழைந்தனர். அதிகாலை 3 மணிக்குக் கூட அவர்கள் எழும்பி கர்த்தரின் செய்தியை ஆவலுடன் கேட்டனர். கடாட்சபுரம் என்ற கிராமத்தின் அருகில் உள்ள சண்முகபுரம் என்ற கிராமத்திலும், விஜயராமபுரத்திலும் பதினாறு நாட்கள் கிறிஸ்துவைப் பற்றிய ஊழியம் நடந்தேறியது. இதன் விளைவாக நான்கு குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். பதினெட்டு பேர்களும், நான்கு குடும்பத்தினரும் பதனீர் காலம் முடிந்த பின்னர் கிறிஸ்துவின் சபையில் சேருவதாக வாக்களித்தனர்.[8] விஜயராமபுரத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது[9] மக்கள் தங்கள் பிள்ளைளை ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பி வைத்தனர்.

விஜயராமபுரத்தில் கிறிஸ்துவின் சபையில் சேர்நத முதற்கனிகளுள் முக்கியமானவர் தாவீதின் மாமா ஆகும். அவ்வூரில் வாழந்துவந்த இந்துக்கள் மத்தியில் அவர் புகழ் பெற்றவர். ஜாதிக் காரியங்களிலும் சமயகாரியங்களிலும் தலைவராக செயல்பட்டவர். அவ்லூர் மக்கள் பின்பற்றிய சக்தி பூஜையை அவர் தலைமை ஏற்று நடத்தினார். சக்தி பூஜையைப் பழக்கமாகக் கொண்டிருந்தோர்

ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு முறைகள் இரவில் ஒன்றாகக் கூடி இறைவழிபாடு செய்வர். பின்னர் எல்லா மக்களும் ஒன்றாகக் கூடி ஒரே பாத்திரத்தில் பானம் பண்ணுவர். இன வேறுபாடின்றி ஒரே பாத்திரத்தில் உணவும் உண்பர்.

இத்தகைய பழக்கத்தைப் பின்பற்றிய தாவீதின் மாமா கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தது நாடார் குல மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவ்வினமக்கள் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வழி பிறந்தது. இதே விஜயராமபுரத்திலிருந்துதான் கிறிஸ்தவ சமயம் திருநெல்வேலி நாடார் இன மக்கள் மத்தியில் பரவியது.[10] அஸ்திபாரம் உண்மையாகவும் உறுதியாகவும் போடப்பட்டது.[11] தாவீதின் இனத்தவர்களில் நடைபெற்ற ஞானஸ்நானம் சண்முகபுரத்தில் வைத்து நடைபெற்றது என்று கால்டுவெல் எழுதுகிறார்.[12]

சண்முகபுரம் மற்றும் விஜயராமபுரத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மக்கள் இந்துக்களிடமிருந்து மிகுந்த எதிப்பைச் சந்திக்க வேண்டியதாயிற்று. அவமானம், நிந்தை, கேலிப் பேச்சுக்கள் பெருகின. விஜயராமபுரத்தில் இருந்த அவர்களின் சிறு ஆலயம் இருமுறைகள் தீக்கிரை ஆயிற்று. சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்த கிறிஸ்தவ மக்கள் எவ்வித எதிர்ப்பும் இன்றி சமாதானமாக வாழவேண்டும் என்று தாவீது விரும்பினார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தாவீதுக்கு உதவ வந்தனர் இராணுவக் கேப்டன் எவரெட் என்பார். இவர் திருநெல்வேலி மக்களிடையே ஊழியங்களுக்கு ஆதரவு அளித்து வந்தார். தாவீது அவரை அணுகிய போது அவர் மனமுவந்து ஆதரவு அளித்தார். அவர் அளித்த பணத்தைக் கொண்டு அடையல் எனற கிராமத்தின் அருகில் ஓர் இடத்தை தாவீது வாங்கினார். ஜெனிக்கேயின் பெயரில் ஆகஸ்ட் 1799ல் அந்நிலம் பதிவு செய்யப்பட்டது. தாவீது மிகுந்த உற்சாகத்துடன் செயல்பட்டார்.

இப்புதிய நிலத்தில் ஓர் ஜெப அறையைக் கட்டினார். கிணறு ஒன்றையும் தோண்டினார். கிறிஸ்தவர்கள் இப்புதிய இடத்தில் குடியேறுமாறு அழைப்புக் கொடுத்தார். விஜயராமபுரம், சண்முகபுரம் ஆகிய ஊர்களில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களில்

இருபத்தெட்டு பேர் வீடுகளைக் கட்டிக் குடியேறினர். இப்புதிய குடியிருப்பு முதலூர் என்று அழைக்கப்படலாயிற்று. முற்றிலும் கிறிஸ்தவர்கள் அடங்கிய முதல் கிராமம் இக்குடியிருப்பு ஆகும். ஆகவே அப்பெயர் வழங்கலாயிற்று. 1800ம் ஆண்டில் முதலூரின் மக்கட்தொகை 200 ஆகப் பெருகியது. தாவீது சுந்தரானந்தன் முதலூர் சபையின் உபதேசியராகப் பணிசெய்தார்.

தஞ்சையிலிருந்து நெல்லைக்கு வரும் அருட்பணியாளர்கள் தவறாது முதலூருக்கும் வந்து சென்றனர். 1800ம் ஆண்டு அருட்பணியாளர் கெரிக்கே முதலூருக்கு வருகை தந்தார். அச்சமயம் அவர் தாவீது உபதேசியாரையும், குடியேறிவர்களையும் முதலூர் ஆலயத்தில் சந்தித்து உரையாடினார். அந்நாட்களில் ஏற்பட்ட பஞ்சத்தின் விளைவாக சபை மக்களில் பலர் வேலை தேடி திருவாங்கூர் சென்றுவிட்ட படியால் அனைவரையும் சந்திக்க இயலவில்லை. சபைமக்கள் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டம் அடங்கிய நூல் ஒன்றை தாவீது வசம் கெரிக்கே அளித்தார்.

தாவீது வெட்டிய பெரிய கிணற்றில் அருந்திய அருமையான தண்ணீர் பற்றி கெரிக்கே தன் குறிப்புகளில் கூறுகிறார். மேலும் கெரிக்கே, முதலூரின் உபதேசியார் தாவீது இளைஞர் ஆயினும் புத்திசாலியான ஒரு மனிதர் என்று எழுதுகிறார். [13]

மீண்டும் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு நெருக்கடி தோன்றியது. ஆங்கிலேயர்களின் அனுதாபிகள் என்று அவர்கள் கருதப்பட்டதால் அவர்களை இந்துக்கள் வெறுத்தனர். அவர்களுக்கு விரோதமாக பல்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். இன்னல்களைத் தாங்க இயலாத கிறிஸ்தவ மக்கள் பல்வேறு கிராமங்களிலிருந்து முதலூரில் குடியேறினர்.

தாவீது தென் திருநெல்வேலி முழுவதும் சுற்றித் திரிந்து கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார். ஏராளமான மக்களை கிறிஸ்துவின் சபையில் சேர்க்க ஆயத்தம் செய்தார். ஏப்ரல் 1802ம் ஆண்டில் சத்தியநாதன் பலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். 253 நாடார் இனமக்களும் 66 பள்ளர் இன மக்களும் ஞானஸ்நானம் பெற்றனர் மே 1802ல் 21 நாடார் இனமக்கள் ஞானஸ்நானம் பெற்றனர். [14]

இக்காலகட்டத்தில் நாடார் இனமக்கள் மத்தியில் ஆயிரக்கணக்கானவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். மாபெரும் எழுப்புதல் தோன்றியது. தாவீது சுந்தரானந்தனின் அயராத உழைப்பு நாடார்கள் மத்தியில் பேரளவு ஞானஸ்நானத்திற்கு வழிவகுத்தது. ஏப்ரல் 1802க்கும் ஜூன் 1803க்குமிடையில் சத்தியநாதன் எழுபது கிராமங்களைச் சேர்ந்த 5382 நாடார் இனத்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்துவின் சபையில் சேர்த்தார்.[15] இவர்களில் 370 பேர் முதலூரைச் சேர்ந்தவர்கள். வரிசையாக நடைபெற்ற இத்தகைய ஞானஸ்நானம் ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியாகும் என்று கெரிக்கே எழுதுகிறார்.

இந்து சமயத்தவர்கள் கொடுத்த கெடுபிடிகள், நெருக்கடிகள் அநியாய வரிவிதிப்பு, கொடுமைகள், வேதனைகள் ஆகியவைகளின் மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இதுவரை கிறிஸ்தவ சமயத்திற்கு புறமுதுகு காட்டிய சாணார் இனமக்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கிறிஸ்தவர்களாக மாறியதன் காரணம் என்ன? வேளாளர் குலத்தைச் சார்ந்த தேவசகாயம், மதுரநாயகம், ஆபிரகாம், வேதமுத்து போன்ற உபதேசியார்கள் நாடார் இன மக்களிடம் நடந்து கொண்ட விதம் முக்கிய காரணமாயிருக்கலாம்.

விஜயராமபுரத்திற்கு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கூற வந்த தஞ்சை வேளாளர்குல உபதேசியார்கள், தாவீதின் மாமா வீட்டில் உணவருந்த மறுத்துவிட்டனர். தாவீதின் மாமா அளித்த அரிசியைக் கூட தொடாமல் இரவு முழுவதும் பட்டினியாய்க் கிடந்தனர். வேதமுத்து உபதேசியார் தஞ்சையிலிருந்தே அரிசியைக் கொண்டு வந்து கிணற்றடியில் அதனைச் சமைத்து உண்டனர். இதனால் அதிருப்தி அடைந்த தாவீதின் மாமா 1797ல் சத்தியநாதன் விஜயராமபுரத்திற்கு வந்தபோது இனவேறுபாடு காட்டும் உபதேசியார்களை கிறிஸ்துவின் ஊழியத்திற்கு அனுப்பவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இத்தகைய ஊழியக்காரர்களால் நாடார் இன மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது தடைபடும் என்றும் கூறினார்.[16] மேலும் சத்தியநாதனும் இவ்வாறு எழுதுகிறார். "நமது உபதேசியார்கள் நாடார் இன மக்களை வெறுப்புடன் நடத்தினர்;

அவர்கள் மத்தியில் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொண்டனர். இதன் விளைவாக சாணார் இன மக்கள் அவர்களை வெறுத்தனர்.*

இப்போது அவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் தாவீது இவர்களின் குலத்தைச் சார்ந்தவர். அவர்களைச் சரிசமமாக நடத்துகின்றார். ஆதலால் தாவீதின் சொல்லும், செயலும் பிரசங்கமும் அவர்களைக் கவர்ந்தன. தன் இன மக்கள் மீது தாவீது கொண்டிருந்த கரிசனை இடுக்கண் காலத்தில் அவர்கள் துன்பங்களைக் களைய அவர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சி, நாடார் இன மக்கள் பேரளவில் மதம் மாற உந்துதலாக அமைந்தது.

மீண்டும் துன்ப காலம் ஆரம்பித்தது. முதலூர் மற்றும் தென் திருநெல்வேலி மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயினர். காரணமின்றி கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். 22 மே 1803ல் முதலூர் ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டது. நெருக்கங்கள் மத்தியிலும் சாட்சி பகர்ந்து கிறிஸ்துவின் பெயரை மகிமைப்படுத்தினர். கிளாரிந்தா முதலூருக்கு வந்து கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்திச் சென்றார்.[17]

தொடர்ந்து பலர் கிறிஸ்துவண்டை சேர்ந்தனர். 1803ல் 279 பேர்களுக்கும் 1804ல் 184 பேர்களுக்கும் சத்தியநாதன் ஞானஸ்நானம் கொடுத்தார். இவர்கள் முதலூர் மற்றும் முதலூரின் பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஆகும். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே அவர்களுக்கு நேரிட்ட துன்பங்களும் அதிகமாயின. தாவீதால் அநீதியை பார்த்துக் கொண்டு இருக்க இயலவில்லை. தன் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும்; அவர்களை இந்துக்களின் கொடுமையினின்று பாதுகாக்க வேண்டும் என்று விரும்பிய தாவீது ஒரு தீவிரமான முடிவுக்கு வந்தார். பலாத்காரத்தின் மூலமே தடை செய்யமுடியும் என்பதுதான் கொள்கை. கிறிஸ்தவ இளைஞர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்தார். **தடிக்கம்புக்காரர்** என்பது இக்குழுவின் பெயர். எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்களோ அங்கெல்லாம் தாவீதின் தலைமையின் கீழ் தடிக்கம்புக்காரர் செல்வர். கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு அளித்துவிட்டுத் திரும்புவர்.[18] தாவீதின் இத்தகைய செயலால் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த

இந்துக்கள் பயந்தனர். தாவீதின் நடவடிக்கைகள் கிறிஸ்தவ அன்பை வெளிக்காட்டாதபடியால் அருட்பணியாளர்கள் அவரை வெறுக்க ஆரம்பித்தனர். ஆனால் பாளையங்கோட்டையில் வாழ்ந்த கிழக்கிந்திய வணிகர் சாயர் தாவீதிற்கு ஆதவு அளித்தார்.

சத்தியநாதன் தாவீதை வெறுக்கத் தொடங்கினார். அருட்பணியாளர் கெரிக்கேயிடம் தாவீதைப் பற்றி தவறாகக் கூறினார். சத்தியநாதனுக்கும் கோலாபுக்குமிடையே கருத்துவேறுபாடு நிலவியது. சத்தியநாதனைத் தொடர்ந்து அவருக்கும் பின்வந்த ஊழியக்காரர் ஞானப்பிரகாசம் தாவீது உபதேசியாரை வெறுத்தார். ஆயினும் சாயர் தாவீதுக்கு உற்ற நண்பனாய் விளங்கினார்.

சபையின் போதர்களிடையே ஏற்பட்ட பிரிவினை, கருத்து வேறுபாடுகள் சபை மக்கள் மத்தியிலும் பிரதிபலித்தன. சபையின் இருபிரிவுகள் தோன்றின. **தஞ்சாவூர்க் குழு, உள்ளூர்க் குழு** என்ற இரண்டு குழுக்கள் உருவாயின. தஞ்சாவூர் குழுவிற்குத் தலைவராக சத்தியநாதன் இயங்கினார். இக்குழு கோலாபிடம் சாயரின் செல்வாக்கைக் குறைக்க முயற்சித்தது. தாவீதால் வழிநடத்தப்பட்ட உள்ளூர் சாணார் குழு சாயரின் பெயரைப் பயன்படுத்தி செல்வாக்குப் பெற விழைந்தது.

கோலாபின் பொருளாதார உதவியாளராக பாளையங்கோட்டையில் சாயர் இயங்கியதால், சத்தியநாதன் சாயரை வெறுத்தார். தாவீதுக்கும் சத்தியநாதனுக்கும் இடையே நிலவிய பகை பெரிதாயிற்று. தாவீதிற்கு விரோதமாக சத்தியநாதனிடம் தோன்றிய பகையின் காரணம் பொறாமையே என்று சபையார் கருதினர்.

தாவீதின் முயற்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் சபையில் சேர்ந்தனர். தானும் தன் இனத்து உபதேசிமார்களும் சாதிக்கமுடியாததை தாவீது சாதித்தது சத்தியநாதனிடம் பொறாமையை ஏற்படுத்தியது. தாவீதின் துணிச்சல், மக்களிடம் அவர் காட்டிய பரிவு, நேயம் கிறிஸ்தவர்களின் உரிமைகளை நிலைநாட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சி தம் இன மக்களிடம் அவருக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியது என்று சபை மக்கள்

எண்ணினர்.[19] 1805ம் ஆண்டு சத்தியநாதன் தஞ்சாவூருக்குத் திரும்பி விட்டார். திருச்சபையின் தலைவர்கள் தாவீதின் செயல்களை விரும்பவில்லை. தாவீதின் செயல்கள் அப்போதைய சூழ்நிலையில் தேவையான ஒன்றுதான் ஆனால் தாவீதின் ஊழியம் அழைப்பிற்கு முரணானது என்று கருதினர் [20] 1806ம் ஆண்டு ரிங்கிள்தாபே முதலூர் உபதேசியார் தாவீது சுந்தரானந்தனை பதவிநீக்கம் செய்தார். [21]

இதற்கிடையில் முதலூரைச் சுற்றியிருந்த கிராமங்களில் வாழ்ந்த இந்துக்கள் தாவீதின் தடிக்கம்புக்காரரார் குழுவிற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினர். அவரைக் கொல்வதற்கும் துணிந்தனர். 1806ம் ஆண்டில் அவர் பெத்லகேம் என்ற ஊரில் இறந்து கிடந்தார். குட்டம் கிராமத்து மக்கள் தாவீதிற்கு உணவில் விஷம் கலந்து அளித்தனர். அதன் விளைவாக தாவீது மரணமடைந்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்பினர்.

சாணார் இனமக்களின் தலைவர் என்று ஐரோப்பாவில் அறியப்பட்டவர் சாணார் இனத்தவரின் முதல் புரட்டஸ்டாண்டு கிறிஸ்தவர், சாணார் இனத்தவர்களின் முதல் உபதேசியார், நெருக்கடி, இன்னல்களிலிருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தவர், அருட்பணியாளர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர். சாயர்புரம், நாசரேத், சமாரியா, பெத்லகேம், ஜெருசலேம், கடாட்சபுரம், அன்பின் நகரம் சுவிசேஷபுரம் போன்ற பல கிறிஸ்தவ குடியேற்றங்களின் முன்னோடி முதலூரின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிற தாவீது சுந்தரானந்தன் ஜாதிக் கொடுமை, பொறாமை, சமயசகிப்பின்மை ஆகிய கொடுமைகளுக்குப் பலியானார். பேரளவு மனமாற்ற இயக்கத்தின் தலைவர் என்று அவரை அழைப்பது சாலவும் பொருந்தும். ■

Reference:

1. F. J. Western, *The Early History of the Tinnevelly Church, Palayamkottai, pp. 88-89.*
2. R. Caldwell, *Records of the Early History of the Tinnevelly Mission* Higginbotham & Co., Madras, 1881, p. 56.
3. D.A. Christudoss, *Muthulam Erathasachi Thaveethu Sundaranandan* (First Martyr, David Sundaranandan), Palayamkottai, 1976, p.6

4. Paul Appasamy, *The Cenetenary History of the C.M.S. in Tinneelly*, Palamcottah, 1923, p.17.
5. Ibid.,
6. D.A. Christudoss, Op., cit., p.13
7. F.J. Western, Op., Cit. p. 39.
8. Paul Appasamy, Po., cit., p. 13
9. *Letter of Sathianathan to Schwartz* dt 10th April 1797 referred by R. Caldwell, Op/. cit., p.57 and F.J. Western, Op., cit., p.90)
10. R. Caldwell, Op., cit., p. 60.
11. Paul Appasamy, Op. cit., 9. 17
12. Ibid.,
13. F.J. Western, Op., cit., p. 96
14. Ibid., p. 98
15. D.A. Christudoss, Op., cit., p. 38
16. *Letter of Sathianathan to Schwartz* dt. 10th April 1797, Op., cit.,
17. Paul s. Kadamabavanam, *The Foundation of the Diocese of Tirunelveli*, Madras, 1960, p. 54
18. R. Caldwell, Op., cit.,
19. Ibid.,
20. *Letter of G.W. Gericke to S. Lushington*, dt December 15, 1802 referred by Caldwell, Op., cit., p. 100
21. D.A. Christudoss, Op., cit., P. 64

குறிப்பு :-

சந்தரானந்தன் காலத்தில் நாடார்கள் சாணார்கள் என்ற பெயரில் அழைக்கப் பெற்றனர். ப.ஆ.

4

நெல்லையின் வேதநாயக சாஸ்திரியார்

கிரேஸ் பரிமளா அப்பாசாமி

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது... மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க —— விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். எபி 11:1, 12:1.

கடந்த முன்னூறு நானூறு வருடங்களாக கிறிஸ்தவம் தமிழ் நாட்டில் குடிகொண்டு விட்டது. இந்தக் காலக்கட்டத்தில் இலக்கியத்திலும், பாட்டிலும், நாட்டியத்திலும் கிறிஸ்து உயர்த்தப்பட்டிருக்கின்றார். இந்த மூன்று துறைகளிலும் தலைசிறந்த விசுவாசிகளில் ஒருவர் வேதநாயக சாஸ்திரியார் (1774-1864). அநேக கவிகளையும், கீர்த்தனைகளையும் காப்பியங்களை இயற்றினார். அவைகளுக்கு இராகங்களை அமைத்து சிலவற்றை நடனத்திலும் பயன்படுத்தி அரங்கேற்றினார். புலவர் சத்தியசாட்சி கூறுகிறார்: 'சாஸ்திரியாரும், அவரது குழுவினரும் உலாவும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார்கள்' என்று. மேலும் பாடகர்கள் தங்கள் இசைக் கருவிகளை எடுத்துக் கொண்டு மக்களைப் பாட்டாலும் பிரசங்கத்தாலும் வெயிலிலும், மழையிலும், புயலிலும், பனியிலும், உணவு கிடைத்ததோ, கிடைக்கவில்லையோ தங்கள் ஊழியத்தைச் செய்தார்கள். அரசனையும் ஏழையையும் பாகுபாடின்றி அணுகி ஏகவைத் துதித்துப் பாடி வேதகாமத்தை எடுத்து விளக்கினார்கள்.

சாஸ்திரியாருடைய முன்னோர்.

வேதநாயகத்தின் தகப்பன் அருணாசலம் திருநெல்வேலியில் ஒரு சைவ வேளாளரின் குடும்பத்தில் தோன்றினார். அருணாசலம்

டாக்டர். கிரேஸ் பரிமளா அப்பாசாமி, சென்னை பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் வேதியியல் துறை முதல் நிலை ஆசிரியராக பணியாற்றுகிறார்.

ஐயம் பெருமாளின் மகள் புட்டாரத்தி அம்மனை குல தெய்வமாக வணங்கினார்கள். அருணாசலம் 1735 ஆம் ஆண்டு ஆனியில் பிறந்து இந்து மத வேதங்களிலும் தத்துவத்திலும் தேர்ச்சி பெற்றார். கடவுளுடைய பாதங்களை அடையும் படியாக அருணாசலம் பல பூஜைகளை செய்து, புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று, ஏழை மக்களுக்கும் தாராளமாக பணமும் பொருட்களும் வழங்கினார். இறுதியில் வேதபோதகம் என்ற ரோமன் கத்தோலிக்க குருவை காமநாயக்கன்பட்டியில் சந்தித்து, ஒரே மெய்யான தேவனைப் பற்றி அறிந்தார். அருணாசலம் முழுமனதோடு யேசு கிறிஸ்துவே அவரை இரட்சிக்க முடியுமென விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டார். 1760 ஆம் ஆண்டில் அவர் ஞானஸ்நானம் பெற்று தேவசகாயம் என்ற பெயரைப் பூண்டார். இதன் விளைவாக அவர் குலத்தார் அவரை விலக்கி விட்டனர். ஆனால் அவர் நெருங்கின இனத்தவரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். 1770ம் ஆண்டில் இன்னொரு கத்தோலிக்க விசுவாசியான சவரிராயன் செட்டியாரின் மகள் ஞானப்பூவை மணந்தார். செப்டம்பர் 7ம் தேதி 1774 ஆண்டில் ஒரு மகனைப் பெற்று தன்னை வழி நடத்தின குருவின் பெயரான வேதபோதகம் என்ற பெயரைச் சூட்டினார். பிற்காலத்தில் இது வேதநாயகம் என்று மாற்றப்பட்டது. இரண்டு பெண்குழந்தைகளும் பிறந்தன. அதற்குப்பிறகு அவர் மனைவி இறந்து விட்டார்கள்.

தேவசகாயத்தை ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து விலக்கி விட்டனர். புரட்டாஸ்தாந்து சந்நியாசியுடன் அவர் பழகினார். அதனால் அவர் பாளையங்கோட்டையில் கிளாரிந்தா அம்மையார் உருவாக்கின புராட்டடஸ்தாந்து சபையில் தன் குடும்பத்தினருடன் சேர்ந்தார். தேவசகாயத்தின் மூன்று பிள்ளைகளும் தங்கள் தாயாரின் பெற்றோரின் இல்லத்தில் செல்லமாக வளர்க்கப்பட்டனர். மூத்த மகன் வேதநாயகத்திற்குப் படிப்பில் அக்கரை இல்லை. தன் பாட்டனாரின் மாடுகளையும் ஆடுகளையும் மேய்த்து நேரத்தைக் கழித்தார். தாவீது அரசனைப் போல கடவுளுடைய படைப்பின் மாட்சியைக் கண்டு வியந்து துதிப்பாடல்களைப் பிற்காலத்தில் இயற்றினார். தேவசகாயம் ரோமான் கத்தோலிக்க சபையில் தோமினி ஆக உழைத்தார். பிறகு அவர் உபதேசியாராக உழைத்தார். இந்த ஊழியத்தில் சம்பளம் மிகக்

குறைந்ததாகவேயிருந்தாலும் இதைச் செய்யவே வாஞ்சித்தார். அவருடைய தமிழ் அறிவு மிக ஆழமானது. *கவிசேட ஞானம்* என்ற புத்தகத்தில் அவர் 60,000 கவிகளை இயற்றினதாகச் சொல்லப்படுகிறது. அவருக்குப் *பேரின்ப சீடன்* என்ற பெயர் சூட்டப்பட்டது.

வேதநாயகத்தின் இளமைக் காலம்

தேவசகாயம் மறுபடியும் மணம் புரிந்து, மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றார். அங்கே வேதநாயகத்துக்குக் கல்வி புகட்டப்பட்டது. வெள்ளரித் தோட்டத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் கிணற்றில் தவறி விழுந்து மூன்று முறை மூழ்கினாராம். கடவுளுடைய கிருபையால் மூன்றாம் தரம் மேலே வந்த போது கிணற்றின் ஓரத்தைப் பற்றிக் கொண்டு ஏறி வந்துவிட்டார். அவர் சிறுவனாயிருக்கிற போதே ஒரு பெரிய மரச் சிலுவையை வானத்தில் தரிசனமாகப் பார்த்தார். அதை அவர் கடைசி நாள் மட்டும் மறக்கவேயில்லை.

1785ம் ஆண்டில் தேவசகாயம் திருநெல்வேலியில் உபதேசியாக ஊழியம் செய்கையில் சுவார்ட்சு ஐயர் அங்கு வந்தார். ஆதலால் அவர் தஞ்சைக்குத் திரும்பினபோது வேதநாயகத்தைத் தன்னுடன் அழைத்துச் சென்றார் அவருடைய சீடனேயானாலும் மகனாகவே பாவித்தார். சுவார்ட்சு ஐயரின் பள்ளிக்கூடம் குருகுலம் போலவே நடத்தப்பட்டது. சீடர்கள் பல முக்கியமான பாடங்களை அவரிடம் கற்றுக் கொண்டனர். முதன் முறையாக ஐயர் வேதநாயகத்துக்கு படிக்கும்படி கொடுத்த நூல், *சங்கீத புத்தகமே*. பிற்காலத்தில் தமிழ்நாட்டின் சங்கீதக்காரனாக விளங்கினார் அன்றோ! அவருடைய உடன் மாணாக்கன் அரசகுமாரனாகிய சரபோஜி. சரபோஜி பத்து வயதும் வேதநாயகம் பன்னிரண்டு வயதுமாயிருந்ததினால் இளவரசன் அவரை அண்ணா என்றே அழைத்தார்.

வேதநாயகத்தின் குடும்பத்தினர் திருநெல்வேலியை விட்டு தஞ்சைக்கு வந்தனர். இது வேதநாயகத்தின் பயிற்சிக்குத் தடையாக இருக்குமென்று சுவார்ட்சையர் அவரை தரங்கம்பாடியிலுள்ள ஊர்த்தார் இறையியல் கல்லூரிக்கு அனுப்பினார். அங்கே

வேதநாயகத்துக்கு இறையியல் மட்டுமல்ல பரந்த அறிவும் அளிக்கப்பட்டது.

வேதநாயகத்தின் தொண்டு

வேதநாயகம் படிப்பை முடித்து விட்டு தஞ்சாவூருக்குத் திரும்பின போது சுவார்ட்சையர் சுற்று வட்டாரத்திலுள்ள கிராமப் பகுதிகளிலும் நகரங்களிலும் ஞானமுத்து என்ற உபதேசியாருடன் வேதநாயகத்தைப் பிரசங்கிக்கவும் கற்பிக்கவும் அனுப்பினார். பத்தொன்பது வயதிருக்கும் போது மிஷன் பள்ளியில் அவரை ஆசிரியராக அமர்த்தினார். அவர் இலக்கியமும் கணக்கும் கற்றுக் கொடுப்பதில் அதிகத் திறமை காட்டினார். சுவார்ட்சையர் இதைக் கண்டு அதிசயித்து அவரைத் தலைமை ஆசிரியராக்கினார் வெள்ளையரின் பிள்ளைகளுக்கும் குருமார்களின் பிள்ளைகளுக்கும் இவர் கற்றுக் கொடுத்தார். தந்தையின் தமிழ்ப் புலமையை வேதநாயகம் பெற்றிருந்தார். அவர் இருபத்தைந்து வயதுக்குள்ளே *பராபரன் மாலை; ஞான ஏற்றப் பாட்டு; ஞான வழி; ஆதி ஆனந்தம்; பரம நீதிப் புராணம்* என்ற நூல்களை இயற்றினார்.

1795ஆம் ஆண்டில் அவர் தாய் மாமனின் மகளாகிய வியாகம்மாளை மணந்து கொண்டார். அவர் ஓர் ஆண்டு முடிவதற்குள் இறந்து விட்டார். வேதநாயம் அங்கலாய்த்தார்.

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் 1798ம் ஆண்டில் சுவார்ட்ஸ் ஐயர் மரித்துவிட்டார். அது மட்டுமில்லாமல் அவர் தகப்பனார் தேவசகாயம் பிள்ளை இலங்கைக்குச் சென்றிருந்தபோது, மறுவருடமே இறந்து விட்டார். ஆழ்ந்த துயரத்துக்குள்ளாகி, 50 கவிகளை வேதநாயம் இயற்றினார்.

27 வயதாக இருக்கும்போது வேதநாயகம் தன்னிடம் படித்த மற்றொரு அத்தை மகளை மணந்து கொண்டார். அவர்கள் பெயர் மைக்கேல் முத்தம்மாள். அவர்களுக்கு மக்கட் பேறுயில்லாததால் தன் தங்கை மகளாகிய ஞானதீபத்தை எடுத்து வளர்த்தார்[18]

தன் குடும்பத்துடனும் சீடர்களுடனும் இலங்கைக்குச் சென்றிருந்த பொழுது தன்னுடைய ஆண்டவனும் இரட்சகனுமாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கதா காலட்சேபங்களை நடத்தினார்.

ஒரு சமயம் குடும்பத்தினரின் ஆடைகளைச் சலவை செய்வதற்காகக் கொண்டு போன வண்ணான் எல்லாத் துணிமணிகளையும் தொலைத்து விட்டான். ஆனால் வேதநாயகம் கடவுள் மீது நம்பிக்கை வைத்து, *நெஞ்சே நீ கலங்காதே* என்ற பாடலை இயற்றினார்.

நெஞ்சே நீ கலங்காதே - சீயோன் மலையின்
நட்களை மறவாதே - நான் என்ன செய்வேனென்று
வினைமேல் வினை வந்தாலும் - பெண் சாதி பிள்ளை
மனையொடு கொள்ளை போனாலும்
உயிரை இழந்து விழ்ந்தாலும் - நான் என் செய்வேனென்று
நெஞ்சே நீ கலங்காதே

- ஞான பதக்கீர்த்தனைகள் 286

இந்தக் கீர்த்தனை தென்னிந்தியத் திருச்சபையில் பயன்படுத்தப்படும் கீர்த்தனைப் புத்தகத்திலும் இருக்கின்றது. சாஸ்திரியார் பாடியதைக் கேட்ட வழிப்போக்கர் ஒருவர் உள்ளே வரலாமா என்று அனுமதி பெற்றுக் கொண்டு வந்தார். அவர் ஒரு இந்து வணிகர் இராமசாமி பிள்ளை என்ற பெயருடையவர். அவர் இந்தப் பாடலைக் கேட்டு மனதுருகி 400 ரூபாயை (அக் காலத்தில் அது பெரிய தொகையாகக் கருதப்பட்டது) சாஸ்திரியாரிடம் கொடுத்து புது உடைகளை வாங்கச் சொல்லிச் சென்றனர். வேறு ஏதாகிலும் தேவைப்பட்டால் தன்னிடம் வரச் சொல்லிச் சென்று விட்டார்.

1808ம் ஆண்டிற்குள் அதாவது வேதநாயகத்திற்கு 34 வயதாவற்குள் 52 கவிதைகளை இயற்றினார். 1814ம் ஆண்டிற்குள் 80 நூற்கள் சிறிதும் பெரிதுமாக எழுதியிருந்தார். அவருக்கு அப்போது 40 வயது மட்டுமே. இஸ்லாமை மறுப்பதற்கு *மேசியா மகத்துவம்* என்ற நூலையும் மற்றொரு புத்தகத்தையும் இயற்றினார்.

1813ஆம் ஆண்டில் ஞானசிகாமணி என்று ஒரு மகன் அவருக்குப் பிறந்தான். ஞான தீபத்தைப் போலவே அவரும் பயிற்சி பெற்று, இறையியல் கல்லூரியில் தமிழ் கற்றுக் கொடுத்தார். தன் நன்பருடன் ஊர் ஊராகச் சென்று பிரசங்கித்தலில் உதவி புரிந்தார்.

வேதநாயக சாஸ்திரியார் 55 வயதாயிருக்கும் போது அவருடைய இரண்டாம் மனைவியும் இறந்து போனார்கள். அதற்குப்

பிறகு தஞ்சை சாந்தப்பிள்ளையின் குமாரத்தி வரோதையம்மாளை மணம் புரிந்தார். அவர்களும் சாஸ்திரியாரிடம் கல்வி பயின்றிருந்தார். சாஸ்திரியாரின் வயோதிக காலத்தில் அவருக்கு அதிக உதவியாக இருந்தார்கள். நோவா ஞானாதிக்கம் எலியா தேவசிகாமணி, மனோன்மணி என்று மூன்று பிள்ளைகள் அவர்களுக்குப் பிறந்தார்கள். சாஸ்திரியாருக்குப் பிறகு நோவா ஞானாதிக்கம் சாஸ்திரியாரின் பட்டம் பெற்று ஊழியம் செய்தார். எலியாவும் காலட்சேபங்களில் தகப்பனாருக்கு உதவி செய்தார். அவ்வப்பொழுது அவரும் பிரசிங்கிப்பார். அவர் வேதத்திலுள்ள *அப்போஸ்தலருடைய நடபடிகள்* என்ற புத்தகத்தை மனப்பாடமாக ஒப்புவித்தார்.

அருளம்மாள் என்ற பெண்ணை நோவா மணந்து ஆறு பெண்களும் இறுதியில் வேதானந்தம் என்ற ஆண்மகனும் பிறந்தனர். மனோன்மணி அவர்களுடைய தகப்பனார் நடத்தும் ஆராதனைகளிர் மிக அழகாகப் பாடி வேத பாடத்தையும் உரக்கப் படிப்பார்கள். மாசில்லாமணி பிள்ளை என்றவரை 24 வயதாயிருக்கும் போது மணந்து வேத சாஸ்திரம் என்ற மகளைப் பெற்றார். 1861ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் அவர்கள் ஆங்கிலமும் தமிழும் பயில்கையில் இறந்து விட்டார்கள.

ஒரு முறை வேதநாயகத்தை திருவாங்கூர் மன்னனின் அவைக்கு அழைத்தார்கள். அதுபோல மைசூர் மகாராஜாவின் அவைக்கும் அவர் அழைக்கப்பபட்டிருக்கும் போது சுவிசேசத்தைப் பாட்டின் மூலமாக இயம்பினார். அதனால் அவருக்குச் **சுவிசேடக்** கவிராயர் என்ற பட்டஞ் சூட்டப்பட்டது.

1826ஆம் ஆண்டில் பேராயர் ஹீபர் தஞ்சைக்கு வந்திருக்கும் போது13ல் மக்கள் தூய பேதுருவின் ஆலயத்தில் அவரைக் கேட்கக் குழுமியிருந்தார்கள். பேராயர் 1814ஆம் ஆண்டு தொடங்கி 1816ஆம் ஆண்டு வரை சாஸ்திரியார் இயற்றிய ***ஜெபமாலையின்*** ஒரு பிரதியை வாங்கி, சாஸ்திரியார் இயற்றின மற்றொரு கீர்த்தனை புத்தகத்தையும் லண்டன் மாநகரிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்திற்கு அனுப்பினார்.

சாஸ்திரியாரின் இலக்கியப் படைப்புகள்

சாஸ்திரியாரின் படைப்புகளை இரண்டு பரந்த பிரிவுகளாகப் பிரிக்கலாம். "அவை கீர்த்தனைகளும் சிற்றிலக்கியங்களுமாகும். முதல் பகுதியின் உதாரணமாக ஜெபமாலையும் ஞானக் கீர்த்தனைகளும் இரண்டாவது பகுதியில் பெத்லேம் குறவஞ்சியும் ஆரணாதிந்தமும் உள்ளன.

துதிப்பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக **பாடித்துதி மனமே** என்ற கீர்த்தனையைப் பார்க்கலாம்.

பல்லவி

பாடித் துதி மனமே - பரனைக் கொண்
டாடித் துதி தினமே

அனுபல்லவி

நீடித்த காலமதாக பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்து

சரணங்கள்

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்றை
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாக குமரனைக் கொண்டு
விளக்கினை அன்பை விழைந்து தியானித்து

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையிற் கிடந்த புறச் சாதியாம் எமை
மந்தையில் சேர்த்து பாராபரன் தம்முடை
மைந்தர்களாகின சந்தோஷத்துக்காகப்

3. எத்தனை தீர்க்கர் அநேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள் இரத்தச் சாட்சிகள்
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்கு
இத்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனைப் பாடி

இந்தப் பாடலை 1849 ஆம் ஆண்டில் ஒரு கொடிய நோயிலிருந்து சுகம் பெற்ற பொழுது எழுதினார். 1848 ஆம் ஆண்டின் கிறிஸ்மஸ் தினத்தன்று. அவருக்கு ஆலயத்திற்குச் செல்ல

முடியவில்லை. வழக்கம் போல் பஜனைகளைப் பாடி ஆராதனையில் பங்கு பெற முடியவில்லை. ஆனால் 1849 புத்தாண்டு விழாவில் தூய பேதுருவின் ஆலயத்தில் அவர் பாடகரின் வரிசை முன் சென்று ஆராதனையில் பங்கு பெற்றார்.

தமது 25வது வயதில் *பெத்லகேம் குறவஞ்சி* என்ற காப்பியத்தை உருவாக்கினார். தேவமோகினி (திருச்சபை) இயேசு கிறிஸ்துவாகிய பெத்தலகேம் நாதர் மேல் காதல் கொண்டாள். எடுத்துக்காட்டாக சிங்கன் (குறவன்) தன் மனைவியாகிய சிங்கியோடு (குறத்தியை) சம்பாஷித்தலைப் பார்க்கலாம்.

இத்தனை காலமா யென்னிடம் கோளம
லெங்கே நீ சென்றனை சிங்கி மா?
பெத்தலகேம் நகர் சீயோன் குமாரிக்குப்
பத்திக் குறிசொலச் சிங்கா.

காலுக்குக் கீழே கடிக்குஞ் சர்ப்பத்தைக்
கடித்துதைத் திட்டதேன் சிங்கி? யாம்
பால விஷத்தை யகற்றின இயேசுவி
னற்புதத்தாலடா சிங்கா

நாக்குத் துடிக்குது நல்வாயிதழுக்குட்
பார்க்கப் பொறுக்கலை சிங்கி? யுன்றன்
வாய்க்கு ருசிப்பது நற்கருணையல்லோ
வாங்கு கனிந்தடா சிங்கா.

வேதத்திலுள்ள கருத்தையெடுத்து
வினோதமாய்ச் சொன்னதால சிங்கி? சதுர்ப்
போதக சாஸ்திரி யென்ற பெயர் பெற்ற
வேதநாயகன் காண் சிங்கா.

பூரிப்பாய்ப் பாடுதல் பெத்தலே நாதர்க்கும்
பூரிப் பளிக்குமோ சிங்கி? மிக்க
வாரிப் பலன்றரு வாரிட்புவிக்கருள
வாரியென்றென்றுமே சிங்கா.

சாஸ்திரியார் 1809ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்திருந்தபோது இதற்கேற்ப இசையமைத்து அரங்கேற்றினார். இந்நாள்வரை அது பல கிறிஸ்தவ நாட்டிய நிகழ்ச்சிகளில் பயன்பட்டுவருகிறது. முனைவர் திருமதி. அஞ்சலா ரிச்சர்டு முனைவர் சந்திரன் தேவநேசனுடைய உதவியுடன் சென்னை மகளிர் கிறிஸ்தவ கல்லூரியில் 1979ம் ஆண்டு ***பெத்தலகேம் குறவஞ்சி*** நடைபெற்றது. டீ.வி. யிலும் காட்டப்பட்டது.

1827ம் ஆண்டில் சங்கை எஸ்.பி. ஆப்ரோ, சாஸ்திரியாரை திருச்சபையிலிருந்து விலக்கி விட்டார். இந்தச் சம்பவம் உயர்சாதி மக்களை ஆலயத்தில் எங்கே உட்கார வைப்பது என்பது பற்றி எழும்பின பிரச்சினையின் விளைவு இதனால் துயரமடைந்த சாஸ்திரியார் ***ஆருந்துணை இல்லையே*** என்ற பாடலையும் பாடினார்.

அரசவைப் புலவர் சாஸ்திரியார்

சரபோஜி அரசன் தமது நண்பனும் உடன் மாணவனுமான சாஸ்திரியாருக்கு நேர்ந்த துன்பத்தை அறிந்த போது அவரைத் தன் அவைப் புலவராக நியமித்தார். அதற்குத் தக்க ஊதியம் பல்லக்கு மாராட்டா அவை ஆடை முதலியவற்றை வழங்கினார்.

*பெத்தலேம் குறவஞ்சி*யுடன் அவர் படைப்புகள் **ஞானத்தச்சன் நாடகம்** (நோவாவின் பேழையைப் பற்றி) ***ஞான அந்தாதி*** (சாலோமோனின் கீதத்ததை ஒட்டி) **ஆரணாதித்தம்** (தேவ அன்பைப் பற்றி) **ஞான நொண்டி** நாடகம் (1800) ***சென்னைப் பட்டினப் பிரவேசம், சாஸ்திரியார் கும்மி*** (சாஸ்திரத்தைப் கடைபிடிப்பதின் தீய விளைவுகள்) ***பேரின்பக் கடல் தியானப் புலம்பல்***. கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றி **ஞான உலா** முதலியன சிறந்தவையாகும்.

1832 ஆம் ஆண்டில் சரபோஜி அரசன் இறந்து விட்டார். அவருக்கும் பின் வந்த அரசன் சாஸ்திரியாரைக் கவனிக்கவில்லை. ஆதலால் சாஸ்திரியாருக்குக் கிடைத்த ஊதியம் இல்லாமல் போய்விட்டது.

ஒரு நாள் காலையில் வரோதையம்மாள் சாஸ்திரியாரிடம் சென்று காலைச் சிற்றூண்டிக்கு ஒன்றுமேயில்லை என்று அறிவிக்க தன்னிடம் இருந்த பணத்தை அம்மையாரிடம் கொடுத்தார். அவள் காப்பி போட ஒரு வெல்லக் கட்டியை வாங்கி அதை முறித்த போது அதில் ஒரு வெள்ளிக் காசு இருந்தது. அதனைக் கொண்டுடு அந்த நாளுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்க முடிந்தது. அவர்கள் இல்லத்தில் ஏறக்குறைய முப்பது பேர் இருந்தார்கள். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும் என்ற வேத வாக்கியத்திற்கேற்ப சாஸ்திரியார் விசுவாச வாழ்க்கை நடத்தினார்.

பிற தெய்வங்களைப் புகழ்ந்து கவி பாட சரபோஜி மன்னன் விடுத்த சவாலுக்குப் பதில் கூறின சாஸ்திரியார்.

பராபரன் அல்லாத பாட்டறியேன் எம்
பாராபரனை அன்றிப் பாட்டுரையான்
பாராபரன் தன்னையே கொண்டாடி நிதம்
பாட்டுப் பாடுவேன் ஞானப் பெண்ணே

- ஞான சாஸ்திரக் கும்மி 433,434

அரசனுடைய வெகுளிக்கு அஞ்சிய சாஸ்திரியார் தன் விசுவாசத்திலிருந்து சற்றேனும் விலகவில்லை. இதைக் கண்டுணர்ந்த அரசன் சாஸ்திரியார் மீது மரியாதை கொண்டு சாஸ்திரியாரை தன் தேவனாகிய இயேசு கிறிஸ்துவையே பாடித் துதிக்கவும் அவைப் புலவராக இருக்கவும் உத்தரவிட்டார்.

சாஸ்திரியாரின் மறைவு

ஈவாஞ்சலின் ஹாலில் 1864 ஜனவரி 24ம் தேதி மற்ற எல்லா நாட்களைப் போலவே துவங்கிற்று. குடும்ப வழிபாட்டுடன் ஆராதனையின் முடிவில் சாஸ்திரியார் தமது முழு குடும்பத்தையும் எப்போதும் போல ஆசீர்வதித்தார்.

களைப்பாய் இருக்கிறதென்று கட்டிலில் படுத்த சாஸ்திரியாருக்கு மேல் மூச்சு வாங்கத் தொடங்கியது. அவர் உடல் நிலை மோசமாகிவிட்டதென்று கேட்ட தஞ்சைச் சபையார் விரைந்து வரத் தொடங்கினார்கள். அன்று முப்புரிநூல் வாக்கியம் **பிதாவே**

உமது கைகளின் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மாலை நான்கு மணி மகன் ஞானாதிக்கம் எவரையும் அழவிடாமல் தடுத்து, உரத்த குரலில் "என் மூச்சொடுங்கும் அந்தக் கடைசிக்கட்டத்திலும் நீர் எனக்காக இறந்த ரூபத்தைக் காண்பியும். எம்மை அணைத்துக் காத்துத் தாங்கிவிடும் என் இயேசுவே" என்ற மன்றாட்டைச் சொல்லி என்னை மீட்ட மீட்பராய் என்னை ஆதரித்தன்பாய் அங்கே என்னைச் சேர்த்துக் கொள்வீராக என்ற மன்றாட்டைச் சொல்லி முடிந்ததும் சாஸ்திரியார். பெரு மகிழ்ச்சியுடன் பேரின்ப நாடு சென்றார்.

லூத்தரன் எஸ். பி.ஜி. ஆலயங்களில் துக்கமணி அடிக்கப்பட்டது. வீடுகளிலும் வீதிகளிலும் மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டன. குடும்பத்தினரும் மற்றவரும் மாறி மாறி ஓயாது பாடிக் கொண்டிருந்தனர். சாஸ்திரியார் பாடல்களையும் பலரும் உருக்கமாக இரவு முழுவதும் பாடினார்கள். வேத பாடங்களும் ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டன.

சாஸ்திரியாருக்கு அங்கி சால்வை குல்லாய் முதலியவற்றை அணிவித்து அவர் இயற்றிய மூன்று பாட்டுக்களை மகன் ஞானாதிக்கம் ஒரு தாளில் எழுதி அதைச் சாஸ்திரியாரின்கையில் வைத்தார்.

சாஸ்திரியார்களுடைய உடல், உள்ளும் புறமும் அலங்கரிக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டது. மேள தாள கின்னர இசைக் கருவிகள் முழங்க சாஸ்திரியாரின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. வீதியெல்லாம் தோரணங்கள். வழி நெடுக மக்கள கூடை கூடையாகத் தூவின மலர்கள்! குருமார் நேலர் (Naylor) ஐயரும் ஆபர்ட் ஐயரும் நல்லடக்கத்திற்குரிய வழிபாட்டை நடத்த சாஸ்திரியாரின் உடலும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் மண்ணிற்குள் மறைந்தடங்கியது.

சாஸ்திரியர் வழி வந்தவர்கள்

ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலியிட அழைத்துச் சென்ற போது கர்த்தர் கூறிய ஆசீர்வாதம் வேதநாயக சாஸ்திரியாருடைய வாழ்விலும் தன் பிள்ளைகளின் வாழ்க்கையிலும் நிறைவேறிற்று. நான் உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்

பண்ணுவேன். ஆதி 22:17

சாஸ்திரியாரின் மூத்த புதல்வன் ஞானசிகாமணி சாஸ்திரியார் (1813 - 1877). அதிக வரம் பெற்றவர். அவர் தகப்பனின் தொண்டு போலவே விசுவாச ஊழியம் செய்தார். நற்செய்தியை (சுவிசேடத்தை) இசையின் மூலமாகவும் கவிகளை இயற்றுவதின் மூலமாகவும் பரவச் செய்தார்.

ஒரு முறை திருவாங்கூர் அரசனைச் சந்தித்த பிறகு தன் பாடகர் குழுவுடன் வீடு திரும்பும் சமயம் ஒரு புலி வழிமறித்து கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் மாட்டுவண்டியில் பிரயாணஞ் செய்தனர். வண்டிக்காரன் பதறிவிட்டான். ஞான சிகாமணி சாஸ்திரியார் எல்லாரையும் வண்டியிலிருந்து இறங்கி விடச் சொன்னார். இவ்வளவு தூரம் வந்துவிட்டோம். ஜெபம் செய்து கடவுளுடைய உதவியை நாடுவோம் என்றார். எல்லோரும் கண்களை மூடி மன்றாடினார். புலி அசையாமல் நின்றது. திடீரென்று ஒரு துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. புலி செத்து விழுந்தது. அங்கு வேட்டையாட வந்த இரு வெள்ளையர்கள் அதைச் சுட்டுக் கொன்றனர்.

மற்றொரு முறை நாசரேத்துக்குச் சென்றபோது சங்கை காமரர் என்றவருடைய வீட்டின் கதவைத் தட்டினார்கள். வேலைக்காரன் வந்து அவர்கள் யாரென்று வினவினான். சாஸ்திரியார் சுவிசேடத்தை பிரசங்கிக்க தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறோம் என்று பதிலளித்தார். வேலைக்காரன் அப்படியே சங்கை காமரருக்குத் தெரிவித்தபோது அவர் பாடல்களானாலும் சரி பிரசங்கமானாலும் சரி கல்லறைத் தோட்டத்திலிருந்து பிரசிங்கச் சொல்லு என்று சொல்லி அனுப்பினார். சாஸ்திரியாரும் அப்படியே செய்வோம் வாருங்கள் என்று சொல்லி விட்டு பிரகாசபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே மருதநாயகம் முக்கந்தர் என்பவர் சாஸ்திரியாரையும் அவர் குழுவினரையும் உபசரித்தார். அங்கே அவர்கள் பிரசிங்கித்துக் கொண்டிருந்த போது சங்கை காமரர் இறந்து விட்டார் என்ற செய்தி வந்தது. ஞானசிகாமணி சாஸ்திரியார் திரும்பவும் நாசரேத்துக்குச் சென்று சங்கை காமரருடைய அடக்க ஆராதனையில் கல்லறைத் தோட்டத்தில் பாடினார்.

மற்றொரு சமயம் ஹைதராபாத் நிஜாமின் அவைக்குச் சென்றபோது, நிஜாம் அவரிடம் பல கேள்விகளைக் கேட்டார். பரலோகமும் நரகமும் உண்டா, என் தகப்பன் மரித்த போது பரலோகத்திற்குச் சென்றாரா நரகலோகத்திற்குச் சென்றாரா? என்று வினவினான். சாஸ்திரியாரின் குழு அதிக அச்சத்துடன் விடைக்குக் காத்திருந்தது. சாஸ்திரியாரோ பதட்டமில்லாமல் உங்கள் தகப்பனார் தமது குரு சென்ற விடத்தில் இருப்பார். எங்கே முகம்மது நபி இருக்கின்றாரோ அங்கே தான் அவரும் இருப்பார். என்று பதில் அளித்தார். நிஜாமிற்கு ஒரே மகிழ்ச்சி.

மற்றொரு தடவை நிஜாம், உங்களுக்கு பரிசுத்த வேதம் இருக்கிறதா, என்று கேட்டார் சாஸ்திரியார் ஆம் என்று பதில் கூற எந்த மூலபாஷையில் அது எழுதப்பட்டது என்று கேட்டார். சாஸ்திரியார் பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டன என்றார். அப்போது நிஜாம் இரண்டு உதாரணங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒன்றும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் ஒன்றும் மூல பாஷையில் கூறக் கட்டளையிட்டார். சாஸ்திரியார் அமைதியாக, நிஜாமே உம்மைப் போல் அக்காலத்தில் ஒரு மன்னர் இருந்தார். அவர் பெயர் பெல்ஷாத்சார் அவர் மதுபானப் பிரியர் பல தேவர்களை வணங்கினர். ஒரு விருந்தில் பரிசுத்த தேவாலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கோப்பைகளில் மது அருந்தி அவற்றை அவமதித்தான். அந்த விருந்தினர்கள் பூரித்துக் கொண்டிருக்கையில் ***மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்*** அவற்றின் பொருள் தராசில் நீ நிறுக்கப்பட்டு குறைவுளோனாய்க் காணப்படுகிறாய் என்று ஒரு கை சுவரில் எழுதியது என்றார். எல்லோரும் அமைதியுற்றனர்.

மனுக்குலத்தை பாவங்களிலிருந்து இரட்சிக்க தேவனுடைய ஒரே பேறானன குமாரன் உலகத்திற்கு வந்தார். அவர் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப் பட்டார். மிகுந்த வேதனையுடன் ***ஏலி ஏலி லாமா சபக்தானி*** என்றார். என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று பொருள் பெறும் சொற்களுடன் உரக்கக்கத்தினார். நிஜாம் இந்த வார்த்தைகளை மூல பாஷையில் கேட்ட போது பெரு மகிழ்ச்சி யடைந்தார். எபிரேய

கிரேக்க மொழிகளில் இந்த வார்த்தைகள் இல்லாவிடிலும் சாஸ்திரியாரைத் தலை சிறந்த கவிஞனாகப் பாராட்டினார். இந்த விதமாக கர்த்தர் சாஸ்திரியார்க்கு கடினமான ஒரு நிலையிலும் ஞானத்தைத் தந்தார்.

ஞானசிகாமணி சாஸ்திரியாரின் குடும்பம்

ஞானசிகாமணி சாஸ்திரியாருக்கு அநேக பிள்ளைகள் பெண்களும் ஆண்களும் இருந்தனர். அவருடைய பெண்குழந்தைகளில் ஒருவர் நவமணி அம்மாள் மரிய வியாகப் பிள்ளையை (இவர் சுவிஷேசபுரம் விசாரணைப்பிள்ளை சவரிமுத்துப்பிள்ளையின் மூன்றாவது மனைவியின் மகன் சவரிராயபிள்ளையின் மைத்துனரின் பேரன்) மணந்து மேகலூரில் வசித்து வந்தார்கள். அவர்களுடைய புதல்வன் வேதநாயக சாஸ்திரியாருக்கு பாகவதர் என்ற இன்னொருபட்டமும் கொடுக்கப்பட்டது. அவர் 1885ம் ஆண்டில் பிறந்து 1936ம் ஆண்டில் மரித்தார். அவர் ஞானாகாரம் என்ற தன் மாமன் வேதமணி சாஸ்திரியார் மகளை மணந்தார் அவர் நெஞ்சுருகும் பாடல் ஒன்றைப் பாடினார். இந்தக் கீர்த்தனை இயேசு இரு சீடருடன் எம்மாவூருக்கு தன் உயிர்த்தெழுதலின் பிறகு நடந்து சென்ற விதம் பற்றியது.

வாருமையா போதகரே
வந்தெம்மிடம் தங்கியிரும்
சேருமைய பந்தியினில்
சிறியவராம் எங்களிடம்

ஒளி மங்கி இருளாச்சே
உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம்
காதலனே கருணை செய்யும்

அவருடைய மகன் ஜெயசீலன் பாகவதர் இரண்டாம் வேதநாயக சாஸ்திரியார் 1914ம் ஆண்டில் தோன்றி 1968ம் ஆண்டு வரை இருந்தார். சுந்தரி அம்மாளை மணந்து துரை பாகவதர் மூன்றாம் வேதநாயக சாஸ்திரியாரை 1936ல் பெற்றார். அவர் 1946ல் சாஸ்திரியார் பட்டம் பெற்றார். அவர் நம் நாட்டிலும் வெளி

நாடுகளிலும் பிரசிங்கித்து வருகிறார். முக்கியமாக தமிழ் வழிவரும் சபைகளில் பேசுகிறார். அவருடைய புதல்வனான கிளெமண்ட் வேதநாயகமும் புதல்வி திருமதி சாராள் மார்டினும் சாஸ்திரியர்களாகப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மூவரும் காலட்சேபங்கள் நடத்துவதைத் தவிர பல ஒலி நாடாக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

தயாமணி மனாசே (சீனிவாசன்) (1907 - 1990) ஞானசிகாமணி சாஸ்திரியார் பேரப்பிள்ளை; இளம் வயதிலேயே தன்னை இயேசு நாதருக்கு ஒப்புக் கொடுத்து நார்த்விக் பள்ளிக் கூடத்திலும், சென்னை மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பயின்று தேவ ஊழியக்காரியாக வாழ்ந்து வந்தார். சங்கை ஜே.டி. மனாசே அவர்களைக் கல்லூரியில் படிக்கும் போதே மணந்து கொண்டு பத்து பிள்ளைகளையும் பெற்றார். கோயமுத்தூர் பேராலயத்தைச் சேர்ந்த பிரளொ மெமோரியல் ஆலயத்திலும் ஆத்தூரிலும் 16 வருடகாலமாக சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தினார்கள். ஆத்தூர் சபையிலிருந்த பல பெண்களுக்கு அவர்கள் மெய்யான கிறிஸ்தவ நண்பராக விளங்கினார். ஆத்தூரிலிருந்த குறவர்களுக்கென்று நிறுவப்பட்ட விடுதியிலேயிருந்த 200 பிள்ளைகளுக்கு அவர்கள் தாயாக விளங்கினார்கள். அவர்களுடைய சொந்தப் பிள்ளைகளும் குறப் பிள்ளைகளோடே வளர்ந்தார்கள்.

ஒரு முறை ஒரு வெவ்ளளைக்காரர் இவருடைய பிள்ளையைப் பார்த்து 'நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன்' என்று வினவ அவன் பெருமையாக "நான் ஒரு குறவன்" என்று பதிலளித்தான். சற்றும் ஜாதி வேற்றுமை அவர்களுக்கு கிடையாது. விடுதியிலிருந்த பிள்ளைகளுக்காக தன் கணவனுடன் பல தியாகச் செயல்களில் ஈடுபட்டார்கள. ஒரு தடவை விடுதியிலிருந்த பெண்ணைக் காப்பாற்றுகையில் தன் கணவனுடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்த போது கடவுள் ஆச்சரியமாக அவரை விடுவித்தார். அவருக்குச் சேதம் செய்ய எண்ணின மனிதனைச் சிறைக் கூடத்தில் சென்று பார்த்த போது அவன் அவருடைய நண்பனாக மாறினான்.

தயாமணி மனாசே வீட்டிலும், ஆலயத்திலும் விடுதியிலும் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டாலும் கர்த்தரைத் துதித்து தமிழில் பல பாடல்களை இயற்றினார்கள். சிறந்த எழுத்தாளராகயிருந்ததால்

நாடகங்களையும் அவர்கள் எழுதி குறவர் சிறுவர்களுக்கு நடிக்கக் கற்றுக் கொடுத்தார்.

சாஸ்திரியாரின் பிறந்த நாள் இருநூறாண்டு விழா நடக்குஞ் சமயத்தில் திருமதி. மனாசே, சாஸ்திரியாரின் வரலாற்றை தூய தமிழில் ***வேதநாயக வேத சாஸ்திரி*** என்ற நூலை எழுதி வெளியிட்டார்கள். ஜெபிக்கிற பெண்ணாகயிருந்து கிறிஸ்துவுக்கே வாழ்ந்து அவரை நம்பிக் கொண்டே உயிர் நீத்தார்கள்.

அவர்களுடைய பிள்ளைகளில் மிகச் சிறந்த அறிவாளியும் சாஸ்திரியாரின் நூற்களைப் பிரசித்தம் செய்தவர்களாகவும் திருமதி. அஞ்சலா ரிச்சர்டு விளங்கினார்கள். சாஸ்திரியாரின் வாழ்க்கையையும் அவருடைய நூற்களையும் பற்றி ஆய்வு செய்தார்கள். புதிய ஏற்பாட்டை இக்காலத் தூய தமிழில் மொழி பெயர்த்தார்கள். சென்னை மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியில் அவர்கள் பேராசிரியராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்கள். நற்செய்தி கலைக் கூடத்தை நிறுவினார்கள். துணை முதல்வராகவும் பதிவாளராகவும் கல்லூரியில் பணியாற்றினார்கள்.

சாஸ்திரியாரின படைப்புகளுக்கு இசையும் நடனமும் அமைத்து ***பெத்தலேம் குறவஞ்சி ஆரணாதித்தமும்*** மற்றும் கிராமிய நடனங்களையும் சாஸ்திரிய நடனங்களையும் நடத்திக் காட்டினார்.

1982ம் ஆண்டில் நெஞ்சில் புற்று நோயுற்ற போது அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அச்சமயம் பழங்காலத்தில் வாழ்ந்த ஏசேக்கியா அவர்களைப் போல தன் உயிருக்கு 15 ஆண்டுகள் கூட்டிக் கொடுக்கும்படி கடவுளிடம் மன்றாடினார். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் கடவுளின் அற்புத சுகத்தைப் பெற்றதற்காக சாட்சி பகர்ந்து துதித்தார்கள்

திருமதி. கேத்லின் நிக்காய்ஸ் (Kaltaleen Nichious) சாந்வின் நிக்கோலஸ் அம்ஸ்டர்டாமில் நடத்திய அகில உலக கிறிஸ்தவ தொடர்பு சாதனங்கள் மாநாட்டில் 1985ம் ஆண்டில் கலந்து கொண்டார்கள். அஞ்சலா ரிச்சர்டு தன் தம்பி தங்கையின் பிள்ளைகளாகி சஜனி சுதன் சிஷ்யா திவ்யா கிறிஸ்துதாஸின் பரத நாட்டிய அரங்கேற்றங்களை 1990 லும் 1992லும் நடத்தினார்கள்.

இலங்கைத் தலைநகரான கொழும்புவில் நவம்பர் 1995ல் நடந்த கிறிஸ்தவ கலைஞர் மாநாட்டில் பங்கு பெற்ற பின் திருமதி. அஞ்சலா ரிச்சர்டு கிறிஸ்தவ நாட்டிய மையத்தைத் தொடங்கினார்கள். இந்த மையம் திருமதி. டோச் சீமாட்டி கல்லூரியில் மதுரையில் 1994ல் ஆண்டில் நிறுவப்பட்டது.

திருமதி. அஞ்சலா ரிச்சர்டு செப்டம்பர் 30, 1999 இல் இறந்து விட்ட போதிலும் அவர்கள் தங்கைகளும் மைத்துனர்களும் இந்த மையத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். *அற்புதத்திலும் அற்புதம்* என்ற ஒலி நாடாவை வெளியிட்டிருக்கிறார்கள்.

மனாசே தம்பதியாரின் குமாரனாகிய திரு டி. எஸ் சின்னத்துரை (Y.M.C.A.வில்) பல ஆண்டுகள் பணியாற்றி பொது செயலாளராகவும் லண்டன் மாநாகரத்திலுள்ள இந்திய மாணவர்களின் விடுதியின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றனார். அவர்கள் *பல பிரார்தனைகளை ஒன்று சேர்த்துக் காணிக்கைகள்* என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார்கள்.

வேத நாயக சாஸ்திரியாரின் மகள் - ஞான தீபம் அம்மாள்

முதல் இரண்டு மனைவிகளுக்கும் பிள்ளைகள் இல்லாததால் வேதநாயக சாஸ்திரியார் தன் தங்கையின் மகளாகிய, ஞானதீபம் அம்மாளை எடுத்து வளர்த்தார். அவர்கள் வேதத்தகை நன்றாகக் கற்று அறிந்தவர்கள். சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். பெண்களுக்கு சாதாரணமாக சாஸ்திரியார் என்ற பட்டம் அளிக்கப்படாது. ஆயினும் அவர்கள் அறிவாளியாக இருந்ததால் இந்தப் பட்டம் பெற்றிருந்தார்கள்.

ஒரு முறை தூத்துக்குடியில் பிரசிங்கித்து வருகையில் பல சபைகளின் உறுப்பினர் வந்துகேட்டார்கள். அவர்களின் சிலர் உரோமன் கத்ததோலிக்கர். "இந்த பதிதரின் கூட்டங்களுக்குத் தன் சபை உறுப்பினர் கலந்து கொள்கிறார்களா. ஒரு பெண் போதனையை ஏன் கேட்கிறீர்கள். ஆண்கள் அத்தகைய கூட்டத்திற்குச் செல்லக்கூடாது முதலில் நான் அங்கு சென்று அந்தப் பெண்மணியைக் கேட்கிறேன். பிறகு அங்கு செல்லலாமா வேண்டாமா என்று சொல்கிறேன். ஒரு பெண்ணின்

சொற்பொழிவைக் கேட்பது இழிவு" என்றார் ஒரு கத்தோலிக்க சாமியார். இந்த நகைப்புகிடமான வார்த்தை ஞான தீப அம்மாளின் காதில் விழுந்தது. அந்த நாளில் நடந்த மாலைப் பிரசங்கத்திலும் மிகப் பெரிய கூட்டம் கூடியிருந்த போது அவர்கள் இதை எடுத்துச் சொல்லி ஒரு பெண் பேசுவதைக் கேட்பது இழிவாயிருந்தால் ஒரு பெண்ணைக் கும்பிடுவது பெரிய இழிவு அல்லவா? என்றார்கள்.

மற்றொரு முறை அவர்களின் கணவர் அதிக நோய்வாய்ப்பட்டு அம்மையார் உடனே வீடு திரும்புமாறு செய்தி வந்தது. அவர்களை விருந்தோம்பினவர்கள் அவர்களுக்கு எப்படி இந்தச் செய்தியைத் தெரிவிப்பது என்று கவலைப்பட்டிருக்கும் போது அந்தத் தந்தியை வாங்கிப் படித்துவிட்டு புடவை முந்தானையில் மடித்து வைத்து அந்த ஆராதனைக்கும் பிறகு தான் வீடு திரும்பினார்கள். மக்கள் அவர்களுடைய அமைதியையும் கடவுள் பேரில் வைத்த அசைக்கக்கூடாத விசுவாசத்தையும் கண்டு வியந்தார்கள்.

நோவா ஞானதிக்கத்தின் சந்ததியர்

நோவா சாஸ்திரியாருக்கு ஆறு பெண்கள் பிறந்த பிறகே ஒரு ஆண்மகன் வேதானந்தம் பிறந்தார். இந்தப் பெண்களில் ஒருவர் ஞானாதிக்கம் அம்மாள் அவர்கள். தன் தகப்பனார் தம்பியும் பிரசிங்கித்து கதா காலட்சேபங்கள் நடத்தும் போது அவர்களுக்கு உதவி புரிவார். அவர்களுக்கு எப்படி திருமணமானது என்பது ருசிகரமானது.

திருநெல்வேலியிலிருந்து இரு சகோதரர்கள் ஆபிரகாம் பிள்ளையும் முத்து நாயகம் என்ற அப்பாவு பிள்ளையும். மதுரைக்கு அருகிலுள்ள கம்பம் பள்ளத்தாக்கிற்கு வேலை தேடி வந்தார்கள். கேரளாவில் பீர்மேடு வண்டிப்பெரியார் என்ற இடங்களில் உள்ள காப்பித் தோட்டங்களில் மேனேஜராகவும், கணக்கராகவும் வேலை கிடைத்தது. அப்பாவு பிள்ளை மேலை நாட்டினரின் தேவைகளுக்கு ஏற்ப ஒரு பலசரக்கு கடையைத் துவக்கினார். நீண்ட காலமாக ஆபிரகாம் பிள்ளைக்கு மக்கட்பேறு இல்லை. அச்சமயம் சாஸ்திரியாருக்கு திரளான சந்ததியிருந்தது என்ற தகவல் அவர்களுக்கு எட்டிற்று. நோவா சாஸ்திரியாரும் அவர் குழுவும் பிரசிங்கிப்பதற்காக வந்தனர். அவர்கள் ஞான சாஸ்திரமாலை

அப்பாவு பிள்ளைக்கு மனைவியாகக் கொடுக்க ஒத்துக் கொண்டார்கள். ஆனால் ஒரே நிபந்தனை. அப்பாவு பிள்ளை கத்தோலிக்கத்தை விட்டு புராட்டஸ்தாந்தியத்துக்கு மாற வேண்டும் என்பதே. அப்பாவு பிள்ளை புராட்டாஸ்தாந்தராக மாறின போதுதான் திருமணம் நடந்தது.

நோவா ஞானதிக்கம் சாஸ்திரியார் (1886 - 1902) வரை சாஸ்திரியாராகப் பணியாற்றின பிறகு வேதானந்தம் சாஸ்திரியார் (1902 - 1930) பணிபுரிந்தார். அவருக்கு இரு குமாரர்கள் பிறந்தார்கள். சேம் வேதநாயகம், வி.எஸ். ஞானாதிக்கம் என்று பெயர். சேம் சாஸ்திரியாரின் மகன் சைமன் தேவசிகாமணி 1985 லிருந்து 1991 வரையுமே சாஸ்திரியாராகத் திகழ்ந்தார். பலத்த மாரடைப்பில் மரணமுற்றார்.

இத்தகைய அதிர்ச்சிகள் நேர்ந்தாலும் சாஸ்திரியார் குடும்பத்தினர் அசைக்க முடியாத விசுவாசமுடையவர்களாக விளங்கினர். நான்கு பிள்ளைகளை சிறு வயதிலே இழக்கக் கொடுத்த சேம் சாஸ்திரியார் எப்போதும் கடவுளைத் துதிப்பார். தன் மகன் (கிறிஸ்டி) இறந்த பொழுது வேத சந்திரோதயம் அம்மாள் (சேம் சாஸ்திரியாரின் தமக்கை) சாஸ்திரியாருடன் அந்த இறுதி ஊர்வலத்தில் கல்லறையை அடையும் வரைப் பாடிக் கொண்டே சென்றார்.

சேம் சாஸ்திரியார் 68 வருடங்களாகப் பணி புரிந்து கடந்த ஜூன் 8ம் தேதி (1998) மரணமடைந்த போது சைமன் சாஸ்திரியாரின் மகனாகிய நோவாவின் பட்டாபிசேகம் நடந்தது.

எலியா தேவசிகாமணியின் சந்ததியார்

எலியா தேவசிகாமணி சாஸ்திரியாருக்கு மூன்று குமாரர் இருந்தனர். அவர்கள் மறைதிரு வேதநாயகம், வேதபோதகம், ஞானேந்திரம் என்பவர்கள். ஞானேனந்திரம், சாஸ்திரியார் எழுதி வைத்திருந்த ஓலைச் சுவடிகளைக் காப்பாற்றி வந்தார். அநேக ஓலைச் சுவடிகள் ஐக்கிய இறையியல் கல்லூரி (470) பெங்களூரில் பாதுகாப்பில் வைத்திருந்தார். அவருடைய மக்களில் வின்சென்ட் ஆகாய விமானப் படையில் சேர்ந்தார். அவர் சரோஜினி சுவார்ட்ஸ்

என்ற அப்பாவு பிள்ளையின் மகனாகிய ஏ. என் சுவார்சின் மகளை மணந்தார்.

மற்றொரு மகன் எர்பர்ட் தேவசகாயம் தஞ்சை வேதநாயக சாஸ்திரியின் பேரவையின் செயலாளராக உழைத்தார். சாஸ்திரியாரின் இரண்டாவது நூற்றாண்டு விழாவை நடத்திய பொறுப்பு அவரையே சாரும். மாரடைப்பால் மரணமடைந்தார். தற்சமயம் திரு. ராபர்ட் குருசாமி பேரவையின் செயலாளராக இருக்கிறார். பேரவை சார்பாக ஒலி நாடாக்களும் வெளியிடுகிறார்கள். **ஞான நொண்டி** நாடகத்திற்கு முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே உரை எழுதினார். இவரும் சாஸ்திரியாரின் நூல்களைப் பற்றி ஆய்வு நடத்தி பேரவையின் உறுப்பினராகவும் இருக்கிறார்.

வின்சென்டின் மகனாகிய யூதா ஒரு ஜெர்மானிய பொறியியல் கம்பெனியின் துணைப் பொது நிர்வாகியாகப் பணிபுரிகிறார். அவர் மகன் சாமுவேல் என்ற ஞானசிகாமணி சாஸ்திரியார் வழி வந்தவரை மணந்து கொண்டதினால் சாஸ்திரியார் மூன்று குமாரின் சந்ததியாருடன் தொடர்பு ஏற்பட்டது.

வேத சந்திரோதயத்துக்கும் அப்பாவு பிள்ளையின் மகனாகிய பி.ஏ. சாமுவேலுக்கும் மணமானது. அவர்களுடைய மூத்த குமாரத்தி பெஸ்ஸி திரு. ஏ.எஸ். ஜாண்சன் என்ற தஞ்சை டாக்டர். அருளானந்தம் பிள்ளையின் மகளைக் கலியாணம் செய்தார். அவர்களுடைய பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் மருத்துவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் எல்லோரும் அரசு அமெரிக்காவில் குடியேறி இருக்கின்றனர்.

முடிவுரை

வேதநாயகம் சாஸ்திரியார் சபையின் மீதும் சமுதாயத்தின் மீதும் ஏற்படுத்திய தாக்கம் குறித்து எழுதுகையில் முனைவர். சந்திரன் தேவநேசன் இவ்வாறு எழுதுகிறார்.

"வேதநாயகம் கலைநயம் மிக்க உலகறிந்த கவிஞர் வெளிப்படையான குணமுடைய மனிதர். ஆனால் பெத்லகேம் நாதரின் மேல் அவர் கொண்ட ஆழ்ந்த பற்று அவரைக் கடவுளின்

பக்தனாக்கியது. கிறிஸ்தவர்களான நாம் நமது மக்களுடனும் கலாச்சாரத்துடனும் ஒன்றித்துவிடத் தேவையான உற்சாகமூட்டும் உந்து சக்தியாக வேதநாயகம் சாஸ்திரியார் திகழ்ந்தார். ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளவும் புரிந்து கொள்ளவும் கிறிஸ்துவில் அவரது உபதேசங்களும், தமிழ் இலக்கியம் மற்றும் கலாச்சாரத்துடன் பிணைந்து ஒருமைப்பாட்டுக்கு அடிகோலுவதைப் பாராட்டவும் சாஸ்திரியார் நமக்கு உதவுகிறார்". ■

5

வேதமாணிக்கத்தின் சந்ததியார்

பெட்போர்டு சாலமன்

மாணிக்கம் - வேத மாணிக்கம்

என் முன்னோர்களைப் பற்றிய ஒரு சரித்திரபூர்வமான கண்ணோட்டம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமித்தையும் தருவதாக அமைந்துள்ளது. 18ம் நூற்றாண்டின் மத்தியிலும் 19ம் நூற்றாண்டின் துவக்கத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சி என்ற இடத்தில் வாழ்ந்த மாணிக்கம் என்ற இந்து சாணானின் ஆறாவது தலைமுறையில் தோன்றியவன் நான். மாணிக்கம் வீரமும் பலமும் கொண்டு ஒரு தீரனாக விளங்கினார். அப்பகுதி மக்கள் அவரை மரியாதைக்குரிய ஒரு தலைவனாகக் கருதினர்.

மாணிக்கம் கி.பி 1796ம் ஆண்டு இயேசுவைத் தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டார். 1778ம் ஆண்டிலிருந்து பலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர் என்று குறிப்புகள் கூறுகின்றன. இந்தப் பகுதியைச் சார்ந்த கிளாரிந்தா என்ற பிராமண விதவைப் பெண் தான் முதல் கிறிஸ்தவர். இவளுக்குத் திருமுழுக்குக் கொடுக்க லூத்தரன் ஜெர்மன் சபையைச் சேர்ந்த சுவார்ட்ஸ் ஐயர் தஞ்சையிலிருந்து பாளையங்கோட்டை வந்தார். ரோமன் கத்தோலிக்க மிஷனிலிருந்தும் இந்து சமயத்தலிருந்தும் பலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதால் சபை வளர்ந்தது. மாணிக்கம் அவர் குடும்பத்தினருடனும் வேறு சிலருடனும் திருமுழுக்குப் பெற்றார். மாணிக்கத்துக்கு வேதமாணிக்கம் என்ற வேதப்பெயர் சூட்டப்பட்டது.

தென்னிந்தியாவில் வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற அஞ்சா நெஞ்சம் படைத்த வலிமைமிக்க ஒரு குறுநில மன்னர் வாழ்ந்த

திரு. பெட்போர்டு சாலமன் ஓய்வு பெற்ற பேராசிரியர் தூய யோவான் கல்லூரி பாளையங்கோட்டை.

1. கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி மிஷனெரி ஆரம்ப சரிதை. ப. 6

2. சானல் - சாலமன் செய்தி மடல் 1985 ப.1

காலம். அவன் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனியை அடியோடு வெறுத்தான். கிறிஸ்தவராக மதம் மாறுவதையும் விரும்பவில்லை. கிறிஸ்தவ மக்களுக்கு இன்னல் விளைத்தான். எனவே வேத மாணிக்கத்தின் எதிரியானான்.

அவன் அந்நியர் ஆதிக்கத்துக்கு முடிவு கொண்டுவர எண்ணி, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட ஒரு கோட்டையைக் கட்டினான். ஒரு ஈ, கொசு கூட நுழைய முடியாத அளவுக்கு அந்தக் கோட்டை அரணானது, பலமானது எனப் பெருமை பாராட்டினான். வேதமாணிக்கம் அதை ஒரு சவாலாக ஏற்று அது ஊடுருவத்தக்கது என்று நிரூபிக்க எண்ணினார். ஒரு நாள் கதிரவன் மறையும் நேரம் அவர் இரகசியமாக கோட்டைக்குள் சென்று, ஒரு பெரிய மரத்தில் கிளைகளுக்குள் மறைந்திருந்தார். மறுநாள் அதிகாலை, யாரும் அறியாமல் கீழே இறங்கி மாட்டுத் தொழுவிற்குச் சென்று கறவைப் பசு ஒன்றை அவிழ்த்து காவலர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் போது, கோட்டை வாயில் கதவைத் திறந்து வெளியே வந்து விட்டார். பின் சத்தமாகக் கொம்பு ஊதி, சுற்றியிருந்த மக்களுக்கு தான் அவிழ்த்து வந்த பசுவைப் பெருமையோடு காட்டினார். எல்லோரும் அவர் வீரத்தைக் கண்டு வியந்து அவரைப் பாராட்டினர்.

அவர் வலிமையும், பலமும் தைரியமும் மிக்கவராக இருந்தும் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து எளிமையான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தினார். சர்வ வல்ல கடவுள் தன்னை மேன்மைப்படுத்தி பின் சந்ததியாருக்கு ஒரு ஆசீர்வாதமாக வைப்பார் என்று உறுதியாக நம்பினார். அன்னாரது வாழ்க்கை, பின்னால் கிறிஸ்தவ மத்ததைத் தழுவிய பலருக்கும் ஒரு தீபமாக அமைந்தது.

வேத மாணிக்கத்தின் மகன், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரர்

வேத மாணிக்கத்தின் மகன் சாமுவேல் நாடான் 19ம் நூற்றாண்டு தொடங்குவதற்கு சற்று முன் பிறந்தார். அவர் எளிமை, ஞானம், அறிவு, இறைபக்தி இவற்றை அணிகலன்களாகக் கொண்டவர். உண்மையான ஜீவனுள்ள தேவனிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழப் பயிற்றுவிக்கப்பட்டார். தன் தந்தையைப்

போன்று வலிமையும் துணிச்சலும் கொண்டவராக இராவிட்டாலும் மக்களின் நன் மதிப்பையும் மரியாதையும் பெற்றுப் பலரை கிறிஸ்துவண்டை நடத்தினார்.

19ம் நூற்றாண்டின் மத்தியில் சாமுவேல் நாடானின் மகன் மோசே நாடான் பிறந்தார். அவர் ஒரு மெய்க்கிறிஸ்தவர். பழைய ஏற்பாட்டின் மோசே என்ற எபிரேயனைப் போலே, தேவ நடத்துதல் பெற்று, மக்களை அருகில் உள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்வது மட்டுமின்றி திருச்சபையின் அனைத்துக் காரியங்களிலும் முக்கிய பங்கு பெற்றார். பின் அருகில் உள்ள இடையன்குடி என்ற ஊரில் குடியேறினார். அவரது இறைபக்தியும் இறை நெறிக்கேற்ப வாழ்ந்த வாழ்க்கையும் அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவை ஏற்றக் கொள்ளக் காரணமாயிருந்தது. தமது இராஜ்ய விருத்திக்காக இறைவன் அவரைப் பயன்படுத்தினார்.

மோசே நாடானின் மகன் சாமுவேல் நாடான் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தார். கண்டிப்பு மிகுந்த கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தார். இறைவனின் கட்டளைகள் விதிமுறைகள் வழக்கங்கள் இவற்றை அறிந்து செயலாற்றும் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க, அவர் தகப்பனார் முயற்சி செய்தார். மகனின் ஆன்மீக வாழ்க்கைக்கு உற்சாக மூட்டக் கூடிய **கிரமாள்** என்ற பக்தியுள்ள பெண்ணை அவருக்குத் திருமணம் செய்வித்தார். அவர்கள் இருவரும் இறைவன்பால் நம்பிக்கை கொண்டு பணிவோடும் பயத்தோடும் அவருக்குச் சேவை புரிந்தனர். அவர் 19ம் நூற்றாண்டின் இறுதிக்கும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துக்கும் இடையில் திருச்சிராப்பள்ளி சென்று, கிறிஸ்தவ சமயத்தின் உண்மையைப் பரப்ப சுயநலமின்றி உழைத்தார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள ஒரு கிராமத்தில் சிறு கோவில் கட்டி அப்பகுதிமக்கள் மத்தியில் இறை ஆட்சி பரவ பெரிதும் உதவினார்.

இடையன் குடி சகோதரர்.

இடையன்குடியில் சாமுவேல் நாடான் கிரமாள் என்ற தம்பதியினருக்கு சாமுவேல் கோயில்பிள்ளை சாலமோன் (1877-1933) சாமுவேல் எசுதாசன் (1881-1930) என்ற இரு

ஆண்மக்கள் பிறந்தனர். அவர்கள் இருவரும் திருச்சிராப்பள்ளியில் கல்வி பயின்று அனுமதிபெற்ற மருத்துவர்களாக பணியாற்றினர். மூத்தமகன் பர்மாவுக்கும் இளையமகன் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தின் மூணாறு என்ற மலைப்பகுதிக்கும் பணி புரியச் சென்றனர். டாக்டர். சா. கோயில் பிள்ளை ஏசுதாசன் ஆனி என்று அழைக்கப்பட்ட அன்னம்மாளை மணந்தார். அன்னம்மாள் நாசரேத்தைச் சேர்ந்த சுவாமியடியான், பாலம்மாள் எனும் என் தாத்தா பாட்டியின் நான்காவது மகள். ஆங்கிலேய அரசாங்கத்தால் மருத்துவமனைகளில் பணி புரிய அழைப்புப் பெற்றமையால் அவர்கள் பர்மாவுக்குச் சென்றனர். அங்கு சில மாவட்ட மருத்துவமனைகளில் பணியாற்றி 1922ம் ஆண்டு அரசாங்க வேலையை விட்டு விட்டு தெற்கு பர்மாவிலுள்ள இயற்கை வனப்பு மிகுந்த மலைச்சரிவில் அமைந்த தட்டன் (Thaton) என்ற நகரில் குடியேறினர். அங்கு மூன்று வீடுகள் வாங்கி அவற்றை புதுப்பித்தனர். மாடுகளும், எருதுகளும் வைக்கோல் குவியலும் அருகில் இருந்த வீட்டிற்கு பெத்லகேம் முன்னணை என்றும் இன்னொன்று மியோசிட்பார்மசி (Myochit pharmacy)என்றும் மூன்றாவது நோவாவின் பேழை போன்ற அமைப்புக் கொண்டதால் பேழை என்றும் பெயரிட்டனர்.

என் தகப்பனாரின் சொந்த மருத்துவப்பணி வளர்ந்தது. அப்பகுதி மக்கள் அம் மருத்துவமனையை நாடி வந்தனர். எல்லா சாதி மக்களும் பலவகை நோய்களுக்கும் சிகிச்சை பெற அங்கு சென்றனர். சாந்தமும் நிதானமும் கொண்ட என் தாயார் எல்லாரிடம் குறிப்பாகப் பெண் நோயாளிகளிடமும் மிக்க பாசத்துடன் பழகி அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மருத்துவரின் மனைவி என்ற முறையில் நற்பணி ஆற்றினார்.

எங்கள் பெற்றோருக்கு எட்டுப் பிள்ளைகள். ஏழு பையன்களும் ஒரு பெண்ணும். எங்கள் தாயாருக்கு எவ்வளவு பிரயாசம் இருந்திருக்கும் என்று கூறத் தேவையில்லை.பொறுமையுடனும் விவேகத்துடனும் எங்களை இறைபக்தியில் வளர்த்தனர். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட

விருப்புகளும் வேறுப்புகளும் இருந்தமையால் எங்களை வளர்ப்பது எளிமையான காரியம் அன்று. கண்டிப்புடன் அன்பு செலுத்தி எங்களை வளர்த்தார்கள். கிறிஸ்தவ நிறுவனங்களில் கல்வி பயிலும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. என் மூத்த சகோதரர்கள் பரி. பாட்ரிக் உயர்நிலைப்பள்ளியிலேயே தங்கிப் படித்தனர். என் சகோதரி மாட்டாலெயின் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், நானும் என் இளைய சகோதரனும் தட்டன் அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷன் பள்ளியிலும் கல்வி பயின்றோம்.

எட்வர்டு, ஆல்பிரட், ஜேம்ஸ் என்ற என் மூன்று சகோதரரும் இரங்கூனில் உள்ள மருத்துவப்பள்ளியில் மேற்கல்வி பயின்று மருத்துவராகி சுயமாக மருத்துவப்பணி செய்தனர். வின்சென்டும், வின்பிரடும் நானும் அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷன் நடத்திய இரங்கூன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஐட்சன் கல்லூரியில் சேர்ந்தோம். வின்சென்ட் சட்டப்படிப்பு முடித்து பர்மாவில் அட்வகேட் ஜெனரல் ஆகி நீதிபதியாக உயர்ந்தார். வின்பிரட் தென்னக ரயில்வேயின் டிவிஷனல் பாதுகாப்பு அதிகாரியாகப் பணிசெய்து ஓய்வு பெற்றார். நான் பர்மாவில் அக்கவுண்ட்ஸ் அலுவலகப் பணியில் சேர்ந்து பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியின் விரிவுரையாளராக ஓய்வு பெற்றேன். என் சகோதரி சுகந்தி திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள் என் கடைசித் தம்பி கிளிபோர்டு ஆந்திரமாநிலத்தில் உள்ள சிராலா என்னும் இடத்தில் பல் மருத்துவராகப் பணியாற்றினார்.

என் தகப்பனார் 1933ம் ஆண்டு தன் 56வது வயதில் மாரடைப்பால் காலமானார். கடவுள் கிருபையால் எங்கள் கல்வி பாதிக்கப்படவில்லை. ஆனால் என் தாயார் இந்த மிகப்பெரிய இழப்பைத் தாங்க இயலாது மனச்சோர்வு உற்றார். அவர்கள் உடல் நிலையும் ஓரளவு பாதிக்கப்பட்டது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது (1939-1945) ஜப்பான் நாடு பர்மா மீது தாக்குதல் நடத்தியபடியால் நாங்கள் பல்வேறு பாதைகள் மூலம் இந்தியா திரும்ப நேர்ந்தது. என் தாயாரும் சகோதரியும் இளைய சகோதரனும் கப்பல் மூலமாக வங்காள

விரிகுடாவைக் கடந்தனர். என் ஒன்று விட்ட மூத்த சகோதரனும் அண்ணியும் விமானம் மூலமும் என் மற்ற சகோதரரும் சகோதரியின் கணவரும் பர்மாவில் வடக்கு கடைசி நகரமாகிய மியிட்கியாவிலிருந்து மரண இருளின் பள்ளதாக்கு எனப்படும் ஹூக்காங் பள்ளத்தாக்கு வழியாகவும் நான் தரை மார்க்கமாக கலிவா என்ற வடமேற்கு நகரத்திலிருந்து நாகாலாந்து, மணிப்பூர்,அஸ்ஸாம் வழியாக திமாபூர் என்ற இந்திய எல்லைக்குட்பட்ட நகரத்துக்கும் வந்து சேர்ந்தோம்.

கர்த்தர் என்னைக் கைவிடவில்லை. 1939ம் ஆண்டு ஜூன் மாதம் பர்மா ஒரு பிரிட்டிஷ் காலனியாக இருந்த போது நான் அக்கவுன்டன்ட் ஜெனரல் ஆபீசில் பணியில் நியமிக்கப்பட்டடேன். 1941ம் ஆண்டு எதிர்பாராத விதமாக ஜப்பான் பர்மாவின் மீது தாக்குதல் நடத்தியதால் ஆங்கிலேய ராணுவம் சரியாக எதிர்த்துப் போர்தொடுக்க இயலவில்லை. 1941ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி - நான் மறக்கவே முடியாத ஒரு நாள் - 21 ஜப்பான் போர் விமானங்கள் இரங்கூன் மேல் பறந்து அடுக்கடுக்காய் மூன்று முறை குண்டுகள் வீசி,பீரங்கி தாக்குதல் நடத்தியது. ஆங்கிலேய அமெரிக்க போர் விமானங்கள் எதிரி விமானங்களைத் தாக்க இயலவில்லை. இரங்கூன் மாநகரம் நாசம் பண்ணப்பட்டது. பெரிய கட்டடங்கள் விழுந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்தும், படுகாயமுற்றும் கிடந்தனர். தெருவில் இரத்தவெள்ளம் ஓடியது. எங்கு பார்த்தாலும் காயமுற்றோரின் அழுகுரல் - ஒரே குழப்பமும் அழிவும். அதன் மத்தியிலும் இறைவன் அருளால் நான் உயிர் தப்பினேன். அரசாங்க ஊழியர் பலர் தங்கள் அலுவலகங்களுக்குத் திரும்பாமலே தப்பிச் சென்றுவிட்டனர்.

1942ம் ஆண்டு இரங்கூன் நகரம் விழுந்ததும் எங்கள் அலுவலகம் தொடர்ந்து இடமாற்றம் செய்யப்பட்டது. முதலில் நான் வடகிழக்கிலிருந்த பாமோ என்ற சீன எல்லை நகருக்கும் அதன்பின் மத்திய பர்மாவிலுள்ள பாகொக்கு என்ற இடத்துக்கும் பின்னால் சிந்த்வின் நதிக்கரையிலுள்ள வடமேற்கு நகரங்களான மனிலா,கலிவா எனற ஊர்களுக்கும் செல்ல உத்தரவு பெற்றேன்.

போதுமான வாகன வசதிகள் இல்லாமல் அலுவலக கோப்புகளை தூக்கிச் செல்வது மிகவும் சிரமமும் சங்கடமுமாயிருந்தது. 1942ல் நான் என் வேலையை விட்டுவிடத் தீர்மானித்த போது பர்மா சரண் அடைந்தது. எல்லா இடங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறந்தன.

இந்தியாவில் உள்ள அலகாபாத், சிம்லா, ஹஷிபூர், கோலாபூர் ஆகிய நகரங்களில் பர்மா நாட்டின் முக்கிய அரசாங்க அலுவல்களை மேற்கொள்ள அலுவலகங்கள் நிறுவப்பட்டன. நான் உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலகாபாத்துக்கு முக்கிய ஆவணங்களுடன் அனுப்பப்பட்டேன். சரியான போக்குவரத்து வாகனங்கள் இல்லாததால் நாங்கள் கலிலாவிலிருந்து இந்தியாவுக்கு நடந்தே செல்லவேண்டியயதாயிற்று. மிக சிரமத்தோடு மலைப்பகுதிகளில் ஏறி இறங்கி பின் நாகாலாந்து, மணிப்பூர் முதலிய இடங்களில் ஆறுகளையும் ஓடைகளையும் அடர்ந்த காடுகளையும் சதுப்பு நிலங்களையும் கடந்து வந்தோம். மலைப்பகுதிகளையும் காடுகளையும் ஓடைகளையும் கடந்து மணிப்பூர் வந்து சேர்ந்த போது மிகவும் சோர்ந்து போய்விட்டோம். அங்கிருந்து இம்பால் வந்தோம். சாலை வழி நடந்து வரும்போது ஜப்பான் விமானங்கள், மரங்களுக்கு சற்று மேல் மிகவும் தாழ்வாகப் பறப்பதைக் கண்டு பயந்து சாலை ஓரமாகப் பதுங்கிப் படுத்திருந்தோம். விமானங்கள் எங்கள் மேலாகப் பறந்து சென்றன. அங்குள்ள முகாம்களில் பீரங்கித் தாக்குதல் நடத்தி ஆங்கிலேய போர் வீரர்கள் சென்று கொண்டிருந்த ஒரு வாகனத்தின் மீது குண்டு வீசிச் சென்றது. அந்த பயங்கர சத்தம் எங்களை சுமார் அரைமணி நேரம் செவிடாக்கியது. அந்த வாகனத்தில் சென்ற அத்தனை போர் வீரரும் கருகி மடிந்தனர். முகாமில் இருந்தவர்களும் மடிந்தனர். கடவுள் கிருபையால் நாங்கள் உயிர் தப்பினோம். எங்கள் முன்னே பகலில் மேகஸ்தம்பமாகவும் இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் கடவுள் சென்றதை உணர்ந்து உளம் மகிழ்ந்தோம்.

திமாபூர் வந்து சேர்ந்தபோது எங்களில் சிலர் முற்றிலும் களைப்புற்றனர். சிலர் நோய்வாய்ப்பட்டனர். ராம கிருஷ்ணா மிஷன் என்ற சமூக சமய அமைப்பு எங்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து

ரயில் மூலம் அலகாபாத் செல்ல உதவியது. கொடிய வெப்பம் காரணமாக எங்களை பஞ்சாபிலுள்ள சிம்லா என்ற இடத்துக்கு தற்காலிகமாக அனுப்பினர். அங்கு நான் இரண்டு அல்லது இரண்டரை மாத காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. என் வாழ்க்கையின் பெரும் துன்பம் அடைந்த காலங்கள் நான் பர்மாவிலுள்ள வெவ்வேறு அலுவலகங்களுக்கு மாற்றபட்ட வேளையும் இந்தியாவுக்கு நடந்தே வந்த நேரமும் சிம்லா மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற வேளையுமே. துன்பங்கள் அதிகமாயிருந்தபடியால் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த என் தாயாரை நினைக்கவோ அல்லது ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையாயிருந்த இறைவனைத் துதிக்கவோ இயலவில்லை.

என்னைப் பற்றி ஒரு தகவலும் தெரியாத நிலையில் என் தாயார் என் பாதுகாவலுக்காக ஊக்கமுடன் ஜெபித்தார். நம் நல்ல தேவன் அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு பல இன்னல்கள் மத்தியிலும் என்னப் பத்திரமாக இந்தியா கொண்டுவந்து சேர்த்தார். அதற்கப்புறம்தான் நான் என் தாயாரின் அன்பையும் இறைவனின் அதிசயமான நடத்துதலையும் கரிசனையையும் கண்டு வியந்து பாராட்டினேன்.

டாக்டர் சாமுவேல் ஏசுதாசன் என்ற என் பெரியப்பா,பிரபல வக்கீல் ரிவிங்டன் தேவதாஸின் சகோதரி மனோன்மணியை மணந்தார். அவர் மூணாறு என்ற மலைப்பாங்கான பட்டணத்தின் தேயிலைத் தோட்டத்தில் மருத்துவப் பணியாளராக நியமிக்கப்பட்டிருந்தபடியால் அவர்கள் அங்கு சென்றனர். அவர்கள் அப்பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளிகள்,மலை வாழ்மக்கள் மற்றும் பலருடைய நன்மதிப்பை பெற்றனர். நோயாளிகள் நல்ல முறையில் சிகிச்சை பெற்று பராமரிக்கப்பட்டனர். மனோன்மணி அம்மையார் யாவரிடமும் அன்போடும் பரிவோடும் பழகினார்கள்.

அவர்களுக்கு ஆல்பர்ட் ஐசக், மெர்சி என்ற இரு பிள்ளைகள் பிறந்தனர். ஆல்பர்ட் தமிழ்நாடு அரசாங்க கல்வித் துறையில் அரும்பணியாற்றி முதன்மைக் கல்வி அதிகாரியாக ஓய்வு பெற்றார்.

திருநெல்வேலி திருமண்டலத்தின் வரலாற்றைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டார். டேனிஷ்பட்டில் பெத்தேல் என்ற பிரசித்தி பெற்ற சமூக நிறுவனத்தைச் சேர்ந்து அதன் நிர்வாகியாகப் பொறுப்பேற்றார். அவர் துடிப்பும் சமூக சேவையில் ஆர்வமும் கொண்டவர். அவர் முயற்சியால் அனாதைச் சிறுவர், தெருவில் அலையும் சிறுவர்களுக்கும் நல்ல விடுதிகளைப் பல நகரங்களில் நிறுவினார். அத்தனை சிறுவருக்குக் கல்வி புகட்டி அவர்களைப் பொறுப்புள்ள வருங்கால குடிமக்களாக ஆக்க முயற்சி செய்தார்.

மூணாறில் அவர் தாயார் மனோன்மணி அம்மாளின் திடீர் மரணம் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. என் பெரியப்பா ஏசுதாசனும் தனக்கு ஆதரவாகவும் துணையாகவும் இருக்க பிஷப் அசரியாவின் சகோதரி மகள் அன்னம்மாளை மறுமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு மார்ட்டின், ஜானி, ஈடித் என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தனர். மார்ட்டின் டாட்டா பின்ட்லே தேயிலை கம்பெனியின் நிர்வாகியாகப் பணியாற்றினார். அவர் தன் தகப்பனார் நிறுவிய சுதேச மிஷனெரி சங்கத்தின் மூணாறு கிளையில் மிகவும் ஈடுபாடு கொண்டார் அவர் முயற்சியால் அநேகர் கிறிஸ்துவை அறிந்து கொண்டனர். பூர்வீகக்குடிகள், ஏழை எளிய மக்கள் மத்தியில் சுவிசேஷம் பரவ மிஷன் ஊழியருக்கு துணையாக இருந்தார். அவர் சகோதரி ஈடித்தும் சமூக சேவையில் ஆர்வம உடையவர். அவர்கள் பாளையங்கோட்டை கிறிஸ்தவ இளம் பெண்கள் சங்கத்தின் கௌரவ செயலாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றினார்கள். பாளையங்கோட்டைக்கு விடைத்தாள் திருத்த வரும் ஆசிரியைகள் இடைக்கால பயிற்சி பெறவரும் செவிலியர், மாநாடுகளில் பங்குபெற வரும் மகளிர் இவர்கள் வசதியாக விடுதியில் தங்க உதவினார்.

டாக்டர் ஏசுதாசனின் பேரப்பிள்ளைகளும் பூட்டப் பிள்ளைகளும் நன்றாக வளர்க்கப்பட்டு நற்குண சீலராக விளங்குகின்றனர். யாவரும் நல்ல நிலையில் இருக்கின்றனர். சிலர் பல்கலைக்கழக பேராசிரியராகவும், சிலர் பொறியியல் வல்லுனர்களாக, வங்கி அதிகாரியாகவும், மருத்துவர்களாகவும், அரசு

அதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர். இந்தியாவில் மட்டுமின்றி பிற நாடுகளுக்கும் சென்று பணி செய்கின்றனர்.

ஏழைகள் இல்லம்

19ம் நூற்றாண்டின் மத்தியில் என் பாட்டனார் சாமுவேல் நாடான் இடையன்குடியில் ஒரு சிறு வீடு கட்டினார். சாலமன், ஏசுதாசன் என்ற அவரது இரு குமாரரும் பர்மாவிலும் மூணாறிலுமாக பணி செய்தமையால் இந்தப் பூர்வீக வீட்டில் அவர்கள் உறவினர் தங்கி இருந்தனர். பின்னர் டாக்டர் ஏசுதாசனின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் (ஈடித் அவர்கள் கணவர் பீட்டர் டானியல் அவர்கள் பிள்ளைகள்) இந்த வீட்டைச் சீரமைத்து, விரிவுபடுத்தி இடையன்குடி மற்றும் அதைச் சுற்றிய மிக எளிய மக்கள் தங்கும் இல்லமாக அளித்தனர். இந்த இல்லம் நன்கு நிர்வகிக்கப்படும் ஒரு அறக்கட்டளையாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

சிராலாவில் ஆனியின் சிற்றாலயம்

தென்னிந்திய அகதிகள் முகாமின் அதிகாரி ஒருவர் பர்மா அகதிகளைக் கவனித்து மறுவாழ்வு கொடுக்க நியமிக்கப்பட்டிருந்தார். இவர் என் சகோதரன் ஆல்பிரடை ஆந்திர பிரதேசத்தின் தெற்கு விஜயவாடாவிலுள்ள சிராலா என்னும் இடத்தில் லூத்தரன் சபையால் நடத்தப்படும் பேர் என்ற மருத்துவமனையில் பணியாற்ற அழைத்தார். அவர் 1945ம் ஆண்டு வரை பணியாற்றி பின் தன் சொந்தமாக சாலமன் நர்ஸிங்ஹோம் என்ற மருத்துவமனையை நிறுவினார்.

இந்த மருத்துவமனை 75 படுக்கைகளைக் கொண்டது. சிகிச்சைக்காக அதிகமான நோயாளிகள் வந்தமையால் அவர் மகிழ்ச்சியடைந்தார். மிக எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்ததால் அவர் எளியவரின் மருத்துவர் என்று சிறப்புப் பெயர் பெற்றார்.

பின்னர் அவர் மருத்துவமனையில் பணி செய்வோர் சிகிச்சை பெறுவோர்களுக்காக ஒரு சிற்றாலயம் கட்ட விரும்பினார். இறைவன் அவரை ஊக்குவித்து வழிநடத்தினார் எனவே ஜெபத்தோடு பர்மாவில் என் தந்தை முக்கிய பதவி வகித்த தட்டன் என்ற ஊரில்

உள்ள ஆலயத்தைப் போன்று ஒரு சிற்றாலயம் கட்டி அதற்கு ***ஆனியின் சிற்றாலயம்*** என்று பெயரிட்டார். அவர் இறை பக்தி மிக்கவர். எந்த நோயாளிக்கும் சிகிச்சை செய்யுமுன் ஜெபித்து விட்டுத்தான் செய்வார். நோயாளிகளையும் மருந்து சாப்பிடும் முன் அல்லது அறுவை சிகிச்சைக்குச் செல்லும் முன் ஜெபம் பண்ணும்படி கூறுவார். கிறிஸ்தவரல்லாத பல மக்கள் அந்தச் சிற்றாலய ஆராதனைக்கு வந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். சிராலாவில் ஆனியின் சிற்றாலயம் இன்றும் ஒரு முக்கிய சின்னமாகத் திகழ்கிறது.

என் ஒன்றுவிட்ட மூத்த சகோதரன் வின்சென்ட் சாலமனின் மகள் அகஸ்டினா என் சகோதரி சுகந்தி ஆர்தரின் மகன் ஜார்ஜை மணந்தார். இவர்கள் வேதமாணிக்கத்தின் ஏழாவது தலைமுறை. டாக்டர் ஜார்ஜ் ஆர்தர் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மதுரை கோட்ஸ் நிறுவனத்தின் மருத்துவ அதிகாரியாக 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி தற்போது நாசரேத்தில் தன் பூர்வீக வீடான கிராஸ் பவனில் குடியிருக்கிறார். திருநெல்வேலி திருமண்டலத்தின் (C.S.I.) மருத்துவ மிஷன் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

என் பெரியப்பா ஏசுதாசனின் வம்ச வழியில் வந்த ரூபா என் தாய்வழிப் பாட்டனார் சுவாமியடியான் பாலம்மாள் வம்சவழியில் வந்த ஆனந்தைத் திருமணம் செய்து கொண்டார். ரூபாவும் ஆனந்தும் வளமிக்க மத்திய கிழக்கு நாடான துபாயில் தற்போது செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர்.

மகப்பேறு நிபுணர் டாக்டர் ரஞ்சனி

டாக்டர். சாலமனின் பேத்தி இவர். டாக்டர் ஏசுதாசனின் பேரன் டாக்டர். ஜெபக்குமார் என்ற குழந்தை நல மருத்துவரைத் திருமணம் செய்துள்ளார். இரண்டு இடையன்குடி சகோதரர்களின் குடும்பங்கள் இப்போது மேலும் நெருக்கமாகிவிட்டன. ரஞ்சனியும் ஜெபக்குமாரும் தங்கள் சொந்த மருத்துவமனையைத் திருச்சியிலுள்ள புதூரில் நிறுவியுள்ளனர்.

சமூக மாற்றங்கள்

எங்கள் முன்னோர் காலத்தில் திருமணங்கள் குடும்பங்களுக்குள்ளும் இனத்துக்குள்ளும் நடைபெற்றன. எவரும்

தன் சாதியை விட்டு வெளியே திருமணம் செய்ததில்லை. ஆனால் பின் சந்ததியாரின் கண்ணோட்டம் மாறுபட்டது. இப்போது பரந்த மனப்பான்மையுடன் சாதியை விட்டு வெளியேயும் திருமணம் செய்து கொள்கின்றனர். சாதி,இன தேச வேறுபாடுகள் மறைந்துவிட்டன. பலர் வெளிநாடுகள் சென்று வெளிநாட்டவரை மணம் செய்து கொள்வதும் பழக்கமாகிவிட்டது.

சட்டப்படி ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து சேர்ந்து வாழ எண்ணினால் அவர்கள் திருமணம் பதிவு செய்யப்படுகிறது. பெற்றோரின் சம்மதமோ அல்லது மூத்தோரின் சம்மதமோ தேவையற்றதாகிவிட்டது. கிறிஸ்தவ திருமணத்துக்கு, சாதி இன வேறுபாடுகள் தடையாகாது. திருச்சபையின் ஒரே கோட்பாடு என்னவெனில் சம்பந்தப்பட்ட திருச்சபையின் அங்கத்தினர் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது. திருமணத்துக்கு முன் ஆலயத்தில் மூன்று அறிக்கைகள் வாசிக்கப்படுகின்றன. இறைவன் படைப்பில் மனிதனுக்கு மனிதன் எந்த வேற்றுமையுமில்லை அனைவரும் அவர் படைப்பில் சமமே.

எங்கள் முன்னோடி வேதமாணிக்கத்தின் ஏழாவது பரம்பரையில் பலர் சாதி விட்டுத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். இத்திருமணங்களில் அன்பு சந்தோஷம் ஒருமைப்பாடு காணப்படுகின்றன. மேலும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகள் மிக்க அறிவாற்றல் உடையவர்களாகவும் திறமை உள்ளவர்களாகவும் திகழ்கின்றனர். உதாரணமாக ஆல்பர்ட் லலி என்ற தம்பதியினரின் மகன் டாக்டர் ஆல்பிரடு அருள் சாலமோன் ஒரு பெரிய மேதை. சிறந்த அறிவாளி. அவர் உடற்கூறு, மகப்பேறு, மகளிர் நலம் முதலிய பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுத் தங்கப்பதக்கமும் பெற்றார். 1997ல் சென்னை ஸ்டான்லி மமருத்துவக் கல்லூரியின் மிகச் சிறந்த மாணவர் என்று போற்றப்பட்டார். லண்டன் பல்கலைக்கழகத்தில் (F.R.C.S) என்ற பட்டம் பெற்று சென்னையில் ஒரு பிரசித்தி பெற்ற நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

முடிவுரை

வேதமாணிக்கம் என்ற பெருமைமிக்கவர் வம்ச வழியில் வந்தவன் நான் என்று பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். என் வாழ்க்கை மலர்ப்படுக்கையாக அமைந்தது அன்று. செல்வமும், வறுமையும், இன்பமும் துன்பமும் என் வாழ்வில் மாறி மாறி நேர்ந்தன. சாத்தான் மூலம் எனக்கு சொல்லமுடியாத பிரச்சினைகளும் நெருக்கடிகளும் ஏற்பட்டன. ஆனாலும் இவை எல்லாவற்றினின்றும் என்னைத் தூக்கி எடுக்கிற என் தேவனின் கரத்தைக் காண்கிறேன். அவர் மீது மாறாத நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவர் என்னவிட்டு விலகவும் மாட்டார். என்னைக் கைவிடவும் மாட்டார். உலகம் தரக்கூடாத சமாதானத்தையும் யாரும் பறிக்க இயலாத சந்தோஷத்தையும் நான் அடைவேன். நான் மகிழ்சியுடன் இருக்கிறேன். வேதமாணிக்கத்தின் இரத்தம் என் உடலில் ஓடுகிறது. ■

வேதமாணிக்கம்
↓
சாமுவேல் I
↓
மோசஸ்
↓
சாமுவேல் II
கிரமாள்
↓
சாலமன்
ஆனி
↓

வின்செண்ட்	சுகந்தி
சுகுணா	ஆர்தர்
↓	↓
அகஸ்டீனா	ஜார்ஜ்

வேதமாணிக்கம்
↓
சாமுவேல் I
↓
மோசஸ்
↓
சாமுவேல் II
↓
ஏசுதாசன்
↓
ஈடித்
பீட்டர் டானியல்ஸ்
↓
ராணி
↓
ரூபா

சுவாமியடியான்
பாலம்மாள்
↓
அன்னை மாரியம்மாள்
(என் தாயின் சகோதரி)
↓
ஹெலன்
அன்புடையாள்
↓
ஜெய்கர்
மேர்ட்டில்
↓
ஆனந்த்

வேதமாணிக்கம்
↓
சாமுவேல் I
↓
மோசஸ்
↓
சாமுவேல் II
கிரமாள்
↓

சாலமன்	ஏசுதாசன்
↓	↓
கிளிபோர்டு	ஈடித்
↓	↓
ரஞ்சனி	ஜெபகுமார்

தமிழாக்கம் : **திருமதி. சுசிலா மார்டின்**

வேதமாணிக்கத்தின் சந்ததியார்



6

ஒரு உபதேசியாரின் நாட்குறிப்பு

சரோஜினி பாக்கியமுத்து

நாட்குறிப்பேடுகள் தலைசிறந்த வரலாற்று ஆவணங்களாகும். ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பேடு (1736 - 1761) அவர் காலத்துத் தமிழகத்தின் நிலைமையை நன்கு எடுத்துக் காண்பிக்கிறது என்பதை அறிவோம். இப்போது *சவரிராயபிள்ளையின் சர்னலும்* காகிதங்களும் (1836-1874) என்ற 2000 பக்கங்களும் மேற்பட்ட நாட்குறிப்பேடு வரலாற்றறிஞர்களின் கவனத்தைப் பெற்று வருகிறது. இது அவரது குடும்ப வரலாறு, திருச்சபை நிலவரங்கள் ஆகியவற்றோடு வேறு பல உண்மைகளையும் வெளிப்படுத்துகிறது.

வடக்கன்குளம் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த சவரிராயபிள்ளை 1836ம் ஆண்டு மாபெரும் சமயத் தொண்டரான இரேனியஸ் ஐயரின் புராட்டஸ்தாந்திய சுவிசேட திருச்சபையில் சேர்ந்தார். நீண்ட காலம் சுவிசேடபுரத்தில் உபதேசியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். வரலாறு என்பது அரசர்கள், பிரபுக்களின் செயல்கள் மட்டுமல்ல அரசியல் நடவடிக்கைளினால் ஆவது மாத்திரமல்ல. அது சாதாரண மக்களின் வாழ்க்கையையும் அவர்களது சுகதுக்கங்களையும் எடுத்துச் சொல்வதாகும். அந்த வகையில்தான் சவரிராயபிள்ளையின் நாட்குறிப்பேடும் வரலாற்ருசிரியர்களுக்கு ஒரு அரிய பொக்கிஷமாகிறது.

சவரிராயபிள்ளையின் தாய்வழி முன்னோரான செட்டிப்பிள்ளைமார் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில கத்தோலிக்கம் தழுவியதாக தெரிகிறது. நாயக்கராட்சி காலத்தில் காமநாயக்கன்பட்டியைத் தலைநகராகக் கொண்டு சேசு சபையினர் நிறுவிய கத்தோலிக்கம் கரிசல் காட்டில் கால் கொண்டது. வீரமாமுனிவர் என வழங்கும் கான்ஸ்திதைந்தன் பெஸ்கி 18ம்

கல்லூரி முதல்வராகவும் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
சானல் என்ற ஆங்கிலச் சொல். இது நாட்குறிப்பேடு என்ற பொருளில் அப்போது வழங்கியது. ப.ஆ.

நூற்றாண்டில் அங்கு மூன்றாண்டுகள் தங்கி பணி செய்தார். சவரிராயபிள்ளையின் தந்தை வழி முன்னோர் சிவகங்கைப்பக்கம் வாழ்ந்திருந்து. பின்பு மலையாளம் சென்று 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கத்தோலிக்கம் தழுவி பின்பு திருவிதாங்கூர் மன்னராட்சிக்குட்பட்ட வடக்கன்குளத்தில் வந்து குடியேறினர். அர்ச். ஜான் பிரிட்டோவின் தலைமையில் மக்கள் கத்தோலிக்க இயக்கம் நடந்த காலம் அது. கடற்கரைப் பரதவர் சபையின் ஒரு நீட்சியாகவே வடக்கன்குளம் சபை உருவானது.

வீரமாமுனிவர் ***தேம்பாவணியை*** நகல் எடுத்த பெருமை சவரிராயபிள்ளையின் முன்னோருக்கு உண்டு. அவரது தந்தை மதுரேந்திரம்பிள்ளை குடும்ப உறுப்பினரின் பிறப்பு, திருமணம், இறப்பு முதலிய முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றி ஆவணங்கள் எழுதி வைத்திருந்தார். சவரிராயபிள்ளை பிறந்தது 1801ம் ஆண்டு. நெல்லை வரலாற்றில் இது முக்கியமான ஆண்டு. நெல்லை கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கத்துக்குள் வந்த ஆண்டு அது. இந்திய வரலாற்றிலும் ஒரு திருப்பம் ஏற்பட்ட காலம் அது. முந்தைய நூற்றாண்டின் வன்முறைகள் ஓய்ந்து அமைதி பரவி இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாடு உருவாகத் தொடங்கிய காலமாகும் அது.

அப்போது வடக்கன்குளம் திருச்சபையின் புகழ் உச்சத்திலிருந்தது. மதுரேந்திரம்பிள்ளையின் குடும்பம் கரிசல் காட்டிலிருந்து வடக்கன்குளம் வந்து குடியேறியது. சேசு சபை கலைக்கப்பட்ட பின்னர் கோவாவிலிருந்து குருமார் வந்து பதராதோ மேற்பார்வையில் சபையை நடத்திவந்தனர். வேதத்தோடு மரபையும் போற்றுவது கத்தோலிக்கர் கொள்கையாகும் எனவே மதம் மாறியவர்களின் சமுதாயப் பழக்கவழக்கங்கள். அப்படியே தொடர்ந்தன. ஆராதனைகளில்தான் லத்தீன். மற்றப்படி தமிழிசையும் தமிழ் மரபுகளும் தான். தேர்த்திருவிழாவில் மாதாவின் பவனி, தீவட்டிகள் மேளதாளத்தோடு கோலாகலமாக நடந்தது. எல்லாம் இந்திய மயம். அர்ச் அலாஸியஸ் கதை ஆக்னஸ் கதை, பொறுமை அம்மாள் கதை முதலிய கதைகள் கூத்துக்களாக நடிக்கப் பெற்றன. பாளையங்கோட்டை, அணைக்கரை, மணப்பாடு, தூத்துக்குடி, காமநாயக்கன்பட்டி முதலிய ஊர்களின் திருவிழாக்களுக்கும்

சவரிராயபிள்ளை குடும்பத்தினர் கட்டுச்சோற்றுடன் மாட்டுவண்டி பயணமாய்ப் போய் வந்தனர். வடக்கன்குளத்துக் கோவிலில் அவர்களது ஆதிக்கம்தான் சவரிராயபிள்ளை இளமைப்பருவத்தில் அதிகாலையில் எழுந்து ஆலயம் சென்று பூசையில் சாமியாருக்கு உதவியாக நின்றார். திருவிழாவிலும் நாடகங்களிலும் முன்னணியில் நிற்பார்.

எல்லாம் 1824 வரைதான் அதன்பின்னர் சாதிச் சழக்குகள் வெடித்தன. சாந்தாயி நாடாத்தி என்று இப்போது அழைக்கப்படுகிற ஒரு பெண்மணிதான் வடக்கன்குளத்தில் பூசை இடத்தை தோற்றுவித்தது. எண்ணிக்கையில் அதிகமிருந்த சாணார்கள், பிரித்தானியர்கள் ஆட்சியில் கல்வி மற்றும் நாகரிகங்களில் முன்னேறி சபையில் உரிமைகள் கோரத் தொடங்கினர். விளைவாக சண்டைகள் முற்றி ஒரு பதினைந்து ஆண்டுக் காலமாய் கோவில் கொண்டாட்டங்கள் நின்று போயின.

கோவில் பணியைத் தவிர வேறு எந்தத் தொழிலினும் அதிக ஈடுபாடில்லாத சவரிராயபிள்ளை வருவாய் இல்லாமல் தவித்தார். காலராவில் இறந்த அவர் தந்தை, கடன்களை விட்டுச் சென்றிருந்தார். வைத்தியம், மாட்டு வியாபாரம், கள்ளக்கடத்தல் தடுப்பு முதலிய பல தொழில்களிலும் தோல்வியே கண்டார். இப்போது அவருக்கு நான்கு மகன்களும் இரண்டு பெண்களும் இருந்தனர். செய்வதறியாது திகைத்த அவர் வடக்கன்குளத்துக்காரரும் சமூக அந்தஸ்தில் சற்றே தாழ்ந்தவரும் மதம் மாறி இரேனியஸின் சுவிசேட சபையில் சேர்ந்து உபதேசியராக மாதம் 5 ரூபாய் சம்பளம் வாங்கி வந்தவருமான சவரிமுத்துப் பிள்ளைக்கு 13 வயது நிரம்பிவிட்ட மகள் மரியம்மாளை இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொடுத்தார். விளைவாக கத்தோலிக்க சபையினின்று உடனடி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். நெருங்கிய உறவினர்களும் விலகினர். நாட்குறிப்பேட்டை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் இந்தக் கொடுமையான சாதிவிலக்க நிகழ்ச்சியை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இரேனியஸ் இப்போது சர்ச் மிஷன் சங்கத்தினின்று (சி.எம்.எஸ்) விலகி ஜெர்மன் சுவிசேட சபை நடத்தி வந்தார். சவரிராயபிள்ளை அந்த சபையில் 1836ல் உபதேசியராகச் சேர்ந்த

கொண்டார். "நீயுமா அப்பா போவாய்?" என்று உறவினர்கள் அங்கலாய்த்தனர். இனசனத்தாரால் ஒதுக்கப்பட்டவராய் அந்நியர் நடுவே அவர் மன உளைச்சலுடன் வாழ்ந்தார். அந்த அகவேதனை டயரியில் தெரியக் கிடக்கிறது. ஒழுங்காய் நாட்குறிப்புகள் எழுதிவந்ததாலேயே அவரது துக்கம் நிவிர்த்தியாகி வந்தது என்றும் கொள்ளலாம். பெரும்பாலான குறிப்புகள் குடும்பம் பற்றியனவே.

திருச்சபை பற்றிய முக்கிய பதிவு ஒன்று 1838 செப்டம்பர் 4,5 ல் காணக்கிடக்கிறது. இரேனியஸ் இறந்த பின்பு அவரது சுவிசேடசபை சர்ச்மிஷன் சங்கத்தோடு இணைந்த நிகழ்சசி அது. சவரிராயபிள்ளை டயரி எழுதியதோடு பல கடிதங்களையும் பாதுகாத்து வைத்திருந்தார். சுவிசேட சபையைச் சேர்ந்த ஜே. முல்லர், ஷாப்டர் முதலியோரின் கடிதங்கள் சபையோர் மீது அவர்கள் கொண்டிருந்த உருக்கமான அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்துவன. சார்ஜென்ட் முதலிய சர்ச் மிஷன் சங்க மிஷனெரிகள் கடிதங்கள் காரியமானவை. ஆதிக்கத்தை நிலைநாட்டுவன.

காலனி ஆதிக்கத்தின் பிற அடையாளங்களும் தொடங்குவதை நாட்குறிப்பேட்டிலிருந்து அறிய முடிகிறது. இரேனியஸ் கட்டிய வழிபாட்டுத் தலங்கள் பெரிய ஹால்கள்தாம். இப்போது அவையெல்லாம் கோதிக் பாணியில் கோபுரங்களுடன் மாற்றம் பெற்றன. ஜில்லா கலெக்டரும் அத்தியட்சர்களும் அடிக்கல், திறப்பு விழாக்களுக்கு ஆரவாரமாக விஜயம் புரிந்தனர். கிழக்கிந்திய கம்பெனிஅறியாதபடி இரகசியமாக இந்தியா வந்தடைந்த முதல் பேராயர் மிடில்டன்னைப் பற்றி சி.எப்ஃஆன்டுரூஸ் எழுதியது இங்குநினைவு கூரத்தக்கது. சலுகைகள், அதிகாரங்கள், அந்தஸ்துக்களுக்காக பேராயர் பேரம் பேசிக் கொண்டிருந்தார். ஆன்மீகத்தை விலையாகக் கொடுத்துதான் சர்க்காருடன் உறவு பெறப்பட்டது. (Chart of North India C.F. Andrews, 1908 P. 14.15) ஜெர்மன் லூர்த்தரன் ஆராதனை முறைகளும் மாறின. ஆங்கிலிக்கன் முறைமைகள் மெல்ல மெல்ல அமுலுக்கு வந்தன.

பாளையங்கோட்டையில் மேனாட்டுக்கல்வி பெரிய அளவில் நடைபெறுவதைக் காணமுடிகிறது. செமினெரி ஆண்கள் பள்ளிகள், பெண்கள் பள்ளிகளில் நடந்த கல்வி முறை தெரிகிறது. பாளையில்

வேளாள குலத்தினர் நல்ல பயன் அடைந்தனர். குருக்ஷாந்த் என்ற ஆங்கிலோ இந்தியர் நடத்திய பள்ளி. மேல் குலத்தவருக்கு மட்டுமே. அவர்கள் ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் பெற்ற செய்திகளும் உண்டு. சுவிசேஷபுரம் போன்ற கிராமங்களிலும் அழகான கோவிலும் பள்ளியும் இருந்தன. பெண் ஆசிரியைகள் கூட இருந்தனர். இரேனியஸின் காலத்தில் பெருந்தொகையாக சபையில் சேர்ந்திருந்த சாணார் குலத்தவரும் கிராமங்களில் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். அம்மக்கள் ஞானஸ்நானம் பெறுவது, விக்கிரங்களை உடைப்பது, கோவில் ஆராதனைகளில் பங்கு பெறுவது முதலிய செய்திகள் உண்டு. கிராமத்து மக்களுக்கு ஒரு செவ்வியல் சமயமும் தொடக்கக் கல்வியும் அளித்து மாபெரும் புரட்சியை அரவமில்லாமல் செய்த அம்மிஷனெரிகளில் பலர் உலகப் புகழ் பெற்றவராவார். இரேனியஸ், ஷாப்டர், கால்டுவெல், ராக்லாண்டு என்று பலபேரை டயரியில் சந்திக்கிறோம். பிரித்தானிய ஆட்சியோடு இந்த அயல் நாட்டுத் தொடர்புகள் பெரிய அளவில் தொடங்கிவிட்டன.

நவீனத்துவம் தொடங்கிவிட்டது. பழைய விவசாய சமுதாயம் மெல்ல மெல்ல மாறி எல்லாத் துறைகளிலும் பழைய மரபுகள் மறையத் தொடங்குகின்றன. நடுத்தர வர்க்கமும், மாத சம்பள வேலைகளும் உருவாகுகின்றன. டயரி பெரும்பாலும் குடும்ப டயரியாகும். தமது ஆண் மக்களின் கல்வி வேலைவாய்ப்புகளில் சவரிராயபிள்ளை பெரிதும் கவனம் செலுத்துகிறார். சாமியார் மாதச் சம்பளமாக ஒரு 3 ரூபாய் கொடுத்திருந்தால் இப்படி மறுதலித்திருக்க வேண்டாமே என்று அவர் மனைவி முதலில் அங்கலாய்த்தாலும் அவரும் இப்போது நிம்மதியுடன் புதிய ஜெபமுறைகளில் உளமார்ந்த ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கி விடுவதும் தெரிகிறது.

மரியம்மாளின் கணவர் சவரிமுத்துப்பிள்ளை விசாரணை உபதேசியராக சுவிசேஷபுரத்தில் பணியாற்றினார். அவர் மிஷனெரிகளின் வலது கையாக இருந்து மிகுந்த செல்வாக்குடன் விளங்கினார். மிஷனெரிகள் வேளாளருக்கு சிறப்பு சலுகைகள் அளித்த காலம் அது.

ஜான் தாமஸ் இந்தியருக்கும் குருப்பட்டம் அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது, பிள்ளையின் மூத்த மகன் மதுரேந்திரம் பயிற்சி பெற்று குருவாகவும் அபிசேகம் பெற்றார். மரிய சவரி முத்துவும் சூசைமரியானும் உபதேசியார்களாயினர். ஏசுதாசன் வடக்குப் பள்ளிக் கூடம் என்றழைக்கப்பட்ட பயிற்சிப் பள்ளியிலும் மகள் இன்னாசியம்மாளின் கணவன் மிஷன்பள்ளியில் முன்ஷியும் ஆயினர். பின்னர் இந்த டயரியைத் தொகுத்துப் பதிப்பித்தவரும் (1898) சிறந்த எழுத்தாளருமான மகன் தேவசகாயம் மிஷனெரி சார்ஜென்டின் துணைவியாருக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க நியமிக்கப்பட்டதோடு மிஷனெரிகளின் பயணத்துணையாகும் தகுதியையும் பெற்றார். கத்தோலிக்கத்தில் அவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் கிட்டியிரா. நாயக்கராட்சி காலத்தில் ஆந்திரர்களான ரெட்டி நாயுடு ராஜு முதலியோருக்கு தமிழ்நாட்டின் பெரும்பகுதி நிலங்கள் உடமையாகியிருந்தன. தெலுங்கு ஜமின்தார்கள் இங்கு கொடிப்பரத்திய போது, ஆந்திராவிலிருந்து மக்கள் பேரளவில் இங்கு வந்து குடியேறிக் கொண்டனர். அவர்கள் மீது இருந்த எரிச்சல் நாட்குறிப்பேட்டில் அங்கங்கே தெரிகிறது. தேவசகாயம் பிள்ளை எழுதிய ***சவரிராயபிள்ளையின் வம்ச வரலாறு*** என்ற நூலிலும் சில குறிப்புகள் உள்ளன. தமிழ்நாட்டு வேளாளருக்கு இக்காலத்தில் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த மிஷனெரிகள் வலியபோஷகர்கள் ஆயினர். அவர்களுக்கு ஏற்கனவே ஓரளவு கல்வி, ஓதுவார்பயிற்சி, கணக்குப்பிள்ளை அனுபவங்கள் இருந்தமையால் மிஷனெரிகளுக்கும் அவர்கள் தேவைப்பட்டனர். அதனால் தான் சவரிராயபிள்ளை போல் பாப்பு மார்க்கத்திலிருந்து வந்தவர்களையும் அவர்கள் விரும்பினர். மேலும் புராட்டஸ்தாந்தியத்தில் உபதேசியார் என்ற பதவியும் புதிது. கத்தோலிக்கத்தில் அம்மரபு நீண்ட காலமாய் இருந்து வந்தது. அந்த அனுபவமும் மிஷனெரிகளுக்கு தேவைப்பட்டது. முதல் தொகுதியின் கதாநாயகன் மருமகன் சவரிமுத்துப் பிள்ளைதான். பெரும்பாலும் சுதேசிகளால், நிர்வகிக்கப்பட்ட தர்ம சங்கத்தில் அவர்தான் முக்கியஸ்தர். அவர் நானாவித மக்களிடையேயும் பழகிக் காரியங்களைச் சாதிக்க வல்லவராய் இருந்தார். 1830-1850 வரை கிராமங்களில் வேகமாக எழுந்த திருச்சபைக்கு 'நிலங்கள் வாங்கிப் புதிய குடியேற்றங்களை

அமைக்க உதவினார். ஷாப்டரும், சார்ஜென்டும் அவருக்கு தாராளமாய் சுதந்திரம் அளித்திருந்தனர். மனைவி மரியம்மாள் இறந்ததும் (9.11.1849) மரியசவரிமுத்துவுக்கென நியமிக்கப்பட்டு சவரிராயபிள்ளை தம்பதியர் வளர்த்துப் படிக்க வைத்து வந்த 13 வயது உறவுப் பெண்ணை மூன்றாவது தாரமாக்கிக் கொள்ளும் நோக்கமாய் கடத்திக் கொண்டு போய்விட்டார். பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர சவரிராயபிள்ளைக்கு வேறெதுவும் செய்ய இயலவில்லை. மிஷனெரிகளுக்கு தெரிவிக்கப்பட்ட போது அவர்களும் மௌனமாயிருந்தனர். இந்நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட நாட்குறிப்புகள், கடிதங்கள் யாவும் படிக்க சுவையானவை.

அந்தச் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு பெண் மாப்பிள்ளை கிடைப்பது கடினமாக இருந்ததால்தான் இம்மாதிரியான பிரச்சினைகள் எழுந்தன. சவரிராயபிள்ளையும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தமது வடக்கன்குளம் - கரிசல்காட்டு உறவினர் புராட்டாஸ்தாந்தியத்தைத் தழுவுவதற்கான முயற்சிகள் எடுத்து வந்தார். மூத்த மகன் மதுரேந்திம் தவிர மற்றவர்களுக்குக் கிடைத்த சம்பந்தங்கள் உறவில் இல்லை. அவை அவருக்கு மனச்சோர்வளித்தன. கத்தோலிக்க உறவினர் அவர்களது திருமணங்களுக்கு ஓலை அனுப்பவில்லை. இவரும் தம் வீட்டு விசேஷங்களுக்கு அவர்களை அழைக்கவில்லை. மொய்முறை நின்று போயிற்று. ஒரு வகையில் தொல்லை குறைவுதான் என்று நினைத்தார். இன்னாசியம்மாள் சடங்கின்போது அவர் எழுதிய டயரிக் குறிப்பு "இன்னாசியம்மாள் செலவில்லாமல் வீடு கூடினாள்" என்பதாகும். ஆயினும் இந்த சமுதாயப் பிரஷ்டத்தினால் அவர் துக்கமும் அவமானமும் பட்ட சந்தர்ப்பங்களும் அநேகம். அவர் தாயுடன் பிறந்த சித்தியின் மரணப்படுக்கையில் உடனிருந்து உதவிகள் செய்தார். ஆனால் சடங்குகளின் போது நீங்கள் சற்று வெளியே போய் இருங்கள் என்றனர் உறவினர். இம்மாதிரியான நிகழ்ச்சிகளின் போது அவர் மனம் இரணமாகி விடும்.

கத்தோலிக்க பாரம்பரியத்தில் சடங்குகள் உண்டு. இசையும் கூத்தும் சபைமக்களை ஆரவாரமாக வைத்திருந்தன. ஆனால் புராட்டஸ்தாந்திய சபையோ இக்கலைகளைத் தவிர்த்தன. தமது

பிள்ளைகள் கூத்துப் பார்க்கச் செல்வதற்கு அவர் தடை விதித்தார். கூத்து பார்க்கச் சென்றவர்களைப் பட்டியலிட்டு மிஷனெரிகளிடம் சமர்ப்பிக்கவேண்டிய கடமையும் அவருக்கு இருந்தது. இவற்றையெல்லாம் அவர் டயரியில் குறிக்கிறார். சடங்குகள், இசை கூத்து இவற்றை வடக்கன் குளத்தில் மிகவும் ரசித்திருந்த அவர் இப்போது அவற்றையெல்லாம் விடவேண்டியதாயிற்று. அதனால் விளைந்த மன உளைச்சலைக் குறைத்துக் கொள்ள டயரி உதவியதெனலாம்.

மரபை ஒதுக்கி வேதத்தை முதன்மைப்படுத்திய புராட்டஸ்தாந்திய சபையில் கலைகள் குறைந்தாலும் நூல்கள் படிக்க எழுத வாய்ப்புகள் அதிகரித்தன. புத்தக சங்கம் ஏராளமாக நூல்களை அச்சிட்டு வந்தது. குருமாரையும் லே மக்களையும் படிக்கவும், எழுதவும் மிஷனெரிகள் ஊக்குவித்தனர். மகன் சூசைமரியான் நூல்கள் எழுதினார். தமிழ் கிறிஸ்தவ இலக்கியம் மலரத் தொடங்கிய காலம் இது. செய்யுள் இலக்கியத்தை சாமானியருக்கேற்றதாய் ஆக்கி ***பெத்லகேம் குறவஞ்சி*** முதலிய அரிய இலக்கியங்கள் இயற்றிய வேதநாயக சாஸ்திரியார் (1774 - 1864) கவித்துவம் ததும்பும் இனிமையுடன் நாட்டார் வழக்கில் ***முத்தி வழியம்மானை*** (1887) பாடிய சுவிகரன் நாடார் வைணவப் பாரம்பரியளத்தில் செவ்விலக்கியமாக ***இரட்சணிய யாத்திரிகத்தை*** எழுதிய கிருஷ்ண பிள்ளை (1827 - 1900) ஆகியோர் கிறிஸ்தவ இலக்கியத்தை தொடங்கிய மூலவர் எனலாம்.

கிருஷ்ணபிள்ளை ஞானஸ்நானம் பெற்ற குறிப்பு இந்நாட்குறிப்பேட்டில் உண்டு. வேதநாயக சாஸ்திரியார் பிள்ளைகள் தஞ்சையிலிருந்து நெல்லை வந்து பஜனைகள் சதுர் முதலியன நடத்தியது பற்றிய விவரங்களும் நிறைய இருக்கின்றன. புராட்டஸ்தாந்தியத்தின் அழுத்தமான முத்திரையான வசன நடை வளர்ந்த காலமும் இதுதான் மிகவும் புகழ் பெற்ற ***மோட்சப்பிரயாணம்*** நூலை தமிழாக்கிய சாமுவேல் பவுலின் காலம் 1844 - 1900 ஆகும். செய்யுள் யுகம் அஸ்தமித்து விட்டதெனலாம் வேதகம் வாசிப்பு பரவலானதால் சனநாயத்தை வளர்த்தெடுக்கும் வசனநடையில் நூல்கள் தோன்றின. சவரிராயபிள்ளை பல நூல்களைக்

குறிப்பிடுகிறார். செய்யுள் பாரம்பரியத்தில் வளர்ந்த சவரிராயபிள்ளையும் தமது 2000த்து சொச்ச பக்க டயரியை தமிழ் வசனத்தில் தான் எழுதினார். ஏற்கனவே குறிப்பிட்டபட்ட அவரது மகன் தேவசகாயம் எழுதிய *சவரிராயபிள்ளையின் வம்ச வரலாறு* ஒரு நல்ல இலக்கியமும் ஆவணமும் ஆகும். *சவரிராயபிள்ளை சரித்திரம்* என்றொரு நூலையும் கூட அவர் எழுதினார்.

மகன் தேவசகாயத்துக்கு இனசனத்தில் பெண் எடுத்து விடவேண்டும் என்ற ஆசை அவரை இறுக்கமாகப் பற்றியது. அதற்கான முயற்சிகள் எளிதாக இல்லை. பெண்ணை கவிசேசபுரம் கடத்தி வந்து ஞானஸ்நானம் கொடுத்து ஓலைகளும் கூறி காதும் காதும் வைத்தாற்போல் கலியாணம் முடிக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் மனந்தளரவில்லை. இனசனம் என்ற பற்று தவிர கத்தோலிக்கர் அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கிறார்கள்; அவர்களுக்கு சிறிது வெளிச்சம் காட்டலாம் என்ற நோக்கமும் தகப்பன் மகன் இருவருக்கும் இருந்தது. 1868 முதல் 70 வரை முயற்சிகள் நடந்தன. நாட்குறிப்பேட்டில் சுமார் 200 பக்கங்களை இந்த விவரங்கள் தான் ஆக்கிரமிக்கின்றன. இறுதியில் திருமணம் முடிந்தது. ஓரிரு வடக்கன்குளம் குடும்பங்கள் புராட்டஸ்தாந்தியம் சேர்ந்தார்கள். ஆனால் அவர்களை உறுதியாக நிலைக்கச் செய்வதற்குள் இவர்களுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. கலியாண விஷயமாய் அவர்கள் மேற்கொண்ட இரகசியங்கள் மிஷனெரிகளையும் முகம் சுளிக்க வைத்தன. சார்ஜென்ட் அம்மையார். தாம் நடத்திய போர்டிங் பள்ளியில் திருப்பணியாளருக்குத் துணைவியர் ஆவதற்கென்றே இளம் பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து வந்தார். அவர்களை தேவசகாயம் புறக்கணித்ததும் அன்னாருக்கு மனத்தாங்கல்.

சாதீயம் பன்னெடுங்காலமாய் இந்தியாவில் வளர்ந்து பரவி பல கொடுமைகளைக் கேட்பாரின்றி புரிந்து வந்தது. கிறிஸ்தவ சமயம் சாதீயத்தை ஒப்புக் கொள்வதில்லை. கிறிஸ்தவம் இங்கு பரவத் தொடங்கிய இக்காலக்கட்டத்துச் சாதீயத்தின் நிலை எப்படி இருந்ததென கவனிப்போம். வியாபார நிறுவனமான கிழக்கிந்திய கம்பெனி அதை ஒப்புக் கொண்டு தன் வியாபாரத்தை நடத்தியது.

பின்னர் பிரித்தானிய சர்க்கார் இயற்றிய சட்டங்களில் சாதி சமத்துவம் இருந்தாலும் அது பெயரளவில் தான். மிஷனெரிகள் கிறிஸ்தவ தர்மத்தைப் போதிப்பவர்கள். லூத்தரன் சமயத் தொண்டர்கள் முதலில் சாதியை வெளிப்படையாய் எதிர்த்தனர். ஆனால் சீகன் பால்குவின் காலத்துக்குப் பிறகு எதிர்ப்பைக் கைவிட்டனர். சாணார் குலத்தைச் சேர்ந்த தாவீது சுந்தரானந்தனை நெல்லைக்கு உபதேசியாராக அனுப்பியது சுவார்ட்ஸ் ஆகும். சர்ச் மிஷன் சங்க மிஷனெரியான இரேனியஸ் சென்னையில் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பியரிடையே வர்க்க பேதமும், இந்தியர்களிடைய சாதி பேதமும் நிலவின. இரேனியஸ் அந்நிலையை மாற்ற முயன்றார். நெல்லையில் சாணார் கிறிஸ்தவஇயக்கத்தை பேரளவில் ஊக்குவித்தார். சாணார்கள் அதிகம் வசித்த தென்கிழக்கு திருநெல்வேலிக்கு அவரை முதலில் கைகாட்டி விட்டது இராணுவ குரு ஹௌ ஆகும். நாட்குறிப்பேட்டு காலத்தில் சாணார் இயக்கம் அதன் கடைசி காலகட்டத்தில் இருந்தது கிறிஸ்தவர்களான பின் அவர்கள் வேகமாக முன்னேறினர். அந்த முன்னேற்றத்தை டயரி நன்கு பதிவு செய்கிறது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கல்வி பெறுவதிலும், திருச்சபைக் காரியங்களில் பங்கு பெறுவதிலும் அம்மக்கள் கவனமாக இருந்தனர். கோவிலுக்கு தாராளமாய் காணிக்கை கொடுத்தனர் அச்சாதியைச் சேர்ந்த திருச்சபை தலைவர்கள் முக்கந்தர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் மிஷனெரிகளுக்கு உறுதுணையாய் நின்றனர்.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இயற்றியிருந்த ஒரு சட்டப்படி ஒரு நபர் கிறிஸ்தவரானால் தனது சொத்துக்களை இழந்து விடவேண்டும் என்பதாகும். அச்சட்டம் 1850 வரை அமுலில் இருந்தது. 1850 ஏப்ரல் மாதம் இயற்றப்பட்ட புதிய சட்டம் அதை ரத்துச் செய்தது. அதன் பின்பு சாணார்குலத்தில் வசதியும் செல்வாக்கும் மிக்கவர்களாக இருந்தவர்களும் நாடார் என்றும் நிலைமைக்காரர் என்றும் அழைக்கப்பட்டவர்ளும் திருச்சபையில் சேர்ந்தனர். முக்கந்தர்கள் அதன்பின்பு ஓரளவு செல்வாக்கிழந்தனர் என்று கொள்ள இடமுண்டு.

இந்தியர்களும் குருமாராகலாம் என்ற திட்டத்தை மெய்ஞானபுரம் ஜான் தாமஸ் ஐயர் கொணர்ந்த போது அது அனைத்து

சாதியினர்க்கும் உரியது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு சார்ஜென்ட் ஐயரால் அமலாக்கப்பட்டது. 1849ல் முதல் தொகுதியில் ஆறுபேர் பயிற்சி பெற்று குருப்பட்டம் பெற்றனர். அதில் வெள்ளாளர் நால்வர் சாணார் இருவர் ஆகும்.

உயர் சாதியைச் சேர்ந்த குருமாரும் பிற திருப்பணியாளர்களும் ஆலயங்கள் நடத்தும் அன்பின் விருந்திலும் தாழ்த்தப்பட்ட சாதிக்காரரின் கலியாண விருந்துகளிலும் கலந்து கொள்வதில்லை. 1867 செப்டம்பரில் காணும் ஒரு டயரிக்குறிப்பு சார்ஜென்ட் ஐயர் ஒரு பலத்த சைவ விருந்து ஏற்பாடு பண்ணி அதில் ஆறு சாதிக்காரரைக் கலந்து கொள்ள வைத்தார் என்று கூறுகிறது.

தாழ்த்தப்பட்ட சாதிக் கிறிஸ்தவர்களுக்கு ஆர் என்ற மரியாதைப் பன்மை நாட்குறிப்பேட்டில் வழங்கப்படவில்லை. சாணார் வகுப்பைச் சேர்ந்த திருப்பணியாளர் உபதேசி என்றும் வாத்தியான் என்றும் குறிக்கப்பட்டனர். உயர் வகுப்பைச் சேர்ந்த எந்தச் சிறுவனும் சாணாரில் எந்தச் சீமானையும் ஏகவசனமாய்ப் பேசுவதே இயல்பு என்கிறார் தேவசகாயம் பிள்ளை. டயரியின் பிற்பகுதியில் சாணார் என்ற சொல் குறைந்து. நாடார் நாடான்மார் என்ற சொற்கள் அதிகரிக்கின்றன.

சாதியரக்கனோடு முதன்முதலாகப் போர்தொடுத்து அதைத் தொடர்ந்து கொண்டுசெலுத்தியது நெல்லையாகத் தானிருக்குமென்று தோன்றுகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு உறுதுணையாக நின்று நலிவுற்றறோரை விடுதலையாக்கி அடிமட்டத்தில் கிடந்து அவதிப்பட்டோருக்கு மனித அந்தஸ்து பெற்றுத் தந்து பல மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெரிந்து ஆரோக்கியமான பழக்கவழக்கங்களோடு அம்மக்கள் தங்களுக்கெனப் புதியதோர் சமுதாயத்தை உருவாக்கி தலை நிமிர்ந்து நிற்கச் செய்த பெருமை மிஷனெரிகளுக்கு உண்டு. இந்திய சமூக வரலாற்றில் அது பேசப்படும்.

சவரிராயாபிள்ளையின் வசன நடை எளிமையானது. நவீன தமிழ் வசன நடை ஆங்கில அமைப்புக்கள் மிக்கதாய் சாதாரண தமிழனுக்கு ஒரு புதிய மொழியாகவே தோற்றம் தந்தது. இதனால்

தான் பாரதியார் சொன்னார். 'முதலில் உனது உரைநடையை ஆங்கிலம் தெரியாத ஒரு தமிழனுக்கு வாசித்துக் காட்டு. அவனுக்குப் புரிந்தால் மட்டுமே அதை எழுத்தில் போடு அப்போது தான் உன் தமிழ் வசனம் தமிழகத்துக்குப் பயனுள்ளதாகும்' என்பதாகும். (சுப்பிரமணிய பாரதி பக். 205)

சவரிராயபிள்ளைக்கு ஆங்கிலம் தெரியாது. அவரது தமிழ் இலக்கியத் தமிழோ கிறிஸ்தவ தமிழோ வேதாகமத் தமிழோ அல்ல. நடைக்கென அவர் விசேடமுயற்சி எதுவும் எடுக்க வில்லை. அவர் மொழிநடை இயல்பாய் மிளிர்கிறது. கிராம வட்டாரத்தில் மக்கள் பேசும் வாய்மொழியாய் வந்த நடை எழுத்து அந்தஸ்துடன் கூடியிருக்கிறது. வாய்மொழியும் எழுத்து மொழியும் அழகாய்க் கலந்த ஒரு நடை.

மிக முக்கியமான இன்னுமொரு விஷயம் என்ன வெனில் டயரியில் வடமொழிச் சொற்களே இல்லை எனலாம். 2000 பக்க டயரியில் பத்து வட சொற்கள் இருந்தால் அதிகம். கிருஷ்ணபிளளை தமது இரட்சணிய யாத்திரிகத்துக்கு எழுதிய வசனநடை முன்னுரையில் 60, 70 சதவிகிதம் வடசொற்களைக் கையாண்டுள்ளார். நாட்குறிப்பேடு மற்றும் தேவசகாயத்தின் நூல்களைப் படிக்கையில் கதை சொல்வதற்கேற்ற ஒரு வசனநடை நமது மரபிலேயே உருவாகி வந்திருக்கிறது என்பது புலனாகிறது. இந்தச் செய்தி இன்றைய எழுத்தாளருக்கு சுவையாயிருக்கக் கூடியது. இரு எழுத்தாளர்களும் தங்கள் வாழ்க்கையில் நடந்த பல கதைகளை சுவையுடன் சொல்கின்றனர். சிறு சிறு விபரங்களையும் தகுந்த சொற்களைப் பயன்படுத்தி தெள்ளத்தெளிவாய் அழகாய் எழுதுகின்றனர். அந்த மரபு நடை வாசிப்போருக்கு இன்பம் பயப்பது.

பிள்ளையின் பிள்ளைகள் அலுவல் நிமித்தமாக பல்வேறு இடங்களில் பணியாற்றச் சென்றனர். தனிக் குடும்பங்கள் நடத்தினர். ஆனால் சவரிராயபிள்ளை, அனைவரின் வருவாயும் ஒன்று தான்; அனைவர் டும்பங்களையும் தாமே நிர்வகிக்க வேண்டும் என்ற பழைய உலகத்துப் போங்கைக் கடைப்பிடித்தார். முருகன் குறிச்சியில் பொதுவில் ஒரு வீடு கட்டும் முயற்சியைத் தொடங்கி வைத்தார். கணக்கு வழக்கில் புலியாக இருந்தார்.

19ம் நூற்றாண்டு முழுவதிலும் காலரா தனது கொடிய ஆதிக்கத்தை ஈவிரக்கமில்லாமல் செலுத்தியது. மக்கள் பெருவாரியாக மடிந்தனர். பிள்ளையின் குடும்பத்திலும் இழப்புக்கள் நேர்ந்தன. ஊசிமருந்து மூலம் வைசூரி ஓரளவு கட்டுபட்டிருந்தது. பிள்ளையும் ஊசிமருந்து போடும் பணியை மேற்கொண்டார். மேனாட்டு மருத்துவமுறைகள் மிஷனெரிகள் மூலம் பரவியது சுவிசேஷபுரத்தில் ஒரு தெரசர் இருந்தார். ஆனால் நாட்டு வைத்தியமே பரவலாக இருந்தது. பிள்ளைக்கும் வைத்தியம் தெரியும். ஏராளமான நாட்டு மருந்துக் குறிப்புகள் நாட்குறிப்பேடு முழுவதும் காணப்படுகின்றன. சென்னை சென்று மேல் நாட்டு வைத்தியம் பயிலும் வாய்பு தேவசகாயத்திற்கு கிடைத்த போதிலும் அவரை அனுப்பவில்லை. அத்தொழில் செய்தால் கருமம் பிடிக்கும் எனப் பயந்து நிறுத்திவிட்டனர்.

வெயில் காலத்தில் மிஷனெரிகள் குளுமைக்காகச் சென்ற இடங்கள் குற்றாலம், களக்காட்டு மலையின் அசும்பு மலை மற்றும் இளஞ்சுனை ஆகும்.

19ம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெண்ணின் நிலையை நாட்குறிப்பேடு நன்றாகவே தெரிவிக்கிறது. இந்நாட்டில் பெண்ணின் நிலை சாதியத்துடன் தொடர்புடையது. எப்படி சாதி மனிதரில் ஏற்றத் தாழ்ச்சி கற்பித்து வைத்ததோ, அப்படியே பால் பாகுபாட்டிலும் உயர்வு தாழ்வு பார்க்கப்பட்டது. ஆண்பாலர் உயர்ந்தோரெனவும் பெண்பாலர் தாழ்ந்தோர் எனவும் உறுதியாக நம்பப்பட்டது. சவரிராயபிள்ளையின் அண்ணனின் மனைவி அவரது இரு பெண்மக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் நல்ல உதாரணங்கள். பெண்களுக்கு 12,13 வயதில் திருமணம் முடிக்கப்பட்டது. அவர்கள் பிள்ளைகள் அதிகம் பெறவேண்டுமென்ற சமுதாய எதிர்பார்ப்பு இருந்தது. கிறிஸ்தவம் குறிப்பாக புராட்டஸ்தாந்தியம் வந்த பிறகு அவர்கள் நிலை மேம்படத் தொடங்கியது சாதியத்தைப் போல பெண்ணுரிமை உணர்வுகள் அரும்பத் தொடங்கின. பெண்ணும் ஆணைப் போல் கல்வியறிவு பெற்றாள். பெண் குழந்தைக்களுக்கென்று போர்டிங் இருந்தது. அவர்கள் ஆசிரியைகளாய் இருந்தனர். மிஷனெரிகள் மனைவியர் நல்ல

முன்மாதிரிகளாகத் திகழ்ந்தனர். கெர்டனே என்ற மிஷனெரி அம்மையார் பெண்கள் முன்னேற்றத்துக்காக சிறப்பாக உழைத்ததாக நாட்குறிப்பேடு தெரிவிக்கிறது. வேதநாயக சாஸ்திரியாரின் மகள் ஞானதீபம் அம்மாள் தஞ்சையிலிருந்து வந்து இங்கு பஜனைகள் நடத்தியது பற்றி பிள்ளை வியந்து எழுதுகிறார்.

பெண்களின் நகைகளின் பெயர்கள் ஏராளமாக டயரி முழுவதும் வருகின்றன. பெரும்பாலான நகை மாதிரிகளும் பெயர்களும் இன்று வழக்கிலிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பாம்படம், தண்டட்டி, முடிச்சு என்ற நகைகளின் பெயர்கள் வருகின்றன. அவை இன்றும் மாதிரி மாறாமல் இருக்கின்றன என்று சொல்ல வேண்டியுள்ளது. சேலைகள் அவை நெய்யப்பட்ட ஊர்களின் பெயர்களில் அன்று வழங்கவில்லை என்று தோன்றுகிறது. அவற்றில் காணும் வடிவங்கள் மாதிரிகளை வைத்து வரகரிசிசேலை வாழைப்பூ சேலை என்று வழங்கப்பட்டன என்று தெரிகிறது.

சவரிராயபிள்ளையின் உற்றார் உறவினர் வேலை நிமித்தம் பெரும்பாமலும் கொழும்புக்கு (இலங்கை) சென்றனர். அவர்கள் பர்மா, ரங்கூன், பினாங் முதலிய இடங்களுக்குச் சென்றதாகத் தெரியவில்லை.

அன்றைய முக்கியமான நிகழ்ச்சிகள் பல நாட்குறிப்பேட்டில் சொல்லப்படுகின்றன. கிருஷ்ணபிள்ளை தனுக்கோடி ராஜூ முதலியோரின் மதமாற்றங்கள் அவற்றில் சில. இன்று நலிவுற்றோரின் தலைவராகப் போற்றப்படும் முத்துக் குட்டி சுவாமிகள் முதலில் திருச்சபையில் உபதேசியாராகப் பணி புரிந்து விலகியதும் தெரிகிறது. சுவிசேடசபை உபதேசியார் ஒருவரை ஒரு கத்தோலிக்கர் அடித்தது தாழ்த்தப்பட்ட சாதியான் ஒருவனின் பிண ஊர்வலம் நெல்லைப் பெருவழியில் செல்லவிடமால் தடுக்கப்பட்டதால் கலவரம் வெடித்தது தபால் முறைமை மெல்ல மெல்ல நிலைத்தது. தாமிரபணியில் பாலம் கட்டுமானம் முடிந்து கோலாகலமாக விழா எடுத்தது முதலிய விவரங்களும் உள்ளன. மொத்தத்தில் 19ம் நூற்றாண்டு தமிழகம் குறிப்பாக நெல்லை பற்றியறிய நூல் மிகச்சிறப்பாகப் பயன்படும்.

ஏடுகளிலும், தனித்தாள்களிலும் நோட்டுப்புத்தகங்களிலும் இருந்த நாட்குறிப்பேட்டையும், கடிதங்களையும் பிள்ளையின் மகன் நெல்லை கச்சேரியின் சிரெஸ்தாராகப் பணியாற்றி வந்த ஜான் தேவசகாயம் கவனமாகச் சேகரித்து மூன்று தொகுதிகளாக இரண்டாயிரம் பக்கங்களாகப் 1898ல் பிரசுரித்தார். குடும்பத்தினர் உபயோகத்துக்கென 25 பிரதிகளே அச்சடித்தார். மறு ஆண்டில் நூலுக்கு முன்னுரையாக சவரிராய பிள்ளையின் வம்ச வரலாறு என்ற நூலையும் மதிப்பித்தார்.

மிஷனெரி இரேனியஸ்தான் திருப்பணியாளர்களை நாட்குறிப்பேடு எழுதிவருமாறு கூறியது. அவரும் ஒரு சர்னல் எழுதி வந்தார். அவரது மகன் ஜான் ஜான்ஸ்டன் இரேனியஸ் அதில் கண்ட குறிப்புளையும் சேர்த்து (Memoir of the Rev. C.T.E. Rhenius) *கனம் இரேனியஸின் வரலாற்றுக் குறிப்புகள்* என்ற தலைப்புடன் 625 பக்கங்கள் கொண்ட நூல் பதிப்பித்தார் என்பதும் இங்கே குறிப்பிட்டிருந்தது.

அந்திம காலத்தில் பிள்ளை வடக்கன்குளத்தில் உள்ள தமது பூர்வீக வீட்டையும் நிலத்தையும் உரிமை கோரி கச்சேரிக்குப் போகவும் தயாரானார். ஆனால் அவர் சமயம் மாறிவிட்ட காரணத்தினால் உறவினரும் கத்தோலிக்க திருச்சபையும் சேர்ந்து கொண்டு அதைத் தரமறுத்துவிட்டனர். அவர் அதற்காக அதிகம் கவலைப்படவில்லை என்பதாக தேவசகாயம் எழுதுகிறார் கடைசி நாட்களின் 'கர்த்தர் என் பங்கு அவர் என் சுதந்திரம்' என்ற திருப்தியுடன் இருந்தார். அவரது கடைசி நாட்குறிப்பு மார்ச் 29, 1874ல் ஆகும் குருவானவராக இருந்த தமது மூத்த மகன் மதுரேந்திரம் பிள்ளையின் வீட்டில் இருந்தார். 17 ஆகஸ்டு 1874ல் அவரது உயிர் பிரிந்தது. இடைச்சிவிளை (நல்லம்மாள்புரம் ஆலயவளாகத்தில் அவரது கல்லறை உள்ளது. பிள்ளையின் சந்ததியினரில் பலர் புகழ்மிக்கவர்கள். மகன் ஜான் தேவசகாயம் நல்ல எழுத்தாளர். சிந்தனையாளர் *ச. பிள்ளையின் வம்ச வரலாறு ச. பிள்ளையின் சரித்திரம்* தவிர *உற்றது உரைத்தல்* என்ற சிறு நூல் நாட்குறிப்பேட்டினுள்ளேயே சேர்க்கப்பட்டுள்ளது. திருச்சபை பற்றிய அவரது உறுதியான கருத்துக்களும் குறிப்பேட்டில் அங்கங்கே

காணப்படுகின்றன. அவரது மகன் டாக்டர். ஏசுதாசன் சவரிராயன் புகழ்மிக்கவர். டாக்டர். ஃபாரஸ்டர் பேட்டனுடன் இணைந்து திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரமத்தை நிறுவினர். உறுப்பினர்கள் மனித குலத்துக்குக்காக உழைப்பது என்ற அர்ப்பணிப்புடன் சந்நியாச விரதம் பூண்டிருந்தனர். காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடினர். மகாத்மா காந்தியும், சி.எப்ஃ ஆண்டுரூஸூம் ஆசிரமத்துக்கு வருகை தந்துள்ளனர். வளாகத்தினுள் அமைந்த கோவில் இந்திய பாணியில் கட்டப்பட்டுள்ளது. ஏசு தாசன் சவரிராய பிள்ளை பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களும் எழுதினார். *வாழ்க்கை யாத்ரீகள் The pilgrim life* என்பது அவரது தன்வரலாறு. பேட்டனும், ஏசுதாசனும் இணைந்து குற்றாலத்தில் தேவசகாயம் வீடு என்றொரு சிறிய ஆசிரமத்ததையும் நிறுவினர். அவர்கள் குடும்பபதினரில் டாக்டர் ராஜா சவரிராயன் அதை நடத்துவதற்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

ஜாண் தேவசகாயத்தின் மகள் இன்னாசியம்மாள் கிருஷ்ணபிள்ளையின் பேரனை மணந்தார். அவர்களது மகள் லீலா சவரிராயன் நாட்டுகுறிப்பேட்டின் ஒரு தொகுதியை மொழிபெயர்ப்புக்காகத் தந்து உதவினார். சவரிராயபிள்ளையின் சந்ததியினர் உலகின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ■

Bibliography:

1. *North India* by Rev. C.F. Andrews
   A.R. Mowbray & Co. Ltd.,
   London: 34 great caslte st
   Oxford circus. W
   Oxford: 9 High St. pp. 14,15
2. *A. Historical Reading of the Indian Church*
   N.C.C. Review August 1998 (p. 435)
3. சுப்பிரமணிய பாரதி
   பாரதியார் கட்டுரைகள் ப. 207

7

வித்துவான் ஹெச்.ஏ. கிருஷ்ணபிள்ளையவர்களும் சந்ததியாரும்

சந்திரமதி முத்தையா

நாடிய கருமம் பீடுறமுடிய
நீடருள் தருமிறை தாடொழுதிடு வாம். [1]

இந்தப் பிரார்த்தனையுடன் கிருஷ்ணபிள்ளையின் இரக்ஷணிய மனோகரம் துவங்குகிறது.

பெற்றோரும் இளமையும்

சங்கர நாராயண பிள்ளையும், தெய்வ நாயகி அம்மையும் கிருஷ்ண பிள்ளையின் பெற்றோர் ஆவர். 1827ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ம் தேதி அவர் பிறந்தார். பிறந்த இடம் திட்டமாகத் தெரியவில்லை. [2] அவருக்குப்பின் பிறந்த மூன்று குழந்தைகளும் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டமையால் பெற்றோர் தங்கள் குல தெய்வமான சொரிமுத்தையன் கோவிலுக்குச் சென்றனர். அது பாண தீர்த்தத்தின் கீழே வரும் தாமிரபருணி நதிக் கரையில் உள்ள குன்றுகளினிடையே உள்ளது. ஒரு மகன் பிறந்தான். முத்தையன் என்ற தெய்வத்தின் பெயரையே அவனுக்குச் சூட்டினார். கிருஷ்ணன் கிராமப் பள்ளிக்குச் சென்றார். தனியே சமஸ்கிருதமும் பயின்றார்

சங்கர நாராயணபிள்ளை தீவிர வைஷ்ணவர். [3] தினந்தோறும் மதிய வேளை உணவுக்கு முன், அவர் இராமயாணத்திலிருந்து சில கவிகளைச் சொல்லி அவற்றின் பொருளை அங்குள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்வார். [4] விஷ்ணுவின் அவதாரமான இராமரை வணங்குவார். சங்கர நாராயண பிள்ளை குளித்து சந்தனம் பூசி அன்றலர்ந்த மலர்களை ஓலைச் சுவடிகளின் மீது சிதறலாகப் போட்டு கைமணியடித்து பூசை துவங்குவார். தெய்வநாயகி அம்மை அதில் தவறாது கலந்த கொள்வார். பன்னிரெண்டு வயதிலே கிருஷ்ணனுக்கு ஓலைச் சுவடிக் கவிகளை வாசிக்க முடிந்தது இரு சகோதரரும் அருந்தொண்டர்களின் பக்திப் பாடல்களைப் பாராயணம் பண்ணினர்.

திருமதி. சந்திரமதி முத்தையா ஓய்வு பெற்ற கல்வியாளர், பாளையங்கோட்டை

கல்யாணம்

1842ம் ஆண்டு பதினான்கு வயதில் கிருஷ்ண பிள்ளைக்கு ஒன்பது வயது சிறுமி முத்தம்மாளை மணம் முடித்தனர். மணப்பெண் திருச்செந்தூரில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இரண்டு வருடங்களுக்குப் பின் ஒரு நாள் சங்கர நாராயண பிள்ளைக்கு கடுஞ்சுரமும், பிளக்கும் தலைவலியும் ஏற்பட்டது. தலையிலிருந்து இரத்தத்தை எடுக்க அட்டைகளை உபயோகித்தனர். அதிகப்படியான அட்டைகளை பயன்படுத்தவே ஏராளமான இரத்தச் சேதம் ஏற்பட்டது. அவர் இறந்து விட்டார். கிருஷ்ணபிள்ளைக்கு அப்போது வயது பதினாறுதான் என்றாலும், சென்னையிலுள்ள உடைமையாளர்கள் குடும்பத்திற்கு உதவி புரியும் வண்ணம் அவரைத் தம் தந்தையின் பணியில் அமர்த்தினர்.

உடைமையாளருக்கும் பயிரிடுபவர்களுக்கும் கைகலப்பு

பயிரிடுபவர் கிறிஸ்தவர்கள், அவர்களுக்கு மிஷனெரிகளின் ஆதரவு இருந்தது. அதனால் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருந்தனர். உடைமையாளர்கள் கிறிஸ்தவ வேலையாட்களைத் தண்டிக்க வேண்டும் என கிருஷ்ண பிள்ளையிடம் வற்புறுத்திக் கூறினர். வேலையாட்களைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க கிருஷ்ணபிள்ளைக்கு அனுபவம் போதாது. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நில உடைமையாளர்கள் சென்று தயை தாட்சன்யம் இன்றி பயிரிடுவோரை நையப்புடைத்தனர். நச்சுருவிகள் சிலர் கிறிஸ்தவர்கள் வீடுகளைக் கொள்ளையடித்துச் சேதபடுத்தினர். நல்லூரில் உள்ள மிஷனெரி ஒருவர் இதனை அறிந்து திருநெல்வேலியிலுள்ள அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பினார். இதையறிந்த கிருஷ்ணபிள்ளை வேலையாள், முத்துசாமி என்பவன், அவரை இரவோடிரவாகப் பாளையங்கோட்டைக்குத் தப்பிச் செல்ல வழி வகுத்தான். காலையில் பிடியாணை (வாரண்ட்) யுடன் அதிகாரிகள் திருநெல்வேலிக்கு வரவே கொள்ளையாடின பொருட்களை கிருஷ்ணபிள்ளை தங்கியிருந்த வீட்டுக் கிணற்றில் கொட்டிவிட்டனர். அநேக ஆண்டுகள் அந்தத் தண்ணீர் உப்புக் கரித்ததாம்.

[illegible]

[illegible]

சாயர்புரம்

1853ம் ஆண்டு கிருஷ்ணபிள்ளை சாயர்புரம் கல்விக் கூடத்தில் தமிழ் முன்ஷியாக நியமிக்கப்பட்டார். அவர் தீவிர மத வைராக்கியமுடைய இந்துவாக இருந்த படியினால் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் கிணற்று நீரை எடுத்துக் கையாளமாட்டார். தாமே வெகு தூரம் சென்று நீர் கொண்டு வந்தார். ஹக்ஸ்டபிள் ஐயர் கவிஞர் படும் இன்னல்களை உணர்ந்து, கல்விக் கூட அதிகாரிகளிடம் வேண்டி அவர் சொந்த உபயோகத்திற்காக ஒரு கிணறு வெட்டும்படி செய்தார்.

முத்தையாபிள்ளை மத மாற்றம்

முத்தையா பிள்ளைக்கு தனுக்கோடி ராஜு,[8] ஞானமணி பெருமாள் பிள்ளை என்ற இருவர் நண்பராயினர். அவர்கள் பாளையங்கோட்டை குருசாலைக்கல்[9] பள்ளியில் படித்து வந்தனர்

அவர்களிடமிருந்து கிறிஸ்தவக் கோட்பாடுகளை முத்தையா பிள்ளை கேட்டறிந்தார். ஆங்கிலமும் கற்றார். அவர்கள் இணைந்து பாலேயின்[10] சான்றுகளைக் கற்று, அதனை இந்து தத்துவமான அத்வைதத்துடன்[11] ஒப்பிட்டு நோக்கினர். கிறிஸ்தவம்தான் ஒரே உண்மையான சமயம் என்ற முடிவுக்கு வந்தனர். கிறிஸ்தவராக மாற வேண்டும் என்ற தீர்மானத்தை சார்ஜென்ட் அய்யரிடம் கூறவே அவர் அவர்களுக்குப் புகலிடம் அளித்தார். அதைக் கேள்வியுற்ற பெற்றோர் சண்டையிடத் தயாராயினர். மாவட்ட நீதிமன்றத்தில் அந்த மிஷனெரி தங்கள் பிள்ளைகளைக் கடத்திச் சென்றுவிட்டதாக வழக்குப் போட்டனர். தீர்ப்பு மூன்று நண்பர்களுக்குச் சாதகமாகவே முடிந்தது. சில மாதங்களுக்குப் பின்னர் சார்ஜென்ட் அய்யர் அவர்களுக்கு ஞானஸ்நானம் செய்வித்தார் இதைக் கேள்வியுற்ற கிருஷ்ணபிள்ளை பாளையங்கோட்டை வந்து தன் தாயாரை ஆறுதல் படுத்தினார்.

கிருஷ்ணபிள்ளை - மதமாற்றம்

அவர் தம்பி மட்டுமின்றி, அவர் நண்பர், வித்துவான் சண்முக நாதக் கவிராயர் என்பாரும் கிறிஸ்தவராகி விட்டனர். அவர் தீவிர இந்து மதப்பற்றுடையவர் இந்து இலக்கியங்களையும் வேதாந்தத்தையும் கற்றுத் தேர்ந்தவர். கிருஷ்ணபிள்ளைக்கு மனச் சஞ்சலம் அதிகமாயிற்று. அவர் பாளையங்கோட்டை செல்லும் சமயங்களில் தன் நண்பர் தனுக்கோடி ராஜுவைச் சந்தித்தார். அவர் கிருஷ்ணபிள்ளையின் எண்ணங்களை இரட்சிப்பை நோக்கித் திருப்பினார். இதைப் பற்றி கிருஷ்ணபிள்ளையே எழுதியிருக்கிறார்.

கிறிஸ்தவப் புத்தகங்களை வாசியாமலிருந்தால் மனப்பாரம் குறையும் என்ற எண்ணம் தவறென தனுக்கோடி ராஜு கூறினார். தகுந்த காரணங்களைக் கூறி நான்கு கிறிஸ்தவத் தமிழ்ப் புத்தகங்களை வாசிக்கும் படி வேண்டினார். அதில் ஒன்று ஜாண் பன்னியன் எழுதிய பரதேசியின் மோட்சப் பிரயாணம் என்பது. எல்லாத் தீய பழக்கங்களையும் அறவே அகற்றிவிடும்படி அறிவுரை கூறினார்.[12]

தான் கடைத்தேற கிறிஸ்துதான் ஒரே வழி என்பது கிருஷ்ணபிள்ளைக்கு உறுதியாகத் தெரிந்தது. ஆனால் அவர் விளைவுகளுக்கு அஞ்சினார். அவர் தன் தாயாரையும், மனைவியையும், பிள்ளைகளையும் வெகுவாய் நேசித்தார்.

மதமாற்றம் என்றால், சமூகத்தினால் விலக்கப்படுவதும் மற்றும் இயற்கையான பாசபந்தங்கள் துண்டிக்கப்படுதலுமாகும். கிறிஸ்தவனாக மாறுவது சாவிலும் கேடு கெட்ட செயலாகும் என்ன செய்வது?

மற்றொரு நாள் இரவில், பாளையங்கோட்டையில் கிருஷ்ணபிள்ளையின் இல்லத்தில், அவரும் தனுக்கோடி ராஜுவும் அவருடைய சந்தேகங்கள் மற்றும் இன்னல்கள் குறித்துப் பேசினர். மனிதராகிய நமக்கு வரவேண்டிய தண்டனையை கிறிஸ்து தாமே ஏற்றுக் கொண்டு சிலுவை மரணத்தின் இன்னல்களை அடைந்தார் என்றும் இந்த மகத்தான செயலை நாம் நம்பும் போது நமக்கு இரட்சிப்பு வருகிறது என்றும் விளக்கமாகச் சொன்னார். "அன்றே தேவ ஆவியானவர் இந்த உண்மையை நான் எனது உள்ளத்தில் உணரும்படி செய்தார். அன்றே கிறிஸ்துவை விசுவாசித்தேன். அன்றே அவர் திருநாமத்தை முன்னிட்டு ஜெபம் செய்யத் துணிந்தேன். அன்றே கிறிஸ்தவனாகத் தீர்மானம் பண்ணினேன்".[13]

அப்பொழுதே, கிருஷ்ணபிள்ளை கிறிஸ்துவைத் துதிக்க முதல் கவியை இயற்றினார். ஒருக்கால் அதுவே அவர் எழுதிய முதல் கவியாகவும் இருக்கலாம்.

கருணையங்கடலே அந்தகாரமாம் வினையைப் போக்கு
மருணனே அடியேற்காக ஆருயிர் விடுத்த தேவே
பொருணயந் தெரியா தீய புல்லியனெனை யாட் கொள்ளத்
தருணமென்னிதய நிற்கே சமர்ப்பணம்
கருணாமூர்த்தி. [14]

நம்மை முழுவதுமாகக் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால் மனச் சமாதானம், வழி நடத்துதல் - நிறைவான வாழ்க்கை - நம்மை எதிர் கொண்டு வரும் என்பதைக் கிருஷ்ணபிள்ளை அறிந்து கொண்டார்.

மீண்டும் கிருஷ்ணபிள்ளையே சொல்கிறார்:-

"இந்த மனமாற்றத்தை குடும்பத்தினர் யாரும் அறியவில்லை[15] தினசரி சடங்காச்சாரங்களை நான் புறக்கணிப்பதை அவர்கள் கண்டு சந்தேகப்பட்டு கேள்வி தொடுக்க ஆரம்பித்தனர். நான் அவற்றைக்

கவனியாதிருந்தேன். ஒரு நாள் மெதுவாக என் மனைவியிடம் கிறிஸ்தவத்தைக் குறித்து பேச்செடுத்தவுடனேயே அவர் சத்தமிட்டு அழுது புலம்பி தன்னை மாய்த்துக் கொள்வதாகச் சொன்னார். அதனால் நான் சென்னைக்குச் சென்று பின் குடும்பத்தினரையும் சென்னைக்கு அழைத்துக் கொண்டால், எல்லோரும் சேர்ந்து ஒன்று போல ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தேன் .... அவ்வாறே 1857ம் ஆண்டு செப்டம்பரில் சென்னை சென்றேன். குடும்பத்தினரைச் சென்னைக்கு வரும்படி எழுதினேன் அவர்கள் வரவில்லை. என் எண்ணத்தை யாரோ அவர்களிடம் சொல்லி விட்டனர்."

கிருஷ்ணபிள்ளையையும் குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெறுதல்

1858ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் தேதி, பரி. தாமஸ் ஆலயம், மைலாப்பூர் சென்னையில் கிருஷ்ணபிள்ளை ஞானஸ்நானம் பெற்றார். ஹென்றி ஆல்பிரட் என்று பெயரிடப்பட்டது. சில மாதங்களில் சாயர்புரம் திரும்பினார். கிருஷ்ணபிள்ளையின் குடும்பத்தினர் கிறிஸ்தவரானதில் தனுக்கோடி ராஜுவுக்கே முக்கிய பங்கு உண்டு. அவர் தொடர்ந்து தெய்வநாயகி அம்மையிடம் சென்று, முடிவில் கிறிஸ்து தான் இரட்சிப்புக்கு ஒரே வழி என்று நம்பும்படி செய்தார். அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. மீண்டும் கிருஷ்ணபிள்ளை மனைவியிடமும் அவரே கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லி அவரையும் கிறிஸ்தவராக்கினார்..

வேறுபட்ட பல தொழில்கள்

கிருஷ்ணபிள்ளை தன் நீண்ட வாழ்நாளில் பலவிதமான தொழில்கள் புரிந்திருக்கிறார். முதலில் ஒரு பண்ணை நிர்வாகியாக பணிபுரிந்தார். சாயர்புரம் கல்விக் கூடத்தில் தமிழ் பண்டிதர் பணி புரிந்தார் திருநெல்வேலி சி.எம்.எஸ். கல்லூரியில் மூத்த தமிழ் பண்டிதராக இருந்தார். இறை இயல் தேர்வுகளில் வேத அறிவியலில் தேர்வாளராக இருந்தார். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றினார். அநேக மிஷனெரிமார்கள் அவரிடம் தமிழ் கற்றார்கள். கைதேர்ந்த உப்பு தயாரிப்பாளராக இருந்தார். அவரிடம் ஒரு காப்பித் தோட்டமும் இருந்தது. எதிர்பார்ப்புக்கும் மேலாக அதில் வருமானம் வந்தது.

கடைசியாக அவர் ஓர் இலக்கிய சமயப்பரப்பாளராக 1892லிருந்து தாம் இறக்கும் வரை பணியாற்றினார். எல்லா இடத்திலும் அவரை அதிகம் பாராட்டினார்கள். தொழிலில் தன் முழு மனதையும் கவனத்தையும் செலுத்துவார். அநேகமாக விடுப்பு எடுக்க மாட்டார். கல்வி கற்பிக்கும் போது சந்தேகங்கள் தெளிவாக்கப்பட்டனவா மாணவர் கடினமான பகுதிகளை விளங்கிக் கொண்டனரா எனக் கவனிப்பார். அவர் அதிகம் கற்றறிந்தவர்,மற்றும் உயர்ந்த கிறிஸ்தவக் கொள்கைகளுடையவர் என்பதினால் யாவரும் பக்தியுடனும், கருணையுடனும் அவரிடம் பழகுவார். பொய்யே பேச மாட்டார். அவர் சொந்தப் பிரச்சினைகள் அவர் பணியைப் பாதிப்பதில்லை.

சொந்தப் பிரச்சினைகள்

கிருஷ்ணபிள்ளைக்கு நிறைய சொந்தப் பிரச்சினைகள் இருந்தன. 1878ல் அவர் கடைசிப் பையன் தெய்வநாயகம் குடற்காய்ச்சல் வந்து மிக்க அவதியுற்றான். சரியான வைத்தியரோ மருந்துகளோ இல்லாத காலம் அது. பன்னிரெண்டாம் நாள் கிருஷ்ணபிள்ளை அதிகாலை 3 மணிக்கு திரித்துவ தேவாலயத்திற்குச் சென்று நுழை வாயிலில் முழங்கால் ஊன்றித் தன் மகனைக் காப்பாற்றும் படி ஒரு மணி நேரம் இரட்சகரிடம் வேண்டினார். முடிவில் உம் சித்தப்படி ஆகக் கடவது என்றார். மறுநாள் மகன் இறந்து விட்டான். மகனை இழந்த தாயாரின் துக்கம் மிக அதிகமாக இருந்தது. தன்னை விட்டுப் பிரிந்த மகனிடம் தானும் போய்விட வேண்டுமென்று அநேக நாட்கள் பட்டினியாகக் கிடந்தார். சிறிதளவு சாப்பிடும்படி வற்புறுத்திய பின்னர் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு வருடக் கணக்கில் விரதம் இருந்தார். இவ்வாறு நீடித்த நாள் பிடிவாதமாக பட்டினியிருந்து எல்லோரையும் விசனப்படுத்தினார்.

1889ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் மறுமகன் ராமச்சந்திரய்யா [16] நுரையீரல் காய்ச்சலில் இறந்து விட்டார். அவர் பெண் மக்கள் ஸ்ரீரங்கமும், வடிவும் மருமகன்கள் சண்முக சுந்தரமும், புன்னைவனமும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். ஐம்பது வருட மண வாழ்வுக்குப் பின்னர் மனைவி 1891ம் ஆண்டு இறந்து விட்டார். அவர் ஒரு இலட்சிய இந்தியப் பெண்மணி, தன் கணவரை மதித்து,

அன்புடன் செயல்பட்டார். அவர் தம்பி 1895ல் சடுதியில் இறந்து விட்டார். எலும்புருக்கி நோயில் மகள் பாக்கியம் இறந்து விட்டார். அவர் வீடு சென்னையில் இருந்தது. அங்குதான் அவர் தம்பிமார், தமக்கை பிள்ளைகள் அனைவரும் தங்கி மேற்கல்வி பயின்றனர்.

இரக்ஷணிய யாத்திரிகம்

அவரது உத்தியோக மாறுதல்களோ, தனிப்பட்ட துன்பங்களோ திருஷ்ணபிள்ளை இரக்ஷணிய யாத்திரிகம் இயற்ற இடையூறாக இருக்கவில்லை. அது தேவானுக்கிரகம் என்று அவரே சொல்கிறார். தன் ஓய்வு நேரங்களில் இரவுகளில், வியாதியாக இருக்கும் போது கூட அவர் அதை இயற்றினார். பரதேசியின் மோட்ச பிரயாணத்தில் சில வரிகளை வாசித்து விட்டு கட்டிலில் அமர்ந்து தன் மனதில் முதலில் கவியை உருவாக்கி பின் தன் அழகான கையெழுத்தில் நோட்டுப் புத்தகத்தில் எழுதுவார். அதில் எவ்வித அடித்தலோ, திருத்தலோ இருக்காது. ஒவ்வொரு மாதமும் *நற்போதகம்*[17] பத்திரிக்கையில் கவிகள் வெளி வந்தன. டி. உவாக்கர் அய்யர்[18] இரக்ஷனிய யாத்திரிகத்தில் அதிக ஆர்வமுடையவரானார். அதை வெளியிட சென்னையிலுள்ள கிறிஸ்தவ இலக்கிய சங்கத்திற்குக் (சி.எல்.எஸ்) கொடுத்து விடும்படி அதிகமாகக் கேட்டுக் கொண்டார். டாக்டர் ஜான் மர்டாக் அதை 1894ல் வெளியிட்டார்.

பிற நூல்கள்

மத மாற்றமடைந்த துவக்கத்தில், கிருஷ்ணபிள்ளை ***இரக்ஷணிய நவநீதம்*** எழுதினார். நூறு பாக்களில் அவர் இயேசு கிறிஸ்துவைப் பின் பற்றுவதற்கான நூறு காரணங்களைக் கூறுகிறார். ஒரு புறம் கடவுளின் அன்பைக் குறித்து மென்மையாக உணர்த்தியும், மறுபுறம் நரக அக்கினியைக் குறித்து வன்மையாக அச்சுறுத்தியும் போதிக்கிறார். இரக்ஷணிய யாத்திரிகத்திலுள்ள பதினொரு தேவாரங்களுடன் சில கீர்த்தனைகளையும் புனைந்து சேர்த்து ***இரக்ஷணிய மனோகரம்*** என்ற நூலை உருவாக்கினார். 1898ம் ஆண்டு சி.எல்.எஸ் அதை வெளியிட்டது. ***இரக்ஷணிய சமய நிர்ணயமும்*** 1898ல் சி.எல்.எஸ் மூலம் வெளிவந்தது. ***போற்றித் திரு அகவல்*** மற்றும் ***இலக்கண விளக்கச் சூடாமணி*** என்ற இரு நூல்களும் அவர் காலத்துக்குப் பின் அச்சானவை.

அவரது கடைசி நாட்கள்

கிருஷ்ணபிள்ளையின் அருமை மகன், திரவியம் சென்னையில் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தவர், எலும்புருக்கி நோயினால் பீடிக்கப்பட்டு 1898ம் ஆண்டு பாளையங்கோட்டை வந்தார். குடும்பத்தில் திரவியம் ஒருவருக்குத் தான் தமிழ் ஆர்வம் உண்டு. தகப்பனாருக்கு அச்சுப்பிழை திருத்தம் செய்து கொடுப்பார். கிருஷ்ணபிள்ளை தலைமகள், தெய்வநாயகி, வயிற்றில் கட்டியினால் அதிக சுகவீனமாக இருந்தார். அவர் தெருவின் மறுபுறம் அருகில் வசித்தமையால் தகப்பனாரைத் தினசரி பார்த்து வருவார். குடும்பத்தை ஒன்றுபடுத்திப் பேணுபவர் அவர். தாயாரின் மறைவுக்குப் பின்னர் தகப்பனாருக்கு ஆறுதலாக இருந்தவர். திரவியம் மற்றும் தெய்வநாயகி சுகவீனமுற்றது கிருஷ்ணபிள்ளையை அதிகம் பாதித்தது. 1899ம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்தியில் அவர் அரை - நினைவுடன் படுக்கையில் வீழ்ந்தார். அதன்பின் அவர் முழு நினைவும் பெறவே இல்லை. வந்து பார்த்த நண்பர்களிடம் பேச முடியவில்லை. கவிஞரின் கடைசி நேரத்தைப் பற்றி டோனாவூர் ஏமி கார்மைக்கேல் அம்மையார் பின்வருமாறு கூறுகிறார்.

"அவர் மரணமடையுந் தருவாயிலிருந்தார். பிரக்கினையற்றிருந்தவர் போல் காணப்பட்டார். இயேசு என்றும் பதத்தை தமிழ் பாஷையில் பெரிதாக ஒரு கார்டில் எழுதிக் கொண்டு போயிருந்தேன். அவரைக் கண்காணித்திருந்தவர்கள் அவர் என்னை அறியமாட்டாரென்றும் அவர் வாசிக்கக் கூடாத நிலையிலிருக்கிறாரென்றும் துயரத்துடன் சொன்னார்கள். அவரோ கண்களைத் திறந்து அப்பதத்தைக் கருத்துடன் நோக்கினார். அவர் முகமோ ஒருபெரிய ஒளி வீசியது போல் பிரகாசித்தது. அம்முகத்தில் வீசிய வெளிச்சத்தையும் அன்பு நிறைந்த கண்களோடு அப்பதத்தை பார்த்த அளவில் அவரில் வெளிப்பட்ட புன் சிரிப்பையும் நான் ஒரு காலும் மறவேன். பிறகு அவர் தன் கையைத் தூக்க யத்தனித்ததை அறிந்தோம். அருகிலிருந்த ஒருவர் அக்கையத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார். அவருடைய விரல் அதை எழுதுவது போல் அட்சரத்தின் பின் அட்சரமாக அப்பதத்தின் பேரில் வரைந்து வந்தது. அவரால் பேச முடியவில்லை. ஆனால் நடுக்கங் கொண்ட விரலோ

திரும்பத் திரும்ப இயேசு என்னும் பதத்தை வரைந்து கொண்டே இருந்தது. பிறகு அவர் உதடு அசைந்தது. மரண இருளால் மூடியிருந்த கண்களும் பிரகாசித்தன அவர் இயேசுவுடன் பேசினார் என்று அறிந்தோம். அதன் பின் திருப்தியடைந்த பார்வையுடனும் களைத்துப் போன ஒரு குழந்தை தன் தாயின் மடியில் அடைக்கலம் புகுந்ததும் சந்தோஷத்துடன் நித்திரை போகும் சமயத்தில் பார்க்கும் பார்வையுடனும் இப்பெரியவர் ஒரு பக்கமாகத் திரும்பித் தன் கண்களை மூடினார். அவருடைய விரலோ இயசேு என்னும் பதத்தை இன்னும் தொட்ட வண்ணமாகவேயிருந்தது". [20]

கிருபாகர கருணாகர கிளர் புண்ணியப் பொருப்பே
பெருமாவடி யேன்செய் பிழை பொறுத்தென்னுயிர் பிரிகால்
மருவார் தரு குருசிற்றிகழ் வதனாம்புஜ மும்முன்
திரு நாம மந்திரமும்மகந் திகழ்க் கடைக்கணியே.

என்ற அவர் ஆன்மாவின் பேராவா நிறைவு பெற்றது.

1900ம் ஆண்டு பெப்ருவரி 3ம் தேதி அவர் இறந்தார். அவர் பூதவுடல் சமாதானபுரம் சி.எம்.எஸ். கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது பேரன் கா.தா. முத்தையா 1954ம் ஆண்டு அந்தக் கல்லறை மீது நினைவுச் சின்னம் அமைத்தார்.

கிறிஸ்தவத்தை இந்தியமாக்குவது

இந்தியக் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதனால், கிறிஸ்தவக் கொள்கைகள் இந்தியாவிற்கு நெருங்கிய சம்பந்தமுடையதாகின்றன. இந்தியாவில் சச்சிதானந்தா[21] என்ற சொல் பரவலாக வழக்கத்திலிருந்து வருகிறது. அது மூன்று சமஸ்கிருத பதங்களாலானது சத் என்றால் இருப்பது. சித் என்றால் அறிவு ஆனந்தா என்றால் மகிழ்ச்சி. திருமறையை ஊன்றிப் படித்தால். இவை அதில் தெரியவரும். தவிர பரிசுத்தமும், அன்பும் கூடுதலாகச் சொல்லப்பட்டிருக்கும். அனைவருக்கும் தெரிந்த *சத்தாய் நிஷ் களமாய்* என்ற கீர்த்தனையில் கிருஷ்ண பிள்ளை சச்சிதானந்தாவை முக்கிய கருத்தாகப் பயன்படுத்தியிருக்கிறார். மேலும் *நிஷ்களமாய் ஒரு சாமியமும்மிலதாய்* என்ற கடவுளின் இரு பண்புகளையும் சேர்த்திருக்கிறார்.

சத்தாய் நிஷ்களமாய் யொருசாமியமும்மிலதாய்
சித்தாயானந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
அத்தால் நாயடியேன் கடைத் தேறுவ தென்ப வுந்தீர்த்
தத்தா வுன்னையல்லாலெனக்கார் துணை யாருறவே. [22]

கிறிஸ்தவம் இந்தியாவில் நிறைவாய்க் கனி தர வேண்டுமானல் அது வழிபாட்டு முறைகளிலும், இலக்கியத்திலும், சபையின் ஆட்சி முறையிலும் இந்தியமயமாக வேண்டும்.

மேல்நாட்டுப் பண்பு புகுத்தப்படுதல்

சென்ற நூற்றாண்டுமிஷனெரிமார் இந்திய கிறிஸ்தவர்களை அவர்களுடைய ஆடை முடி அலங்காரங்களை மாற்றியமைக்கக் கட்டாயப்படுத்தினர். ஆற்றில் குளிக்கக் கூடாது. தரையை சாணத்தினால் மெழுகக் கூடாது. முற்றம் தெளிக்கக் கூடாது என்றெல்லாம் கட்டுப்படுத்தினர். தங்கள் குடுமிகளை எடுத்து விடச் சம்மதியாதபடியினால் முத்தையாபிள்ளைக்கும் மற்றும் அவர் இரு நண்பருக்கும் சார்ஜெண்ட் ஐயர் ஞானஸ்நானம் கொடுக்கத் திட்ட வட்டமாக மறுத்து விட்டார். அந்தக் காலத்தில் முன் மண்டையில் பிறை வடிவ முடி எடுத்து விட்டு, மீதியைப் பின்புறம் ஒரு முடிச்சாக இட்டுக் கொள்வர். அதுதான் குடுமி எனப்படும். மூன்று மாத காலம் சென்றபின்தான் சார்ஜெண்ட் ஐயர் அவர்கள் குடுமியை நீக்காமலேயே ஞானஸ்நானம் செய்வித்தார். சென்னையில் கிருஷ்ணபிள்ளைக்கு இந்தப் பிரச்சினை கிடையாது. அவர் தன் நீண்ட முடியைத் குறித்து பெருமை கொள்வார். அவர் தன் பேரப்பிள்ளைகள் குடுமி வைத்திருக்க வேண்டும் என்று அதிகம் விரும்பினர். முடி வெட்டியிருந்தால், அவர்களைத் திட்டி, முன் மண்டையிலுள்ள முடியை நாவிதனை விட்டு எடுத்து விடுவார். முடி வளர்த்து குடுமி வைக்கச் சொல்வார். புதிதாக மதம் மாறிய கிறிஸ்தவர் புலால் உண்ண வேண்டும் என மிஷனெரிமார் சொன்னார்கள். அவர்கள் பெயரை மாற்றிவிட வேண்டும். அவர்கள் அந்தஸ்தைக் குறிக்கும் அடைமொழிகள் பெயருடன் இணைக்கப்படலாகாது. ஆனால் மிஷனெரிமார் மட்டும் அவ்வாறு சேர்த்துக் கொள்ளலாம். இதனைக் குறித்து முத்தையபிள்ளை ***கிறிஸ்தவர்கள் ஆசாரமும் குருமார் போதகமும்.*** [24] என்ற ஒரு சிறு புத்தகம் எழுதினார். அதில் அவர்

மிஷனெரி குறுக்கீடுகள் தேவையற்ற அகங்காரமுடையவை எனக் கண்டித்தார்.

கிருஷ்ணபிள்ளையின் வழித் தோன்றல்கள்

கிருஷ்ணபிள்ளையின் குடும்பம் பெரியது. அவர் மூத்த மகள் தெய்வநாயகியின் மக்கள் அவரிடம் அன்பாய் இருந்தனர். மூத்தமகன் எ. வேதாஸ்தரி கிருஷ்ண பிள்ளையின் சாயல். திருவல்லாவில் எம்.ஜி.எம். உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். இரண்டாவது மகன் கே. எஸ். பொன்னுசாமி இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பெயர் பெற்ற கிரிமினல் வழக்கறிஞராக பாளையங்கோட்டையில் பணி ஆற்றினார். மூன்றாவது மகன் கா. தாஸ் கிருஷ்ணையா பாளையங்கோட்டை பரி.யோவான் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். ஒரு வீடு கட்டி அதனை கிருஷ்ண விலாஸ் என்று தன் பாட்டனார் நினைவில் பெயரிட்டார். அவர் மக்கள் கிருஷ்ணையா என்ற பெயரைத் தங்களுக்கு வைத்துக் கொண்டனர். - பூட்டனாரின் பெயர் நிலைபெறுவதற்காக. இப்போ அவர் பேரப்பிள்ளைகளும் பூட்டப் பிள்ளைகளும் கிருஷ்ணையா என்ற பெயரையே தங்களுடைய தாக்கி விட்டனர். அவர் மகன் எஸ். கிருஷ்ணையா ஓர் எழுத்தாளர் புதினங்கள் கவிதைகள் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் எழுதியிருக்கிறார். அவர் கவிதைகள் கட்டுரைகள் ***நியூடைரக்ஷன்ஸ், நியூயார்க்*** பத்திரிக்கைகளில் வெளியாகியிருக்கின்றன. அநேக ஆண்டுகள் ***தி பாங்காக் வர்ல்ட்*** என்ற செய்தித் தாளின் பதிப்பாசிரியராக இருந்தார். இந்தியாவின் நெருக்கடி நிலை (எமர்ஜென்சி)க்கு எதிராக எழுதினார். அதனால் அவர் அநேக வருடங்கள் இந்தியாவிற்கு வரமுடியாமற் போனது. தெய்வநாயகியின் ஒரே மகள் பாக்கியம் காந்திமதி பள்ளி மேற்பார்வையாளராகப் பணி புரிந்தார். கிருஷ்ணபிள்ளையின் நான்காவது மகள் ஸ்ரீரங்கத்தின் மகள், பாப்பா சுந்தரம், டோனாவூரில் ஆசிரியை ஆகப் பணிபுரிந்து பின் நற்செய்தி பரப்பும் பணி செய்தார்.

கிருஷ்ணபிள்ளையின் இளைய சகோதரர் முத்தையாபிள்ளை தமிழ் வேதாகமத்தின் மொழிப் பெயர்ப்பு திருத்தல் குழுவிலும் ஜெப புத்தக மொழி பெயர்ப்பு திருத்தல் குழுவிலும் பணி ஆற்றினார். அவர்

மூத்த மகன் சர் டேவிட் தேவதாஸ் தன் பெரிய தகப்பனார் கிருஷ்ணபிள்ளையிடம் அதிகப் பற்றுதல் உடையவர். பல முக்கியமான பிரச்சினைகளில் தன் பெரிய தகப்பனாருக்கு ஆலோசனை கூறுவார். கிருஷ்ண பிள்ளையும் தன் பிள்ளைகளை விட இவரிடம் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். சர். டேவிட் தேவதாஸ் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர் பதவியாற்றி பின் நீதிபதியானார். தன் தகப்பனார், பெரிய தகப்பனார் இவருடைய வாழ்க்கை வரலாறுகளை எழுதியுள்ளார். 1951ம் ஆண்டு *இரக்ஷணிய மனோகரத்தின்* மூன்றாவது பதிப்பை வெளியிட்டார். முத்தையாபிள்ளை பேரன் பிரிகேடியர் டி.கே. தியாகராஜ் கேம் கேரன் யுத்தத்தில் பங்கு பெற்றதற்காக மகா வீர் சக்கரம் பெற்றவர். ஒரு கொள்ளுப் பேரன் ராஜன் தியாகராஜன் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் பெயர் பெற்ற பிளாஸ்டிக் அறுவை மருத்துவராக இருந்தார். மற்றொரு கொள்ளுப் பேரன் ராஜா செல்லையா, பெயர் பெற்ற நிதித்துறை நிபுணர் ஐ.எம்.எப். உறுப்பினர் தற்போது இந்திய அரசாங்கத்தின் நிதி ஆலோசகர்.

வாசிப்பதற்கு *இரக்ஷணிய யாத்திரிகம்* மிகவும் கடினமாக இருக்கிறது என்று குறைபட்டுக் கொள்கின்றனர். முன்னுரையில் கிருஷ்ணபிள்ளை தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஆங்கிலம் கற்பதில் உண்டாகும் இடையூறுகளைச் சமாளிப்பதில் காட்டும் ஆர்வத்தில் பத்தில் ஒரு பங்கு எடுத்துக் கொண்டால் கண்டிப்பாக அவர்களுக்குக் கவிகள் புரிந்து விடும் என்கிறார். இந்தக் கதையை எடுத்துச் சொன்னால் அது அநேக ஆன்மாக்களுக்குப் பயன் தரும்.[25]

யாரால் தான் கிருஷ்ணபிள்ளையை மதிப்பிட முடியும்?

அவர் கவி தான் அவரின் சுருக்கம். பேராயர். ஏ.ஜே. அப்பாசாமி சொல்கிறார். வான மண்டலங்களுக்கு மேலே கிறிஸ்து இருக்கிறார். என்று மட்டும் அவர் எண்ணவில்லை.

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ் சக்கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழத்துகவாய் - புந்திக்குள்
வீற்றிருக்கும் ஜேசு விரைமலர்ப்பூஞ் சேவடிக்கே
ஆற்றுக மெய்யன் பின்பணி.[27] ■

அடிக்குறிப்புகள் :-

1 இரட்சண்ய மனோகரம் பக்கம் 1
2 கிருஷ்ணப்பிள்ளை வாழ்க்கை வரலாறு : சர் டேவிட் தேவதாஸ் பக்கம் 7
3 விஷ்ணுவைக் கடவுளாக ஏற்றுக் கொண்டவர்.
4 தமிழ் கிறிஸ்தவக் கவிஞர் : பேராயர் ஏ.ஜே. அப்பாசாமி
5 வெங்கு முதலியார் சென்னை வாசி. பருத்தி வியாபாரம். சிறந்த வியாபாரம் உண்டு. கிழக்கிந்திய கம்பெனியுடன் வியாபாரம் செய்தார். வசதியுள்ளவர். கொடையாளி. ஓய்வு பெற்று பாளையங்கோட்டையில் தங்கினார்.
6 இரேனியஸ் அய்யருக்கு தமிழ் இலக்கணம் கற்பித்தவர்.
7 ஆதாரம் - பேராயர் ஏ. ஜே. அப்பாசாமியின் தமிழ் கிறிஸ்தவக் கவிஞர்.
8 ராஜூ என்பவர்கள் விஜயநகர ராஜ்யத்திற்கு வந்த போர் வீரர்கள் தெற்கே ராஜபாளையத்தில் வந்து தங்கினவருடைய சந்ததியார் எனச் சொல்லிக் கொள்கிறார்கள்.
9 குருஷாங்க்ஸ் ஆங்கிலோ இந்தியர். ஆங்கியலம் கணிதம் கற்பிப்பதில் கைதேர்ந்தவர். அப் பள்ளித் தலைமை ஆசிரியர். பார்வையற்றவர்.
10 பாலே ஆங்கில வேதாந்தி. கிறிஸ்தவத்தில் சான்றுகள் என்ற புத்தகம் எழுதியுள்ளார்.
11 கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார். எல்லாமே கடவுள் என்ற கொள்கை.
12 கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை வரலாறு : சர். டேவிட் தேவதாஸ்
13 கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை வரலாறு : சர். டேவிட் தேவதாஸ்
14 இரட்சண்ய யாத்திரிகம்
15 ஆதாரம் - கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை வரலாறு சர். டேவிட் தேவதாஸ்
16 மசூலிப்பட்டணம் நோபிள் போதகர் தீட்சையளித்த பிராமணர்களில் ஒருவர்.
17 நற்போதகம் முதன் முதலில் வெளியான தமிழ் கிறிஸ்தவ பத்திரிகை. இன்றும் வெளி வருகிறது.
18 சி.எம்.எஸ். மிஷனெரி, திருநெல்வேலி, ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கணிதம் கற்றவர்.
19 சி.எல்.எஸ். செயலாளர்.
20 ஏமி கார்மைக்கேல் எழுதிய கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை தமிழாக்கம் பி.எஸ். கடம்பவன சுந்தர நாயனார்.
21 ஆதாரம் தமிழ் கிறிஸ்தவ கவிஞர் பிஷப் ஏ.ஜே. அப்பாசாமி
22 இரட்சண்ய யாத்திரிகம் 1 வது பருவம் பக்கம் 147
24 சீனிவாசகம்பிள்ளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
25 “இந்த ஒன்று” கார்மைக்கேல் அம்மையார்
26 ஆதாரம் - தமிழ் கிறிஸ்தவக் கவிஞர் பேராயர் ஏ.ஜே. அப்பாசாமி
27 இரட்சண்ய மனோகரம் கடைசி வரிகள்.

8

ஆபிரகாம் பண்டிதர் குடும்பம்

ஏ.ஜே. சாம்ஸ் டேவிஸ்

முன்னுரை

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறிஸ்தவம், திருநெல்வேலியில் அடியெடுத்து வைக்க தொடங்கியது. மெல்ல மேல் திருநெல்வேலிக்குப் பரவியது. சா.தி. இரேனியஸ் தான் முதன் முதலில் அவ்விடத்தில் கிறிஸ்துவின் மகிமையை எடுத்துக் கூறினார். கிழக்கில் நடந்தது போல் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லையென்றாலும் பல நல்ல தலைவர்கள் உருவாக்கப்பட்டனர்.

பங்களா சுரண்டை மேற்கு திருநெல்வேலியில் ஒரு முக்கிய ஊராகத் திகழ்ந்தது. கிறிஸ்தவ பாதிரியாரின் இருப்பிடத்தை பங்களா என்றும், பங்களா சுரண்டை என்பது ஒரு ஊராகவும் இருந்தது. தியோபிலஸ் ஜார்ஜ் பேரன்பர்க் என்ற ஐரோப்பிய குரு 1844 முதல் 1857 வரை அங்கு மிஷனெரியாக இருந்தார். சுரண்டைக்கு வடக்கே சாம்பவர் வடகரை என்ற கிராமம் இருந்தது. அங்கு சுப்பிரமணிய நாடார் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு 13 குழந்தைச் செல்வங்கள். ஒரு நாள் காலரா வியாதியினால் திடீரென 11 குழந்தைகள் இறந்து போயின. முத்துசாமி என்ற மகனும் ஒரு மகளும் உயிர் பிழைத்தனர். அங்கு இருந்த கிறிஸ்தவ மையம் தான் சுப்பிரமணி நாடாருக்கு ஆறுதல் தந்தது. சிறிது காலம் கழிந்த பின் கிறிஸ்தவ மதத்தின் சகோதரத்துவத்தை நன்கு உணர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இவரது மகன் முத்துசாமி நாடார் அன்னம்மாள் என்பவரை மணந்தார். சாம்பவர் வடகரையை விட்டு விட்டு பங்களா சுரண்டையில் குடியேறினார். முத்துசாமி நாடார் அங்கு இருந்த ஐரோப்பிய பாதிரியார் இல்லத்தில் தோட்டக்காரராக வேலை செய்து வந்தார். அவரது மனைவிக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தபடியால் பிள்ளைகளுக்கு கிறிஸ்தவக் கதைகள் சொல்லிக் கொடுத்து வந்தார். இவர்கள் இருவருக்கும் 1859 ஆகஸ்ட் 2ம் தேதி பிறந்தவர்தான் ஆபிரகாம்.

திரு. ஏ.ஜே. சாம்ஸ் டேவிஸ், ஓய்வு பெற்ற முதல்வர் S.B.O.A. ஜூனியர் கல்லூரி சென்னை - 600 101.

இளமைப் பருவம்

ஆபிரகாம் தன் தொடக்க கல்வியை சுரண்டையிலும் பின்பு பன்றிகுளத்திலும் முடித்தார். அவர் மிகவும் நல்லதொரு மாணாக்கனாகத் திகழ்ந்தார். எல்லாப் பாடங்களிலும் முதல்இடம் பெற்றார். இவரது படிப்பாற்றலைக் கண்டவர்கள் அனைவரும் இவரை ஆசிரியர் பயிற்சிக்குச் செல்ல ஆலோசனை கொடுத்தனர். அப்போது இந்தியக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் செயலாளர் டாக்டர். மர்டாக் கல்வி சார்ந்த அரிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். வடஇந்தியாவிலும், தென் இந்தியாவிலும் ஆசிரியர் பயிற்சிக்குப் பள்ளிகள் நிறுவத் திட்டமிட்டார். திண்டுக்கல் மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கினார். ஆபிரகாம் திண்டுக்கல் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெறச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 15. பள்ளி மேலாளர் மேதகு யார்க், ஆபிரகாமின் அளவு கடந்த புலமையையும் முற்போக்குப் பண்புகளையும் கண்டு வியந்தார். ஆபிரகாம் போதிப்பதில் தனக்கென ஒரு உத்தியை வகுத்துக் கொண்டார். அதில் அவருக்கு நிகர் அவரே என்று திகழ்ந்தார். வரைபடங்கள் வரைவதிலும் அவர் தேர்ச்சி பெற்று விளங்கினார். திரு. யார்க் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றார். வரைபடங்களில் ஈடுபாடு கொண்டிருந்த ஆபிரகாம் திரு. யார்க் வைத்திருந்த புகைப்படக் கருவியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். பின்பு அக்கலையையும் செவ்வனே கற்றார். தனக்கென ஒரு புகைப்படக் கருவியை வாங்கினார். படங்கள் எடுத்தார். அவற்றை லண்டனுக்கு அனுப்பினார். இவரது நிகரற்ற படமெடுக்கும் திறமையைக் கண்டு வியந்த லண்டன் ராயல் சொசைட்டி ஆப் ஆர்ட்ஸ் இவரைத் தன் உறுப்பினராக 1909ல் ஆக்கிக் கொண்டது.

அச்சுத் தொழில்

ஆபிரகாம் பல கலைகளில் மாமேதையாகத் திகழ்ந்தார் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இவர் கிறிஸ்தவராக இருந்த போதிலும் இந்து நண்பர்களிடம் அளவு கடந்த பாசமும் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். குமாராசுவாமி பிள்ளை என்பவர் திண்டுக்கல்லில் ஒரு அச்சகம் நடத்தி வந்தார். அவரோடு நட்புக் கொண்டு அச்சுத் தொழில் கற்றார். இந்த அனுபவத்தைக் கொண்டு

பிற்காலத்தில் தனது சொந்த அச்சுக் கூடத்தை (லாலி அச்சகம்) தஞ்சையில் நிறுவினார். திரு. கந்தசாமி பிள்ளை என்பரிடம் சோதிடம் பயின்றார். இவர் கற்ற இந்தச் சோதிட நுணுக்கங்களை வைத்து சோதிட வார இதழ் ஒன்றை நடத்தினார். சங்கீதத்திற்கும் சோதிடத்திற்கும் இருந்த நெருக்கத்தைக் கண்டு வியந்தார்.

சங்கீத தாகம்

இளமைக் காலத்திலிருந்தே ஆபிரகாம் இசையில் நல்ல ஈடுபாடும் ஆற்றலும் உடையவராக இருந்தார். இசை என்பது ஆன்மாவுக்கும் அதன் வளர்ச்சிக்கும் எத்துணை இன்றியமையாதது என்பதைத் தெரிந்து வைத்திருந்தார். பின்பு சங்கீதத்தை முறையாகக் கற்கத் தொடங்கினார். வயலின் வித்வான் திரு சடையாண்டிப் பத்தரிடமிருந்து இசை நுட்பங்களை நன்கு கற்றுக் கொண்டார். திரு. யார்க் அவர்களும் அவரது குடும்பத்தினரும் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ற பொழுது நடத்திய பிரிவுபசார விழாவில் இசைப் பாடல் இயற்றி தம் மாணவர்களை இசையோடு பாடச் செய்தார். திரு. யார்க் அப்போது ஆபிரகாமுக்கு தமது வயலினைப் பரிசாகக் கொடுத்தார்.

மருத்துவத்தில் ஆர்வம்

திண்டுக்கல்லில் தங்கியிருந்த காலம் ஆபிரகாமுக்கு மிகவும் பயனுள்ள காலமாக இருந்தது. அவர் இந்திய மருத்துவத்தில் ஆர்வம் செலுத்தி கற்க முடிந்தது. பொன்னம்பல நாடார் என்றொருவர் திண்டுக்கல்லில் வாழ்ந்து வந்தார். அவரது மூன்று மகன்களும் ஆபிரகாமிடம் படித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தமது தந்தையாரிடம் திரு. ஆபிரகாமின் குணநலன்களையும் பண்புகளையும் கூறினார். ஆபிரகாம் அவரது நண்பரானார். அவருக்கு இந்திய மருத்துவத்தில் இருந்த ஆர்வத்தைத் தெரிந்து உள்ளம் மகிழ்ந்தார். ஆபிரகாம் அவர்களை சுருளி மலைச் சாரலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வாழ்ந்து வந்த யோகிகளையும் ரிஷிகளையும் அறிமுகப்படுத்தி வைத்தார். சுருளி இந்துக்களுக்கு ஒரு முக்கிய புண்ணிய சேத்திரம் ஆகும். அங்கு சென்று ஒரு மரத்தடியில் தங்கி இருந்தனர். அவ்வமயம் முனிவர் ஒருவர் ஆபிரகாமை கருணானந்தர் என்னும் மகரிஷியிடம் அழைத்துச் சென்றார்.

ஆபிரகாமின் குண நலன்களைக் கண்டு மகிழ்ந்த அவர் அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். ஆபிரகாம் தனக்கு ஞானோபதேசம் வேண்டும் என்றும், மற்றும் மனிதர்களுக்கு வரக்கூடிய நோய்களைக் குணப்படுத்தும் மருந்தும் வேண்டும் என்று கேட்டார். அவர் சொல்லிக் கொடுத்தவற்றை குறிப்பெடுத்துக் கொண்டார். ஆபிரகாம் தஞ்சையில் குடியேறியதும் அங்கு அம்மருந்துகளை **கருணானந்தர் சஞ்சீவி** மருந்துகள் என்ற பெயரில் தயாரித்து மக்களைக் குணப்படுத்த வழங்கினார்

ஆபிரகாமின் திருமணம்

விடுமுறைநாளின் போது ஆபிரகாம் தமது தாய் தந்தையரைக் காண சுரண்டைக்குச் சென்றார். அங்கு அவரது பெற்றோர் அவருக்கு மணமுடிக்கத் தீர்மானித்து நாஞ்சான்குளம் திரு. வேதக்கண் நாடார் அவர்களின் மகள் ஞானவடிவு பொன்னம்மாளை மணமுடித்து வைத்தனர். திருமணம் டிசம்பர் திங்கள் 27ம் தேதி 1882ல் நடந்தது திருமதி. பொன்னம்மாள் உயர் நிலைப் பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிய தேர்ச்சி பெற்றிருந்தார்.

திரு. ஞானமுத்து என்பவர் இருவரையும் தஞ்சைக்கு வரும்படி அழைத்தார். ஆபிரகாமும் அதை ஏற்று மனைவியுடன் சென்றார். ஞானவடிவு பொன்னம்மாளுக்கு லேடி நேப்பியர் பெண் பாடசாலையில் தலைமை ஆசிரியை பதவியும், ஆபிரகாமுக்கு தமிழ் பண்டிதர் வேலையும் கிடைத்தது. திரு. பிளேக் என்னும் ஆங்கிலேயர் இவர்கள் பணியைப் பாராட்டினார். திரு. பிளேக் இங்கிலாந்துக்குச் சென்ற போது இவர்களுும பள்ளியைவிட்டு வெளியேறினர். பின்பு ஆபிரகாம் மருத்துவத் துறையில் ஈடுபட்டார். இவருக்குத் தெரிந்த மருந்துகளை தயாரித்தும், அவ்வப்போது சுருளி மலைக்குச் சென்று அவரது குருவை கண்டு ஆலோசனை பெற்றும் வந்தார். அத்துடன் இசையின் தன்மைகளைப் பற்றி ஆராய்ச்சியில் இறங்கினார். இந்தக் கால கட்டத்தில் மேனாட்டு மருந்து பிரபலமாகிக் கொண்டு வந்தது.

ஆபிரகாம் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்தமையால் பண்டுவர் என்று அழைக்கப்பட்டார். தமிழ் கலாச்சாரத்திலும் தமிழ் இசையிலும் புலமை பெற்ற பின்பு **பண்டிதர்** என அழைக்கப்பபெற்றார்.

ஆபிரகாம் பண்டிதரின் கர்நாடக இசை ஆர்வம்

முன்பு கண்டது போல பண்டிதருக்கு மருத்துவத்துறையில் மட்டும் ஆர்வம் இல்லை அவர் தமிழ் இசையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஆபிரகாம் 1916ம்ஆண்டில் பரோடாவில் நடந்த அகில இந்திய சங்கீத மாநாட்டில் பங்கு கொண்டார். தமது பெண் குழந்தைகள் இருவரையும் அழைத்துச் சென்றார். அந்த மாநாட்டில் ஒரு ஸ்தாயிக்கு 24 சுருதிகள் என்றும் 22 அல்ல என்றும் தெளிவுபடுத்தினார். அவரது மகள் மரகதவல்லி துரைப்பாண்டியனை வீணை வாசிக்க வைத்து இந்த சுருதிகளையும் விளக்கினார். மாநாட்டிற்கு வந்திருந்தவர் எல்லோரும் மிகவும் வியந்தனர். இவரது ஆழ்ந்த ஈடுபாட்டைப் பாராட்டினர். இதுவரை தமிழ் நாட்டில் இசையை தெலுங்கில் தான் பாடிக் கொண்டு இருந்தனர். ஆபிரகாம் பண்டிதர் தமிழில் பாடி தமிழ் இசையின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

1917ல் பண்டிதர் ***கருணாமிருத சாகரம்*** என்னும் தொகுப்பின் முதல் பாகத்தை வெளியிட்டார். இசையின் மகிமையையும் இறைவனை அடைய அது எவ்வாறு உதவும் என்றும் ஆய்வு செய்திருந்தார். பண்டையத் தமிழ் கலாச்சார முறைகளைப் பற்றியும் தமிழ் இசையின் இலக்கணத்தையும் விவரித்தார். மேலும் தமிழில் இசை அமைக்க எடுத்துக் கொள்ள வேண்டிய அடிப்படை பயிற்சிகளையும் வகுத்துக் கொடுத்தார். 1917ல் அவர் வெளியிட்ட ***கருணாமிருத சாகரம்*** அவருக்கு தமிழ் இசையுலகில் ஒரு நிரந்தர இடத்தைக் கொடுத்துள்ளது என்பதில் ஐயமில்லை. அவர் இசையமைத்த பாடல்களில் மூன்று இன்றும் தென் இந்திய கிறிஸ்தவ சபைகளிலே சிறப்பாகப் பாடப்பட்டு வருகின்றன. அதில் ***ஆசீர்வதியும் கர்த்தரே, மங்களம் செழிக்க கிருபையருளும், கண்டேன் என் கண்குளிர*** என்பவை குறிப்பிடத்தக்கவை.

தமிழ் இசையின் மீது இவருக்கு இருந்த ஆர்வத்தில் தமது குழந்தைகளையும் அதில் ஈடுபடுத்தினார். இவரது பெண் மக்கள் இருவரையும் தஞ்சையில் இசை பயிலச் செய்தார். மேலும் நல்ல தமிழில் நல்ல இசையைப் பாட அவர்களுக்குப் பயிற்சியும் அளித்தார்.

ஆபிரகாம் பண்டிதரும் விவசாயமும்

பண்டிதர் விவசாயத்திலும் நல்ல ஆர்வம் கொண்டிருந்தார் 1899ல் தஞ்சைக்கு அருகே 100 ஏக்கர் பரப்பளவில் நிலம் வாங்கினார். அதைப் பண்படுத்தி சாகுபடியும் செய்தார். 1904ல் 40 அடி கிணறு தோண்டி பயிர்களுக்கு நீர் பாய்ச்சி நல்ல மகசூலை எடுத்தார். கரும்பு, சோளம் என்று பலவகை தானியங்களையும் சாகுபடி செய்தார். அவரது தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார். இந்த இடத்திற்கு **கருணானந்தபுரம்** என்று பெயரும் வைத்தார். பட்டுப்பூச்சி வளர்ப்பதில் ஆர்வத்துடன் ஆராய்ச்சியும் செய்தார். இவரது பட்டுப்பூச்சி பண்ணை மாநில அரசின் கவனத்தையும் கவர்ந்தது. புதுவகையான கரும்பு ஒன்றை சாகுபடி செய்தார். (12-15) அடி நீளம் அதற்கு **ராஜா கரும்பு** என்று பெயரிட்டார். விவசாயிகளுக்கென தமது ஆய்வுகளை ஒரு இதழ் மூலம் வெளியிட்டு உதவிபுரிந்தார். 1907 முதல் 1914 வரை நடைபெற்ற கண்காட்சிகளில் கருணானந்தர் தோட்டத்துப் பொருள்கள் 6 தங்க பதக்கங்களையும் 37 வெள்ளிப் பதங்கங்களையும் 7 வெண்கலங்களையும் வென்றன. இவரது மாட்டுப் பண்ணையும், மாடுகளும் முதல்பரிசை வென்றன. 1908ல் சர் ஆர்தர் லாலி சென்னை மாகாண கவர்னர். இவரது கால்நடைப்பண்ணைக்கு வந்து வியப்புற்று இவரது முற்போக்குத் தன்மையையும் தொலைநோக்கையும் பாராட்டினார். இவரது திறனையும் பாராட்டி இந்திய அரசு இவருக்கு **ராவ் சாகிப்** பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

ஆபிரகாம் பண்டிதரும் விவிலிய ஆராய்ச்சியும்

பண்டிதரது கவனம் அகில உலகம் போற்றும் பொதுமறையான விவிலியத்தையும் ஈர்த்தது. அதை அவர் அருள் மறை எனக் கூறினார். மேலும் கிறிஸ்தவமதத்தைச் சாராதவர்களும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு பொக்கிஷமாக அதைக் கருதினார். விவிலியத்தின் தமிழாக்கம் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு நன்றாக விளங்கவில்லை என்றபடியால் **நன்மறைகாட்டும் நன்னெறி** என்ற தலைப்பில் பல ஆண்டுகள் ஆய்வு செய்து ஒரு நூல் வெளியிட்டார்.

பண்டிதர் அவர்களின் குடும்பம்

ஞானவடிவு பொன்னம்மாளுக்கு இரண்டு மகன்களும் 4 மகள்களும் பிறந்தனர். இவரது மகன்கள் சுந்தர பாண்டியன் ஜோதி பாண்டியன் என்று அழைக்கப்பட்டனர். இவரது பெண் குழந்தைகள் அன்னபூரணவல்லி, சௌந்தரவல்லி, ஆனந்தவல்லி, மரகதவல்லி என்று அழைக்கப்பட்டனர். இவரது குழந்தைச் செல்வங்களின் பெயர்கள் யாவும் தமிழ் பண்பாட்டுக்கும் மரபுக்கும் ஏற்றவைகளாக இருந்தன. கோயில் பாக்கியம் என்பவரை இரண்டாவது மனைவியாக ஏற்றார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். இவர்கள் இருவரையும் வரகுணபாண்டியன், சௌந்தர பாண்டியன் என்றும் மகள்கள் இருவரையும் கனகவல்லி மங்களவல்லி என்றும் அழைத்தார். கோயில் பாக்கியம் அம்மாள் பண்டிதருக்கு இசை ஆராய்ச்சியில் மிகவும் உதவியாக இருந்தார் .

பண்டிதரது தொண்டு

பண்டிதரது மூத்த மகன் சுந்தர பாண்டியன் தந்தையின் சித்த மருத்துவ ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். பலவகையான மாத்திரைகள் மருந்துகள் தயாரித்து மக்கள் நோயிலிருந்து விடுதலை பெற உதவினார்.

ஜோதி பாண்டியன், வரகுண பாண்டியன், சௌந்திர பாண்டியன் ஆகியோர் தந்தையின் புகைப்பட ஆய்வைத் தொடர்ந்து செய்தனர். ராயல் போட்டோ கிராபிக் சொஸைட்டியின் பரிசையும் நற்சான்றிதழையும் பெற்றனர். திரு. ஜோதி பாண்டியன் இசையில் தமது தந்தையின் போங்கில் ஆராய்ச்சி செய்தார்.

இவரது பிள்ளைகள் எல்லோரும் இசைப் பற்று உடையவர்களாக இருந்தனர். பண்டிதர் தமது குடும்பத்தினருக்கு சமத்துவம், ஒற்றுமை என்ற வாழ்க்கை நெறிமுறைகளை நன்கு பயிற்றுவித்தார். பொது உணவுக் கூடத்தை நிறுவினார். இவரது உற்றார் உறவினர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்தார். ஆபிரகாம் பண்டிதர் 31.8.1919ல் தமது 60 வயதில் காலமானார். இவர் கிறிஸ்தவ மதத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தார்.

முடிவுரை

இவரது உறவினர்களும், பேரக் குழந்தைகளும் பலரும் ஆற்றிய தொண்டினை மறக்க முடியாது. இத்தருணத்தில் சென்னை பெண்டிங் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியை இருந்து பணியாற்றிய செல்வி. திலகவதி பால் அம்மையாரையும் அவரது கல்விப் பணியையும் நினைவுகூற வேண்டும். இவர் பண்டிதரது மகளின் மகளாவார்.

டாக்டர். டி. ஏ. தனபாண்டியன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசைப் பேராசிரியராக விளங்கினார். இவர் முன்னர் **வானொலி**யின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

டாக்டர். கிப்ட் சிரோமணி சென்னை கிறிஸ்தவக் கல்லூரி கணிதத்துறையில் பேராசிரியராக விளங்கினார். இவர் தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்தார். இவர் பல நூல்களை இயற்றியிருந்த போதிலும் ***கல்வெட்டுகளில் திருக்குறள்*** என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவர் நரிக்குறவர்களின் தேவையை அறிந்து புனித மார்க் சுவிசேஷத்தை வக்கிரி போலியில் மொழி பெயர்த்து நரிக்குறவர்களுக்கு அளித்தார்.

இக் கட்டுரையாளராகிய நான் பண்டிதரது பேரக்குழந்தைகளுள் ஒருவன். எனது பாட்டனார் ஆபிரகாம் யேசுதாஸ் ஆபிரகாம் பண்டிதரது இளைய சகோதரர். பண்டிதருக்கு அவருடைய தோட்டப் பணியிலும் விவசாயத்திலும் உதவி செய்தார். என்னுடைய சிறு பிராயத்தில் நான் சில காலம் தஞ்சையில் அவரது தோட்டத்தில் தங்கியிருந்த நினைவு இன்னும் மறக்காமல் இருக்கிறது.

9

வட திருநெல்வேலி செல்போஸ் குடும்பம்

டி. ஜெயராஜ்

வட திருநெல்வேலி மிஷன்

தாமஸ் ராக்லாண்டு (Ragland) ஜுன் 1851-ல் தமது மிஷனெரி சங்கத்துக்கு (சி.எம்.எஸ்) எழுதிய கடிதத்தில் விரைவில் வட திருநெல்வேலியில் சிறப்பு மிஷன் ஒன்றை ஆரம்பிக்குமாறு வற்புறுத்தி எழுகிறார். இதற்கான காரணத்தையும் அவர் எழுதுகிறார். "பிளைமவுத் பிரதரன் (Plymouth Brethem)சபை" வட திருநெல்வேலி பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்து விட்டது. மதுரைப் பகுதியில் ஊழியம் செய்து வரும் அமெரிக்க மதுரை மிஷன் எப்போது திருநெல்வேலி பகுதியில் கால் வைப்பார்கள் என்று சொல்ல முடியாது". ராக்லாண்டின் கரிசனையெல்லாம் திருநெல்வேலி மாவட்ட மிஷனெரிப் பணி ஆங்கிலத் திருச்சபையின் மிஷனெரி இயக்கங்களுக்கு மட்டுமே குறிப்பாக சி.எம்.எஸ் சங்கத்துக்கு சொந்தமாயிருக்க வேண்டும் என்பதுதான்.

இதனால் வடதிருநெல்வேலிப் பகுதியில் மிஷனெரிப் பணி நடை பெறவேயில்லை என்று எண்ணிவிடக் கூடாது. இரேனியஸ் ஏற்கனவே (1825 முதல்) பல கிராமங்களில் திருச்சபையை நிறுவியிருந்தார். தென் நெல்லைப் பகுதியைப் போல வட நெல்லைப் பகுதிகளில் கிறிஸ்தவம் வேகமாக வளரவில்லையாயினும் வட திருநெல்வேலி மிஷன் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கத்தான் செய்கிறது. இங்கு திருச்சபை எதிர்பார்த்த அளவுக்கு வேகமாக வளராததற்கு சி.எம்.எஸ் மிஷனெரி பி.பி ஷாப்டர் நான்கு காரணங்களைத் தருகிறார்:

1. இந்தப் பரந்த பகுதியில் பணி செய்ய ஒரே ஒரு மிஷனெரி மட்டும் நியமிக்கப்பட்டிருப்பது. ஒருவரால் இப்பரந்த பகுதிக்கு நற்செய்தியைச் சொல்வது இயலாது

டி. ஜெயராஜ், M.A.B.D. M.T. H (Tafee) இறையியல் படிப்பு ஒருங்கிணைப்பாளர், பாளையங்கோட்டை

2. இங்குள்ள நிலச்சுவான்தாரர்களின் ஆதிக்கம், அவர்கள் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட கிராமங்களில் கடவுளின் வார்த்தை நுழைந்து விடாமல் தடுப்பதற்கு பெருமுயற்சி எடுத்தனர்.

3. கிறிஸ்தவக் கிராமங்கள் நிறுவ நிலம் கிடைப்பது அரிது.

4. தென் மாவட்டத்தில் இருக்கும் அளவிற்கு சாணார்கள் இங்கு இல்லை. அவர்களே நற்செய்திக்கு செவிமடுத்து கிறிஸ்தவர்களாவதில் பெருமகிழ்வு கொண்டிருந்தனர்.

இதில் நான்காவது காரணத்தை கவனிக்க வேண்டும். தென் பகுதியில் சாணார்கள் மத்தியில் பெரும் மனமாற்றத்தைக் கண்ட மிஷனெரிகள் அத்தகைய மாற்றத்தை வடபகுதிகளிலும் எதிர்பார்த்தனர். அவர்கள் எதிர்பார்ப்பு பெருமளவில் ஏமாற்றத்திலே முடிந்தது.

இச் சூழலில் வடதிருநெல்வேலிப் பகுதிகளில் வசித்த பள்ளர்களில் பலர் கிறிஸ்தவத்தைத் தழுவ ஆரம்பித்தனர். ஷாப்டர் தமது 1845ம் ஆண்டு அறிக்கையில் சொல்வது: இரண்டு கிராமங்களில் (வேங்கிடாசபுரம், ஒட்டரம்பட்டி) பள்ளர்கள் பெருமளவில் கிறிஸ்தவத்தில் இணைந்தனர். இவர்கள் தங்கள் கிராம நிலக்கிழார்களான ரெட்டிமார்களிடம் விவசாயத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வந்தனர். பள்ளர்கள் மத்தியில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவியது.

ஷாப்டர் கூறுகிறார்: "நமது பள்ளர் சபைகள் பொதுவான அளவில் மிகவும் திருப்திகரமாக வளர்ந்து வருகின்றன. அவர்கள் அறிவுக்கூர்மை மிக்கவர்கள். எளிதில் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து விடலாம். படிப்பறிவில் இதர சாதிகளை விட சிறப்பானவர்கள். எடுத்துக் காட்டாக 1845ல் கல்லத்திகிணற்றில் ஒரு பள்ளர் சபை இருந்தது. இதில் 25 பள்ளர் குடும்பங்கள் இருந்தன".

வடதிருநெல்வேலி மிஷன் என்று எதைக் குறிப்பிடுகிறோம்? வட திருநெல்வேலி என்பதற்கு ஷாப்டர் சுருக்கமான எல்லைக் கோடுகளை வரைகிறார். திருநெல்வேலிக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குமிடையே உள்ள நிலப்பகுதி; பின்னர் ராக்லாண்டு

விளக்கத்தைத் தருகிறார். வடக்கே கல்பட்டி, தெற்கில் சிவகாசி, கிழக்கில் விருதுபட்டி (இன்றைய விருதுநகர்) மேற்கில் திருவில்லிப்புத்தூர்.

ராக்லாண்டுக்கு முன் வடதிருநெல்வேலி மிஷன் என்றாலே நல்லூர் வட்டத்திலுள்ள சபைகளும் அதைச் சுற்றி நடைபெற்ற நற்செய்திப் பணியுமே என்றிருந்தது. இவ்வட்டத்தை நிர்வகித்து வந்தவர் பி.பி.ஷாப்டர். 1844ல் அதிலிருந்து பனைவடலி சேகரம் தனியாகப் பிரிக்கப்பட்டது. இதில் நிர்வாகியாக சி. ஜே. டெய்லர் இருந்து வந்தார். இந்த சேகரத்தில் அச்சம்பட்டி, வாகைக்குளம், பொட்டல்பட்டி, திருவில்லிப்புத்தூர், சிவகாசி, பனைபடிப்பட்டி, சாத்தூர் ஆகிய கிராமங்கள் இருந்தன. நல்லூர், பனைவடலி ஆகிய சேகரங்களிலிருந்து மற்றொரு சேகரம் பிரிக்கப்பட்டது. இது பன்னீர்குளம் சேகரமாயிற்று (1854). ஜே. விட்சர்ச் (J. Whitchurch) இதன் நிர்வாகியானார். இதனுள் கோவில்பட்டி, பன்னீர்குளம் ஆகிய இரு பாரந்த பகுதிகள் வந்தன.

சி.எம்.எஸ் மிஷனெரிகளைப் பொறுத்தவரையில் வடதிருநெல்வேலி எனில் மேற்கு திருநெல்வேலியே. அக்காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்த இக்கால வடதூத்துக்குடி பகுதிகள் கணக்கில் கொள்ளப்படவேயில்லை. கடத்தார், குளத்தூர், விளாத்திகுளம், நாகலாபுரம், வேம்பார் போன்ற பகுதிகள் ஊழியத் திட்டத்தில் வரவில்லை. இரேனியஸ், ராக்லாண்டு போன்ற அருட்பணியாளர்கள் பல கிராமங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்திருந்தாலும் போதிய அளவில் முயற்சிகள் நடைபெறவில்லை.

வடதிருநெல்வேலிப் பகுதியில் பணிபுரிந்த இயக்கங்கள்

இப்பகுதியில் பெரும் ஊழியம் செய்தது சி.எம்.எஸ் என்பது மறக்க இயலாது. இதன் பணிகள் கிறிஸ்தவம் இப்பகுதியில் வேரூன்றக் காரணமாகின. வடதிருநெல்வேலி கிறிஸ்தவத்தின் அஸ்திபாரம் சி.எம்.எஸ். மேல் கட்டப்பட்டதெனில் அதில் ஐயமில்லை. எனவே சி.எம்.எஸ்ஸைத் தவிர இதர அருட்பணி இயக்கங்கள் இக்கட்டுரையில் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

பிரதரன் சபை

1833ல் ஏ.என். குரோவிஸ் (Groves) எனும் சி.எம்.எஸ் அருட்பணியாளர் இந்தியா வந்தார். இவர் பாக்தாத் நகரில் பணிபுரிந்து வந்தார். இங்கு பணிபுரிந்த இரேனியஸ், சுமிட் ஆகியோரின் பணியைக் காண வந்திருந்தார். குரோவிஸ்க்கு இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்ற ஏக்கம் பல வருடங்களாகவே இருந்து வந்தது. ஆயினும் சி.எம்.எஸ் சங்கத்தார் அவரை பாக்தாத்தில் பணிபுரிய வைத்தனர். தமது குறுகிய கால அனுபவத்தில் சி.எம்.எஸ் அருட்பணியாளரின் பணிகண்டு வியந்தார்.

ஜாண் அருளப்பன் என்ற உபதேசியார் இரேனியஸ் தலைமையின் கீழ் பணியாற்றி வந்தார். இவர் குரோவிசின் பணியில் இணைந்து அவருடைய மொழிபெயர்ப்பாளரானார். குரோவிஸ் தென்னிந்தியாவில் சுற்றித் திரிந்த காலத்தில் அருளப்பன் அவரோடு இணைந்து பணிபுரிந்தார். சம்பளம் வாங்கிக் கொண்டு பிரசங்கம் செய்கிறார் என்று சில இந்துக்கள் கேலி பேசியதால் குரோவிசிடம் சம்பளம் பெறாமலேயே பணிபுரிந்து வந்தார்.

குரோவிஸ் இந்தியாவை விட்டுச் சென்றபின் அருளப்பன் சுயமாக நற்செயதிப் பணியைத் தொடங்கினார். 1840 ம் ஆண்டு கடுமையாக உழைத்து கிறிஸ்தியான் பேட்டை என்ற கிறிஸ்தவக் கிராமத்தை நிறுவினார். சில ஆண்டுகளில் இவருடைய பணியின் பலனாக 30 கிராமங்களில் சபைகளும் முழு நேரப் பணியாளர்களும் இருந்தனர். 1860ல் கிறிஸ்தியான் பேட்டையில் தொடங்கிய உயிர்மீட்சி திருவனந்தபுரம் வரையிலும் எதிரொலித்தது. 1867ல் அதாவது அருளப்பன் இறந்து 7 ஆண்டுகளுக்குப் பின்அவருடைய மகன் பெரும்பாலான சபைகளை சி.எம்.எஸ் இயக்கத்துக்கு அளித்துவிட்டார்.

1895ல் ஹாட்லி பேர்டு (Hartely Pared) என்ற அருட்பணியாளர் இப்பணியைத் தொடர இங்கு வந்தார். பின்னர் தாமஸ் மேநார்டும் அவருடைய மனைவியும் பேர்டுடன் இணைந்து பணிபுரிய வந்தனர். இவர்கள் சீயோன் மலை எனும் கிறிஸ்தவக் கிராமத்தை நிறுவினர். இது கிறிஸ்தியான் பேட்டைக்கு

அருகிலுள்ளது. இவர்கள் மருத்துவ, கல்விப்பணிகளையும் தொடங்கினர். கடையநல்லூர், வடமலாபுரம், சங்கரன்கோவில், நாரைக்கிணறு, ஐயாபுரம், வேடநத்தம், பச்சேரி, இலஞ்சி, மங்களாபுரம் ஆகிய கிராமங்களில் சபைகள் தோன்றி வளர்ந்தன. இப்பகுதிகளில் பிரதரன் சபையாரின் தாக்கம் இன்னும் உள்ளது. இங்குள்ள சபைகளில் மறவர்களும், பள்ளர்களும் பெருவாரியாக அங்கத்தினராக உள்ளனர்.

மெதடிஸ்ட் எபிஸ்கோபல் மிஷன்

இவ்வியக்கம் தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு 1908ல் தொடங்கியது. இது பெரும்பாலும் வடதூத்துக்குடி பகுதிகளில் பணிபுரிந்தது. 1942ல் இம்மிஷன் தனது சபைகளையும் சொத்துக்களையும் டி.டீ.டி.ஏ.வுக்கு அளித்துவிட்டது. இவ்வியக்கத்தின் வழியாக 41 கிராமங்களில் சபைகள் தோன்றி வளர்ந்தன. 34 ஆண்டுகளாக நாகலாபுரம், விளாத்திக்குளம், குளத்தூர் புதியம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய ஊராட்சி மன்றப்பகுதிகளில் சிறப்பான பணி நடந்தேறியது.

அமெரிக்க மதுரை மிஷன்

இவ்வியக்கம் பெரும்பாலும் மதுரை மாவட்டத்திலேயே பணிபுரிந்தது. ராக்லாண்டு அஞ்சியவண்ணம் எதுவும் நடக்கவில்லை. நெல்லை மாவட்டம் ஆங்கிலத் திருச்சபைகளின் ஊழியப்பகுதி என்ற ஒழுங்குமுறையை இவர்கள் பின்பற்றினர். திருநெல்வேலி எல்லைப்பகுதியில் இவர்கள் நிறுவிய சபைகளை சி.எம்.எஸ்க்கு அளித்துவிட்டனர். ஒண்டிப்பிள்ளை நாயக்கனூர் ரெட்டியார்பட்டி என்ற இருசபைகள் ராக்லாண்டு வசம் ஒப்புவிக்கப்பட்டன வென்று கிறிஸ்துதாஸ் குறிப்பிடுகிறார்.

வடதூத்துக்குடி பகுதியில் இவர்கள் வசம் இருந்த சபைகளில் ஒன்று செவல் பட்டி. இதன் மிஷனரி அறிக்கைகள் 1855 - ஆம் ஆண்டு செவல்பட்டி சபை நிறுவப்பட்டதாக அறிவிக்கின்றன. ஆனால் அமெரிக்க மிஷன் வருவதற்கு முன்பே இங்கு ஒரு சபை இருந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள. சில ஆண்டறிக்கைகளில் அருள்திரு. எச். எஸ். டேலர்தாம் இச்சபையை உருவாக்கினார் என்ற

தகவல் காணப்படுகிறது. பிந்தைய மிஷனெரியான அருள்திரு. ஜே.இ. சாண்ட்லர் இதை மறுக்கிறார். அவர் இந்த சபை டேலரால் நிறுவப்பட்டதன்று; அவர் அதை விசாரித்து வந்தார் என்று குறிப்பிடுகிறார். இவருடைய கூற்றுப்படி டேலர் ஏற்கனவே இருந்த செவல்பட்டி சபையைச் சந்தித்தார். * செவல்பட்டி கிராம பாரம்பரியங்களும் இக்கூற்றுக்கு சாதகமாயுள்ளன. இக்கிராம சபையின் உண்மையான நிறுவனர் செம்பொன் என்ற பள்ளர் கிறிஸ்தவர்.

இக்கட்டுரையில் செம்பொன் மற்றும்அவருடைய வழித்தோன்றல்களையும் ஆய்வு செய்து அவர்களுடைய திருச்சபைத் தொண்டுகள் பற்றி கூறப்படுகிறது. செம்பொன் அவர்களுடைய ஐந்தாம் வழித்தோன்றல்கள் இன்றுள்ளனர்.

செம்பொன் வரலாறு

செவல்பட்டி கிராமம் கடற்கரைச் சாலையில் சூரங்குடிக்கு கிழக்கில் 3 கி.மி. தூரத்திலுள்ள சிறிய கிராமம். 3000 மக்கள் குடியிருக்கின்றனர். பெரும்பாலும் பள்ளர்கள், நெசவாளர்களும் சில ரெட்டிமார்களும் இங்கு உண்டு. இங்குள்ள பள்ளர்கள் தங்கள் மூதாதையரான செம்பொன் என்பவர்தாம் 150 ஆண்டுகளுக்கு முன் இக்கிராமத்தை உருவாக்கினார் என்கின்றனர். இதர சாதி மக்களாலும் இக்கூற்று ஏற்றுக் கொள்ளப்பட்டுத்தான் இருக்கிறது. இன்றும் கூட செம்பொன் ஒரு சிறப்புப் பெயராகத்தான் இருந்து வருகிறது.

செம்பொன் இக்கிராமத்தை உருவாக்கினது பற்றி ஒரு குடும்பக்கதை உண்டு (இதை என்னிடம் சொன்னவர் செம்பொன்னின் கொள்ளுப் பேத்தி செல்வி. கிறிஸ்டி தாயம்மாள் அவர்கள். இவர்களுக்கு வயது 70. இன்று வேடப்பட்டி கிராமத்தில் வசிக்கிறார்கள்) செம்பொன் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் வாயிற் சேவகனாகப் பணிபுரிந்து வந்தார். (இது இரண்டு தலைமுறைகளை ஒன்றிணைத்த தகவலாக இருக்கலாம். ஏனெனில் செம்பொன் 1810க்கு முன் பிறந்திருக்க முடியாது. கட்டபொம்மு போர்கள் 1790-1800 ஆண்டு காலங்களில் நடைபெற்றன. 1800ல் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு அவன் கோட்டையும்

அழிக்கப்பட்டது.) செம்பொன் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையினுள் இருந்த சிறிய கிறிஸ்தவ சபையின் ஓர் அங்கத்தினர். (இத்தகவல் உண்மையானதாகத்தான் இருக்க வேண்டும். கட்டபொம்மன் கோட்டையினுள் ஒரு சபை இருந்ததாக பேரா. கிறிஸ்துதாஸ் தெரிவிக்கிறார். மேலும் 1688 அளவில் கயத்தாற்றில் ஒரு சேசு சபை மிஷன் தளம் இருந்தது. 1773ல் சேசு சபை கலைக்கப்பட்ட பின் இங்கு சமய போதனை செய்ய சபை விசாரிப்பு செய்ய குருமார் யாரும் நியமிக்கப்படவில்லை. பல கிறிஸ்தவர்கள் மதம் மாறினர். 1800ல் தஞ்சாவூர் மிஷனைச் சேர்ந்த சத்தியநாதன் எனும் உபதேசியார் பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு வாரம் தங்கியிருந்து அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு உபதேசம் செய்து 5 பேர்களுக்கு இராப்போசனம் வழங்கினார் என்ற தகவல் உண்டு). ஒரு நாள் செம்பொன்னுக்கு ஒரு தரிசனம். வந்தது. அதில் தேவதூதன் தோன்றி நீ உன் சாதிசனங்களை விட்டு நான் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்ற கட்டளையிட்டு மறைந்தான். சில நாட்கள் கழித்து செம்பொன் தன் குடும்பத்துடன் வண்டி கட்டிப் பயணமானார். அந்தத் தூதன் அவர்களோடு அவர்களுக்கு முன்னே சென்றதாக செம்பொன் கண்டார். சிலநாட்கள் பயணத்துக்குப் பின் இவர்கள் ஒரு உடங்காட்டில் இராத்தங்கினார்கள். அன்றிரவு அந்தத் தூதன் அவர்களை விட்டுவிட்டுப் போய்விட்டான். இதுவே கடவுள் காண்பிக்கும் தேசம் என்று செம்பொன் அறிந்து கொண்டு அங்கேயே தங்கிவிட்டார். அங்கிருந்த உடங்காட்டில் ஒரு பகுதியை அழித்து வீடுகட்டி விவசாயம் செய்ய ஆரம்பித்தார். சில மாதங்களில் அங்கு மேலும் சில பள்ளர்கள் வந்து சேர்ந்தனர். இவர்கள் கிறிஸ்தவர்கள். பர்ப்பநாதபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்தவர்கள்(பிஷப் வெஸ்டர்ன் எழுதிய நெல்லை கிறிஸ்தவ வரலாறு எனும் நூலில் பர்ப்பநாதபுரத்தில் பள்ளர்கள் பெருமளவில் கிறிஸ்தவத்தைத் தழுவியதாக எழுதுகிறார். இது 1788 ஆண்டு அளவில் நடைபெற்ற நிகழ்ச்சி. இரேனியசும் தம் நாட்குறிப்பில் பர்ப்பநாதபுரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.) இவ்வாறு கிறிஸ்தவப் பள்ளர்கள் அடங்கிய ஒரு கிறிஸ்தவக் கிராமம் தோன்றியது. இது துவக்கத்தில் செம்பொன் பட்டியாக இருந்தது பிறகு செவல்பட்டியாக மருவியது என்பது உள்ளூர் வழக்கு. பல ஆண்டுகளுக்குப்பின் 1850 அளவில் அமெரிக்க மதுரை மிஷனைச் சேர்ந்த அருள் திரு. எச்.எஸ்.

டேலர் இக்கிராமத்தைக் கண்டார். அவர் தவறாது இக்கிராமத்தை விசாரித்து கிறிஸ்தவப் போதனைகைள்கொடுத்து வந்தார். 1855க்குப் பின் இது அ. மதுரை மிஷன் நேரடிக் கண்காணிப்புக் கீழ் வந்தது. மண்டபசாலையின் சேகர பொறுப்பு அருட்பணியாளரான டேலர் இதைக் கண்காணித்து வந்தார்.

செம்பொன் ஒரு சமுதாயத்தலைவர் அவருடைய இரண்டு மகன்கள் அமெரிக்க மதுரை மிஷனில் உபதேசியார்களாகப் பணியாற்றினர். ஆபிரகாம் தரக்குடி, மடத்துக்குளம் பகுதிகளிலும், ஈசாக்கு நத்தத்துவலூப்பட்டியிலும் பணிபுரிந்தார். இவ்விரு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளை மணமுடித்தனர். ஆபிரகாமின் மனைவி பெயர் அன்னமுத்தம்மாள்.

செவல்பட்டி கிராமம் மண்டபசாலை சேகரத்தின் கீழ் இயங்கி வந்தது. இச்சேகரத்தில் மூன்று இந்திய குருமார் பணியாற்றி இருக்கின்றனர். அருள்திரு. சில்வா, கிறிஸ்டியன், வேதநாயகம் ஆகியோர் ஆவார். இவர்களுள் வேதநாயகம் போதகர் செவல்பட்டியின் முன்னேற்றத்துக்காகப் பெரிதும் உழைத்தார். இவர் பள்ளர் இனத்தைச் சேர்ந்தனர். செவல்பட்டி கிராமத்தவர். இச்சேகரத்தில் இந்திய குருமார் தவிர 17 உபதேசிமார்களும் 11உதவியாளர்களும் 7 ஆசிரியர்களும் பணிபுரிந்தனர்.

1870 முதலே செவல்பட்டி சபைக்கு தனி குரு நியமிக்கப்பட்டார். இச்சபையின் முதல் குரு அருள்திரு. எம். தாமஸ் என்பார். இவருடைய காலத்தில் 1855 ஆம் ஆண்டு இங்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டது. வேதநாயக போதகர் பெரும் முயற்சி எடுத்தார். செம்பொன் குடும்பத்தினர் 1 ஏக்கர் நிலத்தைக் கோவிலுக்கு கொடுத்தனர். இவ்விடத்தில் அழகிய கோவில் கட்டப்பட்டது. இந்த ஆண்டு செவல்பட்டி சபையில் 200 கிறிஸ்தவர்கள் இருந்தனர். இதன் பின்னர் இதன் வளர்ச்சி பெருகியது. 1889இல் அங்கு 611 கிறிஸ்தவர்களும் 146 இராப் போசனம் பெறத் தகுதியுடையவர்களும் இருந்ததாக அமெரிக்க மிஷனின் ஆண்டறிக்கை கூறுகிறது. 1891ல் அங்கு 824 கிறிஸ்தவர்களும் 150 இராப்போசனம் பெறத் தகுதியுடையவர்களும் இருந்தனர்.

ஆபிரகாம் குடும்பத்தினர்

ஆபிரகாம் உபதேசியாருக்கு 10 பிள்ளைகள் (5 ஆண் 5 பெண்) மூத்த மகன் நல்லதம்பி, இளையவர் யோசேப்பு. நல்ல தம்பி செவல்பட்டியிலேயே குடும்பம் நடத்தினர். யோசேப்பு 1888ல் செவல்பட்டியில் பிறந்தார். அருப்புக் கோட்டையில் உயர்நிலைக் கல்வி பெற்று தச்சனாக பயிற்சி பெற்றார். இவருடைய ஒரு சகோதரர் சாமுவேல் இராஜஸ்தானுக்கு ரயில்வேயில் பணி செய்யச் சென்றிருந்தார். அங்கு மேற்பார்வையாளராகப் பணிபுரிந்தார். அவர் மகாராட்டிரப் பெண் ஒருவரை மணந்து அங்கேயே குடியேறிவிட்டார். அவருக்கு ஒரு மகள் (ஈவலின்) உண்டு.

யோசேப்பு தன் சகோதரரான சாமுவேலுடன் ரயில்வேயில் பணிபுரிய விரும்பினார். அங்கு பணியில் சேர்ந்தார். சாமுவேல் தனது தம்பிக்காக ரூபிபாய் என்ற ராஜபுதனப் பெண்ணைத் தெரிந்தெடுத்தார். ரூபிபாய் தமது தாய் தந்தையர் மரணத்துக்குப் பின் மிஷனெரிகள் நடத்தி வந்த அனாதைக் குழந்தைகள் இல்லத்தில் வளர்ந்து வந்தார். 1913ஆம் ஆண்டு யோசேப்பு ரூபிபாய் திருமணம் நடைபெற்றது. அதே ஆண்டு சாமுவேல் மரணமடைந்தார். எனவே யோசேப்பு தம் மனைவி ரூபிபாயுடன் 1915ஆம் ஆண்டு செவல்பட்டி திரும்பினார். அந்தக் காலகட்டத்தில் தூத்துக்குடியை மையமாகக் கொண்டு மெதடிஸ்ட் மிஷன் சேவை புரிந்து வந்தது. யோசேப்பும், ரூபிபாயும் அதில் இணைந்தனர். யோசேப்பு ஆசிரியராகவும், உபதேசியராகவும் பணியமர்த்தப்பட்டார். விளாத்திக்குளத்திலிருந்து 7 கி.மி. தொலைவிலுள்ள வேடப்பட்டி எனும் கிராமத்தில் கிறிஸ்தவ அருட்பணி ஊழியராச் சென்றார்.

வேடப்பட்டியில் யோசேப்புக்கு 7 பிள்ளைகள் பிறந்தனர். (2 ஆண் 5 பெண்கள்) பெண்களில் இருவர் தம் தந்தையுடன் வேடப்படிடியில் தங்கியிருந்து அருட்பணி செய்தனர். இவர்கள் இருவரும் (மேரி காதரின், கிறிஸ்டி தாயம்மாள்) திருமணம் செய்து கொள்ளாமலேயே தங்களைச் கிறிஸ்துவின் பணிக்கு ஒப்படைத்தனர். மூத்த மகன் ஜான்சன் சென்னை மெஸ்டன் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியரானார். பின்னாளில் அவர் எத்தியோப்பியா சென்று அங்குள்ள கல்வித்துறையில் பெரும் பணியாற்றினார்.

யோசேப்பு தம் அருட்பணியை வேடப்பட்டியில் தொடங்கினார். (1916) இவருடைய காலத்தில் பணிபுரிந்த சில மெதடிஸ்ட் மிஷனெரிகள் டட்லி, (Dutly) கிரே, (Gray) கிங்காம், (Kingkong) டப் (Tubb) ஆவர். வேடூப்பட்டியைச் சுற்றியுள்ள எலந்தகுளம், பல்லாகுளம், எதிரணைப்பட்டி, வீரகாஞ்சிபுரம், குஞ்சியாபுரம் என்ற ஐந்து கிராமங்களிலும் யோசேப்பு நற்செயதியை அறிவித்து பலரை கிறிஸ்தவராக்கினார். அனைத்துக் கிராமங்களிலும் பெரும்பாலும் பள்ளர்களே கிறிஸ்தவர்களாக மாறினர். எலந்தகுளத்தில் மட்டும் ஒரு சிறிய சக்கிலியர் சபை உருவாகியது.

வேடப்பட்டியில் யோசேப்பு பணி செய்த காலத்தின் தொடக்கத்தில் ஒரு வீட்டில் வைத்துதான் ஆராதனை நடத்தினார். இந்த நபருக்குப் பட்டப் பெயர் கிறுக்கன். யோசேப்புவின் பணிக்கு வேடப்பட்டியில் கடும் எதிர்ப்பு இருந்தது. இங்குள்ள சபையில் பெரும்பான்மையினர் பள்ளர்களாயிருந்தாலும் அங்கு கோயில் கட்ட இடம் கொடுத்தது பச்சகனி நாடார் என்பவர்.

வேடப்பட்டி சபையின் முதல் கிறிஸ்தவர் மாணிக்கவாசகம். இவருடைய குடும்பத்தினர் இன்னும் அங்கு வசித்து வருகின்றனர். பின்னாளில் அங்கு பாடசாலை நிறுவ இடம் கொடுத்ததும் இவரே. இங்குள்ள தொடக்க கால சபையின் முக்கியமான உறுப்பினர்கள் மாசிலாமணி, (மாணிக்கவாசகத்தின் மகள்) ஞானமுத்து, பரஞ்சோதி, பவுல் ஆகியோர் ஆவார்.

பச்சக்கனி நாடார் கொடுத்த நிலத்தில் 1918ல் ஓர் சிறிய ஆலயம் கட்ட ஆரம்பித்தனர். ஆனால் சாதி இந்துக்களின் எதிர்ப்பு அதிகமாக இருந்தது. கூரை வேயு முன்பு அவ்வாலயத்ததினுள் ஓர் விநாயகர் சிலையைக் கொண்டு வைத்து இது விநாயகர் கோவில் என்ற பிரச்சினையைக் கிளப்பினர். அன்றிருந்த மிஷனெரிகள் உதவியால் யோசேப்பு பிரச்னையைச் சமாளித்தார். 1939ல் வேடப்பட்டி சபையில் 30 குடும்பங்கள் இருந்தன. செல்லப்பா நாடார் தன்னார்வ ஊழியராக யோசேப்புடன் இணைந்து பணிபுரிந்து வந்தார்.

தொடக்க வருடங்களில் யோசேப்பும் ரூபிபாயும் ஆசிரியர்களாக இருந்தனர். (ரூபிபாய் ஆசிரியப்பயிற்சி பெற்றவர்).

1915ல் எழுந்த ஆலயப் பிரச்சனையில் பெரிதும் சோர்ந்திருந்தனர். ஏனெனில் கட்டப்பட்ட ஆலயம் இடிக்கப்பட்டது. மெதடிஸ்டு மிஷனெரிகள் கிங்காம், கிரே ஆகியோர் இந்த ஆலயத்துக்கென பணத்தை வசூல் செய்து கொடுத்தனர். இதனால் அங்கு ஓர் ஆலயமும் சிறிய பாடசாலையும் தோன்றியது. யோசேப்பும் ரூபியாயும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். 1939ம் ஆண்டு யோசேப்பு தமது ஆசிரியப்பணியை விட்டு விட்டு முழுநேர அருட்பணியாளராக மாறினார். 1930ல் இவருடைய மகள் மேரி காதரின் இதே பள்ளியில் ஆசிரியராக நியமனம் ஆனார். இவருடைய பணியில் பல பலன்களைக் கண்டார். மகள்கள் மேரி காதரினும், கிறிஸ்டி தாயம்மாளும் திருமணம் செய்து கொள்ளாமலேயே தங்கள் தந்தையின் ஊழியத்தில் பங்களித்தனர். சபை வளர்ந்து வந்தது. 1965ம் ஆண்டு இங்குள்ள பாடசாலை நடுத்தரப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. இவ்வருடம் இங்கு 350 மாணவ மாணவிகள் கல்வி கற்றனர். 8 ஆசிரியர்கள் இருந்தனர். இவர்களுடைய ஆன்மப் பயிற்சியை சகோதரிகள் செய்து வந்தனர்.

1990ம் ஆண்டு யோசேப்பின் மூத்த மகன் ஜான்சன் குடும்பத்தினர் தமது செலவிலேயே வேடப்பட்டி ஆலயத்தை புதுப்பித்துக் கட்டினர். ஜான்சனின் குடும்பத்தினர் இன்று மதுரையில் வாழ்ந்து வருகின்றனர். ஜவகர்லால் மதுரையில் வாழ்கிறார். மோதிலால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் போதகராக இருக்கிறார். மோகன்லால் சென்னையில் வாழ்கிறார். சந்திரலால் ஆலந்தூரில் போதகராகப் பணியாற்றுகிறார்.

யோசேப்பின் இரண்டாவது மகன் ஜேம்ஸ் வில்லியம் தமது குடும்பத்துடன் குளத்தூரில் வாழ்ந்து வருகிறார். இவரும் ஒரு ஆசிரியர்தாம். இவருடைய நான்கு மகன்களில் மூவர் மதுரையிலும் ஒருவர் வேடப்பட்டியிலும் பணிபுரிகின்றனர். (சுந்தர்சிங், ஜெயசிங், ராபின்சிங் - மதுரை, ஜெபசிங் - வேடப்பட்டி)

இன்றும் இக்குடும்பத்தினர் தங்கள் கிறிஸ்தவ அர்ப்பணிப்பைக் காத்து வருகின்றனர். ஐந்து தலைமுறைகளாகத் புதிய பகுதிகளில் கிறிஸ்துவின் தொண்டர்களாகத் திருச்சபையை நாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

10

தா.பா. ஏசுதாசனும் அவருடைய மூதாதையரும்

கோ. பால் தாசன்

மனிதன் எப்போதும் சுயநலமுடையவன். அவனிடமுள்ள பேராசை, பதவி, செல்வத்தின் மேலுள்ள மோகம் முதவியன மற்றவர்களுக்கு அவன் ஆசீர்வாதாமாயிருப்பதைச் தடை செய்கின்றன. இதற்கு விதிவிலக்கு ஏசுதாசன் அவர்களும் அவருடைய மூதாதையருமாவர். அவர்கள் தங்களுடைய செல்வத்தையும் வாழ்க்கையையும் பொதுமக்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்தவர்கள். அதற்காக அக்கறையோடு உழைத்தவர்கள்.

மெய்ஞானபுரம் கிராமம்

1830ம் ஆண்டிற்கு முன்னர் நெடுவிளை என்றழைக்கப்பட்ட மெய்ஞானபுரம் என்ற ஊர் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்திலே தென்கிழக்கில் இருக்கிறது. இந்தச் சிற்றூர் வடபால் தேரி சூழ்ந்திருக்க, ஓங்கி வளர்ந்த பனை மரங்களின் நடுவில் அமைந்துள்ளது. ஜூலை மாதம் வீசும் கடும் மேல் காற்றின் விசையால் தேரி மணற் குன்றும் இடம் பெயர்க்கப்பட்டு பிறிதொரு இடத்தில் குவிகிறது. ஆகவே இவைகள் நகரும் மணல் மேடுகள் என்றழைக்கப்படுகின்றன. மேற்புரத்தில் இயற்கையில் பள்ளமாக அமைந்துள்ள பகுதி படுகை என்று வழங்கப்படுகிறது. இது மெய்ஞானபுரத்துக்கு மேற்கே உள்ளது. பிரிட்டிஷாரின் காலத்தில் இப்படுகை ஊற்று வடிகால் நீர்த் தேக்கமாகப் பயன்படுத்தப்பட்டது. நம்நாடு விடுதலையடைந்த பின்னர் படுகைப் பூமி விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மெய்ஞானபுரத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட சில மகாத்துமாக்கள் கனம் இரேனியஸ், கனம் ஜான் தாமஸ், கனம் அம்புரோஸ், செல்வி ஜி. பெக்கன்காம் வால்ஷ் (Pakenham Walsh) என்று சொல்லலாம். நாளடைவில் மெய்ஞானபுரம் ஆண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும் பெண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும்,

---

பேராசிரியர் பால் தாசன், சாயர்புரம் போப் கல்லூரியின் முந்நாள் முதல்வர்.

பெண்களுக்கு ஒரு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும், ஒரு பிரம்மாண்டமான தேவாலயமும், திருநெல்வேலிப் பேராலயத்தின் கண்காணிப்பில் ஒரு அச்சகமும் கொண்டதயிற்று. மெய்ஞானபுரம் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் படித்தவர்களில் கீழ்க்கண்ட நான்கு பேர் பேராயர்களாகியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1. பேராயர். வி. எஸ். அசாரியா 2. பேராயர். ஜான் சவரிமுத்து 3. பேராயர். எஸ். தானியேல் ஆபிரகாம். 4. பேராயர். ஜேசன எஸ். தர்மராஜ். இந்தச் சிறிய கிராமத்தில்தான் ஏசுதாசனும் அவருடைய மூதாதையர்களும் தோன்றினர்.

ஏசுதாசனின் மூதாதையர்

18ம் நூற்றாண்டின் இறுதியில் தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடிக்குப் பக்கத்திலுள்ள படுக்கப்பத்து என்ற சிற்றூரிலே பண்டார முக்கந்தர், இராம முக்கந்தர் என்றழைக்கப்பட்ட இரண்டு சகோதரர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இருவரும் சமுதாய நலனுக்காகப் பாடுபட்டதால் ஊர்ப் பொதுமக்கள் இந்தச் சகோதரர்களை மிகவும் மதித்துப் பாராட்டினர். தலைவர்கள் என்று பொருள்படும் முக்கந்தர் என்ற பெயரால் அவர்களை அன்போடு அழைத்தனர். நாளாவட்டத்தில் அவ்விரு சகோதரர்களும் தங்கள் ஊராகிய படுக்கப்பத்திலிருந்து தங்கள் குடும்பத்தோடு இடம் பெயர்ந்து தற்பொழுது மெய்ஞ்ஞானபுரம் என்று வழங்கப்படும் நெடுவிளை என்ற கிராமத்தில் குடிபுகுந்தனர்.

சுவிசேஷம் பரவுதலும், மூதாதையரின் மதமாற்றமும்.

மெய்ஞ்ஞானபுரம் பகுதியில் நாடார் குலத்தவர் மிகுதி. அவர்களுக்கு மிஷனெரிகள் சுவிசேஷத்தை முதலில் பரப்பினர். ஆனால் 1796ல் தாவீது நாடார் என்ற நாடார் குலத்து இளைஞரான ஒரு உபதேசியார் வந்த பின்னரே பலர் கிறிஸ்தவராயினர். தாவீது உபதேசியார் கிறிஸ்தவரானதற்கு முன்னர் சின்னமுத்து என்ற இயற்பெயருடையார். அவர் தென் நெல்லைச் சீமையில் பனங் காட்டுப் பகுதியிலுள்ள சாத்தான்குளம் என்ற ஊருக்கு அருகிலுள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்தார். இளமையிலேயே அவர் தமது ஊரைவிட்டுத் தஞ்சாவூர்பகுதியில்அலைந்து திரிந்தார். கிறிஸ்தவ சமயத்திற்கு மாறி, ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ சத்தியங்களைக்

கற்றுக் கொண்டார். 1769ல் சத்தியநாதன் என்பாரின் வேண்டுகோளுக்கு இணங்க, தாவீது தமிழகத்தில் தென் பகுதிக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னரே நாடார் சமூகத்தாரிடையே நற்செய்தி விரைவில் பரவலாயிற்று.

கால்டுவெல் ஐயர் காலத்தில் நாடார் குலத்தவர் தனிநபராக அல்லது தங்களின் குடும்பமாக அன்றி, ஊரளவில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். இவ்வாறு சி.எம்.எஸ்., எஸ்.பி.ஜி., சங்கத்தாரின் ஊழியத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 40,000 பேர்களும், எல்.எம்.எஸ்., சங்கத்தாரின் ஊழியத்தால் தென் திருவாங்கூரில் 20,000 ஆத்மாக்களும் கிறிஸ்தவத்தைத் தழுவினர். தாவீது உபதேசியார் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதற்குப் பின்னர் திருநெல்வேலி அப்போஸ்தலர் என்று வழங்கப்படும் ரேனியஸ் ஐயர் இப்பகுதியில் நற்செய்தியைப் பரப்புவதில் தம் காலத்தையும் திறமையையும் பயன்படுத்தினார். அதன் பயனால் பாக்கியநாதனின் முன்னோர்கள் குடிபுகுந்த நெடுவிளை 1825ம் ஆண்டில் ஒரு கிறிஸ்தவக் கிராமம் ஆயிற்று. அப்போது மக்கள் மதம் மாறிய சில நிகழ்ச்சிகள் சுவையானவை. ஒரு நாள் அவ்வூரிலுள்ள இந்துக் கோயிலில் மக்கள் மிக உற்சாகத்தோடு திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்று இரேனியஸ் ஐயர் அவ்வூருக்கு வர நேர்ந்தது. அச்சமயத்தில் இந்துக் கோயில் பூசாரியின் மகன் அரவத்தால் தீண்டப்பெற்று வேதனையில் துடித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு என்ன நேருமோ என்று அச்சத்துடன் ஊரார் உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அப்போது இரேனியஸ் ஐயர் அங்கு வந்தார். பாம்பு கடித்த இடத்தில் கத்தியால் கீறி நஞ்சு கலந்த ரத்தத்தை வெளியே எடுத்து, காயத்தில் மருந்து போட்டார். வாலிபனும் குணமானான். இரேனியஸ் ஐயரின் இம்முதலுதவி ஊரைக் கவர்ந்தது. அப்போது அவராற்றிய சுவிசேஷச் செய்தியைக் கேட்ட மக்கள் - பாம்பு தீண்டிய பையனின் தந்தையாகிய பூசாரி உட்படப் பலர் அவருரையை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவராயினர். இரேனியஸ் ஐயரின் நற் செய்திப் பணியின் மூலமாக பண்டார முக்கந்தர், ராம முக்கந்தரின் சந்ததியார் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இராம முக்கந்தர்க்குத் தானியேல் முக்கந்தர், சோட்டா முக்கந்தர்,.

வெள்ளையா முக்கந்தர் என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். தானியேல் முக்கந்தர் என்பவரின் மூத்த மகனின் பெயர் பாக்கியநாதன் ஆகும்.

மெய்ஞ்ஞை முதுமகன் தா. பாக்கியநாதன்

தானியேல் முக்கந்தருக்கு மூத்த மகனாக மெய்ஞ்ஞானபுரத்தில் 1847ஆம் ஆண்டில் பாக்கியநாதன் பிறந்தார். அவர் கடவுளிடதிலும் பிறரிடத்திலும் மிகவும் அன்பு கூர்ந்தவர். அவருடைய கனிவான பேச்சு, இனிய செய்கைகள் மெய்ஞ்ஞை மக்களின் மனம் கவர்ந்தன. தானியேல் பாக்கியநாதன் (D.P.) என்று ஆங்கிலத்திலும் தானா பானா என்று தமிழிலும் பொது மக்களால் அவர் பாசத்துடன் அழைக்கப்பட்டார். இந்தப் பிரதேசம் பெரும்பாலும் வறட்சியாயிருந்ததால், பசுமையான இடங்களை நாடிப் பலர் தூரத்திலுள்ள இடங்களுக்குக் குடி பெயர்ந்தனர். இங்ஙனம் இலங்கை, மலேயா முதலிய அயல் நாடுகளுக்கும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யவும், வணிகம் செய்யவும் பலர் ஊரைவிட்டு மொத்தமாக வெளியேறினர். ஆனால் தா. பா. மட்டும் தம்முடைய சொந்த ஊரிலேயே தங்கி உழைத்துப் பிழைக்கவும், தம்முடைய ஊராருக்கு உதவி செய்யவும் தீர்மானித்தார்.

அயல் நாடுகளுக்கு பனைமர நார்களை ஏற்றுமதி செய்து வளம் பெருக்கும் வாணிபத்தை மேற்கொள்ள தா. பா. விரும்பினார். அக்காலத்தில் செயற்கை நார்ப்பொருட்கள் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆகவே அயல் நாடுகளில் நம் நாட்டு பனைமர நார்ப் பொருட்கள் அதிகம் தேவைப்பட்டன. இதனையறிந்து தானா பானாவும் அவருடைய மைந்தர்களும் பனை மர நார்ப் பொருள்களை வாங்கும்படி ஆந்திராவிலுள்ள கடப்பை, நெல்லூர், காக்கிநாடா, விஜயவாடா, தோர்ணக்கல் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். அவற்றை வாங்கி ஆந்திரப்பிரதேசத்திலுள்ள துறைமுகங்கள் வழியாகவும் தூத்துக்குடி துறைமுகம் வழியாகவும் தூர தேசங்களுக்கு அனுப்பினர். அவர்கள் பயணம் செய்த காலத்தில் வழிப்பறிகள், கொள்ளையடிப்பு ஆகிய ஆபத்துக்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது. மேலும் உணவுப் பிரச்சினை, சீதோஷ்ணநிலை

மாற்றங்கள், மொழி, கலாச்சார தடைகள் முதலியவைகளையெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. இவைகளையெல்லாம் தா. பா. அவர்கள் கடவுள் துணையால் தாண்டி மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேறினார். எத்துணைத் துணிச்சலான கடினமான வாழ்க்கை புரிந்தார் தா.பா. அவர்கள்.

தர்ம காரியங்கள்

தா. பாக்கியநாதன் தர்மசிந்தையுடையவர். ஆகவே நல்ல காரியங்களுக்குத் தாராளமாக நன்கொடைகள் கொடுத்தார். அவர் தேவனுக்குப் பயந்த உத்தமரானதால், திருச்சபையின் வளர்ச்சிக்கும், கல்வி அபிவிருத்திக்கும் வரையறையின்றி வாரி வழங்கினார். அக்காலத்தில் பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டுவார்களே தவிர, பொதுமக்களின் நல்வாழ்விலும், ஏழைகளின் துயர் துடைப்பதிலும் கவனம் செலுத்துவதில்லை. இதற்கெல்லாம் தா. பா அவர்கள் விதிவிலக்காயிருந்தார்.

அ) மெய்ஞ்ஞானபுரம், தூய பவுல் ஆலயத்தின் கோட்டை முன்புற வாயிலில் இரும்புக் கதவுகள் பொருத்தவும், அதிலிருந்து தலைவாசல் வரை கற்களால் நடைபாதைத் தளம் அமைக்கவும் ஆலயத்தில் வடபுரத்தில் இரும்புகளால் வேலி பொருத்தவும் பெருந்தொகை நன்கொடை அளித்துள்ளார்.

ஆ) வறுமை நிறைந்த தம் சொந்த ஊர்ப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களின் நலவாழ்வுக்கு கல்வியே காரணம் என்று கருதிய தா. பா. அவர்கள் தமக்குச் சொந்தமான 1.53 ஏக்கர் நன்செய் நிலத்தை உள்ளூர் ஆண்கள் பள்ளிக்கு வழங்கினார். அதை விற்பனை செய்து கிடைக்கும் பணத்திலிருந்து பள்ளியில் வகுப்பு அறைகள் கட்டும்படி உதவினார்.

இ) தா. பா. **பண்னை நிலம்**

தோர்ணக்கல் பகுதியிலுள்ள கல்வியறிவற்ற இலம்பாடி இனத்து ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஒரு சிறப்பான நோக்கத்துடன் பேராயர் அசரியா, தோர்ணக்கல்லிருந்து மெய்ஞ்ஞானபுரத்துக்கு 1921ம் ஆண்டில் வருகை புரிந்தார். மெய்ஞ்ஞை தூய பவுல் ஆலயத்தில் இதைக் குறித்துச் சபையாரிடம்

வேண்டுகோள் விடுத்தார். ஏற்கனவே தோர்ணக்கல் பகுதியில் வாழ்கின்ற இலம்பாடிகளின் ஏழ்மை நிலையை அறிந்திருந்த தா. பா. அவர்கள் இந்த வாய்ப்பைப பயன்படுத்தி, பேராயர் அசாரியாவிடம் உற்சாகமாய் நன்கொடை வழங்கினார். இந்தத் தொகையிலிருந்து நான்கு ஏக்கர் நிலத்தை தோர்ணக்கல் பேராயம் வாங்கி அந்தப் பண்ணை நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு வறுமைப்பட்ட இலம்பாடிச் சிறுவர்களை ஆதரித்து வந்தது. பின்னால் அந்தப் பண்ணை நிலத்தைப் பராமரிப்பதில் பிரச்சினை வந்ததாலும், மற்றவர்கள் அத்துமீறி அந்நிலத்தில் நுழைந்ததாலும் தா. பா. பண்ணையை தோர்ணக்கல் பேராலயம் விற்றுவிட்டது. அதை விற்றதால் கிடைத்த பணம் பேராய அலுவலகத்திலேயே முதலில் இருந்தது. பின்னர் அந்த அறநிதியுடன் தா. பா. அறக்கட்டளை வழங்கிய நன்கொடையையும் சேர்த்து தென் இந்தியத் திருச்சபைப் பொறுப்பாட்சிச் சங்கத்தில் சேர்க்கப்பட்டது. ஏழை இலம்பாடிச் சிறுவர்களின் படிப்புக்கு இப்பணம் பயன்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தா. பா. அறக்கட்டளையின் தற்போதைய தருமகர்த்தாக்களால் இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தா. பா. ஏசுதாசன் ஏழை பங்காளர்.

பாக்கியநாதனும் அவருடைய மனைவி பாக்கியம் அம்மாளும் நான்கு ஆண்மக்களும் நான்கு பெண் மக்களுமாக மொத்தம் எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற பாக்கியசாலிகளாவர். ஏசுதாசன் 18.04.1888ல் பிறந்தார். அவருடைய ஆசிரியர்களில் இருவர் அவருடைய நல்லொழுக்கத்துக்கு வித்திட்ட பெருமக்களாவர். அதில் ஒருவர் ஆரம்பப் பள்ளியில் கற்றுக் கொடுத்த முத்தையா வாத்தியார் ஆவார். அவர்தான் பிற்காலத்தில் தா. பா. குடும்பத்தாருக்கு ஆலோசகராகவும் நண்பராகவும் விளங்கினார். 1967ஆம் ஆண்டில் பள்ளி இறுதித் தேர்வில் ஏசுதாசன் வெற்றி பெற்றார். அவருக்குக் கல்வி கற்பித்தவர் அந்தப் பள்ளித் தலைமையாசிரியரான கனம் அம்புரோஸ் என்பவராவர். பின்னர் ஏசுதாசன் கல்லுவிளை வணிகச் செல்வர் சாமுவேல் என்பாரின் மூத்த மகளை 1914ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார்.

காவல்துறைப் பணி

திருநெல்வேலி சி.எம். கல்லூரியில் படித்து வந்த ஏசுதாசன் இடையே படிப்பை நிறுத்திக் கொண்டு 1911ஆம் ஆண்டில் காவல் துறையில் ஒரு துணை ஆய்வாளராகச் சேர்ந்தார். வெகு சீக்கிரத்தில் அந்தத் துறையிலே ஒரு உண்மையுள்ள உத்தமமான அதிகாரி என்ற பேர் பெற்றார். தனக்கு வரும் எந்த விளைவையும் கருதாமல் எப்போதும் சரியான காரியத்தையே செய்து வந்தார். ஏழைகளையும் பாமர மக்களையும் நேசித்தார். அவர்களுக்கு உதவி செய்து வந்தார். யாருக்கும் அஞ்சாமல் பாரபட்சமின்றி நேர்மையாகப் பணியாற்றினார்.

ஏசுதாசன் ஆற்றியுள்ள நல்ல சேவைகளுக்காக அவர் 33 வெகுமதிகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். அவருடைய தகுதி தன்னலமற்ற பணி, ஒழுங்கு உணர்வு முதலியவற்றைப் பிரிட்டிஷ் அதிகாரிகளும் இந்திய அதிகாரிகளும் மிகவும் பாராட்டியுள்ளனர். 1926ம் ஆண்டில் தஞ்சாவூர் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி) அவர்கள் எழுதியுள்ள பின் கண்ட ஆய்வறிக்கையிற்காணும் புகழ் மாலை அதை விளக்கிடும்.

"துணை ஆய்வாளர் ஏசுதாசன் தம் கடமையில் ஆர்வமிக்கவர். சேர்வை வழக்கில் அவர் காட்டிய தளராத உற்சாகமும், கடமை உணர்ச்சியும் பாராட்டத் தக்கது. அவ்வழக்கின் முடிவு ஏமாற்றமாயிருந்தாலும், அத் தோல்விக்கு ஏசுதாசன் பொறுப்பாளியல்லர். இதனை மாவட்டத்துக் காவல்துறை தலைமையகம் உணர்ந்து துணை ஆய்வாளரின் வேலையைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன். அப்பொழுதுதான் துணை ஆய்வாளர்கள் எதிர் காலத்தில் மனமடிவுறாது தைரியமாகத் தம் கடமையைத் தொடர்ந்து செய்ய முடியும். ஏனைய காவலர்களும் தன்னலமற்ற, உண்மையான, உத்தமமான பணி, விளைவு எபடியிருந்தாலும் பாராட்டப்படும் என்ற நம்பிக்கையுடைய ஏசுதாசனைப் பின்பற்றிப் பணிபுரிவர். (இந்த வழக்கில் துணை ஆய்வாளர் ஏசுதாசனின் பெயரை ஆய்வர் வெகுமதிப் பட்டியலில் பொறித்து வைக்கக் கேட்கப்படுகிறார் - காவல் துறைத் துணைக் கண்காளிப்பாளர், 1926)"

ஏசுதாசன் ஏழை மக்கள், பாமரர், ஆதரவற்ற கிராமத்தார் ஆகியோரைப் பணக்கார நிலச்சுவான்தாரின் கொடுமையிலிருந்து காப்பாற்றிய வீரராய் விளங்கினார். மற்றவர்களின் தகாத போக்குடன் இசைந்து ஏசுதாசன் ஒத்துப் போகாத காரணத்தால் தாம் பணியாற்றிய துறையில் முன்னேற முடியவில்லை. மேலதிகாரிகளோடு எப்போதும் இசைந்து போகாமல் ஒழுக்கமுறை விதிகளுக்குக் கட்டுப்பட்டவராய் இருந்தார். இதனால் அவருக்கும் அவரோடு பணியாற்றிவர்கள், அவரது மேலதிகாரிகள் ஆகியோருக்குமிடையே அடிக்கடி மோதல் உண்டாயிற்று. பின்வரும் நிகழ்ச்சி இதையுணர்த்தும். தஞ்சாவூர் மாவட்டத்தில் அறந்தாங்கி போலீஸ் நிலையத்தில் துணை ஆய்வாளராக ஏசுதாசன் பதவியேற்கின்றார். தகுந்த சாட்சியங்கள் இல்லாத காரணத்தைக் காட்டி ஒரு கொலை வழக்கை முடித்துவிட அவருக்கு முன்னர் அந்நிலையத்தில் பணியாற்றிய துணை ஆய்வாளர்கள் முடிவெடுக்கின்றனர். கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தார் பலர் ஒன்று சேர்ந்து இதனைப் பற்றித் தங்கள் குறைகளை ஏசுதாசனிடம் எடுத்துரைக்கின்றனர். ஏசுதாசனுக்கு அக்கொலைக்குரிய பல துப்புக்கள் கிடைக்கின்றன. நன்றாய்ப் புலன் விசாரணை செய்து நீதிமன்றம் தண்டிக்கும்படி குற்றவாளியின் மீது குற்றப்பத்திரிக்கை தயாரிக்கின்றார். தமக்கு முந்திய காலத்தில நடந்து முடிந்த கொலைக் குற்ற விசாரணையை எவ்வாறு ஏசுதாசன் தொடரலாம் என்ற கேள்வி எழுந்தது. எனினும் காவல்துறை அந்த வழக்கை நன்கு விசாரித்து முந்திய துணை ஆய்வாளருக்குத் தண்டனையும் வழங்கிற்று.

இன்னொரு நிகழ்ச்சி ஏசுதாசன் பேராவூரணி காவல் நிலையத்தில் பொறுப்பாளராயிருக்கிறார். அப்போது ஒருவன் கொலைக் குற்றத்தில் பிடிபட்டான். அவருக்கு மேலேயிருந்த வட்ட ஆய்வாளர் அந்தக் கொலைகாரனை விடுதலை செய்யும்படி ஏசுதாசனுக்குக் குறிப்பெழுதினார். ஏசுதாசன் அவருக்குக் கீழ்ப்படிந்து கொலை செய்தவனை விடுதலைசெய்தார். ஆனால் தமது வழக்குக் குறிப்பேட்டுடன் ஆய்வாளர் தமக்கு அனுப்பிய குறிப்பிதழையும் இணைத்து அவற்றைத் தஞ்சாவூரிலிருந்த துணைக் கண்காணியாளருக்கு அனுப்பி வைத்தார். விசாரணைக்குப் பின்னர்

ஆய்வாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். இவற்றிலிருந்து நாமறிவது; எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏசுதாசன் தவறான காரியங்களுக்கு இணங்கமாட்டார் என்று தெரிகிறது. ஏசுதாசனின் இணங்காத இந்தப் போக்கு அநேகருக்கு அச்சத்தைத் தந்தது.

துன்பமும் அவமானமும்.

இந்த உத்தமமான அரசு ஊழியரை வீழ்த்திடக் காவல்துறையிலிருந்து அவரது எதிரிகள் சூழ்ச்சி செய்தனர். அவரைப் பழிவாங்கிட அவர்களுக்கு அப்போது ஒரு வாய்ப்புக் கிட்டியது. 1930ம் ஆண்டில் காந்திஜியின் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டமும், ஒத்துழையாமை இயக்கமும் தீவிரமாக நடந்தது. ஏசுதாசனின் பகைவர்கள் ஒருங்கு கூடி அவருக்கு விரோதமாக ஏசுதாசன் அரசுக்கு விசுவாசமற்றவன் என்று அவர் மீது பொய்க் குற்றம் சுமத்தினர். ஏசுதாசன் அப்போது கும்பகோணத்தில் துணை ஆய்வாளராயிருந்தார். காந்திஜியின் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியற் கைதிகளுக்கு மாலைகள் போடப்பட்டதை ஏசுதாசன் தடுக்கவில்லையாம். இதனால் ஏசுதாசன் காங்கிரஸ்காரருக்கு வெளிப்படையாகப் பரிவு காட்டினார் என்பதுான் அவர் மீது எதிரிகள் சாட்டிய குற்றமாகும். ஏசுதாசன் ஒரு மாதம் வேலையிலிருந்து தற்கால நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் மேல் முறையீடு செய்தார். எனினும் ஏசுதாசன் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

இறுதியில் ஏசுதாசன் மாநில ஆளுநருக்கு முறையீடு மனுச் செய்தார். அவருடைய பதவி சம்பளம் குறைக்கப்பட்டது. துறையில் புதிதாகச் சேர்ந்தவர் போல் அவருக்கு வேலை கொடுக்கப்பட்டது. வேலையிலிருந்து விலக்கப்பட்டிருந்த 2 1/2 ஆண்டுகளுக்குரிய சம்பளம் அவருக்கு கொடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்படி அவருடைய நண்பர்கள் அறிவுறுத்தினர். அவரோ அவ்வாறு செய்யாமல் அரசுக்கு மீண்டும் மீண்டும் மனுச் செய்தால் நாளடைவில் எல்லாம் சரியாகும் என்று பொறுமையைக் கடைப்பிடித்தார். இவ்வாறு கஷ்டத்தையும் அவமானத்தையும் சகித்து வாழ்ந்தார்.

நீதியினிமித்தம் துன்புறுதல்

1940ம் ஆண்டில் ஏகதாசன் சீர்காழியில் காவல் துறைத் துணை ஆய்வாளராயிருந்தார். அப்போது ஒரு திரையரங்கில் இராணுவ வீரர்கள் சிலர் அட்டகாசம் செய்து, திரையரங்க அலுவலர்களை அடித்ததோடு பொதுச் சொத்துக்கும் நாசம் விளைவித்தனர். துணை ஆய்வாளர் ஏகதாசன் அவர்களைக் கைது செய்து, சட்டப்படி அவர்கள் தண்டிக்கப்பட விரும்பினார். அப்போது இரண்டாம் உலக மாகயுத்தம் நடந்து கொண்டிருந்தது. இராணுவ அதிகாரிகளோ போலீஸ் இலாகாவை வற்புறுத்தி அவர்கள் மீது போடப்பட்ட வழக்கினைத் திரும்பப் பெற முயன்றனர். ஏகதாசன் இதற்கு இணங்கவில்லை. குற்றவாளிகள் மீது சட்டப்படி போடப்பட்ட வழக்கை அவர் திரும்பப்பெற விரும்பவில்லை. அதைவிட வேலையிலிருந்து தாமே ஓய்வு பெற விரும்பினார். இவ்வாறு ஏறக்குறைய 30 ஆண்டுகள் நேர்மையும் சீர்மையுமாகத் துணை ஆய்வாளராகப் பணியாற்றிய ஏகதாசன் 1942ம் ஆண்டில் தம் ஊராகிய மெய்ஞ்ஞானபுரத்துக்கு வந்து சேர்ந்தார்.

மக்களுக்குச் சேவை புரிதல்

உலகம் களைகள் நீக்கப்படாத தோட்டம்; அங்கு மலர்ச் செடிகள் முட்செடிகளால் நெருக்கப்பட்டு அழிகின்றன; களைகள் மட்டுமே உலகத்தில் செழித்து வளர முடியும் என்று கருதியவராய் ஏகதாசன் மெய்ஞ்ஞானபுரத்துக்கு வந்தார். இனி மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது; அவர்களுடைய தவறான செய்கைகளுக்கு விலகியிருந்து தம் ஓய்வுக் காலத்தை அமைதியாய்க் கழிக்க வேண்டும் என்று ஏகதாசன் தீர்மானித்தார். அதற்கேற்ப ஊருக்கு வெளிப்புறத்தில் தமக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டார்.

போலீஸ் துறையில் ஓய்வின்றிச் சுறுசுறுப்பாக உழைத்த ஏகதாசனுக்கு இத்தகைய சோம்பலான வாழ்க்கை சிறிது காலத்தில் புளித்துவிட்டது. ஓர் நாள் பக்கத்தது கிராமத்திலிருந்து வந்த ஒரு பெண்மணி அழுது கொண்டு தன் சோகக் கதையை ஏகதாசனிடம் எடுத்துரைத்தாள். அவள் தனிமையாகத் தன் குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறாள். அவளுடைய கணவன் சம்பாதிக்க கொழும்பு சென்றிருந்தான். அவளுடைய வீட்டில் திருட்டு; அதனை

போலீசுக்குத் தெரியப்படுத்தினாள். பதிலில்லை. மீண்டும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாள். குற்றவாளி யார் என்று தெரிந்திருந்தும் அவன் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவளுக்குப் பணம் விரயமாகிக் கொண்டிருப்பதை ஏசுதாசன் அறிந்து கொண்டார். இதைப் போல பல நிகழ்ச்சிகள்; ஒருவருக்கு எதிராக மற்றொருவர் கொடுமை இழைத்தல் நாட்டில் நடப்பதை ஏசுதாசன் நன்கறிந்திருந்தார். இந்த ஏழைப் பெண்மணிக்கு உதவி செய்யப் போகலாமா? கூடாதா? என்ற மனப்போராட்டம் அவருக்குண்டாயிற்று. நான் இனி தனிமையாய் ஒதுங்கி சும்மா இருத்தல் கூடாது இந்தப் பெண்ணிற்கும் சமுதாயத்திலுள்ள இவளைப் போன்ற ஆதரவற்ற மக்களுக்கும் உதவி செய்வேன் என்று தீர்மானித்தார். அவருடைய இல்லம் நாளடைவில் மக்கள் பலர் தங்களுடைய குறைகளைச் சொல்லித் தீர்க்கும் புனித ஸ்தலமாக மாறியது.

ஊராட்சித் தலைவர் பணி

ஏசுதாசனின் சேவையைப் பாராட்டிய மக்கள் அவரை ஏகமனதாய் மெய்ஞ்ஞானபுரத்தின் பஞ்சாயத்து போர்டின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். முதலாவது 1950ம் ஆண்டிலும் மீண்டும் 1953ம் ஆண்டிலும் அவர் ஊராட்சி மன்றத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் தலைவராயிருந்த காலத்தில் ஊர்ப் பொது மக்களுக்கு மிகுந்த தொல்லை தந்த இரண்டு காரியங்களில் தமது முக்கிய கவனத்தைச் செலுத்தினார். முதலாவது மெய்ஞ்ஞைப் பகுதிகளில் அக்காலத்தில் களவு, கொள்ளையடிப்பு அடிக்கடி நடந்தது. கொள்ளையர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் சமுதாயத்தில் மதிப்புடைய சில பணக்கார நிலச்சுவான்தாரராயிருந்தனர். இந்த அட்டூழியங்களைச் செய்தவர்கள் செல்வந்தர்களின் பிடியில் இருந்தார்கள். கொள்ளையடிப்பதில் பெருந்தொகையைச் செல்வந்தர்கள் பெற்றுக் கொண்டு, எஞ்சியதைக் கொள்ளையடிப்பவர்களுக்குக் கொடுப்பார்கள். ஏசுதாசன் பொதுமக்களின் ஒத்துழைப்போடு இந்தக் கொடிய வழக்கத்துக்கு ஓர் முற்றுப் புள்ளி வைத்தார். போலீஸாரோடும் அவர் ஒத்துழைத்து

கொள்ளையடிப்பு, திருட்டு ஆகியவை ஊரில் நிகழாத படி செய்தார். இந்தச் செயல் சில சுயநலமிகளான பண்ணையார்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஏசுதாசனுக்கு எதிரிகளானார்கள்

பாசன நீர்க்குப் பஞ்சம்

மற்றொரு பிரச்சினை போதுமான பாசன நீர் கிடையாமை. சடையனேரிக் குளத்து நீரையே கிராமம் முழுவதும் நம்பியிருந்தது. பெரிய நிலச்சுவான்தாரர்கள் சடையனேரியிலிருந்து கிடைத்த கொஞ்ச நீரைப் பிற சிறுவிவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. ஏழை விவசாயிகளின் பயிர் வாடிக் கொண்டிருக்கப் பெரும் பண்ணையாளர்கள் தங்களுடைய புன்செய் நிலங்களுக்குக் குளத்து நீரைத் திருப்பி விட்டனர். ஆகவே தண்ணீர் கிடைக்காமல் ஏழைகளின் நெற்பயிர்கள் உலர்நதன. ஏசுதாசன் எல்லார்க்கும் சமமாக நீர் கிடைக்க வேண்டுமென்றால் சடையநேரிக் குளத்து நிர்வாகம் பஞ்சாயத்துப் போர்டுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று விரும்பினார். அவருடைய தூண்டுதலின் பேரில் மெய்ஞ்ஞானபுரம் பஞ்சாயத்தார் அதற்கேற்ப ஒரு தீர்மானம் போட்டு அதனை சென்னையிலுள்ள வருவாய்த்துறையினர்க்கும் உள்ளூர் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தனர். கொஞ்ச நிலம் வைத்திருப்போருக்கும் தண்ணீர் போதுமான அளவு கிடைக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. ஆனால் அவர்கள் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது.

புனிதத் தியாகம்

கொள்ளை, களவு ஆகியவற்றைத் தடுக்கவும், சடையனேரி நீர் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கவும் ஏசுதாசன் எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஏழைமக்களும், சிறு விவசாயிகளும் பாராட்டி ஏசுதாசனிடம் மிகவும் பாசம் வைத்தார்கள். ஆனால் ஏசுதாசனின் நல்ல நடவடிக்கைகள் சில தன்னலமிக்க செல்வந்தர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஏசுதாசனை மிகவும் வெறுத்தனர். 1951ம் ஆண்டிலேயே ஏசுதாசனை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டனர். அது தோல்வியுற்றது. 1953 செப்டம்பர் 22ம் நாள் பௌர்ணமி தினத்தன்று 65 வயதான தா பா. ஏசுதாசன் பெருந்தகை மெய்ஞ்ஞானபுரம் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் ஊராட்சி

அலுவலகத்திலிருந்து அன்றைய அலுவல்களை முடித்துக் கொண்டு தம் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறார். அப்போது சிலர் அவரை வழிமறித்து அவர் வீட்டிற்கு முன்னாலேயே மிருகத்தனமாக கொலை செய்து விட்டார்கள். ஏழைகளின் நண்பர் இவ்வாறு புனிதத் தியாகி ஆனார். ஏசுதாசன் என்ற ஏழை பங்காளர் நல்ல போராட்டத்தைப் போராடினார். விசுவாசத்தைக் காத்துக் கொண்டார். ஓட்டத்தை முடித்தார் இப்பொழுது நீதியின் கிரீடம் அவருக்காக வைக்கப்பட்டிருகிறது என்பது நிச்சயம்.

சுடர் இன்னும் ஒளிர்கிறது

இப்பொழுது தா. பா. அறக்கட்டளைக் காரியங்களை ஜெ. எஸ். பி. துரைராஜ் அவர்களின் தலைமையில் அவரது ஆலோசனைப்படி ஏசுதாசனின் பேரன்மார்களும், கொள்ளுப் பேரன்மார்களும் கவனித்து வருகின்றார்கள். உள்ளூர் மெய்ஞ்ஞானபுரம் ஆண்கள், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிட தா. பா. அறக்கட்டளை நிரந்தரமாக நிதியை அப்பள்ளிகளுக்கு கொடுத்துள்ளது. கே. தானியேல் ஏசுதாசன் என்ற தா. பா. அவர்களின் பெயரானாலும் அவருடைய பிள்ளைகளும் சென்னைப் பக்கமுள்ள எண்ணூரில் தூய பவுல் ஆலயம் கட்டப்படத் தாராளமாகப் பணவுதவி செய்துள்ளார்கள்.

இங்ஙனம் தா. பாக்கியநாதனும், அவருடைய மைந்தன் ஏசுதாசனும் பொதுமக்களுக்கு செய்த நற்பணி இன்னும் தொடர்கின்றது.

(தமிழாக்கம். பேராசிரியர். சா.தே. கிறிஸ்டோபர்)

11

சுவடுகள்

வழிகாத்தான் வரலாறு

கரோலின் ஜெபதுரை

1765 - வழிகாத்தான் கதை உருவான வருடம் அது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளாயினும், இது இன்றையச் சூழலுக்கும் உகந்ததாகவே உள்ளது. ஏனெனில், பழையவை முற்றிலும் ஒழிந்து போவதில்லை. அவை எண்ணிலடங்கா மாற்றங்களின் மத்தியிலும் நம்மிடையே, நம்மில், நம்மன ஓட்டங்களில் சற்றும் மாறுதலில்லா, தொடர் சம்பவமாக உலவி வருகின்றன. நேற்றைய துன்ப இன்பங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் தழுவிய இத்தொடர்கதை நேற்று, இன்று, நாளை, என்ற முக்காலத்திற்கும் ஏற்ப முற்றிலும் உருவாகியுள்ளது.

இக்கட்டுரையின் நோக்கம் கடந்த காலத்தை பெரிதுபடுத்துவது அன்று. மாறாக காலம் என்ற பூதக்கண்ணாடியின் மூலமாக நம் மூதாதையர்கள் கடந்து வந்த கோரப்பூசல்களின் அகோரங்களையும், அவலங்களையும் படம்பிடித்துப் பார்க்கவும், அதன் மூலமாக இன்று எவ்வாறு வாழ்க்கை என்னும் சக்கரத்தால் பல வளைவுகள் நெளிவுகளுடன் நாம் உருவாகியுள்ளோம் என்பதை அறிந்து கொள்வதுமே. இவ்வாராய்ச்சி, நம்முடைய திறன்களையும், பலவீனங்களையும் நன்கு அறிந்து கொள்ள பேருதவியாக இருக்கும்.

இக்கதையின் சம்பவங்கள் ஐரோப்பிய சுவிசேஷப் பணியாளர்கள் நம் இந்திய மண்ணில், குறிப்பாக திருநெல்வேலியின் தென் மாவட்டங்கள், தெற்கு திருவாங்கூர் ஆகிய இடங்களில் பணியாற்றிய காலத்தைச் சார்ந்ததாகும். அறியாமை என்னும் இருள் பல நூற்றாண்டுகளாக இவ்விடங்களில் கவிழ்ந்திருந்தது. சமுதாய ஏற்றத்தாழ்வுகளும், சமூகக் கொடுமைகளும் தாழ்த்தப்பட்ட குடியினரின் உதிரத்தை உறிஞ்சிக் குடித்த காலமது. அத்தகைய சூழ்நிலையில் தங்களின் தனிப்பட்ட உணர்வுகளின் மதிப்பையும்,

---

திருமதி. கரோலின் ஜெபத்துரை பாளையங்கோட்டை சாராள்தக்கர் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர்

சமுதாய மேம்பாட்டையும் அடைய வேண்டுமென்ற அவர்தம் தாகமானது, சுவிசேஷ பணிக்கு ஏற்ற தளமாக அமைந்தது எனலாம்.

முதன் முதலாக சுவிசேஷப் பணியானது திருநெல்வேலி மாவட்டத்தில், ஒரு குறிப்பிட்ட பிற்படுத்தப்பட்டதும் அவர்தம் பல கிளைகளும், பக்க கிளைகளும் கொண்டதுமான மக்களிடையே தான், பெருமளவில், அதிலும் அதிவிரைவில் பலன் தந்தது. அந்த இனத்தினர் நாடார்கள் அல்லது சாணார்கள் என அழைக்கப்பட்டனர். எங்கள் குடும்ப வரலாற்றைத் தோற்றுவித்த மூத்த தலைவரான வழிகாத்தான் என்பவர் இந்த இனத்தைச் சார்ந்தவர் ஆவார்.

இரேனியஸ் ஐயர் அவர்களால் **திருநெல்வேலியின் பிலிப்பு** சபை என்றழைக்கப்பட்ட ஷண்முகபுரம் - இன்றைய கடாட்சபுரம் - தனித்தன்மை உள்ளது. அங்குதான் முதன் முதலில் 1797ல் 20 பேர் திருமுழுக்குப் பெற்றனர். அங்கிருந்து இரண்டு வீதிகளே தள்ளியுள்ள, முத்துக்கிருஷ்ணபுரமென்ற குக்கிராமமே வழிகாத்தான் என்னும் எனது மூதாதையரின் சொந்த ஊராகும்.

திருநெல்வேலியில் தென்கிழக்குப் பகுதிகளில் இச்சமூகத்தினர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே குடியேயிருந்தனர். ஹார்ட்கிரேவ் என்னும் வரலாற்று அறிஞர் அவர்களைப் பற்றி, பல குறிப்புகள் தருகிறார். அவர்கள் எவ்வாறு பனைமரங்களும், குடும்பக் கோவில்களும் நிறைந்து இங்கொன்றும், அங்கொன்றுமாகவுள்ள வறண்ட தேரி எனப்பட்ட இடங்களில் பெரும்பாலும் குடிசைகளில் வசித்து வந்தார்களெனக் குறிப்பெழுதியுள்ளார். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறும் சமயத்தில் பண்பாடற்ற, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட முரட்டாட்டமுள்ள, படிப்பு வாசனையே அறியாதவர்களாக இருந்தனர். தங்களது கடந்த கால சீரிய வாழ்க்கைத் தரம் பற்றிய சில நினைவுகள் அவர்களிடம் படிந்திருந்தது (24-29). அவர்கள் ஏழைகளாயினும், பரம ஏழைகள் அல்லர். அவர்தம் சமயக்கோட்பாடுகளைப் பற்றி குறிப்பிடுகையில் கிப்ஸ் என்பார், அவர்கள் தங்களுக்கே உரித்தான, இந்து மரபைத் தழுவாத தேவதை வழிபாடுகளில் ஈடுபட்டு வந்ததாக கூறுகிறார்.[8] அதேபோன்று , தாங்கள் பத்திரகாளியின் பிள்ளைகள் என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்வதுடன், மாடனை வழிவழியாக வழிபடுவதும்

அவர்கள் பழக்கமென்று ஹார்ட்கிரேவ் கூறுகிறார் [55] ஆதலால் கால்டுவெல், நாடார்களின் மதம், பேய்களை வழிபடும் மதமென்று கருதி இந்து மதத்தினின்று அதை வேறுபடுத்திக் கூறியுள்ளார்.

இத்தகைய பின்தங்கிய வாழ்க்கை முறையினின்றும், இருளடைந்த பேய் வழிபாடுகளினின்றும், தெய்வாதீனமாக, ஒளியினிடத்துக்கு இந்த மூதாதையர் வழிநடத்தப்பட்டார்கள். வழிகாத்தான் என்னும் எமது மூதாதையர் மலையாளத்திலிருந்து குடிபெயர்ந்து முத்து கிருஷ்ணாபுரத்திற்கு வந்ததாக சொல்லப்படுகிறது. ஹார்ட்கிரேவ் என்னும் வராற்று ஆசிரியர் சொல்லும்பொழுது 16வது நூற்றாண்டில், மாநாட்டை, மலையாள மன்னர்கள் ஆட்சிபுரியும் காலத்தில் சில குடும்பங்கள் குடிபெயர்ந்து அங்கு சென்றதாகக் குறிப்பிடுகிறார். (83-4).

இரு நூற்றாண்டுகள் கழித்து கட்டாய வேலை செய்யுமாறு நாடார் சமூகத்தினரை நாயர்கள் நெருக்கும் சமயத்தில் அங்கிருந்து பெயர்ந்து மாநாட்டிற்கு (கிழக்கு நாட்டிற்கு) வந்த மக்களில் வழிகாத்தானும் ஒருவரென நம்பப்படுகிறது.

வழிகாத்தான் பரம்பரை செல்வந்தராக இருந்த காரணத்தால், கிருஷ்ண முதலியாரென்பவரிடமிருந்து, நிறைய நிலபுலன்களை வாங்கி, அதற்கு முத்துக்கிருஷ்ணாபுரமென்று பெயரிட்டார். சுடலைமாடனென்ற அவரது ஒரே புதல்வன், பிறந்த உடனேயே, உயிர் நீத்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. அக்காலத்தில் மக்கள் பல தொற்று நோய்களால் அவதியுற்று சீக்கிரம் உயிரிழக்க நேரிட்டது. அம்மைத் தழும்புள்ளவர்களுக்குத்தான் தங்கள் பெண் பிள்ளைகளைப் பெற்றோர் மணம் செய்து வைப்பார்கள் என ஒரு செய்தி கூறுகிறது.

வழிகாத்தான் 1765லும், அவரது ஒரே மகனாகிய சுடலைமாடன் 1796லும் பிறந்திருக்க வேண்டுமென்றும் எண்ணப்படுகிறது. 1796ல் தாவீது சுந்தரானந்தன் அவர்களால் எழுப்பப்பட்ட சுவிசேஷப்புரட்சி என்னும் தீ அண்டைக்கிராமங்களில் வெகுவேகமாகப் பரவ ஆரம்பித்திருந்தாலும், வழிகாத்தான் பரம்பரையினர் 1860 வரை, தங்கள் தெய்வங்களையே

வணங்கியுள்ளனர். அவர்கள் அவ்வாறு இருளில் இருந்ததற்கு, அவர்களுடைய மனநிலை காரணமாக இருக்கலாம். ஏற்கனவே இடப்பெயர்ச்சி சூழலில் அவதியுற்றதால் இன்னுமோர் பெரும் மாற்றத்திற்கு உட்பட மனமற்றிருக்கலாம். அல்லது பெரும்பணக்காரர் என்ற மமதையில் ஏழைகளின் மதத்திற்கு மாற மறுத்திருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், வழிகாத்தானும், மகன் சுடலைமாடனும் கிறிஸ்துவின் அன்பை அறியாமலே இறந்தனர். ஆனால் பின்னர், சுடலைமாடனின் ஆறு மகன்களும் கிறிஸ்துவை நேசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சுடலைமாடனின் தவப்புதல்வனாகிய ஆறுமுகம், கோவில்களில் தண்ணீர்க் குடத்துடன் சாமி ஆடுபவர். நாடார் சமூகத்தினர்களிடையே, இத்தகைய சாமியாட்டத்தோடு கூடிய வழிபாடு வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. முத்துக் கிருஷ்ணாபுரத்திலும்,அதன் அண்டைய கிராமங்களிலும், இத்தகைய பேய்களுக்குரிய பலியிடுதலோடு கூடிய வழிபாடு பன்னெடுங்காலமாக வழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. இன்றும் அங்கு பேய் பிடித்தல் என்பது அன்றாட நடப்பு என்று ஏரோன் குறிப்பிடுகிறார்.[7]

கடவுளின் அழைப்பு நமக்கு ஆச்சரியாமாகவும், விந்தையாகவும் உள்ளது. 1860 ல் போல், ஆறுமுகத்தின் இரண்டாவது மகன், தன்னுடைய மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது குதிரையில் சவாரி செய்து கொண்டு வந்த சில வெள்ளை மிஷனெரிமார்கள், அவனைக் கூப்பிட்டு அவனுடன் சம்பாஷித்தனர். பின்னர் அவனைத் தங்களது பள்ளியில் சேர்ந்து படிக்குமாறு வற்புறுத்தினர். அப்பையன் மிகுந்த சந்தேகங்களுக்கிடையில் சம்மதித்து அவர்களுடன் சென்றான். பள்ளியில் இறைவனின் அன்பை அறிந்து தன்னை அவர் பணிக்கு அர்ப்பணித்தான்.

மார்டின் லூத்தர் என்று பெயர் மாறிய அந்த இளைஞர் பேரறிஞனானார். 1883ல் மதராஸ் கிறிஸ்தவ கல்லூரியில் இளங்கலைப் (பி.ஏ) பட்டம் பெற்றார். நாடார் சமுதாயத்தில் முதல் பட்டதாரி அவர். அவர் கிறிஸ்துவின் அடியவராக மாறியபின்,

அவருடைய தகப்பனாகிய ஆறுமுகம் தன் பெயரை ஆரோன் என்று மாற்றிக் கொண்டார். கருத்தக்கண்ணு, சுப்பையா, அருமைநாயகம், சண்முகம், கந்தசாமி ஆகிய ஆறுமுகத்தின் ஐந்து சகோதரர்களில் கடைசி இரண்டு பேர் பேய் வணக்கத்தினராக இருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகள் யாவரும் கிறிஸ்தவரானார்கள். இவர்களெல்லாரும், படிப்பிலும் , வாழ்க்கையிலும் தீவிர முன்னேற்றம் அடைந்தார்கள். இதுவே வழிக்காத்தானின் குடும்பத்தின் சரித்திரம்.

முதல் கிறிஸ்தவரான மார்டின் லூத்தர் கிறிஸ்தவ மிஷனெரி பள்ளியாகிய சாப்டர் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்து, மாண்புமிகு டேவிட் பேரின்பம் ஐயர் அவர்களின் மகளாகிய மேரி கிரேஸ் அம்மையாரை மணந்து, எட்டு பிள்ளைகளுக்குத் தந்தையானார். அடைக்கலாபுரத்தில் உள்ள லூத்தர் தெரு அவர் நினைவால் பெயரிடப்பட்டது. தங்கசாமி (1857-1936) என்ற அவரது சகோதரர், முப்பத்தெட்டு வருடங்களாக, சி.எம்.எஸ் பயிற்சிப் பள்ளியில் தலைமை ஆசிரியராக சீரிய பணியாற்றி உள்ளார். சதுரங்க ஆட்டத்திலும்,பந்து வீசும் விளையாட்டிலும் சிறப்புற்ற அவர் ஆங்கிலேயருடன் இந்தியரையும் கலந்து ஆட வைத்தார்.

தங்கசாமி வாத்தியாரின் திருமணம் ஒரு அதிசயமானாலும் உண்மையே. அவருடைய மாமனார் ஒரு நிலச்சுவான். திருச்செந்தூர் கோவில் தருமகர்த்தாக்களில் ஒருவரான அவர் இந்து மதப் பற்று அதிகம் கொண்டவர். அவரது விநோதமான கனவு ஒன்று அவரது மகள் மதுரை மீனாட்சியின் வாழ்வை மாற்றியது. அவள் ஒரு கிறிஸ்தவரைத்தான் மணக்க வேண்டுமென்று அவரது கனவில் ஒரு இந்து சந்நியாசியார் விபூதியளித்து அவருக்கு வாக்குச் சொன்னார். அதுவே இறைவனின் ஆணையென்று நம்பிய அவர் பெரும் முயற்சிக்குப்பின் தங்கசாமி வாத்தியாரைக் கண்டுபிடித்துத் தனது மருமகனாக்கினார்.

வழிகாத்தான் குடும்பம் மனம் மாறிய காலம் கிறிஸ்தவர்களின் பொற்காலமாக மாறத்துவங்கிய காலமாக இருந்தது. புதிதாக மதம் மாறிய கிறிஸ்தவர்கள் சுமார் 20 ஆண்டுகளாக (1820-40) அடைந்த இன்னல்கள் கிட்டத்தட்ட மாற ஆரம்பித்தது.

வரி அதிகமாக வசூலித்து தமிழக மக்களை வருத்திய பாளையக்காரர்களின் காலம் முடிவுற்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் சமாதானமும் செழுமையும் கிட்டியது. மக்கள் முன்னேற்றமான பாதைகளில் செல்ல ஆரம்பித்தனர். மிஷனெரி பள்ளிகள் முதற்தரமான கல்வியைப் புகட்ட ஆரம்பித்தன.1835 முதல் ஆங்கிலம் மூலமாக பள்ளிகளில் கல்வி புகட்டப்பட்டது. 1857ல் மூன்று பல்கலைக் கழகங்கள் உருவாகின. பின்னர். 1860 லிருந்து, கல்வி, வாணிப முன்னேற்றத்துக்கேற்ப, திருநெல்வேலியில் சமுதாய நிலைமை மாறியது.

இத்தகைய நல்ல சூழ்நிலையை நாடார் சமூகத்தினர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். இந்துக்கள், கிறிஸ்தவரென்று வேறுபாடில்லாமல், நாடார் சமுதாயத்தினரிடையே மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டது. இந்து / கிறிஸ்தவரிடையே கொள்வினை கொடுப்பினை இருந்தமை அதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அவர்களது ஒன்றுபட்ட தன்மை காரணமாக தகுந்த கல்வியும், உத்தியோகமும் பெற்று, தங்களின் மதிப்பையும், தகுதியையும் நாடார்கள் உயர்த்திக் கொண்டார்கள். இக்காலக்கட்டத்தில் தான் வழிகாத்தானின் குடும்பம் பேரளவில் முன்னேறியது.

1900 போல், வழிகாத்தானின் குடும்பத்தில், இடம் பெயர்தல் (migration), மேற்கத்திய பண்பாட்டைத் தழுவுதல் (Western-ization) ஆகிய இருவகைப் போக்கின் காரணமாக வெளிப்படையாக மாறுதல்கள் பெரிதாகத் தெரிய ஆரம்பித்தன. மிகவும் குறுகிய வட்டத்திற்குள் அமைந்திருந்த தமிழ் சமுதாயத்தின் கலாச்சாரக் கோட்டைகள் ஏற்கனவே தகர்த்தெறியப்பட்டன. வம்சாவழி, தொழில்களுக்குப் பதிலாக,வெவ்வேறான வேலைகளை தம் கல்வித் தகுதிக்கேற்ப தமிழர்கள் தேர்ந்தெடுக்கத் தொடங்கினர். உயர் கல்வி பெற்ற ஆண் பெண் ஆகிய இருபாலரும், தங்கள் சொந்த ஊருக்கும் அப்பாற்பட்ட பசுமையான புல்வெளிகளைத் தம் மனக்கண்களால் கண்டு, அவற்றை நோக்கி நகர ஆரம்பித்தனர்.

வழிகாத்தான் வழிவந்தோர், தங்கள் பூர்வீக ஊரான முத்துகிருஷ்ணாபுரத்திலிருந்து, இறக்கையுடைய விதைகள் போன்று,

புயல் வேகத்தோடு வெளியேற ஆரம்பித்தனர். மார்ட்டின் லூத்தரின் இரண்டு பிள்ளைகள் மருத்துவர் ஆனார்கள். சிங்காரவேல் லூத்தர் (1885-1942) இங்கிலாந்தில் தன்னுடைய மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு திரும்பி வந்து சென்னை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக சில வருடங்கள் பணியாற்றினார். பின்னர் மலேசியா நாடு சென்று சிங்கப்பூரில் பெரிய அறுவை நிபுணரானார். அவர் தங்கை ரத்னம்மா ஐசக் (1887-1970) அவர்கள் எம்.ஆர்.சி.எஸ் மற்றும் எல்.ஆர்.சி.எப் என்ற மருத்துவப்பட்டங்களை இங்கிலாந்தில் முடித்து கர்நாடகாவில் குடியிருந்து மருத்துவசேவை செய்தார்கள். அன்னாருடைய குடும்பத்திலுள்ள பலர், உலகெங்கும் மருத்துவராய் இருந்து வந்திருக்கிறார்கள்.

தங்கம்மா(1876-1913) என்ற லூத்தரின் மற்றும் ஒரு புதல்வி தேவதாசன் ஐயர் அவர்களை மணந்தார். அன்னார் பாளையங்கோட்டையிலுள்ள பிஷப் சார்ஜண்ட் உயர்பள்ளியிலும், சி.எம்.எஸ் பயிற்சிப் பள்ளியிலும் தலைமை ஆசிரியராகவும் இருந்தார். அவர்களின் மகனான ஐ.டி. தாமஸ் (1899-1983) ஐயர் அவர்கள் திருச்சியில் ஊழியம் செய்தார்கள். தாமஸ் அவர்களின் மகள் தங்கபாய் ஆவார். அவரது கணவன், டேவிட்சன் நைஜீரியா, மலேசியா, பர்மா ஆகிய நாடுகளில் மீனவர்களுக்கென்று பயிற்சி அளிக்க மையங்கள் ஏற்படுத்தினார். இவ்வாறு வழிகாத்தான் குடும்பத்தினர் தங்கள் சொந்த ஊரை விட்டு குடி பெயர ஆரம்பித்தனர்.

கிறிஸ்தவம் பிரபலமானதிலிருந்து, தமிழரிடையே, பல மாற்றங்கள் தோன்றின. படிப்பறிவாலும், ஆங்கில நாகரிக கவர்ச்சியின் காரணமாகவும், மதம், அறிவியல்,சமூக வாழ்வு ஆகியவற்றில் பல மாறுதல்கள் தென்பட்டன. 20ம் நூற்றாண்டின் மூலக்கருத்துகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலியவை அவர்களைப் பாதிக்க ஆரம்பித்தன. ஆங்கிலேயரது மொழியின்பால் மிகுந்த ஆர்வம் காட்டினர். மேலும் தங்களதல்லாத மேற்கத்திய நாட்டுக் கலாச்சாரத்தை தங்களுடைமையாக்கிக் கொண்டார்கள்.

பள்ளியிலோ, பணிபுரியும் இடத்திலே, ஆங்கிலேயருடன் நேரடித் தொடர்புடைய வழிகாத்தான் குடும்பத்தினரிடையே மேல்நாட்டுத் தாக்கம் தவிர்க்க முடியாத அளவு அதிகரிக்கவே, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் நோக்கத்தகு மாறுதல்கள் ஏற்பட்டன. நடை, உடை, பாவனை, உணவு, கலை, பேச்சு, பொழுதுபோக்கு அத்தனையும் வேறுபடத் தொடங்கின. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடிந்த பலரது வாணிபம் மற்றும் சமுதாய வாழ்வில் ஆங்கிலம் மட்டுமே மிகுதியும் பயன்பட்டதால் தங்கள் தாய் மொழியினை முற்றிலும் மறந்து போனார்கள் என்றே சொல்லலாம்.

அவர்களில் அநேகம் பேர், தங்கள் பிள்ளைகளுக்கு ஆங்கிலப் பெயர்களையோ அல்லது ஆங்கிலவேதாகமப் பெயரையோ இட்டனர். எபநேசர், தாமஸ், காட்வின், வில்லியம், ஜார்ஜ், ஹெப்சி, கிறிஸ்டி, பிரிஸ்சில்லா, பிரின்ஸஸ், ஆனி போன்ற பெயர்கள் பெருமளவில் இடப்பட்டன. பெயர் இடுவது பற்றி நம்மவர் மத்தியில் கதை ஒன்று உண்டு. மார்டின் லூத்தர் மகளான ராஜம்மா (1880-1929) தன்னுடைய ஐந்தாவது மகவைப் பெற இருக்கும்பொழுது, அவளது சிநேகிதியான ஸ்காட்லாந்து சுவிசேடப் பெண்மணி ஒருவர் அக்குழந்தை ஆண் மகவாயிருந்தால் **மாக்லீயன்** என்றும், பெண்ணாகயிருப்பில் **எல்லா** என்ற தன்னுடைய பெயரையும் இடுமாறு விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள். ராஜம்மாவுக்கு ஒரே குழப்பம். என்னதான் இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் பிரசித்தி பெற்றிருந்தாலும் ஒரு பல் துலக்கும் தூரிகையின் பெயரையா தன் அருமை ஆண்மகவிற்கு அளிக்க வேண்டும்? இக்கட்டான வேளை அது. கடவுள் அருளால் பெண் மகவு பிறந்தது. குழப்பத்திற்கு முடிவும் வந்தது எல்லா என்ற பேரிட்டதால்.

வழிகாத்தானின் பரம்பரை மக்கள் வெள்ளையர் போன்று குதிரை சவாரி செய்தல், புகைபிடித்தல், பல்வேறு துப்பாக்கியைக் கையாளுதல், வேட்டையாடுதல் போன்றவற்றையே தங்கள் பொழுது போக்காக்கிக் கொண்டனர். ஐரோப்பிய விளையாட்டுகளான பூப்பந்து எறிதல், சீட்டாடுதல், சதுரங்கமாடுதல், கூடைப்பந்து எறிதல்

முதலியவற்றிலும் இன்னும் ரக்பி, கோல்ப், கிரிக்கெட் போன்றவற்றிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

1926ல் தோன்றிய எட்வின் தாமஸ் என்பவர் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர். வேட்டையாடுதல், குதிரைச் சவாரி போன்றவற்றை அதிகமாக விரும்பினார். அதனால் தன் குழந்தைகளுக்கு நிம்ரோத், கார்பெட், ஹீபெர்ட், டயனா என்று வேட்டையைத் தழுவிய பெயர்களையே இட்டார் அவருடைய விருப்பமான பாடல் கீழ்வருமாறு.

இறைவா, இன்று என் வேட்டை முழுமையாக இருக்கட்டும்

ஒன்று முழுமையாகக் கொன்று விடட்டும்,
அல்லது முழுமையாக விட்டு விடட்டும்.

பழைய குடும்பப் புகைப்படங்களைப் பார்க்கும் போது, ஆண்கள் ஆங்கிலேயரைப் போல் ஆடையணிந்தும், பெண்கள் அணிகலன்கள் நிரம்ப அணிந்து, சேலையணிந்த வண்ணமும் காணப்படுகின்றனர். எமது பெண்கள் கிஞ்சித்தேனும் ஆண்களுக்குச் சிறிதும் சளைத்தவர்களல்லர். எமது குடும்பத்தில் அவர்களும் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட்டு வந்தனர். அவர்கள் அனைவரும் கடாட்சபுரத்து ஐரோப்பிய பெண் சுவிசேடக குழுவிலுள்ள ஹாப்ஸ், ஹாகின்ஸ், நியூமென், கிபென்ஸ் ஆகிய பெண்மணிகள் நடத்திவந்த விடுதிகளில் தங்கி, உயர்கல்வி பெற்று உயர்நிலை அடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு பெண்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்ததோடு வேலைக்குச் செல்லவும் ஆரம்பித்தனர். வீட்டை நிர்வாகம் பண்ணவும் வெளி வேலைகளைத் திறமையோடு செய்யவும் சிறந்த பயிற்சி பெற்றனர். தற்காலத்து மிகச்சிறந்த பெண்களில் ஒருவராக ரத்னம்மா ஐசக் அவர்களின் பேத்தியும், கன்னியாகுமரி பிஷப் ஞானதாசன் அவர்களின் மருமகளுமான அருணா ஞானதாசன் அவர்களைச் சான்று காட்டலாம். அவர் ஜீனீவாவிலுள்ள, உலக ரீதியான சபை கூடுதலில் பெண்கள் கூட்டணியின் (WCC) நிர்வாகியாக இருக்கிறார்கள். ரத்னம்மா ஐசக்கின் சேவையை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர்களின் மூத்த சகோதரி பிரசவத்தின் போது இறந்தது அவர்

மனதில் ஆழமான தழும்புகளை உண்டாக்கியது. அக்காலத்தில் பயிற்சியில்லாத, படிப்பறிவில்லாத, பட்டிக்காட்டு நாவிதப் பெண்கள்தாம் பிரசவம் பார்க்கும் தாதியர். இக்கொடுமையை மாற்ற எண்ணிய ரத்னம்மா, தனது ஊரிலிருந்து பல பெண்களுக்குத் தகுந்த பயிற்சி அளித்து முத்துக்கிருஷ்ணபுரத்துக்கு திருப்பி அனுப்பினார். இன்னும் பல்வேறு முறைகளில் அதிசயிக்கத்தக்க முறையில் கர்நாடகாவில் செய்த பொதுப் பணியின் காரணமாக, அவருக்கு இந்திய அரசு மதிப்பிற்குரிய பத்மஸ்ரீ விருது 1959-ல் வழங்கியது. இவர் சாராள்தக்கர் கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவிகளில் ஒருவராவார்.

அடுத்த தலைசிறந்த பெண்ணாக டாக்டர் ப்ளோரா ராஜரத்தினம் (1905-1992) அவர்களைக் குறிப்பிடலாம். அவர் 1924ல் மதராஸ் மருத்துவக் கல்லூரியிலிருந்து, முதன்மையான மாணவிக்குரிய விருதாகிய சீதாபாய் தங்க வளையலைப் பெற்றார். அவருடைய வழித்தோன்றலாகிய அநேக மருத்துவர்கள் இன்று சேலத்திலுள்ளனர். நல்ல சங்கீத ஞானமுடையவராகவும், அவர்கள் இந்திய மருத்துவ சபையில் (IMA) முக்கிய பங்கு வகிப்பவராகவும் உள்ளனர்.

வழிகாத்தான் குடும்பம் தலைசிறந்த தலைவர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளது. திரு. எம்.டி. தாமஸ் (1886-1966) என்பார். திரு. மின்டன் தாமஸ் என்பவரின் மகனாவார். பாளையங்கோட்டையிலுள்ள ஜாண்ஸ் உயர் பள்ளியில் புகழ்வாய்ந்த தலைமை ஆசிரியராகவும், காந்தியவாதியாகவும், நிரந்தர பிரம்மச்சாரியாகவும் இருந்து வந்தார். நம் ஆலயங்களில் பாடப்படும் பாமாலையைத் தொகுத்துவெளியட்ட குழுவின் தலைவராகவும் பணி ஆற்றினார். அடுத்து 1921ல் பிறந்த விக்டர்கோயில் பிள்ளை, அகில உலக ரீதியில் புகழ் பெற்ற எழுத்தாளராய் இருந்தார். அதே போன்று 1972ல் தோன்றிய அவரது மகன் பிரீதம் கோயில்பிள்ளை, பேர் பெற்ற பல நாடகங்களைத் தயாரித்து இயக்கியவர். டைம்ஸ் ஆப் இந்தியா என்ற செய்தித்தாள் பிரீதம் நடத்திய யனோமா என்ற நாடகத்தைப் புகழ்ந்து அவருக்கென்று இரண்டு பத்தி செய்தி ஒதுக்கியதென்றால் அவர் எத்தகைய புகழ் பெற்றவரென்று அறியலாம்.

இவ்வாறாக, வழிகாத்தானின் கிரீடம் பல விலையுயர் கற்களால் ஆனது. இக்குடும்பத்தினர் எழுத்தாற்றலும் கற்பனைத்திறனுமுடையவர்களாகக் காணப்பட்டனர். உதாரணமாக 1909ல் தங்கவேல் வாத்தியார் அவர்களுக்குப் பிறந்த எட்வின் லூத்தர் கோலார் என்னும் தன் பணி இடத்தில் பல்வேறு பத்திரிகைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். ரத்னம்மாவின் வழிவந்தோர் *நாமும் நம்முடையதும்* என்ற ஒரு வெளியீட்டின் மூலம் அவ்வப்போது தங்களுக்குள்ளேயே செய்திகளைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். கோகிலா ராஜையா என்பார். பெமினா என்ற பத்திரிக்கையின் சென்னை ஆசிரியராக இருந்தார். அவர் சுதந்திரமாக எழுதும் திறன் படைத்தவர். 1940 ல் தோன்றிய சுகுமார் மாணிக்கவாசகம்,கல்கத்தாவில் பிரபலமானவர். டி.வி.யில் புதிர் வினா விடை நடத்துபவராக உள்ளார். செவந்தி என்ற பெயரில் டாக்டர் அன்பு பால் என்பவர் தமிழில் எழுதும் எழுத்தாளர்.

மனுவேல் ஆரோன் (பி. 1935) ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மற்றும் எண்பது ஆண்டுகளில் பேரும், புகழும் அடைந்த சதுரங்க விளையாட்டு வீரரும், 1962ல் இந்திய அரசின் அர்ஜுனா விருது பெற்றவருமாவார். அவருடைய *வழிகாத்தானின் குடும்பம் 1765-1994* என்ற புத்தகம் விலை மதிப்பற்றது. கடின உழைப்பும், எவருமே செயற்கரிய செயல்களை மிகவும் எளிதில் செயல்படுத்தும் திறனுமுள்ள இப்புரவலர் அக்குடும்பத்திலுள்ள எளியவருக்குத் தக்க சமயத்தில் உதவுவதற்காக காப்புநிதி ஒன்று ஏற்படுத்தியுள்ளார். அரவிந்த் (பி. 1963) என்ற அவருடைய புதல்வன் ஆசியாவிலேயே, சதுரங்க விளையாட்டுச் சம்பந்தமாக வெளியாகும் ஒரே மாத இதழான *சதுரங்கத்துணைவனின்* ஆசிரியராவார்.

வழிகாத்தான் தோன்றல்களில் சிலர் அநீதியை எதிர்க்கும் துணிச்சலுடையவர்கள். இம்மனிதரில் சிலரைப் பற்றி ஆராய்தல் நன்று. டாக்டர் சிங்காரவேல் லூத்தரும், அவருடைய மனைவியின் சகோதரருமாகிய டாக்டர் ஜோசப் பேரின்பமும் சிங்கப்பூரில் பணியாற்றி வந்தனர். ஒருமுறை ஜப்பானியப் படையினரால், ஆங்கிலேயருக்குச் சாதகமானவரென்று இருவரும் சந்தேகிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டாம் உலகப்போர் காலம் இது. சில நாட்களில் சிங்காரவேல் விடுதலை

செய்யப்பட்டார். ஆனால் அவர் தன் உயிரைக்காக்க ஓடிவிடாமல் அக்கொடியவரிடம் பேரின்பத்தின் உண்மை நிலையை உறுதியுடன் கூறி நின்றார். கோபமுற்ற எதிரிகள் இருவரையும் சுட்டு வீழ்த்தினர். மலேசியாவிலுள்ள பேர்மை மருத்துவமனையில், அவர்களிருவரையும் உள்ளிட்ட பொதுவான கல்லறை இன்றும் உள்ளது.

அடுத்த வீராங்கனை வெள்ளை அம்மா (1880-1946) ஆவார். இவர் திருமணமாகி இலங்கையில் வசித்து வந்தார். திடீரென்று தன்னுடைய கணவரை இழந்தார். 32வயது நிரம்பிய ஒரு இளம் விதவையாக தன்னுடைய 4 மகன்களுடன் தன் ஊரான முத்துக்கிருஷ்ணாபுரம் நோக்கி வந்தார். வழியில் அவருடைய மூன்று மகன்கள் வாந்தி பேதியினால் மரித்துவிட்டனர். ஆனால் தன் மனத்திடனை விட்டு விடாமல், கடைசி மகனை கருத்தாக வளர்த்து ஆளாக்கினார்கள். வெள்ளை அம்மா சுய பரிதாபத்துக்கு ஒரு நாளும் இடம் கொடுக்கவில்லை. மாறாக மனங்கலங்குவோருக்கு அவர் ஆறுதலின் ஊற்றாக இருந்தார். ஏழைகளுக்கு அரும்பெரும் உதவி செய்வதில் வல்லவரென அவரைப் பற்றிப் பெருமையாகக் கூறப்படுகிறது.

ஆரோன் தேவதாசனின் (1877-1957) பாடுகள் மிக அதிகம். பதினான்கு பிள்ளைகளில் 3 பையன்கள் குழந்தைப் பருவத்தில் மரித்தனர். 3 பையன்கள் 1916ல் காலரா நோயினால் இறந்தனர். கடைசியாக 29 வயது வரை வாழ்ந்த ஆர்னால்ட் எலும்புருக்கி நோயினால் நலிவுற்று மரித்துப் போனான். மனமுடைந்த தாயார். வருத்தத்தின் மிகுதியால் இறந்து போனார். ஆனால் ஜெபவீரராகிய தகப்பனார் தன்னுடைய எண்பது வயது வரை போராடி, வெற்றி வாழ்க்கை நடத்தினார். கடவுள் அவர்தம் பெண்மக்கள் அனைவருக்கும் நீடிய ஆயுளைக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும். டாக்டர் ஃப்ளோரா எண்பத்து ஏழு வயது வரை தொண்டாற்றினார்கள். ஒலிவியா 92 வயது; ஜெமிமா, (பிஷப் ஜெபராஜ் அவர்களின் புதல்வி சுகந்தியின் மாமியார்) 85 வயது, சகுந்தாபாய் 83, வில்லிபாய் 78, கமலா 75,சௌந்தரபாய் 72, நீண்ட ஆயுளுடன் இருந்து நிரம்பிய ஆயுசியல் மரிப்பதும் கடவுளின் கிருபையே, இந்த ஆசீர்வாதத்தை தேவன்,

தனது ஏழு மகன்களை இளவயதில் இழந்து தவித்த ஆரோன் தேவதாசன் என்னும் தமது அடியவருக்கு நல்கினார்.

வழிகாத்தான்களில் சிலர் மிகப்பெரிய நஷ்டங்களை அனுபவித்த தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. அப்பாத்துரை ஆரோன் (1890-1976) என்பவர் அவர்களில் ஒருவர். அவர் தன்னுடைய மனைவி ரஞ்சியுடன் இங்கிலாந்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் மனைவியை இழந்தார். ஆனாலும் மனம் தளராமல் ரஞ்சி நினைவு காப்பகம் ஒன்றை நிறுவி,அதன் மூலம், பால்பண்ணை, அநாதை இல்லம், வயல்வெளி, மருத்துவமனை, பள்ளி,பாலிடெக்னிக் ஆகியவற்றை நடத்தி எத்துணை பேரையோ ஆதரித்தார். குழந்தைப் பேறற்ற அவர் மனந்தளர்ந்து போகாமல் அன்று தொடங்கிய காப்பகம் இன்றும் அவர் பெயரை நிலைநாட்டி நிற்கிறது.

கடவுளுக்கென்று மதிகேடர், என்று பட்டம் வாங்கியோர் சிலர் இக்குடும்பத்தில் உண்டு. மாசில்லாமணி ஆரோன் (1859-1899) மதராஸ் கிறிஸ்தவக் கல்லூரியின் பட்டதாரி. நல்லதொரு வேலையை கர்த்தருக்கென்ற விட்டு விட்டு சி.எம்.எஸ் மிஷனெரியாக தற்போதைய விஜயவாடாவாகிய (பெசவாடாவில்) பணியாற்றினார். ஆனாலும் மூளைக்காய்சலினால் 40 வயதிலேயே இறந்து விட்டார். மனைவியின் நிலை பரிதாபம். ஆனால் அவர் தனக்குப் பின் விட்டுச் சென்ற பெரிய குடும்பத்தை இறைவன் தாமே ஆசிர்வதித்தார். மக்களில் இருவர் மருத்துவர்களானார்கள். ஒரு மகன் அப்பாத்துரையும், அவர் மனைவி ரஞ்சியும் பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களானார்கள். ரஞ்சி சென்னையிலுள்ள பெண்கள் கிறித்துவக் கல்லூரியில் (WCC) முதன் முதலில் பி.ஏ பட்டம் படிப்பு பெற்ற பெண்களில் ஒருவர் ஆவார். அடுத்த மகன் ஜான் ஆரோன் போதகராகி தோர்ணக்கல்லிலுள்ள அசரியா பிஷப் அவர்களின் மகளாகிய கிரேஸை மணந்து பின்னர் கிளாஸ்கோவில் தங்கி விட்டார். லியோ ஜேம்ஸ் என்ற அவருடைய பேரன் யுனெஸ்கோ/ யுனிசெப் ஆகியவற்றில் கல்வியில் முற்போக்காளராகப் பணியாற்றுகிறார். அது மட்டுமின்றி அவர்கள் பணி தழுவிய கல்வி நிறுவனம் ஒன்றும் நிறுவினார்.

பூர்வீக கிராமமாகிய முத்துக்கிருஷ்ணாபுரம், ஓர்காலத்தில்

செழுமையாக காணப்பட்டிருந்தாலும், இன்று பஞ்சத்தால் அடிபட்டு, வறண்டு காணப்படுகிறது. மார்டின் லூத்தரால் 1879 போல் கட்டப்பட்ட கிறித்தவ தேவாலயம்,தென்னிந்தியத் திருச்சபைக்குச் சொந்தமாக தரப்படவில்லை. இன்று வரை அது குடும்பத்திலுள்ள பெரியோர்களின் குழுவினால் மட்டுமே பராமரிக்கப்படுகிறது. இதில் ஞான வழிகாத்தான் (பி. 1914) அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர். இத்தேவாலயத்தில் மே 26ம் தேதி ஆண்டுதோறும் நடத்தப்படும் அசனத்தில், கிறித்தவர், கிறித்தவரல்லாதோர் என்ற வேறுபாடின்றி, எல்லோரிடமும் பணம் வசூலிக்கப்படுகிறது. 1993ன் அசனத்தில் சுமார் 3500 பங்கேற்றார்கள்.

வழிகாத்தானின் பரம்பரையினர், முத்துகிருஷ்ணாபுரம் போன்ற கிராமச் சூழலிருந்து, வாழ்க்கையில் பெரிதும் முன்னேற ஆரம்பித்து விட்டார்கள். துணிந்து வெளியேறிய இவர்கள், தற்போது உலகிலுள்ள கீழ்க்கண்ட பல்வேறு பகுதிகளில் பலவித உயரிய பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அதில் குறிப்பிடத்தக்கவை.... அமெரிக்கா, கனடா,இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், சுவிட்சர்லாந்து, ஜாம்பியா,கானா,நைஜீரியா, குவைத், நேபாளம், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா முதலியனவாகும். இக்குடும்பத்தினரில் பெரும்பான்மையோர் கிறித்தவர்களாக இருந்தாலும், சிலர் வேறு மதத்தினரையோ, வேறு சாதியினரையோ மணந்தும் இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளுக்கு கிறிஸ்தவப் பெயர்கள் சூடப்பட்டுள்ளன.

பொதுவாகப் பார்க்குங்கால் வழிகாத்தான் பரம்பரையினர் கடின உழைப்பும், எதிர்நீச்சல் போடும் சக்தியும் கொண்டவர்கள், எதையும் தாங்கும் இதயம் படைத்தவராயும், செவ்வனே செயல் படுவராயுமே இருந்துள்ளனர். எளிதில் தோல்வியைத் தழுவுவவர்கள் அல்லர் அவர்கள். ஆரோன் அவர்கள் கூற்றுப்படி, வழிகாத்தான் குடும்பத்தினர் இறுதி வரை நியாயத்திற்காகவும், நீதிக்காகாவும் போராட உறுதி கொண்டவர்கள். தங்கள் குடும்ப அங்கத்தினர் பால் மிகுந்த பாசம் காட்டுபவர். நீடிய ஆயுள் அவர்களில் பெரும்பான்மையினர் அடைந்துள்ள ஒன்றாகும்.

விசுவாசமென்றும் பொன்னிழையினால் இணைத்துப் பின்னப்பட்ட இக்குடும்பமானது இரண்டு நூற்றாண்டுகள் கடந்தும் 6,

7 பரம்பரைக்குப் பின்னரும் இணைந்து நிற்கும் நிலை விந்தையே. டி.எஸ் இலியட் சொல்வது போல்

ஓய்விலை, ஓய்விலை, ஆராய்ந்து முடியும் வரை
ஆய்வின் முடிவிலோ ஆரம்பம் வந்தடைந்தோம்;
ஆய்வின் இத்துணை சுவை மிக்க தென
இப்போது தான் உய்த்துணர்ந்தோம்
இப்போதுதான் உய்த்துணர்ந்தோம்.

எங்கள் முற்பிதாக்களின் தேவனும், எங்கள் துணையும் எங்கள் பாதுகாவலரும், நம்பிக்கையுமாகிய அவரை நோக்கி எம் பயணம் தொடர்ந்து செல்கிறது. அவரது நாமம் என்றென்றும் போற்றபடுவதாக!

BIBLIOGRAPHY

1. **Aaaron, Manuel** *The VALIKATHAN FAMILY*: 1765-1994 Madras, 1994.
2. **Appasamy, Paul.** THE CENTENARY HISTORY OF THE C.M.S. IN TINNEVELLY. The Palamkottah Printing Press 1923.
3. **Arooran, K. Nambi.**TAMIL RENAISSANCE AND DRAVIDIAN NATIONALISM: 1905 - 1944. Koodal publishers, Madurai, 1980
4. **Christadoss, D.A.**,RHENIUS, APOSTLE OF TIRUNELVELI A Bethel Publication, 1976.
5. **Caldwell,** R. THE TINNEVELY SHANARS. Madras, 1849
6. **Gibbs.** M.E. INDIAN CHURCH HISTORY REVIEW.
7. Hardgrave, Robert. NADARS IN TIRUNELVELI - TEXAS UNIVERSITY U.S.A.
8. **Muller, George, D.S**.: PORTRAIT OF A DIOCESE. 1992
9. **Rhenius, C.T.E**. MEMOIRS OF THE REV. C.T.E. RHENIUS. London, James Nisbet & Co., Edinburgh,
10. Calcutta Review Voi. 39 (1863).

12

அருள்திரு. ஐசக் ஆபிரகாமும் அவர் சந்ததியாரும்

பால் தேவதாசன்

தென் பாண்டிய நாடு என்றழைக்கப்படும் திருநெல்வேலி நாட்டினை வளங்கொழிக்கச் செய்யும் தாமிரபரணி என்னும் பேராற்றின் வடபகுதியில் அமைந்த ஒருர் சீவலப்பேரி ஆகும். இது பாளையங்கோட்டையிலிருந்து 10. கி.மீ. தொலைவில் உள்ளது.

14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருநெல்வேலியைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செய்த குறுநில மன்னர்களுள் ஒருவன் குலசேகர ஸ்ரீ வல்லபன். அவன் தாமிரபரணி ஆற்றின் வடபகுதியில் பெரியதோர் ஏரி ஒன்றைத் தோண்டி உதவினார். அவ்வேரி ஸ்ரீவல்லபன் பேரேரி என்று அழைக்கப் பெற்றது. அது மருவி சீவலப்பேரி ஆயிற்று. அதுவே இவ்வூருக்குப் பெயராயிற்று.

சீவலப்பேரியில் பற்பல குலத்தவர்கள் ஒருவரோடொருவர் இசைந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுள் மறவர் குலத்தவர் பெரும்பான்மையோர் ஆவர். அவர்கள் பண்டைக் காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களின் படை வீரர்களாகத் திகழ்ந்தனர். ஆட்சி மாற்றத்தின் காரணமாக காவல் தொழில் புரிவோராகவும்,உழவுத் தொழில் செய்வோராகவும் மாறினர். அவர்கள். பொதுவாக வீரமும், தீரமும் உடையவர்களாயினும் பழிபாவங்களுக்கு அஞ்சாதவர். தங்களுடன் மாறு கொள்வோரிடத்து பெரும்பகை கொள்வர். கல்வி முன்னேற்றம் இல்லாமல் பின்தங்கியிருந்தனர். தென் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை முழு மூச்சுடன் எதிர்த்தவர்கள். ஆங்கில அரசு அவர்களைக் குற்றப் பரம்பரையினர் அட்டவணையில் வைத்து விழிப்புடன் கவனித்து வந்தது. அத்தகையோர் பரம்பரையில் மாபெருந்தூயோன் ஒருவர் தோன்றி கிறிஸ்துவுக்கு நற்சான்றாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. பால் தேவதாசன் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்

இறைவழிபாடு

தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்த அழகர் பெருமாள் கோவிலும், துர்க்கை அம்மன் கோவிலும் புகழ்பெற்றவை. அவ்வூர் மக்கள் புண்ணிய நதியாகிய தாமிரபரணியில் நீராடி அக்கோவில்களில் வழிபடுவர். வெளியூர் மக்களும் இங்கு வந்து வழிபாடு செய்வதுண்டு. மறவர்களின் குலதெய்வமாகிய பூலாவுடையாரின் கோவிலும் இவ்வூரின் கீழ்த்திசையிலுள்ள குன்றின் மேல் அமைந்துள்ளது. சீவலப்பேரி மறவர் மக்களும் பிற ஊர்களிலுள்ள மறவர் மக்களும் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று (மார்ச்சு, ஏப்ரல் மாதத்தில் வரும் பௌர்ணமி நாள்) வழிபடுவதற்கென்று இங்கு வந்து திருவிழா நடத்தி தங்களது குலதெய்வத்தை வணங்கிச் செல்வர். எனினும் பெரும்பாலோர் எவ்வித மனமாற்றமுமின்றி முன்புள்ளவாறே திரும்பிச் செல்வர்.

பிரமுத்துவின் குடும்பம்

சீவலப்பேரியில் பிரமுத்து என்பார் தனது பூர்வீக நிலத்திலே பயிர்செய்து குடும்பத்தை இனிதாக நடத்தி வந்தார். அவரது மனைவி ஏழையர்க்கு இரங்கி அருள்புரியும் உள்ளம் பொருந்தியவர். அவர்கட்கு அழகப்பன், வெள்ளச்சி, நல்லக்கண் ஆகிய மூன்று மக்கள் இருந்தனர். அமாவாசை நாள்தோறம் கூடுதலாக சமைத்து மக்களுள் ஏழையர்க்கு அன்னதானம் செய்யும் பழக்கம் அக்குடும்பத்தார்க்கு இருந்தது. தங்கள்குலதெய்வமாகிய பூலாவுடையார் மீது மிகுந்த பக்தியுடையவராய் வாழ்ந்து வந்தனர். திருச்சபை நற்றொண்டுக் கழகம். (Church Missionary Society). இரேனியஸ் என்னும் நற்செய்தியாளரை நெல்லை நாட்டிற்கு 1820 ஆம் ஆண்டு அனுப்பிற்று. அவர் பாளையங்கோட்டையில் தங்கி எங்கணும் நற்செய்தியைப் பரப்பி வந்தார்.

சீவலப்பேரியில் நற்செய்தி அறிவிக்கப்படல்

1829 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் நாள் பூலாவுடையார் கோவில் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் இரேனியசால் அனுப்பப்பட்ட இளைஞர் வட்டம் ஒரு மரநிழலில் இனிய பாடல்களைப் பாடி மக்களைக் கவர்ந்தது.

அவ்விளைஞர்களின் தலைவரான மிக்கேல் என்பார் அச்சிட்ட துண்டுப்பிரதி ஒன்றை வாசித்து விளக்கிக் கொண்டிருந்தார். எத்தகைய எதிர்ப்பும் இன்றி அவர்கள் கூறியவற்றிற்குச் செவிசாய்த்தனர். முதன்முதலில் மீட்பர் ஏசுவைப் பற்றிய நற்செய்தி சீவலப்பேரியில் அறிவிக்கப்பட்டது. அக்கூட்டத்தினர் நாங்கள் மீட்பர் இயேசுவைப் பற்றி மேலும் அறிய விழைகிறோம் என்றனர். அக்கூட்டத்தினருள் பிரமுத்துத் தேவரும் ஒருவராவார். சமயம் வாய்க்கும்போதெல்லாம் இரேனியசின் ஊழியர்கள் அங்கு வந்து நற்செய்தியை அறிவித்தனர். 1823 ஆம் ஆண்டு அங்கே பள்ளிக் கூடம் ஒன்று தொடங்கப் பெற்றது. அப்பள்ளியில் பிரமுத்துத் தேவர் மகன் அழகப்பனும் சேர்ந்திருந்தான். நல்லக்கண்ணுவோ மிகச் சிறியவன். இப்பள்ளியே ஜெபவீடாகவும் விளங்கிற்று. அங்கு திருமறையும் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால் மக்களுள் ஒருவர் கூட மீட்பர் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பள்ளியும் எதிர்பாராது நடைபெறவில்லை. சி.எம்.எஸ் சங்கத்தாருக்கும், இரேனியசுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருக்கலாம்.

பிரமுத்துத் தேவர் மனைவியை இழத்தல்.

1837 ஆம் ஆண்டு பிரமுத்துவின் மனைவி எதிர்பாராது காலமானார். அருமை பெருமையாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தாயை இழந்து தவித்தனர். பிரமுத்துத் தேவர் அழகப்பனை தனது வேளாண்மைத் தொழிலுக்கு உதவியாகவும் நல்லக்கண்ணை தன் கால் நடைகளை மேய்க்கவும் வைத்துக் கொண்டார்.

ஜியார்ஜ் பெற்றிட் நற்செய்தியாளர்

1835 ஆம் ஜியார்ஜ் பெற்றிட் என்பார் மிஷனெரியாக நியமிக்கப்பட்டார். 1841 ஆம் ஆண்டு சி.எம்.எஸ் ஊழியம் நடந்த பகுதிகளில் நற்செய்திக்குப் பலர் செவிசாய்த்தனர். சீவலப்பேரி மக்களும் கிறிஸ்தவ விசுவாசிகளானார்கள். பழைய பள்ளிக்கூடமும் திறக்கப்பெற்றது. ஆசிரியரும் நியமிக்கப்பட்டார். ஆனால் சபை ஓராண்டுகாலம் கூட நிலைக்கவில்லை. கிறிஸ்தவ மார்க்கம் பரவி வருவதைக் கண்ட திருச்செந்தூர் விபூதி சங்கத்தாரால் தூண்டி விடப்பட்ட கிறிஸ்து மார்க்க விரோதிகளின் படை திரண்டு புதுக்

கிறிஸ்தவர்களைத் தாக்கித் துன்புறுத்தினர். சிலசமயப்பெரியோரை ஒருவரும் துன்புறுத்த வில்லையெனினும் துன்பம் வருமென்றஞ்சிப் பலர் கிறிஸ்து மார்க்கத்தை மறுதலித்து விட்டனர். ஆனால் இந்த குடும்பத்தினர் மட்டும் இன்றுவரை கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்து இந்நாட்டில் கிறிஸ்துவின் நற்சாட்சிகளாக விளங்கி வருவது இறைவனின் அருளேயாகும்.

நல்லக்கண்ணுவின் இளமைப் பருவம்

பிரமுத்துவின் மூன்றாம் மகன் 1829 ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் நாள் பிறந்தார். தொடக்கத்தில் அவர் தனது குடும்பத்தாரோடு ஜெபவீட்டிற்குச் செல்ல ஆர்வம் காட்டவில்லை. அங்குள்ள உபதேசியார் ஜெபவீட்டிற்கு வராதவர்களுக்கு தண்டனை கொடுப்பதுண்டு. அதனால் வருகை பதிவு செய்து முடியும் வரையாவது இருக்குமாறு தந்தையார் வற்புறுத்துவார். ஒருநாள் உபதேசியார் கிறிஸ்து பாவிகளுக்காக சிலுவையில் அறையுண்டு கொல்லப்பட்டார்; மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இறந்தோர் அனைவரும் உயிரோடெழுவர்; எனச் சொல்லக் கேட்டு உயிர்பெற்று எழுவார்களா அப்படியானால் இறந்து போன எனது தாயாரும் உயிரோடெழும்புவாள் அல்லவா அதைப் பார்க்கலாம் என்று எண்ணினார்.

கல்வி கற்க ஆவல் கொண்டு தந்தையாரிடம் தன்னைப் பள்ளியில் சேர்க்குமாறு வேண்டினார். தந்தையோ அவர் மாடுகளை மேய்க்க வேண்டியதிருப்பதால் பள்ளியில் சேர்க்க இயலாது எனக்கூறி மறுத்துவிட்டார். மிகுந்த ஏக்கத்தோடு மாடுகளை மேய்த்து வந்தார். இந்நிலையில் படிப்பதற்கென்று ஒருவழியைக் கண்டார்.

தனக்கு வீட்டில் கிடைக்கும் தின்பண்டங்களைத் தன்னுடன் மாடு மேய்க்கும் மற்றப் பையன்களுக்குக் கொடுத்துத் தன் கால்நடைகளைக் கவனிக்கச் செய்தும், சில நாட்களில் மற்றவர்கள் மாடுகள் அனைத்தையும் தானே கவனித்து மறுநாளில் அவர்களிடம் விடுப்புப் பெற்றும் பள்ளிக்கூடத்திற்குப் போய்த் தமிழ்மொழி எழுத்துக்களைக் கற்றுக் கொண்டார். இரவு நேரங்களில் தந்தைக்குத் தெரியாமல் ஆசிரியரோடு அன்போடு பழகிப் பாடங்கேட்டுக்

கொள்வார். இவ்வாறாக விரைவில் தமிழ்மொழியை வாசிக்கக் கற்றுக் கொண்டார். நற்செய்தி நூல் ஒன்று அவருக்கு கிடைத்தது.

ஒவ்வொரு நாள் காலையிலும் நற்செய்தி நூலைக் கையிலெடுத்துக் கொண்டு மாடுகளைக் காட்டிற்குப் பத்திக் கொண்டுபோய் மேயவிட்டுவிட்டு ஒரு கருவாலி மர நிழலில் அமர்ந்து நற்செய்தி நூலைப் படிப்பார். அதனை வாசிப்பதில் இனிமை கண்டு மகிழ்வார். மாலைப் பொழுது ஜெபவீட்டிற்குச் சென்று உபதேசியாரிடம் பேசித் தனது ஐயங்களைப் போக்கிக் கொள்வார். தூய்மையான வாழ்வு நடத்த ஆர்வம் கொண்டார்.

நல்லக்கண் வீட்டிலுள்ள அனைவருடனும் அன்பாக நடந்து கொள்வார். ஒரு நாள் அவரது தமையனார் சிறிதளவு பயற்றினைக் கொடுத்துத் துவையல் அரைக்குமாறு சொன்னார். நல்லக்கண் பயறு களவுப் பொருள் என்று கண்டு வருந்தினார். அதனால் உண்பதற்கு விருப்பம் இல்லாதவராய் நீராகாரம் மட்டும் அருந்திவட்டு மாடுகளைக் காட்டிற்குப் பத்திக்கொண்டு சென்றார். மாடுகளை மேயவிட்டுவிட்டு வழக்கத்தின்படியே கருவாலி மரநிழலில் அமர்ந்து நற்செய்தி நூலைப் படிக்கத் தொடங்கினார். காலையில் உண்ணாததால் பசியால் வாடினார். பக்கத்துப் பருத்திப் புன்செயின் இடையிடையே படர்ந்துள்ள வெள்ளரிச் செடிகளில் பிஞ்சுகளைக் கண்ணுற்றுச் சிலவற்றை பறித்து உண்ண எழுந்து சென்றார். களவு செய்கிறவன் எரிநரகத்திற்குப் பாத்திரமாவான் என்று உபதேசியார் கூறியது நினைவிற்கு வந்தது. எங்கும் நிறைந்திருக்கிற கடவுள் இங்கும் என்னைப் பார்ப்பாரோ, களவு செய்யலாகாது என்று எண்ணித் திரும்பிக் கருவாலி மரநிழலில் மறுபடியும் உட்கார்ந்து நற்செய்தி நூலை வாசிக்கத் தொடங்கினார். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான் என்கிற வாக்கியத்தைக் கண்டு வியப்படைந்தார். அதனைப் பற்றி உபதேசியாரிடம் கேட்க வேண்டுமென்று எண்ணினார்.

பசி மென்மேலும் அதிகரித்தது. தாயாரின் நினைவு தோன்றியது. என் தாய் உயிரோடிருந்தால் என்னைப் பசியடைய விடுவாளா? கடும் வெயிலில் தவிக்க விடுவாளா? என்று கண்ணீர் விட்டு அழுது அயர்ந்து சாய்ந்தார்.

அவ்வமயம் காட்டில் வேலை செய்கிற தனது மக்களுக்கு உணவு கொண்டு போகிற தாயார் ஒருத்தி வழியில் நல்லக்கண் சோர்வுடன் மயங்கிக் கிடப்பதைக் கண்டு அவனை எழுப்பிச் சிறிது ஆகாரத்தை அவரிடம் கொடுத்தாள். பசி ஆற்றிய தாயை நன்றியோடு நோக்கினார். கடவுளாகிய தந்தையே அத்தாயின் மூலம் தன் பசியை ஆற்றியதாக எண்ணினார்.

அன்பின் அழைப்பு

1844 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அருள்திரு. ஜான் தாமஸ் டக்கர் சி.எம்.எஸ் சங்கத்தாரால் பண்ணைவிளைக்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். அவர் அவ்வூரின் மேல் பகுதியில் பனங்காட்டிற்குள் வீடொன்று கட்டித் தங்கியிருந்து நற்செய்திப் பணியைத்தொடங்கினார். சீவலப்பேரி அவரது ஊழியத்திற்கு உட்பட்ட பகுதியாகும். அவ்வூருக்கும் சென்று ஊழியம் செய்து வருவதுண்டு. எல்லா ஊர்களுக்கும் அடிக்கடி சென்று ஆராதனை நடத்திப் போதித்து வீடுதோறும் மக்களைச் சந்தித்து ஜெபித்து உற்சாகப் படுத்தி வருவதுண்டு. 1845 ஆம் ஆண்டு ஒருநாள் அங்குச் சென்றிருக்கும்பொழுது அங்குள்ள உபதேசியார். நல்லக்கண்ணை டக்கர் மிஷனெரியிடம் அறிமுகப்படுத்தி "இவ்வூரின் கர்த்தருக்கேற்ற முதற்கனி, இவ்விளைஞனே" என்று சொல்லி அவனைப் பற்றித் தனக்குத் தெரிந்த செய்திகளை எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட டக்கர் அகமகிழ்ந்து நல்லக்கண்ணை நோக்கி, 'கல்வி கற்க பண்ணைவிளைக்கு என்னோடு வருகிறாயா' என்று வினவினார். அது நல்லக்கண்ணின் செவியில் இன்பத்தேன் வந்து ஒழுகினதைப் போலிருந்தது. பிரமுத்துவோ தன் தனயனை டக்கரோடு அனுப்ப விரும்பவில்லை. ஆனால் நல்லக்கண்ணுவின் ஆர்வத்தையும், மன உறுதியையும் கண்ட பிரமுத்து ஒருவாறு இசைந்து, வழிவிட்டனுப்புகையில். "நீ என் பிள்ளை அல்ல; வெள்ளைக்காரன் பிள்ளை; நீ எனக்கு உதவமாட்டாய்; நீ செத்துப்போய் விட்டாய் என்று நினைத்துக்கொள்வேன்" என்று வருத்தத்துடனும் வெறுப்புடனும் கூறிக் கண்ணீரும் கம்பலையுமாக அவரைப் பிரிந்தார். டக்கர் ஐயரும் அவரைப் பண்ணைவிளைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மிஷன் விடுதிப் பள்ளியில் சேர்த்தார்.

பன்னைவிளையில் கல்வி கற்றுப் பின் திருமுழுக்கு பெற்றது

அப்பள்ளியில் நன்கு கற்றுப் பிற மாணவர்களை விட அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். ஒரு சமயம் மாவட்ட நீதிபதி நடத்திய போட்டியில் முதல் பரிசினைப் பெற்றார். பரிசாகக் கிடைத்த பணத்திற்கு ஓர் அழகான வட்டில் வாங்கிப் பயன்படுத்தினார். உடன் மாணவர் அவரிடத்து பொறாமை கொண்டு அவரது உண்கலனில் துப்பிவைப்பாராம். சிலவேளை அவர் தூங்குகின்றபோது காலைப் பிடித்துக் கரகரவென இழுத்து வெளியே போடுவாராம். எனினும் அவர்களோடு சினமடையாது சண்டை போடாது பள்ளியின்று ஓடாது பொறுமையை மேற்கொண்டார்.

நல்லக்கண் நன்கு கற்றதோடு கிறிஸ்து மார்க்க உண்மைகளை முற்றிலும் நன்குணர்ந்து சிறந்து விளங்கினார். டக்கர் ஐயரவர்கள் அவருடைய விசுவாசத்தையும் தாழ்மையையும் கவனித்து 1845 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஈசாக்கு என்று பெயரை அவருக்குச் சூட்டித் திருமுழுக்குக் கொடுத்தார். இவர்களுடன் திருமுழுக்குப் பெற்றவர்களுள் பெருங்குளத்தைச் சார்ந்த ஞானவடிவு, இராகேல் என்னும் இரு சகோதரிகள் குறிப்பிடத்தக்கவர்கள். பிற்காலத்தில் அவர்களுள் ஞானவடிவு என்பார் சீவலப்பேரியைச் சார்ந்த சற்குணம் உபதேசியாரையும், இராகேல் ஈசாக்கு உபதேசியாரையும் மணம் புரிந்தனர். அவர்கள் நெல்லை மாவட்டத்தில் சிறந்த உபதேசியாராகவும், நற்செய்தி பரப்பாளராகவும் விளங்கினார்.

ஈசாக்கு ஊழியராக நியமிக்கப்படல்

ஆண்டு இறுதியில் ஈசாக்கு முதல்வராக விளங்கினார். அவரைச் சிறந்ததொரு திருச்சபை ஊழியனாக உருவாக்க வேண்டுமென்று விரும்பிய டக்கர் ஐயரவர்கள் அவரைப் பற்பல இடங்களுக்கும் சென்று ஜெபிக்கவும், கவலையின்றி இருப்போருக்கு ஆன்மா ஈடேற்றத்தைப் பற்றி அறிவுறுத்தவும் நியமித்தார். அவருக்கு மாதந்தோறும் ரூ. 2½ சம்பளமாகவும், தங்கியிருக்க வீடும் கொடுக்கப்பட்டது.

தந்தையாருடன் ஒப்புரவாகுதல்

சீவலப்பேரியை விட்டுப் பிரியும் பொழுது நீ எனக்கு உதவமாட்டாய் என்று சொன்ன தந்தை மனமாற்றம் அடைந்து தன்

மகனைக் காண புல் அவலும், அரிசி மாவும் எடுத்துக் கொண்டு ஆவலோடு பண்ணைவிளைக்கு வந்தார். தந்தையைக் கண்ட ஈசாக்கு ஓடோடிச் சென்று தந்தையை இன்முகத்துடன் வரவேற்றார். மகிழ்ச்சி பொங்கியது. தந்தையும் மகனும் ஒப்புரவாகினர். தன் மகனது ஊழியத்தைக் கண்டு பெருமிதம் அடைந்தார். தாலும் திருமுழுக்குப் பெற விரும்பினார். டக்கர் ஐயரவர்களும் அகமகிழ்ந்து அவருக்கு விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிரகாமின் பெயரைச் சூட்டித் திருமுழுக்குக் கொடுத்தார். அதுமுதல் ஈசாக்கு, ஈசாக்கு ஆபிரகாம் என அழைக்கப் பெற்றார்.

திருமணம்

டக்கர் ஐயரின் ஏற்பாட்டின்படி 1850 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் நாள் ஈசாக்கு ஆபிரகாம் உபதேசியாருக்கும் அவருடன் திருமுழுக்குப் பெற்றவரும், டக்கர் அம்மாள் அருமை பெருமையாக வளர்த்தவருமாகிய இராகேல் அம்மையாருக்கும் திருமணம் இனிது நடைபெற்றது. அவ்வம்மையார் தன் கணவருக்குத் திருப்பணிவிடையில் தன்னால் ஆனமட்டும் உதவி, குடும்பக் காரியத்தை மகிழ்ச்சியோடு நடத்தி வந்தார்கள்.

பண்ணைவிளையில் பெருமழை

பண்ணைவிளைப் பகுதியில் நெடுநாட்கள் மழையே பெய்யாததால் வறட்சி ஏற்பட்டது. டக்கர் ஐயரவர்களின் ஏற்பாட்டின்படி சபையார் அனைவரும் மழைக்காக ஜெபம் ஏறெடுக்கக் கூடினர். டக்கர் ஐயரவர்களும், ஈசாக்கு உபதேசியாரும் முழங்காலில் நின்று ஊக்கமாக வேண்டினர்.

"அற்புதத்தை எதிர் பாராதேயுங்கள், கடவுளுடைய கிருபைக்காகக் காத்திருப்போம். ஏற்றகாலத்தில் மழைபொழியச் செய்து நம்மை ஆசீர்வதிப்பார். தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருப்போம்" என்று கூறி மக்களை அனுப்பினார். ஐந்து நாட்களுக்குப் பின் பெருமழை சொரிந்து நாடு செழித்தது. மக்கள் வியப்படைந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர். இச்சம்பவம் ஈசாக்கு ஆபிரகாம் ஜெபித்தால் மழைபெய்யும், நாடு செழிக்கும் என்று இன்றும் மக்களால் நினைவு கூரப்படுகிறது.

மறைநூல் கற்றுத்தேரல்

ஈசாக்கு உபதேசியார் இறையியல் பயிற்சிப் பள்ளியில் மறைநூல் கற்றுத் தேர வேண்டும் என்று விரும்பிய டக்கர் ஐயர் 1852 ஆம் ஆண்டு அவரைப் பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். அங்கு இரண்டரை ஆண்டு காலம் கற்றுத் தேர்ந்தார். அவருடைய தெய்வ பக்தியையும்,திறமையையும் கண்ட இறையியல் கல்லூரி முதல்வர் அருள்திரு. சார்சென்ட், அவர்களை நன்கு கவனித்து அளவிலா அன்போடு நடத்தினார். அங்கு அவர் மறைநூலை ஐயந்திரிபறக் கற்றார். பல பரிசுகளைப் பெற்றார். இவர் பண்ணைவிளைக்குத் திரும்புகையில் சார்சென்ட் அமைமையார் "இயேசுக் கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்." 1 கொரி. 2:2 என்ற திருவசனத்தை பூ வேலைப்பாடுடன் ஒரு துணியில் அமைத்து ஈசாக்கு உபதேசியாருக்கு அன்புடன் அளித்தனர். மேலும் சார் செண்ட் ஐயரவர்களும் டக்கர் ஐயரவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "ஈசாக்கு பேரில் உம்முடைய கண் இருப்பதாக, இந்நாட்டினருள் இவரைப்போன்று மனச்சாட்சி உள்ளவனை நான் கண்டதில்லை" என்று எழுதியிருந்தது. பண்ணைவிளைக்குத் திரும்பி வந்தவர் டக்கர் ஐயரவர்களுடைய திருப்பணிவிடையில் உறுதுணையாக விளங்கினார்.

குரு அபிஷேக பயிற்சிக்காக மீண்டும் பாளையங்கோட்டைக்குச் செல்லுதல்

இந்நாட்டு உபதேசிமார்களில் சிறந்த ஊழியர்கட்குக் குருப்பட்டம் கொடுத்து ஊழியத்தில் பயன்படுத்த வேண்டும் என சி.எம்.எஸ் சங்கத்தார் விரும்பினர். குருவாக அபிஷேகம் செய்யப்பட தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஈசாக்கு உபதேசி யாரும் ஒருவராவர். அவர்களுக்குப் பாளையங்கோட்டையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

பண்ணைவிளையில் குருப்பட்டாபிஷேக ஆராதனை

1859 ஆம் ஆண்டு டிசம்பர் 18ல் சென்னைப் பேராயர் அருட்பெருந்திரு. டில்திரி என்பார் ஈசாக்கு உபதேசியாருக்கும்

அவருடன் பயிற்சிபெற்ற திருவாளர்கள் பெரியநாயகம், அருமைநாயகம்,வீரவாகு,முத்து நல்லதம்பி ஆகியோருக்கும் பண்ணைவிளையில்,டாக்டர் ஐயரவர்களால் புதிதாகக் கட்டப்பட்ட தேவாலயத்தில் உதவிக்குருப் பட்டம் கொடுத்தார். அவ்வாராதனையில் பட்டம் பெற்றவர்களுடைய மேலான கடமையை உணர்த்தி,வந்திருந்த அனைவருக்கும் பரவசம் உண்டாகத்தக்கதாகக், கல்வித்திறமையும்,தேவபக்தியும், களங்கமற்ற அன்புமுடைய பெருமகனார் அறிவர் பிரதரிட்டன் என்னும் அருட்தொண்டர் தமிழ்மொழியில் இனிமையாக அருட்பொழிவாற்றினார். ஆராதனையில் ஐரோப்பியர்கள் 29 பேரும், நாட்டுக் கிறிஸ்தவர்கள் 1100 பேரும் பங்குகொண்டு சிறப்பித்தனர். மறுநாள் காலை ஆராதனையில மெய்ஞ்ஞானபுரம் ஜான் தாமஸ் ஐயரவர்கள் எழுப்புதலான பிரசங்கம் ஆற்றினார்கள்.

இந்நாட்டவருக்கு குரு அபிஷேகம் கொடுக்கப்பட்டதாலும் அவர்கள் மிகச் சிறந்தவர்களாக விளங்கினபடியினாலும் இந்தக் குரு அபிஷேக ஆராதனை இந்துக்கள் கிறிஸ்தவர்கள் ஆகியோரிடையே ஒரு நல்லெண்ணத்தை உண்டாக்கிற்று. இது மிஷனெரி டக்கரின் வாழ்வில் நடந்த மாபெரும் நிகழ்ச்சியாகும். பண்ணைவிளை ஆலய மணி ஒலி கேட்கும் இடங்களில் வாழுவோர் இந்துக்களோ, கிறிஸ்தவர்களோ அவர்கள் வேதத்தை நன்கு அறிந்திருந்தார்கள் என்பது பெருமைப்படத் தக்கதாகும். டக்கர் எழுப்பிய பண்ணைவிளைத் தேவாலயத்தில் நடந்த இவ்வபிஷேக ஆராதனை அவரைப் பேருவகை அடையச் செய்தது.

ஈசாக்கு ஆபிரகாம் ஆயரவர்களின் நற்செய்திப்பணி

ஐயரவர்கள் ஓய்வு நேரங்களில் பற்பல இடங்களுக்கு கால்நடையாகவே சென்று சுவிசேஷ ஊழியம் செய்வதில் பெரு விருப்புடையவராகத் திகழ்ந்தார்.

வட திருநெல்வேலியில் நற்செய்திப் பணி

கிறிஸ்துவைப் பற்றி அறியாத வடதிருநெல்வேலிப் பகுதியில் நற்செய்தி கூறப்படவேண்டும் என்ற இராக்லண்டு மிஷனெரியின் அறைகூவலுக்குச் செவிசாய்த்து, தென் திருநெல்வேலிப் பகுதியைச்

சார்ந்த உபதேசிமார் சிலர் தங்கள் சொந்தச் செலவிலேயே நற்செய்திப் பணியில் ஈடுபட முன் வந்தனர். அவர்களுள் ஒருவர் ஈசாக்கு ஆபிரகாமாவார். அவர் இராக்லண்டு மிஷனெரியுடன் சேர்ந்து பற்பல இன்னல்களுக்கு மத்தியில் அயராது சுவிசேஷ ஊழியம் செய்தார் என்பது 1855 ஆம் ஆண்டு இராக்லந்து நாட்குறிப்புகளில் காணக்கிடக்கிறது. அவற்றுள் ஒன்று பின்வருமாறு:

"3.10.1855 ஈசாக்கு ஆபிரகாமும் நானும் வடுகப்பட்டியில் பிரசங்கித்தோம் கள்ளத்தூருக்கு மாலையில் போனோம். ஈசாக்கு அநேக மக்களுடன் பேசினார். அவர்கள் விவாதிக்கத் தொடங்கினர். நான் பேசினேன். உடனே கேலி பண்ணி ரகளை செய்தார்கள். அவ்விடம் விட்டு அகன்றோம். கற்களை எறிந்து விரட்டினர். ஒருவன் ஒரு கத்தியை எங்கள் மீது எறிந்தான். நல்லவேளை காயம் இல்லை".

டக்கர் ஐயரவர்கள் வரலாற்று நூலில் 130 ஆம் பக்கத்தில் பின்வருமாறு காணப்படுகிறது.

"ஈசாக்கு ஆபிரகாம் உதவிக் குரு அருமுயற்சியினால் ஒரு கிராமத்தில் நூறு ஆத்துமாக்களை அந்தகாரத்திலிருந்து கொண்டு வந்தார். டக்கர் ஐயர் அந்தக் கிராமத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்தார்".

ஈசாக்கு ஆபிரகாம் மூலம் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டவர்களுள் சிலர்

பெருங்குளத்து ஞானவரசன் தமிழ்மொழியில் புலமை பெற்றுப் பணியாற்றி இறுதியில் சென்னை எஸ்.பி.ஜி வேத சாஸ்திரப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிக் காலமானார். அனந்தப்பிள்ளை என்னும் மலையாளி கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தப் பெற்றுத் தெய்வப் பணிவிடையை நெடுங்காலம் செய்து வந்தார்.

பண்ணைவிளையிலிருந்து பன்றிகுளம், கழுகுமலை வட்டாரத்தில் பிரசிங்கித்து பலரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியவர்களுள் கிருஷ்ணையா என்பவர் இசை வல்லவராக இருப்பதைக் கண்டு அவருக்கு வேதநாயக காஸ்திரியாரின்

நினைவாக வேதநாயகம் எனப் பெயரைச் சூட்டித் திருமுழுக்குப் பெற வைத்தார். அவர் ஆசிரியராகவும், திருநெல்வேலித் திருமண்டில சுவிசேஷக் குழுவின் உறுப்பினராக இருந்து அருஞ்சேவை புரிந்துள்ளார். வயலின் வாசித்துக் கொண்டே இனிமையாக அருட்பாடல்களைப் பாட வல்லவர். இனிதாக பஜனை செய்யக் கூடியவர். அவரது குடும்பத்தினர் இன்றும் பாளையங்கோட்டையில் இசைவல்லவர்களாக விளங்கி இறைவழிபாட்டிற்கு மிகவும் உதவி வருகின்றனர். வேதநாயகம் சாஸ்திரியார் இளமையிலே சுவார்ட்ஸ் ஐயரவர்களால் பாளையங்கோட்டையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர். அவர் சுவார்ட்ஸ் ஐயரின் மாணவர், கிறிஸ்தவக் கீர்த்தனைகள் பல இயற்றிப் புகழ் பெற்றவர். பெத்தலேகம் குறவஞ்சி என்னும் நாட்டிய நாடகத்தை இயற்றியவர்.

ஐயரவர்களின் அற்புத வாழ்வு

தேவனுடைய மனிதன் எப்பொழுதும் பிறருக்காக உழைத்து உதவி செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு ஈசாக்கு ஆபிரகாம் வாழ்ந்தார்.

பசிப்பிணி மருத்துவர்

ஐயரவர்கள் பசியால் வாடிவரும் ஏழையர் எவர்க்கும் உணவு அளிப்பார். இரவு நேரங்களில் வெளியூர் சென்று திரும்பும்பொழுது அவரது வீட்டுத் திண்ணையில் படுத்திருக்கும் வழிப்போக்கர்களை எழுப்பி, விசாரித்துப் பசியோடிருந்தால் அவர்கட்கு உணவு வழங்குவார்.

ஒருசமயம் நடு இரவில் வந்த பசியுடையவனுக்கு உணவு கொடுக்க விரும்பிய அவர், களைப்புடன் அயர்ந்து உறங்கும் மனைவியை எழுப்பலாகாது என்று எண்ணி தானே உணவு எடுத்துவர இருட்டில் அடுக்களைக்குச் சென்றார். அங்கு பாத்திரங்கள் கீழே விழுந்து உருண்டு ஒலிக்க, மனைவி மக்கள் பயந்து திருடன், திருடன் என்று கத்தினர். ஐயரவர்கள் நகைப்புடன் நான்தான், நான்தான், பசியால் வாடும் ஏழை ஒருவனுக்குச் சாப்பாடு எடுக்கிறேன் என்றாராம். அயர்ந்து தூங்கின தனது மனைவிக்கு இடையூறு ஏற்பட்டதற்கு வருந்தினாராம். ஏழையோர்க்கு இரங்கும்

இப்பண்பினை வியந்து மக்கள் ஈசாக்கு ஐயர் வீடு ஏழையர்க்கு அன்ன சத்திரம் என்று பேசிக் கொள்வார்களாம்.

ஐயரவர்களின் பேரன்பும் தாராள மனப்பான்மையும்

ஐயரவர்கள் காலஞ்சென்ற தனது சகோதரன் மக்களை தனது வீட்டிலே வைத்து ஆதரித்துத் தனது செலவிலேயே அவர்கட்குத் திருமணம் செய்து வைத்தார். இருபத்தேழு அனாதைப் பெண்களுக்குத் தனது செலவிலேயே திருமணம் செய்து வைத்திருக்கிறார். அவர்களது பிரசவ காலத்தில் தனது மனைவி இராகேல் அம்மையாரை அனுபபி உதவியிருக்கிறார். இவற்றைக் கண்ட புகழ்பெற்ற, சுவிசேஷகர் அருள்திரு. ஏ.ஆர். சிமண்ட்ஸ் (Symonds) ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்கள் வீடு என்றும் கலியாண வீடு என்று வியந்து போற்றினாராம்.

மனைவியின் மாங்கல்யத்தேயே வழங்கிய வள்ளல்

ஒரு சமயம் பண்ணைவிளை ஆலயத்தில் நடைபெறவிருந்த ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மணமகனுக்குத் திருமணத்தின் அடையாளமாகப் பெண்ணின் கழுத்தில் அணிவதற்கு மாங்கல்யம் இல்லாதிருந்தது. ஐயரவர்கள் தனது மனைவியின் மாங்கல்யத்தைக் கொடுத்து உதவுமாறு விரும்பினர். இராகேல் அம்மையாரும் ஐயரவர்களின் விருப்பத்திற்கிணங்கி, பிறமாதர்கள் தடுப்பினும் எவ்விதத் தயக்கமுமின்றி தனது மாங்கல்யத்தைக் கழற்றிப் புது நூலில் கோர்த்து ஐயரவர்களிடம் கொடுக்க அவரும் மணமகனுக்குத் தானம் செய்து மகிழ்ந்தாராம். சில நாட்கள் கழித்து மாங்கல்யத்தைத் திருப்பிக் கொடுக்க, அம்மையார் வாங்க மறுத்து தான் அவர்கட்கு திருமண அன்பளிப்பாகக் கொடுத்து விட்டேன் என்றாராம்.

கள்வர்களைத் திருத்திய செம்மல்

ஒரு சமயம் ஐயரவர்கள் பாளையிலிருந்து தனது சேகரத்திற்குரிய சம்பளப் பணத்தையும், நற்கருணைக்குப் பயன்படுத்தக் கூடிய திராட்சரசம்,ரொட்டி ஆகியவற்றையும் வாங்கிக் கொண்டு இரவில் திரும்பி வரும்பொழுது வல்லநாட்டின் மலைக் காட்டின் வழியில் கள்வர்களால் மறிக்கப்பட்டார். அவர்கள் நீ யார்? என்ன வைத்திருக்கிறாய்? எடு, எடு என்று கத்தினர். நிலவொளியில்

கள்வர்களின் தலைவன் ஐயரவர்களின் முகத்தைக் கண்டு யாரென்று அறிந்து ஐயா, ஐயா மன்னித்துக் கொள்ளுங்கள். நள்ளிரவில் ஒருநாள் பசியால் வாடிவந்த எனக்கு உணவு அளித்து, உதவிய உங்களையா கொள்ளையடிக்க வந்தேன்? இப்பொழுதும் பசியால்தான் உங்களைக் களவாட வந்தோம் என்று கூறி ஐயரவர்களின் பாதத்தில் வீழ்ந்தான். ஐயரவர்களும் அவனைத் தூக்கியெடுத்து தான் கொண்டுவந்த ரொட்டியை அவர்களிடம் கொடுத்துப் பசியை ஆற்றினார். களவு செய்யலாகாது,உழைத்து உண்ண வேண்டும் என்று அறிவுரை வழங்கிட, அவர்களும் மனம் வருந்தி ஐயா நாங்கள் இனி களவு செய்யோம். எங்களுக்கு செயலுக்காக வருந்துகிறோம் என்று கூறி வணங்கிச் சென்றனர்.

வாய்மை பிறழாத் தூயோன்

பண்ணைவிளைக்கு அருகில் கொம்புக்காரன் பொட்டல் என்னும் சிற்றூர் உள்ளது. புதிதாகக் கிறிஸ்து சமயத்தைத் தழுவியோர் தாங்கள் வழிபடுவதற்கென்று சிற்றாலயம் ஒன்று எழுப்பினர். இந்துக்களுக்கோ இது பிடிக்கவில்லை. முதல்நாள் ஆராதனை அருள்திரு. ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்களால் நடத்தப்பெற்ற பொழுது அங்குள்ள இந்து மக்கள் எரிச்சலடைந்து இடையூறு செய்தனர். கோவிலின் கூரையைப் பிரித்து வீசினர். பெருங்கூச்சலிட்டனர். ஆராதனை முடிந்து ஐயரவர்களும், சபை மக்களும் வெளியே வந்தவுடன் கூச்சலும், குழப்பமும் மிகுந்தன. சாமுவேல் உபதேசியார் என்பார் ஆத்திரமடைந்து கலகம் விளைவித்த ஒருவர் தலையில் தன் கைக்கம்பால் ஓங்கி அடித்துக் காயமுண்டாக்கினார். அதனைக் கண்டு உபதேசியாரைத் தடுத்து கலகத்தை நிறுத்துமாறு அனைவரிடமும் வேண்டினார். இந்துக்கள் ஐயரவர்களின் கையிருந்த ஜெபபுத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டனர். என்றாலும் ஒருவாறு கலகத்தை அமர்த்தி கிறிஸ்தவர்களை அமைதியாக இருக்கச் செய்து ஐயரவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

கிறிஸ்தவர்கள் இந்துக் கோவிலுக்குள் புகுந்து கலகம் விளைவித்தனர். தடி கொண்டு தாக்கினர் என்று வழக்குத் தொடரப் பெற்றது. இதனை விசாரிக்கும்படி ஐயரவர்களையும் சம்பந்தப்பட்டவர்களையும் தூத்துக்குடி ஆட்சியாளர் அழைத்தார்.

ஐயரவர்கள் சாமுவேல் உபதேசியார்தான் முதலில் அடித்ததாகச் சொல்லக் கூடாது என்று கிறிஸ்தவத் தலைவர்கள் வற்புறுத்தினர். அவ்விதம் கூறுவரெனில் கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்படுவர். சபை மக்கள் மீண்டும் தங்களது பழைய மதம் திரும்பி விடுவர் என்று எச்சரித்தனர். மேலும் ஐயரவர்கள் தங்களுக்குத் தீங்கு உண்டாகுமாறு வாக்குமூலம் கொடுப்பாரெனின், ஐயரவர்கள் தான் கலகத்தைத் தூண்டி விட்டார் என்று கூறுவோம் என அச்சுறுத்தினர். ஐயரவர்கள் யாவற்றையும் ஆராய்ந்து தான் யாது சொல்லவேண்டுமென்று தனக்குத் தெரியும் என்று மறுமொழி கொடுத்தார்.

நீதிவிசாரணைக்கு முந்திய நாளில் ஐயரவர்கள் கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஜெபித்தார். என் ஆண்டவனை எப்படி மறுதலிப்பேன்? இவ்வளவு நாளும் சத்தியத்தையே பேசின யான், அனைத்துலக நீதிபதியாகிய இறைவனுக்கு முன்பாக இந்த வேதாகமத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எப்படிப் பொய் சொல்லுவேன் என்று கண்ணீர் விட்டு ஜெபித்தார்கள். மறுநாள் ஐயரவர்கள் நீதிபதியின் முன்னின்று நடந்த யாவற்றையும் உள்ளவாறே திட்டவட்டமாகக் கூறினார். அதோ, நிற்கிற சாமுவேல் உபதேசியார்தான் தன் கைத்தடியால் இங்கு நிற்கிற இந்துக்களை முதலில் அடித்தார். என அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

ஐயரவர்களின் வாக்குமூலத்தைக் கேட்ட ஆட்சியாளர் மற்றச் சாட்சிகளை விசாரிப்பதற்கு அவசியமில்லை என்று கூறி விசாரணையை முடித்துக் கொண்டார்.

இதனைக் கண்ட அனைவரும் ஐயரவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டபடியால் கிறிஸ்தவர்கள் தண்டனை பெறுவது உறுதி எனப் பேசிக்கொண்டனர். ஐயரவர்கள் திரும்பிச் செல்லும்பொழுது அவரிடம் மிக்க மரியாதை வைத்திருந்த பெரியவர் ஒருவர் கோபமாக நீர் காரியத்தைக் கெடுத்துப் போட்டீர், இந்தக் கிறிஸ்தவர்களின் இரத்தப் பழி உம் தலைமேல் சுமரும் என்று கோபமாகக் கத்தினார்.

மறுநாள் நீதிமன்றம் கூடியபோது நீதிபதி கிறிஸ்தவர்கள் யாவரையும் விடுதலை செய்து கிறிஸ்தவர்களுக்கும்

ஆத்திரமூட்டும்படி அவர்களது கோவில் வளாகத்தில் கலகம் விளைவித்த இந்து சமயத் தலைவர்களைக் காவலில் வைக்கக் கட்டளையிட்டார்.

உடனே ஐயரவர்கள் தாங்கள் இந்துக்களைத் தண்டிக்க விரும்பவில்லையென்றும், அவர்களை மன்னித்து விடுவிக்குமாறு வேண்டினார். நீதிபதியும் வேண்டுகோளை ஏற்று அவர்களை விடுவித்து, இருசாராரையும் அமைதி காக்குமாறு கேட்டுக்கொண்டார். சார்செண்ட் 4.5.1874 அன்று ஐயரவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கொம்புக்காரன் பொட்டல் சபையார் கோவில் கட்டியதற்கு எதிர்ப்புக் கொடுத்தவர்கள்; இப்பொழுது சமாதானமாய்ப் போனது மிக்க மகிழ்ச்சியான காரியம் என்று குறிப்பிட்டார். இந் நிகழ்ச்சிக்குப் பின் மக்கள் அனைவரும் ஐயரவர்களிடம் மிகுந்த மரியாதை வைத்தனர். ஐயரவர்கள் சத்தியவான் ஐசக் ஆபிரகாம் எனப் புகழப் பெற்றார்.

இறுதி வேளை

1904 ஆம் ஆண்டு மார்ச்சு 14 ஆம் நாள் ஞாயிறுக் கிழமை காலையிலும் ஒழுங்காக வாசித்து வருகிற காலைத் தியானத்தில் மேலானவைகளை நாடுங்கள் கொலோ. 3:1 என்கிற திருவசனத்தில் அமைந்த தியானத்தை வாசித்தார்கள். வழக்கப்படி ஞாயிறு மாலை தன் வீட்டில் நடைபெறுகிற பெரியவர்களின் கூட்டத்தில் கலந்து வேதம் வாசித்து ஜெபித்தபின் ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள். இரவில் இவர்களது மகள் லேயாள் அம்மாள் பெருங்குளத்திலுள்ள இந்து சமய சிறுவர்களுக்கு அன்று ஓய்வு நாள் வகுப்பு நடத்தியதாகக் கூற ஐயரவர்கள் வியப்புடன் அவர்கள் எவ்வாறு பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள்? ஆண்டவருக்கு நன்றி என்று கூறி மகிழ்ந்தார்கள்.

நள்ளிரவில் ஐயரவர்களுக்கு மூச்சுத் திணறியது. இராகேல் அம்மையார் ஐயரவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு, எத்தனை பேர்களுக்கு நன்மை செய்த கைகள் என்றும், பாதங்களைப் பிடித்துக் கொண்டு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பொருட்டு அங்குமிங்கும் ஓடிய எவ்வளவு மேன்மை பொருந்திய அழகான பாதங்களென்றும் சொல்லிக்கண்ணீர் சொரிந்து கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அதிகாலை 5 மணிக்கு அவர்களது இன்னுயிர்

பிரிந்தது. அவர்களது உடலைப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும்போது ஏழைகளான கிறிஸ்தவர்கள் தகப்பனே தகப்பனே ஏழைகளாகிய எங்களுடைய வீடு வீடாய் வந்து உதவிசெய்து ஆறுதல் கூறுவீர்களே,இனி யார் எங்கட்கு உதவி செய்யப் போகிறார்கள் என்று கதறினர். அருள்திரு. ஆசீர்வாதம் ஐயரவர்கள் அடக்க ஆராதனையை நடத்தி பயபக்தியோடு அடக்கம் செய்தனர். கோவிலுக்கு வடமேற்குச் சுவரோரத்தில் நற்கருணை அறையில் ஓரமாய்க் கல்லறை அமைந்தது.

அருள்திரு. ஈசாக்கு ஆபிரகாமின் வழித்தோன்றல்கள்

ஈசாக்கு ஆபிரகாம் இராகேல் ஆகியோருக்கு நான்கு ஆண் மக்களும், நான்கு பெண் மக்களும் தோன்றினர். மூத்தவர் ஜாண் ஈசாக்கு பி.ஏ பட்டம் பெற்று அரசு பணியில் மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றினார். அவரது மக்களுள் ஒருவர் டாக்டர். விக்டர் என்பார் சென்னையில் சிறந்த பணியாற்றியுள்ளார். ஏனைய இருவரும் ஆசிரியர்கள். இரண்டாவது மகன் எட்வர்ட் தானியேல் என்பார் மருத்துவக் கல்வி பயின்று மைசூர் அரசாங்கத்தில் மருத்துவராகப் பணியாற்றினார். அவர்களது குடும்பம் மைசூரிலேயே தங்கி விட்டது.

ஈசக் ஆபிரகாமின் மூத்தமகள் செல்லம்மாளைப் பனைவடலிப் பகுதியைச் சார்ந்தவரும், தன்னுடன் குருப்பட்டம் பெற்ற அருள்திரு. நல்லதம்பியின் மகனான அருள்திரு. முத்து நல்லதம்பிக்கு திருமணம் செய்து கொடுத்தார். அவர் வடதிருநெல்வேலி, நீலகிரி, பீர்மேடு ஆகிய இடங்களில் குருவாகத் திருப்பணிவிடை செய்து ஐரோப்பியர்களாலும், இந்நாட்டு மக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றார்.

லேயாள் என்னும் மகளை புதிதாய்க் கிறிஸ்து மார்க்கத்திற்கு வந்த பெருங்குளம் மோசஸ் ராஜையாவிற்குத் திருமணம் செய்து வைத்தார். லேயாள் அம்மையார் சிறந்த பேச்சாற்றல் உடையவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் உரையாடுவதில் வல்லவர். புகழ்பெற்ற பிஷப் ஹென்றி கார்மிக்கேல் பண்ணைவிளையில் தங்கியிருக்கும் பொழுது அவர்களது ஊழியத்தில் மிக்க உதவியுடையவராகத் திகழ்ந்தார். அவர்கள் பண்ணைவிளையை விட்டு டோனாவூருக்குச் சென்றபொழுது லேயாள் அம்மையாரும் அங்கும் சென்று

அவர்களுடன் பணியாற்றியுள்ளார். அவர்கள் குடும்பத்தில் தோன்றிய சிலர் தமிழ்நாட்டு அரசுப் பணியில் உயர் பதவி வகித்திருக்கிறார்கள். திரு. சேவக பாண்டியன் என்பார் மதுரை,திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாநகர்களில் ஆணையராகப் பணியாற்றியுள்ளார். ஓய்வுபெற்றபின் சகோதரர் டி.ஜி.எஸ் தினகரன் இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் பேரீடுபாடு கொண்டு உதவியாக இருந்து வருகிறார்.

இராகேல் அம்மையார்

ஈசாக்கு ஐயரவர்களின் மற்றொரு மகள். அவர்களை மடத்துப்பட்டி என்னும் சிற்றூரில் கிராம அதிகாரியாகவும், செல்வாக்குடையவராகவும் வாழ்ந்த பொன்னுசாமித் தலைவருக்கு திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் குடும்பத்தில் தோன்றிய அருள்திரு. ஜீவகன் ஐயரவர்கள் நெல்லை மாவட்டத்தில் மாபெரும் சுவிசேஷகனாகவும்,சிறந்த குருவாகவும் பணியாற்றி நெடுநாள் வாழ்ந்து மறைந்தார். அருள்திரு. நெஸ்டர் பிலிப்பு என்பார் இறைவன் அருள் நிரம்பப் பெற்றவர். அமைதியின் அழகு தோய்ந்தவர்... இரவில் களைப்போடு வருவார்; கூட வந்த எளியவனுக்குத் தட்டோடு முழு உணவையும் கொடுத்து விடுவார். இரட்சகரைப் பற்றிச் சொல்லாமல் வழிஅனுப்ப மாட்டார். ஓய்வுபெற்ற பின்னும் நாட்டுப்புறங்கள் எல்லாம் சுவிசேஷ நற்பணியில் தொடர்ந்து உழைத்தார். இறுதிவரை ஈகையிலும் குறையாதவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். ஐயரவர்கள் வாழ்நாள் முழுவதும் துறவியாகவே இருந்து தனது 85 ஆம் வயதில் காலமானார்.

ஐசக் ஜீவகன் ஐயரவர்கட்கு இளையோன் திரு. பி.எஸ் நியூமென் சிறந்ததோர் ஆசிரியராகச் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் பணியாற்றி இந்நாட்டிற்கேற்ற கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று திட்டம் வகுத்தவர். அவரது திட்டத்தை ஏற்று அது சில இடங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றது. இவர்களது கல்விப் பணியைப் பாராட்டி யுனெஸ்கோ அவருக்கு விருது அளித்துச் சிறப்பித்தது. (UNESCO Awardee of the International Eductaion year 1970) தற்சமயம் R.V.S. Educational Institution Coimbatore இல் Advisor Education ஆகவும் Department of Discipline க்கு Director ஆகவும் இருக்கிறார்.

மேரி ஆதாள்

ஐயரவர்கள் பரிந்துரைத்து சார்செண்ட் ஐயரவர்களிடம் அனுப்பிய மணியாச்சி ஜமீனைச் சார்ந்த தாமஸ் பூலோக பாண்டியன் சிறப்பாகக் கல்வி கற்று அறிவுக் கடலாகத் திகழ்ந்தார். ஐயரவர்களிடம் பேரன்பு உடையவராக அவர் விளங்கினார். நான்காவது மகளைத் திருமணம் புரியும் பேறு பெற்றார்.

அவர் தனது அரசு பதவியைத் துறந்து இந்நாட்டு பஞ்சமருக்கு (தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு) இழைக்கப்பட்ட அநீதியை எண்ணி வருந்தி அவர்களது முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தார். பஞ்சமருக்குக் குடிநீர் வசதி அளிக்க PARIAH WELL FUND ASSOCIATION என்றதொரு சங்கம் நிறுவி அரும்பணியாற்றினார். இங்கிலாந்து, அமெரிக்கா, இலங்கை முதலிய நாடுகளுக்குச் சென்று தனது கலைத் திறனை வெளிப்படுத்தி நாட்டுப் பாடல்களைப் பாடி மக்களைக் கவர்ந்தார். தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை எடுத்துக்கூறி நன்கொடை பெற்றுத் தமிழகத்தில் பல இடங்களில் குடிநீர் கிணறுகளைத் தோண்டி உதவினார். நூற்று இருபத்தைந்து கிணறுகளுக்கு மேலாகத் தோண்டி உதவியுள்ளார். அவர் தோண்டி உதவிய கிணறுகள் பல இன்றும் பயனுடையதாக விளங்குகின்றன.

தாமஸ் பூலோக பாண்டியன் ஒரு சமூகத் தொண்டனாக மட்டுமல்ல சிறந்ததோர் எழுத்தாளனாகவும் விளங்கினார். அவர் எழுதிய நூல்கள்

1. The life of the Rev. Isaac Abraham
2. Indian village folk
3. Slaves of the soil
4. England to an Indian eye
5. Ancient heroes of the south Indian peninsula

இந்நூல்கள் அனைத்தும் 1906 ஆம் ஆண்டிற்கு முன் எழுதப்பெற்றவை

இவர் தனது 56வது வயதில் (1920 இல்) காலமானார். அவரது கல்லறை பாளையங்கோட்டை சமாதானபுரம் கல்லறைத் தோட்டத்தில் உள்ளது. அவரது ஞாபகார்த்தமாக

பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் ஒரு கிணறு தோண்டப் பெற்றுள்ளது.

சீவலப்பேரியின் இன்றைய நிலை

அங்கு வாழ்ந்த பல கிறிஸ்தவக் குடும்பங்கள் வேறு இடங்களில் குடியேறி விட்டனர். எனினும் தங்களது பூர்விக ஊரை அவர்கள் மறக்கவில்லை. அவர்கள் அங்கு முன்பு இரேனியஸ் ஐயரவர்களால் கட்டப்பட்ட ஜெபவீடு, பள்ளிக்கூடம் இருந்த இடத்தில் புதிதாக ஆலயம் கட்டியுள்ளனர். இடையிடையே அங்கு சென்று இறைவழிபாட்டில் கலந்து அங்குள்ள மக்களுடனும் தொடர்பு கொள்கின்றனர்.

அங்குள்ள மக்கள் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் சமூக பொருளாதார, கல்வி நிலைகளில் மிகவும் பின்தங்கியவராகவே இருக்கின்றனர். மேலும் கடந்த மூன்றாண்டு காலமாக சீவலப்பேரியிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழுகின்ற தாழ்த்தப்பட்டோர் , ஏனையோர் ஆகியோரிடையே நல்லெண்ணம் இல்லை. ஒருவரோடொருவர் பகைமை கொண்டிருக்கின்றனர்.

திரு. செல்வின் துரைப்பாண்டியன், முன்னாள் இராணுவ சேவையில் உள்ளவர்,அருள்திரு. ஐசக் ஆபிரகாம் அவர்களின் நெருங்கிய உறவினர், அவ்வூரின் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மக்களிடையே நல்லெண்ணம், நல்லுறவு ஏற்படுவதற்காக முழு மூச்சுடன் பாடுபடுகிறார். மக்களிடையே அவருக்கு நல்ல செல்வாக்கு உள்ளது. அவரது முயற்சி வெற்றிபெற இறைவன் அருள்புரிவாராக. ■

13

மந்திரமூர்த்தி என்ற வேதமாணிக்கம் மற்றும் அவருடைய சந்ததியார்

ஜோசப் தி. முத்துராஜ்

முன்னுரை

திருநெல்வேலி திருமண்டலம் கடந்த நடைபயணத்திலுள்ள நாகலாபுரம், ஆத்தாங்கரை கிராமங்களில் வாழ்ந்த என்னுடைய முன்னோர்களாகிய மந்திரமூர்த்தி, தங்கையா என்பவர்கள் இந்து மறைய சமய வழிபாட்டிலிருந்து கிறிஸ்தவத்தை எப்படித் தழுவினார்கள் என்று இக்கட்டுரை மூலம் கூற விரும்புகிறேன். எனது தாயார் பூமணி அவர்கள் திரு. மந்திரமூர்த்தியின் பேரனின் மகளாவார். எனது தந்தை ஜோசப் துரைராஜ் அவர்கள் ஆத்தாங்கரைபள்ளி(ஆற்றங்கரை) சேர்ந்த திரு. தங்கையா அவர்களின் மூத்த புதல்வர் ஆவார். இவ்விரு முன்னோர்களும் திரு பெருங் கிளை நதிகளாவர். இவர்கள் மூலமாக அவர்கள் சந்ததியார் அறியாத கிறிஸ்தவ மரபையும் ஆழமான விசுவாசத்தையும் நல் வாழ்வியத்தையும் பெற்றுக் கொண்டனர். இருப்பினும் இக் கட்டுரையின் தலைப்பில் மந்திரமூர்த்தி அவர்களின் பெயர் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம் என்ன வென்றால் மந்திரமூர்த்தி அவர்களின் வாழ்க்கை வரலாறானது சற்று மறைமையானது. இருப்பினும் ஒரே குடும்ப வரையறைக்குள் அமையுமாறு திரு. தங்கையா அவர்களின் வரலாறு, திரு. மந்திரமூர்த்தியின் வரலாற்றோடு இணைக்கப்பட்டுள்ளது. இவர்களின் வரலாற்றை முழுமையாகவும், ஆழமாகவும் தோற்றம், வளர்ச்சி, இவைகளின் பின்னணியும் நமக்கு மிகவும் அவசியமாகும். மந்திரமூர்த்தி, தங்கையா இவர்களின் சந்ததியார் எவ்வாறாக கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள், வாழ்ந்து மறைந்தார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இக் கட்டுரையில் சித்தரிக்க விழைகிறேன்.

அருட்திரு அரிவர் ஜோசப் முத்துராஜ் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் திருமறைப்பாடு பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்

கதை சொல்வதற்கும், ஒரு கதையை உருவாக்குவதற்கும் இடையே வித்தியாசங்கள் உண்டு. ஒரு கதை உண்மையை விட்டு சற்று புறம்பானதாகவும் உருவாக்கப்படலாம். ஆனால் நான் இங்கு ஒரு வராற்றுக் கதையைச் சொல்ல முற்படுகிறேன். இவ்வரலாற்றுக் கதைக்கு பின்வருவன மூல ஆதாரங்களாக பயன் பட்டுள்ளன.

1. அக்காலத்தில் இக் கிராமங்களில் வாழ்ந்த மிஷனெரிகள் சபை குருக்கள் இவர்களின் வரலாற்று ஆண்டறிக்கைகள்.

2. இதில் குறிப்பாக அருள்திரு. எஸ்.ஜி.ஏசுவடியான் (1867 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ம் தேதி முதல் சுமார் 16 ஆண்டுகள் நாகலாபுரம் திருச்சபையில் சபை குருவாக உழைத்தவர்) அருள்திரு. எஸ். ஜோசப் (1883 ம் ஆண்டு, அருள்திரு. டி. வேதமுத்து (1886-1902). ஆற்றாங்கரை சபையில் பணி செய்த குருமார்கள் அருள்திரு. ஐசக் பெரியநாயகம் மற்றும் அருள்திரு. பி. சுவாமியடியான் ஆகியோரின் ஆண்டறிக்கைகள்.

3. இப்பகுதியிலள்ள திருச்சபைகளுக்கு பொறுப்பாளராக இருந்த மேலைநாட்டு மிஷனெரி அருள்திரு. ஜே.எப். கேர்ன்ஸ் (J.F. Kearns) மற்றும் பேராயர் கால்டுவெல் அவர்களின் மிஷனெரி குறிப்பேடுகள், இவ்விருவரும் பலமுறை இப்பகுதிக்கு வருகைதந்து பணி செய்தவர்களாவர்.

4. தற்காலத்திலுள்ள மந்திரமூர்த்தி,தங்கையா அவர்களின் சந்ததியார் மூலம் கிடைத் வாய்மொழி வரலாற்றுக் கதைகள் குறிப்புகள்.

இவைகளை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரையின் உள்ளடக்கத்தை வரைந்துள்ளேன்.

நாகலாபுரத்தில் ஆதிக் கிறிஸ்தவம்

நாகலாபுரம் மிஷனெரி வட்டாரமானது ஆத்தாங்கரை கிராமத்தை உள்ளடக்கியது. இவ்வட்டாரத்தின் மறு பெயர் வைப்பார் மிஷன் என்பதாகும். இது புதியம்புத்தூர் மிஷ ன் வட்டாரத்திலிருந்து 1870/1875 ஆண்டு காலக் கட்டத்தில் பிரிக்கப்பட்டு தனி வட்டாரமாக இயங்கியது. இந்த மிஷன் வட்டாரத்தின் தலைமையகம் நாகலாபுரம் ஆகும். இது ஒரு வியாபாரக் கிராமமாகும். தூத்துக்குடியிலிருந்து

விளாத்திகுளம், அருப்புக்கோட்டை வழியாக மதுரை செல்லும் சாலையில் ஏறத்தாழ 60 கி.மீ தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது. ஆற்றங்கரைக் கிராமம் நாகலாபுரத்திலிருந்து தெற்குத் திசையில் நான்கு கல் தொலைவில் அமைந்துள்ளது. நாகலாபுரம் வட்டாரத்தின் ஆதிக் கிறிஸ்தவம் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. அவைகளைக் குறித்து, அருள்திரு. ஏசுவடியான் 1876 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 ஆம் தேதி சென்னைப் பேராயர் நாகலாபுரத்திற்கு முதன்முறையாக வந்தபோது வாசித்தளித்த அறிக்கையின் மூலம் நாம் அறியலாம்.

1. வைப்பார் மிஷன் துவக்ககாலத்திலிருந்தே தன்னாதரவு கொண்டதாக அமைந்தது. அருள் திரு. ஏசுவடியான் பின்வருமாறு குறிப்பிடுகிறார். இந்தியாவிலேயே முதன்முறையாக சபை குருவானவரின் மாத ஊதியம், மிஷனெரி ஊழியர்களின் ஊதியம் கொடுப்பதற்கும் மற்றும் ஆலயம், பள்ளிக்கூடங்கள், மற்றும் வீடுகள் இவைகளைக் கட்டுவதற்கும் தானாகவே பொருளுதவி திரட்டியது. (ஏசுவடியான் 1871-72)

2. வைப்பார் மிஷன் வட்டாரம் ஏழு ஜமீன்களைக் கொண்டதும், பலதரப்பட்ட ஜாதி, சமுதாயங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. (ஏசுவடியான் 1871-72)

3. திருநெல்வேலி மிஷன் வட்டாரத்தின் ஏனைய பகுதிகளைப் போன்று சாணார்கள் (நாடார்கள்) மாத்திரமே கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை. இப்பகுதியிலுள்ள 27 ஜாதிப் பிரிவுகளின் 20 பிரிவுகளிலிருந்து மக்கள் கிறிஸ்தவர்களானார்கள். (ஏசுவடியான் 1879).

4. வைப்பார் மிஷன் மேலை நாட்டு மிஷனெரியின் உறைவிடமல்ல. இருப்பினும் மேலைநாட்டு மிஷனெரிகளாகிய அருள்திரு. ஜே. எப். கேர்ன்ஸ், (J.F.Kearns) டி. ஆதம்சன் (T. Adamson) மற்றும் பேராயர் கால்டுவெல் ஆகியோர் இப்பகுதியில் நீண்ட நாட்கள் உழைத்துள்ளார்கள்.

மந்திரமூர்த்தி மற்றும் அன்னாரது சந்ததியாரின் கிறிஸ்தவ பாரம்பரியத்தை மேற்கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணியில் நாம் காண முற்பட வேண்டும்.

மந்திரமூர்த்தி கிறிஸ்தவராதல்

சிவனணைந்த பெருமாள் என்பவரின் புதல்வரான மந்திரமூர்த்தியின் மனமாற்ற அனுபவத்தை அருள்திரு. ஏசுவடியான் பின்வருமாறு தனது 1874-75 ஆண்டறிக்கையில் சித்தரிக்கின்றார்.

"இவ்வாண்டில் அநேகர் திருச்சபையில் சேர்ந்தனர். அதிலும் குறிப்பாக மந்திரமூர்த்தி நாடான் (நாகலாபுரத்தில் உள்ள ஜவுளி வியாபாரி) மற்றும் அவரது மனைவி பிள்ளைகள் இன்னும் இரண்டு குடும்பங்களுடன் மனமாற்றம் அடைந்தது சிறப்பு வாய்ந்ததாகும். மந்திரமூர்த்தியின் மனமாற்றமானது உலகியல் (Secular) சார்ந்ததாக இல்லை. தனிப்பட்ட முறையில் சில காலம் அவர் கடவுளைத் தேடுபவராக இருந்தார். இதன் விளைவாக விக்கிரக ஆராதனை, மூட நம்பிக்கை இவைகளைக் கைவிட்டு ஒரே கடவுளை வழிபட ஆரம்பித்தார். தன்னுடைய வீட்டில் ஒரே அறையில் தன் மனைவி பிள்ளைகளோடு பரம்பொருளாகிய முதற்கடவுளை வணங்கவும், இறைவேண்டல் செய்யவும் ஆரம்பித்தார். மந்திரமூர்த்தி மிகவும் கருணை உள்ளம் கொண்டவர். கிறிஸ்தவ நூல்களையும் சுவிசேஷத்தையும் வாசித்ததன் விளைவாக அவர் தம் இருதயம் கொழுந்து விட்டு எரிந்தது. அவர் வணங்கிய முழு முதற் கடவுள் அவர் மீது கிருபை பொழிய மந்திரமூர்த்தி கிறிஸ்தவரானார். அவர் இன்னும் பலருடன் சேர்ந்து எனது சபையில் மே மாதம் 9ம் தேதி அருள்திரு. டி. ஆதம்சன் அவர்களால் வேதமாணிக்கம் என்ற பெயர் பெற்று திருமுழுக்குப் (ஞானஸ்நானம்) பெற்றார். அவரது பெயருக்கேற்றபடி இவ்வுலகிலும் இனி வரும் உலகிலும் அவர் ஒரு மாணிக்கக் கல்லாக விளங்குவாராக" (1874-75)

மந்திரமூர்த்தியின் உலகியல் சார்ந்த நோக்கமற்றவர்

1877 முதல் 1879 வரையுள்ள காலகட்டத்தில் திருச்சபையில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையானது 2011 லிருந்து 7010 ஆக உயர்ந்தது. இந்த 5000 பேரைக் கொண்ட இந்த அதிகரிப்புக்கு (திருநெல்வேலி மிஷன் வட்டாரம் 35,000 பேர் அதிகரித்தனர்) மேற்கூறப்பட்ட இரு ஆண்டுகளில் நிகழ்ந்த கொடிய பஞ்சமும், அதைத் தொடர்ந்து 40 நாட்கள் பெய்த பெருமழையும் காரணமாகும். இச்சூழ்நிலைகள் மாறியவுடன் அநேகர் சபையை விட்டு விலகிக்

கொண்டார்கள். மந்திரமூர்த்தி கிறிஸ்தவரானதன் காரணம் இதைப் போன்றதல்ல அல்லது ஜமீன்தார்களின் கொடுமை தாங்காமல் அதிலிருந்து தப்பிய பிறரைப்போன்று கிறிஸ்தவரானவரல்ல. அருள்திரு. ஏசுவடியான் அவரது விசுவாசத்தையும் மனமாற்றத்தையும் நன்கு சித்தரித்துள்ளார். முதலாவது சமுதாய பாதுகாப்பிற்கும் உலகியல் பொருள் தேடியும் அவர் கிறிஸ்தவராகவில்லை. அதில் முதலாவதாக கடவுளைத் தேடுபவராக மாறினார். பின்பு விக்கிரகாராதனையைக் கைவிட்டவர். பின் தன் குடும்பத்தாருடன் கடவுளை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார். அதன்பின்பு சுவிசேஷ நூல்களைப் படித்து அவர் இருதயம் கொழுந்து விட்டு எரிய, தன் மனைவி பிள்ளைகளோடு 1875 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி வேதமாணிக்கம் என்ற புதிய பெயருடன் திருமுழுக்குப் பெற்றார். இது ஒரு அற்புதமான மனமாற்றமாகும்.

அவர் கருணையுள்ளம் கொண்டவர்

நாகலாபுரம் ஆலயத்தில் சுமார் 6 அடி உயரமும் 50 கிலோ எடையும் கொண்ட இரண்டு வெண்கலக் குத்துவிளக்குகள் உள்ளன. இவற்றுள் சற்று அதிக எடையுள்ள ஒரு விளக்கினை மந்திரமூர்த்தி 1879ஆம் ஆண்டு நன்கொடையாகக் கொடுத்தார். அந்தக் குத்து விளக்கில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது. "௲அளஎயக (1879) ஏப்ரல் மாதம் யங[13] தீ கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்த பண்டிகையன்று நாகலாபுரம் சி. மந்திரமூர்த்தி நாடான் என்ற வேதமாணிக்கம் நாடாரின் ஏசுநாத சுவாமிக்கு வைத்த பாத காணிக்கை ரூ. கூயக (ரூபாய் 61)". நாகலாபுரத்தில் இரண்டு இடத்தில் வழிபாடு நடைபெற்றது. (ஏசுவடியான் 1878) (1) பள்ளிவாசல் பட்டியிலுள்ள மிஷன் வளாகத்தில் (26 கஜ நீளமும், 9 கஜ நீளமும், 9 கஜ அகலமும் கொண்ட, ஓலையினால் வேயப்பட்ட இடம

2. நாகலாபுரத்திலுள்ள சந்தைக் கூடத்தின் அருகாமையிலுள்ள இடம். இரண்டு இடங்களிலும் 300 பேர் ஆராதிக்க முடியும். சந்தைக் கூடத்தின் அருகாமையுள்ள சிற்றாலயத்திற்குரிய இடத்தின் முழுப் பகுதியோ, அல்லது பெரும்பகுதியோ மந்திரமூர்த்தியால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் மோனிகா ஆங்கிலப் பள்ளி கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இங்கு இன்றும் மாதமொரு முறை கிறிஸ்தவ வழிபாடு நடைபெறுகிறது.

மந்திரமூர்த்தியும் அவரது பிள்ளைகளும்

மந்திரமூர்த்தி மூன்று முறை திருமணம் செய்து கொண்டார். ஏனெனில் அவருடைய முதல் மனைவி இறந்தபின் இரண்டாவதும், இரண்டாவது மனைவி இறந்ததும், மூன்றாவது முறையும் திருமணம் செய்து கொண்டார்.

மந்திர மூர்த்திர மூர்த்தி என்ற வேதமாணிக்கத்தின் பிள்ளைகள் பொன்னுசாமி, சின்னசாமி, செல்லம்மாள், சீனியம்மாள், தங்கம்மடாள் என்று ஆறுபேர்.

பொன்னுசாமி தனது குடும்பத்தாருடன் விளாத்திகுளத்தில் குடியேறி பின்பு இந்துக்களானார்கள். ஆனால் அவருடைய பேரன்மார்களில் ஒருவர் சென்னையில் வாழும் பரிபூரணம், கிறிஸ்தவராகியுள்ளார்.

சின்னசாமி உடல்வலிமை தைரியம் மிகுந்தவர். ஒருமுறை இரண்டு திருடர்களை எதிர்கொண்டு தன்னுடைய பாதுகாப்புக்காக ஒருவரைக் கொன்றுவிட்டார். அவருடைய குடும்பத்தில் இரண்டு பேரும் அவருடைய பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள்.

சீனியம்மாள் அவர்களது சந்ததியார் கிறிஸ்தவத்தில் நாட்டம் இழந்து இந்து திருமணங்கள் செய்து கொண்டனர். அவர்களது பேரன்மார்களில் ஒருவராகிய திரு. ஆர். சின்னசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மூத்த உறுப்பினராக செயலாற்றினார். 1960 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு காலக் கட்டத்தில் இந்திய சாசனத்தை பொது மக்கள் முன்பு பெரிய திடலில் தீ வைத்துக் கொளுத்தினார். அங்கிருந்த காவல் துறையினர் அவரை உடனடியாகக் கைது செய்தனர். நான் 12 வயது சிறுவனாக இருந்தபோது இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தேன்.

தங்கம்மாள் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்தவர்களே. அவர்களில் அநேகர் ஆலயப் பணியிலும் ஈடுபட்டு உள்ளனர்.

தங்கசாமி அவர்களுக்கு மாணிக்கம் என்ற மகன் இருந்தார். அவரது மூத்த மகள்தான் பூமணி ஆவார். (எனது தாயார்) தங்கம்மாள்,

தங்கசாமி அன்னாரது சந்ததியாரின் கிறிஸ்தவ வாழ்க்கை வரலாற்றைச் சற்று விரிவாகக் காண்போம்.

மந்திரமூர்த்தியும் அவரது குடும்பத்தாரும் அனுபவித்த துன்பங்கள்

மந்திரமூர்த்தி அதிக அளவு விளை நிலங்களை உடையவராக இருந்தார். அவரும் அவரது குடும்பமும் கிறிஸ்தவர்களானபடியால் சமுதாயத்தில் அதிக துன்பங்களைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. அக்காலத்தில் அப்பகுதியில் கிறிஸ்தவரான ஒருவர் என்னென்ன இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது என்பதை அருள்திரு. கோர்ன்ஸ் ஐயரவர்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

"ஒரு மனிதன் கிறிஸ்தவனாகும்போது சமுதாயத்தில் அவனுக்கு விரோதமாக எழும்புகிறார்கள். கிறிஸ்தவர் களானவர்களுக்கு தண்ணீர், வேலைவாய்ப்பு இவகைள் மறுக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு உணவு பண்டங்கள் கூட விற்கப்படக் கூடாது என்றும் தீர்மானம் செய்வார்கள். அம்மனிதன் கடன் கொடுத்து இருந்தால் கடன்காரர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க மறுத்து விடுவார்கள். அம்மனிதன் சொத்து உடையவராக இருந்தால் அவருடைய ஆடு, மாடுகள் சாகடிக்கப்படும், விளை நிலங்கள் தீயிட்டுக் கொளுத்தப்படும், அவனது சொத்துக்கள் சூறையாடப்படும்... அவனது நிலங்கள் அவனிடமிருந்து பறிக்கப்படும். (எஸ்பிஜி அறிக்கை 1858). மந்திர மூர்த்தி இப்படிப்பட்ட இன்னல்களைச் சந்தித்தார். அவருடைய நிலங்களில் வேலையாட்கள் வேலைக்குப் போகமுடியாதபடி ஒரு சாராரால் தடுக்கப்பட்டனர். நாகலாபுரம் பகுதியில் பணி செய்த மிஷனெரிகள், அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலைக்குச் செல்கிறார்கள் என்று குறை கூறினார்கள். ஆனால் மந்திரமூர்த்தியோ ஞாயிற்றுக் கிழமைகளில் நிலங்களில் வேலை செய்வோருக்கு ஓய்வு கொடுத்தார். அதன் விளைவாக ஞாயிற்றுக் கிழமைகளில் எடுக்கப்பட வேண்டிய பருத்தி வெடித்து கீழே சிதறிப் போயின. மந்திரமூர்த்தியின் பெண் பிள்ளைகள் அடிக்கடி கேலிக்குள்ளானார்கள். சின்னச்சாமி என்ற அவரது மகன் சிலம்பம் செய்துகொண்டு தனது சகோதரிகள் முன்பு நடந்து செல்வார். இந்த சிலம்பத்தினால் அவர் தங்கள் மீது எறியப்படும் கற்களைத் தட்டி

நடந்து செல்வார். மந்திரமூரம்த்தி கிறிஸ்தவரானபடியால் அவரது வியாபாரமும் பாதிக்கப்பட்டு, நாகலாபுரம் வணிக சமுதாயத்தினர் அவர் செலுத்திய மகமைத் தொகையை ஏற்க மறுத்து விட்டனர்".

தங்கம்மாளின் குடும்பம்- நாகலாபுரத்தின் நார்மன்

மந்திரமூர்த்தியின் பெண்பிள்ளைகளில் ஒருவராகிய தங்கம்மாள் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவரான சுவாமிதாஸ் வேதமுத்து நார்மன் என்ற இளைஞரை மணந்தார். இவர் நாகலாபுரம் பகுதியிலுள்ள துரைச்சாமிபுரம் என்ற கிராமத்தில் அநேக ஆண்டுகள் உபதேசிகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றினார். பின்பு மதுரை, ராமநாதபுரம் பகுதியிலும் பணி செய்தார். அவர் இறைவனுக்கென்று பல ஆண்டுகள் பணி செய்து தனது 72 ஆவது வயதில் 1939 ம் ஆண்டு ஜுன் 21 ஆம் தேதி மரணமடைந்தார். எஸ்.வி. நார்மன்-தங்கம்மாள் இவர்களுக்கு 6 ஆண் பிள்ளைகளும் 1 பெண் பிள்ளையும் இருந்தனர். அவர்களது சந்ததியார் தற்போது 60 குடும்பங்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி தற்போது எழுத இடம் போதாது. இக் குடும்பத்தில் அநேகர் ஆலயக் கட்டுமானப் பணிக்கும், நற்செய்திப் பணிக்கும் தங்கள் பொருட்களை மனமுவந்து கொடுத்துள்ளார்கள். இதில் சிறப்பாக எஸ். வி. நார்மன் கடைசி மகனான டாக்டர். ஏ.எஸ். நார்மன் மிகவும் குறிப்பிடத்தக்கவர். ராஜபாளையத்தில் சிறந்த மருத்துவப் பணி செய்து அங்குள்ள சபை மற்றும் சுற்றுப்புற கிராம சபைக் கட்டுமானப் பணிக்கு நிதியுதவி செய்துள்ளார். எஸ்.வி. நார்மன் அவர்களின் இரண்டாவது மகனான எஸ்.ஒய். நார்மன் அவர்களது முயற்சியின் மூலம் நார்மன் மிஷனெரி அறக்கட்டளை (Norman Missionary Trust) 1984ல் நிறுவப்பட்டது. இதில் அனைத்து நார்மன் குடும்பத்தினரும் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். தற்பொழுது இவ்வறக்கட்டளை மூலமாக இரண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியர்களைத் தாங்குகிறரார்கள். விரைவில் மூன்றாவது மிஷனெரிக்கும் ஆதரவு கொடுப்பார்கள். எஸ். ஒய். நார்மனின் மூத்த மகனான சார்லஸ் நார்மன் என்பவர் மாவிடுபண்ணையிலிருந்து பின்வருமாறு எழுதுகிறார். "நார்மன் மிஷனெரி அறக்கட்டளையானது நார்மன் குடும்பத்தினர்களிடையே மிஷனெரி உறவையும், கிறிஸ்தவ

அன்பையும் வளர்த்து வருகிறது. இக்குடும்பத்தில் சிலர் முழுநேரப் பணியாளர்களாக திருச்சபை நிர்வாக அமைப்பிலும் நற்செய்திப் பணி இயக்கங்களிலும் பணியாற்றுகின்றார்கள்". (சார்ல்ஸ் நார்மனின் கடிதம், செப்டம்பர் 24 1998)

மந்திரமூர்த்தியின் மூன்று பிள்ளைகள் போடம்பட்டி என்ற கிராமத்தில் குடியேறல்

நாகலாபுரத்தில் ஏற்பட்ட இன்னல்களின் விளைவாக மந்திரமூர்த்தியின் மூன்று பிள்ளைகளும் (2 மகள்கள் 1 மகன்) போடம்பட்டி என்ற கிராமத்தில் குடியேறினார்கள். இக்கிராமம் நாகலாபுரத்திலிருந்து 25 மைல் வடக்கே அருப்புக்கோட்டை செல்லும் வழியில் இருக்கிறது. அருப்புக்கோட்டையிலிருந்து தென்திசையில் 8 மைல் தூரத்தில் உள்ளது. தற்போது, இக் கிராமம் தென்னிந்தியத் திருச்சபை மதுரை ராமநாதபுரம் திருமண்டலத்தின் அங்கமாக உள்ளது. மந்திரமூர்த்தியின் இரு பெண்களும் அக்கிராமத்தில் திருமணம் செய்தனர். சீனியம்மாள் பவுல் என்பவரையும்,செல்லம்மாள் மனுவேல் என்பவரையும் திருமணம் செய்தனர். மந்திரமூர்த்தியின் மகன் தங்கசாமி, கிறிஸ்தவத்தைத் தழுவிய சௌந்திரம் என்ற பெண்ணை மணந்தார்.

போடம்பட்டியில் நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. பிற ஜாதி மக்களை அவர்கள் துன்புறுத்தினர். தங்கசாமியும், மாணிக்கமும் நேர்மையுடனும் கிறிஸ்துவின் பேருள்ள நம்பிக்கையுடனும் அங்கு வாழ்ந்தனர். தங்களது கடின உழைப்பால் குறுகிய கால கட்டத்தில் அக்கிராமத்தின் பெருவாரியான விளைநிலங்களை நாயக்கர் சமுதாயத்தினரிடமிருந்து விலைக்கு வாங்கினார்கள். நாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்நிலங்களில் வேலையாட்களாக மாறினார்கள். தங்கசாமியும், அவரது மைத்துனர் பவுல் என்பவரும் (சீனியம்மாளின் கணவர்) போடம்பட்டியில் ஆலயம் கட்ட ஏற்பாடு செய்தனர். ஆலயக் கட்டுமானப் பணியானது படிப்படியாக நடந்து முடிவு பெற்றது. இதைக் கட்டுவதற்கு மந்திரமூர்த்தியின் சந்ததியார் பொருளுதவி செய்தார்கள். இதில் குறிப்பாக திரு. மாணிக்கம் என்பவரின் மகன் சௌந்திரபாண்டியன் என்பவர் - தற்போது

அருப்புக்கோட்டையில் வசிக்கிறார்-அவருக்கு ஆலயப் பணியில் ஈடுபாடு உண்டு. சௌந்திரபாண்டியனின் மகள் ஞானஜோதியும் அவரது கணவர் திரு ஹெக்டர் அமிர்தராஜ் (திருநெல்வேலி திருமண்டலத்தில் வேலை செய்து ஓய்வுபெற்ற அருள்திரு. என். பாக்கியராஜ் அவர்களின் குமாரன்) அவர்களும் நாகலாபுரத்திலுள்ள மிஷன் பள்ளியில் ஆசிரியர்களாக வேலை செய்கிறார்கள். ஹெக்டர் அமிர்தராஜ் நாகலாபுரம் சபையின் உபதேசியார் ஆவார்.

மந்திரமூர்த்தி - தங்கசாமி - மாணிக்கம் - பூமணி

பூமணி, மந்திரமூர்த்தியின் பேரனான மாணிக்கத்தின் மூத்த புதல்வியாவார். இவர் ஆற்றாங்கரையில் வாழ்ந்த ஜோசப் துரைராஜ் அவர்களுக்கு 1947 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். திரு. ஜோசப் துரைராஜ் அவர்களின் கிறிஸ்தவப் பின்னணியை இப்போது காணலாம்.

ஆத்தாங்கரையின் ஆதி கிறிஸ்தவம்

ஆற்றாங்கரையில் 1870 இல் முதன்முறையாக கிறிஸ்தவ சபை தோன்றியது. ஏசுவடியான் பின்வருமாறு எழுதுகிறார். "இந்த இடத்தைப் பார்த்தவர்களும், இதைப்பற்றிக் கேள்விப் பட்டவர்களும் அது சாத்தானின் ஆதிக்கமுள்ள இடமென்று கருதினர். இப்படிப்பட்ட இடத்திலுள்ள நாடார்கள் மத்தியில் கிறிஸ்தவ சுவிசேஷம் சாத்தானின் சக்திகள் மீது வெற்றியைப் பெற்றது". (ஏசுவடியான் 1871-72 1870-71 ஆண்டறிக்கையின் படி நாடார்களில் (சாணார் சமுதாயத்தில் உயர்ந்த வர்க்கத்தினர்) மதிப்பிற்குரிய 40 குடும்பங்கள் கிறிஸ்தவ உபதேசத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர்.

இந்த மாற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்கள், மலைய நாடான், சொக்கலிங்க நாடான் என்ற இரு கிராமத் தலைவர்கள் (Ambalagars) இது மிக முக்கியமான திருப்பமாகும். ஏனெனில் இதற்கு முன்பு 14 கிறிஸ்தவக் குடும்பங்களே இங்கு இருந்தன. ஆற்றாங்கரையிலுள்ள ஆலயம், முன்பு சொக்கலிங்க நாடாரும் அவரது குடும்பத்தாரும் வணங்கிய இருளப்ப சாமியின் கோவிலாக இருந்தது. அதிலிருந்து 53 விக்கிரகங்கள் நீக்கப்பட்டு, இது கிறிஸ்தவ ஆலயமாக மாற்றப்பட்டது. (ஏசுவடியான் 1878) அந்த ஆலயமானது

1877 ஜூன் மாதத்தில் பேராயர் கால்டுவெல் இங்கே வந்திருந்தபோது வெளிச்சத்தின் கடவுளுக்கு என்று பிரதிஷ்டை செய்யப்பட்டது (ஐசக் பெரியநாயகம் 1880) மற்றுமொரு முக்கிய உண்மை என்னவென்றால் மலையநாடார் என்பவரின் குடும்பங்கள் தங்களது பத்திரகாளியம்மன் கோவிலை அருள்திரு. ஐசக் பெரிய நாயகத்திற்கு குருமனையாக மாற்றும்படியாக ஒப்படைத்தனர்.

இருப்பினும் வளர்ச்சியானது குன்ற ஆரம்பித்தது. கிறிஸ்தவர்களான 40 குடும்பங்களில் அநேகர் 1880 ஆம் ஆண்டில் பின்வாங்கினார்கள். மீதமுள்ள குடும்பங்களையும் இந்நிலைக்கு கொண்டுவர ஆற்றாங்கரை ஜமீன்தார் மிகவும் முயற்சித்தார். தனது 1881-82 ஆண்டறிக்கையில் அருள்திரு. பி. சுவாமியடியான் பின்வாங்கியவர்களில் சிலர் திரும்பி சபையில் சேர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். 1899ல் மறவர்களுக்கும், நாடார்களுக்குமிடையே பயங்கர கலவரம் மூண்டது. அதன் விளைவாக 500 நாடார் சமுதாயத்தினர் கிறிஸ்தவர்களானார்கள். அதில் 200 பேர் ஏற்கனவே பின்வாங்கிய நிலையிலிருந்தவர்கள். ஆற்றாங்கரையிலுள்ள 20 கிறிஸ்தவக் குடும்பங்கள் எரிக்கப்பட்டனர். இத் தீயை அணைக்க கிறிஸ்தவர்கள் மாத்திரமே முற்பட்டனர். இந்தச் சம்பவத்திற்கும் பிறகுதான் ஆற்றாங்கரையில் கிறிஸ்தவம் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது.

தங்கையாவின் புதிய விசுவாசமும் சாட்சி அனுபவமும்

எனது தாத்தா தங்கையா அவர்கள் இந்த சம்பவத்திற்குப் சற்றுப் பின்பு பிறந்தார். அவரது பெற்றோர்கள் பெயர் கணபதி, செல்லம்மாள் என்பதாகும். செல்லம்மாள் சொக்கலிங்க நாடார் சந்ததியாரில் ஒருவராவார். இந்த சொக்கலிங்க நாடார்தான் இருளப்பசாமி கோவிலை கிறிஸ்தவ ஆலயமாக மாற்ற ஒப்புக் கொடுத்தவர். செல்லம்மாள் மலைய நாடார் குடும்பத்தினருக்கும் நெருங்கிய உறவினராவார். தங்கையாவின் தகப்பனாராகிய கணபதி பழைய சமய வழிபாட்டுக்காரர். அவர் மேட்டைக்காரன் கோவிலில் வழிபாட்டிற்குக் தலைமை தாங்குவார். ஒருநாள் அவர் கோவிலில் வணங்கிக் கொண்டிருந்தபோது அங்கு வழிபடுபவர்கள் மேட்டைக்காரன் கடவுள் அவர்மீது வந்திறங்கியதாகக் கருதினர்.

அங்கு கூடி வழிபட்டவர்க்கு கணபதி வாக்கு உரைத்தார். அதன் பின்பு அவர் தனது வீட்டிற்கு பின்னாலே மேட்டைக்காரன் கடவுளுக்கென்று சிறு பீடத்தை எழுப்பினார். அதன் பொருள் என்னவென்றால் மேட்டைக்காரனும், கணபதியும் ஒன்றாக வாழ்கிறார்கள் என்பதாம்.

அநேக நாட்கள் நோன்பிலிருந்து பூஜை செய்த கணபதி, செல்லமாளுக்கு ஒரே மகனாக தங்கையா பிறந்தார். அவருடைய பெற்றோரின் கூற்றுப்படி, தங்கையா இந்துக் கடவுள்களின் வெகுமதியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவர் ஆவார். இந்த ஒரே மகன் கிறிஸ்தவரானார். மிஷன் பள்ளிக்கூடத்தில் தங்கையா சிறுவயதில் ஆதியாகமத்திலுள்ள யோசேப்பு வரலாற்று நாடகத்தில் யோசேப்பாக நடித்தார். அது அவரில் கிறிஸ்தவ விசுவாசம் தோன்ற ஆரம்பமாக அமைந்தது. அவர் இளைஞனாயிருந்தபோது சாத்தூரில் திரு. வேதரத்தினம் அவர்களுடைய ஜவுளிக்கடையில் வேலை பார்த்தார். இந்த வேதரத்தினம் தங்கையாவை கிறிஸ்துவுக்கு வழிநடத்தினார். தங்கையா சாத்தூரைச் சேர்ந்த முத்தம்மாள் (இவர் பெயர்தான் எனக்கு கொடுக்கப்பட்டது) என்பவரைத் திருமணம் செய்து ஆற்றாங்கரை திரும்பினார். அவர் அதிக நாட்களாக திருமுழுக்குப் பெறாதிருந்தார். முத்தம்மாள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டார். கணபதி ஒருமுறை ஒரு பேய் ஓட்டுபவனை அழைத்து உடுக்கு அடித்து முத்தம்மாளிடமிருந்து நோயை உண்டாக்கும் பேயை விரட்ட முற்பட்டார். ஆனால் பூஜை நடந்து கொண்டிருந்த வேளையிலேயே அந்த உடுக்கு முறிந்தது. உடனே பேய் ஓட்டுபவன் கணபதியைப் பார்த்து இந்த வீட்டில் பெரிய சக்தி இருக்கிறது என்று சொல்லி ஓடிவிட்டான். தங்கையா இந்த சம்பவத்தைக்குறித்து தன்னுடைய கடவுளின் பேரிலுள்ள விசுவாசத்தின் தன்மை தனது தகப்பனாருக்கு வெளிப்பட்டது என்று சந்தோஷப்பட்டார்.

தங்கையாவின் கிறிஸ்தவ விசுவாசம் வளர ஆரம்பித்தது. அவருடைய தாத்தாவும் மற்ற உறவினர்களும் மண்ணைத் தூற்றி சபித்தனர். அவரது பெற்றோர்கள் அவர் மீது மிகவும் கோபமடைந்தனர். தங்கையாவிற்கு 1928 ஆம் ஆண்டு பெப்ரவரி 29ஆம் தேதி ஜோசப் துரைராஜ் மகனாகப் பிறந்தார். தங்கையா தன்

மகனுக்கு கிறிஸ்துவ ஞானஸ்நானம் கொடுக்க ஆசைப்பட்டார். தனது மனைவியிடம் கிறிஸ்தவர்களாக ஞானஸ்நானம் பெறுவோம் என்று அழைத்தார். முத்தம்மாள் சற்று தயங்கவே தங்கையா சாவு அல்லது ஞானஸ்நானம் இவ்விரண்டில் எது தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று உணர்ச்சிவசமாகக் கேட்டார். பின்பு 1928 ஏப்ரல் 7ம் தேதி ஜோசப் துரைராஜ் ஞானஸ்நானம் பெற அதன்பின்பு ஒருவாரம் கழித்து தங்யைாவும முத்தம்மாளும் ஞானஸ்நானம் பெற்றனர்.

தங்கையாவின் கிறிஸ்தவ விசுவாசம் ஆற்றாங்கரைக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் தெரிய வந்தது. ஆற்றாங்கரை ஜமீன்தார் அவரை ஒரு நண்பராக ஏற்றுக் கொண்டார். ஜமீன்தார் கிறிஸ்தவத்தைப் பற்றி அறிய இந்த நட்பு ஒரு வாய்ப்பாக இருந்தது. தங்கையா ஒரு ஜெப வீரர். ஒருமுறை ஜமீன்தாரின் மனைவி சுகவீனமாக இருந்தபோது தங்கையா அரண்மனைக்கு அழைக்கப்பட்டு ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்ளப்பட்டார். தங்கையா ஜமீன்தாரின் மனைவிக்கு கர்த்தருடைய ஜெபத்தைக் கற்றுக் கொடுத்தார். ஆற்றாங்கரையை ஒட்டி ஒடிய வைப்பார் ஆற்றில் மணலில் இரவு நேரங்களில் தங்கையா ஜெபிப்பார். ஆற்றாங்கரையில் அநேக மாதங்கள் மழை இல்லாமலிருந்த போது கிராமமக்கள் அவரை ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அவர் ஜெபித்ததினால் உடனடியாக மழை பெய்தது. அவர் திருமறையை அதிகம் நேசித்தார். இரவு வேளைகளில் ஆற்றின் மணலில் முழங்காற்படியிட்டு கைவிளக்கு வைத்து புதிய ஏற்பாட்டை வாசித்தார்.

ஜோசப் துரைராஜ்,பூமணி இவர்களின் கிறிஸ்தவ ஊழியம்

மந்திரமூர்த்தி, தங்கையா இவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட கிறிஸ்தவ விசுவாசமும், சாட்சியின் வாழ்க்கையும், எனது பெற்றோர் ஜோசப் துரைராஜ், பூமணி அவர்களால், இந்துக்கள் அதிகமாக உள்ள விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை நகரில் பிரதிபலித்தது. 1950 ஆம் ஆண்டு அருப்புக்கோட்டையில் ஜோசப்துரைராஜ் வியாபாரத்தைத் தொடங்கினார். 1962 இல் தங்களுடைய வீட்டில் ஜெபக்கூட்டங்களை ஆரம்பித்தனர்.

அவைகளில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் பங்கேற்றனர். தற்பொழுது ஒவ்வொரு புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் பங்கு பெறும் உபவாச ஜெபம் நடைபெறும். கடந்த 38 ஆண்டுகளில் அநேகர் இந்து சமயத்திலிருந்து கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரது வாழ்க்கையும் நமக்கு அறைகூவலாக அமையும். எனது தகப்பனார்,ஜோசப் துரைராஜ் 1994 ஆம் ஆண்டு ஜுன் 29ஆம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். எங்கள் வீட்டில் நடத்திய ஜெபக் கூட்டங்களின் மூலம் 100 இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களானதாக தெரிகிறது.

ஒரு நாள் இரவு நாங்கள் குடும்பமாக ஜெபித்துக் கொண்டிருந்தபோது, நாங்கள் பாடிய பாடல் சத்தம் கேட்டு வைதீக செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் எங்கள் வீட்டிற்குள் வந்து அமர்ந்தான். ஜெபம் முடிந்தபின் தான் கிறிஸ்துவைப்பற்றி அறியவும் திருமறையை வாசிக்கவும் ஆவலாய் இருப்பதாகக் கூறினான். சில நாட்கள் கழித்து அவன் கறிஸ்தவனானான். அப்போதுதான், அவன் எங்கள் வீட்டிற்கு வந்த இரவில் அவன் தற்கொலை செய்யத் தீர்மானித்திருந்தான் என்பது எங்களுக்குத் தெரியவந்தது. தானியேல் வீரப்பன் என்ற ஞானஸ்நானப் பெயரைப் பெற்று பல ஆண்டுகள் சென்னையில் ஒரு நற்செய்தியாளராகப் பணி செய்து 1979இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தான். பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் என்ற இளைஞன் கிறிஸ்தவனாகி காச நோயினால் தனது நுரையீரல் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தாலும், கிறிஸ்தவ விசுவாகத்தில் ஆழமாக இருந்தான். 1974இல் அவன் கர்த்தருக்குள் நித்திரயடைவதற்கு முன்னதாக அநேக மருத்துவ மனைகளிலள்ள நோயாளிகளுக்கு சமாதானத்தின் செய்தியையும், குணப்படுத்துதலையும் அறிவித்தான். அருப்புக்கோட்டைலுள்ள ஒரு பணக்கார இந்துக் குடும்பத்திலுள்ள திருமதி. அமிர்தம்மாள் என்பவர்கள் கிறிஸ்தவர்களாகி, கிறிஸ்தவராகவே வாழ்ந்து 1981ல் மரித்தார். தங்கள் மரணம் வரை கிறிஸ்துவின் பெயரையே உச்சரித்த இன்னும் சிலரையும் இங்கு குறிப்பிடலாம். திருவாளர்கள் ஆபிரகாம் (1973) ராஜீ (1973) பாலகுரு (1980) மற்றும் ஜான் கணபதி (1984)

அநேகர் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களது ஆழமான விசுவாசத்தையும், உண்மையான ஒப்படைப்பையும் தற்கால பாரம்பரியக் கிறிஸ்தவர்களிடத்தில் கூட காண்பது மிகவும் அரிது.

முடிவுரை

இறைவனிடத்தில் வேண்டுதலும்,கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழமான நாட்டமும், கிறிஸ்தவத் திருமறை வாசிப்பதில் அதி விருப்பம் கொள்வதுமே, மந்திரமூர்த்தி, தங்கையா எங்களுக்கென்று விட்டுச் சென்ற பாரம்பரியச் சொத்தாகும். இவைகளை நாங்கள் பாதுகாக்கிறதோடு கூட வளர்க்கவும் செய்கிறோம். ஜோசப்துரைராஜ் பூமணி இவர்களுடைய முதல் இரு புதல்வர்களாகிய அருள்திரு. அறிவர் ஜெ.ஜெ. கனகராஜ், அருள்திரு. ஜெ.ஜி. முத்துராஜ் ஆகிய முறையே பூனாவிலுள்ள ஐக்கிய வேதாகமக் கல்லூரியிலும், பெங்களூரிலுள்ள ஐக்கிய இறையியற் கல்லூரியிலும் புதிய ஏற்பாட்டுப் பேராசிரியர்களாகப் பணியாற்றுகிறோம். மூன்றாவது புதல்வன் திரு.ஜெ.ஜி. ஜீவராஜ் சென்னையிலுள்ள வேதாகம ஐக்கிய சங்கத்தில் பணிபுரிகிறார். இவர்களுக்காக நாங்கள் கடவுளைத் துதிக்கிறோம் மற்றும் எங்களது மூன்று சகோதரிகளுக்காகவும், அவர்களது கணவர்களுக்காகவும் கடவுளைத் துதிக்கிறோம். திருமணத்தின் மூலம் எங்கள் குடும்பத்தோடு இணைந்த ஒவ்வொருவரும் தங்களது கிறிஸ்தவ பாரம்பரியத்தையும் பற்றுறுதியையும் எங்களுக்கு அளித்தார்கள்.

இறுதியாக நான் இதைக் கூறவேண்டும். மகள் சோபியா தன்னுடைய பள்ளியிலுள்ள விடுதியறையில் சில நண்பர்களாகக் கூடி ஜெபிப்பதை எனக்குக் கூறியபோது நான் ஆச்சரியப்பட்டேன். எனது சகோதர, சகோதரிகளின் பிள்ளைகளும் கிறிஸ்தவப் பணியில் இவ்வயதிலேயே ஈடுபாடு கொள்வது குறிப்பிடத் தக்கதாகும். இதிலும் குறிப்பாக சென்னை, திருச்சி கல்லூரிகளில் படிக்கும் ஹேன்சன் (Hanson) ஜோ (Joe) அர்வின் (Arvin) ஆகிய இவர்களை இந்த வயதிலேயே கிறிஸ்தவப் பணியில் அவர்களுக்குள்ள நாட்டத்தின் மூலம் குறிப்பிடலாம்.

கர்த்தருடைய வசனம் முப்பதும், அறுபதும் நூறுமாக பலன் கொடுப்பதாக.

மந்திரமூர்த்தி என்ற வேதமாணிக்கம்

- பொன்னுசாமி
- சின்னசாமி
- தங்கசாமி (சௌந்திரம்)
  - மாணிக்கம்
    - சௌந்திரபாண்டியன்
    - பூமணி
- செல்லம்மாள் (மனுவேல்)
- சீனியம்மாள் (பவுல்)
- தங்கம்மாள் (எஸ்.வி. நார்மன்)

மற்றும்

- கணபதி (செல்லம்மாள்)
- தங்கையா
- ஜோசப் துரைராஜ்
  - அறிவர். கனகராஜ் (பமீலா)
  - அறிவர். முத்துராஜ் (பியூலா)
  - ஜீவராஜ் (எபினேசர்)
  - சாந்தா (சுரேஷ்)
  - வசந்தா (ஐசக்)
  - சுகந்தி (ஜெபராஜ்)

(இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட சிலரது பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன)

14

என் மூதாதையர்கள்

சுசிகரன் தங்கசாமி *

முன்னுரை

1800க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலகட்டத்தை மிகச் சிறப்பான நூற்றாண்டு என டாக்டர் லெட்டரெட்டி என்பவர் கூறியுள்ளார். இந்நூற்றாண்டில் கிறிஸ்தவம் அடைந்த துன்பங்களை ஒப்பிட்டு நோக்குகையில், அவற்றின் மத்தியிலும் கிறிஸ்தவம் அடைந்த முன்னேற்றம் பிரமிக்கத்தக்கது. இந்நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவம் மகோன்னத நிலையில் இருந்தது. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும், கலாச்சாரத்தின் மீது கிறிஸ்தவத்தின் தாக்குதல் பெரியதாக இருந்தது. புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவதிலும்,மனித அவலங்களைத் துடைப்பதோடு அவற்றைத் தவிர்ப்பதிலும், புதிய கொள்கைகளைப் பரப்புவதிலும் கிறிஸ்தவம் முன்னோடியாக இருந்து. மாபெரும் பங்கை ஆற்றியுள்ளது. என்று அவர் கூறியுள்ளார்.

என் தந்தை வழி

என் தந்தைவழி பாட்டனாரின் பூர்வீகம் தற்போதைய நாசரேத் நகரத்தில் இருந்து தெற்கே ஒரு மைல் தொலைவில் உள்ள வாழையடி என்ற ஊர். அவர்கள் நாராயண சுவாமி கோவிலில் தீப வழிபாடு செய்த போது விக்கிரகங்களை வணங்கவில்லை. அவர்கள் வைஷ்ணவர் என்று ஊர்ப் பெரியவர் மூலம் அறிந்து கொண்டேன்.

1918 ஆம் ஆண்டிலும் பின்பும் பல முறையும் இந்தப் பகுதியில் காலரா பயங்கரமாகத் தாக்கியது. கேனோன் மர்காஷியஸ் காலத்தில் (1876-1908) காலராவுக்குப் பயந்து என் முன்னோர்கள் நாசரேத்திலுள்ள மிஷனெரிகளிடம் தஞ்சம் புகுந்தனர். 1877 இல் இராமநாதபுரம் துவங்கி, கன்னியாகுமரி வரை கடும் பஞ்சமும் காலரா நோயும், காய்ச்சலும் நிலவியது. ஆயிரக் கணக்கானோர் மரித்தனர்.

---

* டாக்டர் சுசிகரன் தங்கசாமி எம்.டி. சென்னையில் மருத்துவராகப் பணியாற்றிவருகிறார்.

கிறிஸ்தவ மிஷன்களும்,மிஷன் ஆஸ்பத்திரிகளும் மட்டுமே உதவின. மக்கள் ஆயிரக் கணக்கில் கிறிஸ்தவர்களாக மாறி எஸ்.பி.ஜி யிலும் சி.எம்.எஸ் இலும் இணைந்தனர். (Nazareth Mission History D.A. Christudoss p. 117)

நாசரேத்தில் குடியேறுதல்

எனது கொள்ளுத் தாத்தா சேத்திரபாலன் நாசரேத்திற்கும் வாழையடிக்கும் இடைப்பட்ட பெரும் நிலப்பகுதியை முஸ்லிம் ஒருவரிடம் இருந்து விலைக்கு வாங்கி, குடும்பத்துடன் அங்கு குடியேறினார். அவருக்கு ஒரு மகளும், 3 மகன்களும் உண்டு அவர்கள் கட்டிய வீடு நாசரேத்துக்குத் தெற்குக் கோடியில் தனியாக இருந்ததால் எங்கள் குடும்பம் இன்றளவும் ஒற்றை வீடு குடும்பம் என்று அழைக்கப்படுகிறது.

அவர்கள் நிலம் வைந்திருந்த விவசாயிகள். வாழையடிக்கு மேற்கே பருத்திக் காட்டு ஓடை என்ற சிற்றோடை ஓடியதால் நீர்ப்பாங்கான நிலமும், தெற்கே பனை மரங்கள் நிறைந்த வறண்ட நிலமும் அவர்களுடையது. நாங்கள் சிறுவர்களாக இருந்த பொழுது இந்தப் பனைகளிலிருந்து எடுக்கப்பட்ட பதனீரைக் கலசங்களில் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வருவதுண்டு. வீட்டிலுள்ள பெண்கள் அதைக் காய்ச்சி கருப்புக்கட்டி செய்வார்கள். பனை ஏறுபவர்களுக்கு மரங்கள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட பின்னர் ஒரு நாள் விட்டு ஒருநாள் தான் எங்களுக்குப் பதனீர் கிடைக்கும்.

என் தந்தை வழி தாத்தா நாசரேத்து மிஷன் ஆஸ்பத்திரியில் கம்பவுண்டராகப் பணியாற்றினார். டாக்டருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் வெளியேறி தனித்து மருத்துவம் செய்தார். பாம்படம் அணிவதற்காக ஏற்பட்ட தொள்ளக்காதுகளைச் சரி செய்வதும் உண்டு. அவர் நீண்ட குடுமி வைத்திருந்தார். மண்ணாலான சுவர்களையும் ஓலைகளால் வேயப்பட்ட கூரையையும் உடைய வீட்டில் வாழ்ந்த அவர் தினந்தோறும் குடிப்பார்.

என் தந்தைவழி பாட்டியின் முன்னோர்கள் நாசரேத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள நாலுமாவடியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விவசாயம் செய்ததோடு எள் வியாபாரமும் செய்தனர். அவர்கள்

எறும்புப் புற்றுகளில் வாழ்ந்து வந்த நாகப் பாம்புகளைப் பூசை செய்து வழிபட்டனர். அவர்கள் எப்பொழுது கிறிஸ்தவர்கள் ஆனார்கள் என்பது தெரியவில்லை. அவர்களது வம்ச வரலாற்றில் கிறிஸ்தவப் பெயர்கள் காணப்படவில்லை.

என் தாயின் பூர்வீகம்

என் தாயின் வம்சவழியினர் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில கிறிஸ்தவர்களாகிருக்கவேண்டும். சுவாமியடியான் என்பவர் (1800-1880) ஆசிரியராகவும், உபதேசியாராகவும் இருந்தார். என் தாய் அவரது வழித்தோன்றல். அவரது பெயர் நாசரேத் வரலாற்றில் பலமுறை காணப்படுகிறது. அவர் மூக்குப்பீரியைச் சேர்ந்தவர். சி.எம்.எஸ். ஐச் சேர்ந்த இந்தச் சபை பின்னர் எஸ்.பி.ஜி.யோடு இணைந்தது. என் தாய் சுவாமியடியானின் மகனான மருதநாயகத்தின் மகள். தாயின் பெயர் செல்லம்மாள், என் தாயின் முன்னோர்கள் வசதி படைத்த ஆசிரியர்களாகவோ, உயர் அதிகாரிகளாகவோ இருந்தனர்.

என் தாயின் தாய் மாமன் திரு. எம்.எஸ் அப்பாத்துரை. இரங்கூன் பேராயருக்கு நேர்முக உதவியாளராக இருந்தார். பின் நாசரேத் வந்து வசித்தார். அவர் வயல்களை 2000 ரூபாய்க்கு அடைமானம் வைத்து அதைப் பள்ளிக்கு 1930 ஆம் ஆண்டில் கொடுத்தது, அதன் நல்வளர்ச்சிக்கு அவர் செய்த பெரிய உதவியாகும். (Nazareth Mission history p. 216)

என் தாயின் மற்றொரு தாய்மாமன் எஸ்.எம் சாலமோன் பர்மா இரயில்வேயில் புள்ளி விவர அதிகாரியாக இருந்தார். அவருக்கு **ராவ் சாகிப்** பட்டம் கொடுக்கப்பட்டது.

என் தாயின் தந்தை வி.எம். சாமுவேல் நாசரேத்திலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள பனங்குளம் என்ற ஊரினர். அவர் மெஞ்ஞானபுரத்தில் எட்டாவது வகுப்பு படித்தபின் தொடர்ந்து படிக்க தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்பப் பட்டார். கொழும்புவிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்று விரும்பி தன் பள்ளிப் படிப்பை விட்டு விட்டு வீட்டிற்க்குத் தெரியாமல், மூன்று ரூபாய் செலவில் நீராவிக்கப்பலில் கொழும்புவிற்குச் சென்று விட்டார். அங்கு ஒரு பள்ளிக் கூட

முதல்வராகச் சில நாட்கள் பணியாற்றினார். பின்னர் தேயிலைத் தோட்டத்தில் குமஸ்தாவாகப் பணியேற்று, உதவிகண்டாக்டர், கண்டாக்கு என்று பதவி உயர்வு பெற்று, நுவரேலியாவிலுள்ள சம்மர்ஹில் எஸ்டேட்டில் சூப்பரின்டென்டாகப் பொறுப்பேற்றார். ஆங்கிலேயர்கள் மட்டுமே சூப்பரின்டென்டாகப் பணியாற்றிய காலம் அது. 1932ஆம் ஆண்டு நாசரேத்தில் பெரியவீடொன்றைக் கட்டினார். இலங்கை பர்மா ஆகிய நாடுகளில் பணம் சம்பாதித்தவர்களே பெரிய வீடுகளைக் கட்டினர்.

திரு. சாமுவேல். எதையும் ஒழுங்காக முறைப்படி செய்வார். வேளா வேளைக்கு ஜெபம் செய்தார். கோயில் காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் தனது நாட் குறிப்பு ஏட்டில் மனைவிக்குப் போதனைகள் எழுதும் போது, குடும்பம் நாடோறும் காலையிலும்,மாலையிலும் ஜெபத்திற்காக ஒன்று சேர வேண்டும் என்று கூறியுள்ளார். அவர் தம்மனைவிக்கு எழுதியுள்ள போதனைகள் பின் வருமாறு:

"ஒன்றுமில்லாமையிலிருந்து சகலத்தையும் சிருட்டித்த அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக" (சங். 146: 3-8)

மனைவி நவமணி செல்லம்மாளும் நானும் ஜீவிய காலம் முழுவதும் கடவுளுக்கு முன்பாக ஒருவரையொருவர் நேசித்து வந்தோம். கடவுளுக்குள் ஆறுதலாக உன் ஜீவிய காலத்தை உன் பிள்ளைகளுடன் கழிக்க அன்புள்ள கர்த்தர் உன்னை வழி நடத்துவாராக. சில ஆலோசனைகளை உனக்குப் பிரயோஜனமாக எழுதிவைத்துப் போகிறேன்.

1. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர் அருளிய வேத புத்தகத்திலுள்ள கட்டளைகளை உனக்குப் பிரயோஜனமாகக் கைக் கொண்டு நட, ஜெபமே உன் மூலாதாரமான கற்பனையாயிருப்பதாக (யாக்கோபு. 5: 12-20. சங் 145)

2. காலையிலே உன பிள்ளைகளை அவர் சன்னதியிலே கூட்டி உனக்கு வேண்டிய சகல நன்மைகளுக்காகவும் ஊக்கமாய் ஜெபி. உன் பிள்ளைகளைப் பேர் பேராக உன் ஜெபத்தினால் போராடி அவருடைய கிருபையின் கரத்துக்கு ஒப்புவி. இதனால்

உன் பிள்ளைகளைப் பற்றிய பாரம் முழுவதும் அவருடைய பேரில் வைத்தாய் விட்டது என்று நினைத்துக் கொள். ஜெபத்தினால் போராடி உன் பிள்ளைகளை அவரவர்களுடைய அல்லது உன்னுடைய சித்தத்திற்கல்ல. அவருடைய சித்தத்தின்படியே வழி நடத்தும் படி ஊக்கத்துடன் கேள். உன் பிரயாசனத்தினாலாவது, உன் இன ஜனத்தாருடைய பிரயாசத்தினாலாவது உன் பிள்ளைகள் பாக்கியமான ஜீவியம் செய்வது கூடாது. மனுஷருடைய யோசனைகள் அழிந்துபோம். இயேசுகிறிஸ்துவின் அன்பும் வாக்குத் தத்தமும் ஒரு நாளும் அழியாது மத்தியான வேளைகளிலும் தனி ஜெபம் செய்து, உனக்காகவும் உன்குடும்பத்தார் அனைவருக்காகவும் போராடு இரவில் உன் பிள்ளைகள் யாவருடனும் ஞானப்பாட்டு களினாலும், சங்கீதங்களினாலும், கர்த்தரைத் துதித்துப்பாடி, உன் விசாரம், கவலைகள் யாவையும், அவரின் அன்புக் காத்துக்கு ஒப்புவி. உன் பிள்ளைகளை சன்மார்க்கமான ஜீவியத்தில் பாதுகாத்து நடத்த அவரைக் கெஞ்சு (சங்கீதம். 37:3-9, 23-27, 34)

3. மனரம்மியமாயிரு. சந்தோஷமும் ஆறுதலுமுள்ளவளாயிரு.

4. பிள்ளைகளை அன்போடு கூடிய புத்திமதிகளுடன் கண்டித்து நடத்தி, அவர்கள் சன்மார்க்கமான ஜீவியம் செய்யக் கூடிய வழியில் அவர்களைத் திருத்தி நடத்து (காலே. 3:16-25)

5. பிள்ளைகள் உன்னைவிட்டு அதிக தூரமான இடங்களில் வசித்து வருவது நல்லதல்ல. தங்கள் பிழைப்பின் விஷயமாக அதிக தூரம் போகும்படி நேரிட்டாலும், யாவருடைய கவனிப்பும் இல்லாமல் தங்கள் காரியங்களை ஒழுங்கு செய்து ஜீவனம் கழித்து வரக் கூடிய விவேகம் வருமட்டும் அடிக்கடி நீ அவர்களைச் சந்தித்து வா. கவலையற்ற ஜீவியம் செய்கிற பிள்ளைகளுடன் அதிக காலம் இடைக்கிடையே தங்கி, உலகத்தில் அவர்கள் வாழ்வு முன்னேற்றத்துக்கு ஏதுவான போதனைகளைக் கற்பித்து, அவர்கள் ஜீவியம் கர்த்தருடனிருக்கிறதா, என்றும் கவனி.

6. வீண் ஆடம்பரமும், உல்லாசமுமான காரியத்தில் கவனத்தைச் செலுத்துகிற பிள்ளைகளைச் சிறு பிராயத்திலேயே கண்டித்து, கெட்ட பழக்கங்களை நிறுத்த வேண்டும் (2 தீமோ 3:1-3)

7. பிள்ளைகளை ஏந்த விசயத்திலும் கசந்து கொள்ளக் கூடாது. குழந்தைப் பருவத்தில் உன் சரீர சுகத்தைக் கவனியாமல் இராப்பகல் கண் விழித்து அவர்களுக்காக என்ன பாடெல்லாம் அனுபவித்தாயோ, அவ்வளவு தூரம் அவர்கள் வாலிபப் பிராயத்திலும், அவர்களுக்காக வேண்டிய பாடுகளை அனுபவிக்க வேண்டும். எல்லாப் பிள்ளைகளிடத்திலும் ஒரே அளவாய் அன்பு கூர்.

8. பிள்ளைகளைக் கர்த்தருக்கு ஊழியம்செய்யக் கற்பி. கர்த்தருடைய மகிமைக் கேற்ற வேலைக்கென்று தங்களுடைய அற்ப சொற்பத்திலும் கூட செலவு செய்ய வேண்டும். இதுவே அவர்கள் பொக்கிஷம் சேர்க்க வேண்டிய முதல் வழி என்றும் கற்பி. இதுவே என்றும் அழியாத ஆஸ்தி 1. தீமோ 6 6-19, உபா 28. 1-14)

வி.எம். சாமுவேல் அவர்களின் ஒரு மகன் ஞாயிற்றுக் கிழமை தோறும் மத்தியானம் சுவிசேஷ ஊழியத்திற்குச் செல்வார் என்று கூறுகின்றார்.

எனது தாய் பள்ளியிறுதி தேறிய பின் ஆசிரியர் பயிற்சி படித்தார். அவர்கள் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். என் தந்தை திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் பி. ஏ. (கணிதம்) பயின்றார். நாசரேத்தில் பட்டப் படிப்பு பெற்ற ஒரு சிலரில் என தந்தையும் ஒருவர். என் பெற்றோரின் திருமணம் 1932ல் நடைபெற்றது. நான்கு குழந்தைகள் பிறந்தன. பிறகு என் தாய் 1943ஆம் ஆண்டு காசநோயினால் சென்னையில் காலமனார். என் தந்தை சிறந்த கால்பந்தாட்ட வீரர்

இறையியல் பள்ளி - 1900 இறையியல் கல்லூரி 1936

1872 ம் ஆண்டு அகலமான நேரான தெருக்களோடு (ஸ்டிரான்) என்பவரால் இந்த நகரம் வடிவமைக்கப்பட்டது. ஆழ்வார்திருநகரியில் இருந்து வந்த சாலையும் (1874 - 75) சாத்தான்

குளத்திற்குச் சென்ற சாலையும் (1912) நாசரேத்தோடு இணைக்கப்பட்டதால் வணிகம் முன்னேறியது. இரயில் பாதையும் போடப்பட்டது.

நெல் பாசனத்திற்காக கால்வாய்களும் ஏரிகளும் அமைக்கப்பட்டன. மிஷனெரிகள் பிரிட்டிஷ் அரசிடம் இருந்து இந்த வசதிகளை எளிதாகப் பெற்றனர்.

ஏ.எம். கேமரர் என்ற மிஷனெரி 1841ஆம் ஆண்டு திருநெல்வேலி கலெக்டரைச் சந்தித்தனால் நாசரேத் சபைக்கு நேரவிருந்த ஆபத்தும் அழிவும் நீங்கின. அருகில் இருந்த இந்துக்களால் பல பிரச்சினைகள் உண்டானதால் பல புதிய சபைகள் மறைந்தன.

என் முன்னோர்களின் வாழ்க்கை முறை பற்றிய ஒரு பார்வை

சிக்கனமும் சொத்துச் சேர்த்தலும்

என் இனத்தவர்களின் நிறைய பேரைப் போலவே என் முன்னோர்களும் சிக்கனமாக இருந்து சொத்துச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே இருந்தனர். அது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததோடு அல்லாமல் அவை அவர்களுடைய எதிர்காலத்துக்குப் பாதுகாப்பாக அமையும் என்று எண்ணினர். பாடுபட்டு உழைத்து எவ்வளவு பொருட்களைச் சேர்க்க முடியுமோ அவ்வளவு பொருட்களைச் சேர்த்தனர். வருங்காலத்தைப் பற்றி எண்ணியவர்களாகப் பொருட்களை நல்ல முறையில் முதலீடும் செய்தனர். பிள்ளைகளின் படிப்பிற்கு முதலிடம் கொடுத்தனர். நிலங்களையும் தங்கத்தையும் வாங்குவதையே முக்கியமாக எண்ணினர். தங்கத்தின் மீது இருந்த ஆசையினால் பலர் தங்கசாமி, தங்கராஜ், பொன்னம்மாள், பொன்னுசாமி, தங்கமணி முதலிய பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்கும் இட்டனர்.

சுத்தமும் சுகாதாரமும் கலா ரசனையும்

இன்றையச் சூழ்நிலையோடு ஒப்பிடுகையில் என் முன்னோர்கள் சுத்தத்திலும் சுகாதாரத்திலும் குறைவுபட்டவர்களாகவே இருந்தனர். இருப்பினும் பொருளாதாரம் முன்னேற முன்னேற புதிய வழிமுறைகளையும் பின்பற்றத்

தொடங்கினர். அவர்கள் கலை உணர்வும் விரைவில் விழித்துக் கொண்டதால் இசை ஓவியம் தோட்டக்கலை பின்னல் வேலை இலக்கியம் ஆகியவற்றில் நாட்டம் காட்டினர்.

பலராகச் சேர்ந்து கூடி ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பதை விரும்பினர். நல்ல நகைச்சுவை உணர்வு கொண்ட அவர்கள் எளிதாகப் புன்னகை புரிந்து மனம் விட்டுச் சிரித்தனர். அதே சமயம் பலர் அடிக்கடி எரிச்சலடைபவர்களாகவும் கோபம் கொள்பவர்களாகவும் இருந்தனர். இனப்பற்று மிக்க அவர்கள் நாடார் இனத்திலும் கிறிஸ்தவர்கள் இந்துக்கள் என்று வேறுபாடு காட்டினர். மூடப்பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்ட அவர்கள் அவற்றை உறுதியாகப் பின்பற்றினர்.

பெண்கள்

பெண்கள் உடல் ரீதியாகவும் உள்ள ரீதியாகவும் உறுதியாக இருந்த காரணத்தினால் குடும்பத்தின் முதுகெலும்பாக இருந்தார்கள். அவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்ததோடல்லாமல் எந்தச் சூழ்நிலையிலும் ஒத்துப் போகிறவர்களாகவும் இருந்து குடும்பத்தின் முன்னேற்றத்திலும் நல் வாழ்விலும் பெரும்பங்கு வகித்தனர். கணவன்மார்களும் தம் மனைவியரை மதித்து அவர்கள் சொல்வதைக் கவனித்தனர்.

குறிப்பிடத் தக்க வேறு செய்திகள்

பிற இனத்தவர்களைப் போலவே குடும்பங்களில் ஒழுக்கக்கேடான நிகழ்ச்சிகள் நடைமுறையில் காணப்பட்டாலும் கூட அவை எளிதாக மன்னிக்கப்பட்டன.

பலர் நாட்குறிப்புகளை எழுதியதோடு அன்றாட வரவு செலவுகளையும் சிறப்பாக எழுதினர். என் தந்தையார் ஒவ்வொரு நாள் இரவிலும் அன்றைய வரவு செலவுகளை எழுதி அவை சரியாக அமைந்த பின்னரே படுக்கைக்குச் செல்வார்.

பண விஷயத்தில் கவனமாக இருந்தபோதிலும் கோவிலுக்கும் சுவிசேஷ ஊழியங்களுக்கும் கல்விக்கும் மிகத் தாராளமாக நன் கொடை கொடுத்தனர்.

என் முன்னோர்களில் சிலர் குடி பழக்கத்திற்கு அடிமைகளாக இருந்தனர். என் தந்தையின் தகப்பன் தினமும் குடித்ததாகச் சொல்லப்படுகின்றது. என்னுடைய அம்மாவின் மாமா ஒருவர் குடிப் பழக்கத்தாலும் மற்ற போதை மருந்துகளை உபயோகித்ததினாலும் தன்னுடைய வாழ்க்கையை முழுவதுமாக நாசமாக்கிக் கொண்டார்.

நாசரேத் - மிஷனெரி இயக்கங்களின் புதிய மையம்

ஒரு கிராமத்தில் ஒரு கூட்ட மக்கள் கிறிஸ்தவர்களாக மாறிய பொழுது எண்ணற்ற துன்பங்களைச் சந்திக்க நேரிட்டது. பழைய பழக்க வழக்கங்களையும் சடங்காச்சாரங்களையும் விட வேண்டியிருந்தது. எனவே மிஷனெரிகள் இவர்களைத் தனியாகப் புதிய இடத்திற்கு அழைத்துச் சென்றனர். இப்படித் தோன்றியவையே சாண்பத்திற்கு அருகே நாசரேத்து, திசையன்விளை அருகே சமாரியா, உடன்குடி அருகே கிறிஸ்டியான் நகர் போன்றவை இப்படித் தனிப்பட்ட இடங்களில் வாழ்ந்தாலும் கூட நான் சிறுவனாக இருந்த பொழுது நாசரேத்தில் பல மூடப்பழக்கவழக்கங்கங்கள் இருந்தன. 1943 முதல் 1949 வரைத நான் நாசரேத்தில் தங்கிப் படித்த பொழுது கண்ட சில மூடப் பழக்கவழக்கங்கள்.

1. திருஷ்டி கழித்தல்
2. பாலுண்ணிகளைக் குணப்படுத்த கோவிலில் மிளகு தூவுதல்
3. வீட்டிலுள்ள எறும்புத் தொல்லையில் இருந்து மீள சர்க்கரை கலந்த அரிசி மாவைக் கோவிலில் எல்லோருக்கும் கொடுத்தல்.
4. இருட்டிய பின் வெள்ளை நிறமான தயிர் பால் முதலியவற்றைக் கொடுப்பதில்லை
5. ஒருவர் வெளியே செல்கையில் எங்கே போகிறாய் என்று கேளாதிருத்தல்
6. வியாதியஸ்தர்களைச் சில சடங்குகள் மூலம் குறி பார்த்து சுகப்படுத்துதல்.

இன்றைய தலைமுறையினரப் பற்றிய கண்ணோட்டம்

நமது தலைமுறையினரது முன்னேற்றத்தில் கிறிஸ்தவம் மறுக்கமுடியாத பெரும் பங்கை வகிக்கின்றது. கிறிஸ்தவத்தைத் தழுவினால் ஏற்படும் நன்மைகளை மனதில் வைத்தே நம்

முன்னோர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இன்று நாம் பொருளாதாரம் மற்றும் ஆன்மீக நன்மைகளைப் பெற்றுள்ளோம்.

1849ஆம்ஆண்டு கால்டுவெல் நாடார்களைப் பற்றி மிகக் குறைவாக எழுதியிருந்த போதிலும் பின்னர் தமது கருத்தை அவர் மாற்றிக் கொண்டார் என்பதற்குப் பின்வரும் வாக்கியங்களே எடுத்துக் காட்டு.

சாணார்கள் கிறிஸ்தவ வழிமுறைகளை மிகச் சுலபமாகப் பின்பற்றுகிறார்கள். பனை ஏற வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களைச் சோம்பலிலிருந்து காப்பாற்றுகிறது. மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். அவர்கள் பிற ஜாதி மக்களை விட எளிதாக வழிநடத்தப் பட்டு உருவாக்கப்படக் கூடியவர்கள்.

அவர்கள் தங்களுக்கே உரிய சிக்கன குணத்தைக் கடை பிடித்ததால் அவர்களின் சந்ததியினர் பொருளாதாரத்தில் நல்ல நிலைமையில் உள்ளனர்.

நாடார்கள் தங்களது சிக்கன குணத்தாலும் கல்வியின் மீதுள்ள ஆர்வத்தாலும் கிறிஸ்தவத்தின் மூலம் பெற்ற விடுதலையினாலும் சமுதாயத்தில் முன்னேறியுள்ளனர் என்று ரெவரன்ட். ஜே. சாரோக் என்பவர் கூறியுள்ளார்.

பின்வந்த ஹார்டிகிரேவ்வும் பேராயர் நியுபிகினும் அவர்களும் நாடார்களைப் பற்றிச் சிறப்பான கருத்துக்களைக் கூறியுள்ளனர். 19ம் நூற்றாண்டின துவக்கத்தில் உயர் ஜாதி இந்துக்களால் நாடார்கள் பனையேறிகள் என்றும் கள் இறக்குபவர்கள் என்றும் குறைவாக மதிப்பிடப்பட்டு தாழ்ந்த ஜாதியாகவே நடத்தப்பட்டனர். அதனால் பல சமுதாய சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தது. இருப்பினும் கடந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றும் சமூக மாற்றங்களை ஏற்றுக் கொண்டு இன்று அவர்கள் பொருளாதாரத்திலும் அரசியலிலும் தென்னிந்தியாவிலேயே மிகச் செல்வாக்கு பெற்றவர்களாக மாறியுள்ளனர்.

எங்கள் குடும்பத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்

திரு. சாம் விக்டர்: திருச்சபையில் மிகச் சிறந்த பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். மிகச் சிறந்த ஒழுக்க சீலரான அவர் மாணவர்களிடையே நல்ல கருத்துக்களை வளரச் செய்தார். நாசரேத் நகரில் ஆண்கள் பள்ளியிலே மிகப் பெரிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு மூலகாரணமாக இருந்த அவர் இன்றும் மக்களால் நினைக்கப்படுகிறார்.

டாக்டர் கிருபை சாலமோன்: கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் படித்த இவர் டி.எம்.அன்ட் எஸ். படிப்பில் முதல் தரமாகத் தேறினார். இந்தப் பகுதியில் பணியாற்றிய முதல் பெண் மருத்துவர்களில் குறிப்பிடத்தகவர் இவர். நாசரேத் மற்றும் சுற்றுப்புறங்களில் தியாக மனப்பான்மையோடு இவர் ஆற்றிய பணிகள் சிறப்பானவை.

திரு. சி. சாமுவேல்: 1906ம் ஆண்டு மெட்றிகுலேசன் தேர்ச்சி பெற்ற இவர் கோலாலம்பூரிவ் உள்ள வில்லியம் ஜேக்ஸ் கம்பெனி என்ற நிறுவனத்தில் பணியாற்றினார். பின்னர் (பிளான்டர்ஸ் அசோஷியேசன் மலக்கா)வின் செயலாளராக இருந்த (வார்டு ஜேக்சன்) என்பசருக்கு நேர்முக உதவியாளராகப் பணியாற்றினார். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது திரு. (ஜேக்சன்) ஜப்பானியர்களால் கொல்லப்பட்டார். கம்பெனியும் அழிக்கப்பட்டது. போருக்குப் பின் திரு. சாமுவேல் கம்பெனியைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயன்று வெற்றி பெற்றமையால் கம்பெனியின் பாராட்டையும் சன்மானத்தையும் பெற்றார். கோலாலம்பூரில் உள்ள நாடார் சங்கத்திற்கு 1926 முதல் 1930 வரை தலைவராகப் பணியாற்றினார்.

டாக்டர். ஜே.ஆர். சாமுவேல்: இவர் திரு. சி. சாமுவேலின மகன் டாக்டர் பட்டம் பெற்ற இவர் காது மூக்கு தொண்டை துறையில் முதுகலைப் பட்டம் பெற்று இந்திய இராணுவத்தில் சிறப்பாக பணியாற்றி பிரிகேடியர் பட்டம் பெற்றவர். இவர் லக்னோவில் குடியேறியுள்ளார்.

டாக்டர் ரிச்சர்ட் மாசில்லாமணி: என் தங்கையின் கணவர் இவர் (MSc., Ph.D.) பட்டம் பெற்ற கால்நடை மருத்துவர் இவர். தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தராகவும் பணியாற்றினார். என் சகோதரி டோரா ரிச்சர்ட் மந்தை வெளியிலுள்ள செயின்ட் தாமஸ் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.

என் அக்காள் ரெஜினா ஜேடனரும் அவர் கணவனை திரு. ஜேடன் தங்கையாவும் பாளையங்கோட்டையில் வசிக்கின்றனர். பல அரசாங்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார். என் அத்தான் மான்செஸ்டரில் காது கேளாதவருக்குக் கற்றுக் கொடுக்க சிறப்பு பயிற்சி பெற்று வந்து டயோசிசனின் காது கேளாதோரின் பள்ளியில் தலைமையாசிரியாராப் பணியாற்றினார்.

என் அண்ணன் டானியல் தங்கசாமி: கோயம்புத்தூரில் வசிக்கின்றார். தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளிகளிடையே ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகின்ற அவர் ஏழைக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவும் அறக்கட்டளை ஒன்றை என் தாயாரின் பெயரில் அமைத்து நடத்தி வருகின்றார்.

டாக்டர் சசிகரன் தங்கசாமி. நான் 1965ஆம் ஆண்டு எம்.டி. தேர்ச்சி பெற்று மருத்துவராகப் பணியாற்றி வருகின்றேன். இறையியலில் எனக்கு ஆர்வம் உண்டு. கிறிஸ்தவர் நலவாழ்வுச் சங்கம் மற்றும் கிறிஸ்தவ நலவாழ்வு அறக்கட்டளை ஆகிய இரண்டையும் தோற்றுவிக்க உதவியுள்ளேன். இந்த நிறுவனங்கள் ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்கின்றன. இச்சங்கத்தின் சார்பில் கிறிஸ்தவர் விழிப்பு - என்ற பத்திரிக்கையையும் நடத்தி வருகின்றோம்.

முடிவுரை

மனித வரலாற்றில் நடந்த பல நிகழ்ச்சிகளில் இந்தியா ஆங்கிலேயரின் ஆட்சியில் கீழ் வந்தது. என் முன்னோர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் இன்று பொருள் சேர்ப்பது ஒன்றை மட்டும் நாடார் சமுதாயம் குறிக்கோளாகக் கொண்டிருப்பதைக் கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். தங்கத்தைக் குவிப்பதிலும் தங்கள் வசதியைப் பெருக்குவதிலும் இவர்கள் முனைப்பாய் இருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இன்று நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு மிஷனெரிகளாகச் செல்லக் கூடிய உயர்ந்த நிலையில் உள்ளனர். இந்த நிலைக்குக் காரணம் இயேசு கிறிஸ்துவின் போதனைகளையும் வாழ்க்கையையும் நமக்குக் கற்பித்த தன்னல மற்ற மிஷனெரிகளே ஆவார். தென்னாட்டு ஆலயங்களிலுள்ள எந்தக் கல்லறைத் தோட்டத்தைப் பார்த்தாலும் அங்கு எத்தனை இளம் மிஷனெரிகள் தம் மனைவி மக்களோடு இங்கு வந்து இறைப்பணி ஆற்றி தமது இன்னுயிரை அளித்தனர் என்பது தெரியவரும்.

உணர்வு பூர்வமாகவும் திருந்திய மனதோடும் நோக்கிப் பார்த்தால் இன்றைய இந்தியாவில் நமது பணிகளைச் செய்யும் காலம் வந்து விட்டது என்பதை அறியலாம். ■

15

அன்னமரியாள் (1870 – 1939)

மொட்டச்சிகுடியிருப்பு

ஆர்த்தர் ஜெயக்குமார்

திருநெல்வேலி கிறிஸ்தவத்திற்கு ஒரு முன்னோடியாக இருந்த ஒரு எளிய சாதாரண கிராமியப் பெண்ணின் வரலாறு இது. ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மீது அவர் கொண்டிருந்த விசுவாசத்தின் வல்லமைக்கு இவ்வரலாறு சாட்சியாக உள்ளது.

ஏரலுக்கு அருகிலுள்ள ஒரு சிறு கிராமமே மொட்டச்சி குடியிருப்பு, அவ்வூர் மக்களின் குல தெய்வத்தின் பெயர் மொட்டச்சி அம்மன். அவர்களை எல்லா வித நோய்களிலிருந்தும் இயற்கையின் சீற்றத்திலிருந்தும் பாதுகாக்கும் சக்தி கொண்ட கடவுளாக அதனை அவ்வூரார் கருதி வந்தனர். இக்குடியிருப்பு ஒரு ஓடையின் கரையில் அமைந்துள்ளது. திருச்செந்தூர் அருகே கடலில் கலக்கும் அவ்வோடை தாமிரபரணி ஆற்றின் ஒரு கிளையாகும். மொட்டச்சி அம்மனும் அவ்வோடையும் நெருங்கிய தொடர்புடையனவாகவும் எண்ணப்படுகிறது.

இக்கதையின் மையநாயகியின் பெயர் லெட்சுமி. அவர் கிறிஸ்தவத்தைத் தழுவியதில் அன்னமரியாள் எனப் பெயரிடப்பட்டார். 1870ல் பிறந்த அவர் மொட்டச்சி குடியிருப்பில் தன் பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் பண்ணைவிளையைத் தங்கள் பணிக்கள மையமாகக் கொண்டு பணியாற்றி வந்த சி.எம்.எஸ். மிஷனெரிகள் பண்ணைவிளையைச் சுற்றியிருந்த கிராமங்களில் நற்செய்திப் பணி செய்து வந்தனர். அவர்களிலொருவர் உவாக்கர் (Walker) என்பவர். நற்செய்திப் பணியின் மீது ஆழ்ந்த தீவிரமான ஆர்வமுடையவர். அவரது அருளுரைகள் அவரது உள்ளத்திலிருந்து வந்தன. அவரது

அருள்திரு. டாக்டர் ஆர்தர் ஜெயக்குமார், செராம்பூர் பல்சுவைக் கழகத்தின் துணை நிதியாளராகப் பணியாற்றி தற்போது மதுரை அரசரடி இறையியல் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார்.

அனுபவங்களாக அவைகள் இருந்த காரணத்தினால் அவை கேட்பவர் உள்ளத்தை ஈர்க்கக் கூடியவைகளாக இருந்தன. மொட்டச்சிகுடியிருப்பிலும் நற்செய்திப் பணி செய்த வர்களின் எளிய, அதே வேளையில் தீவிரமான நற்செய்தி அருளுரைகளை லட்சுமி கேட்பதுண்டு. அவரது அருளுரைகளினினால் கவரப்பட்ட லெட்சுமி கிறிஸ்தவத்தை நோக்கி வரத் தலைப்பட்டார். நற்செய்திப் பணியாளர்கள் விநியோகித்த துண்டுப் பிரசுர வெளியீடுகளை லெட்சுமி உற்சாகத்துடன் வாசிப்பதுண்டு. ஆரம்பக் கல்வி வரை பயின்றிருந்த லெட்சுமி எழுதப் படிக்கத் தெரிந்திருந்த காரணத்தினால் பிற மக்களை விட சற்றுக் கூடுதலாகக் கவனமாகக் கேட்கவும், கேட்டவைகளை மனதில் வைத்து சிந்திக்கவும் திறமை உடையவராக விளங்கினார். இவைகளின் விளைவாக தன்னுடைய பதினைந்தாவது வயதில் கடவுளைப் பற்றிய தன்னுடைய சிந்தனைகளில் மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தார். கிறிஸ்துவை நோக்கியும் கிறிஸ்தவத்தை நோக்கியும் தான் ஈர்க்கப்படுவதை உணரத் தலைப்பட்டார்.

இச்சூழலில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிய விரும்பினார் லெட்சுமி. எனவே மொட்டச்சி குடியிருப்பிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்த பண்ணைவிளைக்குச் சென்று வரத் தொடங்கினார். அங்கு சி.எம்.எஸ் மிஷனெரியும் சில இந்திய பணியாளார்களும் தங்கி இருந்தனர். அவர்கள் லெட்சுமியை ஏற்றுக் கொண்டு அவருக்கு கிறிஸ்தவ போதனையைத் தொடங்கினார். அதன் விளைவாக லெட்சுமி தன் பதினாறாவது வயதில் திருமுழுக்கு எடுக்க முடிவு செய்தார். திருமுழுக்கிற்குப் பின் அவரது பெயர் அன்ன மரியாள் என மாறியது. அவரது பெற்றோருக்கு இச்செய்தி எட்டவில்லை.

புதுக்கிறிஸ்தவரான அன்னமரியாள் தன்னுடைய வீட்டிலேயே கிறிஸ்தவ திருமறையை ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் படித்து வந்தார். திருமறையைப் படிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார். வெகுவிரைவில் அவரது பெற்றோர் தங்கள் மகள் கிறிஸ்தவத்தைத் தழுவியதுடன் ஒரு புதிய பெயரையும் ஏற்றுக் கொண்டதை அறிந்து கொண்டனர். அதன் விளைவாக அவருக்குத் துன்பம் விளைவிக்கத் தலைப்பட்டனர். பல சமயங்களில்

அன்னமரியாள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். பல அடிகள் பெற்று காயமடைந்தார். என்றாலும் தான் கண்டு கொண்ட புதிய நம்பிக்கையை விட்டுவிட மறுத்தார். அவரது பெற்றோர் தங்களது மகளை மீண்டும் தங்கள் சமயத்திற்குள் கொண்டுவர பலமுறைகளைப் பின்பற்றிய போதிலும் அன்னமரியாள் தனது வழியிலின்று சிறிதேனும் விலகவில்லை. அவரது தீவிரமான கொள்கைப் பற்றினால் சினமடைந்த தகப்பனார் அவரை வீட்டைவிட்டு வெளியேற்றினர். பண்ணைவிளையிலிருந்த மிஷனெரியுடனும் அங்கிருந்த பிற கிறிஸ்தவர்களுடனும் நல்ல தொடர்பு வைத்திருந்தாலும் அன்னமரியாள் அங்கு செல்லவும் விரும்பவில்லை மிஷன் வளாகத்தில் தஞ்சமடையவும் விரும்பவில்லை. மாறாக மொட்டச்சி குடியிருப்பிலே தங்கியிருக்க முடிவெடுத்தார். அங்கேயே தான் கண்டு கொண்ட புதிய நம்பிக்கைக்கு சாட்சி பகர விரும்பினார். அதுவே அவரது தன்மைக்கும் திண்மைக்கும் சான்றாக உள்ளது. தன் முடிவை தன் பெற்றோரிடம் வெளியிட்டு த்ன் வீட்டின் திண்ணையிலேயே தங்கியிருக்கப் போவதாகவும் அங்கேயே உறங்கிக் கொள்வதாகவும் தெரிவித்தார். அவ்விதமே வீட்டின் திண்ணையில் ஓர் இரவைக் கழித்தார். திருமணமாகாத ஒரு இளம் பெண் வீட்டின் வெளிப்பகுதியில் தங்கியிருப்பதை தமிழ் பண்பாடுஅனுமதிப்பதில்லை. அவ்விதம் இருப்பதை முறைபற்றதாகவும் கருதுவர். அவ்வித நிலை ஒரு பெண்ணிற்கு ஏற்பட்டால் அப்பெண்ணின் பெற்றோர் அவ்வூராரின் இழி சொல்லிற்குப் ஆளாக நேரிடும். எனவே ஊராரின் இழி சொல்லிற்கு பயந்த அன்னமரியாளின் தகப்பனார் அன்னமரியாளை வெளியேற்றிய மறுநாள் தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டு அவரைத் தன் வீட்டினுள் தங்க அனுமதியளித்தார். ஆனால் சில கட்டுப்பாடுகளையும் விதித்தார். அவை அன்ன மரியாள் பண்ணைவிளைக்குச் செல்ல முற்படக் கூடாது. பண்ணைவிளை மிஷன் வளாகத்திலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும் கூடாது என்பதாகும்.

தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு தடையை வெற்றியுடன் உடைத்த நிறைவில் தன் கிறிஸ்தவ வாழ்வை கூடுதலான உற்சாகத்துடனும் உண்மையுடனும் தொடர முற்பட்டார். ஜெபத்தில்

அதிக நேரத்தைச் செலவிட்டார். தன்னுடைய பெற்றோர் மட்டுமின்றி தன் கிராமத்தின் அனைத்து மக்களும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென வாஞ்சித்து ஜெபித்தார். ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் தன் வீட்டிலிருந்து வெளியில் செல்லக் கிடைத்த சந்தர்ப்பக்களிலெல்லாம் தான் சந்தித்த மொட்டச்சி குடியிருப்பின் மக்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள முற்பட்டார். அன்னமரியாளின் போக்கு அவரது பெற்றரோருக்கு விருப்பமில்லாததாக இருந்தது. எனவே தகப்பனார் அவருக்கு விரைவில் திருமணம் செய்து வைத்து அனுப்பி விட முடிவெடுத்தார்.

அன்னமரியாளின் தகப்பனாரின் தீவிர முயற்சியினால் வெகுவிரைவில் அவருக்கு திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது. பழைய சமய வாலிபனொருவருடன் பழைய சமய முறைப்படி அரவது திருமணம் நடைபெற்றது. பின்பு ஏற்றவேளையில் தனது கணவனிடம் தான் கிறிஸ்துவ சமயத்தை ஏற்றுக் கொண்டதை தயக்கமின்றி வெளியிட்டார். கடவுளுடைய அருள் அன்னமரியாளுடன் இருந்த காரணத்தினால் அவரது கணவர் பெருந்தன்மையுடன் அன்னமரியாள் கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையைத் தொடர அனுமதியளித்தார். எனவே அன்னமரியாள் தன் கணவரின் இல்லத்தில் தொடர்ந்து கிறிஸ்தவராக இருக்க முடிந்தது. வெகுவிரைவில் அன்ன மரியாள் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அவனுக்கு சுவிசேசமுத்து எனப் பெயரிட்டார். அவரது கணவர் அவரது கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிய நல்லெண்ணம் கொண்டார். தன் ஊரிலிருந்த பிற பெண்களுக்கும் தன் மனைவிக்கு இருந்த வேறுபாட்டினை உணரத் தலைப்பட்டார். அதன் விளைவாக வெகு விரைவில் அவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார். இளம் வயதிலேயே அவர் மரித்துப் போன காரணத்தினால் அவரைப் பற்றி அதிகம் அறிய முடியவில்லை.

கணவரின் மரணத்திற்குப் பின் அன்னமரியாள் தன்னுடைய சிறு மகனுடன் மொட்டச்சி குடியிருப்பிற்கு வந்து சேர்ந்தார். தங்கள் குலக்கடவுளை விட்டு விட்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தற்பொழுது இளம் விதவையாக ஒரு குழந்தையுடன் வந்து சேர்ந்த அவரை அவ்வூர் மக்களின் குற்றம் சாட்டும் சொற்கள் எவ்விதம்

தாக்கியிருக்கும் எனக் கற்பனை செய்து கொள்ளலாம். தனக்கேற்பட்ட அவமானங்களை பொறுமையுடனும் ஜெபத்துடனும் தாங்கிக் கொண்டார்.

இச்சூழலில் பண்ணைவிளை மிஷன் பொறுப்பாளர்கள் அன்னமரியாளை தங்கள் நற்செய்திப் பணியில் பயன்படுத்திக் கொள்ளவிரும்பினர். எனவே அதற்கான பயிற்சியினைத் தந்தனர். அதன்பின் அவரை மொட்டச்சிக் குடியிருப்பின் வேதாகமப் பெண்ணாக நியமித்தனர். அத்தகைய ஆதரவுடன் தன்னுடைய நற்செய்திப் பணியில் முழுவேகத்துடனும் ஆர்வத்துடனும் முழு மூச்சுடனும் இறங்கினார். அவருடைய ஜெப வாழ்க்கையும் சாட்சி பகரும் வாழ்க்கையாக இருந்தது. தன்னுடைய கிராமத்திலுள்ள அனைவரும் கிறிஸ்தவராகிவிடவேண்டுமெனவும் இயேசு கிறிஸ்துவின் பாதங்களைப் பற்றிக் கொண்ட திடமான கிறிஸ்தவராக வாழ வேண்டுமெனவும் ஆசித்து ஜெபித்தார். ஜெபத்தினால் முடியாததொன்றுமில்லை எனத் திடமாக நம்பினார். வேதாமப் பெண்ணாக அவர் எடுத்த முயற்சிகள் பலன் தரலாயின. அவ்வூரில் சிலர் கிறிஸ்தவத்தின் மேல் ஆர்வம் கொள்ள ஆரம்பித்தனர். சிலர் கிறிஸ்தவப் போதனை பெற முன்வந்தனர்.

அவ்வேளையில் அவ்வூர் ஓடையில் திடீர் வெள்ளம் வந்தது. இடைவிடாத பலத்த மழையின் காரணமாக வெள்ளம் அதிகரித்தது. அது அபாய எல்லையைத் தொட்டது. வெள்ளநீர் மொட்டச்சி குடியிருப்பினுள் நுழைய ஆரம்பித்தது. மற்றக் கிராமங்களைப் போல அங்கும் வீடுகள் களிமண் சுவர் கொண்டு பனை ஓலை வேய்ந்த கூரைகளை உடையனவாயிருந்தன. ஊருக்குள் நுழைந்த வெள்ள நீர் களிமண் சுவர்களைத் தாக்கியதால் அவைகள் இடிந்து போகத் துவங்கின. களிமண்ணும் கரைய ஆரம்பித்தது. ஓலைக் கூரைகள் தண்ணீரில் மிதக்கலாயின. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் இந்நிலையைக் காரணமாக வைத்து அன்னமரியாளின் கிறிஸ்தவ நற்செய்திப் பணியினை இகழ ஆரம்பித்தனர். அவரை எதிர்த்துக் கூக்குரலிட்டனர். அவர்கள் தங்கள் மூதாதையரின் தெய்வத்தை விட்டு விட்டு கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டு அதைப் பரப்ப முற்பட்ட காரணத்தினால் கடும் கோபமடைந்து மொட்டச்சி அம்மன்

தங்கள் மேல் வெள்ளம் வரச் செய்ததாகவும் அதன் மூலமாக தங்களை திருச்செந்தூர் கடலில் மூழ்கடிக்கப் போவதாகவும் கூறி அன்னமரியாளுக்கெதிராக சத்தமிட்டுக் குரலெழுப்பினர். அதே வேளையில் அவர் முன் ஒரு சவாலையும் வைத்தனர். அதென்னவெனில் அவருடைய கடவுள் மொட்டச்சி அம்மனை விட சக்தி வாய்ந்தவராக இருந்தால் அழிவிலிருந்து தங்களைக் காப்பாற்றட்டும் அவ்வாறாயின் தாங்கள் கிறிஸ்தவத்தை தழுவிக் கொள்வதாகக் கூறினர். வெள்ள நீரால் சூழப்பட்டிருந்த அவர்கள் தங்கள் வீட்டுக் கூரைகளின் மேல் ஏறிக் கொள்ளச் சொன்ன அன்னமரியாள், அவர்களைப் பாதுகாக்கும்படி இயேசு கிறிஸ்துவிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டார். வெள்ள நீர் அதிகரித்துக் கொண்டிருந்த பொழுதும் கூட தன் ஊர் மக்களை தைரியப்படுத்திக் கொண்டிருந்தார். அவருடை வீட்டின் களிமண் சுவரும் இடிந்து விழ அவரும் வேறு சிலருடன் தன் வீட்டு ஓலைக் கூரையின் மேல் ஏறிக்கொண்டார். அவருடைய வீட்டுக் கூரையும் மற்ற வீட்டுக் கூரைகளைப் போன்று வெள்ள நீரில் மிதக்க ஆரம்பித்தது. அதிகரித்துக் கொண்டிருந்த வெள்ள நீர் மிதந்து கொண்டிருந்த கூரைகளை இழுத்துக் கொண்டு செல்லத் துவங்கியது. இச் சூழலில் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். திகிலடைந்திருந்த மக்கள் தங்களின் அழிவு நிச்சயம் என நினைத்துக் கலங்கினர். சுழன்று சென்று கொண்டிருந்த வெள்ள நீர் மிதந்து கொண்டிருந்த கூரைகளை மொட்டச்சி குடியிருப்பிலிந்து சற்றுத் தூரம் இழுத்துச் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென வியப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. வெள்ள நீரால் அடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்த வீட்டுக் கூரைகள் திடீரென ஒரு பனைமரத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டன. அப்பனைமரம் மற்றப் பனைகளைப் போன்று நேராக வானை நோக்கி வளராமல் வளைந்தும் ஓடையின் குறுக்கேயும் வளர்ந்திருந்தது. அதனால் அது மிதந்து வந்து கொண்டிருந்த வீட்டுக் கூரைகளைத் தடுத்து நிறுத்த முடிந்தது. அதனை மக்கள் இறைவனின் ஒரு வல்ல செயலாகக் கருதினர். அருகிலிருந்த கிராமமக்கள் மொட்டச்சி குடியிருப்பு கிராமத்தவர்களைக் காப்பாற்றினார்கள். வெள்ள நீர் வடிந்த பின் அவர்கள் தங்கள் கிராமத்திற்கு வந்தனர்.

மேற் கூறப்பட்ட நிகழ்ச்சி அம்மக்களிடையே பல சிந்தனைகளை ஏற்படுத்தியதுடன் விவாதப் பொருளாகவும் ஆனது. வியக்கத்தக்க வகையில் தாங்கள் இயேசு கிறிஸ்துவினால் காப்பாற்றப்பட்டதாக அன்னமரியாளும் அவரது ஊரின் மற்ற மக்களும் கருதினர். அதன் விளைவாக அவர்களனைவரும் கிறிஸ்தவத்தை தழுவ முன்வந்தனர். மேலும் தங்கள் கிராமத்தின் பெயரை **மங்களபுரம்** என மறுபெயரிடவும் முடிவெடுத்தனர். கிறிஸ்தவத்தின் கோட்பாடுகளை அன்னமரியாள் மூலம் அறிந்து கொள்ள தங்களை சமர்ப்பித்துக் கொண்டனர். இதனால் மகிழ்வுற்ற அன்னமரியாள் மங்களபுர மக்களுக்கு கிறிஸ்தவ போதனை தர பண்ணைவிளை சரக கிறிஸ்தவ பணியாளர்களின் உதவியை நாடினார். அப்பணியின் பயனாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள அங்கு ஒரு மக்கள் இயக்கமே உருவாகியது. சோதனை, இழப்புகள் துன்பங்கள், இக்கட்டுகள் போன்றவைகளினூடேயும் தன் விசுவாசத்தில் உறுதியாக இருந்த அன்னமரியாள் என்னும் பெண் அனேகர் கிறிஸ்தவத்திற்குள் வழிநடத்தப்படக் காராணமாயிருந்தார். எத்தகையதொரு விசுவாசம்! கிறிஸ்துவின் மேல் கொண்டிருந்த அன்பும் தைரியமும் எத்தகையது!! கடவுளின் வல்லமைதான் எத்தகையது!!! ஆம், கடவுளின் செயல்பாடு பிரமிக்கத்தக்கது; புரிந்து கொள்ள இயலாது. தமது அரசு இவ்வுலகில் பரவிட சாதாரணமக்களை கடவுள் பயன்படுத்தும் முறை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அன்னமரியாள் மகன் சுவிசேசமுத்து மங்களபுரத்தில் ஆசிரியராகவும் உபதேசியராகவும் செயல்பட்டார். பண்ணைவிளை சரகம் ஏரல் குருசேகரத்தில் அவர் ஒரு சிறப்பான மதிப்பிற்குகந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். அப்பகுதியினர் அவரை **கேன்ஸ்** ஆசிரியர் என அழைத்தனர். சுவிசேசமுத்துவின் மனைவியும் ஒரு ஆசிரியர். அவர் பின்பு மிஷன் பள்ளிக் கூடமொன்றில் தலைமை ஆசிரியராகவும் பணி செய்தார். அவர்களுக்குக் இரண்டு பெண்களும் ஒரு மகனும் பிறந்தனர். ஒரு மகளின் பெயர் திருமதி. பாக்கியத்தாய் வேதமணி என்பதாகும். அவர் தற்சமயம் சென்னையில் தன் மகன் சுவிராஜ் என்பவருடன் வசிக்கின்றார். அன்ன மரியாளின் கொள்ளுப் பேரன் ஈ.சி.ஐயில் ஒரு போதகராகப் பணியாற்றுகிறார்.

சுவிசேமுத்துவின் மகனின் பெயர் ஜேசுதாசன் சாமுவேல் ஒரே மகனாயிருந்த காரணத்தினால் இறையியல் கல்விக்கு அம்மகனை அனுப்புமாறு அன்னமரியாள் சுவிசேசமுத்துவிற்கு ஆலோசனை வழங்கினார். அதனை ஏற்றுக் கொண்டு இறைப்பணிக்கு தன்னை அர்ப்பணித்து ஜேசுதாசன் சாமுவேல் இறையியல் பயிலச் சென்றார். அப்பயிற்சிக்குப் பின் திருநெல்வேலி பேராயத்தின் ஒரு போதகராக அருட்பொழிவு பெற்றார். அவர் அநேக சேகரங்களில் பணியாற்றினார். பிண்ணைவிளையில் அவர் போதகராக பணியாற்றிய பொழுது அவ்வூர் மக்கள் அவரின் தகப்பனார் சுவிசேசமுத்துவை அன்புடன் நினைவு கூர்வார்களாம். முதலூரில் பணியாற்றிக் கொண்டிருந்த போது - 4.11.1960 அன்று வழிபாடு நடத்திக் கொண்டிருந்த வேளையில் திடீரென தன்னுடைய ஐம்பதாவது வயதில் மரணமடைந்தார். முதலூர் ஆலய வளாகத்திலேயே அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அன்னமரியாளும் சுவிசேசமுத்துவும் மங்களபுரம் மொட்டச்சி குடியிருப்பு ஓடையின் கரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அன்னமரியாளின் பேரன் அருள்திரு. ஜேசுதாசன் சாமுவேல் செகண்டரி கிரேட் ஆசிரியையா மரியம்மாள் என்பவரை மணந்தார். அவர்களுக்கும் பத்துப் பிள்ளைகள் பிறந்தன. ஜேசுதாசன் சாமுவேலின் தாயார் திருமதி. சுவிசேசமுத்து மரியம்மாளுக்கு உதவியாக இருக்கவும் தன்னுடைய பேரப்பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வும் அவர்களை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை ஏற்றும் தன் மகனுடன் வாழ்ந்து வந்தார். அன்னமரியாளின் கொள்ளுப் பேத்தியும் ஜேசுதாசன் சாமுவேலின் மகளுமான திருமதி. பியூலா டேனியல் (செராம்பூர் கல்லூரி முதல்வர் அருள்திரு .அறிவர் ஜே.டி.கே. டேனியலின் மனைவி) அவர்களே இக்கட்டுரையின் ஆசிரியருக்கு மேற்குறிப்பிட்டுள்ள செய்திகளைக் கூறியவர். அவருக்கு அவருடைய தகப்பனார் வழியே இச்செய்திகள் தெரியவந்துள்ளன. அன்னமரியாளின் கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் அருள்திரு. ஜேசுதாசன் சாமுவேலின் மற்ற பிள்ளைகளில் ஒரு சிலரைப் பற்றி சிறு செய்திகள் பின்வருமாறு: திரு. ஜே. ரவிந்திரன் - .முன்பு சாயர்புரம் போப் உயர்நிலைப்பள்ளியிலும்

தற்சமயம் தூத்துக்குடி கால்டுவெல் மேல்நிலைப்பள்ளியிலும் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இசை நிகழ்ச்சிகள் மூலம் நற்செய்திப் பணியாற்றுகிறார். திருமதி. சுகுணா ஹென்றி - களக்காடு பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். திருமதி. சந்திரா கனகராஜ் பாளையங்கோட்டை சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை; பேராசிரியர் அகஸ்டின் - மதுரை நாடார் உறவின் முறை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் பணியாற்றுகிறார்.

ஒவ்வொரு சந்ததியிலும் சாட்சிகளை உருவாக்குகின்ற இறைவனுக்கு எல்லப் புகழும் உண்டாகுக. அவருக்கே எல்லா மகிமையும் மேன்மையும் உரித்தாகுக. ■

16

கந்தசாமி ஆபிரகாம் - பெரியநாயகம் குடும்பத்தினரின் வரலாறு

ஜெ. சி.பி. .ஆபிரகாம்

நான் என் தாயார்வழி பெரியநாயகம் குடும்பத்தில் நான்காவது தலைமுறையிலும் என் தந்தை வழி ஆபிரகாம் குடும்பத்தில் மூன்றாவது தலைமுறையிலும் கிறிஸ்தவன்.

பெரியநாயகம் குடும்பத்தினர்

என் பாட்டனாரின் பாட்டனார் 18வது நூற்றாண்டில் வாழ்ந்த முதல் பெரிய நாயகம் ஆவார். அவர் நெல்லை மாவட்டத்தில உள்ள பேய்க்குளம் என்ற ஊரில் கோவில் பூசாரியாக இருந்தவர். அவர் மகனான என் பூட்டனார், மறைதிரு. தாமஸ் ஜி. ராக்லண்டு (1815 - 1858) என்பவரால் கிறிஸ்தவ மதத்துக்குக் கொண்டுவரப்பட்டார். இவர் பின்னால் மறைதிரு. பெரியநாயகம் என்ற போதகர் ஆனார். அவருடைய மகன்தான் என் தாய்வழிப் பாட்டனார். இவர் திருவில்லிப்புத்தூரில் 1858-1941ல் வாழ்ந்த திரு. ஆபிரகாம் பெரிய நாயகம் என்பர்.

1878ம் ஆண்டு திரு. ஆ. பெரியநாயகம், சென்னை பாரிஸ்முனை அருகில் உயர்நீதி மன்றத்துக்கு எதிரில் அமைந்த சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். பௌதிகம் ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களிலும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று இளங்கலை பட்டதாரி ஆனார்.

கல்லூரி முதல்வர் அளித்த ஊக்கத்தின் பேரில் அவரோடு சைனாபசார் கூடும் இடங்களில் தினமும் மாலை வேளைகளில் சென்று தெருப்பிரசங்கம் செய்து வந்தார். அவர் பட்டப்படிப்பு முடிந்ததும் திருநெல்வேலியில் இருந்த சி.எம்.எஸ். கல்லூரியில் பணியில் அமர்ந்தார். இந்தக் கல்லூரியே பாளையம்பதியில் இன்று புனித யோவான் கல்லூரியாகதக் காட்சியளிக்கிறது. நகர்ப்புறம் அமைந்த கல்லூரியில் நற்செய்திப் பணி செய்ய அதிகம் வாய்ப்பில்லை என்ற காரணத்தினால் அவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியராக

டாக்டர் ஜே. சி.பி. பாஸ்கர் ஆபிரகாம் ஓய்வு பெற்ற துணை முதல்வர் அமெரிக்கா கல்லூரி. மதுரை.

திருவில்லிப்புத்தூருக்குச் சென்றார். அவர்தன் திறமையாலும் முயற்சியாலும் ஹௌடன்புரம் என்ற இடத்தில் இப்பள்ளியை ஒரு உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தினார். இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக ஓய்வு பெறுமட்டும் பணிபுரிந்தார். அவரது எளிமையான இல்லம் பள்ளிக்கு எதிரில் அமைந்திருந்தது. என் சிறு பிராயத்தில் பல கோடை விடுமுறைகைள இங்கே உல்லாசமாகக் கழித்த நினைவுகள் மனதில் .இன்றும் பசுமையாக உள்ளன.

திரு. பெரியநாயகத்தின் துடிப்பான தலைமையில் பள்ளி மாணவரின் எண்ணிக்கை வேகமாக 200 ஆக உயர்ந்தது. திரு. பெரியநாயகம் இரு அந்தணர் பையன்களையும் கிறிஸ்தவராக்கினார். அது பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோவிலைக் கொண்ட வைதீக இந்துக்கள் உள்ள ஊராகும். எனவே மாணவரின் எண்ணிக்கை 200யிருந்து சடுதியில் இரண்டாகக் குறைந்தது. அந்த இருவரும் புதிதாக கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய அந்தணர். பள்ளியின் தலைமை ஆசிரியர் பயங்கர விளைவுளை, ஏன் மரணத்தையும் மாணவர் கூடச் சந்திக்க நேரிடும் என்று அச்சுறுத்தப்பட்டார். ஆனால் அவர் துணிவுடனும் மனஉறுதியுடனும் கல்விப் பணியையும் மதபோதனையையும் தொடர்ந்தார். அவர் முயற்சி பலன் அளித்தது. 50 ஆண்டுகளில் மாணவர் எண்ணிக்கை 400 ஆக உயர்ந்தது.

தன் இளமைப் பிராயத்தில் திரு. பெரியநாயகம் மதுரை திருநெல்வேலி மாவட்டங்களுக்குக் கால்நடையாகவே சென்று நற்செய்திப்பணி செய்து வந்தார். அவர் மாற்று உடையோ பணமோ தன்னுடன் எடுத்துச் செல்வதில்லை. வீதிகளிலும் மரநிழலிலும் படுத்து உறங்கி பிறர் உவந்தளிக்கும் உணவை உண்டு வாழ்ந்தார்.

திருவில்லிபுத்தூர் நகராட்சி தலைவராகவும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சிக் குழு உறுப்பினராகவும் அவர் பணியாற்றிய போது அவரது இறைபக்தியை யாருவம் கண்டுணர முடிந்தது.

திரு. ஆபிரகாம் பெரியநாயகம் மிக்க துணிவும் புதுமை நோக்கும் உடையவர். ஒரு சமயம் அவர் பிரிட்டனிலுள்ள இங்கிலாந்து திருச்சபையின் ஆலோசனைக் குழுவுக்கு ஒரு பரிந்துரை அனுப்பினார். தம் நன்றியையும் தெய்வ பக்தியையும் தெரிவிக்கும்

வகையில் ஓராண்டிலுள்ள 52 வாரங்களில் ஒரு வாரமாவது நறசெய்தி பணிக்காக ஒதுக்கப்படவேண்டும் என்பதே. இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்னும் இங்கிலாந்து திருச்சபையின் பஞ்சாங்கத்தில் சாட்சி வாரம் என ஆசரிக்கப்படுகின்றது. இது சம்பந்தமாக இவர் விக்டோரியா மகாராணிக்கு எழுதிய கடிதம் அன்புடன் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஏழாவது எட்வர்ட் வேல்ஸ் நாட்டு இளவரசராக இருந்த போது திருவில்லிபுத்தூர் வழியாகக் கடந்து சென்றார். அச்சமயம் திரு. **ஆபிரகாம் பெரியநாயகம் இயற்றிய சமூத்திரங்களையும் மாமேருகளையும் பிரயாசத்துடன் மேற்கொண்ட** என்ற பாடலால் அவரைக் கௌரவிதார் திரு.பெரியநாயகம் சீன ஜப்பான் மோதலின் போது கோமின் டாங்காவின் ஸ்தாபகரான சன் யாட்-சென்னின் சகோதரி சியாங் கே.ஷேக் என்ற கிறிஸ்தவ அம்மையாருக்கு கடிதம் எழுதினார். அவர் அன்னாருக்கு அளித்த அறிவுரையும் ஆன்மீகப் போதனையும் அம்மையாரால் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தான் ஓய்வு பெற்ற பின் நற்செய்திப்பணியை இரட்டிப்பாகச் செய்தார். வழி தப்பிய ஒரு ஆங்கிலேய அதிகாரியைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினார்.

திரு. பெரியநாயகம் 1941ம் ஆண்டு தமது 83வயதில் மரணமடைந்தார். அவரது அடக்கத்தில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து ஒரு மைல் நீளம் பவனியாக வந்து அஞ்சலி செலுத்தினர்.

என் தாய்வழிப்பாட்டி திருவில்லிபுத்தூரைச் சேர்ந்த திருமதி. கிறிஸ்டினா பெரியநாயகம் மிகவும் பக்தியுள்ள கிறிஸ்தவப் பெண்மணி அவர்கள் உலக அனுபவமும் சமயத்தைக் குறித்த தெளிந்த மனப்பாங்கும் படைத்தவர். கோடை விடுமுறைகளில் ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் தாத்தாவீடு சென்ற போது என் தகப்பனாரும் அவர்கள் சகோதரருமாகச் சமயக்கோட்பாடுகளைக் குறித்து உரத்த குரலில் காரசாரமாக விவாதிப்பது வழக்கம். அச்சமயங்களில் என் பாட்டி என்னைத் தனியே அழைத்து அவர்கள் சத்தம் போடட்டும் ஆனால் அருமைப் பையனே நீ உனக்கு ஏதாவது கலக்கம் ஏற்படும்போது இயேசு இந்த சூழ்நிலையில்என்ன

செய்திருப்பார் என்று உன்னையே கேட்டுப்பார். என்று கூறுவார். அவர்கள் புகட்டிய நீதிநெறி என் நினைவில் பசுமையாக உள்ளது. என் பிந்திய வாழ்க்கையில் ஏற்பட்ட ஐயங்கள் தீர வழிகாட்டியாக உதவியது.

திரு. ஆபிரகாம் பெரியநாயகத்துக்கு நற்செய்திப் பணியில் இருந்த ஆர்வத்தை அவர்கள் பிள்ளைகளும் பகிர்ந்தனர். அவரது மூத்த மகன் திரு. எட்வின் பெரிய நாயகம் இந்த நூற்றாண்டின் முன்பகுதியில் மதுரையின் பிரபல வழக்கறிஞராகத் திகழ்ந்தார். ம.துரை புனித ஜார்ஜ் ஆலயத்தின் ஒரு மூப்பராகவும் இருந்தார். நீதிக் கட்சியின் ஒரு தலைவராக இருந்த திரு. எட்வின் பெரியநாயகம் சென்னை மாகாணத்தின் முதன் மந்திரி பனகல் ராஜாவின் முதன்மைச் செயலராகவும் பணியாற்றினார். திரு. பி.டி. ராஜனுடன் இவரும் ஆளுநரின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.

ஓய்வு பெற்ற பின் சுவிசேசபணிக்குத் தன்னை அர்ப்பணித்தார். சங்கத்தின் மூலம் தன் சமுதாய ஈடுபாட்டை வெளிப்படுதினார். தன் போதனை மற்றும் இறைபக்தியின் விளைவாக சாத்தூர் அருகிலுள்ள நல்லான் சட்டபட்டி கிராமத்தைச் சேர்ந்த கொலைகாரக் கும்பலை சட்டத்துக்குக் கட்டுப்பட்ட குடிமக்களாக் மாற்றினார்.

அவரது இரண்டாவது மகன் திரு. ரஞ்சித் சிங் பெரியநாயகம் (ஐ.ஏ.எஸ்) அதிகாரியாகப் பணியாற்றி கோயமுத்தூரின் மாவட்ட ஆட்சியாளராக ஓய்வு பெற்றார். மெய்க்கிறிஸ்தவ வளர்ப்பில் வளர்ந்தமையின் அவரது நேர்மை தமிழ்நாடு முழுவதும் தெரியவந்தது.

ஆபிரகாம் பெரியநாயகத்தின் இளைய ஆண் மக்களும் பெண்மக்களும் சுவிசேசப் பணியில் ஆர்வமுடையவராயினும் சகோதரர் பகத்சிங் கூட்டத்தில் சேர்ந்துவிட்டனர். ஆனால் என் தாயார் திருமதி. ஜெசாய் ஆபிரகாம் இங்கிலாந்து திருச்சபை ஐக்கியத்தில் நிலைத்து இருந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி.

என் தந்தை வழிப் பாட்டனார் திரு. எஸ்.வி. ஆபிரகாம் நான் பிறக்கும் முன்பே காலமாகிவிட்டதால் அவைரப்பற்றிய அறிவு மிகச்

சொற்பமே. அவர் சாயர்புரத்தைச் சேர்ந்தவர். தன் 11வது வயது வரை கந்தசாமி என்ற பெயர் கொண்டவராக இருந்தார். அங்கிருந்த மிஷன் பள்ளியின் மிகச் சிறந்த மாணவன். ஆங்கிலேய மிஷனெரி ஆசிரியர்கள் இவரது அறிவுத் திறனையும் நற்பண்பையும் கண்டு அவர் மீது அதிகப் பிரியம் வைத்திருந்தனர்.

டிசம்பர் மாதத் தேர்வுக்கு ஒரு மாதத்துக்கு முன் அவர் நோய்வாய்ப்பட்டு பள்ளி செல்ல இயலாத நிலையில் இருந்தார். சற்று குணமடைந்து வருகையில் தேர்வு நெருங்கிவிட்டது. இரு ஆங்கிலேய ஆசிரியர்கள் பரிசு பெறக் கூடிய மாணவன் கந்தசாமிக்கு உதவ எண்ணினர். எனவே நவம்பர் மாதத்தில் வடகிழக்கு பருவ மழையினால் மார்பளவு ஆழத்துக்கு ஓடிக் கொண்டிருந்த ஒரு சிற்றாறைக் கடக்க புத்தகங்களை உயர்த்திப் பிடித்து சிரமத்துடன் அவன் இல்லத்துக்கு வந்தனர். கந்தசாமியின் படுக்கையின் இருபக்கங்களிலும் இருக்கைகளில் அமர்ந்து அவன் சுகவீனத்தினிமித்தம் படிக்காமல் விட்ட பாடங்களைப் போதித்தனர். இரு ஆங்கிலேயரைத் தன் படுகையண்டை வைத்த 11 வயது மகனைக் கண்டு என் பூட்டன் பூட்டி வியந்து நின்றனர். கந்தசாமியும் அவர்களை ஏமாற்றவில்லை. தன் தள்ளாடிய கால்களோடு தேர்வு எழுதி எல்லாப் பரிசுகளையும் தட்டிச் சென்றார்.

பின்னர் அந்த ஆங்கிலேய மிஷனெரிகள் கந்தசாமியைக் கிறிஸ்தவ மதத்தைச் தழுவச் செய்தனர். என் தந்தை வழியில் 11 வயது கந்தசாமி முதல் ஆபிரகாம் ஆனார். அவர் குருப்பட்டம் பெற்று மறைதிரு. எஸ்.வி. ஆபிரகாம். என்று அழைக்கப்பட்டர். ராயப்பேட்டையிலுள்ள வேதசாஸ்திரக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பின்னர் கல்லூரியின் துணை முதல்வராகி புதிய ஏற்பாட்டைப் போதித்தார். புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்க மொழியைக் கற்று தமிழ் மொழிபெயர்ப்பில் காணப்பட்ட பல தவறுகளைக் கண்டு தவித்தார். என் தாயார் என்னிடம் வேதாகமத்தில் யோவான் ஸ்நானகனின் ஆகாரமாகிய வெட்டுக்கிளி என்பது மூலமொழிபடி ஒரு சாறு மிகுந்த கனி என்று அவர்கள் கூறியதாகச் சொல்வார்கள்.

காலம் சென்ற மறைதிரு. எஸ். வி. ஆபிரகாம் அவர்கள் சென்னை மைலாப்பூரிலுள்ள மௌபிரே சாலையில் இருந்த நல்லமேய்ப்பன் ஆலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள். தன் ஐம்பதாவது வயது முடிந்த சில ஆண்டுகளில் அவர் அகால மரணம் அடையுமட்டும் அந்த ஆலயத்தின் போதகராக இருந்தார்.

அவர் ஒரு உண்மைக் கிறிஸ்தவர் . திரித்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். தன் மருமகளிடம் (என் தாயார்) சாயர்புரம் அருகேயுள்ள சுப்பிரமணியபுரத்தில் வசிக்கும் தன் பழைய சமயத்தைச் சேர்ந்த உறவினர்கள், தன் கிறிஸ்தவ உறவினர்களையும் நண்பரையும் விட சிறந்த மனிதர்கள் என்று கூறுவார்களாம்.

அவர் பிரிட்ஜ் (ஒருவகை சீட்டாட்டம்) விளையாடுவதில் நிபுணர். அது ஒருவரது பகுத்தறிவைக் கூர்மையாக்கும் என்பது அவர் கருத்து. அவருக்குப்பின் அவர் சந்ததியில் பலர் அவரைப் போன்று பிரிட்ஜ் ஆட்டத்தில் சிறந்து விளங்கினர்.

என் தகப்பனார் திரு. ஹெச்.டி. ஆபிரகாம் (1886 - 1963) அவர்கள் பாளையங்கோட்டையில் ஆசிரியப் பணியைத் துவங்கினார். பின்னர் வழக்கறிஞராகக் கோவில்பட்டியில் தொழில் புரிந்தார். தன்னைப் பகுத்தறிவுள்ள ஒரு கிறிஸ்தவன் என்று கூறிக் கொள்வார். பொதுவாகக் கிறிஸ்தவ மக்களிடம் காணப்பட்ட நாள் நேரம் பார்த்தல் போன்ற மூட நம்பிக்கைகளை அறவே வெறுத்தார். கோவில்பட்டியில் அச்சமயம் மிகச்சில கிறிஸ்தவக் குடும்பங்களே இருந்தன. பல இந்துக்களும் முஸ்லிம் மக்களும் எங்கள் குடும்ப நண்பர்களாயினர். எனவே நானும் என் சகோதரிகளும் பரந்த மனப்பான்மையோடு வளர்ந்தோம்.

என் தந்தை திரு. ஹெச். டி. ஆபிரகாம் புனித பவுல் ஆலயத்தைச் சேர்ந்த உறுப்பினர். சபையில் ஒரு மூப்பனாகக் கருதப்பட்டார். பெரிய வெள்ளிக் கிழமைகளில் இயேசு சிலுவையில் மொழிந்த திருவசனங்களில் ஒன்றைக் குறித்துப் பிரசங்கம் செய்வது வழக்கம்.

ஒரு மெய்க்கிறிஸ்தவனாக அவர் சாதி வேறுபாடுகளை ஏற்க மறுத்தார். (1920 - 1930 வரை) இந்தக் காலத்தில் உள்ள வழக்கத்துக்கு

மாறாக தலித் மக்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். எனக்கு 11 அல்லது 12 வயது வரை சாதிவேறுபாடுகள் என்னவென்றே தெரியாது. என் சாதி (வர்ணம்) யைக் குறித்து யாராவது கேட்டால் இவர்களுக்குக் கண் தெரியவில்லையே என்று எண்ணிக் கொண்டு கறுப்பு என மட்டும் கூறுவேன். என் பெற்றோர் கிறிஸ்தவ சகோதரத்துவத்தைப் போதித்தும் செயல்படுத்தியும் வந்ததை இது உணர்த்துகிறது. ஒருவேளை நான் திருமணம் என்ற மதியீனமான காரியத்தைச் செய்ய நினைத்து ஒரு இந்து அல்லது முஸ்லிம் பெண்ணைத் தெரிந்தெடுத்திருந்தாலும் மறுப்புக் கூறியிருக்கமாட்டார்கள்.

கோவில்பட்டியில் பெயர் பெற்ற வழக்கறிஞராய் இருந்த என் தந்தை ஒருபோதும் ஒரு குற்றவாளிக்காகவோ அல்லது நெறிமுறை தவறியவனுக்காகவோ வக்காலத்துச் செய்ய உடன்பட்டதே இல்லை. குடும்பத்தில் பிரிவினை உண்டாக்கி வன்முறை ஏற்படக்கூடிய பல பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண அழைக்கப்பட்டார். கிறிஸ்தவ அடிப்படையின் வழிவந்த நம்பிக்கையால் இப்பணியில் பெரும் வெற்றி கண்டார். அவர் இறையாசி பெற்ற மகனாக பிணக்குகளைத் தீர்க்கும் நடுவராகச் சிறந்து விளங்கினார்.

என் தகப்பானரின் இளைய சகோதரன் திரு. ஜே.பி.எஸ் ஆபிரகாம் ரங்கூன் பாப்டிஸ்டி பள்ளியின் முதல்வராக இருந்தவர். இரண்டாம் உலகப்போரின் போது இந்தியா வந்து சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் ஒய்.எம்.சி.எ. சங்கத்தில் பணியில் சேர்ந்து அச்சங்கத்தின் அகில இந்தியக் காரியதரசிாக உயர்ந்தார். பின் லண்டனில் அமைந்த இந்திய ஒய்.எம்.சி.எ. கிளைக்கு அனுப்பப்பட்டார். இதிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் திரு. ஜே.பி.எஸ். ஆபிரகாம் வட இங்கிலாந்தில் உள்ள டர்ஹாம் நகரில் ஆங்கிலப் பேராசிரியராகச் சேர்ந்தார். அவர் மாணவர் பலர் அவரது சிறந்த பி.பி.சி. ஆங்கில உச்சரிப்பையும் போதனா சக்தியையும் கண்டு வியந்தனர். தங்கள் தாய்மொழியின் உச்சரிப்பையும் இலக்கியத்தின் பெருமையையும் நயம்பட எடுத்துரைத்த இந்திய ஆசிரியரின் திறமையை அந்த ஆங்கிலேய மாணவர்கள் கண்டு வியந்தனர்.

டர்ஹாமில் இருந்தபோது கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியற்று தடுமாறிக்கொண்டிருந்த வாலிப ஆண்களையும் பெண்களையும் தைரியமூட்டி வாழ்க்கையை நேர்முறையில் அமைத்துக் கொள்ளத் தூண்டினார்.

திரு. ஜே.எஸ்.எபி. ஆபிரகாமின் மூத்த மருமகனான திரு. விக்டர் கோயில் பிள்ளை **ஜர்னல்** என்ற பேர் பெற்ற கிறிஸ்தவ பத்திரிக்கையின் பதிப்பாசிரியராகப் பல்லாண்டுகள் பணி புரிந்தார். இளைய மருமகனான திரு. ஜே. எஸ். சாமுவேல் இந்திய விமானத்துறை அதிகாரியாக இருந்ததுமன்றி சென்னையில் எழும்பூரில் உள்ள ஸ்காட் கெர்க் ஆலயத்தின் மூப்பனாகவும் பணிபுரிந்தவர். கிறிஸ்தவ அன்பினால் ஏவப்பட்டு விதவைகள் அனாதைகள் ஆதரவற்ற சிறுவர் முதலானோருக்கு உதவி புரிந்தார். வலது கை செய்வதை இடது கை அறியாதிருந்தபோதிலும் சென்னை மாநகரத்தில் உள்ள யாவராலும் ஒதுக்கப்பட்ட மக்கள் பால் இந்த. நல்லசமரியான் கொண்டுள்ள அக்கரையை உணர்ந்து அவர் சேவையைப் பாராட்டினர்.

இனி என் ஆவிக்குரிய அறிவுக்குரிய வளர்ச்சியைப்பற்றி கூறுகிறேன். நான் வேதம் வாசித்து ஆலயம் சென்று பாடகர் குழுவில் பாடும் பையனாகத்தான் ஆரம்பத்தில் இருந்தேன். பேராயர் ஸ்டீபன் நீல் அவர்களால் திடப்படுத்தல் பெற்றேன். என் பெற்றோர் பரந்த நோக்குடையவர். வீட்டில் அடக்குமுறையை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை எனக்கு இல்லை.

கிறிஸ்தவத்தின் தனித்த பிரத்தியேகமாக சில உரிமைகள் என் மனதில் சந்தேகங்களை எழுப்பின கிறிஸ்துவின் மூலம் மட்டுமே மீட்பு, கிறிஸ்தவருக்கு மட்டுமே மோட்சம் என்பவை மிகக் குறுகிய நோக்குடையதாகப்பட்டது (அப்போதுநான் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு என்பதின் கருத்தை உணரவில்லை) என் நெருக்கமான நண்பர்கள் பலர் இந்துக்களாகவும் முகம்மதியராகவும் இருந்தமையால் அவர்களுக்கில்லாத மோட்சத்தில் எனக்கும் ஈடுபாடில்லை.

என் மாணவப் பருவத்தில் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட என் தந்தை பெர்னார்டுஷாவின் நாடகங்களை வாசிக்க

ஊக்குவித்தார்கள். கல்லூரி விடுமுறையின்போது **அன்டிராக்கிளிசும் சிங்கமும்** என்ற கதையின் முன்னுரையயைப் படித்தேன். அதில் கிறிஸ்தவத்தையும் இரட்சிப்பையும் மிகவும் தாக்கி எழுதப்பட்டிருந்தது. அதில் நாடக பாத்திரங்களின் ஒருவனான ஸ்பிந்தோ என்ற கிறிஸ்தவனின் வெறுக்கந்தகுந்த குணங்கள் கிறிஸ்தவ மதத்திற்கும் பொருந்தும் என்று எண்ணினேன். பெர்னார்ட்ஷாவின் கிறுகிறுக்க வைக்கும் வழக்கத்துக்கு மாறுபட்ட சிந்தனை என்னைக் கவர்ந்தமையால் நான் அவர் வழி நடக்கலானேன்.

என் வாழ்க்கையின் தீர்க்கமான நிலையான பாதிப்பை ஏற்படுத்தியவர் பெர்ட்ரன்ட் ரசல் என்ற சிந்தனையாளர். அவர் தந்துவ ஞானியும் கூட. அவர் எழுதிய ***சுதந்தர மனிதனின் வழிபாடு நான் ஏன் கிறிஸ்தவனாக இல்லை*** என்ற கட்டுரைகள் என்னைக் கவர்ந்தன எளிமையாகத் தெளிவாக சாதுரிய ஞானம் கலந்து கூறப்பட்ட விவாதங்கள் எனக்கு திருப்தி அளித்தன. மிகப்பெரிய விடுதலை உணர்வோடு இனி நான் ஒரு கிறிஸ்தவன் அல்ல என்ற முடிவுக்கு வந்தேன். அச்சமயம் நான் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் விலங்கியலில் முதுகலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பரிணாம உயிரியலில் எனக்கிருந்த ஈடுபாடு இந்த எண்ணத்தை வலுப்படுத்தியது. டார்வின் கொள்கையின் அடிப்படையில் இறைவன் என்ற உத்தேசம் தேவையற்றது என்ற முடிவுக்கு வந்தேன். சமுதாயப் பழக்கங்கள் நடத்தை இவற்றிற்கு இயற்கையைக் கடந்த ஒரு விளக்கம் தேவயற்றதாகப் பட்டது.

உயிரியல் கல்வியும் பெர்னார்ட்டுஷா, பெர்ட்ரண்டு ரசல் போன்ற சிந்தனையாளர்களின் தத்துவமும் என் வெளிநோக்கு சிந்தனையை மாற்ற உதவியது. என் வாழ்க்கைப் பயணத்துக்கு மதம் என்ற ஊன்று கோல் தேவையற்றது என உணர்ந்தேன்.

மதநம்பிக்கையைக் கைவிட்டது எனக்குள் ஒரு விடுதலை உணர்வை ஏற்படுத்தியது. அது எதிர்மறை விளைவுகளை மட்டுமின்றி அனுகூலமான விளைவுகளையும் ஏற்படுத்தியது. குறித்த நேரங்களில் பிரார்த்தனை செய்வது மதவழிபாடுகளைக் கைக்கொள்வது இவற்றின் மூலம் என் பாவங்களை நிவிர்த்தி

செய்யலாம் என்று எண்ணியதற்குமாறாக புதிய கடமை உணர்வு எனக்குள் வந்தது. பிறருக்கு எவ்வகையில் ஊறு விளைவித்தாலும் அதன் விளைவை மாற்றமுடியாது என்று உணர்ந்தேன். என்னுடைய எந்த செயலுக்கும் நான்தான் பொறுப்பு. ஆகையால் நான் வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுக்க வேண்டியிருந்தது. இந்த மாறுதல் எனக்கு முற்றிலும் புதிய மதிப்பீட்டைக் கொடுத்தது எனலாம். நான் ஒரு முழு மனிதனாக சார்லஸ் பிராட்லா என்பவர் "அவநம்பிக்கையில் பிறந்த ஆதாயம்" என்பதைப் பற்றிக் கூறினார். எனக்கு அதிகமான ஆதாயமே கிட்டியது.

நான் என் சமயத்தை விட்டுவிட்டதை என் சகோதரி மகன் வசந்தன் சபைக்கு இயற்றிய தொண்டால் ஈடு செய்யப்பட்டது எனலாம். மிகச்சிறந்த கல்வித் தொண்டாற்றியபின் திரு. வசந்தன் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற நாளேட்டின் மதுரைக்கிளை பதிப்பாசிரியர் ஆனார். அதன் பின் தாம்பரத்திலுள்ள சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். ஷேக்ஸ்பியர் நாடக அரங்கம் இவற்றில் புலமை உடையவர். சிறந்த ஓவியரும் கூட. ஞானதாசன் என்ற பேராயர் வேண்டுகோளுக்கிணங்க தென்னிந்திய திருச்சபையின் சின்னத்தை வடிவமைத்தார். தென்னிந்திய திருச்சபையின் வெள்ளிவிழா ஆண்டான 1972ம் ஆண்டு இது ஏற்கப்பட்டது. மதுரை ரயில்வே காலனியில் அமைந்த தெய்வீக பொறுமை என்ற ஆலயத்துக்கும் சின்னம் வடிவமைத்தார். சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் பல வெளியீடுகளின் மேல் அட்டைகளையும் உரைகளையும் அமைக்க அழைகப்பட்டார்.

கந்தசாமி - ஆபிரகாம் - பெரியநாயகம் குடும்பம் முடிவில் கணிக்கப்படும்போது என்னுடைய மத ஈடுபாடற்ற கொள்கையைத் தவிர்த்து அரும்பணி ஆற்றியுள்ளது என்றே கூற வேண்டும். ■

தமிழாக்கம் - திருமதி. சுசிலா மார்டின்

17

டாக்டர் சேத் பாலையா ஆசீர்வாதம் (கார் நிக்கோபார்)

இம்மானுவேல் பா. ஆசீர்வாதம்

திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் பெருவழிச் சாலையின் மருங்கில் அமையப் பெற்றது சொக்கன்பட்டி எனும் சிற்றூர். இன்று வெறிச்சோடிக் கிடக்கும் சொக்கன்பட்டி கிராமம், முன்னாளில் பாளையக்காரர் ஒருவரின் நிர்வாக மையமாகத் திகழ்ந்தது. பல ஆண்டுகளாக மதுரை நாயக்க மன்னர் பாரம்பரையினரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட குறுநில மன்னர்களாக விளங்கிய தென்பாண்டிச் சீமை பாளையக்காரர், தீபகற்ப இந்தியாவில் இஸ்லாமியரின் ஆதிக்கம் நிதர்சனமானதொரு உண்மையான பின்னர், ஆர்க்காட்டு நவாபுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாகத் தங்களை மாற்றிக்கொண்டார்கள். வரிப்பணத்தில் தனது பங்கினைப் பெற்றுக் கொண்டதோடு மனநிறைவு கண்ட ஆர்க்காட்டு அதிபர், பாளையக்காரரின் உள்ளாட்சி உரிமைகளில் தலையிடவில்லை. அரசியல் ரீதியாக மிகவும் நலிவுற்றிருந்த ஆற்காடு நவாபிடமிருந்து,தென்பாண்டிச் சீமையில் வசூலிக்கப்படும் வரிப்பணத்திலிருந்து நடுவண் அரசிற்குச் சேர வேண்டிய பங்கினைப் பெறும் உரிமத்தை ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வாணிப அமைப்பு பெற்ற பின்னரே பெரும் சிக்கல் உருவாயிற்று. பாளையக்காரரில் பலர் இந்தப் புதிய திட்டத்திற்குக் கட்டுப்பட்டனர். அதனால் தங்கள் உரிமைகளில் சிலவற்றையேனும் பாதுகாத்துக் கொண்டனர். தன்மானம் மிக்க பாளையக்காரர் சிலர் ஒரு வாணிப நிறுவனத்தினரின் மேலாண்மையை ஏற்க மறுத்தனர். தங்கள் உரிமைகளுக்காகப் போராடவும் துணிந்தனர். இதன் விளைவாக நடைபெற்ற போர், சமபலம் கொண்ட இரு அணியினரிடையே நிகழவில்லை. போர்க்கலன், படைத்தலைமை ஆகிய இரண்டிலுமே முன்னிலை கண்டிருந்த ஆங்கிலேயரின் படைகள், பாளையக்காரரின் அணிகளை நிலைகுலயச் செய்து பெரும் வெற்றி கொண்டன. தோல்வியுற்ற பாளையக்காரர் பலர், பொதுமக்கள் முன்னிலையில்,

---

திரு. இம்மானுவேல் ஆசீர்வாதம் ஓய்வு பெற்ற ஆங்கிலப் பேராசிரியர் தூய யோவான் கல்லூரி பாளையங்கோட்டை.

ஏனைய பாளையத்தலைவர் பலர், பார்வையாளர்களாக, வாய்மூடி மௌனிகளாய் நிற்க, பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டனர். போர் நெறி மரபுகளை முற்றுமாக உதாசீனம் செய்ததோடு ஆங்கிலேயர் திருப்தி அடையவில்லை. தங்களை எதிர்க்கத் துணிந்த பாளையக்காரரின் குடும்பத்தினர் அனைவரையும் கொன்று குவித்தனர். பாளையங்களின் படைகளைக் கலைத்தனர். முன்னாள் படைவீரர் அனைவரும் சமூக விரோதிகள், குற்ற பரம்பரையினர் என்று அறிவித்தனர். அவர்களில் பலரை வேட்டையாடிக் கொன்றனர்.

ஆங்கிலேயரின் பழிவாங்கும் மிருக வெறியினால் பெரும் பாதிப்புக்குள்ளானர்களில் சொக்கன்பட்டி பாளையக்காரரும் அவரது குடும்பத்தினரும் அடங்குவர். நெற்கட்டான் செவலின் தலைவருடன் சொக்கன்பட்டியார் கொண்டிருந்த நெருங்கிய உறவும் ஆங்கிலேயரின் இரத்தப் பசியை மேலும் தூண்டியிருக்க வேண்டும். எனவே சொக்கன்பட்டியின் பாயைக்காரரைத் தூக்கிலிட்டுக் கொன்றதுடன், அவருடைய குடும்பத்தினரையும், சகாக்களையும் நண்பர்களையும்,கோட்டையைச் சுற்றிலும் அமைந்திருந்த குடியிருப்புக்களில் வாழ்ந்துவந்த படைவீரர் பலரையும் ஆங்கிலேயர் கொன்று குவித்தனர். இதன் விளைவாக ஏற்பட்ட இனவழிச் சிதறல்,சொக்கன்பட்டியை ஆவிகள் மட்டுமே வாழும் வெற்றிடமாக மாற்றியது. மிருகங்களைப் போல் வேட்டையாடப்பட்டு, அடிப்படை உரிமைகள் அனைத்தையும் இழந்து, குற்றப்பரம்பரையினர் என்றும் சமூகவிரோதிகள் என்றும் முத்திரை பதிக்கப்பெற்ற முன்னாள் படைவீரர்கள் வன்மம் கொண்ட ஒரு நிர்வாகத்தினரால் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராத மறவர் இனத்தவர் சிலர்-சொக்கன்பட்டி,நெற்கட்டான் செவல் பாளையங்களைச் சேர்ந்தவர். பின்னடைவுகளுக்கிடையிலும் தமது வாழ்வைச் செம்மை செய்ய முனைந்தனர். இருநூறாண்டுகளுக்கு முன்பே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய இவர்களுடைய மதமாற்றத்திற்கு உல்லாந்தர் (Holland) நாட்டைச் சார்ந்த, தனியராகவே செயல்பட்ட கிறிஸ்தவ ஊழியர்களே காரணராய் இருந்திருக்க வேண்டும். இந்த

மதமாற்றத்தின் பயனாக ஆங்கில நிர்வாகிகளின் பழிவாங்கும் உக்கிரம் தணிந்தது. தன் தலைவனுக்காகப் போர்முனையில் வீரச் செயல் புரிந்த மானமறவர் பலர், அரசியல் மாற்றங்களின் விளைவாக சமூக விரோதிகளாக மாறிய, (மாற்றப்பட்ட) அவலகத்திினின்றும் தப்பிப்பிழைத்தனர். இது தவிர, கிறிஸ்தவ மத ஊழியர்களால் தொடங்கப் பெற்ற கல்விநிலையங்களில் இந்த மதம் மாறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவரும் சிறுமியரும் பெரும் அளவில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி முறை நல்கும் பயன்களை முழுமையாகப் பெற்றனர். கிறிஸ்தவ மதத்தின் மீது ஆழமான பற்றும், மிகத் தீவிரமான ஈடுபாடும் கொண்டிருந்த இந்தக் குடும்பங்களின் அடுத்த தலைமுறையினர் பலர் பாதிரிகளாகவும், மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும் பல கிறிஸ்தவ நிறுவனங்களில் (19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே) மிகச் சிறப்பாகப் பணிபுரிந்தனர்.

எனது பாட்டனாரும், எனது தந்தை டாக்டர் ஆசிர்வாதம் அவர்களின் தந்தையாருமான மறைதிரு ஆசீர்வாதம் போதகரவர்கள் சொக்கன்பட்டியைச் சேர்ந்தவர். சொக்கன்பட்டியின் பாளையக்காரருக்கு இவர் தூரத்து உறவினராக இருந்திருக்க வேண்டும். அவரது குருத்துவப் பணிநாட்களில் பலர் அவரைப் பாளையக்காரப் பாதிரியார் என்றே அழைத்தனர். மிகச் சிறப்பாகத் தொகுக்கப் பெற்ற *யெகோவா யீரே* என்ற புத்தகம் ஒன்றில் (கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு), மறைதிரு. ஆசீர்வாதம் ஐயரவர்களின் இளைய புதல்வர் திரு. இக்னேஷியஸ் ஆசிர்வாதம் அவர்கள், தமது தந்தையாரின் அறவாழ்வில் அவ்வப்போது நிகழ்ந்த சம்பவங்களை அழகாக வரிசைப் படுத்தியுள்ளார். மறைதிரு ஆசீர்வாதம் ஐயரவர்களின் இறைப் பணி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடையங்குடி, தூத்துக்குடி, திருச்சி, கரூர், பெல்லாரி முதலான தலங்களில் நடைபெற்றது. பேராயர் கால்டுவெல் அவர்களின் துணைவராகவும் இவர் பணிபுரிந்துள்ளார். ஒப்பற்ற கடமையுணர்வும், அப்பழுக்கற்ற நேர்மையும் உறுதிமிக்க இறை ஈடுபாடும் இவரது குணநலன்கள். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், உசிலம்பட்டியில் இறைவனடி சேர்ந்த ஆசீர்வாதம் ஐயரவர்கள், மனிதர் தமது நற் செயல்களைக் காண்பதன் மூலம் விண்ணகத் தந்தையின் புகழை மேம்படச் செய்யுமாறு செயல்பட்டார்.

எனது தந்தையார், மறைதிரு. ஆசீர்வாதம் ஆயரவர்களின் மூன்றாவது புதல்வராவார். அவருக்கு சேத் என்ற பெயரை அவரது தந்தை தேர்வு செய்தது மிகப் பொருத்தமானதே. வெப்பேரி புனிதர் பவுல் உயர்நிலைப் பள்ளியில் சேத் பாலையா கல்வி பயின்றார். தமது விடாமுயற்சியாலும், நேர்மைத்திறனாலும் ஆசிரியரின் நன்மதிப்பைப் பெறறார். குறிப்பாக பள்ளியின் நிர்வாகி மறைதிரு. பாட்ஸ் ஐயரவர்களின் அபிமான மாணவனாகத் திகழ்ந்தார். இறைவனுக்கும், அவனுடைய பிள்ளைகளான மனித இனத்தவருக்கும் பிற்காலத்தில் அந்த இளைஞன் தொண்டு புரியும் கர்மவீரனாக உருவெடுப்பான் என்று கருணை உள்ளம் கொண்ட அந்தப் பாதிரியார் கருதினார். தன்னலமற்றவராக, பழகுதற்கினியவராக பிறரை நாடிச்சென்று நட்புரிமை பாராட்டுபவராக அந்த இளைஞர் விளங்கினார். தம்முடன் கல்விபயின்ற மாணவர் அனைவருடனும் நண்பனாக,தோழனாகப் பழகினார். இயல்பாகவே நகைச்சுவை விற்பன்னராகத் திகழ்ந்த இந்த இளைஞர், ஒரு முறை இரவு உணவு அருந்து முன் இறைவனுக்கு நன்றி கூறும் வகையில் பிரார்த்தனை செய்த பொழுது, நாள் தவறாமல் புளித்தண்ணீருடன, புளித்துவையலும் தந்து , விடுதி மாணவர்களின் உடல் நலம் பேணும் கடவுளை வணங்குவதாக ஜெபம் செய்தார். இதன் விளைவாக மறைதிரு பாட்ஸ் அவர்கள் வழங்கிய தண்டனையை ஏற்றார். தமது அன்பிற்குரிய மாணவனின் நகை உணர்வைப் பாராட்டிய பாட்ஸ் ஐயரவர்கள் அவ்வுணர்வை இடமறிந்து வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

சேத் பாலையாவின் பள்ளிப்படிப்பு முடிந்த பின்னர் அவருடைய வருங்காலத் திட்டங்கள் குறித்து பாட்ஸ் ஐயர் அவரிடம் கேட்ட பொழுது,அனைத்துமே இறைவனின் சித்தப்படி தான் நடக்கும் என்று விடை அளித்தார். மறைதிரு பாட்ஸ் அவர்கள் சேத் பாலையாவை பாரிசால் (தற்போதைய பங்களாதேஷில் உள்ளது) என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார். ஆக்ஸ்போர்டு இறைப்பணி அமைப்பினர் நடத்தி வந்த மறையியல் மையமும்,துறவியல் அமைப்பும் இங்கே இருந்தன. ஏறத்தாழ பதிநான்கு ஆண்டுகள் துறவியர் இல்லத்தில் தங்கினார். சேத் பாலையா, உளவியல், மக்கட்பணி, முதியோரையும், நோயுற்றோரையும் பேணும் பாங்கு

போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றார். பின்னாளில் கிழக்கு பாக்கிஸ்தானின் பேராயராகப் பணி புரிந்த அருட்தந்தை ஷோர் என்ற மேன்மகனும் சேத் பாலையாவின் ஆசிரியராக அங்கு இருந்தனர். அந்த நிறுவனத்தின் தலைவர், சேத் பாலையாவை கல்கத்தா அரசினர் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பினார். மூன்று ஆண்டுகளில் தமது படிப்பை முடித்து, 31 ஆம் வயதில் மருத்துவப் பட்டம் பெற்றார் இந்த இளைஞன்.

சேத் பாலையாவின் தாயாரும் உறவினர் பலரும், வாழ்நாள் முழுவதும் தனியனாகவே மக்கட் பணியில் ஈடுபட விரும்பிய அந்த இளைஞரின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்ள மறுத்தனர். மாறாக தென்புலம் வந்து, மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு,பெரும் பொருள் சேர்ப்பதுடன்,மற்றவரைப் போன்று திருமணம் புரிந்து, தாம்பத்ய வாழ்வில் அவர் நிலை கொள்ள வேண்டும் என்றும் விரும்பினர். அழியாத பெருஞ்சசெல்வமெல்லாம், தொடுவானத்திற்கப்பால் விண்ணகத்தில் குவிக்கப் பெற்றிருப்பதை அறிந்திருந்த சேத் பாலையா, உயர் நோக்குடைய உத்தமர் உள்ளத்தில், இவ்வுலகம் தரக்கூடிய செல்வத்தைப் பற்றிய எண்ணத்திற்கே இடமில்லை என்பதை உணர்ந்திருந்தார். தம்மை ஒரு மருத்துவ இறைப்பணியாளராக ஏற்றுக்கொள்ளும் படி, இரங்கூன் பேராயரக்குக் கடிதம் எழுதினார். இந்த இளைஞரின் கோரிக்கையின் மீது முடிவெடுக்க பேராயருக்கு சற்று அவகாசம் தேவைப்பட்டது. இதற்கிடையில் சேத் பாலையா உடல் நலக்குறைவுற்றிருந்த தனது தாயாரையும்,பிற உறவினர்களையும் பார்ப்பதற்காக சென்னைக்கும் அதனை அடுத்த மாவட்டங்களுக்கும் வரநேர்ந்தது. மற்றவரைப் போன்று ஒரு இயல்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு அவரது உறவினர் அவரைக் கேட்டுக் கொண்டனர். ஆயினும் இந்த பாரிசால் இளைஞர், இந்த வேண்டுகோளைப் பணிவுடன் மறுத்தார்.

கண்டமநாயக்கன் சமீனில், மருத்துவ அதிகாரியாகப் பொறுப்பேற்ற சேத் பாலையா,சமீன்தாருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் அரண்மனை வைத்தியராகப் பணியாற்றியதோடு,ஊர் மக்களின் உடல் நலத்தைப் பேணிப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்தினார். மாதம் நூறு

வெண்பொற்காசுகள் (இன்றைய மதிப்பீட்டின்படி ரூபாய் 25,000/) அவருக்கு ஊதியமாக வழங்கப்பட்டது. இது ஒரு இடைக்கால ஏற்பாடுதான் என்றும் தமது நிலையான பணித்தலத்தை இரங்கூன் பேராயர்தாம் உறுதி செய்ய வேண்டும் என்றும் டாக்டர் சேத் பாலையா உணர்ந்திருந்தார். ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கழிந்த பின்னர்,இரங்கூன் பேராயர் சேத்பாலையாவை தமது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். கண்டமநாயக்கனூர் சமீன்தாரிடமிருந்து, அவரது நல்லாசியுடன் விடுபட சற்றுத் தாமதமாயிற்று.

வணக்கத்திற்குரிய கிறிஸ்தவப் பெரியார் தந்தை பால் கடம்பவனமும், அவரது புதல்வர் தம்பி கடம்பவனமும் இரங்கூன் பேராயரின் இல்லத்தில் விருந்தினராக இருந்தனர். டாக்டர் சேத் பாலையாவை கார் நிக்கோபார் தீவில் இயங்கி வந்த மிகச் சிறிய மருத்துவ நிலையத்ததைத் தன் பொறுப்பில் ஏற்று அதனை ஒரு நோயாளிகள் தங்கி நலம் பெறும் ஒரு மருத்துவ மனையாக மாற்றும் பொறுப்புடன் இரங்கூன் பேராயர் அனுப்பி வைத்த நிகழ்ச்சியை திரு. தம்பி கடம்பவனம் என்னிடம் விவரித்தார். அந்தமான் தீவுகளில் பூர்வீகக் குடிமக்கள் நிக்கோபார் இனத்தவருடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஏனெனில் வெப்ப மண்டலத்தில் மட்டுமே மக்களைப் பாதிக்கும் பல நோய்களைப் பரப்பும் இயல்பினர் அவர்கள் என்றும்,செல்லுலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுடனும், அங்கு காவல் புரியும அயர்லாந்தைச் சேர்ந்த வீரருடனும் எச்சரிச்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பேராயர் அறிவுரை வழங்கினார். பணிவுடன் இதனைச் செவிமடுத்த டாக்டர் ஆசீர்வாதம், ப்ளேர் துறையில் கரையிறங்கிய மறுகணமே பேராயரின் நல்லுரையை மறந்தார், மாறாக அதற்கு நேர்மாறாகச் செயல்படலானார்.

பல நூறு தீவுகளின் கூட்டமே அந்தமான் தீவுகள், வனவளம் மிகுந்த இந்தத் தீவுகளில் மிகக் குறைந்த அளவு மக்களே வாழ்ந்து வந்தனர். பல தீவுகளில் மக்கட் குடியிருப்புக்களே இல்லை. இந்தத் தீவுகளில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருபவர் நிக்கோபாரிகள் என்று அழைக்கப் பெறும் பூர்வீக இனத்தவர். நியூசிலாந்தின் மாவோரிகள், ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிமக்கள் போன்றோரைப் போன்ற

உருவமும், முகச் சாயலும் பெற்றவர்கள் இவர்கள், அடர்ந்து வளர்ந்திருந்த இருண்ட காடுகளில் வசிப்பதையே விரும்புபவர்கள். அன்னியருடன் உறவாடுவதையும், நகர்ப்புற நாகரீகத்தின் தாக்கத்தையும் சந்தேகக் கண்களுடன் பார்ப்பவர்கள். ஆங்கில ஏகாதிபத்திய வல்லரசு இங்கு மிகப் பெரிய சிறை ஒன்றைக் கட்டியது. ஆயுள் தண்டனைக் கைதிகள், மற்றும் அரசியல் கைதிகள் ஆகியோர் இச்சிறையில் அடைக்கப்பட்டார்கள். நிர்வாக அரசாங்க அலுவலரும், அந்தமான் தீவுகளின் நிர்வாகியும் வசித்து வந்தனர். சிறைக்காவலரும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் சீருடை அணிந்த அரசு அலுவலரும் வல்லரசின் மேலாண்மை புலப்படும் பிரதி நிதிகளாகச் செயல்பட்டனர்.

டாக்டர் சேத் பாலையா ஆசிர்வாதம் ப்ளேர் துறை நகரில் கரையிறங்கிய பொழுது, அவரை முதலில் வரவேற்றவர் அங்கு தலைமை தபால் அதிகாரியாகப் பணிபுரிந்த (முன்னாள் இராணுவ அதிகாரி) திரு. டேவிஸ் அவர்கள். (இவர் ஓய்வு பெற்ற பின்னர் திருச்சியில் நீண்ட நாள் வாழ்ந்தவர்). இவர்களிடையே உருவான நட்பு என் தந்தையாரின் வாழ்நாள் முழுவதும் நீடித்தது. அந்தமான் தீவுகளின் நிர்வாகி திருமிகு. ஹார்ட் என்ற ஆங்கிலேய அதிகாரி இறைப்பணி மருத்துவர் டாக்டர் ஆசீர்வாதத்தை துறைமுக மருத்துவ அதிகாரியாகவும், செலுலர் சிறையின் மருத்துவ ஆலோசகராகவும் நியமித்து ஒவ்வொரு பொறுப்பிற்கும் மாத ஊதியமாக நூறு வெண்பொற்காசுளையும் தருவதாகக் கூறினார்.

மிகச் சிறிய அளவில் இயங்கி வந்த மருத்துவ நிலையத்தை ஒரு பயன் தரும் மருத்துவ மனையாக விரிவாக்குவதை டாக்டர் ஆசீர்வாதம் தமது தலையாய கடமையாகக் கருதினார். பல சிரமங்களிடையே விடாமுயற்சியுடன் இந்தப் பணியைச் செய்து முடித்தார். அந்நாளில் கல்கத்தாவிலிருந்து அந்தமான் தீவுகளுக்கு வரும் கப்பல்கள் இரங்கூன் வழியாகவே வந்தடைந்தன. மருத்துவ மனைக்குத் தேவையான மருத்துவப் பொருட்கள் இவ்வழியேதான் தருவிக்கப்பட்டன. மருத்துவக் கருவிகளும், படுக்கை விரிப்புகளும் எஸ்.எஸ். மகாராஜா என்ற கப்பல் மூலம் சென்னையிலிருந்து பெறப்பட்டன. மருத்துவ மனையையும் அதன் சுற்றுப்புறங்களையும்

சுத்தமாகப் பராமரிப்பதில் பெருங்கவனம் செலுத்திய டாக்டர் ஆசீர்வாதம், நிக்கோபாரிப் பெண்கள் சிலருக்கு மருத்துவப் பயிற்சி அளித்து, மகப்பேறு உதவியாளர்களாக அவர்களை நியமித்தார். பழங்குடியினர். வாழ்ந்த காடுகளுக்குள் தமது அலுவலர்களை அனுப்பி,எங்கெல்லாம் நோயுற்றவர் இருந்தனரோ, அங்கெல்லாம் தாமே நேரில் சென்று அவர்கட்கு மருத்துவ உதவி செய்தார். அந்தமான் தீவுகளின் பழங்குடியினருடன் நல்லுறவின்பாற்பட்ட தொடர்பை உருவாக்குவதில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. அன்னியரை, குறிப்பாக மருத்துவர்களைப் பயம் கலந்த ஐயத்தோடு பார்த்த நிக்கோபார் மக்களுடன் நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு நட்புறவை ஏற்படுத்துவதற்கென, அதே இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ உபதேசியார், திரு. ஜான் ரிச்சர்ட்சனின் உதவியை டாக்டர் ஆசீர்வாதம் நாடிப் பெற்றார். (பின்னாளில் பேராயர் ரிச்சர்ட்சன் பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தார்)

சென்னை ராஜதானி என்று அன்னாளில் அழைக்கப்பட்ட நிர்வாகப் பிரிவின் தென்மாவட்டங்களைச் சேர்ந்த பல ஆயுட்கைதிகளுடன்,சிறை மருத்தவர் என்ற வகையில் டாக்டர் ஆசீர்வாதம் பழக நேர்ந்தது. கருணை உள்ளம் படைத்த இந்த இளம் மருத்துவரிடம் தங்கள் மன வேதனைகளை எல்லாம் கொட்டித் தீர்ப்பதில் இவர்கள் ஓரளவு நிம்மதி கண்டனர். எழுத்தறிவற்ற இந்தக் கைதிகள் தென்னிந்தியாவில் இருந்த உறவினரோடு தொடர்பு கொள்ள டாக்டர் ஆசீர்வாதம் துணை புரிந்தார். அவர்கள் சார்பில் தாமே கடிதங்களை எழுதினார். இந்தியாவில் வாழ்ந்த கடிதம் பெறுநர் பலரும் எழுத்தறிவற்றவர்களாக இருந்ததால், கடிதங்களைப் படித்துக் காட்டவும்,அவர்கள் சார்பில் கைதிகளுக்குக் கடிதங்கள் எழுதவும் ஆங்காங்கே பணிபுரிந்த பள்ளி ஆசிரியர்,கிறிஸ்தவ சபை ஊழியர் போன்றோரின் உதவியை டாக்டர் ஆசீர்வாதம் பெற்றார். இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து வந்த கடிதங்கள் அனைத்துமே அந்தமான் தீவுகளின் நல்ல சமாரிய மருத்துவருக்கே பெயரிட்டு அனுப்பப் பெற்றன. இவ்வண்ணம், டாக்டர் ஆசீர்வாதம், பல ஆண்டுகளாக அநாதரவாக சிறைக் கதவுகளின் மறைவில் நொந்து கிடந்த பல உள்ளங்களில் நம்பிக்கை ஒளி வீசச் செய்தார்.

செலுலர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆயுட் கைதிகள், காலை ஆறு மணிமுதல் மாலை ஆறு மணி வரை, தீவின் பல பகுதிகட்கும் சென்று பல அலுவல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் சிலர் சமையல்காரராகவும், இதர வீட்டு வேலை செய்பவராகவும் அரசுப் பணியாளரின் இல்லங்களில் பணிபுரிந்தனர். அந்தமான் தீவுகளின் நிர்வாகியின் மாளிகையிலும், சிறைக்காவலர் வீட்டிலும், தலைமைத்தபால் அதிகாரியின் வீட்டிலும், டாக்டர் ஆசிர்வாதம் வசித்த குடியிருப்பிலும் வேலை செய்யுமாறு நியமிக்கப்பட்ட கைதிகளுக்கும் ஒரு தனி அந்தஸ்து இருந்தது. கைதிகளில் சிலர் கடலில் சென்று மீன் பிடிப்பார்கள். மூன்று கிலோவுக்கும் அதிகமான எடையுள்ள சீலா (வஞ்சிரம்) மீனை அரைரூபாய்க்கு விற்பார்கள். அந்தமான் தீவுகளின் மேட்டுக்குடியினர்தாம் இவர்களுடைய வாடிக்கைக் காரர்கள். இவ்வாறு ஈட்டிய பணம் கைதியின் கணக்கில் வைக்கப்படும். தான் வாங்கிய மீனுக்காக டாக்டர் ஆசீர்வாதம் இரு மடங்கு பணம் கொடுப்பார். விடுதலை அடைந்து வீடு திரும்புகையில் சிறிது கைப்பொருளுடன் போக வேண்டும் என்பதற்காக, சீறி எழும் அலைகளிடையே, உயிரைப் பணையம் வைத்து மீன் பிடிக்கும் ஒருவனுக்குச் சேரவேண்டிய உபரித் தொகை என்றே டாக்டர் ஆசீர்வாதம் இதைக் கருதினார்.

அந்தமான் தீவுகளின் ஆணையாளர் திரு. ஹார்ட் அவர்களும், டாக்டர் ஆசீர்வாதமும் நெருங்கிய நண்பர்கள். எனினும் அவ்வப்போது இவர்களிடையில் கருத்து வேறுபாடுகள் உருவாயின. சிறை விதிகளுக்குப் புறம்பாக ஒரு மருத்துவச் சான்றிதழை சிறை மருத்துவர் வழங்குமாறு திரு. ஹார்ட் அவ்வப்போது கேட்டுக் கொள்வார். ஒவ்வொரு முறையும் டாக்டர் ஆசீர்வாதம் மறுப்பார். சிறைக்கைதிகளில் சிலரை வரையறுக்கப்பட்ட "பரோலி" ல் விடுவிப்பதற்காகத்தான் இந்தச் சான்றிதழை திரு. ஹார்ட் கேட்பார். உண்மைக்குப் புறம்பான சான்றிதழை வழங்குவது தாம் மேற்கொண்ட ஹிப்போக்ராட்டஸ் உறுதி மொழிக்குப் புறம்பானதெனக்கூறி, டாக்டர் ஆசீர்வாதம் மறுப்பார்.

டாக்டர் ஆசீர்வாதம் தமக்கென தாமே தெரிந்து கொண்ட மக்கட் பணியைத் தொடர்வதில் அவருடைய உறவினர்க்குச் சம்மதம்

இல்லை. மற்றவரைப் போல் அவரும் மணவாழ்வில் ஈடுபட்டு, மக்கட் செல்வங்களுடன் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள். பல நாட்கள் இது குறித்துத் தீவிரமாக சிந்தித்த பின்னர் டாக்டர் ஆசீர்வாதம் ஒப்புக்கொண்டார். தூத்துக்குடி வக்கீல் தேவர் என்று அருமை பெருமையுடன் அழைக்கப்பட்ட திரு. ஸ்டீபன் ஆசீர்வாதம் அவர்களின் இளைய மகள் அன்னாள் பாக்கியத்தாய் என்ற பெண்ணைத் திருமணம் செய்ய இசைவு தெரிவித்தார். அன்னாள் பாக்கியத்தாயின் தந்தையார்,18ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய நெற்கட்டான் செவல் செண்பக் தேவரின் பேரன் ஆவார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் ஈற்றாண்டுகளிலும்,20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் தூத்துக்குடி வழக்கறிஞர் மன்றத்தின் முடிசூடா மன்னராகத்திகழ்ந்தவர் இவர். சட்ட நுணுக்கங்களில் வல்லவரான இவர் தமது நாவன்மையால் நீதி பதிகளைக் கவர்ந்தவர். விக்டோரியா மகாராணியாரின் காலத்து ஆங்கில இலக்கிய மரபில் ஊறிய இவருடைய சொல்லழகு செறிந்த வாதங்களைக் கேட்பதற்கென்றே பல (ஆங்கிலேய) நீதிபதிகள் தீர்ப்பை ஓரிரு நாட்கள் தாமதப் படுத்தியதாகக் கூறுவார்கள். 1914 ஆம் ஆண்டு தமது எண்பத்து நான்காம் வயதில் இறைவனடி சேர்ந்த வக்கீல் ஸ்டீபன் ஆசீர்வாதம் (ஒருவர் பின் ஒருவராக - ஒருவர் மறைந்தபபின் மற்றொருவர் என) மூவரை மணந்தவர். பன்னிரண்டுக்கும் அதிகமாக மக்கட் செல்வங்களைப் பெற்றவர். 1900 ஆண்டில் பிறந்த பாக்கியத்தாய் இவருடைய மூன்றாவது மனைவியின் இளைய புதல்வி. தமது எழுபதாம் ஆண்டிலும் மிகப்பலரால் வழக்குரைஞராக விரும்பப் பெற்ற வக்கீல் தேவரின் தூத்துக்குடி இல்லத்தில், செல்வச் சூழலில் வாழ்வதைவிட சாராள் தக்கர் உயர்நிலைப் பள்ளியில், விடுதி மாணவியாக தங்கிப் படிப்பதையே பாக்கியத்தாய் விரும்பினாள். மிகவும் அக்கறையுடன் தன் பாடங்களைப் படித்த பாக்கியத்தாய் செல்வி சேம்பர்ஸ் என்ற ஆங்கில இறைப்பணியாளரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார். தந்தையாரின் மரணத்தால் சிறுமி பாக்கியத்தாயின் கல்வி தடைப்படவில்லை. செல்வி சேம்பர்ஸ் கடனாகக் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்ட பாக்கியத்தாய் பள்ளி இறுதித் தேர்வில்

வெற்றி பெற்று, பின்னர் கல்லூரியில் சேர்ந்து எஃப். ஏ. தேர்விலும் சிறப்பாகத் தேறி, அதன்பின்னர் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் பயின்று 1920-ஆம் ஆண்டு தமது இருபதாவது வயதில் நாசரேத் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பணியில் அமர்ந்தார். ஆறு ஆண்டுகள் ஆசிரியையாகப் பணிபுரிந்தபின் தமது 26-ஆம் வயதில் தின்னனூர் (திருநின்னறவூர்) எஸ்.பி.ஜி தேவாலயத்தில் டாக்டர் சேத் பாலையா ஆசீர்வாதத்தை மணந்தார்.

வயதில் இளையவராயினும், தமது கணவருக்கு முந்தின தலைமுறையைச் சேர்ந்தவர் பாக்கியத்தாய். அவரது தந்தையாரின் தமக்கைக்கும், மெஞ்ஞானபுரம் அருள்திரு தெய்வநாயகம் போதகருக்கும் பிறந்தவர்தான்,பெல்லாரிப் போதகர் ஆசீர்வாதம் ஐயரவர்களின் மனைவியும், டாக்டர் ஆசீர்வாதம் அவர்களை ஈன்றெடுத்த தாயுமான மேரி அம்மாள்.

அந்தமான் தீவுகளின் புதிய சூழ்நிலையுடன் இசைவு கொள்வதற்கு, டாக்டரின் இளம் மனைவி சற்று சிரமப்பட்டார். செங்குத்தாக நிறுத்தப்பட்ட மர உத்திரங்கள் மேல், மண்ணிலிருந்து பத்தடி உயரத்தில் உருவாக்கப்பட்ட வீடு, வீட்டில் வளரும் கோழிகள் காடுகளில் கூடுகட்டி, முட்டைகளிட்டு, அடைகாத்து, குஞ்சுகளுடன் திரும்பும் விந்தை,கடற்பெருக்கின் பொழுது ஊருக்குள் இழுத்து வரப்பெற்ற நண்டுகளை, நீர் வடிந்த பின்னர் கூரிய மூங்கில் கழிகளால் நிக்கோபார் வாசிகள் குத்திக் கொல்லும் லயம்,நிக்கோபாரியர் வாழும் நாட்டில் வழக்கில் இருந்த ஹிந்துஸ்தானி,பார்வைக்குப் பயங்கரமாய் தோன்றிய நிக்கோபாரியரின் பயந்த சுபாவம் - இவற்றையெல்லாம் டாக்டர் ஆசீர்வாதத்தின் இளம் மனைவி கண்டு கண்டு வியந்தார், எல்லாவற்றையும் விட, தனது கணவர் அந்தமான் தீவினருடனும், இரண்டறக் கலந்ததுதான் அவரை மெய்சிலிர்க்கச் செய்தது.

பாக்கியத்தாய் தம் முதல் மகவை ஈன்ற அதே நாளில்,ஒரு நிக்கோபாரி பெண்மணியும் தன் மகளைப் பெற்றாள். மேரி என்று பெயரிடப்பட்ட இந்த மதலை அழகியதோர் மங்கையாக வளர்ந்து பின்னாளில் பேராயர் ரிச்சர்ட்சன் அவர்களின் வாழ்க்கைத் துணைவி ஆனாள். எனது தாயாரின் உடல் நலம் பாதிக்கப்பட்டதால், மேரியின் தாயே எனக்கும் மூன்று நாட்கள் பாலூட்டினார். 1955-ஆம் வருடம்

சென்னையில் எங்களை வந்து பார்த்த பேராயர் பிட்சர்ட்சன் தமது மனைவி டோரிஸை அறிமுகம் செய்யும் வகையில் உன் சகோதரி இவள் என்றார். உண்மைதான் ஒரு மடியில் என்னையும், மறுமடியில் டோரிஸையும் ஏந்திய வண்ணம் ஒரே சமயத்தில் அமுதூட்டிய புண்ணியவதியன்றோ என் சகோதரியின் தாயார்.

அந்தமான் தீவுகளின் தனிப்பெரும் சாபக்கேடாகக் கருதப்பட்டது. கரு நீர் காய்ச்சல் என்று அழைக்கப் பெற்ற ஒரு வித மலேரியா நோயாகும். இதனால் பாதிக்கப் பட்டவர்களில் பலர் உடல் தேறாமல் மரிப்பது வாடிக்கையாக இருந்தது. இந்த நோயின் கடும் விளைவுகளை மட்டுப் படுத்துவதில் டாக்டர் ஆசீர்வாதம் முழுமுயற்சியுடன் ஈடுபட்டார். நோயின் தாக்கத்தை காலந்தாழ்த்தாமல் கண்டு பிடித்து உடனடியாக மருத்துவம் செய்வதன் மூலம் பல உயிர்களைக் காப்பாற்றினார். பருவந்தோறும் தலைதூக்கும் இந்த நோயினின்று மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, அதற்கான மருந்துனை பலமாதங்களுக்கு முன்னரே சேமித்து வைத்தார். நிக்கோபாரி பழங்குடியினர் வாழும் காட்டுப் பகுதிகளுக்குச் சென்று, குடிசைகளுக்கு அருகில் நீர் தேங்காமல் இருக்க கால்களை அமைக்கும் படி அறிவுரை கூறினார். ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் அயர்வின்றிப் போராடியபின் இந்த ஆட்கொல்லி நோயைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக டாக்டர் ஆசீர்வாதம் நம்பினார்.

1929-ஆம் ஆண்டு (நான் பிறந்து இரண்டாண்டுகள் கழிந்த பின்னர்) அந்தமான் தீவுகளை மீண்டும் ஒரு முறை இந்த நோய் தாக்கிற்று. காடுகளுக்குள் நீண்ட தூரம் சென்று நோயுற்றோரையும், முதியோரையும், நலிந்தோரையும் இந்த நோயின் கொடுமையினின்று டாக்டர் ஆசீர்வாதம் காப்பாற்றினார். பலநூறு நிக்கோபாரியர் இவ்வாறு உயிர் பிழைத்தனர். நோயால் பாதிக்கப்பட்ட தீவுகள் அனைத்திற்கும் இவர் சென்றார். நோயின் உக்கிரம் தணிவதுபோல் தோன்றிய காலக்கட்டத்தில் மருந்துவில்லைகளும் அநேகமாகத் தீர்ந்து விட்டிருந்தன. ஒரு அவசர நிலை உருவானால் அதைக் சமாளிப்பதற்குத் தேவையான மருந்துப் பொருட்கள் மருத்துவ மனையில் இல்லை. இந்த நிலையில் தான் டாக்டர் ஆசீர்வாதம் தமது

வாழ்வின் இறுதிச் சோதனையைச் சந்தித்தார். பல நூறு உயிர்களைக் காப்பாற்றிய மருந்துவர், தாமே அந்தக் கொடும் நோய்வயப்பட்டார். கைவசமிருந்த பன்னிரண்டே மாத்திரைகளால் இரண்டு நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற முடியும். மருத்துவ மனையில் இதே நோயால் பீடிக்கப்பட்ட இருவர் இருந்தனர். தன்னை நம்பி வந்தவரின் உயிரைக் காப்பதே ஒரு மருத்துவரின் கடமை என்று உறுதியாய் நம்பிய டாக்டர் ஆசீர்வாதம் தன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. நிர்வாகி ஹார்ட் துரைமகனாரும்,நண்பர் டேவிசும், உபதேசியார் ரிச்சரட்சனும் எவ்வளவோ மன்றாடியும் டாக்டர் ஆசீர்வாதம் தமது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. இரு நிக்கோபாரி உயிர்கள் பிழைத்தன. அவ்வுயிர்கள் பிழைக்கும் பொருட்டு இறைப்பணி மருத்துவர் தமதுயிரைத் தியாகம் செய்தார்.

செய்தி அறிந்த செல்வி சேம்பர்ஸ், சாராள் தக்கர் பள்ளியில் உடனே ஆசிரியையாகப் பணிபுரிய வருமாறு பாக்கயதித்தாயை அழைத்தார். சென்னை வந்து சேர்ந்த கைம்பெண் பாக்கியத்தாய் மருத்துவமனையில் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றார். பிறந்த நிலையிலேயே இயற்கை எய்திய அந்தச் சிசுவிற்கு, அவள் கருவில் வளர்ந்து வந்த காலத்திலேயே டாக்டர் ஆசீர்வாதம் ஐரீன் என்று பெயரிட்டிருந்தார். தனது இருபத்தொன்பதாம் ஆண்டிலேயே கணவனை இழந்து, பல நினைவுகளைத் தன் மனதில் சுமந்தவாறு, சாராள் தக்கர் கல்வி நிலையத்தின் கிழக்கு வாயிலைக் கடந்து, உள்வாயிலின் மருங்கில் பல தலைமுறைகளாக நின்ற போகேய்ன் வில்லா மரத்தைப் தாண்டிச் சென்று, இடப்புறம் திரும்பி, தனக்கெனவே செல்வி சேம்பர்ஸ் கட்டியிருந்த சிறு வீட்டிற்குள் நுழைந்த திருமதி. பாக்கியத்தாய் ஆசீர்வாதம், தாம் கல்வி பயின்ற பள்ளியிலேயே ஆசிரியையாகச் சேர்ந்து தமது வாழ்வில் ஒரு புதிய பகுதியை ஆரம்பித்தார். அவருடைய ஒரே மகன் இம்மானுவேல் ஆசீர்வாதம் அப்போது இரண்டரை வயதே நிரம்பிய பாலகன் , இந்தச் சிறுவன் தன் தாயாருடன் சென்னை வந்தடைந்த நாளில் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தான். துறைமுகத்தில் அன்று நிலவிய இட நெருக்கடி காரணமாக எஸ். எஸ். மகாராஜா கடலில் சற்றுத் தொலைவிலேயே நங்கூரம் பாய்ச்ச நேர்ந்தது. கயிற்றாலான ஏணி

வழியாக கீழே இறங்க முயன்ற அவனது தாய் தடுமாறி குழந்தையைக் கைநழுவ விட்டார். கடலிலோ, படகின் விளிம்பிலோ அச்சிறுவனின் உடல் மோதியிருந்தால் அந்தக் கணமே அவன் உயிர் துறந்திருப்பான். எவ்வாறோ அச்சிறுவன் கயிற்றேணியின் படி ஒன்றைத் தனது பிஞ்சுக் கரம் ஒன்றால் பற்றிய வண்ணம் தொங்கியதால் படகோட்டி அவ்வேளையில் விரைந்து மேலேறி அவனைக் காப்பாற்ற முடிந்தது. நான் தான் அந்தச் சிறுவன். இன்று எழுபத்து இரண்டாம் வயதில் தளர்நடை பயிலும் எனக்கு அறுபத்தொன்பது ஆண்டுகளை ஆண்டவர் கிருபையாக வழங்கியுள்ளார்.

எனக்கு ஆறு வயதாகும் வரை காத்திருந்த எனது தாயார் மேற்படிப்புக்கான விடுப்பில் சென்று, அமெரிக்கன் கல்லூரியில் விலங்கியல் பட்டப்படிப்பையும் (1935), சென்னை கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியி ஆசிரியர் பட்டப்படிப்பையும் (1936) முடிந்தார்கள். 1936 முதல் 1945 வரை சாராள் தக்கர் ஆசிரியர் பயிற்றுப் பள்ளியில் பணி புரிந்தார்கள். 1945 இல் நாசரேத் புனிதர் யோவான் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்றார்கள். தனது இறுதிக் காலத்தில் பக்க வாதத்தால் அவதியுற்ற பொழுதும், இறைவன் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை குன்றவில்லை. நல் நம்பிக்கை, தளராக ஆன்மிகப் பற்றுறுதியின் இலக்கணமாக விளங்கியது அவர் வாழ்க்கை.

என் பெற்றோரின் ஒரே மகன் நான் , எழுபத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன். இன்று என் மனதில் நீக்கமற

திரு. ஆர்.டி.பால், திரு. கிரப்,திரு. அலெக்சாண்டர் ஞானமுத்து ஆகியோருடன் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு வகுப்பில் கல்வி பயின்ற இவர் இக்னேஷியஸ் ஆசீர்வாதம் பர்மாவில் (மயன்மார்) பல அரசுப் பள்ளிகளில் பணி புரிந்தவர். இரண்டாம் உலகப்போரின் போது ஆங்கிலப் படையுடன் இணைந்த ஒய்.எம்.சி. ஏ. வில் அதிகாரியாகவும், அதன் பின்னர் தான் கல்வி கற்ற சென்னை வெப்பேரி புனிதர் பவுல் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். டாக் எச். என்ற சமூக நல அமைப்பின் மாநிலச் செயலராக இருந்தார். கால்ஃப், கிரிக்கட், உதைபந்து ஆட்டங்களில் திறமை காட்டியவர். மிகச் சிறந்த எழுத்தாளர் ஆங்கில மொழியில் பெரும் புலமை கொண்டவர்.

2. மனித இனத்தின் தோற்றத்திற்குக் காரணமாக ஆதாம்/ ஏவாள் தம்பதியரின் மூன்றாவது மகன்.

3. என் தந்தையின் ஆசிரியரான அருட்தந்தை சக்ரவர்த்தியை மாலு என்று பாரிசாலில் அனைவரும் அழைத்ததால்,என்னையும் என்பெற்றோர் அவ்வாறே அழைக்கலாயினர்.

4. 1946-ஆம் ஆண்டு அருட்தந்தை ஷோர் அவர்கள் நாசரேத் வந்திருந்தார். அவ்வமயம்,புனித யோவான் மகளிர் உயர்நிலைப் பள்ளியின் மேலாளர் செல்வி சுவிங்கிளர் அம்மையார் என் தாயாரைச் சுட்டிக்காட்டி இது என் பாக்கியத்தாய் ! என்று கூறினார்.தந்தை ஷோர் என் தாயாரின் தோள் மீது தனது தளர்ந்த வலக்கரத்தை வைத்து இது என் சேத்தின் மனைவி என்று நாத்தழுதழுக்கக் கூறியதை நான்

நிலைத்திருக்கும் ஆவல் ஒன்று. அந்தமான் தீவுகளின் மேன்மகனை - அந்த நல்ல மருத்துவரை, அவரது அன்பிற்குரிய மனைவியை விண்ணகத்தில் சந்திக்க வேண்டும் என்பதே அந்த ஆசை . ■

அருகில் நின்று கேட்டவன்.

6. கருணை உள்ளம் கொண்ட கானிங் பிரபு சுதேசமன்னர்களுடன் நல்லுறவை வளர்க்குமுகமாக அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சமஸ்தானங்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார். அதைத் தொடர்ந்து தென்னாட்டிலும் பாளையக்காரரிடமிருந்து அபகரிக்கப்பட்ட சமீன்களை அவர்களிடமே திருப்பித்தர ஆங்கில அரசு முன்வந்தது. சொக்கன்பட்டி குடும்பத்தினர் அனைவரையும் கிழக்கிந்திய வாணிப நிறுவனத்தினர் அடியோடு அழித்திருந்ததால், நீதி மன்றத்தினர் மறை திரு ஆசீர்வாதம் அவர்களை அழைத்து சொக்கன்பட்டியின் வரலாற்றினை அவர்மூலம் அறிந்து கொண்டனர். சமீன் மீது உரிமை கோரும் மனு ஒன்றை ஆசீர்வாதம் ஐயரவர்களே சமர்ப்பிக்கலாம் என்று நீதிபதிகள் கூறிய போது, கலப்பையில் கை வைத்து விட்டேன் என்னால் திரும்பிப் பார்க்க இயலாது. என்றார் அந்த உத்தமர்.

18

நம்பிக்கை நெறி

டாக்டர் சந்திரன் தேவநேசன், குடும்ப வரலாறு

சாமுவேல் வசந்த் அப்பாசாமி

வாழ்க்கையே ஒரு கதை. வாழ்க்கை என்பது மனிதன் இவ்வுலகில் வாழும் அருஞ்சுவை வரலாறாகும். பிறர் நல்வாழ்வு வாழ்வதற்குத் தூண்டு கோலாகவும் மற்றவர்களின் வாழ்க்கை செம்மையாக அமைவதற்கு ஊக்குவிப்பதாகவும், சீராக வாழ்ந்து காட்டுவதே ஒவ்வொரு மனிதனின் குறிக்கோளாகவும் இருக்க வேண்டும். தம் முயற்சியில் முன்னேற்றம் காணும் ஆற்றலை ஒவ்வொருவரும் பெற முடியும். வாழ்க்கைப் பாதையில் அடிமேல் அடிவைத்துச் சென்று, மலையுச்சியை அடைவது போன்ற மிகச் சிறந்த பேற்றினை ஒருமுறையேனும் ஒருவர் பெற்றுவிட முடியும். இத்தகைய சிறந்த பேற்றினைப் பெறுவதற்குத் தேவையானது ஆழ்ந்த நம்பிக்கையோகும். அவற்றுள் முதன்மையாக இருக்க வேண்டியது இயேசுபெருமான் மீது ஆழ்ந்த பக்தி கலந்த நம்பிக்கை. அடுத்து இருக்க வேண்டியது அசைக்க முடியாத தன்னம்பிக்கை.

கண்டேன்!

சின்னஞ்சிறு குழந்தை
உறங்கியது என் தோள்கள் மீது!
கண்டேன் நான்
ஆழ்ந்த நம்பிக்கை!

பார்வையற்ற மனிதன்
கவலையற்றுப் புன்னகைத்தான்!
கண்டேன் நான்
நம்பிக்கை ஆர்வம்!!
சிதைந்த உருக்குலைந்த மேனி
அதைச் சுமந்தது மரச்சிலுவை!
கண்டேன் நான்
ஒப்பற்ற அன்பு!!!

திரு. சாமுவேல் வசந்த் அம்பாசாமி சென்னை Roof for the Roofless என்ற சேவை மன்றத்தில் பணியாற்றிவருகிறார்.

பேரறிஞர் டாக்டர் சந்திரன் டேவிட் சீனிவாசகம் தேவநேசன் அவர்கள் எழுதிய கருத்துச் செறிவும், கவிதைச் சுவையும் நிறைந்த பாடல்களுள், மேலே எழுதப்பட்டுள்ள கண்டேன் என்னும் பாடலும் ஒன்றாகும்!

பாளையங்கோட்டையில் வாழ்ந்த டாக்டர் டேவிட் வில்லியம் தேவநேசன் - தாயம்மாள் சீனிவாசம்பிள்ளை - தம்பதியருக்கு 1917 ஆண்டு நவம்பர் முதலாம் நாள் மூத்த மகனாகப் பிறந்தார் சந்திரன். தந்தையார் வில்லியம் தேவநேசன், இங்கிலாந்து நாட்டிலுள்ள, லண்டன் மாநகர் இம்பீரியல் கல்லூரியில், தமது முனைவர் ஆய்வுப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். (Doctorate Degree). எனவே 1920 - ஆம் ஆண்டு முதல், 1922 ஆம் ஆண்டு வரை வில்லியம் தேவநேசனது குடும்பம் இங்கிலாந்து நாட்டில் வசிக்க நேர்ந்தது. சந்திரனும் குழந்தைப் பருவத்தில், இங்கிலாந்து நாட்டில் கல்வி கற்றார்.

இந்தியா திரும்பியதும் சென்னையில் குடியேறினர். சென்னையில், அரிமா இல்லம், என்று அழைக்கப்பட்ட இல்லத்தை, சந்திரனின் தாயார் தாயம்மாள் அம்மையாருக்கு, அவரது தந்தையார் சீதனப்பரிசாக வழங்கினார். டாக்டர் தேவநேசனின் குடும்பத்தினர் சென்னையிலுள்ள இந்த அரிமா இல்லத்தில் குடிபுகுந்தனர். இராயபுரத்திலுள்ள தூய கெவின் பள்ளியில் , இச்சமயம், தம் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தார் சந்திரன். பின்னர் மேற்படிப்பிற்காக, அவர் இலங்கையிலுள்ள கிங்ஸ்வுட் கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். தென்னகத்தில் அக்காலத்தில் புகழ்பெற்ற விளங்கிய பிஷப் காட்டன் பள்ளியைப் போல், இலங்கையிலுள்ள கிங்ஸ்வுட் கல்லூரி, மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கேற்ற விடுதிகளுடன் மிகவும் சிறப்புற்று விளங்கியது. பசுமை வளம் கொழிக்கும் அழகார்ந்த கண்டி நகரத்தில் கிங்ஸ்வுட் கல்லூரி அமைந்திருந்தது. அக்கல்லூரியைக் கிறிஸ்தவத் திருமறை பரப்பும் குழுவினரின் ஒரு பிரிவான மெதடிஸ்ட் என்னும் திருச்சபையைச் சார்ந்தோர் நிர்வகித்து வந்தனர். அக்கால கட்டத்தில் வெள்ளையர்கள் மட்டுமே இக்கல்லூரியில் பயிலுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். சந்திரன், இந்தியாவிலிருந்து படகில் கடல் கடந்து, பின்னர் புகைவண்டிப் பயணம் மேற்கொண்டு,

இக்கல்லூரியை அடைந்தார். கிங்ஸ்வுட் கல்லூரியில் பயிலும் பொழுது, இரு பேரறிஞர்கள் சந்திரனின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தனர். ஒருவர் அக்கல்லூரியின் சமய குருவான டாக்டர் எர்னஸ்ட் பாட்டர் என்பவராவர். மற்றொருவர் அச்சமயம் அத்திருச்சபையில் இறையியல் பணியில் ஈடுபட்டிருந்தவரும், பிற்காலத்தில் இலங்கை மெதடிஸ்ட் திருச்சபைத் தலைவராகவும் விளங்கிய டாக்டர் D.T. நைல்ஸ் என்பவராவர். சிறுவனாக இருந்த பொழுதும், இளைஞனான பின்பும், சந்திரன் தன்னை முழுமையாக இயேசுபெருமானுக்கு அர்ப்பணித்து , இறுதி வரை, அச்சீரிய நம்பிக்கையை மாறா உறுதியுடன் கடைப்பிடித்து வாழ்ந்தார். கிங்ஸ்வுட் கல்லூரிப் படிப்பை முடித்ததும் அவர், கேம்பிரிட்ஜ் நகரத்திலுள்ள செல்வின் கல்லூரியில் சேர்ந்து, வரலாற்றியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். செல்வின் கல்லூரியில் டாக்டர் சந்திரன் வாழ்ந்த பொழுது, அங்கு தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், மனவெழுச்சிகளையும் ஆன்மீக உணர்வுகளையும், தான் எழுதியுள்ள ***பொதுவுடைமைக் கொள்கையும் கிறிஸ்தவமும்*** - என்னும் நூலில், பின்வருமாறு எழுதிவைத்துள்ளார்.

"எளிமையான, ஆனால் மாறாக உறுதி இழையோடும் பக்தி உணர்வு, நான் என் பாட்டியாரிடமிருந்து பெற்றுக் கொண்டவரமாகும். என் பாட்டியார்தான், இப்பக்தி உணர்வை, நான் கற்றறிந்த கிறிஸ்தவ இலக்கியக் கருத்துக்களுடன் இணைத்து, என் உள்ளத்தில் வளர்த்தார். இலங்கை கிங்ஸ்வுட் கல்லூரியில் நான் பெற்ற,செம்மைசான்ற, சமய உணர்வில் தோய்ந்த பயிற்சிகளும், மெதடிஸ்கு பள்ளியில் நான் பெற்ற சிறந்த பயிற்சியும், அனுபவங்களும், வினாக்களை எழுப்பி, சிந்தனையைத் தெளிவாக்கிக் கொள்ளும் ஆற்றலை என்னுள் வளர்த்தன. நேர்மையானவற்றைக் கண்டு கொள்ளும் ஆற்றலைத் தந்தன. இந்த ஆற்றல்தான், சம உடமைக் கொள்கைகளுக்கும், அவற்றைப் பின்பற்றுகிறவர்களுக்கும் நான் மதிப்புக் கொடுத்தாலும், பொருண்மைக் கூறுகளை வலியுறுத்தும் அவர்களது பாங்கினையும், நியதி வாதத் தத்துவக் கோட்பாடுகளையும், நான் ஏற்றுக் கொள்ளாதவாறு என்னைத் தடை செய்தது. அச்சமயம் என்

உள்ளத்தின் ஆழத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டமே, எனது ஏடுகளில் ஓவியங்களாக வெளிப்பட்டன. என் ஏடுகளில், சாதாரண எழுதுகோல் கொண்டு,சித்திரக்கலை அழகுடன் வரைபடங்களைத் தீட்டினேன். அவ்வரை படங்களில் பொது உடமைக் கொள்கையரின் சின்னமான சுத்தியலும் அரிவாளும், இயேசுபெருமானின் சிலுவையுடன் ஒன்று சேர்ந்து இணைந்திருந்தது. எனவே கல்லூரி வாழ்க்கையில் நான் ஏற்றிருந்த பங்கு, திறமையை வளர்க்கும் பயிற்சியாக மட்டும் அமைந்துவிடவில்லை. மாறாக என் ஆழ்மனதில் தோன்றிய உணர்ச்சிகளின் எழுச்சியும் ஆன்மீகப் போராட்டங்களும் எனக்கு மிகுந்த வேதனையையும் அளித்தன.

இங்கிலாந்தில் பயின்ற இக்கால கட்டத்தை *நிறைவுகளும் குமுறல்களும் நிறைந்த முப்பதுகள்* - என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

சந்திரன் கேம்பிரிட்ஜ் நகரில் பயிலும் பொழுது பெரும்பான்மையான அவரது நண்பர்கள் சம உடமைவாதிகளாக (Marxists) இருந்தனர். அவர்களுள் காலஞ்சென்ற மோகன் குமாரமங்கலம் ஒருவராவர். சந்திரன் கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள, பொதுவுடமைவாதிகள் அமைத்திருந்த சங்கத்தின் (Socialist Club) செயற்குழுவில், தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரியாகப் பணியேற்றிருந்தார். அச்சமயம், இங்கிலாந்து நாட்டிலுள்ள, வேலையற்ற இளைஞர்கள் சங்கத்தின் சார்பில், பல பொதுக் கூட்டங்கள் அமைக்கவும், பல எதிர்ப்புகளுக்கு எதிர்நின்று போராடவும் வேண்டியிருந்தது. மேலும் பொதுவுடமை எதிர்ப்புக் கட்சிகளுக்கு எதிராகவும் ஐக்கிய இணை அணியிலும் செயலாற்ற வேண்டியதிருந்தது. இவ்வகையில் பெற்ற அனுபவங்கள் அனைத்தும், டாக்டர் சந்திரனின் கருத்திலும், வாழ்விலும் இடம் பெற்றுப் பதிந்து விட்டன. 1936 ஆம் ஆண்டு முதல் 1940 - ஆம் ஆண்டு வரை, டாக்டர் சந்திரனின் சிந்தையை பெரிதும் கவர்ந்தவர். வி.கே. கிருஷ்ணமேனனம் என்னும் பெரியாராவர். கிருஷ்ணமேள் அமைந்திருந்த இந்தியக் கூட்டுறவு ஒப்பந்த சங்கத்திலும், டாக்டர் சந்திரன் மிகுந்த ஈடுபாடு கொண்டார். எனவே, தான் வகித்துவந்த பதவிகளை விட்டுவிட்டு கிருஷ்ணமேனனது பணிகளில் பங்கேற்க

முனைந்தார். தயக்கமின்றி, அச்சமற்று வீராவேசத்துடன் கிருஷ்ணமேனன் சுதந்திரப் போராட்டம் பற்றிப் பேசிய பேச்சுக்கள், டாக்டர் சந்திரனின் உள்ளத்தில் ஆழப்பதிந்தன.

இச்சமயத்தில், கிறிஸ்தவ சமய இறையியல் தத்துவங்களிலும், கிறிஸ்தவ சமயத்திற்கு ஆதரவான விவாதங்களிலும் தீவிர ஆர்வம் காட்டினார் டாக்டர் சந்திரன். எனவே இங்கிலாந்து நாட்டுக் கிறிஸ்தவ மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றார். கிறிஸ்தவ மாணவர் சங்கத்தின் உணர்ச்சிமிக்க, ஊக்கமளிக்கும் கூட்டங்களில் கலந்து கொண்டார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது, 1936-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் பர்மிங்ஹாம் நகரில் நடைபெற்ற மாநாடாகும். இம்மாநாடு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நடைபெறுவது வழக்கம். டாக்டர் சந்திரன் இம்மாநாட்டில் பங்கு பெற்ற போது தான், முதன் முறையாக, சி.எப். ஆண்ட்ரூஸ் என்னும் பெரியாரைச் சந்தித்தார். இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன், 1939-ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற , முதல் உலகக் கிறிஸ்தவ இளைஞர்கள் மாநாட்டின் உறுப்பினராக டாக்டர் சந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாநாட்டில் பங்கு பெற்றார்.

தலைமை அத்தியட்சகர்களாக விளங்கிய, பேரறிஞர்கள் வில்லியம் டெம்பிள், ரீனால்ட் நிபூர் என்பவர்களின் சொற்பொழிவுகளை டாக்டர் சந்திரன் விரும்பிக் கேட்டார். அப்பெரியார்களின் கருத்துகள் டாக்டர் சந்திரனின் சிந்தையில் இடம் பெற்றன. இவ்வாறு பெற்ற சிறந்த அறிவாற்றலுடன், இயேசு பெருமானிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியும் இணைந்து, கலந்ததால், பக்திச் செறிவுடன் பாடல்கள் பல புனைந்தார். ஒரு பாடல்:

எல்லையற்ற பரம்பொருள் இயேசு பெருமான்

என் சகோதரர்களே!
அவரைப்பற்றி நீங்கள் கேட்டதில்லையா?
என் சகோதரிகளே!
அவரைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா?
ஒரு தச்சன் அவர்.

மரக்கட்டைகள் அவர் கரங்களுக்கு
வளைந்து கொடுத்தன.
எருதின் கழுத்துநுகத்தடிபோல்
சுமைகள் அவருக்கு
இலகுவாக இருந்தன.
நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின
மனுக்குலத்தின் பிள்ளையென
அழைத்துக் கொண்டார் தன்னை!

வெறுத்து ஒதுக்கவில்லை
அவர் தேவதாசிகளை!
பிச்சைக்காரர்களின்
புண்களை நக்கும்
நாய்களுக்காகவும், பிச்சைக்காரர்களுக்காகவும்
கவலைப்பட்டார் அவர்!
குஷ்டரோகிகளைக் குணப்படுத்தி
பார்வையற்றவர்களுக்கு
விழிகளை அருளினார்!

மனநோயினால் துன்புற்றோரை
சுகப்படுத்திப் புதுவாழ்வு அளித்தார்!
பஞ்சாபிலுள்ள அம்ரஜித்
வங்காளத்தில் வாழும் அசோக்
குஜராத்திலுள்ள தேவதாஸ்
தமிழகத்தில் வாழும் இராமசாமி!
மகராஷ்டிரத்திலும் மலபாரிலும்
இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் வாழும்
என் இனிய நண்பர்களே! சகோதர்களே!
அவரைச் சந்திக்க வாரீர்!
ஆப்கானிஸ்தானத்தில் வாழும்
கம்பீரம் மிக்க என் நண்பரே!
இராஜஸ்தானில் வாழும்
வீரமிக்க என் நண்பரே!

துடுப்புகளையும் வலைகளையும் விட்டு
அவரைப் பின்சென்ற
மன உறுதிமிக்க மீனவர்போல்
அவரைப் பின்பற்றி வாழ வாரீர்!!
அவர் விடுத்த கருத்துகள்
இளைஞர்களை ஓய்ந்திருக்க விடாது!
அவர் சொல்லும் அற்புதச் செய்திகள்
இளைஞர்களைத் தட்டி எழுப்பாது அமையாது!!

சாவித்திரி - தேவிகா!
ப்யாசியா - புனிதா!
லீலா .... லலிதா!
என் சகோதரிகளே!அனைவரும் வாரீர்
வந்து அவரைச் சந்திப்பீர்!
நம்பிக்கைக்குரியவராய் வாழ்ந்தார் அவர்!
விரும்பினர் அவரைப் பெண்கள்!
சாந்தமே வடிவான மேரி
அவர் பாதத்தடியில் அமர்ந்து வாழ்ந்தாள்!
உணர்ச்சி வயப்பட்ட மகதலேனா மேரி
வாசனைத் திரவியங்களாலும்
தன் அன்பு கலந்த கண்ணீராலும்
அவரது திருப்பாதங்களை அபிஷேகம் செய்தாள்!!

வயல்வெளியில் பணிபுரியும் விவசாயியே!!
அவரது குரலுக்குச் செவிகொடு!
உன் பயிருக்கு உயிரான மழைதந்து
உன் வயல்களை வளப்படுத்துவார் அவர்!!

தொழிலாளியே! உன் இயந்திரங்களின் இரைச்சல்களினூடே
ஒலிக்கும் அவரது குரலுக்குச் செவிகொடு
பசித்திருக்கும் உனக்கு
உயிரூட்டும் உணவளிப்பார் அவர்!!

அலுவலகத்தில் பணியாற்றும் பாபு!
அவர் குரலுக்குச் செவிகொடு!

உன் உழைப்பின் பயனுக்கேற்ப
வாழ்வளிப்பார் அவர்!
இந்திய மக்களே!
உங்கள் குழந்தைகளுடன்
அவரது குரலுக்குச் செவிசாய்ப்பீர்!

வறுமை வாழ்விலும்
நம்மை முன்னேறச் செய்வது
அவரது கரங்கள்!
ஆரவாரமிக்க நகரங்களில்
திட்டமிட்டு நம்மைச் செயலாற்றச் செய்வது
அவரது பேராற்றல்!

ஒலிக்கும் தபலாவின் இன்னிசையில்
கிராமங்களை மகிழ்விப்பது
அவரது அருள்!
முடமான கால்களையும்
சீராகச் செல்லுமளவு
வழிநடத்திச் செல்வது
அவரது அன்பார்ந்த உள்ளம்!!

மண்ணுலகில் சிறந்த
பண்பான வாழ்வு
விண்ணுலகில் சிறந்த
எண்ணற்ற மேன்மை
கண்டறியாத கனிவான அன்பு
கேட்டறியாத பேரின்ப மகிழ்வு
கிளர் ஒளிமிக்க தெய்வீக நிலை
அனைத்தையும் ஆண்டவர் நல்க
அவரிடம் நம்மை ஒப்படைப்போம்!!

சந்திரன் தேவநேசன் இந்தியாவுக்குத் திரும்பியவுடன், 1940-ஆம் ஆண்டு, வங்காளத்திலுள்ள பங்கூரா கிறிஸ்தவக் கல்லூரியில் (Bankura Christian College), வரலாற்றியல் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். அச்சமயம் அவர், நிதித்துறை

சார்ந்த, டாக்டர். ஏ.எஸ். குணவர்த்தனா (Dr. A.S. Goonewardene) அவர்களின் மூத்த மகள் நார்மா சாவித்திரி என்பவரைச் சந்தித்தார். குணவர்த்தனா அவர்களின் குடும்பத்தினர், கிறிஸ்தவ சமயத் திருச்சபைகளுள் ஒரு பிரிவான மெதடிஸ்ட் என்னும் பிரிவைச் சார்ந்தவராவர். குணவர்த்தனருடைய குடும்பத்தினர் இச்சபையில் மிகுந்த பற்றுக் கொண்ட தீவிர பக்தராவர். குணவர்த்தனா அவர்கள் பிறர் நலனுக்காக உழைப்பதிலும், கிறிஸ்தவ சமய ஈடுபாட்டிலும் மிகச் சிறந்து விளங்கினார். 1942-ஆம் ஆண்டு, நவம்பர் 9-ஆம் நாள், சாவித்திரி-சந்திரன் திருமணம், இலங்கை, கொழும்பு நகரத்திலுள்ள மெதடிஸ்ட், தேவாலயத்தில் இனிதே நிறைவேறியது. 1943- ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டுவரை, சந்திரன் கொழும்பு மாநகரம் இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தின் (Y.M.C.A.)இளைஞர் குழு (Youth Secretary) செயலராகப் பணிபுரிந்தார். இங்குதான், 1943-ஆம் ஆண்டு நவம்பர் 4-ஆம் நாள், அவர்களது மூத்த மகன் சுதர்சன் பிறந்தார். சந்திரன், மாணவர் கிறிஸ்தவ சங்கத்தின் ஆற்றல் சான்ற உறுப்பினராக இருந்தார். எனவே, அத்தியட்சர் ராஜா.பி. மாணிக்கம் அழைப்பின் பேரில் நாகப்பூரில், தேசியத் திருச்சபை ஆலோசனைக் குழுவில் (National Counicl of Churches), இளைஞர் செயலராகப் பொறுப்பேற்றார். 1946-ஆம் ஆண்டு , அக்டோபர் 14-ஆம் நாள் சந்திரன்-சாவித்திரி தம்பதியினரின் இரண்டாவது மகன் தயாளன் பிறந்தார். நாகப்பூரில் தன் பணிகளை நிறைவேற்றி முடித்தவுடன், டாக்டர் சந்திரன், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வரால், வரலாற்றியல் துறைத்தலைவராகப் பணியாற்றுமாறு அழைக்கப்பட்டார். 1946-ஆம் ஆண்டு, கோடை விடுமுறையின்போது, டாக்டர் சந்திரன் தன் குடும்பத்துடன், தாம்பரத்தில், குடியேறினார்.

1949-ஆம் ஆண்டு மே 2-ஆம் நாள் சாவித்திரி-சந்திரன் தம்பதியரின் 3-வது மகன் மித்திரன் பிறந்தார். 1951-ஆம் ஆண்டு, டாக்டர் சந்திரன் தேவநேசன், சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரி, பிஷப் ஹீபர் விடுதிக் காவலராக நியமிக்கப்பட்டார். சந்திரன் தேவநேசன் தாம்பரத்தில் பணியாற்றிய நாட்களைச் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள், பசுமை நிறைந்தவைகளாக

என்றும் எண்ணி மகிழ்கின்றனர். சந்திரன் தேவநேசனின், உணர்சிக் கனிவும், கருணைநிறை பண்பும், மிகச்சிறந்த சொல்லாற்றலும், அக்கால கட்டத்தில் எல்லோராலும் பாராட்டப்பட்டன. புதிய ஹீபர் விடுதிக் காவலர் டாக்டர் சந்திரனது, சீரார்ந்த பண்புகளின் தாக்கம், மாணவர்களிடம் மிகுதியும் காணப்பட்டது. எனவே மாணவர்களிடையே சகோதர மனப்பான்மை வலுப்பெற்று வளர்ந்தது. நாளடைவில், டாக்டர் சந்திரனிடமிருந்து பெற்ற நற்குணங்கள் ஹீபர் பண்பு என்று பெயர் பெற்றன. விடுதிநாள் கொண்டாடும் போது, சீதோஷ்ணநிலையில் கோளாறு ஏற்பட்டு, தொல்லை நேர்வது இயல்புதான். ஆயினும அவற்றையெல்லாம் மீறி, தோரணங்கள் வண்ணங்களுடன் மிளிர, விடுதி நாளை, ஹீபர் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். விடுதிகளிடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற பொழுது, ஹீபர் விடுதி மாணவர்கள், போருக்குச் செல்லும் வீரர்கள் போல் உற்சாகமாகக் காணப்படுவர்.

சீதோஷ்ணநிலை நேர்த்தியாக அமைந்திருக்கும் சமயங்களில், டாக்டர் சந்திரன் தேவநேசன், மிக மெதுவாகச் செல்லும் துவிச்சக்கர வண்டியில், வளாகத்தைச் சுற்றி வருவது வழக்கம். பசுஞ்சோலைகளிடையே, வளாகத்தில், குழுமியிருக்கும் மாணவர்களிடையே திடீரெனப்புகுந்து அவர்களுக்கு வியப்பும் மகிழ்வும் ஊட்டுவது மிகவும் விருப்பமான செயலாகும். அவ்வாறு இடையே தோன்றி, அவரது உற்சாகமான அழைப்பைக் கேட்டவுடன், தயங்கி ஒதுங்கியிருக்கும் மாணவர் கூட, அவரைச் சுற்றிக் கூடிவிடுவர். அடுத்த வினாடியே, அவர்களது விவாதம் தொடங்கிவிடும். காந்தியடிகளின் கொள்கைகளில் தொடங்கி, கல்லூரி அருகில் வசிக்கும் ஏழைக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்பது வரை அக்கலந்துரையாடலில் பேசி முடிப்பர். மாணவர்களது அன்பையும், பாசத்தையும் பெறுவதில் தான், தனது அளவற்ற மகிழ்ச்சியே அடங்கியுள்ளது என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு.

கல்வி என்பது, வளர்ச்சி பெற்று பயன்படுத்தப்பட வேண்டிய தீவிர ஆற்றலாகும். சுதந்திர இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கப்போகும் இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்வித்

திட்டத்தில், பொருத்தமற்றதாகவும், தேவையற்றதாகவும் காணப்பட்டவற்றை மாற்றி அமைக்க வேண்டுமென்று, டாக்டர் சந்திரன் தீர்க்கமாகப் பாடுபட்டார். 1962-ஆம் ஆண்டு, கல்லூரி முதல்வராக இருந்த டாக்டர் மக்பேயில் (Dr. Macphail) ஓய்வு பெற்றதும், அப்பதவியை நிறைக்கப் பொருத்தமானவர் சந்திரன் தேவநேசன் தான் என்பது எல்லோருக்கும் தெளிவாகப் புரிந்தது. எனவே 1962-ஆம் ஆண்டு, சந்திரன் தேவநேசன், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் முதல்வராகப் பணியேற்றார்.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் முதல், இந்திய முதல்வர் தேவநேசன், பல்வேறு துறைகளில் கிறிஸ்தவக் கல்லூரி அபிவிருத்தி அடைந்து, வளர்ச்சி பெறுவதற்கு, புது முயற்சிகளை மேற்கொண்டார். அவர் தீட்டிய திட்டங்களுள் முதன்மையானது, துறைத் தலைவர்கள் அனைவரும் கோடைக்கானலில், ஒரு இடத்தில் ஒன்றுகூடி, செவ்வனே சிந்திக்க ஏற்பாடு செய்தார். டாக்டர் சந்திரனும், துறைத் தலைவர்களுடன் அமர்ந்து, அடுத்த பத்து ஆண்டுகளில் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட வேண்டிய திட்டங்களைத் தீட்டினார். இவ்வாறு அவர் செய்த முயற்சியானது, கல்லூரியின் சிந்தை, செயல், திறமை ஆகியவற்றைக் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி பெறச் செய்து, பயனளித்தது.

1958-ஆம் ஆண்டு டாக்டர் சந்திரன் தேவநேசன், தமது முனைவர் ஆய்வுப்பட்டப்படிப்பைத் தொடங்கினார். *மகாத்துமாகாந்தியின் முதல் நாற்பது ஆண்டுகள்* என்பது இவரது ஆய்வின் தலைப்பு. 1961-ஆம் ஆண்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகம் (Harvard University) இவருக்கு முனைவர் பட்டம் (Ph.D) வழங்கியது.

டாக்டர் சந்திரன் அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேடு 1969-ஆம் ஆண்டு *ஒரு மகாத்மா உருவாகிறார்* என்னும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. இந்நூலில், வரலாற்றியலில் தனக்குள்ள திறமையை வெளிப்படுத்தியிருப்பதுடன், தனி மனிதனின் சிறப்பியல்புகளில் தனக்கிருந்த மதிப்பையும் எடுத்துக்காட்டியுள்ளார். காந்தி அடிகளிடம் காணப்பட்ட கிறிஸ்தவ சமயத் தாக்கத்தையும், ஆயினும் காந்தியடிகள் இயேசு பெருமானைத் தன் தெய்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் குறித்து, இந்நூலில்

டாக்டர் சந்திரன் எழுதியிருக்கும் பகுதி, அவரது உள்ளக் கிடக்கையைப் பிரதிபலிப்பதுடன், சுவைமிக்கதாகவும் உள்ளது. ஜப்பான் நாட்டுப் பேராசிரியரான மக்கட்டோ ஜெட்டோவோ (Makoto Jotto) என்பவரையும் இந்நூலின் கருத்துக்கள் பெரிதும் கவர்ந்தன. எனவே ஜப்பான் பேராசிரியர் இந்நூலை, ஜப்பான் மொழியில் மொழி பெயர்த்து ஜப்பான் நாட்டுப் பல்கலைக்கலகத்தில் பாடநூலாக இணைத்துக் கற்கும் படி செய்தார்.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வராக டாக்டர் சந்திரன் தேவநேசன் பணியாற்றிய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பல சிறப்பான மாற்றங்கள் வளாகத்தில் நிகழ்ந்தன. இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் வளாகத்தில் கட்டப்பட்டன. பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டன. டாக்டர் சந்திரனுக்கு மிகவும் விருப்பமான, கிராம முன்னேற்றத்தை, அடிப்படை நோக்கமாகக் கொண்டு, கிறிஸ்தவக் கல்லூரியின் அருகில் உள்ள கிராமங்களுடன் தொடர்பு கொண்டு, திட்டங்கள் தீட்டி செயலாற்றினார். புதிய கல்வித் துறைகள் தொடங்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை, ஆய்வுப் பட்டபப்பயிற்சி அளிக்கும் தகுதிக்கு உயர்த்தப்பட்டன. அவற்றுள் ஒன்று, தாவர இயல் துறை. (Botany Department) தாவர இயல் துறை விரிவுபடுத்தப்பட்டது. இத்துறையின் வளர்ச்சிக்கு, ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து பண உதவியும் கிடைக்கும் படி செய்தார். மற்றொன்று, கடல் வாழ் உயிரினங்கள் பற்றிக் கற்கும் ஆராய்ச்சி மையம் ஒன்றை உருவாக்கியதாகும். (Research Centre for Marine Biology). புலிக்காட்டில், இவ்வாராய்ச்சித் துறை,டாக்டர் சஞ்சீவிராவின் மேற்பார்வையில் வளம் பெற்றுச் சிறக்க டாக்டர் சந்திரன் துணை புரிந்தார். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு. டான்போர்த் பட்டதாரிகள் அடிப்படை ஆதரவூக்கத் திட்டம் (Danforth Foundation Fellowship)-வாயிலாகப், பண உதவிகிடைப்பதற்கு, முதன்முதலாக வழி செய்து கொடுத்தார். இந்த ஆதரவூக்கத் தொகை, பட்டாதாரிப் பேராசிரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் அயல் நாடு சென்று, உயர்கல்விப் பயிற்சி பெற வாய்ப்பு அளித்தது. சில சமயங்களில் அயல்நாடுகளிலிருந்து பேராசிரியர்கள் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி வருவதற்கும் அதற்குப் பதிலாகச் சென்னைக் கிறிஸ்தவக்

கல்லூரிப் பேராசிரியர்கள் அவ்விடத்திற்குச் செல்வதற்கும் இத்திட்டம் உதவியது. டாக்டர் சந்திரன் முதல்வராக பணியாற்றிய காலத்தில், கிறிஸ்தவக் கல்லூரி வளாகத்தில் பின்வரும் கட்டடங்கள் கட்டப்பட்டன. மெக்பெயில் நுண்கலை மையம் (Macphail Fine Art Centre), சுவீடன் நாட்டுக் கட்டடக் கலைஞரான பெண் ஒருத்தியால், திட்டமிட்டு உருவ வரைபடம் வரைந்து, கட்டிய, அனைத்து நாட்டினருக்கும் பொருத்தமான விருந்தினர் மாளிகை (International Guest House), கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இல்லங்கள், விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுகளைப் பார்ப்பதற்காக அனைவரும் அமரக்கூடிய ஒரு இடம் சி.ஏ. ஆப்ரகாம் என்பவர் பெயரால், சி.ஏ. ஆபிரகாம் விளையாட்டு அரங்கம் (C.A. Abraham Sports Pavilion) என்பதும் கட்டப்பட்டது. கால்நடை மருத்துவத்தில் மிகச்சிறந்தவராக விளங்கிய, டாக்டர் மந்திரமூர்த்தியின் துணையுடன், கல்லூரி வளாகத்தில் பண்ணை (Farm) ஒன்றை நிறுவினார். பெண்களுக்கான விடுதி கிண்டியில் அமைந்திருந்தது. கிண்டியில் அமைந்திருந்த, அப்பெண்கள் விடுதி, கல்லூரிக்கு மிக அருகில் உள்ளது என்று கருதப்பட்ட அக்காலத்தில், பெண்கள் விடுதி, கல்லூரி வளாகத்தில்தான் அமைக்கப்பட வேண்டும் எனத் திட்டமிட்டுச் செய்து காட்டியது, விவாதத்திற்குரியதாக இருந்தது. (Womens' Hostel) பெண்கள் விடுதிக் கட்டடம் விரைவில் கட்டப்பட்டது. பெண்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன், தங்கள் பழைய விடுதியை (கிண்டி) விட்டு, வளாகத்திலுள்ள புதிய பெண்கள் விடுதியில் குடிபுகுந்தனர். டாக்டர் சந்திரனது சீரார்ந்த முயற்சியால் வங்கியும் அமைத்து, வங்கியின் பயனை மாணவர்களும் மக்களும் பெறும் வகை செய்தார் டாக்டர் சந்திரன். பின்னர் ஏனைய கல்லூரிகளிலும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (I.O.B) கணக்கீட்டக் கிளையகங்கள் அமைத்தனர்.

பத்து ஆண்டுகளில் தன் மேலாண்மையினாலும், மேம்பட்ட திறமைகளினாலும் , கல்லூரியில் பல புதுமைகளைப் புகுத்தி, ஆற்றல் சான்ற கல்லூரி நிர்வாகி எனப்பெயரும் புகழும் பெற்றார். டாக்டர் சந்திரன் தேவநேசன். குறிப்பாகக் கல்லூரி மேம்பாட்டிற்காகவும், அபிவிருத்திக்காகவும் அவர் நிதி திரட்டிய ஆற்றலும் திறமையும் பாராட்டுக்குரியவைகளாகும். டாக்டர் சந்திரனின் சிறப்பார்ந்த அகில உலகத் தொடர்பு, அவர் கொண்டிருந்த அளவற்ற தன்னம்பிக்கை,

அவர் மேற்கொண்டிருந்த பணிகள், என்பன போன்றவற்றில், அவரது சீரார்ந்த செல்வாக்குத் தெளிவாகப் புலப்பட்டது.

உலகெங்கிலுமிருந்து வந்து, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்று பின்னர் வேற்றிடங்களுக்குச் சென்றுவிட்ட மாணவர்களை ஒருங்கிணைக்கும், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கிய பெருமை டாக்டர் சந்திரனையே சேரும். அத்துடன் அம்மாணவர்கள் தாங்கள் பயின்ற கலைக்கூடமாம், கிறிஸ்தவக் கல்லூரியின் வளர்ச்சிக்கு, என்றும் உறுதுணையாயிருந்து, பணஉதவிகளும் செய்யும் வண்ணம், அவர்கள் மனதைப் பக்குவப்படுத்தினார்.

கல்லூரி முதல்வராக அவர் வாழ்ந்த நாட்களில், இயேசு பெருமான் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையும், இயேசு பெருமானைப் போலவே ஏழைக்கு இரங்கும் அவரது பண்பும், குறிப்பாகச் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அவர் தொடங்கிய பல்வேறு செயல்திட்டங்கள் வாயிலாகவும், அக்காலத்தில் அவர் எழுதிய நூல்கள் வாயிலாகவும் வெளிப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்டு, சில, கவிதைகள், நூலாக வெளியிடப்பட்டவை, *பம்பாயில் பெத்தானியா* (Bethany in Bombay), *எல்லையற்ற பரம்பொருள் கிறிஸ்து* (The infinite Christ), *இளைஞர்களுக்கான வேண்டுதல்கள்* (Prayers for young men), *சிலுவை உயர்த்தப்பட்டது.* (The cross is lifted) என்பனவாகும். அவர் எழுதியுள்ள சமய நாடகங்களான *எஸ்தர்* (Esther) *பிளம்லைன்*✱ (Plumbine) என்பவையும் அவரது குறிக்கோளை உலகோருக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கிறிஸ்தவ தேவாலயங்களின் பணி, கிறிஸ்தவர்களை மட்டும் மேம்படுத்துவதாக அமைந்துவிடாது, எத்தகைய போராட்டங்கள் நிறைந்த சூழ்நிலையிலும், நமது நாட்டில், ஒருமைப்பாட்டுடன் கூடிய ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும், குறிக்கோளைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று டாக்டர் சந்திரன் தேவநேசன் கருதினார்.

✱ **'நீதியின் முழக்கம்'** என்ற தலைப்பில் இதனை சரோஜினி பாக்கியமுத்து தமிழாக்கம் செய்துள்ளார்.

புதுடெல்லியிலுள்ள, மத்திய கல்வி அமைச்சர் குழுவினர் வடகிழக்கு இந்தியாவைச் சேர்ந்த மேகாலயாவில், முதன்மையான ஒரு பல்கலைக்கழகம் அமைக்க விரும்பி, அவ்வாறு அமைக்கத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் மத்திய கல்வி அமைச்சராகப் பணியாற்றிய பேராசிரியர் ஜனாப் நூருல் ஹாஸன் சாகிப் (Prof Janab Nurul Hasan Sahib) என்பவர், டாக்டர் சந்திரன் வேதநேசன்தான் இப்பணியை நிறைவேற்றுவதற்குத் தகுதி வாய்ந்தவர் என்று பரிந்துரை செய்தார். எனவே அச்சமயம் பிரதம அமைச்சராகப் பணியாற்றிய திருமதி. இந்திராகாந்தி அம்மையார், டாக்டர் சந்திரன் தேவநேசனை இப்பணிக்கெனத் தேர்ந்தெடுத்து, ஷில்லாங் (Shilliong) என்னுமிடத்தில், வடகிழக்கு மலைநாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தோற்றுவிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். 1973 - ஆம் ஆண்டு, வடகிழக்கு மலைநாட்டுப் பல்கலைக் கழகத்தை (North Eastern Hill University) நிறுவுபவராகவும், அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், டாக்டர் சந்திரன் தேவநேசனை நியமித்தார். தென்னகத்தின் புகழ்பெற்ற கல்லூரிகளுள் ஒன்றான சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியதுடன் அமைந்து விடாது, டாக்டர் சந்திரன் தேவநேசன் அச்சமயம், பல்வேறு, மிகமுக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகளை ஏற்றிருந்தார். சென்னைப் பல்கலைக்கழக, மாமன்ற, ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தார். (Syndicate of the Madras University). பல்கலைக்கழக மானியக்குழுவின், பல்வேறு செயற்குழுவின் நிர்வாக ஆலோசகராகப் பொறுப்பேற்றிருந்தார். (In the University Grants Commission). தேசிய ஒருமைப்பாட்டு மன்றத்தின் (National Integration Council) உட்குழுவின் ஆலோசகராகவும் பணியாற்றி வந்தார். எனவே, டாக்டர் தேவநேசன்தான், வடகிழக்கு மலைநாட்டுப் பல்கலைக் கழகத்தையும் உருவாக்க முடியும் என்று மத்திய கல்வித்துறை முடிவு செய்தது. இப்பொறுப்பை ஏற்றவுடன், அம்மலை நாட்டில் பல்கலைக் கழகத்தை உருவாக்குவதற்கு டாக்டர் சந்திரன் கடினமாக உழைக்க வேண்டியதிருந்தது. ஆயினும் அப்பணியை அவர் மிகவும் செவ்வையாக நிறைவேற்றி முடித்தார். புதியதாகவும், புதுமையானதாகவும், அம்மலை நாட்டில் வாழ்கிறவர்களின் சம்பிரதாயத்திற்கு மாறாகவும், டாக்டர் சந்திரன் தேவநேசன் அங்கு

ஏற்படுத்திய கல்வித்திட்டங்களுள் ஒன்று. அம்மலை நாட்டில் வாழ்கின்றன காங்ஸ் (Kongs) சாதிப் பெண்களுக்காக அவர் அமைத்த கல்வித் திட்டமாகும். இத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு, தேசிய சேவா சங்க அமைப்பு (N.S.S.) டாக்டர் சந்திரனுக்குப் பெரிதும் துணை புரிந்தது. 1978- ஆம் ஆண்டு வரை அவர், வடகிழக்கு மலைநாட்டுப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றியபின், சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பியபின், 1978-ஆம் ஆண்டு டாக்டர் சந்திரன், கல்வி அபிவிருத்தி நிறுவனம் (Institute for Development Education) ஒன்றை உருவாக்கினார். மனிதர் ஒவ்வொருவரின் தனிப்பட்ட திறமையை வளர்த்து, ஆளுமையையும் வளர்ச்சி பெறச் செய்து உதவுவதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும். நம் நாட்டில் நிலவும் வியாதிக் கொடுமைகள், ஏழ்மை, பசிப்பிணி, சுகாதாரக் குறைபாடு,சாக்கடை வடிகால் பற்றாக்குறை, குடிநீர் வசதியின்மை, போதிய வீட்டு வசதி இன்மை, என்பன போற்றவற்றைக் குறித்து, மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதே இந்நிறுவனத்தின் பணியாகும். கல்லூரியின் வாயிற்படியைக்கூட மிதிக்காத, பெரும்பான்மையான மக்கள்படும் அவதிகளிலிருந்து ஒதுங்கி, தனிப்பட்டதோர் ஒதுக்கிடத்தில் வாழும் மனப்போக்கை, மாணவர்களின் உள்ளங்களிலிருந்து அகற்ற வேண்டும்.

டாக்டர் சந்திரன் தேவநேசன், தான் வாழ வேண்டிய காலத்திற்கு முன்னதாகவே வாழ்ந்து விட்டார் எனலாம். அவர் எடுத்துரைத்தவைகளும் அவர் எழுதி வைத்துள்ள கருத்துக்களும் இன்றைய உலகின் நல்வாழ்விற்கு உகந்தவைகளாகவே இருக்கின்றன. பல்கலைக் கழகங்களும்,கல்லூரிகளும் கல்வி ,கலைகள் தொடர்பான பயிற்சி அளிக்கும் சாதனங்களாக மட்டும் அமைந்து விடாது, சமுதாய நலனையும், நாட்டு நலனையும் மேம்படுத்துவனவாகவும் இருக்க வேண்டும் என்பதை டாக்டர் சந்திரன் மிகுதியும் வலியுறுத்தினார். கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் வாயிலாக, டாக்டர் சந்திரன் பல திட்டங்களை வகுத்தார். இத்திட்டங்களின் துணை கொண்டு, சாதி சமயவேறு

பாடின்றி, சமுதாயத்தில் பின்தங்கியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பலரும் பாடுபடுவதற்கு, வழி வகுத்துக் கொடுத்தார். இத்திட்டங்களின் வாயிலாக, எழுத்தறிவின்மையையும், ஏழ்மையையும் போக்குவதற்குச் சமுதாயத்தில் சிறப்புரிமை பெற்று வாழும் சிறுபான்மையோரை ஊக்கி,செயலாற்றச் செய்தார். அயல் நாடுகளில் தான் செய்த பயனுள்ள சுற்றுப் பயணங்கள், தன் அனுபவங்கள், ஆராய்ச்சி அறிவு, ஆற்றல் சான்ற கல்வித் திறன், இவற்றால், டாக்டர் சந்திரன் தேவநேசன், தான் மேற்கொண்ட ஒவ்வொரு செயலையும்,பரந்த மனப்பாங்குடனும்,தொலை நோக்கு ஆற்றலுடனும், மதி நுட்பத்துடனும் செய்தார். கிறிஸ்தவ சமயத்தில் அவர்கொண்டிருந்த ஈடுபாடும், கட்டுப்பாடும், அவர் உள்ளத்தில் நிலை பெற்றிருந்த, சிறந்த நாட்டு ஒருமைப்பாட்டுக் கொள்கைகளுமே, அவரை இவ்வாறு செயலாற்றச் செய்தன.

1970-ஆம் ஆண்டு,கல்வித்துறையில் அவர் செய்த ஈடு இணையற்ற, அரும்பெரும் சாதனைகளுக்காக அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

கிறிஸ்தவ சமயத் தேவாலயங்களின் இயல்பையும்,அவை கூறும் செய்திகளையும் குறித்து, டாக்டர் சந்திரன் தேவநேசன் பின்வருமாறு கூறுகிறார்.

“கிறிஸ்தவ சமய தேவாலயங்களைப் பற்றிய செய்திகளையும், கிறிஸ்தவ சமய நற்செய்திகளையும், நம் நாட்டு நாகரீகப் பண்புகள் வாயிலாகவே தெரிவிக்க வேண்டும். சில சமயங்களில் இந்திய நாகரீகத்தை ஒப்புக் கொண்ட அளவிலும், சில சமயங்களில், இந்திய நாகரீகத்திற்கு ஆதாரம் காட்டுகிற அளவிலும் எடுத்துரைக்கலாம்”.

கிறிஸ்தவ சமயச் செய்திகளை அறிவிக்கும் முறை குறித்துப் பேசும்போது, பின்பருமாறு கூறுகிறார்.

“கிறிஸ்தவச் சமயச் செய்திகள் எல்லோருக்கும் கிட்டுகிற வகையில் நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். கிறிஸ்தவ சமயம் சார்ந்த நிறுவனங்களின் தொடர்புடன், கிறிஸ்தவ தேவாலயங்களும், கிறிஸ்தவ சமுதாயமும், எச்செயலையும் முன்னின்று நடத்த வேண்டியது அவசியம் என்கிற உணர்வை ஊட்ட வேண்டும்.

நாட்டு மக்கள் அனைவரும், சமுதாய நீதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக நடைபெறும் போராட்டங்களில், கிறிஸ்தவ சமுதாயத்தினரும் பங்கு பெறச் செய்ய வேண்டும்".

இப்படிப்பட்ட, பற்பல உணர்வுகளால் உந்தப்பட்டுத்தான், டாக்டர் சந்திரன் தேவநேசன், கிராமச் சீரமைப்புப் பணிகளைத் தொடங்கினார். கல்வி அபிவிருத்தி நிறுவனத்துடன, கிராமச் சீரமைப்புப் பணியையும் இணைத்து, சென்னைக்கு அருகிலுள்ள 14 கிராமங்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கத் தொடங்கினார். சில ஆண்டுக்குப்பின், இக்கிராமச் சீரமைப்புப் பணி, நலிவுற்றோருக்கு நல்வாழ்வு (Roofs for the Roofless) என்னும் பெயருடன், தனியாகப் பிரிந்து செயல்படத் தொடங்கியது. தொடர்ந்து நலிவுற்றோருக்கு நல்வாழ்வு (Roofs for the Roofless) வழங்கும் இந்நிறுவனத்தின் இயக்குநராக, டாக்டர் சந்திரன் தேவநேசன் அவர்களின் துணைவியார் திருமதி. சாவித்திரி தேவநேசன் செயலாற்றுகிறார். அம்மையாரின், ஆற்றல் சான்ற பணியினால், அயல்நாடுகளிலிருந்து பண உதவி பெற்று, இந்நிறுவனம் கிராமச் சீரமைப்புப் பணியினைச் சிறப்புறச் செய்து வருகின்றது. கிராமங்களில் வீடுகள் கட்டிக் கொடுத்தல், முதியோர் இல்லங்கள் அமைத்தல், கல்வி கற்பிக்கும் மையங்கள் நிறுவுதல், அடிப்படை உதவிகள் வழங்கும் உடல் நலத்துறை மையங்கள் அமைத்தல், கால்நடை பராமரிப்பு மையங்கள் அமைத்தல்,சமுதாய அடிமட்டத்தில் வாழ்கின்றவர் என்பன போன்ற செயல்களை, சாவித்திரி அம்மையார் பராமரிப்பு திறம்படச் செய்து வருகின்றனர். இவ்வாறு டாக்டர் சந்திரன் தேவநேசனது கனவின் ஒரு பகுதியை, சாவித்திரி தேவநேசன் அம்மையார் நிறைவேற்றி வருகிறார்கள்.

தேவநேசன் தம்பதியினரின் மூன்று மகன்களும், சங்கீதக்காரனுடன் இணைந்து நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது. ஆம் சிறப்பான சுதந்திரம் எனக்கு உண்டு என்று (சங். 16:6) ஆண்டவரைத் துதித்து நன்றி சொல்லுகிறார்கள். தேவநேசன் தம்பதியினரின் மூன்று மகன்களும் ஆண்டவரிடம் தங்களை மனப்பூர்வமாக ஒப்படைத்து வாழும் மெய்க்கிறிஸ்தவர்கள். எனவே, தாங்கள் பணியாற்றும் இடங்களில்

தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றுகிறார்கள். தங்கள் பெற்றோர்கள் செய்துவரும் புனிதமான பணிகளிலும் பங்கு கொண்டு, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் உழைத்து வருகிறன்றனர். இவர்களது ஒத்துழைப்பினால் பல சமூக முன்னேற்றத் திட்டங்கள் உருப்பெற்று, செயலாற்றப்பட்டு வருகின்றன.

சுதர்சன், வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக்கல்லூரியில், பட்டம் பெற்றபின், கனடா நாட்டிலுள்ள, டோரன்டோ நகரில் (Toronto, Canada) உள்ள, மக்களுக்குத் தொண்டு புரியும் மருத்துவராகச் சிறப்புடன் விளங்குகிறார். பின்னர் தனது அயராத உழைப்பினால், டோரன்டோ நகரில் உள்ள, தூய மைக்கேல் மருத்துவமனையின், குடும்பநலப்பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றார். புகழ்பெற்ற இப்பதவியை விட்டுவிலகி, தற்சமயம், எயிட்ஸ் (Aids) உயிர்க்கொல்லி நோயினால் பீடிக்கப்பட்டு, வாழ்விழந்து நிற்கும், மக்களுக்காக உழைக்கத் தொடங்கியுள்ளார்.

மேலும் அவர் கனடா நாட்டிலுள்ள, இதயம் வாதம் மைய நிறுவனத்தின் (Heart & Stroke Foundation) முக்கியமான அக்கத்தினருமாவார். இவரைப் போன்றே இவரது துணைவியார் ஆஷா அம்மையாரும், குழந்தைகள் மனநலனில் தேர்ச்சி பெற்ற மருத்துவராவார். தன் கணவரைப் போலவே இப்பணிக்கெனத் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டவராவார். மனநலமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்காக இவர் சால்ம் **வேதாகம சங்கம்** என்ற மையத்தை நிறுவி, நடத்தி வருகிறார்.

தயாளனும் வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில், படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர். பின்னர், சிறிது காலம் ஆஸ்திரேலியாவில், சுற்றுப் பயணம் செய்து தொண்டு புரியும் மருத்துவராகப் பணியாற்றினார். ஆஸ்திரேலியாவில், இடர்ப்பாடுகள் மிகுந்த மலைநாட்டில் வாழும் ஆதிவாசிகளுடன் தங்கி, சிறந்த மருத்துவப் பணியாற்றினார். 1997-ஆம் ஆண்டு இங்கிலாந்து மகாராணியரால், ஆஸ்திரேலியா நாட்டு ஒழுங்குமுறையில் அங்கத்தினர் என்னும் மிக உயர்ந்த பதவி அளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளார். (Order of Australia by

Queen Elizabeth). ஆஸ்திரேலியாவின், மிக உயர்ந்த இப்பதவியைப் பெற்ற முதல்இந்திய டாக்டர் தயாளன்தான். டாக்டர் சந்திரனின் மூன்றாவது மகன் மித்திரன், நாடகக் கலைத் துறையைத் தன் பணியாக ஏற்று.நம் நாட்டிலும் அயல்நாடுகளிலும் அதற்கான பாராட்டுகளையும் பெற்று வருகிறார். பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனத்திலும், ஐக்கிய நாடுகள் தகவல்துறை பணிமனையிலும் (United States Information Service), மாக்ஸ் முல்லர் பவனத்திலும் (Max Muller Bhavan), மித்திரன், நாடகக் கலைத்துறை ஆலோசனை நிபுணராகப் பணியாற்றி வருகிறார். இந்து (The Hindu) பத்திரிகையாளர்களால் நாடகக் கலைத்துறை வித்தகர் என்கிற பட்டம் சூட்டப்பட்டுள்ளார். அகில உலக நாடக அரங்க இயக்குநர் சங்கத்தில் மித்திரன் சிறப்பான உறுப்பினராக இருந்து வருகிறார்.

உலகப் புகழ்பெற்ற நாடக அரங்க நிறுவனங்களான, ராயல் ஷேக்ஸ்பியர் கம்பனி கேபிரிட்ஜ் நாடகக் கம்பெனி (Royal Shakespeare Company), (Cambridge Theatre Company) என்கிற நாடகக் கலை நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறார். தமிழகத்தில்,மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் காப்பகத்தை உருவாக்கியவர்களின் மித்திரனும் ஒருவர். நலிவுற்றோரின் வாழ்வுக்கென அமைக்கப்பட்டள்ள நிறுவவனத்தில் முக்கியமான நிர்வாக அதிகாரியாகவும் பணிபுரிந்து வருகிறார். எம் எஸ் சுவாமிநாதன் மையத்திற்கு உறுதுணைபுரியும் ஆலோசகராக விளங்குகிறார்.

மித்திரனின் துணைவியார் நந்தா அம்மையார் கண்கவரும் ஆடைகள் தைப்பதிலும்,வண்ண வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடைகள் தைத்து விநியோகம் செய்வதிலும்,சென்னை மாநகரில் சிறந்து விளங்குகிறார்.

டாக்டர் சந்திரன் தேவநேசன் அவர்களின் தாய்வழி மூதாதையர்

புகழ் பெற்ற பாளையங்கோட்டை வழக்கறிஞர் சீனிவாசகம் பிள்ளை - சந்திரவதனம் தம்பதியினரின்,நான்கு பெண்களுள் தாயம்மாள் ஒருவர். தாயம்மாளின் மகன் டாக்டர் சந்திரன். சந்திரவதனம் அம்மையார், சண்முகநாதக் கவிராயர் - மேரி தம்பதியரின் மகளாவார்.

அக்காலத்தில் பாளையங்கோட்டையில் வழக்கறிஞர் சீனிவாசகம் பிள்ளை எம்.எல்.பிள்ளை என்று அழைக்கப்பட்டு, மிகுந்த செல்வாக்குப் பெற்றவராக வாழ்ந்தார். தாயம்மாள் பாட்டனார் சண்முகநாதக் கவிராயர் இந்து சமயக் குருவாக விளங்கினார். ஓதுவார் என்று அழைக்கப்பட்டார். ஏனென்றால், வடமொழி வேத பாடல்களைக் கோவில்களில் ஓதி, புட்டாரத்தி அம்மன் கோவிலில், தலைமைப் பூசாரியாகப் பணியாற்றினார்.

பழனியில் திருவிழா நடந்தபோது, இளமையும், அழகும் நிறைந்த தன் மனையாளுடன் விழாவிற்கு சென்றார். திருவிழாக் கூட்டம் திரண்டு, நெருக்கடியும் குழப்பமும் மிகுந்திருந்தது, கைகலப்பும் சச்சரவும் நிறைந்த அச்சூழ்நிலையில், சண்முகநாதரைவிட்டு, அவரது மனைவி எவ்வாறோ பிரிக்கப்பட்டு விட்டார். மனைவியைத் தேடிய சண்முகநாதருக்கு விரக்தி ஏற்பட்டதே தவிர, கூட்டத்தில் மனைவி என்ன ஆனார் என்பதே தெரியாமல் போய்விட்டது. எவ்வளவோ முயற்சி செய்தும், தேடி அலைந்தும், சண்முகநாதரால், தன் மனைவியைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. மனமுடைந்த சண்முகநாதர் பாளையங்கோட்டை திரும்பினார். அவரது ஆழ்ந்த இந்து சமயப் பக்தி சீர்குலைந்தது. தலைமைப் பூசாரியாக விளங்கிய தன் பணியையெல்லாம் விட்டு விட்டு, அவர் தவித்து,வருந்திக் கொண்டிருந்தார் அச்சமயத்தில், தற்செயலாக, இங்கிலாந்து நாட்டிலிருந்து கிறிஸ்தவ தேவ ஊழியத்திற்காக இந்தியா வந்திருந்த, தாமஸ் - மேரி தம்பதியரைச் சந்தித்தார்.

தாமஸ்-மேரி தம்பதியர், அச்சமயம் பாளையங்கோட்டையில், பள்ளிக்கூடம் நிறுவிப் பணியாற்றி வந்தனர். அவர்கள் இருவரும் சண்முகநாதருக்கு ஆறுதல் தந்து, கிறிஸ்தவ சமயத்தில் அவர் ஈடுபாடு கொள்ளச் செய்தனர். விரைவில் அவர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து திருமுழுக்கும் பெற்றார். திருமுழுக்குப் பெற்ற போது தம் பெயரைத் தாமஸ் சண்முக நாதர் என மாற்றிக் கொண்டார்.

இந்து சமயத்திலிருந்து, கிறிஸ்தவ சமயம் தழுவிய மேரி என்னும் அம்மையாரைச் சண்முகநாதர் திருமணம் செய்து

கொண்டார். அவர்களது மக்களுள் ஒருவர் தான், சண்முகநாதர்-மேரி தம்பதியரின் மகள் சந்திரவதனம் அம்மையார். பின்னர் சந்திரவதனம் அம்மையார், பாளையங்கோட்டை வழக்கறிஞர் சீனிவாசகம் பிள்ளை (M.L. Pillai) யைத் திருமணம் செய்து கொண்டார். சந்திரவதனம் அம்மையார்தான், சந்திரனுடைய பாட்டியாராவார். தாமஸ் சண்முகநாதர் இலக்கிய நயமிக்க கவிதைகள் புனைவதில் வல்லவர். எனவே அவர் கவிராயர் என்று அழைக்கப்பட்டார். அக்காலத்தில் எட்டையாபுரம் கோட்டை படைததலைவராக இருந்த தளவாய் முதலியாரிடம், கோட்டைக் காவலருள் ஒருவராகப் பணிபுரிந்தார்.

ஏழாம் எட்வர்ட் இளவரசன் தென்னகத்திற்கு வந்தபோது, தாமஸ் சண்முகநாதர், அவ்விளவரசரைப் பாடல் தலைவனாக வைத்துப் புகழ்ந்து, பாடல் ஒன்று இயற்றி, அவரைப் பாராட்டி எதிர்கொண்டார். இந்த வரவேற்பினால் மகிழ்ச்சியுற்ற இளவரசர் எட்வர்ட், சண்முகநாதக் கவிராயருக்கு விலை உயர்ந்த சிகப்பு ஜரிகைத் தலைப்பாகை ஒன்றையும், வாள் ஒன்றையும் பரிசாக வழங்கினார். தான் ஏற்றுக் கொண்ட கோட்டைக் காவலன் பணியினை, சண்முகநாதர் புத்திக் கூர்மையுடன் சிறப்பாகச் செயலாற்றி பேரும் புகழும் பெற்றார். சண்முகநாதர் உயர்சாதிக் குதிரைகளை இங்கிலாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணியிலும் ஈடுபட்டிருந்தார். குதிரை வாணிகம் மட்டுமல்லாது சோடா பானம் உற்பத்தி செய்யும் தொழிலையும், நிறுவி, வெளிநாடுகளுக்கும் சோடா ஏற்றுமதி செய்தார். அந்தச் சோடா பானம் நிறுவனத்தின் பெயர் தாமஸ் அன் கோ. தூத்துக்குடி துறைமுகத்திற்கும், கொழும்பு துறைமுகத்திற்குமிடையே செல்லும் இரு சிறிய கப்பல்களுக்குச் சொந்தக்காராகவும் இருந்தார். இந்தக் கப்பல் வாணிகத்தில் அவருக்குக் காபூல் நாட்டுத் துருக்கியர் இருவர் பங்குதாரர்ராகவும் இருந்தனர். கிறிஸ்தவ சமயம் சேர்ந்தபின், சண்முகநாதக் கவிராயர் இயேசுபெருமான் மீது கவிகள் பல புனைந்தார். சண்முகநாதரின் மூத்த மகன், அவருக்குப் பின், கட்டபொம்மன் கோட்டைத் தலைமைக் காவலராகப் பொறுப்பேற்றார். அவரது பெயர் தேசகாவலன் பிள்ளை.

சந்திரன் தேவநேசனது தாய்வழி மூதாதையருள் மிகச் சிறந்த மற்றொருவர் முத்தையா பிள்ளை. முத்தையா பிள்ளை ***இரட்சணிய***

யாத்திரிகத்தை இயற்றிய கவியரசர் கிருஷ்ணபிள்ளையின் சகோதரர் ஆவார்.

முத்தையாபிள்ளை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய நிகழ்ச்சி, கிருஷ்ணபிள்ளையையும், கிறிஸ்தவ சமயத்தில் சேரும்படி செய்தது. முத்தையா பிள்ளை கீர்த்தி வாய்ந்த எழுத்தாளராக விளங்கினார். தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களுக்குப், பெருமை சேர்க்கும் வகையில் பின்வரும் நூல்களை எழுதி வெளியிட்டார்.

ஆதிக்கிறிஸ்தவர்களின் பண்பும் பழக்க வழக்கங்களும், *ஐரோப்பிய கிறிஸ்தவ சமய ஊழியர்களின் சட்டதிட்டங்களும்* (The mannesr & Customs of native Christians & the Rules and Reuglations of European missionaries)". *வேதாந்தசாரம்* (Vedantasaram) *தூய கன்னிமரியம்மாள் வழிபாடு வேதத்திற்குப் புறம்பானதும், பொருத்தமற்றதுமாகும்.* (Mariolatory Unscriptural & absurd) போன்ற நூல்களை முத்தையா பிள்ளை எழுதி வெளியிட்டார்.

1885-ஆம் ஆண்டு, முத்தையாபிள்ளை 21 வயது நிரம்பியவராக இருந்தபொழுது சாயர்புரத்திலுள்ள ஹக்ஸ்டபிள் (Huxtable) என்னும் பெரியாருக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்காக அழைக்கப்பட்டு அங்கு சென்றார். ஐந்து மாதங்கள் சாயர்புரத்தில் தங்கியிருந்த காலத்தில், கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளை எதிர்த்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே அவர் கிறிஸ்தவ சமய இலக்கியங்களையும், கிறிஸ்தவ வேதாந்தங்களையும் நன்கு கற்றார். அதே ஆண்டு அவர் புதிய பணி ஒன்றினை ஏற்றுப் பாளையங்கோட்டையில் வாழ்ந்த சார்ஜன்ட் துரைக்கும் (Sargent) அவருடைய மனைவிக்கும் தமிழ் கற்பிக்கும் பணியினை ஏற்றார். அச்சமயத்தில் இயேசு பெருமானின் மேம்பாடுகள் குறித்து ஆராயத் தொடங்கினார். முத்தையாபிள்ளையின் நெருங்கிய நண்பரும், செல்வாக்குமிக்க இராஜபாளையம் இராஜாவுமான தனுக்கோடி ராஜுவும்,இவருடன் வந்து தங்கினார். தனுக்கோடி ராஜு தீவிர வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவர். தூய விவிலியத்தையும், கிறிஸ்தவ சமயச் சான்றுகளையும் கிறிஸ்தவ சமய இலக்கியங்களையும், ஆங்கிலத்திலும்,தமிழிலும் இருவரும் இணைந்து, ஆழ்ந்து படித்தனர்.

1857-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம்,இவ்விரு நண்பர்களும், தாங்கள் கிறிஸ்தவ சமய சத்தியங்களை ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தினர். அச்சமயம் அவர்கள் தங்கள் குலம், கோத்திரப் பெருமை போன்ற எவைகளையும் பொருட்படுத்தவில்லை.

மறைதிரு. சார்ஜன்ட் துரையிடம்,தாங்கள் கிறிஸ்தவ சமயத் திருமுழுக்குப் பெற விரும்புவதாகத் தெரிவித்தனர். இச்செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவி, அவர்களது உறவினரையும் எட்டியது. எனவே, கடுங்கோபங் கொண்ட இவர்களின் உறவினர்கள் சார்ஜன்ட் துரையின் இல்லத்தைச் சுற்றி வளைந்து கொண்டனர். சார்ஜன்ட் துரை உடனே, இச்செய்தியைக் குற்றவியல் நடுவராக அச்சமயம் பாளையங்கோட்டையில் பதவி வகித்தவருக்குத் தெரிவித்தார். இல்லத்தைச் சுற்றி வளைத்திருப்பவர்களையும், பாதுகாப்புக்குத் தேவையான நிலையையும் எடுத்துக் கூறினார். முத்தையாபிள்ளை தனுக்கோடி ராஜு ஆகியோரின் உறவினர்கள் முன்னிலையில்,சமயம் மாறுவதற்காக நிற்கும் அவ்விருவருடன் பேசுவதாகத் தீர்மானித்து, அவ்வாறே செய்தார். நடுவர் முன்னிலையில் பேசும்படி, அவர்கள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டனர். எந்தவிதமான வற்புறுத்தலும் இல்லாமல், தாங்களே சுயமாகச் சிந்தித்துக் கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக் கொள்வதாக அவர்கள் இருவரும் விருப்புத் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட நடுவரும் அவர்களது விருப்பத்திற்கு உடன்பாடு தெரிவித்தார். அவர்கள் திருமுழுக்குப் பெறுமுன், அம்மூவரும், தங்கள் குடுமிகளை அகற்றி விட வேண்டும் என்று தெரிவித்தார் சார்ஜன்ட் துரை. ஆனால் அம்மூவரும் சமயக் கொள்கைகளுக்கும், குடுமி வைத்திருப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறினார். குடுமியை அகற்ற மறுத்து விட்டனர். கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் கூடிய ஆலோசனை சபையில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. விவாதங்களுக்குப் பின்னர், குடுமி வைத்துக் கொள்வது தவறு அல்ல என்று முடிவு செய்யப்பட்டது. 1857-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் அவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். முத்தையாபிள்ளையின் மகன் சர்.எம் டேவிட் தேவதாஸ் பிள்ளை, உயர்நீதிமன்றத்தின் புகழ்பெற்ற நீதிபதியாகப் பணிபுரிந்தார். மேலூர், சர் டேவிட் தேவதாஸ் பிள்ளைதான், அக்கால

ஆங்கில அரசாங்கத்தின், அரசுப் பிரதிநிதியாக தீர்மானங்கள் நிறைவேற்றும் ஆட்சிக்குழுவில் ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்ட முதல் இந்திய கிறிஸ்தவர் ஆவார். ஸர்.எம்.டேவிட் தேவதாஸ் பிள்ளை, எம்.எல். சீனிவாசகம் பிள்ளையின் தந்தையுடன் பிறந்தவரின் மகனாவார். எம்.எல். சீனிவாசம் பிள்ளை பெருந்திறமைமிக்க வழக்கறிஞராக இருந்தமையால், அக்காலத்தில் அவர் சட்டநிபுணர் சங்கத்தின் சிங்கம் என்று அழைக்கப்பட்டார்.

டாக்டர் சந்திரன் தேவநேசனின் தந்தையார் வழி மூதாதையர்

டாக்டர் சந்திரன் தேவநேசனுடைய தந்தையார் ராவ். சாகிப், டாக்டர் டேவிட் வில்லியம் தேவநேசன் 1887-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஜே. டேவிட் பிள்ளை என்பவரின் மூத்த மகனாவார். டேவிட் பிள்ளை இரயில் போக்குவரத்துத் துறையில் பணியாற்றினார். டேவிட் பிள்ளையின் மாதச் சம்பளம் அப்பொழுது 100 ரூபாய். ஜே. டேவிட் பிள்ளையின் தந்தையார் இந்து சமயம் விட்டுக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தார் என்பது பற்றிய குறிப்புகள் துரதிஷ்டவசமாக, நமக்குக் கிடைக்கவில்லை.

வில்லியம் தேவநேசன் எட்டு வயதுச் சிறுவனாக இருக்கும்போது, அவரது தந்தை தஞ்சைக்கு பணி மாற்றப்பட்டார். ஓராண்டு தஞ்சையில் வசித்தனர். தஞ்சையில் கிறிஸ்டியான் பிரடரிக் சுவார்ட்ஸ் என்பவர் நிறுவிய பள்ளியில், வில்லியம் தேவநேசன் சேர்ந்து பயின்றார். வில்லியம் தேவநேசன் அங்கு படித்துக் கொண்டிருக்கும்போது,தேவநாயக சாஸ்திரியாருடைய இரு மகன்களான, நோவா ஞானாதிக்கம், எலியா தேவசிகாமணி என்பவர்களுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார், அவர்களுடன் வேதநாயக சாஸ்திரியாரின் இல்லத்திற்கு அடிக்கடி சென்று வருவதுமுண்டு.

1900-ஆம் ஆண்டு, தன் நடுத்தரக் கல்வியின் முதற்பகுதியை முடித்தார் வில்லியம் தேவநேசன். எஸ்.பி.ஜி. சபையைச் சார்ந்த தூய பேதுரு தேவாலயத்தில், திருந்தந்தையார் வில்லியம் பிளேக், அத்தியட்சர் ஹென்றி வொயிட் ஹெட் ஆகியோரால் திருச்சபைத் திடப்படுத்தல் பெற்றார். 1907-ஆம் ஆண்டு முதல், 1910-ஆம்

ஆண்டு வரை, வில்லியம், தமது மூத்த சகோதரியான செல்வி டாக்டர் ஞானோதயம் டேவிட் அம்மையாரை அடிக்கடி சந்தித்து வந்தார். அச்சமயம் டாக்டர் ஞானோதயம் அம்மையார், தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் பணியாற்றி வந்தார். அச்சமயம் வேதநாயக சாஸ்திரியார் இல்லத்தில் நடைபெற்று வந்த சமய வழிபாடுகளிலும், சமயச் சொற்பொழிவுகளிலும் பங்கு பெற்று, சாஸ்திரியார் குடும்பத்தில் ஒருவராகவே வாழ்ந்தார். இவ்வாறு,வேத நாயக சாஸ்திரியாரின் தொடர்பால் அவர்பெற்ற இறைபக்தியே வாழ்க்கைச் சுழலில் அவர் சந்தித்த சுகதுக்கங்களைக் கடந்து செல்வதற்கு அவரைப் பக்குவப்படுத்தியது. 1910-ஆம் ஆண்டு தம் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தவுடன், சாஸ்திரியார் இயற்றிய இலக்கியங்களைத் தொகுத்துத் தகுந்த முறையில் வெளியிட விரும்பி, ஒரு நூல் எழுதத் தொடங்கினார். எதிர்பாரா விதமாக இப்பணியை அவர் முடிப்பதற்கு முன்னதாகவே, தமது விலங்கியல் பட்டப்படிப்பைத் தொடங்குவதற்காக, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர வேண்டியதாயிற்று.

வில்லியம் தேவநேசன் தன் முதுகலைப் பட்டப்படிப்பை முடிந்தவுடன், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் விலங்கியல் கற்றுக் கொடுத்தார். அச்சமய் 1914-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 7-ஆம் நாள், வில்லியம் தேவநேசன், பாளையங்கோட்டையிலுள்ள எம்.எல். சீனிவாசகம் பிள்ளையின் மகள் தாயம்மாளைத் திருமணம் செய்தார். பின்னர் இவர், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி விலங்கியல் துறையில் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். விலங்கியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிய முதல் இந்தியன் வில்லியம் தேவநேசன்தான். இச்சமயத்தில் தான் அவரது முதல் மகன் சந்திரன் பிறந்தார். ஈராண்டுகளுக்குப் பின்னர் அவரது இரண்டாவது குழந்தை மார்க்ரெட் சரோஜினி, ஏப்ரல் 5-ஆம் நாள் பிறந்தார்.

வில்லியம் தேவநேசன் தமது, முனைவர் ஆய்வுப் பட்டப்படிப்பிற்காக இங்கிலாந்து நாட்டிற்கு அக்டோபர் மாதம் சென்ற பொழுது, அங்கு குளிர்காலமாக இருந்தது. டில்பரி டாக் என்னும் இடத்தை அவர்கள் அடைந்தபின், லண்டனிலுள்ள தூய பான்கிராஸ் புகைவண்டி நிலையத்திற்குப் புகைவண்டியில்

சென்றனர். அங்கிருந்து, லண்டன் புறநகர்ப் பகுதியிலுள்ள செல்ஷாம்பாய் என்னும் கிராமத்தை அடைந்து, அங்கே குடியேறினர். வில்லியம், இம்பீரியல் கல்லூரியில் சேர்ந்து, தமது முனைவர் ஆய்வுப் பட்டப் படிப்பைத் தொடர்ந்தார். வில்லியம் ஆய்வுப் பட்டம் பெற்று, 1922-ஆம் ஆண்டு இந்தியா திரும்பும் வரை, செல்ஹாம் பாய் கிராமத்தில்தான் வசித்து வந்தார். அங்கு வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு அதிர்ச்சியூட்டிய செய்தி என்னவென்றால், அக்கிராமத்திலுள்ள செல்வந்தர்கள் தேவாலயத்திற்குச் செல்வதில்லை. அக்கிராமத்து ஏழை மக்கள் மட்டுமே தேவாலயத்திற்குச் சென்று வந்தனர் என்பதேயாகும். வில்லியம் தேவநேசன் அக்கிராமத்தில் குடியேறியவுடன், அங்குள்ள ஆங்கிளிகன் திருச்சபை சார்ந்த மறைதிரு பிட்ஸ் பாட்ரிக் என்பவர், அவர்கள் இல்லம் சென்று, சந்தித்து தான் ஆயராக இருக்கும் தேவாலயத்திற்கு வருகைதரும்படி அவர்களை அழைத்தார். அத்தேவாலயத்திற்குச் சென்ற பொழுது, திருச்சபை அங்கத்தினர் அநேகரை அவர்கள் சந்தித்துப் பழக நேர்ந்தது. அவ்வாறு பழகியவர்கள் எல்லோருமே வில்லியம் குடும்பத்தினருடன் அன்புடன் பழகினர். மேலும் வில்லியம் குடும்பத்தினர் கிராம வாழ்க்கையைத் தெரிந்து கொண்டு பழகிக் கொள்வதற்கு உறுதுணைபுரிந்தனர். செஸ்காம்பாய் கிராமத்தில் இவர்கள் ஈராண்டுகள் வாழ்ந்தபோது, இந்தியாவைச் சார்ந்த இருவர் இவர்களைச் சந்தித்தனர். அவர்களுள் ஒருவர் வில்லியம் தேவநேசனது நெருங்கிய உறவினரான Dr. ஜே.டி. கொரினீலியஸ் ஆவார். டாக்டர் கொர்னீலியஸ், லண்டன் மாநகரில் பொதுப் பணித்துறை வல்லுநராகும் பயிற்சியை மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவில், ஆங்கிளிகன் திருச்சபையினர் செய்து வரும் பணிகள் குறித்துச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காகத் தாயம்மாள் - வில்லியம் தம்பதியர் அவ்வப்போது அழைக்கப்பட்டனர். ஓராண்டு காலம் இங்கிலாந்தில் வாழ்ந்த பின்னர், டாக்டர் வில்லியம் தேவநேசன், அறுவை மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டு மூன்று வாரகாலம் மருத்துவமனையில் இருக்கும்படி நேரிட்டது. தாயம்மாள் அம்மையாருக்கு இது மிகுந்த வேதனை அளித்தகாலமாக இருந்தது. இல்லத்தில் சின்னஞ்சிறு குழந்தைகள்

இருவரையும் கவனித்துக் கொண்டு, மருத்துவமனைக்குச் சென்று, உடல் தேறி வரும் கணவருக்குப் பணிவிடை செய்தபோது கடுந்துன்பத்தை அனுபவித்தார். லண்டன் நகரிலுள்ள மருத்துவமனயிலிருந்த கணவருக்கு உதவி செய்வதற்காகத் தாயம்மாள் அம்மையார் சென்ற பொழுதெல்லாம், செஸ்ஹாம்பாய் கிராம மக்களே, தாயம்மாள் அம்மையார் இல்லத்தில் சின்னஞ்சிறு குழந்தைகளை அன்புடன் கவனித்துக் கொண்டனர்.

1922-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் இந்தியா திரும்பியதும், டாக்டர் வில்லியம் தேவநேசன் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில், விலங்கியல்துறைப் பேராசிரியராகப் பொறுப்பேற்க அழைக்கப்பட்டார். இச்சமயம் தான் தாயம்மாள் - வில்லியம் தம்பதியரின் இரண்டாவது பெண் சகுந்தலா பிறந்தார். சிலகாலம் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றிய பின்னர், டாக்டர் வில்லியம், கடல்வாழ் உயிரினங்களைப் பற்றி ஆராய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டார். இந்த ஆர்வம்தான், சென்னை மாநில மீன்வளத்துறையில் பின்னர் அவர் பொறுப்பேற்பதற்கு வழிவகுத்தது எனலாம்.

1924-ஆம் ஆண்டு, ஒரு மாலைப் பொழுதில், டாக்டர் வில்லியம் தேவநேசன், பணி முடித்து வீடு திரும்பும் வழியில், மருந்துக் கடைக்குச் சென்று, தம் மனையாளுக்கு ஆரோக்கியம் பெருக வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன், ஒரு மருந்து (Tonic) வாங்கி வந்தார். மருந்துக் கடைக்காரன் கவனமின்றி, அசட்டையாகக் கொடுத்திருந்த மருந்தைத் தாயம்மாள் அம்மையார் அருந்தியதும் உடல்நிலை கெட்டு மரணமடைந்தார். இந்தப் பேரிழப்பு வில்லியம் தேவநேசனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. தாயற்ற பிஞ்சுக் குழந்தைகளைப் பாதுகாக்க இயலாது தவித்தார். இத்தகைய துர்ப்பாக்கியம் நேர்ந்தபோது டாக்டர் சந்திரனுக்கு எட்டு வயது. அளவற்ற அன்புடன் நேசித்து வந்த மனைவியை, அவரே விஷமிட்டுக் கொன்று விட்டார் என்னும் பழிச் சொல்லையும் கேட்டு, டாக்டர் வில்லியம் தேவநேசன் மிகுந்த துன்புற்றார். ஆயினும், ஆண்டவர் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற பற்றும், நம்பிக்கையுமே, வேதனைகளை எதிர்த்து நிற்க அவருக்குத்

துணைபுரிந்தன. அச்சமயம் அவர், மீன்வளத்துறையினைக் கண்காணிக்கும் துணை இயக்குநராகப் பொறுப்பேற்றிருந்தார். எனவே பொறுப்புகள் மிகுந்திருந்தன. ஆயினும் பொறுப்பேற்றுள்ள அலுவலகக் கடமைகளைச் செய்வதுடன், தன் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கவனிப்பதற்காகவும் பெரும் பொழுதைச் செலவிட்டார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், குடும்பச் சுமையின் பளுவைக் குறைப்பதற்காக, டெய்சி குழந்தைவேலு என்னும் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். மேலும் சில ஆண்டுகள் சென்ற பின்னர், டெய்சி அம்மையார் தாய்மை அடைந்தார். ஆனால், ஒரு பெண் குழந்தையைப் பெற்றவுடன், டெய்சி அம்மையார் மரணமடைந்தது. மீண்டும் டாக்டர் வில்லியம் தேவநேசனைத் துயரத்தில் ஆழ்த்தியது. மூன்று சிறு குழந்தைகளுடன், பிறந்த பெண் குழந்தை ஒன்றையும் சேர்த்துப் பராமரிக்கும் பொறுப்பில் உள்ளமும், உடலும் உடைந்து நிலை குலைந்தார்.

டாக்டர் வில்லியம் தேவநேசனின் மிக நெருங்கிய உறவினரானவரும் ராவ் பகதூர் அப்பாசாமியின் மனைவியுமான திருமதி சொர்ணம் அப்பாசாமி, டாக்டர் வில்லியம் தேவநேசனை ஓரளவு ஆறுதல்படுத்தி, குழந்தைகளும் அவரும், சிலகாலம் சென்னை, தியாகராய நகரிலுள்ள தங்கள் இல்லத்தில், தங்களுடன் வந்து தங்கவேண்டுமென்று கேட்டு, அழைத்துச் சென்றார். இந்த ஏற்பாடு, டாக்டர் வில்லியம் தேவநேசனுக்கு ஓரளவு நிம்மதி அளித்தது. இந்த ஏற்பாடு, தமது மீன்வளத்துறை பணியின் நிமித்தம், அவர் சென்னை மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வருவதற்குத் துணை செய்தது. சில நாட்கள் சென்ற பின்னர்,இராவ் பகதூர் அப்பாசாமி அவர்களின் இல்லத்தின் அருகிலுள்ள, மற்றொரு இல்லத்தை வாடகைக்கு எடுத்து, அங்கு குடிபுகுந்து, தன் குழந்தைகளுடன் பல ஆண்டுகள் வசிக்கலானார்.

மீன் வளத்துறைக் கண்காணிப்பாளராக இருந்தபோது, அவர் சிலகாலம் தூத்துக்குடியில் பணியாற்ற நேர்ந்தது. அச்சமயம் அவர், பல்கலைக்கழகப் பயிற்சியும் மேற்கொண்டிருந்த போதிலும், தூத்துக்குடியில், முத்துக் குளித்தல் தொடர்பாகப் பல்வேறு

ஆராய்ச்சிகள் செய்து பார்த்தார். சென்னை மகாண மீன்வளத்துறை இயக்குநராகப் பணியாற்றிய முதல் இந்தியர் டாக்டர் வில்லியம் தேவநேசன் தான். மிகச் சிறந்த, தரத்தில் உயர்ந்த முத்துக்களை உற்பத்தி செய்வதற்கு முன்னோடியாகத் திகழ்ந்து, அவ்வாறு செய்வதற்கு, அதாவது விலையுயர்ந்த முத்துக்களை உற்பத்தி செய்ய வழிவகுத்துக் கொடுத்தமைக்காக, டாக்டர் வில்லியம் தேவநேசனுக்கு ஆங்கில அரசாங்கம் இராவ்பகதூர் என்னும் உயர்ந்த பட்டத்தை அளித்துப் பெருமைப்படுத்தியது.

தஞ்சை அரசவைக் கவிஞரும் அருட்கவிஞராக விளங்கியவருமான, வேதநாயக சாஸ்திரியாரின், வாழ்க்கை வரலாற்றையும், இலக்கியங்களையும் நூலாகத் தொகுத்து வெளியிட வேண்டும் என்கிற தேவநேசனின் நெடுநாள் ஆசையும் 1947-ஆம் ஆண்டு நிறைவேறியது. வேதநாயக சாஸ்திரியாரின் பேரன் இ.ஞானேந்திரன், சாஸ்திரியாரின் வாழ்க்கைக் குறிப்புகளாய் பல செய்திகள் சேகரித்துத் தந்து, இந்நூல் வெளியிடுவதற்கு டாக்டர் தேவநேசனுக்குத் துணை செய்தார். இப்புத்தகத்தின் முதல் பதிப்பு 1945- ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, இந்நூலின் அடுத்த பதிப்பு,கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தினரால் 1947-ஆம் ஆண்டு வெளியாயிற்று.

அந்நூலுக்கு முன்னுரை அக்காலம் புகழ் பெற்று விளங்கிய வழக்கறிஞர் பால சிங்க நாடார் எழுதியுள்ளார். ஷெம் வேதநாயக சாஸ்திரியார் அந்நூலுக்கு மதிப்புரை எழுதியுள்ளார்.

இந்நூல் சாஸ்திரயாரின் இலக்கிய நயத்தையும், ஆன்மீக வளர்ச்சியையும் குறித்துப் சொல்வதுடன், இதுவரை யாரும் அறியாத, சாஸ்திரியார் வாழ்க்கை நிகழ்ச்சிச் செய்திகளையும், கிறிஸ்தவ சமய சத்தியங்களுக்குத் தன்னை ஒப்புவித்து வாழ்ந்த வகையினையும் எடுத்துக் காட்டுகிறது. டாக்டர் வில்லியம் தேவநேசனுக்கு, ஜெர்மன்,பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மிகுந்த புலமையுண்டு. டாக்டர் வில்லியம் தேவநேசன் தமிழ் இலக்கியத்தில் மட்டுமல்லாது, தமிழ் இனம், தமிழ் மொழி ஆகியன குறித்த ஆராய்ச்சிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். விலங்கியல் பற்றி அவர் அநேக நூல்களில் எழுதியுள்ளார். இவை

தவிர தமிழினத்தின் தொன்மை குறித்து, தமிழர் யார்? என்னும் நூலும் எழுதி வெளியிட்டார்.

ஓய்வு பெற்றபின், தம் சொந்த ஊரான பாளையங்கோட்டையில், தாம் கட்டியுள்ள வீட்டில் குடியேறினார். வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில் அவருக்குத் தோழனாகவும், துணைபுரிகிறவராகவும் உடன் வாழ்ந்தது அவரது கடைசி மகள் ஜெயவந்தி, ஜெயவந்தி அச்சமயம் சாரா டக்கர் மகளிர் கல்லூரியில் பயின்று வந்தார்.

* * * *

தமது முதல் கவிதைக்கு டாக்டர் சந்திரன் தேவநேசன் கொடுத்துள்ள தலைப்பாகிய, எல்லையற்ற பரம்பொருள் இயேசு என்பதே, அவரது வாழ்க்கையின் மையப் பொருளாகவும் இருந்தது எனலாம். எல்லையற்ற பரம்பொருள் எம்பெருமான் இயேசு, என் குருவின் அன்பிற்கு எல்லை இல்லை என்பன போன்ற தலைப்புகளில் பாடல்கள் பல புனைந்தார். மாணவர் கிறிஸ்தவ சங்கத்தின் வாயிலாக (S.C.M.) வருங்கால மாணவர்களுக்குத் தமக்கு விருப்பமான வாக்கியம் ஒன்றினை, வழிகாட்டியாக வைத்துக் கொள்ள எடுத்துரைக்கிறார். தூய விவிலியத்திலிருந்து, தனக்குப் பிடித்தமானது என்று அவர் கூறியதாவது.

ஆனால் எங்கள் போராட்டங்கள் உலகப் போக்கின்படி நிகழ்வதன்று. ஏனெனில் எங்கள் போராட்டத்தில் பயன்படும் படைக்கலன்கள் உலகைச் சார்ந்தவை அல்ல. கடவுளின் வல்லமை கொண்டவை கோட்டைகளைத் தகர்த்தெறியக் கூடியவை. அவற்றைக்கொண்டு குதர்க்கங்களையும், கடவுளைப் பற்றிய அறிவுக்கு எதிராகத் தலைதூக்கும் எத்தகைய மேட்டிமையையும் நாசமாக்குகிறோம். மனித எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியுமாறு அடிமைப்படுத்துகிறோம். II கொரிந்தியர் 10:5

1982 ஆம் அண்டு, டிசம்பர் 19–ஆம் நாள் அவர் இறைவனடி சேர்ந்தார். இறைவன் திருவடிகளைச் சேர்வதற்கு முன் கவிதை ஒன்று புனைந்து, கிறிஸ்மஸ் வாழ்த்துதலாக, அக்கவிதையைத் தன்

நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுப்பி வைத்தார். அநேகரது உள்ளங்களில் அக்கவிதை நீங்கா இடம் பெற்றுவிட்டது. அக்கவிதையின் ஒரு பகுதி. அவரைப் பற்றிய இவ்வரலாற்றிற்குப் பொருத்தமான முடிவுரையாகும் என்று எண்ணி, அப்பகுதியை இங்கு எழுதுகிறேன்.

கிறிஸ்மஸ் நாள் ஒவ்வொன்றும்
உலகுக்கு உணர்த்துவது
புதுமையின் பிறப்பு
பழமையின் மறைவு!
இரட்சிப்பின் வாக்குறுதி!
மகிழ்ச்சியின் துடிப்பு!
நம்பிக்கை அன்புடன்
நம்பிக்கை ஆர்வமும் நிறைந்ததுவே!
பெத்லகேம் முன்னணை மீதில்
குழந்தை அழும் இரங்கற் குரலில்
இலவசமான கிருபை
உற்சாகம் தோய்ந்த ஆனந்தம்
அனைத்தும் உயிரிலும் கலந்ததுவே!
உலகோர் ஆன்மீக வாழ்வை
உய்வித்ததுவோ!!! ■

தமிழாக்கம். திருமதி ஜி. செல்வராஜ்

இந்நூலைப் பற்றி.....

இத்தொகுப்பு மேனாட்டுப் போங்கில் அமைந்தது அல்ல. நமது நாட்டை மையப்படுத்தி, நமது நோக்கில், நமது அணுகுமுறையில் தயாரிக்கப்பட்டது. வரலாறும் நமது பார்வையிலிருந்தே சொல்லப்படுகிறது. உள்ளூர் மனிதர்கள், உள்ளூர் அமைப்புகளே அதிகக் கவனம் பெறுகின்றனர். கிறிஸ்தவ சமயம் இங்கு தோன்றி வளர்ந்த காரணங்கள், உந்துதல்கள், சூழல்கள் பேசப்படுகின்றன. வழக்கமான மேலிருந்து கீழ் என்ற அணுகுமுறை இல்லாமல் கீழிருந்து மேல் என்ற வரிசையில் கிறிஸ்தவ சமய வளர்ச்சி ஆராயப்படுகிறது. சமய மாற்றம் என்ற பெரு நிகழ்வு நடந்தேற உள்ளூர் மனிதர்கள் பலர் காரணமாக இருந்திருக்கின்றனர். அவர்களை மையப்படுத்தியே கட்டுரையாளர்கள் செய்திகளை எழுதியுள்ளனர். இந்தியாவில் கிறிஸ்தவனாக வாழ்வது என்பது என்ன என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு எழுதியுள்ளனர்.

நெல்லை கிறிஸ்தவ வரலாற்றைப் படிப்பதின் மூலம் இந்தியக் கிறிஸ்தவ வரலாற்றையே புரிந்து கொள்ளமுடியும்.

இதில் கவனிக்க வேண்டிய மற்றொன்று, நம் நாட்டு சமுதாயங்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியது, அயல்நாட்டு மிஷனெரிகளின் முயற்சிகளால் ஆனதல்ல. நற்செய்தியைக் கேட்டு அதில் நம்பிக்கை கொண்ட நம் நாட்டினர்தாம், தாம் கண்டு கொண்ட கிறிஸ்தவ உண்மைகளைத் தங்கள் சொந்த மக்களிடையே, போகிற ஊர்களிலே பழகிய மக்களிடயே தங்கள் மொழியில் சொல்லி வந்தனர்.

- இராபர்ட் எரிக் ஃபிரிக்கன்பெர்க்

புதியதோர் சமுதாயம் - விலை ரூ. 100/-